# புல்லின் இதழ்கள்



கே.பி.நீலமணி

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✸✸✸

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✸✸✸

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# புல்லின் இதழ்கள்

கே. பி. நீலமணி

காயத்ரி பப்ளிகேஷன்
26-B, வேதாசல கார்டன்ஸ்
மந்தைவெளி, சென்னை-600 028

முதற் பதிப்பு . 24. டிசம்பர், 1985.

# புல்லின் இதழ்கள்

(சமூக நாவல்)

## BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | : | PULLIN ETHAZGAL |
| Subject | : | Social Novel |
| Author | : | K. P. Neelamani |
| Language | : | Tamil |
| First Edition | : | December, 1985 |
| Copyright Holder | : | Thirumathi Janaki Neelamani |
| Paper Used | : | 10.9 kg D/Cr. S. Sayee White Printing |
| Size of the book | : | 18 X 12.5 cms |
| Printing Points | : | 10 point |
| No. of pages | : | 428 (424 + 4) |
| Printer | : | Vetri Achagam, Madras-14 |
| Publisher | : | GAYATHRI PUBLICATIONS |
| (with full Address) | : | 26, B. Vedachala Gardens Mandaveli, Madras-600 028. |

Price: Rs. **35-00**

Our greatful thanks to M.S.A. cell of Bank of Baroda T. Nagar, Madras for their help in bringing out this Social Novel

—Janaki Neelamani



# அன்னை ருக்மிணி தேவிக்கு...

★ 'சதிராட்டம்' என்றழைத்து வந்த
கொச்சை மொழி நடனத்தை--
'பரதக் கலை' — எனப் பெயர் உயர்த்திப்
பார் புகழ வைத்த உன் **சலங்கை யொலிக்கும்**

★ அம்பலத்தில் ஆடுகின்ற அந்நியப்பட்ட
ஆரணங்குகளுக்கே சொந்தமென்றிருந்த
அக்கலையின் அவலநிலை மாற்றி—
இல்லந்தோறும் இனிய
'கிண்கிணிச்' சலங்கை ஒலிக்கச் செய்த
உன் அயராத **போராட்ட வெற்றிக்கும்**—

★ சாதி மதக் குலச் சடங்குகளால்
சமுதாயக் கொடிகள் தாறுமாறாகப் பறந்து
குலத் தாழ்ச்சி உயர்ச்சி
பேசிவந்த மக்கள் மத்தியில்—

உள்ளத்து உறவே உறவென்று
புதுமைப் பெண்ணாய்ப்
பூத்துக் குலுங்கிய உன் **திருமணப் புரட்சிக்கும்**

★ 'வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம்
வாடினேன்' — என்றுரைத்த
வள்ளலாரின் உள்ளத்து வழித் தோன்றலென,
வாயில்லாப் பிராணிகளிடமும்
கருணை முகம் காட்டி — அன்பு கூட்டி;
மக்களுக்கு மட்டுமல்ல
சங்கமும் சமதர்மமும் — இங்கு
மாக்களுக்கும் அவை உண்டென
நலம் பேணிக் குழு அமைத்த **உன் தலைமைக்கும்**

★ ஆலிலை மேல் துயில் கொள்ள ஒருநாள்
வருவான் கண்ணன் எனக் கனவு கண்டோ
என்னமோ—

ஆலமரங்களையே கொண்ட
அடையாறைத் தேர்ந்தெடுத்து — அங்கே
குழலும், யாழும், இன்னிசை முழங்க—
கந்தர்வர்களோ—அரம்பையரோ வென
ஆடவரும் அணங்குகளும்
இனிய நடனங்கள் பல புரிந்து
சகுந்தலையும்—துஷ்யந்தனுமாய் உன்
முன்னிலையில் கந்தர்வ மணம் புரியவும்—
வில்லொடித்து வீரராகவன்,
ஜனகமகள் சீதையைத் தெய்வத் திருமணம்
புரியவும்—

ஆலமா மர நிழலில் அழகிய
அரங்குகள் பல அடுக்கடுக்காய்ச் சமைத்து—
வடமொழி, தென்மொழிகளில்
அரிய பல நாட்டிய நாடகங்களை
அற்புதமாய்ப் படைத்துப்
பார்புகழ் கொண்ட உன் **கலை உள்ளத்திற்கும்**—

★ ஏடு தேடி—காடு மேடென்று
ஆண்டுகள் பல சுற்றிச் சுற்றித்
தமிழ்த் தொண்டாற்றிய தாத்தாவின்
ஒப்பற்ற சங்கத் தமிழ்ப் பணி—என்றும்
வங்கக் கடலோரத்தில்
சுடர்விட்டுப் பிரகாசிக்க உன் க்ஷேத்திரத்தே
ஓர் அரிய நூலகமும் சமைத்து—
ஈடற்ற இலக்கியப் பணிக்கு
அன்பு நீர் வார்த்த உன்
இணையிலாத் **தமிழ்ப் பற்றிற்கும்**—

★ வெளி நாட்டினரையும் உன் கலையால் கவர்ந்து
பாரதத்தில் பரதம் பயில அழைத்து—பயில்வித்து;
கடல் கடந்து இந்தியப் புகழ் பரப்பிய
உன் அடக்கமான **கலைப் பணிக்கும்**—

★ இயல், இசை, நாடகம் என்னும்
முத்தான முத்தமிழும்—
கலா சாரத்திற்கு ஒரு க்ஷேத்திரமென
உன் அகத்தே முழங்கிட—
பழம் பெரும் பாவலர், இசைப் புலவர்கள்
பலரையும் ஆதரித்து; அன்புடன் இடமளித்து
குருகுல முறைப்படி இளம் மாணவர்களுக்கு
நல் இசை வகுப்புகள் பல நடத்தி—
பாட்டிலும்—எழில் நாட்டியத்திலும்
இளம் கலைஞர்கள் பலரை உருவாக்கி
இவ்வுலகுக் களித்து ஈடில்லாப் புகழ்பரப்பி நிற்கும்
உன் இனிய **இசைத் தொண்டிற்கும்**—

**- இந்நூல் காணிக்கை**

# டாக்டர் கலைஞரின் சிறப்புரை

**கா**விரியின் வளம் கொழிக்கும் தஞ்சை மாவட்டத்து மண்ணில் நெல்லும் விளையும் புல்லும் விளையும்; அது போல இசையும் வாழ்வும் இரண்டறக் கலந்து இன்ப வெள்ளத்தைக் கொடுக்கும் பண்பும் இந்த மண்ணுக்கு உண்டு என்பதை நாடு நன்கறியும்.

''புல்லின் இதழ்கள்'' என்ற இந்தப் பெருங்கதையில் நண்பர் திரு. கே. பி. நீலமணி அவர்கள் தஞ்சையின் இசை மணத்தைத் தரம் குன்றாது தவழ விட்டுள் ளார்கள். இசையினை உயிர் மூச்சாகக் கருதி உயர் வாழ்வு நடத்தும் ஆசான் ஒருவர் ஆசாபாசங்களுக்கு ஆட்பட்டு குடும்பச் சூறாவளியில் சிக்கிச் சுழல்வதையும்; அவரது மாணவன் ஒருவன் அதே போன்று இசை வெள் ளத்தில் அழுந்தி, அன்புச் சுழலில் சிக்கி, அமிழ்ந்து, தக்க தருணத்தில் நீந்தி, இறுதியில் வெற்றிகரமாக வாழ்க்கை யின் கரையினை எட்டுகின்ற காட்சிகள் கருத்துக்கு விருந் தாக இந்நூலில் காணக் கிடக்கின்றன. எளிய நடை யாயினும் சுவை குன்றாது படித்து முடிக்க வேண்டு மென்ற ஆவலைத் தூண்டும் வகையில் இந்த நூல் அமைந்துள்ளது அதன் தனிச் சிறப்பாகும். அனைவரும் படித்துப் பயன் பெறத்தக்க விதமாக இந்நூலினை ஆக்கித் தந்துள்ள அன்பரைப் பெரிதும் பாராட்டு கிறேன்.

# வாழ்த்துரை

இசைக் கலை என்பது தெய்வீகத் தன்மை வாய்ந்த ஒரு கலை. பக்தி மார்க்கத்தில் ஈடுபட்டு; இறைவனைச் சரணடைய இசையால் ஆராதிப்பதைவிடச் சிறந்ததும்; சுலபமானதுமான மார்க்கம் வேறில்லை. அதனாலேயே பக்தை மீரா, ஆண்டாள், சங்கீத மும்மூர்த்திகள்; நாயன்மார்கள் ஆகியோர் பக்தியால் உள்ளமுருகி, இசையால் இறைவனைத் துதிபாடி உன்னத நிலை அடைந்தனர்.

பச்சிளங் குழந்தை முதல்—படமெடுத்து ஆடும் பாம்பு வரை இசை கேட்டு மயங்கும். கண்ணனின் குழலோசை கேட்டு, ஆயர்பாடியில் ஆநிறைகள் மெய் மறந்து நின்றதுண்டு.

நல்ல இசைக்கு இசைப் பவனையும், கேட்பவனையும் மெய்மறக்கச் செய்கிற அற்புத சக்தியுண்டு. இத்தகைய சிறப்புமிக்கதொரு இசை வல்லுனராக—சுவாமிமலை சுப்பராம பாகவதரும்; அவரால் உருவாக்கப்பட்ட சிஷ்யனான ஹரியும் இந்த நாவலில் திகழ்கிறார்கள்.

தாழ்த்தப்பட்ட வகுப்பில் பிறந்த ஹரிக்குப் பெற்றோர் இட்ட பெயர் கண்ணப்பன். 'கியாஸ் லைட்' தூக்கிப் பிழைக்கும் தொழில் செய்து வந்த ஏழைக் குடும்பத்தில் பிறந்து; பெற்றோரால் வீட்டை விட்டு அடித்துத் துரத்தப்பட்ட அவனை—அவனுடைய இசை யார்வம் கண்டு வலியச் சென்று சுவீகரித்து; "ஹரி" என்னும் புதிய பெயர் சூட்டி வீட்டோடு ஆதரித்து, அவனுக்குத் தன் உயர்ந்த இசைக்கலையையும் போதித்து உயர் நிலைக்கு ஆளாக்குகிறார் பாகவதர்.

ஹரியோ—

தன் வாழ்நாள் முழுவதும்—குருவின் ஆணைப்படி நடப்பதையே தன் வாழ்வின் லக்ஷியமாகக் கொண்டு வாழ்கிறான்.

இந்த நாவலை எழுதியுள்ள நீலமணி, கும்பகோணம் பிடில் ராஜமாணிக்கம் பிள்ளை அவர்களிடமும்; திருவாளப் புத்தூர் கிருஷ்ணமூர்த்தி பிள்ளையவர்களிடமும் முறையாக வயலின் கற்றுத் தேர்ந்தவர். ஆயினும் இசையைத் தொழிலாகக் கொள்ளாமல் தினமணியில் ஆசிரியர் குழாமில் பணியாற்றி வருகிறார். இசையிலும், இலக்கியத்திலும் இவருக்குள்ள ஆர்வத்தை இந்த நாவலில் காணமுடிகிறது.

எளிய தமிழில், சரளமான நடையில் ஆசிரியர் இந்நாவலை எழுதியுள்ளார். இவரது இந்த நாவலைப் படிப்பதற்கு எடுத்தேன். மிக சுகமாக இருந்தது. நேரம் போனதே தெரியவில்லை. ஒரே மூச்சில் படித்து முடித்தேன்.

தலை சிறந்த சங்கீத வித்வான் ஒருவருடைய இசை வாழ்வையும்; அவரது குடும்ப வாழ்வையும் நிலைக்களமாகக் கொண்டு; ஒரு அருமையான நாவலைப் பின்னி; மிகச் சிறந்த சங்கீதக் கச்சேரி யொன்றைக் கேட்டது போன்ற மன நிறைவை உண்டாக்கி விட்டார் ஆசிரியர்.

இவர் இதுபோன்று, இன்னும் பல சிறந்த நூல்களைப் படைத்து; பெயரும், புகழும் பெறவேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

அன்புடன்,

செம்மங்குடி ரா. ஸ்ரீநிவாஸய்யர்

சாரிட்ஸ் லேன் ராயப்பேட்டை,
சென்னை - 600014.

# முன்னுரை

காற்றையும், அதில் இனிமையையும்; கடலையும், அதில் பொங்கி எழும் அலைகளையும்; விண்ணையும், அதில் வண்ணவண்ணக் கோலங்களையும்; தழலையும், அதற்கொரு வெம்மையையும் படைத்த கடவுள், புவியையும் அதில் அழகிய புல்லையும் படைத்தார்.

ஓடும் மிருகங்களையும், கூடும் பறவை இனங்களையும் படைத்தார். கைவண்ணம் மிளிர்ந்ததே அன்றி அவர் உள்ளத்தில் கருத்தமைதி கூடவில்லை போலும்! பின்னர் மனிதனைப் படைத்தார். அவனை மற்ற உயிரினங்களினின்றும் வேறுபடுத்த எண்ணிப் பகுத்தறிந்து சிந்திக்கும் திறனோடு படைத்தார். அந்தச் சிந்திக்குந் திறனே, அவரது படைப்புத் தொழிலின் வெற்றியாகவும், படைக்கப்பட்டவனின் வீழ்ச்சியாகவும் அமைந்தது.

காலங்களின் கரங்களில் அவன் வீழ்ந்தும் எழுந்தும் படும் பாட்டைக் கண்டு படைத்தவர் ரசித்தார்; எண்ணங்களை உருவாக்கும் ஆற்றல் படைத்த மனிதன், அதே எண்ணங்களினால் உருவாவதைவிட்டு, உருக் குலைவதைக் கண்டு திருவின் உள்ளத்தில் கருணை பிறந்தது. மனிதனை மீட்க இசையைப் புகட்டினார்.

அசைவிலிருந்து பிறக்கும் சொற்கள் இசையின் வடிவங்களாக மணக்க அவன் குரலில் இனிமையைக் கூட்டினார். சொல்லெல்லாம் இசையின் வடிவங்களாக ஒலித்தன.

பிறக்கும் குழந்தையின் 'குவா' என்னும் முதற் குரல்முதல், ஆநிரைகளின் 'ம்மே' என்கிற அழைப்பு வரை, ஒலிகள் யாவும் இசையோடு இணைந்து முழங்கின.

கலைகளில் சிறந்த இசையைப் படைத்த கர்த்தாவே, அந்தக் கலையில்-இசை இன்பத்தில் மயங்கித் திளைத்து, ஆனந்தக் கூத்தாடினார். ஆடுகிற நாயகனின் பாதத்தைக் கண்டு நன்றி மறவா மனிதன், நாவார, நெஞ்சார, இறையைப் பாடிப் பரவினான். உலகெலாம் அந்த இசை முழங்கிற்று.

அடிமுடி அற்ற இறைவனைப்போல, அவன் அருளும் இசைக்கும், ஆதியும் அந்தமும் இல்லை. எங்கும் இசை பிறக்கலாம். நாதம் இல்லாத பொருள் ஏது? அதற்கு இடம் பொருள் ஏது? குப்பையிலே குருக்கத்திச் செடி முளைப்பதில்லையா? சிப்பியின் வயிற்றில் விலை மதிக்க முடியாத நல்முத்துக்கள் பிறப்பதில்லையா? சிப்பிக்கும் முத்துக்கும் என்ன சம்பந்தம்? அந்த உறவின் விசித்திரம் தானே சம்பந்தம்!

எப்படிப் புல்லையும் அதன் இதழ்களையும் பிரித்துக் காண்பது இயலாதோ, அப்படித்ததன் கலையிலே தோய்ந்துவிட்டபின், அங்கே கலைதான் இருக்கும், கலைஞனைக் காணமுடியாது. காலத்தால் தளிர்த்துப் பிறகு அந்தக் காலத்தின் கரங்களிலே, காய்ந்தும், கரைந்தும், உருமாறும் இதழ்களைப்போல, காலவெள்ளத்தில் கலைஞன்தான், மரித்துப் பிறந்து வருகிறானே தவிர, ஞானத்தால் பிறந்த கலைகள் அழிவதில்லை! அவை சிரஞ்சீவிகளே!

கலைகள் அநாதி, அநாதை; அவைகளுக்கு ஸ்தூல பரம்பரை ஏது? கலைஞன் வயிற்றில்தான் மற்றொரு கலைஞன் பிறந்தாக வேண்டுமென்பதில்லை. எங்கோ பிறந்த கலை, உலகெங்கிலுமுள்ளவரைக் கவருவதில்லையா?

இதோ!-கலையே தெரியாத- கலையே பிறவாத ஒரு குடும்பத்தில் பிறந்துவிட்ட ஓர் இசைக் கலைஞனையும்:

அவனது இசைக் கலையையும் உங்கள் அன்புக்கரங்களில் பணிவுடன் சமர்ப்பிக்கிறேன்.

அதோ - அவன் மீட்டுகிற தம்பூராவின் சுநாதமும் சுருதியோடு இழைந்து கரையும் அவனது இனிய குரலும் கேட்கின்றன. இந்தத் தெய்வீக இசையில்— இதை இசைப்பவனின் ஞானத்தில், கற்பனைத் திறனில் உங்கள் மனம் நிறைந்தால்; அந்த மகிழ்ச்சியில், இசை இன்பத்தில் நீங்கள் உங்களை மறந்து பரவசமடைந்தால்—அந்தப் பெருமை, இப்புதினத்தின் நாயகனான ஹரிக்கும்; இசையோடு இணைந்த அவனது வாழ்க்கையை உருவாக்கிய பாகவதர், காயத்திரி, சுசீலா, காந்தாமணி, சுந்தரி, வஸந்தி, லக்ஷிமியம்மாள், ஆகியவர்களுக்குமே உரியது. இந்த நிறைவுபெறும் பாத்திரப் படைப்புகளில் எங்கேனும் அபஸ்வரம் ஒலித்தாலும்; கதையின் நடையில்; அதன் விறுவிறுப்பில், ஓட்டத்தில் ஏதேனும் லயம் நழுவியிருந்தாலும் அந்தக் குறைகள் என்னுடையவையே.

இனியும் உங்களுடன் பேசிக் காக்க வைக்கப் போவதில்லை. விடிவெள்ளி முளைத்துவிட்டது. காலப் புரவிகளைக் கதிரவன் தன் ஒளிமயமான தேரில் இழுத்துப் பூட்டிக் கொண்டிருக்கிறான்; பவனி வர வாருங்கள் சுவாமிமலைக்கு; பாகவதர் வீட்டிற்குப் போய் ஹரியைச் சந்திக்கலாம்.

மந்தைவெளி
சென்னை 28

**கே. பி. நீலமணி**

# பதிப்புரை

இந்நூலை எழுதியுள்ள ஆசிரியர் திரு. நீலமணி அவர்கள் வாசகர்களுக்கு நன்கு அறிமுகமானவர். அன்னை தெரேசாவின் வாழ்க்கை வரலாற்று நூலை எழுதி குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் தங்கப் பதக்கத்தையும்— இன்றைய இலங்கையின் கொந்தளிக்கும் நிலைமையையும்; அங்கு வாழும் தமிழர்களின் கண்ணீர்க் கதையையும் மையமாகக் கொண்டு அத்தப் பயங்கரச் சூழ்நிலையில் பரிதவிக்கும் குழந்தைகளை மையமாகக் கொண்டு இவர் எழுதிய ''தென்னை மரத் தீவினிலே'' என்ற நூலுக்காக குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் வெள்ளிப் பதக்கத்தையும்—

''கவிமணியின் கதை''க்காகத் தமிழக அரசின் பரிசையும்; சிறந்த சிறுகதைக்காக இலக்சியச் சிந்தனைப் பரிசையும் பெற்றவர்—

புல்வின் இதழ்கள் என்னும் இந்தப் புதினம், கலைமகளில் தொடர் கதையாக வந்தபோதே பல்லாயிரக் கணக்கான வாசகர்களின் அன்பையும் ஆதரவையும் பெற்றுள்ளது. இதை எங்கள் பதிப்பகத்தின் மூலம் வெளியிடுவதில் பெரு மகிழ்வு கொள்கிறோம்.

எங்களின் இந்த நூலுக்கு சிறப்பானதொரு சிறப்புறை வழங்கி ஆதரித்துள்ள உயர்திரு. டாக்டர். கலைஞர் அவர்களுக்கும்—

இசை உலகில் பெரும்புகழ் பெற்று இன்றைய இளங் கலைஞர்களுக்கு வழிகாட்டியாய்த் திகழும் சங்கீத கலாநிதி டாக்டர் செம்மாங்குடி ரா. ஸ்ரீனிவாசய்யர் அவர்களுக்கும்—

இந்த நாவலை வெளியிட எங்களுக்கு அன்போடு அனுமதி அளித்ததோடு - அதற்கான மூவண்ண முகப்புப் பட பிளாக்குகளும் கொடுத்துதவிய பெருந்தகை கலைமகள் அதிபர் உயர்திரு. ரா. நாராயணஸ்வாமி அவர்களுக்கும் எங்கள் நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

—ஜானகி நீலமணி

# 1. அருணோதயம்

வைகறை நேரம். ஞானமும் அஞ்ஞானமும் இணைந்தாற்போல ஒளியும் இருளும் கலந்து உறவாடும் நேரம். எங்கும் இளம்பனி பெய்து கொண்டிருந்தது. புல்லின் நுனிகள் வைரமுடி தாங்கி ஒளிர்ந்தன. காலை நேரத்துக் குளிர்ந்த காற்று, ஆலமரத்தின் தளிர் இலைகளை மெல்லக் 'கிசு-கிசு' செய்து கொண்டே ஓடிற்று.

புலர்ந்தும் புலராத அந்த இனிய பொழுதைச் சுவாமிமலை மக்கள் உறக்கத்தில் கழித்துக் கொண்டிருந்தனர். கீழைத் தெருவில் இருக்கும் மகாவித்துவான் சுப்பராம பாகவதரின் வீடு மட்டும் விழித்துக் கொண்டிருந்தது. பாகவதருடைய பிரதம சிஷ்யன் ஹரி தம்பூராவை எடுத்து வைத்துக்கொண்டு உட்கார்ந்தான். அவன் நெற்றியில் அணிந்திருந்த திருநீற்றின் நறுமணம் அறை முழுவதும் கமழ்ந்தது. அவன் உடம்பெல்லாம் மணத்தது. அவன் மனம் குருவின் தியானத்தில் நிரம்பி வழிந்தது.

உயிர்பெற்ற விரல்கள் தழுவிக்கொண்டிருந்த தம்பூராவின் தந்திகளை வருடின. மறுகணம் அலையலையாகப் பரவிய நாதவெள்ளம் நிறைந்து வீடு முழுவதும் பரவி, வெளியெங்கும் வழிந்தது. அந்த இனிய நாதத்தில் தன்னை மறந்து, சுருதியுடன் இணைந்து, கணீரென்று பாடிய ஹரியினுடைய குரல் தேவகானமாக ஒலித்தது, அந்த இன்னிசையில் இளந்தென்றல் தவழ்ந்தது.

மெல்லிய துயில் நீங்கி அன்னை காவிரி சிறு சலசலப்புடன் சென்று கொண்டிருந்தாள். அழகிய கரிய கூந்தலைப் போல, ஆற்றின் இரு மருங்கிலும் நீண்டு ஒயிலாகக் கரிய

நிற மணல் படிந்திருந்தது. அதன் மீது யாரோ விண்ணிலிருந்து சொரிவதே போல வெண்மையும் செம்மையும், பொன்னிறமும் நீலமும் கலந்த நறுமலர்கள் மரங்களிலிருந்து உதிர்ந்துகொண்டிருந்தன.

ஹரி பாடிக்கொண்டே இருந்தான். தெய்வீக மணத்தைப் பரப்பிய அந்த இசையில் பிரபஞ்ச மலர் ஒவ்வோர் இதழாக மலர்ந்தது. கீழ்வானம் வர்ண ஜாலங்களை வாரி இறைத்த வண்ணம் வெளுத்து வந்தது.

ஹரியின் அந்த இசைக்குப் போட்டியாக பாடுவதே போல் பறவை யினங்கள் இனிய குரலில் சுப்ரபாதம் பாடிக் காலைக் கதிரவனை வரவேற்றன. தாய்மை பெற்ற பெண்ணின் பசுமை அழகோடு செடி கொடி மரங்கள் பூர்ண கும்பம் ஏந்தி நிற்பனபோல் தங்கள் மலர்க்கொத்துக்களைத் தாங்கிய வண்ணம் இசையில் லயித்து நின்றன.

பாற்கடலைக் கடைவதேபோல நாபியிலிருந்து நாதத்தைக் கொணர்ந்து ஹரி பாடிக்கொண்டே இருந்தான். அமுதமென ஸ்வரக்கோர்வைகள், அவனுடைய தொண்டையினின்றும் விளம்ப, மத்திம, துரித கால கதிகளில் புரண்டோடிக்கொண்டிருந்தன. செங்கோளமாகக் கீழ்த் திசையில் கதிரவன் உதயமானான், கமலம் நாணத்தோடு சிரித்து மலர்ந்தது. சிருஷ்டியின் அற்புதத் தத்துவத்தை விளக்கும் மலர்கள் ஆதித்தனைச் சிரம் தாழ்த்தி வணங்கின.

இரவெல்லாம் கடுங்குளிரில் தன் காதலை நினைந்துருகிய நிலமகளை ரவி தன் பொற்கரங்களால் தாவி அணைத்தான். அந்த மஞ்சள் நிற மேனி அழகி, வைரம் பதித்த அழகிய புல்லின் இதழ்களைத் தன் மலர் விழிகளால் பார்க்கிறாள். கதிர்கள் உயிரினத்துக்குப் புத்துயிரூட்டி வாழ்த்துகின்றன.

ஒவ்வொரு நாளும் புறத்தே நிகழும் இந்த விசித்திரமான இயற்கையின் நிகழ்ச்சிகளையும் நிலைகளையும் உள்ளத்திலே கண்டு, இசையிலே தோய்ந்து ஹரி

அநுபவித்துப் பாடிக்கொண்டிருந்தான். இசையிலே பிறந்து இசையிலே முடியும் இந்த உலகில் ஒவ்வோர் அங்கமும் இசையின் அம்சமே அல்லவா? பூபாளம், தேவக்ரியா, ரேவகுப்தி, தேவகாந்தாரி என்று மாறி மாறி, ஆனால் அதன் அதன் உண்மை உருவம் சிறிதும் மாறாமல், காலத்தின் வளர்ச்சிக்கேற்ப, ஞானத்தின் சிறப்பை எடை போட்டுப் பூரணத் தன்மையுடன் முறைப்படி அவன் இசைத்துக் கொண்டிருந்தான்.

தன்யாசியை அவன் பாடிக் கொண்டிருந்தபோது பூமியில் தெளிவு பளிச்சிட்டது. பைரவிக்கு வந்தான் மண்ணின் மாண்பு தெரிந்தது; மாந்தரின் குணம் புரிந்தது—

ஹரி பாடுவதை நிறுத்தினான். தம்பூராவை எடுத்துக் கொண்டு எழுந்திருந்தான். கதவு மூடியிருந்ததைக் கண்டதும் 'திக்' கென்றது. ஒரு கணம் யோசித்தான். கதவை மூடிக்கொண்டு உட்கார்ந்ததாக அவனுக்கு நினைவில்லை. அது பழக்கமும் இல்லை, கதவை மூடிக் கொண்டு பாடக்கூடாது என்பது, பாகவதரின் - குருநாதரின் உத்தரவு, சாதகம் செய்வது தெளிவாகக் கேட்க வேண்டும் என்பது அவரது விருப்பம்.

ஹரி சாதகம் செய்யும்போது அவர் கட்டிலில் படுத் திருந்தவாறே கேட்டுக் கொண்டிருப்பார். தவறு இருந்தால் உடனுக்குடன் கவனித்துக் திருத்துவது வழக்கம். இன்று அவர் ஊரில் இல்லை. ஆனால்—

அந்தப் பழக்கத்தையொட்டிய தன் செய்கைக்கு இன்று ஏற்பட்ட கண்டனத்தை அவன் பூரணமாக அறியா விட்டாலும், அது யாரால் ஏற்பட்டிருக்கும் என்பதை அவனால் ஊகிக்க முடிந்தது, அதை எண்ணிப் பார்க்கையில் மனத்துக்கு வேதனையாகவும் இருந்தது.

சுசீலாவுக்கு ஆதியிலிருந்தே அவனிடம் வெறுப்பு. ஆனால், அது ஏன் ஏற்படவேண்டும்? 'அப்படி ஏற்பட

நான் என்ன தவறு செய்தேன்?' என்று அவன் பல முறை யோசித்துப் பார்த்திருக்கிறான். அப்படி அவள் நடந்து கொள்ள ஒரு குற்றமும் தான் செய்ததாக அவனுக்கு நினைவே இல்லை. ஆயினும் அவனுக்கு ஒன்று புரிந்தது; அன்பு காட்டுவதற்கும் வெறுப்பூட்டுவதற்கும் காரண காரியம் எதுவும் தேவையில்லை. எல்லாவற்றையும் மீறி ஏதோ ஒன்று இருக்கிறது. அது அவரவர் மனத்தைப் பொறுத்த விஷயம். அதை ஆராய்ந்து மூளையைக் குழப்பிக் கொள்வதைவிட, 'சுசீலாவிக்கு என்னை ஏனோ பிடிக்காமற் போய்விட்டது' என்பதை நன்கு உணர்ந்து கொள்ளுவது எளிதாக இருந்தது.

சுசீலா தன் வெறுப்பை ஒவ்வொரு சிறு செயலிலும் காண்பித்தாள். முதலாவது தன் தந்தை ஹரியைத் தேடிக் கண்டுபிடித்து வீட்டோடு வைத்துக்கொண்டு வித்தை சொல்லிக் கொடுத்தது அவளுக்குப் பிடிக்கவில்லை. மற்றச் சிஷ்யர்களைவிட, அவர் அவனிடம் அதிகச் சிரத்தையும் அக்கறையும் காட்டுவது பிடிக்கவில்லை. எல்லாவற்றுக்கும் மேலாக, காயத்திரி அவனிடம் அன்போடும் கருணை யோடும் நடந்துகொள்வது கட்டோடு பிடிக்கவில்லை. தான் வெறுக்கிற ஒருவனை அக்காவும் வெறுக்க வேண்டும் என்பது அவள் எண்ணம்.

ஆனால் விருப்பையும் வெறுப்பையும் ஒருவர் மனத்தில் பலவந்தமாகத் திணிக்க முடியாமல் இருப்பதை எண்ணித் தான் சுசீலா உள்ளத்துக்குள்ளேயே பொருமி வந்தாள். ஹரி பாட ஆரம்பித்ததும் விழித்துக் கொண்ட சுசீலா முணுமுணுத்துக் கொண்டே இருந்தாள். தன் தாயிடம் எரிந்து விழுந்தாள். "தூங்க விடாமல் என்ன அம்மா இது? அப்பா ஊரில் இல்லாத இந்த ஒரு நாள் சாதகம் பண்ணா விட்டால் என்ன? குடியா முழுகிப் போய்விடும்? பொழுது விடிந்து பாடினால் போதாதா? கூப்பிட்டுச் சொல்லேன் அம்மா" ஒன்று கெஞ்சினாள்.

''உனக்குத் தூக்கம் வந்தால் தூங்கேன்'' என்று லட்சுமியம்மாள் ஒரே வார்த்தையில் கூறிவிட்டாள்.

பெண்ணுக்காக என்னதான் பரிந்து பேசுகிறவளாக இருந்தாலும், மகாவித்துவானுக்கு வாழ்க்கைப்பட்டு அவருடன் இத்தனை காலமாக வாழ்வதனால் லட்சுமி அம்மாளுக்குச் சிறிது சங்கீத ஞானம் ஏற்பட்டிருந்தது. 'பாடுகிறவனைத் தடுக்கக் கூடாது; அது தவறு. மேலும், அதற்காகத்தானே அவர் அவனை இந்த வீட்டில் கொண்டு வந்து வைத்துக் கொண்டிருக்கிறார்?' என்ற விஷயங்கள் அவளுக்கும் புரிந்தன. அதனால் அவள் ஏதும் கூறவில்லை.

அக்காவிடம் சொல்லச் சுசீலாவுக்கு விருப்பம் இல்லை. 'இந்த வீட்டில் அப்பா, அம்மா, அக்கா எல்லாரும் ஒரே கட்சி; நான்தான் தனி' என்று மனத்தில் பொங்கி எழுந்த ஆத்திரத்தோடு அவள் எழுந்தாள். ஹரி பாடிக்கொண்டிருந்த அறையின் கதவைப் 'படீ'ரென்று அறைந்து சார்த்தி விட்டுத் திரும்பவும் தன் படுக்கையில் வந்து தொப்பென்று விழுந்தாள்.

இதை எல்லாம் கவனிக்காத ஹரி பாடிக்கொண்டே இருந்தான். அந்த அறையின் நான்கு சுவர்களையும் தாண்டி, சுசீலா மூடிய கதவையும் கடந்து, அந்த இன்னிசை அப்பொழுதும் கேட்டுக்கொண்டேதான் இருந்தது. அது காயத்திரிக்குத் தேவகானமாகவும், லட்சுமிக்கு ஆதியிலிருந்தே பழகிப் போன ஒன்றாகவும் இருந்தது. சுசீலாவுக்கு மட்டும் நாராசமாக இருந்ததோ?

சுசீலாவின் புறச் செய்கைகளைப் பார்ப்பவர்களுக்கு அப்படித்தான் எண்ணத் தோன்றும். ஆனால் மற்றவர்களுக்குத் தெரியாமல், அவள்தான் மற்றவர்களை விட ஆத்மார்த்தமாக ஹரியின் பாட்டைக் கேட்டு ரசித்தாள் ஆம்! ஹரியை வெறுக்க முடிந்த அவளால் அவனது கந்தர்வகானத்தை வெறுக்கவோ வேண்டாமென்றுஒதுக்கிச் செவிகளைப் பொத்திக்கொண்டு ஓடவோ முடியவில்லை.

# 2. நெஞ்சிலே முள்

மூடியிருந்த அறையின் கதவுகளைத் திறந்துகொண்டு ஹரி கையில் தம்பூராவுடன் வெளியே வந்தான். குளுமையான இளங்காற்று அவனைத் தழுவிக்கொண்டே அறையினுள் புகுந்தது. காலை எட்டரை மணி வண்டிக்குப் பாகவதர் ஊரிலிருந்து வருகிறார். அவரை அழைத்து வர அவன் ஸ்டேஷனுக்குப் போயாக வேண்டும்.

தம்பூராவை மூலையில் சார்த்திவிட்டு அவசர அவசரமாகக் குருநாதருடைய அழுக்குத்துணிகளை மூட்டையாகச் சுருட்டிக்கொண்டு காவிரிக்குப் புரப்பட்டான் ஹரி.

சலவைக்குச் சலவை சாயம் மாறிக்கொண்டே வந்த மட்டமான துணியைப் போல—கணத்துக்குக் கணம் வானத்தின் நிறம் வெளுத்துக்கொண்டே வந்தது. தெருவில் இரண்டொரு வீடுகளில் சாணம் தெளிக்கிற சத்தம் கேட்டது. காலை நீராட்டத்தை முடித்துக் கொண்டு, வைதிகர்களும், வயோதிகர்களும், சில பெண்களும் ஆற்றிலிருந்து திரும்பிக் கொண்டிருந்தனர். சிலர் தெருவில் இருந்த கயிற்றுக் கட்டிலிலிருந்து எழுந்திருக்கவே இல்லை. திண்ணையில் படுத்திருந்த காளையர்களில் சிலர், போர்வை தெருவில் நழுவி விழுந்து கிடப்பதுகூடத் தெரியாமல் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தனர்.

ஹரி வீட்டுக் கொல்லைப்புறமாகத் திரும்பிய போது யாரோ அங்கிருந்து மெல்லிய குரலில், ''ஹரி, ஹரி!'' என்று தன்னை அழைக்கிற சப்தத்தைக் கேட்டுத் திரும்பினான்.

கொல்லையில் பால் கறந்துகொண்டிருந்த பாகவதரின் பெரிய பெண் காயத்திரி, கையில் இருந்த பால் பாத்திரத்துடன் அவனை நோக்கி வேகமாக வந்தாள்.

" அதற்குள் ஆற்றுக்குப் புறப்பட்டு விட்டாயா ஹரி? "

அவளுடைய கேள்விக்கு உடனடியாகப் பதில் கூற அவன் தயங்கினான்; நிலத்தையும் கட்டை விரலையும் பார்த்தபடியே நின்றான்.

"அப்பா ஊரில் இல்லாதபோதுகூட ஏன் இத்தனை சீக்கிரம் ஹரி?" என்று அவள் கேட்டாள்.

"இப்பொழுது போனால்தானே கொஞ்சம் நிம்மதியாகக் குளிக்கலாம்? அக்கம் பக்கம் மற்றவர்களுடைய சௌகரியங்களைக் கவனிக்க வேண்டிய அவசியம் இல்லை. இஷ்டத்துக்குத் துவைக்கலாம், மேலும், ஐயா ஊரில் இல்லை என்பதற்காகப் பழக்கத்தை மாற்றிக் கொள்ளலாமா?" என்றான்.

"நானும் அதைத்தான் சொல்ல இங்கு வந்தேன். அப்பா ஊரில் இல்லை என்பதற்காகப் பழக்கத்தை மாற்றிக் கொள்ளலாமா? இன்னும் இப்படி எத்தனை நாள்தான் கூச்சப்படுவாய்? அப்பா இருந்தால், உன்னை புதன்கிழமை காலையில் வெறுமனே போய் குளிக்க அநுமதிப்பாரா? கொஞ்சம் இரு; இதோ ஒரு நொடியில் கிண்ணத்தில் எண்ணெய் எடுத்து வருகிறேன்."

" வேண்டாம்; அதற்கெல்லாம் நேரம் இல்லை. எட்டரை மணிக்குள் ஸ்டேஷனுக்குப் போயாக வேண்டும். நேரமாகிவிட்டது; நான் வருகிறேன்."

"ஒன்றும் நேரமாகிவிடாது. மூன்று மணியிலிருந்து பாடுகிறாய். கண் வேறு சிவந்து கிடக்கிறது; நிமிஷத்தில் வந்து விடுகிறேன்." பதிலுக்குக்கூடக் காத்திராமல் காயத்திரி கையில் பாலுடன் வேகமாக உள்ளே சென்றாள். ஹரி அந்தத் திசையையே பார்த்தபடி சிலைபோல் நின்று கொண்டிருந்தான்.

ஒன்பது வயதுப் பாலகனாக அந்த வீட்டில் நுழைந்தது முதல் காயத்திரியை அவனுக்குத் தெரியும். அன்பை வாரி

வழங்குவதில் அவளுக்கு இணை அவளே. அதனால்தானோ என்னவோ, கடவுளின் அன்புக்கே அவள்வரையில் பஞ்சம் ஏற்பட்டுவிட்டது.

'கன்னிகாதான பலன் கிட்டவேண்டும்' என்று கருதி, ஏழு வயது காயத்திரியை; மாப்பிள்ளை என்ற பத்து வயது மணிப் பயலுக்குத் திருமணம் செய்து வைத்தார் பாகவதர். ஆனால் அவர் விரும்பியபடி கன்னிகாதான பலன் கிட்டியதே தவிர; கன்னிப்பெண் காயத்திரிக்கு வாழ்வுதான் கிட்டவில்லை. மணமான நாலைந்து மாதங்களுக்குள்ளேயே அவள் விதவை ஆகிவிட்டாள். ஆம்-கணவன் என்ற பதவியில் இருந்த பத்து வயது மணி; கையில் கிட்டியிருந்த கனியைப் பற்றி அறியாமல், தோட்டத்திலுள்ள மாங்கனிக் காக மரத்திலேறிக் கீழே விழுந்து உயிரை விட்டான்.

இப்படி மலராமலே வாழ்க்கையை முடித்துக்கொண்ட காயத்திரியின் கதையை அவளொத்த வயதில் அந்த வீட்டை யடைந்த ஹரியினால் அப்போது புரிந்துகொள்ள முடிய வில்லை. அவளுக்காக அநுதாபப்பட தெரியவில்லை. ஆனால் இப்போது—பத்து வருஷங்களுக்குப் பிறகு அதன் ஆழம், தன்மை, வேதனையின் வேகம் எல்லாம் அவனுக்கு விளங்கின. ஆனால் அவள் யாருடைய அநுதாபத்தையும் ஆறுதலையும் விரும்பாமல், எதிர்நோக்காமல் அவற்றுக்கு அப்பாற்பட்டவளாகத் தன்னை மாற்றிகொண்டு நின்றாள்.

இப்படியே காயத்திரியின் நினைவில் நின்று நின்று ஹரிக்கு கால்கடுத்துக் காலம் கரைந்ததே தவிர, உள்ளே சென்ற காயத்திரியையும் காணோம்; எண்ணெயையும் காணோம். மாறாக, உள்ளேயிருந்து வந்த காரசாரமான விவாதங்களே அரைகுறையாக அவன் செவிகளைத் தாக்கின.

காயத்திரியிடம், ''ஒரு முறை எண்ணெய்க் குளி தவறி விட்டால்தான் என்ன? அதற்காக நீ ஏன் கொண்டு போய்க் கொடுக்கவேண்டும்?'' என்ற சுசீலாவின் கேள்வியும் தாயின் சமாதானமும் அவன் செவிகளில் தேய்ந்து ஒலித்

தாலும் அவை பாய்ந்து உள்ளத்துள் செல்லத் தவற வில்லை. துக்கம் பெரும் உருண்டையாக அவன் நெஞ்சை அடைத்தது; அவன் அதற்கு மேல் அங்கே நிற்கவில்லை.

தான் இந்தப் புவியில் வந்த வழியையே எண்ணிக் கொண்டு சென்றவனுக்குக் காவிரிக்குச் செல்லும் வழியில் கவனம் இல்லை. கவனமில்லாமலே, பழகிப் போன கால்களை நம்பிச் சென்றான்.

தூரத்தில் சுழலிட்டு ஓடும் காவிரி கண்ணுக்குக் தெரிந்தது. அவனது எண்ணத் துரும்புகள் அலைக்கழி பட்டு அமிழ்ந்தும் மிதந்தும் போய்க் கொண்டிருந்தன.

எத்தனை முயன்றும் கயாத்திரியை அவனால் மறக்க முடியவில்லை. 'என்னிடம் காயத்திரி ஏன் இப்படி அன்பும் அக்கறையும் காட்டி, உடன் பிறந்தவளிடமே பேச்சு வாங்கிக்கொள்ள வேண்டும்? சுசீலா கூறுவதும் மெய்தானே? பணமும் பண்டமும் கொடுத்துப் பாட்டுச் சொல்லிக் கொள்கிற எத்தனையோ சிஷ்யர்கள் இருக்கிறபோது; தண்டச்சோறு போட்டுச் சங்கீதம் செல்லிக் கொடுப்பதோடு, தீவட்டித் துரைக்கு எண்ணெய்க் குளி ஒரு கேடா? என்னால் அவர்களுக்கு என்ன உபயோகம்? அவர்களின் குடும்பத்துக்கு என்ன ஆதாயம்? உபயோகம் இல்லாத என்னிடம் அன்பும்-ஆதரவும் காட்ட யார்தாம் விரும்புவார்கள்? என்னிடம் இரக்கம் காட்டுகிறவர்களைக் கூடத் தண்டிப்பேன் என்று விதி கங்கணம் கட்டிக் கொண்டிருக்கும்போது, அதை இந்தக் காயத்திரியால் எதிர்த்து வெல்ல முடியுமா? எனக்கு எத்தனை கஷ்டம் வந்தாலும்அதை நான் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்வேன்; நான் அப்படியே பழகிப்போனவன். ஆனால் என்னிடம் அன்பு செலுத்தும் குற்றத்துக்காக ஒருவர் துன்புறுவதை என்னால் சகித்துக்கொள்ள முடியாது. எனக்காக யாரும் அநுதாபப்பட வேண்டாம். இதை எப்படி, யார் காயத்திரிக்குச் சொல்லுவது?' இதை எண்ணித்தான் அவன் மனம் குமுறினான்.

எண்ணெயைப் போக்கச் சிகைக்காய் உண்டு, எண்ணெயால் எழுந்த வேதனையைப் போக்கக் காவிரிக்கும் வலிமை இல்லையே!

தண்ணீரில் மூழ்கி எழுந்தான் ஹரி. குருநாதரின் துணிகளை எல்லாம் சிரத்தையுடன் துவைத்து, அலசிக் கல்லின் மேல் பிழிந்து வைத்தான். சுருள் சுருளான அவனது அழகிய கேசத்திலிருந்து சிவந்தமேனியில் வழிந்துகொண்டிருந்த தண்ணீருடன், அவனது இமை வழி இறங்கிய கண்ணீரும் கலந்தது. குளித்ததனால் உடற்புழுக்கம் தணிந்தது; ஆனால் மனப் புழுக்கம் தணிய மருந்து ஏது? தலையைத் துவட்டிய போது அவன் எதிர் மண்டபத்தைக் கவனித்தான்.

சுவரில் எழுதிய சித்திரம் போல் அசைவற்று அதைப் பார்த்தபடியே அவன் ஒரு கணம் நின்றான். இளமை நினைவுகள் அவனை ஈர்த்தன.

வயிற்றுக்குச் சோறில்லாமல் வீட்டிலிருந்து அடித்துத் துரத்தப்பட்ட பாலகன் ஒருவன் இனியகுரலில், மனம் போனபடி, சங்கீத விதி எதற்கும் கட்டுப்படாமல், காலைப் பொழுதில் அந்த மண்டபத்தில் பாடிக் கொண்டிருந்தான். அப்போது அவனுக்கு அடுத்த வேளை உனவு இல்லையே என்ற நினைப்பு இல்லை. கடந்த நாள் இரவு பட்டினி கிடந்தோமே என்ற எண்ணம் இல்லை. நாம்என்ன பாடுகிறோம், யாருக்காகப் பாடுகிறோம் என்ற சிந்தனை இல்லாமல், யாருக்கும் அஞ்சாமல், குரலை உயர்த்திப் பாடிக் கொண்டிருந்தான்.

''வள்ளிக் கணவன் பேரை
வழிப்போக்கர் சொன்னாலும்
உள்ளம் குழையுதடீ கிளியே;
ஊனும் உருகுதடீ கிளியே—
ஊனும் உருகுதடி.''

# 3. நினைவுச் சுழல்

அன்பு என்றால் என்னவென்று ஹரிக்குத் தெரியாது. அதனால் அடையும் இன்பத்தையும் அவன் சுவைத்ததில்லை. துன்பத்தின் துணையோடு, கடவுளின் அருளோடு மட்டுமே உலகில் வந்தவன் அவன்.

பாகவதரிடம் வருவதற்கு முன்பு அவனுடைய பூர்வா சிரமப் பெயர் கண்ணப்பன். காஸ் விளக்குச் சுமக்கும் பணி புரியும் பெரியசாமியின் மூத்த மனைவிக்குத் தலைமகனாகப் பிறந்தவன். கொள்ளிடக் கரையில் உள்ள அரசூர்தான் அவன் ஊர். அங்கேதான் அவன் குடும்பம் இருக்கிறது. வயதைப்பார்த்து அவனைப் பள்ளிக்கு அனுப்பிப் படிக்க வைக்காவிட்டாலும், நிலைமையைப் பார்த்துக் குடும்பப் பாரத்தை அவன் தலைமேல் சுமத்தப் பெரியசாமி தவற வில்லை. மகனை ஒரு மளிகைக் கடையில் கொண்டு போய்ச் சேர்த்தான். பையன் ஒழுங்காக வேலை செய்ய வில்லை; பக்கத்து ஹோட்டலில் அடிக்கடி கிராம போன் பாட்டுக் கேட்கப் போய் விடுகிறான் என்று மளிகைக் கடைக்காரர் அவனைத் துரத்தி விட்டார்.

பிறகு கண்ணப்பனை அந்த ஹோட்டலிலேயே எடுபிடி வேலைக்கு விட்டான். இடுப்பு முறிந்ததே தவிரப் பாட்டுக் கேட்க முடியவில்லை; அங்கிருந்து அவனாகவே ஓடிப் போய்விட்டான். அதன் பிறகுதான் அவன் தந்தை அவனைப் பிடித்து இழுத்துக்கொண்டு வந்து, ''உருப்படாத பயலே, உன்னை முன்னுக்குக் கொண்டுவர நெனச்சா உன் தலையிலே இதுதான் எழுதியிருக்கும் போலிருக்கு; இந்தா, பிடி!'' என்று சொல்லி, பேபி பெட்ரோமாக்ஸை தூக்கித்

தலையில் கட்டித் தன்னுடனேயே தொழிலுக்குத் துணையாக வைத்துக் கொண்டான்.

வயது ஐம்பதுக்கு மேலாகியும் பெரியசாமிக்குக் 'கியாஸ் லைட்' தூக்கும் உத்தியோகந்தான். கல்யாணம், ஊர்வலம், உற்சவங்கள் பொதுக் கூட்டங்கள் முதலிய அனைத்துக்கும் அவ்வூரில் அவன்தான் ஒளிபரப்பும் உத்தியோகஸ்தன்: அதாவது அந்த ஊரிலேயே எம். ஜி. எல் (மாயாண்டி கியாஸ் லைட்) கம்பெனிதான் பெரிய லைட் கம்பெனி. அதில் பணி புரியும் இருபது முப்பது வாடகை விளக்குகள் பெரியசாமியின் தலைமையில்தான் செல்லும்.

அந்தக் கம்பெனி உரிமையாளர் மாயாண்டிக்கு பெரியசாமியிடம் அன்பு உண்டு. அவன் அந்தக் கடைக்கு வந்த பிறகுதான் நாலு விளக்குகளுடன் ஆரம்பித்த தன் தொழில் இத்தனை பெரியதாக வளர்ந்தது என்பது மாயாண்டியின் நம்பிக்கை. அதனால் அவனுக்குப் பெரியசாமியிடம் ஒரு பிடிப்பு, பிரியம்; அதனால் அவனுடைய பிள்ளை கண்ணப்பனையும் வேலைக்கு எடுத்துக்கொண்டு சம்பளமும் போட்டுக் கொடுத்தான். அதில் பெரியசாமிக்கு உள்ளூற மகிழ்ச்சி.

கண்ணப்பனுக்கு நாளடைவில் அந்த வேலை பிடித்துப் போய்விட்டது. திருமணம், கோயில் உற்சவம் முதலிய ஊர்வலங்களுக்கெல்லாம் பேபி பெட்ரோமாக்ஸை மகன் கையில் கொடுத்துத் தன்னுடனேயே வைத்துக்கொண்டிருந்தான் பெரியசாமி. அப்போது கண்ணப்பனின் கவனமெல்லாம், ஊர்வலத்தில் கச்சேரி பண்ணும் நாகசுர வித்துவானின் இசையிலேயே இருக்கும். அவன் சிந்தை அதிலேயே சென்று லயித்துவிடும். தன் தலையில் இருக்கும் பெட்ரோமாக்ஸின் பாரங்கூட அவனுக்குப் பெரிதாகத் தோன்றாது.

இப்படியே நாளடைவில் பெரிய பெரிய திருமண ஊர்வலங்களிலும், கோயில் சுவாமி புறப்பாடுகளிலும் கண்ணப்

பன் மிகவும் மகிழ்ச்சியுடன் விளக்கும் தலையுமாகக் காட்சியளித்தான். அநுபவப்பட்ட மற்ற விளக்குக்காரர்கள் தூங்கி வழிந்தாலும், கண்ணப்பன் இமை கொட்டாமல் ஆர்வத்துடன் கசேரிக்கு மத்தியில் கடமையைச் செய்துகொண்டிருப்பான். அவன்மீது எவ்வகைப் புகாரும் வந்ததில்லை. மகனுடைய தொழில் ஆர்வத்தைக் கண்டு பெரியசாமி பூரித்துப் போனான். 'இந்த வயதில் இவ்வளவு பொறுப்போடு தொழில் செய்கிற மகன், நாளைக்கு நிச்சயம் முதலாளி மாயாண்டியைப் போல் சொந்தக் கடை வைத்து நடத்தக்கூடிய தகுதியை அடைந்தே தீருவான்' என்றுதான் அவன்கனவு கண்டான். ஆனால் பாவம்! அவனுக்கு எங்கே கண்ணப்பனின் உண்மை மனநிலை தெரியும்? கண்ணுறங்காமல் மகன் விழித்திருப்பது, விளக்குக்காக மட்டும் அல்ல, அதைவிட முக்கியமாகக் கச்சேரிகளைக் கேட்டு ரசிப்பதற்காகத்தான் என்கிற இரகசியம் பெரியசாமிக்கு எப்படித் தெரியப்போகிறது?

தன் சம்பளத்தோடு மகனுடைய சம்பளத்தையும் சேர்த்து மாதம் தவறாமல் இளைய பெண்டாட்டியிடம் கொண்டு போய்க் கொடுக்கும்போது பெரியசாமிக்கு மகிழ்சி தாங்க முடியாது. மூத்த சம்சாரத்தின் பிள்ளை சோடை அல்ல என்பதைத் திருச்சிராப்பள்ளிக்காரிக்கு எடுத்துக் காட்ட முடிந்ததில் ஏற்பட்ட மகிழ்ச்சி அது. ஆனால் அதை முனியம்மா கவனித்ததாகவே காட்டிக்கொள்ள மாட்டாள். மாறாக, "இன்னும் எத்தனை நாளைக்குத்தான் இப்படியே சின்னப் பயல் சின்னப்பயல்னு சொல்லிக்கிட்டு அரைச் சம்பளமும், கால் ¾ சம்பளமும் வாங்கிக்கிட்டு வரப்போறே? உலக்கை மாதிரி இருக்கிறான்; புள்ளை தலையிலே பெரிய விளக்கைத் தூக்கி வச்சாத் தேஞ்சாபோயிடுவான்? முழுச் சம்பளம் கொடுக்க மாட்டானா உன் முதளாளி?" என்று காய்ந்து விழுவாள்.

பெரியசாமியின் செவிக்குள் புகுந்த அந்தச் சொற்கள் அவன் பொக்கையான இதயத்தில் புகுந்து வேதனையையும்

துக்கத்தையும் ஏற்படுத்தின; என்றாலும் முனியம்மாவிடம் எதிர்த்துப் பேசி அவள் மனத்தைப் புண்படுத்த அவனுக்கு விருப்பம் இல்லை. மூத்த மனைவி காத்தாயி சாகிறபோது தன் ஒரே மகன் கண்ணப்பனைப் புருஷன் தலையில் கட்டி விட்டு இறந்தாள். பிறகு தன் வயதையும் வருமானத்தையும் பொருட்படுத்தாமல் இரண்டாந்தாரமாகத் தனக்கு வாழ்க் கைப்பட ஒப்புக்கொண்ட இளம் பெண் முனியம்மாவிடம் பெரியசாமிக்கு அளவுக்குமீறிய மதிப்பு ஏற்பட்டது என்ப தோடு காதலும் இருந்தது.

ஆயினும் அதற்காக மகனைத் துன்புறுத்தவோ வாட்டி வதைக்கவோ அவனுக்கு விருப்பம் இல்லை. ஆனால்— கண்ணப்பன் தன் பேச்சை லட்சியம் செய்வதில்லை என்று முனியம்மா சமயம் வாய்த்த போதெல்லாம் கணவனிடம் கூறிக் கண்ணை கசக்கிக்கொண்டும் இருந்தாள். பெரியசாமி யின் மனம் ஆசைக்கும் பாசத்துக்கும் ஈடு கொடுக்க முடியா மல் தவித்தது. இந்த நிலையில்தான் ஒரு விபரீதம் நிகழ்ந்தது.

அரசூரை அடுத்த கிராமத்தில் பூங்குளம் மைனரின் கல்யாணம் நடந்தது. பெரிய கல்யாணம்; அந்தக் காலத்து ஐந்து நாள் கல்யாணம். சுற்று வட்டாரத்திலுள்ள அத்தனை கிராமத்து மக்களும், ஐந்து நாளும் அங்கேதான் முகாம் இட்டிருந்தனர். ஒவ்வொரு நாளும் பந்தலில் வைதிகக் காரியங்கள் ஒரு புறம் நடந்து கொண்டிருக்கும்; இன்னொரு பக்கம் சங்கீதக் கச்சேரி இடைவிடாமல் நடந்து கொண்டே இருக்கும். காரணம் கல்யாண வீட்டுக்காரரான பூங்குளம் மைனர் பெரிய பணக்காரர் என்பதோடு சிறந்த சங்கீத ரசிகராகவும், எல்லாச் சங்கீத வித்துவான்களுக்கும் மிகவும் வேண்டியவராகவும் இருந்தார். அதனால் அந்தக் கல்யாணத்தில் சங்கீதக் கச்சேரிக்குப் பிராதான்யம் இருந்தது. வந்திருந்த வித்துவான்கள் அனைவருக்கும் சன்மானங்களை வாரி வாரி வழங்கினார் மைனர். கச்சேரி நடக்கிற இடத்திலேயே சாப்பாட்டையும் மறந்து பழி

கிடந்தான் கண்ணப்பன். கடைசி நாள் ஊர்வலத்துக்குப் பல்லக்கு ஜோடிக்கக் கும்பகோணத்திலிருந்து வண்டி நிறையப் பூவும் முத்தும் மணியுமாக வந்து இறங்கின. ஓதுவார்களும், பல்லக்கு அலங்கரிக்கும் கலைஞர்களும் காலையிலிருந்து இரவு வரையில் தங்கள் கைவண்ணம் முழுவதையும் காட்டி அழகான பல்லக்கை ஜோடித்தார்கள்.

ஊர்வலத்துக்குப் பிரபல நாதசுர வித்துவான் ராஜரத்தினம் பிள்ளையின் மேளக் கச்சேரி ஏற்பாடாகியிருந்தது. மைனருக்கும் ராஜரத்தினம் பிள்ளைக்கும் எத்தனை ஈடுபாடு, எவ்வளவு அந்நியோந்நியம் என்பதை நேரில் கண்ட அத்தனை வித்துவான்களும் ஊர்க்காரர்களும் வியந்து பேசிக் கொண்டிருந்தனர்.

மாலை நாலு மணிக்கு மைனர் அனுப்பிய காரில் வந்து இறங்கிய ராஜரத்தினம் பிள்ளையை, மைனர் அங்கே இங்கே அசைய விடாமல் தம்முடனேயே இருத்தி வைத்துக் கொண்டார். தவுல் வித்துவான்களும், வாத்தியங்களும் இறங்கியிருந்த ஜாகைக்குக் குடம் குடமாகப் பசும்பால் காப்பியும், தட்டுத் தட்டாக நெய்யொழுகும் தித்திப்பும் காரமும் சென்றன. அங்கே மைனரும் சென்று அடிக்கடி கவனித்துக் கொண்டார்.

உடன் இருந்த பிள்ளை, "கல்யாண மாப்பிள்ளையாய் லட்சணமாய் நீர் பந்தலில் போய் உட்காருமையா; எங்களையெல்லாம் நாங்கள் கவனித்துக் கொள்கிறோம்" என்று மைனரைக் கடிந்து கொண்டார்.

அன்றிரவு ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஊர்வலம் புறப்பட்டது. பெரியசாமி ஊர்வலத்தில் தன் நிர்வாகத் திறமையை எல்லாம் உபயோகித்து மிகவும் பிரமாதமாக ஆட்களை வேலை வாங்கிக் கொண்டிருந்தான் ஆறடிக்கு ஒரு விளக்கு வீதம் இருமருங்கிலும் நிறையக் கியாஸ் விளக்குகள் சரம் கோத்தாற்போல் நின்று ஒளிவெள்ளத்தில் அந்தக் கிராமத்தையே மிதக்கச் செய்தன.

கல்யாணப் பந்தலிலும், சம்பந்திகளான மைனர் வீட்டார் தங்கியிருந்த பக்கத்து ஜாகையிலும் இருபது முப்பது விளக்குகளுக்கு மேல் வைத்திருந்தார்கள். அந்த விளக்குகளைக் கவனித்துக் கொண்டு, அங்கேயே இருக்கும்படி பெரியசாமி மகனிடம் கூறினான். கண்ணப்ப னுக்கு இதைக் கேட்டதும் 'திக்'கென்றது. "அப்பா, நானும் உன்கூட ஊர்வலத்துக்கு வரேன் அப்பா. நீ இங்கே இந்த வேலைக்கு வேறு யாரையாவது போடு" என்றான்.

மகன் இப்படிக் கூறக் காரணம் பல்லக்குப் பார்க்கும் ஆசை அல்ல; ஊர்வலத்தில் நாகசுரம் வாசிக்க வந்திருக்கும் பெரிய வித்துவானுடைய நாகசுரக் கச்சேரியைக் கேட்க வேண்டும்; விடிய விடியக் கேட்டு அந்த இன்னிசையை அநுபவிக்க வேண்டும் என்ற ஆர்வந்தான் என்பது பெரிய சாமிக்கு எப்படித் தெரியும்?

"ஏலே, நீ அந்தக் கூட்டத்திலே வந்து மாட்டிக் கிட்டேயானா நசுங்கிப் போவே. செவனேன்னு நான் சொன்னதுபோலே இங்கேயே குந்தினாப்பிலே இருந்து, விளக்குகளை எல்லாம் கவனிச்சிக்கிட்டாப் போதும்" என்று கண்டிப்பான உத்தரவைப் போட்டுவிட்டு நடந் தான்.

சிறிது தூரம் சென்றதும், பின்னால் தொடர்ந்து வரும் காலடி ஓசையைக் கேட்டுத் திரும்பிப் பார்த்த பெரிய சாமிக்குத் தூக்கிவாரிப் போட்டது. பூனைபோல நடந்து கண்ணப்பன் அவன் பின்னால் வந்து நின்றுகொண்டிருந் தான்.

"ஏன் கழுதே, என் பின்னாலேயே வந்து நிக்கறே? என்ன வேணும்?"

"நான்தான் அப்பவே சொன்னேனே அப்பா எனக்கு நாயனம் கேக்கணும்." கண்ணப்பன் தயங்கிக் கூறி வாய் மூடவில்லை; பெரியசாமி பாய்ந்து அவன் தலைமயிரைப் பிடித்து ஓர் உலுக்கு உலுக்கி, "உனக்கு இந்த உதைதான்

கேக்குது!'' என்று முகத்திலும் முதுகிலும் பளீர்பளீர் என்று நாலு அறை விட்டான்.

''மருவாதியாகக் கல்யாண வீட்டிக்கு ஓடு; இல்லாட்டி இங்கேயே குழியைத் தோண்டிப் புதைச்சுப் பிடுவேன்'' என்று ஒரு குத்துக் கொடுத்தான். வழி முழுவதும் அழுது கொண்டே கண்ணப்பன் கல்யாண வீட்டை நோக்கிப் போய்க் கொண்டிருந்தான்.

## 4. மண்டபச் சாதகன்

ஏழையாகப் பிறப்பதே குற்றம். அதை விடத் தனக்கென்று சில விருப்பு வெறுப்புகளைச் சுமந்து திரிவது எவ்வளவு பெரிய குற்றம்? அந்தக் குற்றத்துக்கு உரிய தண்டனையைத்தான் கண்ணப்பனின் மனம் அப்போது அநுபவித்தது.

அப்பன் மனம் போனபடி அடித்து நொறுக்கியவுடன் பதிலுக்கு அவனால் செய்ய முடிந்தது, மனம் போனபடி அழுது தீர்ப்பது என்கிற ஒன்றுதான்.

கல்யாண வீடு வருவதற்குள் அவனாகவே தன்னைத் தேற்றிக் கொண்டான். மூலைக்கு மூலை குட்டிப் பிசாசுகளைப் போல விளக்குகள் அவனைக் கண்டு, 'வா, வா' என்று அழைத்தன.

'சொன்னபடி மரியாதையாக முதலிலேயே எங்களிடம் வந்து உட்கார்ந்திருந்தால் இந்த அடியும் உதையும் உனக்குக் கிடைத்திருக்குமா?' என்று அவை அவனைக் கேட்பன போலிருந்தன. கண்ணப்பன் தன்னையும் மீறி நகைத்து விட்டான்.

மேலும். பெரியசாமி கண்ணப்பனையே முழுவதும் நம்பிக் கல்யாண வீட்டில் இருக்கும்படி வற்புறுத்திக் கூறியதற்குக் காரணம் உண்டு. பெட்ரோமாக்ஸ் விளக்குகளைப் பற்றிய எல்லா நுணுக்கங்களையும் பெரியசாமி, கண்ணப்பனுக்குக் கற்றுக் கொடுத்திருந்தான்.

வெளிச்சம் மங்கி விளக்கு மக்கர் பண்ணினால் அவ்வப் போது காற்று அடித்துச் சரி பண்ணவோ, பின் போட்டு நிப்பிளைத் திறந்து தடைப்பட்டுப்போன எண்ணெயைச் சரி செய்யவோ, சமயத்தில் 'மாண்டில்' அறுந்தால் புதியதைக் கட்டிச் சமாளிக்கவோ, எல்லாம் அவனுக்கு அந்த வயதிலேயே புரிந்து விட்டன. ஆனால் அவன் மனம் மட்டும் இசையின்பத்தில் லயித்திருந்தது. அதற்காக, தான் சங்கீத வித்வானாக வேண்டும்; யாரிடமாவது பாட்டுக் கற்றுக்கொள்ள வேண்டும் என்பன போன்ற எண்ணங்கள் அவன் உள்ளத்தில் எழவில்லை. சில சமயங்களில் அவன் கேள்வி ஞானத்தில் அறிந்ததை வீட்டில் எப்பொழுதாவது பாடுவான். பாடுகிற அந்த வாயில் தவறாமல் அப்போதே அடி விழும். ''சோற்றுக்குக் குடும்பம் தாளம் போடுது; அக்கறையா இன்னும் பத்துக் காசு அதிகம் சம்பாதிச்சுக் கிட்டு வரத்துக்கு துப்பில்லை; உனக்குப் பாட்டு ஒரு கேடா?'' என்ற சிற்றன்னையின் கொடும் தாக்குதல்களுக்கு அவன் பல முறை இலக்காயிருக்கிறான். அதன் பிறகு கண்ணப்பன் அந்த வீட்டில் வாயே திறந்ததில்லை. யாரும் இல்லாத தோட்டமும் துரவும் ஆற்றங்கரை மண்டபமுந் தாம் கண்ணப்பனுடைய இசையார்வத்தைத் தணிக்கும் ஆஸ்தான மண்டபங்களாகத் திகழ்ந்தன.

நாகசுரத்தைக் கேட்க ஐந்து நாட்களாகக் கூடிக் கூடிப் பேசி ஊரே காத்துக்கிடக்கும்போது, அவன் மட்டும் அந்தப் பந்தற்கால்களையும் சம்பந்தி வீட்டுக்காரர்களையும் பார்த்துக் கொண்டு விளக்குக்குக் காவல் இருப்பதா?

ஊர்வலம் கிளம்பித் தெருமுனையை அடைந்தது. இனிமேல்தான் சிவன் கோயில் நான்கு மாட வீதிகளிலும் ஊர்வலம் வந்தாக வேண்டும். நாகசுர இன்னிசையும், தவுலின் நாதமும் அவனை அழைத்தன. அவன் யோசித்து ஒரு முடிவுக்கு வந்தான். மறுகணம், தன்னை நம்பியிருக்கும் அத்தனை விளக்குகளையும் அநாதைகளாக்கிக் கூட்டத்தில் போய்ச் சேர்ந்து விட்டான்.

நீரில் விழுந்த உப்பைப்போல, காலம் ஒளிவெள்ளத்தில் கரைந்தது. ஆனால் அத்தனை நேரம் ஒழுங்காக எரிந்த விளக்குகள் கண்ணப்பன் போனதும், மக்கர் செய்தன. ஒரு விளக்கு 'பக்-பக்' என்றது. கூடத்து மூலையில் இருந்த மற்றொரு விளக்கும் பற்றி எரிந்தது. சில அணைந்தே போயின.

அவ்வளவுதான், சிறிது நேரத்துக்கெல்லாம் கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டு, எல்லாரும் ஏககாலத்தில் "லைட்பாய், லைட்பாய்!" என்று கத்தினர். கண்ணப்பன் அங்கே இருந்தால்தானே? சம்பந்தி வீடு இருளில் தவித்தது. இதற்குள் இந்த விஷயம் மிகப் பெரிய குற்றமாக உருவெடுத்துப் பெண் வீட்டுக்காரர் காதுக்கு எட்டியது. 'இதுவரை குற்றங்குறை கூற இடம் இல்லாமல் கவனித்தும், இறுதியில் சம்பந்தி வீட்டாரிடமிருந்து இப்படி அவசியமில்லாத புகாரைக் கேட்க வேண்டியதாகிவிட்டதே' என்று பெண் வீட்டாருக்கு மிகவும் வருத்தம் ஏற்பட்டது.

ஊர்வலம் முடிந்து வந்த பெரியசாமியைப் பெண்ணின் தகப்பனார் பிரமாதமாகக் கோபித்துக் கொண்டார். "விளக்குக்காக ஒரு தம்பிடிகூடத் தர முடியாது. உன் முதலாளியை வரச் சொல்லு" என்று கூறிவிட்டார். எல்லாவற்றையும் புரிந்துகொண்ட பெரியசாமி அப்படியே வெலவெலத்துப் போனான்.

"என் மகனை நம்பி மோசம் போயிட்டேனுங்க. அவன் இப்படிப் பண்ணுவான்னு நான் நினைக்கவே இல்லை எசமான். தப்பெல்லாம் என் மேலேதான். இந்த ஏழையை இந்த ஒருவாட்டி மன்னிச்சுப்புடுங்க எசமான்" என்று நெடுஞ்சாண்கிடையாகப் பெண் வீட்டுக்காரர் காலில் விழுந்து புலம்பினான் பெரியசாமி. அவர்கள் கோபம் தணியவில்லை. தரதரவென்று மகனையும் இழுத்துக் கொண்டு வந்து எஜமானின் கால்களில் விழச் செய்தான். இதற்குள் அங்கு வந்த மைனர் எல்லா விஷயங்களையும் விசாரித்துத் தெரிந்துகொண்டார்.

அவருக்குக் கண்ணப்பன் மேல் தப்பு இருப்பதாகத் தோன்றவில்லை. சங்கீதப் பித்துள்ள மகனின் விருப்பத்துக்கு மாறாக அவனைப் பந்தலில் விட்டுச் சென்றதற்காகப் பெரியசாமியையே கோபித்துக் கொண்டதோடு, சங்கீத ரசனை உள்ள பிள்ளையைப் பெற்றதற்காகவே பெரியசாமியையும் மன்னித்து அனுப்பி விட்டார் மைனர். ஆனால் அதைப் புரிந்து கொள்ளப் பெரியசாமியால் முடிந்தால் தானே?

வீட்டுக்குச் சென்றதும் முனியம்மாளிடம் அன்று நடந்த விஷயத்தைச் சொல்லக்கூடாது; ரகளை பண்ணுவாள் என்று பயந்து, பெரியசாமி எவ்வளவோ ஜாக்கிரதையாக இருந்தும், மறுநாளே விஷயம் அவள் காதுக்கு எட்டிவிட்டது. பக்கத்துத் தெரு லைட்டுக்காரப் பாவாடை, கல்யாண வீட்டில் நடந்ததை அன்றே அக்கறையோடு வந்து முனியம்மாவிடம் சொல்லிவிட்டான். பாவாடைக்கு எப்போதும் பெண்களிடம் தனித்துப் பேசுவது என்றால் மிகவும் பிடிக்கும். அதிலும் கிழவனுக்கு வாழ்க்கைப்பட்டு வந்திருக்கும் பக்கத்து ஊர்ச் சின்னப் பெண்ணான முனியம்மாவிடம் பேசுவதென்றால் அவனுக்குச் சோறு தண்ணியே வேண்டாம். இதற்காகவே அவன் அடிக்கடி பெரியசாமியின் வீட்டுக்கு வருவான். வலிய வலிய, முனியம்மாளிடம் வந்து ஏதாவது பேசுவான். அவளுக்கும் பாவாடையின் பேச்சில், சிரிப்பில் ஒரு கவர்ச்சி இருந்தது.

அதைப் புரிந்து கொண்ட பாவாடை இப்போது அதைத் தனக்கு மிகவும் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டான். தொழில் துறையில் பெரியசாமியிடம் தனக்குள்ள விரோதத்தை யெல்லாம் தீர்த்துக்கொண்டான். ஒன்றுக்குப் பத்தாக முனியம்மாளிடம் உருவேற்றிச் சென்றான். அவளும், அவன் அடித்த வேப்பிலையின் வேகத்தில், தன் புருஷன் வீட்டுக்கு வந்ததும் சரியானபடி ஆடித் தீர்த்தாள்.

''உன் மவன் இனி இந்த வீட்டுக்குள்ளற வந்தா காலை ஒடிச்சிடுவேன்!'' என்று கையில் விறகுக் கட்டையை எடுத்துக் கொண்டு நின்றாள். உடனேயே தன்னிடம் விஷயத்தைச் சொல்லாமல் மறைத்ததற்காகக் கணவனை வாய்க்கு வந்தபடித் திட்டித் தீர்த்தாள். ''அப்பனும் பிள்ளையும் ஒண்ணு; நான்தான் இந்த வீட்டிலே தனி. எனக்குத்தான் இங்கே யாருமே இல்லே. ஆதரவாயிருந்த பாவி பக்கிரியும் போயிட்டான்'' என்று தம்பியில்லாக் குறையைச் சொல்லி அழுது புலம்பினாள். பிறகு, ''நான் இப்பவே என் பிறந்த வீட்டுக்குப் போயிடறேன். இனிமே இந்த வீட்டிலே என்ன இருக்கு? உனக்கும் எனக்கும் ஒத்துக்காது'' என்று சொல்லிப் பானையிலிருந்த பழம் புடைவையை எல்லாம் சுருட்டி மூட்டை கட்டிப் பாவலாக் காட்டினாள்.

பெரியசாமி இதைக் கண்டு உண்மையிலேயே நடுநடுங்கிப் போனான். வயசான காலத்தில் தன்னையும் கைக் குழந்தைகளையும் தனியாகத் தவிக்கவிட்டு அவள் ஊருக்குப் போய்விடுவாளோ? பெண்டாட்டியை அருமையாக வைத்துக் காப்பாற்றத் தெரியவில்லை என்று மற்றவர்களிடம் ஏச்சும் பேச்சும் வாங்க நேருமோ என்று மனம் பதைத்தான். வயதையும், தான் அவளுடைய கணவன் என்பதையும் மறந்து முனியம்மாளிடம் கெஞ்சினான். அவள் கையிலிருந்த துணிமூட்டையைத் தன் பலம் கொண்ட மட்டும் பிடித்திழுத்து வாங்கி வைத்துக் கொள்ளத் துடித்தான். எதற்கும் மசியாமல் முனியம்மாள் உக்கிரமாகவே நடித்தாள்.

தந்தையின் தவிப்பையும் கண்ணீரையும் கண்டு மனம் பொறுக்காத கண்ணப்பன் சிற்றன்னையின் காலில் விழுந்து அழுதான். முனியம்மாள் அவனை எட்டி உதைத்தாள்.

'அந்தப் பயல் ஒரு இடைஞ்சல்' என்று பாவாடையுக்குப் போதித்திருந்தான். ஆகவே கண்ணப்பனைக்

கண்டதும் முனியம்மாளுக்குப் பின்னும் கோபம் அதிக மாயிற்றே தவிரக் குறையவில்லை. அவனை ஒழித்துக்கட்ட அதுவே சரியானக் கட்டம் என்று எண்ணி வாய்க்கு வந்தபடி திட்டினாள்.

“ஒண்ணு, இந்த வீட்டிலே இனிமே நீ இருக்கணும், இல்லாட்டி நான் இருக்கணும், நம்ம ரெண்டு பேரும் சேர்ந்து இருக்க முடியாது” என்று தீர்மானமாகக் கூறினாள். அதற்குமேல் தாக்குப்பிடிக்க முடியாத பெரியசாமி, மனைவியோடு சேர்ந்து மகனைக் கண்டபடி திட்டி, அவளுடைய திருப்திக்காகவே கை வலிக்கும்வரை அடித்தான். உடனே முனியம்மாள், “போ, எங்கேயாவது ஒழிஞ்சு போ! உருப்படாத உன்னை வச்சுக்கிட்டுத் தண்டச் சோறு போட என்னாலே ஆவாது; ஓடு!” என்று கடிந்து விரட்டினாள். பெரியசாமி வாய் திறக்கவில்லை.

கண்ணப்பனுக்கு இனிமேல் அந்த வீட்டில் இருக்க முடியாது. இருக்கக்கூடாது என்பது புரிந்தது. தன்னை விடத் தந்தைக்குச் சிற்றன்னைதான் முக்கியம். அவள் உதவி, அவள் அன்புதான் அவருக்குப் பெரிது; அதுதான் உண்மையுங்கூட; இனிமேல் நாம் ஓடிவிட வேண்டியதுதான் என்ற நிச்சயமான முடிவுக்கு வந்துவிட்டான்.

அன்றுமுதல் கண்ணப்பன் பொதுவுடைமை ஆகிவிட்டான். இந்தப் பரந்த பூமியெல்லாம் தனக்குச் சொந்தமாகவும், அதில் வாழும் அத்தனை மக்களுமே தன் உறவினர்களாகவும் நண்பர்களாகவும் அவன் கருதினான். தன் சாண் வயிற்றுச் சோற்றைப் பற்றி அவன் கவலை கொள்ளவில்லை. எப்படியோ வேளைக்கு வேளை, இடத்துக்கு இடம் அலைந்து, காலமும் நேரமும் தப்பினாலும், உணவு தப்பாமல் கிடைத்தது. ஏதோ வேலை செய்தான். அந்த நேரம் போகக் கச்சேரி எங்காவது இருந்தால் அதைக் கேட்பான். ஓய்வில் பாடுவான். இப்படியே ஊரூராகச் சுற்றிச் சுவாமி மலைக்கு வந்து சேர்ந்தான். அந்த ஊரும்,

கோயிலும் பாடுவதற்கு ஏற்ற ஆற்றங்கரை மண்டபமும் அவனுக்கு மிகவும் பிடித்தன. அக்கம்பக்கம் எங்கே சென்றாகிலும், வயிற்றுப்பாட்டை முடித்துக்கொண்டு, படுக்கவும் பாடவும் மண்டபத்துக்கு வந்துவிடுவான். அப்படி நாட்களைக் கழித்தபோதுதான் ஒரு நாள் அவனை மகாவித்துவான் சுப்பராம பாகவதர் வலிய வந்து ஆட்கொண்டார்.

'ஹரி' என்கிற குரலைக் கேட்டு, அத்தனை நேரம் நினைவுச் சுழலில் சிக்கித் தவித்தவன் சட்டென்று திரும்பிப் பார்த்தான்.

கஞ்சிரா கோவிந்தராவ் நின்று கொண்டிருந்தார். ''என்ன ஹரி, வாத்தியார் ஊரில் இல்லையா? எந்த ஊரில் கச்சேரி?'' என்ற அவருடைய கேள்விகளுக்கு ஒரே வார்த்தையில் பதிலளித்தான். ரெயிலுக்கு நேரமாகி விட்டதைக் கூறி, அவசர அவசரமாகத் துவைத்த துணிகளை எடுத்துக் கொண்டு புறப்பட்டான். பாதி வழி வரும்போதே, வீட்டின் ஞாபகமும், எண்ணெய்ப் பிரச்சினையும் நினைவுக்கு வரவே, ஹரிக்குப் 'பகீர்' என்றது. வேகமாக நடந்து வந்த அவன் கால்கள் தாமாகவே பின்னலிட்டன. காயத்திரியும் சுசீலாவும் அவன் மனக் கண்முன் மாறிமாறித் தோன்றினர். வேதனையுடனேயே வீட்டுக்குள் நுழைந்த அவன் யாருடனும் பேசவில்லை. குருநாதருடைய துணிகளைக் கொல்லையில் அழகாக உதறிக் கொடியில் உலர்த்தினான்.

அவன் வருவதற்குள், சாப்பாட்டு அறையில் தயாராக அவனுக்குத் தட்டில் பலகாரமும் காபியும் இருந்தன. அவன் பாதி சாப்பிடும்போதே, ''ரெயிலுக்கு இன்னும் அரைமணி கூட இல்லை'' என்று சுசீலா தாயிடம் குறை கூறிக்கொண்டிருந்தாள். ஹரி பலகாரம் பண்ணிக் கையை அலம்பியதும், லட்சுமி யம்மாள், ''இத்தனை நேரம் காவிரியில் என்ன

பண்ணினாய் ஹரி? ஐயா இன்று ஊரிலிருந்து வருவது மறந்து விட்டதா?'' என்று சுசீலாவின் ஆறுதலுக்காக இரண்டொரு கேள்விகளைக் கேட்டாள்,

அதற்குள் சுசீலா, ''வீட்டில் இத்தனை நேரம், பொழுது விடியும்வரை கத்தினது போதாதென்று, மண்டபத்திலும் போய்ப் பாடினானோ என்னவோ? பழக்க தோஷம் எங்கே போகும்? பட்டிணத்திலிருந்து வருகிற அப்பாவுக்கு, ஸ்டேஷனிலிருந்து வீட்டுக்கு வரவா வழி தெரியாது? யாரும் ரெயிலுக்குப் போக வேண்டாம்'' என்று ஒரு குட்டி உத்தரவு போட்டாள். இத்தனைக்கும் ஹரி வாயே திறக்கவில்லை.

பதில் பேசாமல், சட்டையை மாட்டிக்கொண்டு அவன் வேகமாக ஸ்டேஷனை நோக்கி நடந்தான். ஆனால் அவன் வருவதற்குள், ரெயில் ஸ்டேஷனில் வந்து நின்றிருந்தது. பிரயாணிகளில் சிலர் நடந்தும், வண்டியில் ஏறியும் வெளியே சென்றனர்,

ஹரி, எஞ்சினுக்கும், கார்டு வானுக்குமாக இரண்டு மூன்று முறை தேடி ஓடி அலைந்து பார்த்தான். குருநாதரைக் காணவில்லை,

## 5. யார் இந்தப் பையன்?

காலம் யாருக்காகவும் காத்திருப்பதில்லை. ஸ்டேஷனுக்குத் தாமதமாக வந்ததற்காக ஹரி தன்னை மிகவும் நொந்து கொண்டான். குருவின் விஷயத்தில் அலட்சியமாக இருந்து விட்டது போல அவன் மனமே அவனைத் தண்டித்தது. வாசலில் வண்டிகள் நிற்கும் இடத்துக்கும் பிளாட்பாரத்துக்குமாக அவன் மாறி மாறி ஓடினான். தனக்குப் பழக்கமான வண்டிக்காரர்களை விசாரித்தான். அவர்களது பதில் அவனுக்குத் திருப்தியளிக்கவில்லை. மீண்டும் டிக்கெட் கலெக்டரிடம் வந்து கேட்டான். அவர் அவன் பேச்சைச் சரியாகக் காதில் போட்டுக்கொள்ளாததோடு, வழக்கப்படி கையை நீட்டி அவனிடமே டிக்கெட் வேறு கேட்டார்.

இரண்டாவது மணி அடித்ததும் ஹரி மீண்டும் ஒரு முறை ரெயில் வண்டியின் தலைக்கும் வாலுக்குமாக ஓடிப் பார்த்தான். ரெயில் வருவதற்கு ஒரு நிமிஷத்துக்கு முன்பே ஸ்டேஷனுக்கு வந்திருந்தால் மனம் இத்தனை கிலேசப் படாது அல்லவா? 'குருநாதர் வந்திருந்து ஒருவேளை என்னைக் காணாமல் வண்டியில் ஏறிப் போய்விட்டாரா? அல்லது இன்று வரவே இல்லையா?' என்று எண்ணிக் கொண்டே ஓடிய போதுதான் திடீரென்று யாரோ, 'ஹரி!' என்று அழைக்கும் குரல் கேட்டது.

பிடில் பஞ்சு அண்ணா அவனைப் பார்த்துவிட்டு அருகில் கூப்பிட்டார். ''வழியில், பாகவதர் திருவிடை மருதூரில் இறங்கி விட்டார்'' என்றும், ''எப்போது வருவார் என்பது தெரியாது'' என்றும் அவர் சொல்லிக்கொண்டிருந்தபோதே வண்டி புறப்பட்டது. பச்சைக் கொடிக்குப் போட்டியாகப்

பஞ்சு அண்ணா ஜன்னலுக்கு வெளியில் கையை ஆட்டிக் கொண்டேயிருந்தார். 'நல்ல வேளை, குருநாதர் இந்த வண்டியில் வரவில்லை' என்பதை அறிந்து நிம்மதி யடைந்தான்.

ஹரி வீட்டை அடைந்த போது, உள்ளேயிருந்து ஒரு புதுக் குரல் கேட்டது. அந்தப் புதுக் குரலைச் சுற்றிலும் பழக்கமான குரல்கள் மிகவும் அன்போடும் அக்கறையோடும் யோகக்ஷேமங்களையும் நாட்டு வளத்தையும் பற்றி விசாரித்துக் கொண்டிருந்தன.

ஹரி எட்டிப் பார்த்தான். கட்டுக் குடுமியும், பஞ்ச கச்சமும், தங்க உருத்திராட்சமுமாகக் காட்சியளித்த அந்த முதியவரை அவன் அந்த வீட்டில் அதுவரைக் கண்டதில்லை. அப்படியிருந்தும் அவன் அந்த முகத்தை எங்கோ பார்த்தது போன்ற உணர்வு தோன்றியது.

''ஐயா இந்த ரெயிலில் வரவில்லை'' என்று உள்ளே வந்து கூறிய அவனைப் பார்த்ததும், ''யார் லட்சுமி இந்தப் பிள்ளையாண்டான்? செக்கச் செவேல்னு ராஜாமாதிரி இருக்கானே! சுப்புவோடே புதிய சிஷ்யனா?'' என்று நாணா மாமா அக்கறையோடு விசாரித்தார்.

உடனே லட்சுமியம்மாள், ''ஒன்றும் புதிசில்லை; பழைய சிஷ்யன்தான். ஒன்பது வயதில் அழைத்து வந்தார்; அவனும் வந்து பத்து வருஷத்துக்கு மேலே ஆகிறது. நீ எங்கே இந்தப் பக்கம் எட்டிப் பார்க்கிறாய் இங்கே என்னவெல்லாம் நடக்கிறது என்று தெரிந்துகொள்ள? நீ வந்து போன மறு வருஷமே இவன் வந்து விட்டான்'' என்று அவள் கூறி முடிப்பதற்குள் நாணா மாமா ஹரியைக் கூப்பிட்டு, ''ஏண்டா அம்பி, உன் பெயர் என்ன?'' என்று விசாரிக்க எண்ணினார்.

ஆனால் அதற்குள் கொல்லையிலிருந்து குளித்துவிட்டு வந்த சுசீலா, ''அம்மா, மாமா எப்பொழுது வந்தார்?

அப்பா வரவில்லையா?'' என்று ஆவலோடு கேட்டாள். அதற்குத் தாயினிடமிருந்து பதில் வருவதற்குள், அவசரம் தாங்காமல், ''எப்பொழுது மாமா வந்தீர்கள்? வரப்போவதாக ஒரு கடுதாசி கூடப் போடவில்லையே?'' என்று மாமாவிடமே கேட்டாள்.

''கடுதாசி போட்டுத் தகவல் கொடுத்துவர நான் என்னம்மா உன் அப்பாவைப் போல் பிரபல சங்கீத வித்வானா? கிராமத்தில் நிலத்தோடும் ஆட்களோடும் மாடு கன்றுகளுடனும் போராடுவது போதாதென்று, உண்டியல் கடையில் பணத்தை அள்ளிக் கொடுத்துவிட்டுக் கோர்ட்டுக்கும் வீட்டுக்கும் வேறே அலைந்து கொண்டிருக்கிறேன். இதற்கே நேரம் போதவில்லை. கடுதாசி எங்கே போடுவது? ஏதோ உங்களையெல்லாம் பார்க்கவேண்டுமென்று தோன்றிற்று; உடனே புறப்பட்டு வந்தேன். மேலும் முன்னே மாதிரி ஓர் இடத்துக்கு வந்து போகத் தள்ளவுமில்லை. பாரேன், இந்தப் பையைக்கூடத் தூக்கிக் கொண்டு வர முடியவில்லை'' என்றார் ஆயாசத்துடன்.

''ஏன் மாமா, இந்த எட்டரைமணி வண்டியில்தானே வந்தீர்கள்? அதற்குத்தான் ஹரி வந்திருந்தானே? நீங்கள் ஏன் பையைத் தூக்கிக்கொண்டு வண்டிக்கு அலைய வேண்டும்? அவனிடம் சொல்லுவதுதானே?'' என்று சுசீலா அசட்டுத்தனமாகக் கேட்டாள்.

''நான் ஹரியைக் கண்டேனா, சிவனைக் கண்டேனா? இந்தப் பிள்ளையாண்டானையே நான் முன்பின் பார்த்திருந்தால் அல்லவா தெரிவதற்கு?'' என்று கேட்டார்.

ஆனால் அதைக் காதில் போட்டுக் கொள்ளாமல், ''உங்களுக்குத் தெரியாவிட்டால்?'' என்ற சுசீலா ஹரியைப் பார்த்து, ''அப்பா ஊரிலிருந்து வராவிட்டால், அதற்காகக் கண்ணை மூடிக்கொண்டு வந்துவிட வேண்டுமா? ஸ்டேஷனுக்குப் போன நீ மாமாவுக்குக் கொஞ்சம் உதவி செய்து அவரோடு வண்டியில் வந்திருக்கக்கூடாதா ஹரி?'' என்று

சற்றுக் கோபமாகவே கேட்டாள். ஆனால் அதற்கு அவன் எவ்வித மறுப்பும் தெரிவிக்கவில்லை. மாமாவை அவனுக்கும், மாமாவுக்கு அவனையும் தெரியாது என்பது அங்குள்ள எல்லாருக்கும் தெரியும். இந்த நிலைமையில் யாருக்கு யார் உதவமுடியும் என்பது சுசீலாவுக்கும் தெரியும். ஆயினும் தெரிந்துகொண்டே; வேண்டுமென்று அவள் கேட்டாள். அப்படிக் கேட்பவளைக் கண்டிக்க வழி தெரியாமல் அம்மா மௌனமாக இருந்தாள். ஆனால் தங்கையின் இந்த அதிகப்பிரசங்கித்தனத்தைப் பொறுத்துக் கொள்ள காயத்திரியால் முடியவில்லை.

''மாமாவை முன்பின் பார்க்காமல் அவரை ஹரிக்கு எப்படி அம்மா தெரியும்? அப்படித் தெரிந்திருந்தால், நம் வீட்டு மனுஷாளை அவன் விட்டு வந்திருப்பானா?'' என்றாள் காயத்திரி, தாயிடம்.

அவ்வளவுதான், சுசீலாவுக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. இத்தனை நாள் ஹரிக்கு முன்பாகவும் அப்பா அம்மாவுக்கு முன்பாகவும் அவமானப்படுத்தியது போதாதென்று, நீண்ட நாட்களுக்குப் பிறகு வந்திருக்கும் மாமாவின் முன்பும் காயத்திரி அவமானப்படுத்துவதை அவளால் தாங்க முடியவில்லை.

''பார்த்தியா அம்மா, நான் எது சொன்னாலும் இந்த அக்கா ஹரிக்காகப் பரிந்துகொண்டு வருகிறதை! அடையாளம் தெரியாதாமே அடையாளம்! நம் வீட்டில் மாமாவின் படம் எத்தனை இருக்கிறது? நீயும் மாமாவும் மாமியும் இவள் கல்யாணத்தின்போது சேர்ந்து எடுத்துக்கொண்ட போட்டோவுக்குப் போன மாதந்தானே ஹரி வேறே கண்ணாடி போட்டுக்கொண்டு வந்தான்? அக்கறை இருந்தால் நம்ம மனுஷாளை அத்தனை சீக்கிரம் மறந்து போய்விடுமா? வேறொன்றும் இல்லை; தன் கட்சியை எடுத்துப் பேசுவதற்கு ஓர் ஆள் இந்த வீட்டில்

இருக்கிறது என்கிற தைரியம்; அதுதான்'' என்று பெரிய மனுஷிபோல் பேசி நிறுத்தினாள்.

பெண்ணினுடைய பேச்சையும் தோரணையையும் பார்த்து லட்சுமியம்மாளுக்கே வியப்பாக இருந்தது. மாமாவுக்கோ, அடாப் பழியாயினும் தம் கட்சியை எடுத்துப் பேசிய சுசீலாவின் மீது மதிப்பு அதிகமாகியது. காயத்திரி தன் கடமையைச் செய்த நிம்மதியில் உள்ளே சென்றாள். ஹரியோ உள்ளேயோ வெளியிலோ போக முடியாத தர்மசங்கடத்தில் சிறிது நேரம் தவித்தான்.

பிறகு மாமாவே சுசீலாவைப் பார்த்து ''போனால் போகிறது, கோபித்துக் கொள்ளாதே! பாவம்! சின்னப் பையன் தானே? எல்லாம் உலக அனுபவம் ஏற்பட்டால் சரியாய் போய்விடும்'' என்று கூறி, ''அம்பி, இங்கே வாடா'' என்று ஹரியைக் கூப்பிட்டார்.

அவனுடைய களை பொருந்திய முகமும், அடக்கமான குணமும் அவரைக் கவர்ந்தன. அவனைப் பக்கத்தில் இழுத்து முதுகைத் தட்டி, ''உன் பேர் தான் ஹரியா?'' என்று விசாரித்தார்.

''ஆமாம்'' என்று ஹரி தலையை அசைத்தான். அவர் உடனே ''ஹரி என்றால் ஹரிஹரனா; ஹரிஹர சுப்பிரமணியனா?'' என்று கேட்டார்.

''ஏன் இன்னும் வெளியிலிருந்து வந்தபடி சட்டையைக் கழற்றாமல் இருக்கிறாய்? உனக்கு என்ன வயசு? பூணூல் போட்டாயிற்றா?''

''இல்லை''

''ஏன்? இன்னும் வயசாகலை என்கிற நினைப்போ?'' என்று சிரித்துக் கொண்டே கேலியாகக் கேட்ட அவர் கவலையுடன் விசாரித்தார்.

''ஏன்? அப்பா அம்மா இருக்கிறார்களா, இல்லையா''

''....''

''பின்னே ஏன் போடல்லை?''

''கிடையாது,''

'கிடையாதுன்னா. . . . அப்பா, அம்மா கிடையாதா; பூணூல் கிடையாதா?' நாணா மாமாவுக்கு ஒன்றும் புரியவில்லை. இந்த நிலையில் லட்சுமியம்மாள், ''அண்ணா, இங்கே வாயேன்'' என்று அவரை உள்ளே அழைத்தாள். ஹரி தன் வேலையைக் கவனிக்க வெளியே சென்றான்.

தபாலாபீஸிலிருந்து கடிதங்களை பெற்று வீடு திரும்புவதற்குள் மணி பத்து அடித்துவிட்டது. வீட்டுக்கு வந்ததும் கடிதங்கள் சம்பந்தமாக ஒரு மணிநேர வேலை இருந்தது.

கச்சேரிக்குத் தேதி கேட்டு எழுதியிருந்த சபாக் கடிதங்களையும், கல்யாணக் கச்சேரிக்கு நாள் குறிப்பிட்டுச் சம்மதம் கேட்டிருந்த கடிதங்களையும் தனியாக வைத்துக் கொண்டான். சமீபத்தில் பாகவதர் பாலக்காட்டில் பாடியதை வெகுவாகப் புகழ்ந்து ஒரு ரசிகரிடமிருந்து வந்த பாராட்டுக் கடிதத்தைத் தனியாக வைத்தான். பாகவதர் ஏற்கனவே கச்சேரிக்கு ஒப்புக் கொண்டிருந்த தேதிக்குச் 'சௌகரியப்படுமா?' என்று கேட்டிருந்த ஒன்றிரண்டு பேர்களுக்கு, நாட்குறிப்பைப் பார்த்து உடன் பதில் எழுதிப் போட்டான். ஆயுள் இன்ஷுரன்ஸ் கம்பெனியிலிருந்து பணம் கட்ட வந்த பிரீமியம் நோட்டீசைப் பைல் பண்ணி வைத்தான். பங்களூர் அன்பர் ஒருவர், கச்சேரியின் போது கூறியபடி அனுப்பியிருந்த அசல் ஊதுவத்திப் பாக்கெட்டைப் பிரித்துப் பூஜையறையில் கொளுத்தி வைத்தான். மீதியை அம்மாவிடம் கொண்டுபோய்க் கொடுத்தான். மறக்காமல், ஊதுவத்தி அனுப்பிய அன்பருக்கு, பெற்றுக் கொண்ட விவரத்துக்கு நன்றி தெரிவித்துப் பதில் எழுதினான். இப்படியெல்லாம் காரியங்களை ஒழுங்காகவும் உடனுக்குடனும் செய்து முடிக்கும் வகையில் பாகவதர் அவனைத் தயார் செய்திருந்தார்.

கல்வியறிவு இல்லாமல் தம்மிடம் வந்த அவனைக் காயத்திரியைக் கொண்டு ஆரம்பப் பாடங்களைக் கற்பித்துப் பிறகு சுசீலாவுக்கு வரும் பிரைவேட் வாத்தியாரிடமும் ஹரியை ஒப்படைத்து, அவனுக்குப் பூரண கல்வி ஞானத்தை ஏற்படுத்தினார்.

காலையில் ஊரிலிருந்து வந்த நாணா மாமா ரெயில் துணியையெல்லாம் ஒரு மூட்டையாகக் கட்டிக்கொண்டிருந்தார். தலையில் அரைக்கீரை விதைத் தைலம் கம கமத்தது. தபால் வேலைகளை முடித்துவிட்டு வந்த ஹரி, அவருக்கு ஏதாவது உதவி தேவைப்படுமா என்று அவர் அருகில் வந்து, ''ஆற்றுக்கா குளிக்கப் போகிறீர்கள்?'' என்று கேட்டான்.

அவன் சாதாரணமாகத்தான் கேட்டான். அதில் நாணா மாமாவுக்கு அத்தனை கோபம் வருவதற்கு ஒன்றுமில்லை. ஆனால் ஏனோ, அவருக்கு அவனுடைய பேச்சே பிடிக்கவில்லை. லட்சுமி கூறியவற்றையும் நினைவுபடுத்திக் கொண்டு அவர் அவனை ஒரு முறை முறைத்துவிட்டுப் புறப்பட்டார். அவன் அவர் மனத்தைப் புரிந்து கொள்ளாமல், மூட்டையைத் தூக்கப் போனான், அவர் அதற்குள் துணி மூட்டையைப் பாய்ந்து கையில் எடுத்துக் கொண்டு வாய்க்கு வந்தபடி ஏசினார்.

''உன்னை நான் உதவிக்குக் கூப்பிட்டேனா? உனக்கு என்ன நெஞ்சழுத்தம் இருந்தால் என் துணியைத் தூக்க வருவாய்? அவ்வளவு தூரம் மட்டு மரியாதை இல்லாமற் போய்விட்டது; இல்லையா? எல்லாம் இந்தச் சுப்பராமன் கொடுக்கிற இடம்!'' என்று ஒரு முத்தாய்ப்பு வைத்து விட்டு, வேகமாகக் கவேரியை நோக்கி நடந்தார்.

காலையில் அன்பாகத் தன்னிடம் பேசிய நாணா மாமாவின் இந்தத் திடீர் மாற்றத்துக்குக் காரணம் அவனுக்கு விளங்கவில்லை. காலையில் சுசீலா தன் மீது புகார்

பண்ணியபோதுகூட, அவர் தன்னிடம் அன்பாக நடந்து கொண்டதாகத்தான் அவனுக்கு நினைவிருந்தது. ஆனால் தபாலாபீஸுக்குப் போய் வருவதற்குள் அவரிடம் ஏற்பட்டிருக்கும் இந்த மாறுதலுக்கு என்ன காரணம்? யாராவது என்னைப் பற்றிக் குறைவாகப் பேசி அவருக்குச் சொல்லிக் கொடுத்திருக்க வேண்டும். அப்படிச் செய்யக்கூடிய ஒரே நபர் சுசீலா ஒருத்திதான். அவளுக்கு நான் என்ன கெடுதல் செய்தேன்?—

பக்கத்துக் கிராமத்தில் நண்பர் ஒருவர் பாகவதரிடம் கைமாற்றாகப் பணம் வாங்கியிருந்தார். அவர் குறிப்பிட்ட இரண்டு மூன்று தவணைகளும் தவறிவிட்டபடியால் அதை ஐயா வருவதற்குள் வாங்கி வரலாம் என்று எண்ணினான். இதைக் கேட்டவுடன் லட்சுமியம்மாள், ''அவ்வளவு தூரம் போவதானால் போகும் இடத்தில் எவ்வளவு நேரம் ஆகுமோ; சாப்பிட்டு விட்டுப் போ'' என்று கூறினாள். அவனுக்கும் அதுவே சரி என்று பட்டது. எல்லாருடனும் சேர்ந்து சாப்பிட்டு விட்டால், அவரவர் மீதிக் காரியங்களைக் கவனிக்கச் சௌகரியமாக இருக்கும் அல்லவா?

ஆற்றங்கரையில் குளிக்கப் போன அதிதிக்காக அனைவரும் காத்திருந்தனர். நேரம் ஆகஆக அண்ணா வராததைக் கண்டு லட்சுமியம்மாளின் மனம் மிக்க கவலைக்குள்ளாகியது. ஆற்றில் புதுவெள்ளம் கரைபுரண்டு ஓடியது. பழைய பல சம்பவங்கள் அவளுடைய கவலைக்கு உரமூட்டின, ஹரியிடம் லேசாக ஒரு கோடி காட்டித் தன் கவலையை அவள் தெரிவித்தாள். அண்ணாவுக்காக, அவனைப் போய்க் காவிரியில் பார்த்துவரச் சொல்ல அவளுக்குத் தயக்கமாக இருந்தது.

காவிரிக்குப் போகும்போதுகூட அண்ணா அவனிடம் சண்டை போட்டது நினைவுக்கு வந்தது. ஆனால் அதை

யெல்லாம் பொருட்படுத்தாத ஹரி அம்மாவின் கவலையை உணர்ந்து மாமாவைத் தேடி ஆற்றை நோக்கி வேகமாக நடந்தான். ஆனால் அங்கே அவரைக் காணவில்லை. ஹரிக்குத் 'திக்' கென்றது.

நீண்ட நேரம் அங்கும் இங்கும் தேடிவிட்டு, 'அம்மாவுக்கு என்ன பதில் சொல்லுவது?' என்பதே புரியாமல் கவலையுடன் வீட்டை அடைந்தான், ஆனால் வாசலுக்கு வரும்போதே உள்ளே நாணா மாமாவின் குரல் கேட்டது.

## 6. அண்ணாவின் ஆணை

வேக்காடு அதிகமானால் மழை உண்டாகிறது அல்லவா? அதேபோல் மனப் புழுக்கம் தாங்காமல் கண்களில் நீர் வந்துவிடுமோ! ஹரி கலங்கினான். யாருடைய வருகைக்காக அவன் காத்திருந்தானோ அவர்கள் இப்போது அவனுக்காகக் காத்திராமல் தங்கள் சாப்பாட்டை முன்னதாகவே முடித்துக் கொண்டனர்.

நாணா மாமா போஜனத்துக்குப் பிறகு, கூடத்திலிருந்த ஊஞ்சலில் ஆடியபடியே, அருகில் இருந்த செல்லத்திலிருந்து தளிர் வெற்றிலையாக எடுத்து மடித்து மடித்துப் போட்டுக் கொண்டார். சட்டென்று ஹரியைக் கண்டதும் அவர், ''எங்கேடா போயிருந்தாய் இத்தனை நேரம்? சீக்கிரமாகப் போய்ச்சாப்பிடு. அவர்களுக்கெல்லாம் வேலை இல்லையா?'' என்று அவனையே கடிந்து கொண்டார். ஆனால் அவருடைய கேள்விக்குப் பதில் கூறமால் கொல்லையில் போய்த் தன் தட்டை அலம்பிக்கொண்டு வந்து வழக்கம் போல் உட்கார்ந்தான். கூடத்தில் இருந்த மாமா, சமையல் அறையில் அவன் தட்டை வைத்துக்கொண்டு உட்காருவதையும் லட்சுமி பரிமாறப் போவதையும் பார்த்துவிட்டுப் பதறிப் போய் உள்ளே ஓடி வந்தார்.

''ஏண்டாப்பா, உனக்குச் சாப்பிட இந்த இடந்தான் கிடைத்ததா? இங்கே உட்கார்ந்தால்தான் இறங்குமோ? தட்டை எடுத்துக்கொண்டு முதலில் நடையில் போய் உட்காரு; சாதம் போடச் சொல்கிறேன்'' என்று அவனிடம் ஓர் அதட்டல் போட்டுவிட்டு' அடுத்தபடியாகச் சகோதரியிடம் பாய்ந்தார்.

''அவன்தான் தெரியாமல் வந்து உட்கார்ந்தான் என்றால் உனக்குப் புத்தி எங்கே போச்சு? சொல்ல வேண்டாம்?'' என்று சீறி விழுந்தார்.

''அவன் ஒன்றும், தெரியாமல் வந்து உட்கார்ந்து விடவில்லை; நானும் தெரியாமல் போடப் போகவில்லை. அவன் வழக்கமாகச் சாப்பிடும் இடந்தான் இது. இங்கே தான் போட வேண்டும் என்பது அவர் உத்தரவு. நாங்கள் எல்லாரும் இங்கே ஒன்றாய்த்தான் சாப்பிடுகிற வழக்கம்.'' லட்சுமியம்மாள் சாதாரணமாகத்தான் இதைக் கூறினாள். நாணா மாமாவுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

''ஒன்றாய்த்தான் என்றால்? இங்கேயே இதே சாப்பாடு, எல்லாருக்கும் சமபந்தி, சம போஜனமா?''

''என்ன மாமா, நீங்கள் இப்படி ஆச்சரியப்படுகிறீர்கள்! இந்த வீட்டிலே சாப்பாட்டில் மட்டுமல்ல; எல்லா வற்றிலுமே ஹரிக்குத்தான் அப்பா முதல் இடம் கொடுத்து வைத்திருக்கிறார். அவருக்கு ஆண்வாரிசு இல்லையல்லவா? அந்தக் குறையை இப்படித் தீர்த்தாகிறது. நீங்கள் காவிரிக்குக் குளிக்கப்போய் அதிக நேரமானவிடன் அம்மாதான் கவலைப்பட்டு ஹரியைக் காவிரிக்கு அனுப்பி யிருந்தாள். இல்லாவிட்டால் அவனும் நம்முடனேயே அப்பொழுதே சாப்பிட்டாகியிருக்கும்.'' சுசீலா,மாமாவுக்கு வீட்டு நிலவரத்தை ஒரு கோடி காட்டி விளக்கினாள். நாணா இதை எல்லாம் கேட்டதும் நரசிம்ம மூர்த்தியாக மாறினார்.

''அவ்வளவு தூரத்துக்கு விஷயம் முற்றிவிட்டதா? அதுதான் அவன் அப்படித் துளுத்துப் போயிருக்கிறான்; பார்க்கிறேன், அவன் எல்லாரோடும் சேர்ந்து உட்கார்ந்து சாப்பிடுகிறதை! வித்தை சொல்லிக்கொடுத்தால் அது அந்த மட்டோடு! வரட்டும் சுப்பராமன்; நானே கேட்டு இதற்கு ஒரு முடிவு கட்டிவிட்டுப் போகிறேன்'' என்றவர்,

சட்டென்று ஹரியின் பக்கம் திரும்பி, ''இன்னும் ஏண்டா இங்கே உட்கார்ந்திருக்கிறாய்? நடையிலே போய்த் தட்டை வைத்துக்கொண்டு உட்காரு; சாப்பாடு வரும்'' என்று கத்தியவர் தங்கை பக்கம் திரும்பி, ''ராத்திரி எனக்கு வேறே சமையல் பண்ணுகிறதானால் இங்கே சாப்பிடுகிறேன்; இல்லையானால் சீமாச்சு வீட்டுக்கே போய் விடுகிறேன்; அதுவும் இல்லாவிட்டால் பத்துப் பழத்தைத் தின்றுவிட்டுப் பட்டினி கிடக்கிறேன். இத்தனை காலத்துக்குப் பிறகு என்னால் இந்த அநாசாரத்தை எல்லாம் தாங்க முடியாது'' என்று அறுதியிட்டாற்போல் கூறி மாடியை நோக்கிச் சென்றார்.

பதில் பேசாமல் ஹரி தட்டை எடுத்துக்கொண்டு நடையில்வந்து உட்கார்ந்தான். துக்கம் பெரும் உருண்டையாக நெஞ்சை அடைந்தது.

# 7. பெண் பார்க்க வந்தவர்

கொந்தளிக்கும் கடல்போல் மனம் தறிகெட்டுப் புரண்டது. நெஞ்சிலே குமுறிய வேதனைகள் ஹரியின் வயிற்றுப் பசியை மறக்கச் செய்துவிட்டன.

தட்டில் விழுந்த சோற்றிலிருந்து ஒரு பருக்கைகூட அவனுக்குத் தொண்டைக்குள் இறங்கவில்லை. சொந்த விருப்பு வெறுப்புக்களை வெளிக்காட்டி, யாருடைய மனத்தையும் புண்ணாக்க அவன் விரும்பவில்லை. தனக்கு ஏற்பட்ட அவமான உணர்ச்சியை அவன் மென்று விழுங்கி விட்டாலும், அதை ஜீரணிக்க உள்ளத்தோடு உடல் மறுத்தது. இந்தப் போராட்டத்தினால் தட்டத்தில் போட்ட சாதமும் குழம்பும் அப்படியே இருந்தன.

அண்ணாவின் முன்னால் எதுவும் செய்ய இயலாத லட்சுமியம்மாள், அவனைப் பார்த்து வருந்தி, ''ஹரி, சாப்பிடு. ஒன்றும் யோசிக்காதே. ரசத்துக்கானதும் கூப்பிடு'' என்று மெதுவாக அவனிடம் குனிந்து கூறிவிட்டு விருட்டென்று உள்ளே சென்றாள்.

ஹரிக்குப் பிரக்ஞை வந்தது. லட்சுமியம்மாளின் குரலில் தொனித்த பரிவும் பாசமும், அடிபட்ட அவன் உள்ளத்துக்கு ஒத்தடம் கொடுத்தன. தன் அசட்டுத் தனமான செய்கை அம்மாவின் மனத்தை எத்தனை தூரம் புண்ணாக்கி விட்டது என்பதை எண்ணியதும், மளமள வென்று அத்தனை சோற்றையும் அள்ளிப் போட்டுக் கொண்டான்.

மேற்கொண்டு கூப்பிடாமல், அப்படியே எழுந்து விடுவோமா என்று ஒரு கணம் எண்ணியவன், மறுகணமே அந்த நினைப்பைக் கைவிட்டு 'அம்மா' என்று அழைத்தான். லட்சுமி அம்மாள் மீண்டும் பழைய கலக்கத்துடன் வெளியே வந்தாள். ஆனால் ஹரியின் முகத்தைப் பார்த்ததும் அவள் உள்ளம் பிரகாசமடைந்தது. வழக்கத்தைவிட அன்று வேண்டுமென்றே இரண்டுபிடி சாதம் அதிகமாகவே சாப்பிட்டுக் கை கழுவினான் ஹரி.

இத்தனையையும் காயத்திரி உள்ளேயிருந்து பார்த்துக் கொண்டுதான் இருந்தாள். காலையில் மாமா ஊரிலிருந்து வந்தது முதல் ஹரியைப் போட்டு எல்லாரும் வாய்க்கு வந்தபடி வறுத்து எடுப்பது; எல்லாவற்றுக்கும் மேல், இன்று வந்து நாளைக்குப் போகப் போகும் மாமாவின் ஆசாரத் துக்கும் அட்டகாசத்துக்கும் உடந்தையாக இருந்து குடும் பத்தில் சிறந்த ஒருவனாக அப்பா மதிக்கும் ஹரிக்கு இழைக் கப்படும் அநீதி, இதையெல்லாம் கண்டு அவள் மனம் குமுறினாள்.

ஆனால் நியாயமோ அநியாயமோ; அதையெல்லாம் கண்டித்துக் கேட்டு வீட்டைச் சீர்திருத்த அவள் யார்? 'நாளை அப்பா வரட்டும்; அவரிடம் நடந்ததை நடந்த படியே சொல்லிவிட்டால் போகிறது. பெரியவராக அப்பா ஒருவர் இருக்கிறாரே. பிறகு என்ன கவலை?' என்று மனத்தைத் தேற்றிக் கொண்டு உள்ளேயே அடைந்து கிடந்தாள்.

பகற் பொழுதைப் போலவே இரவிலும் காரியங்கள் நடந்தன. ஆனால் அவற்றில் குழப்பமோ விவாதமோ இல்லை. லட்சுமியம்மாள் அண்ணாவுக்காகத் தனிச் சமையல் செய்திருந்தாள். ஹரி, எல்லாரும் சாப்பிட்டு முடிகிறவரை வெளியே எங்கேயோ சுற்றிவிட்டு வந்தான். வந்தவன் புதிய வழக்கப்படி தட்டை எடுத்து வந்து நடையிலேயே உட்கார்ந்து சாப்பிட்டான்.

நாணா மாமாவுக்குப் பரம சந்தோஷம். எத்தனையோ நாளாக அந்த வீட்டில் நடந்து வந்த அநாசாரத்தைத் தாம் வந்த ஒரே நாளில் சீர்படுத்தி, வைக்க வேண்டியவர்களை வைக்க வேண்டிய இடத்தில் வைத்து விட்டதாக உள்ளத்துக்குள் ஒரு மகிழ்ச்சி. சுசீலாவின் உள்ளத்திலும் அந்த எதிரொலியின் நிறைவும் திருப்தியும் நிலவியிருந்தன.

ஹரி தட்டை எடுத்து அலம்பினான். தான் தனித்துச் சாப்பிட்ட இடத்து எச்சிலைச் சாணமிட்டு மெழுகினான்; துணியினால் துடைத்தான். புதுப் பழக்கமானாலும் எல்லாவற்றையும் பொறுமையாகவும், செம்மையாகவும் செய்தான்.

சுசீலாவுக்கு அவன் படுகிற அவஸ்தைகள் வேடிக்கையாக இருந்தாலும், அவளையும் மீறிச் சிறிது சலனமும் ஏற்பட்டது. அதிலிருந்து அவன் மீண்டபோது அவளையும் அறியாமல் ஒருவித மகிழ்ச்சி தோன்றியது.

இரவு ஒன்பது மணி அடித்தது. தெருவில் கயிற்றுக் கட்டிலைப் போட்டுப் படுத்திருந்த அண்ணாவுக்கு தங்கை அருமையோடு பால் கொண்டு வந்து கொடுத்தாள். இரவு முழுவதும் அவர் வந்த காரியத்தைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தார்.

சுசீலாவை அவர் முன்பு பார்த்ததற்கும் இப்போது பார்ப்பதற்கும் உருவத்தில், அழகில், அந்தஸ்தில், குணத்தில் கூட எவ்வளவோ மாறுதல்கள் இருப்பது புலனாயிற்று. தம் மூன்றாவது பிள்ளை ராமபத்திரனுக்குச் சுசீலா சரியான இணையாவாள் என்று அவர் மனம் முடிவு செய்தது. சுப்பராமன் வந்ததும் ஒரு வார்த்தை கேட்டுவிட்டால் போதும். மீதிக் காரியங்களை தங்கை கவனித்துக் கொள்வாள். தம் பிள்ளையைப் பற்றி அவருக்கு கவலை இல்லை. அவன் அவருடைய இடுப்பிலிருக்கும் பொடி மட்டை. நினைத்தபோது எடுத்து உறிஞ்சலாம். இழுத்த இழுப்புக்கு வரக்கூடியவன்.

அப்பா சொன்னால் அதுவே வேத வாக்கு. பாட சாலையில் முறைப்படி அத்தியயனம் பண்ணினவன்.

இரவு முழுவதும் உறக்கம் வராமல் தவித்தாள் சுசீலா. எண்ணங்கள் அவளைக் குளவியாகக் கொட்டின. ஊரி லிருந்து நீண்ட நாட்களுக்குப் பிறகு விஜயம் செய்திருக்கும் மாமா எதற்காக வந்திருக்கிறார் என்பதை அவளால் நன்கு புரிந்து கொள்ள முடிந்தது. போதாததற்கு அம்மா வேறு, தெரியுமோ தெரியாதோ என்று, அடிக்கடி ஜாடைமாடை யாகச் சொன்னாள்.

முறைப்படி அத்தியயனம் பண்ணி முடித்து, வைதிகத் தொழிலுக்குப் பூரணத் தகுதியும் பட்டமும் பெற்ற தம் திருக்குமாரனுக்குச் சுசீலாவைக் கேட்கவே அவர் வந்திருக் கிறார். இனி அப்பா வந்ததும் பேச்சு எப்படியெல்லாம் போகுமோ, அவர் என்ன சொல்லப் போகிறாரோ என்ற கவலை அவளைப் பலமாகக் கவ்விக் கொண்டது.

தலையில் கட்டுக் குடுமியும், இடையில் பஞ்சகச்சமும், இளம் தொந்தியுமாகத் திகழும் மாமாவின் பிள்ளை ராமபத்திரனைக் கற்பனை செய்து பார்த்தாள் சுசீலா. அவளது உடலும் உள்ளமும் ஏக காலத்தில் அதை வெறுத்தன. 'மாமாவின் பிடிவாதத்துக்கு மசிந்து அப்பா எங்கே என்னை ஒரு வார்த்தைக்கூடக் கேட்காமலே தாரை வார்த்துக் கொடுத்து விடுவாரோ?' என்கிற பயம் ஒருகணம் எழுந்தாலும் மறுகணமே, 'அப்பா நிச்சயம் என்னைக் கேட்காமல் முடிவு செய்ய மாட்டார்' என்ற ஆறுதலும் பிறந்தது.

இப்படி எண்ணங்களினால் அலைக்கழிக்கப்பட்டுக் கொண்டிருந்த சுசீலாவுக்கு தூக்கம் எப்படி வரும்? விழிப்பு அவளுக்கு வேதனையூட்டியது. புரண்டு புரண்டு படுத்தாள். உறக்கம் நெற்றியில் தேங்கி, இமைகள் கனத்து, விழிகளைப் பாரம் அழுத்தியது.

மெல்லிய திரைபோல் ஹரியின் நினைவு அவள் கண்முன் படர்ந்தது. 'இன்னும் பொழுது விடிய வில்லையா? ஹரி பாட ஆரம்பித்தால் அந்த இசையைக் கேட்டாவது மனத்தின் தவிப்பைத் தணித்துக் கொள்ளலாமே!' என்று எதிர்பார்த்து ஏங்கினாள். ஆனால் பொழுது விடிந்ததே தவிர, அவள் ஆவலுடன் எதிர்பார்த்த இசை பிறக்கவே இல்லை.

'ஹரி தூங்கி விட்டானா? ஜுரமாக இருந்தால்கூட, காலை நேரச் சாதகத்தைத் துறக்கத் துணியாதவன், இன்று சோதனையைப் போல், ஏன் பாடவில்லை?'—

எல்லாரும் படுக்கையைச் சுற்றி வைத்துவிட்டு அவரவர் காரியங்களில் ஈடுபட்டனர். அம்மாவும் காயத்திரியும் வீட்டு வேலைகளில் மும்முரமாக இருந்தனர். அவர்கள் சீக்கிரம் எழுந்துவிடக் கூடியவர்கள். வாசல் பெருக்கிச் சாணம் தெளித்து அம்மா கோலம் போடுவாள். காயத்திரி கொல்லையைக் கூட்டி, வீடு மெழுகிப் பால் கறப்பாள். சுசீலா செல்லப் பெண், அவள் எத்தனை நேரம் தூங்கினாலும் அவளை யாரும் எழுப்ப மாட்டார்கள். ஆனால் இன்று எல்லாருக்கும் முன்பு அவள்தான் படுக்கையிலிருந்து எழுந்தாள். ஹரி பாடாமல் ஏமாற்றிவிட்டான். முந்திய நாள் அவன் பாடியதற்காக வெகுண்டாள்; இன்று அவன் பாடாதததற்காக வெகுண்டாள். ஹரியின் அறைவாசற் படியில் நின்று கொண்டு இரையவேண்டும் போலிருந்தது. அவன் மீது அத்தனை கோபம் அவளுக்கு.

வாசலில் கயிற்றுக் கட்டிலில் படுத்திருந்த மாமா எப்பொழுது காவிரிக்குப் புறப்பட்டுப் போனாரோ, யாருக்கும் தெரியாது. சுசீலா வாசல் திண்ணையில் தூணைப் பிடித்துக் கொண்டு தெருவைப் பார்த்தபடி நின்றாள், கோடியில் மாமா வருவது அவளுக்குத் தெரிந்தது.

ஸ்நானத்தோடு, ஜப தபங்களெல்லாங்கூடக் காவிரியிலேயே முடிந்துவிட்டாற் போலிருக்கிறது. உடம்பு முழுவதும் பட்டை பட்டையாகத் திருநீறு துலங்கியது. பஞ்சகச்சம் கட்டிக் கொண்டு, இளம் வெயில் வெறும் தலையைத் தாக்கிப் பித்தத்தைக் கிளப்பா வண்ணம் ஈரத் துண்டை நாலாக மடித்து மண்டையில் போட்டு, வலக் கையில் கிண்டி நிறையக் காவிரி நீரோடு, வாயில் ஏதோ மந்திரங்களை உருப்போட்டுக்கொண்டே வருகிறார்.

வேடிக்கைபார்த்த சுசீலா வேகமாக உள்ளே ஓடினாள். அம்மா தயாராக வைத்திருந்த காபியை நாலே மடக்கில் குடித்துவிட்டு மாடியறைக்குச் சென்றாள். ஆரம்பத்தில் வேடிக்கையும் விளையாட்டுமாகப் பேசியவளுக்கு,இப்போது மாமாவைப் பார்க்கவே பயமாக இருந்தது. அக்கா எதிலும் தலையிடமாட்டாள், அம்மா, அப்பா, மாமா எல்லாருமாகச் சேர்ந்து அவளை நடுவில் நிறுத்திக் கொண்டு சம்மதத்தைக் கேட்டால், என்ன பதில் சொல்லுவது ?

கோவில் நந்தவனத்திலிருந்து பூஜைக்கு வேண்டிய பூக்களையெல்லாம் குடலையில் பறித்துக் கொண்டு வந்து வைத்திருந்தான் ஹரி. மாமா உடை மாற்றிக்கொண்டதும் காபி கூட குடிக்காமல் பூஜையில் உட்கார்ந்தார். காயத்திரி குடலையில் இருந்த பவழமல்லிகையை நூலில் கோத்து, அழகாக இரண்டு மாலைகள் கட்டியிருந்தாள். சங்கு புஷ்பத்தையும், காசித்தும்பையும் உதிரியாகவே அர்ச்சனைக்காக வைத்திருந்தாள்.

சுசீலா மாடியிலிருந்து கவனித்துக் கொண்டே இருந்தாள். ஹரி வேகமாக சந்தனம் அரைத்துக் கொண்டிருந்தான். அப்பொழுதுதான் குளித்து விட்டு வந்திருந்த அவன் தலையில், ஈரம் நன்றாகக்கூடப் போகவில்லை. அடர்ந்த சுருட்டையான கிராப்புத் தலை அப்படியும் இப்படியும் அழகாக நெற்றியில் புரண்டு, முத்து முத்தான நீரைத்

தெளித்துக் கொண்டிருந்தது. அவன் பக்கத்தில் வெள்ளிச் சிமிழைக் காயத்திரி கொண்டு வந்து வைத்தாள்.

சுசீலாவுக்கு அதற்கு மேலும் மாடியில் இருப்புக்கொள்ள வில்லை. 'எதற்காக அர்த்தமில்லாமல் இந்த மாமாவுக்குப் பயந்து நான் ஓடி ஒளிய வேண்டும்? இவர் என்ன கரடியா புலியா? கண்ணில் பட்டால் என்ன செய்துவிடுவார்?' என்று எண்ணியபடி விடுவிடென்று கீழே இறங்கி வந்தாள்.

## 8. நாங்கள் ஒரே ஜாதி

வழக்கமாக ஹரி அடுக்களையில் வந்து காபி குடிப்பான். இன்று அது அவன் இருக்கிற இடத்தைத் தேடி வந்தது. குருநாதர் எப்போது வருகிறார், எந்த வண்டியில் வருகிறார் என்ற எதையும் திட்டமாகத் தெரிந்துகொள்ள முடியாமல் அவன் மனம் குழம்பியது. பிடில் பஞ்சு அண்ணா அதுபற்றி ஒன்றும் செல்லவில்லை.

ஹரி முதல் நாளைப் போலவே எட்டரை மணி வண்டிக்குச் சென்று பார்த்து ஏமாற்றத்துடன் திரும்பினான்.

''இனி, பதினொன்றரை மணி வண்டிக்கும் போய் அலைய வேண்டாம் ஹரி'' என்று லட்சுமியம்மாள் கூறி விட்டாள்.

ஆனால், அம்மா சொன்ன வார்த்தையைக் கேட்டு 'அது தான் சரி' என்று ஹரி இருந்துவிடப் போகிறானா, அல்லது 'ஸ்டேஷனுக்குப் போகிறானா' என்பது பற்றிச் சுசீலாவின் ஆர்வம் மிகுந்தது. அவன் அப்படி ஸ்டேஷனுக்குப் போகாமலிருந்தால் நல்ல 'டோஸ்' கொடுக்க வேண்டும் என்று எண்ணினாள்.

ஹரி கொல்லைப் பக்கம் இருந்தான். நாணா மாமாவின் பூஜை முடிய ஒன்பதரை மணி ஆயிற்று. உடனே தயாராக இருந்த ரவாக் கஞ்சியை ரசித்து, சற்று அளவுக்கு மீறிச் சாப்பிட்டு விட்டதனால் அவருக்கு பசி எடுக்க நேரமாயிற்று.

அவர் சாப்பிடுமுன் ஹரிக்குப் போட முடியாது. ஹரியும் அதைப் புரிந்துகொண்டு ஸ்டேஷனுக்குச் சென்றுவிட்டான்.

ஆனால், 'ஐயா வரவில்லை' என்பதை அவன் யாரிடமும் சொல்லவில்லை.

சரியாக ஒரு மணிக்கு எல்லாருடைய சாப்பாட்டுக் கடையும் முடிந்தது. நாணா மாமா சுசீலாவின் ஜாதகத்தைப் பார்த்துக்கொண்டிருந்தார். ஹரி தட்டை எடுத்துக் கொண்டு இடைகழியில் வந்து உட்கார்ந்தான். காயத்திரி தண்ணீர் கொண்டுவந்து வைத்தாள்.

லட்சுமியம்மாள் பரிமாறினாள். ஹரி சாப்பிட ஆரம்பிக்குமுன், வீட்டு வாசலில் புத்தம் புதிய கார் ஒன்று வந்து நின்றது. அதிலிருந்து பாகவதர் இறங்குவதைக் கண்டதும் ஹரி அப்படியே எழுந்திருந்து வாசலுக்கு ஓடினான். வண்டியில் இரண்டு மூன்று பெரிய மனிதர்கள் உட்கார்ந்திருந்தார்கள்.

மோட்டாரிலிருந்து தம்பூராவை ஹரி வாங்கி, உள்ளே கொண்டு போய் வைத்துத் திரும்பினான். பாகவதர் வண்டியில் இருந்தவர்களை உள்ளே வரும்படி வற்புறுத்தினார். அவர்கள் மிகவும் பணிவோடும் அன்போடும், ''இன்னொரு சமயம் அவசியம் வருகிறோம்'' என்று கூறி விடைபெற்றுக் கொண்டனர். அதற்குள் டிரைவர் கார் 'டிக்கி' யில் இருந்த பாகவதரின் பெட்டி, படுக்கை, பழக்கூடை முதலியவற்றை எடுத்துத் திண்ணையில் வைத்தார். ஹரி அவற்றை எடுத்துக் கொண்டு உள்ளே போனான். பாகவதர் அவர்களிடம் விடை பெற்றுக் கொண்டார்.

வீட்டுக்குள் அடியெடுத்து வைத்த பாகவதர் இடைகழியில் சாதம் பரிமாறிய தட்டு இருப்பதைக்கண்டார். அது யாருக்காக என்று அவருக்குப் புரியவில்லை. உள்ளேயிருந்து ''சுப்பராமா, வா, உன்னைத்தான் நேற்றையலிருந்து எதிர் பார்க்கிறேன்'' என்ற நாணாமாமாவின் அழைப்பு வந்தது.

''நீ எப்போது வந்தாய்? வரப்போவதாக எழுதவே இல்லையே!'' என்று பாகவதர் ஆச்சரியத்துடன் கேட்டார்.

''அதைப் பற்றிச் சவகாசமாகச் சொல்லுகிறேன். பேச வேண்டிய விஷயம் நிறைய இருக்கிறது. முதலில் நீ கால் கையை அலம்பிக் கொண்டு சாப்பிட உட்காரு. நல்ல வேளை, சமயத்துக்கு வந்தாய். ஐந்து நிமிஷம் போயிருந்தால், லக்ஷ்மி அந்தப் பையனுக்கு போட்டிருப்பாள்; பிறகு நீ மீதத்தைதான் சாப்பிட வேண்டியிருந்திருக்கும்'' என்று கூறியபடி அடுக்களைப் பக்கம் தம் குரலைத் திருப்பினார்.

பாகவதருக்கு ஒரு நிமிஷத்துக்குள் நாணாவின் வருகையினால் வீட்டில் சூழ்நிலையில் ஏற்பட்டுள்ள மாறுதல்கள் அனைத்தும் நன்கு புரிந்துவிட்டன, கையில் வெள்ளித் தட்டைக் கொண்டு வந்த லட்சுமியம்மாள் அதை வழக்கமாகக் கணவர் சாப்பிடுகிற இடத்தில் வைக்கப் போனாள், அதற்குள் பாகவதர் மனைவியை ஓர் அதட்டு அதட்டி, ''அதை இங்கே கொண்டு வா'' என்று தட்டைக் கையில் வாங்கிக் கொண்டு இடைகழியில் போய் ஹரியினருகில் உட்கார்ந்து ''ஊம், பரிமாறு'' என்று சற்றுக் கடுமையாக உத்தரவிட்டார், லட்சுமியம்மாளுக்கு பயத்தினால் உடம்பு நடுங்கியது.

'வீட்டுக்குள் நுழைந்ததும் நுழையாததுமாகக் கணவருக்குப் பிடிக்காத காரியத்தைச் செய்து அவரது கோபத்தைச் சம்பாதித்துக் கொண்டோமே; எல்லாம் இந்த அண்ணாவால் வந்த வினை அல்லவா ?' என்று லட்சுமியம்மாளின் மனம் சங்கடப்பட்டுக் கொண்ருக்கும்போதே, மீண்டும் அதட்டிய பாகவதரின் உரத்த குரல் அவளது சுய உணர்வைத் தட்டி எழுப்பியது.

''ஏன் மரம் மாதிரி அப்படியே நிற்கிறாய் ? சாப்பாடு இல்லையா?''

லட்சுமியம்மாளுக்குத் தாளவில்லை. துக்கம் தொண்டையை அடைத்தது. ''எல்லாம் இருக்கிறது ; உள்ளே வந்து உட்காருங்கள். இரண்டு பேருக்கும் போடுகிறேன்.''

''இந்தப் புத்தி இதற்கு முன்னே உனக்கு எங்கே போயிருந்தது? இந்த வீட்டில் நான் இருந்தால் ஒன்று இல்லாவிட்டால் ஒன்றா நடக்கிறது! சே! இந்த இரண்டு நாளாக ஹரிக்கு இங்கே வைத்துத்தானே சாதம் போட்டீர்கள்? இப்பொழுது மட்டும் என்ன வந்து விட்டது? இனிமேல் எனக்கும் சாப்பாடு இங்கேதான். இது சங்கீதக்காரன் வீடு. நாங்கள் எல்லாம் ஒரே ஜாதி; ஒரே இனம். எங்களுக்குள்ளே பேதம் இல்லை. சாதத்தைப் போடு.'' யாருக்கோ விளக்குவதுபோல் பாகவதர் ஒரே மூச்சில் பேசினார். லட்சுமியம்மாளுக்கு அழுகையே வந்துவிடும் போலிருந்தது.

''போகட்டும். தெரியாமல் புத்தியில்லாமல் நடந்து கொண்டேன். பசியோடு வந்திருக்கிறீர்கள். நேரமாகி விட்டது. வாருங்கள், இரண்டு பேருக்கும் உள்ளேயே போடுகிறேன்.''

''ஒன்றும் வேண்டாம். இப்போது நான் சொல்லுகிறபடி நீ கேட்கப் போகிறாயா அல்லது நாங்கள் இரண்டு பேருமே எழுந்திருந்து கிளப்புக்குப் போகவா?''

பாகவதரின் குரலில் கடுமை தெறித்தது. அரை நாழிகையாக வீடு படுகிற அமளியை நாணா மாமா பார்த்துக் கொண்டே இருந்தார், அதற்கு மேலும் அவரால் மௌனமாக இருக்க முடியவில்லை. மேலும் தம் பொருட்டுத் தங்கை பேச்சு வாங்குவது அவருக்குத் தாளவில்லை, ''சுப்பராமா, இப்போ என்ன வந்து விட்டது? பெரிசா இவ்வளவு பாடு படுத்திறியே! ஹோட்டலுக்குப் போக உனக்கு மட்டுந்தான் தெரியுமோ? நான் தான் இந்தப் பழக்கத்தை மாத்தினேன். வீணா லட்சுமியைக் கோவிச்சுக்காதே, யாரோ குலம் கோத்திரம் தெரியாததுகளை எல்லாம் சமைக்கிற இடத்தில் வைத்துக் கொண்டு சமபோஜனந்தான் பண்ணுவேன்னா, தாராளமாய்ப் பண்ணிக்கோயேன். அப்புறம் எங்களுக்கெல்லாம் இங்கே வரவேண்டிய வேலை இல்லை'' என்றார்.

''அது உங்கள் இஷ்டம்; நான் சொல்லத் தயாராக இல்லை. அதற்காக என்னை, என் வீட்டிலுள்ள பழக்கத்தை, நான் மாற்றிக்கொள்ளத் தயாராக இல்லை. ஆனால், நீ இப்பொழுது பேசியது போல்—இவன் யாரோ எவனோ அல்ல; இவன் தான் என் வித்தைக்கு - நான் அப்யசிக்கிற, நான் கற்றுக்கொடுக்கிற சங்கீதத்துக்கு வாரிசு. எல்லாச் சிஷ்யர்களையும் போல இவனாக என்னைத் தேடி வரவில்லை; புதையலைப் போல நான் தான் இவனைத் தேடிக் கண்டுபிடித்து வைத்திருக்கிறேன். இந்த வீட்டில் எனக்கு என்ன மதிப்பும் செல்வாக்கும் உண்டோ அது அவனுக்கும் உண்டு. அவனை அலட்சியப் படுத்துகிறவர்கள், என்னையும் என் வித்தையையும் அலட்சியப்படுத்துவதைப் போலத்தான்'' என்று பாகவதர் கூறிக்கொண்டு வரும்போதே, நாணா மாமா கோபமாக இடைமறித்துப் பேசினார்.

''போரும்டா உன் பேச்சும் லட்சணமும். அது தான் முன்னமே ஒரு தடவை சொல்லிட்டியே; இது சங்கீதக் காரன் வீடு; இங்கே ஜாதி இல்லை, மதமில்லைன்னு. திரும்பத் திரும்ப வேறே சொல்லணுமா? சங்கீதக் காரன்னாலே என்னமோ சொல்லுவா! அதுவும் உச்சஸ் தானத்துக்கு வந்துட்டான்னா, அவனைக் கையாலேயே பிடிக்க முடியாது. இதெல்லாம் நீயாகப் பேசற பேச்சில்லை; இந்த வித்தைக்குள்ள கர்வம்; சாபக்கேடு. ஆரம்பத்திலேயே இப்ப இருக்கிற புத்தி எனக்கு இல்லை. இருந்திருந்தா ஒரு கரண்டி ஆபீஸ்காரன் கையிலே என் தங்கையைக் கொடுத்திருப்பேன்.''

''அண்ணா, நீ சும்மா இருக்கப் போகிறாயா இல்லையா? நான் ஆரம்பத்திலேயே படித்துப் படித்துச் சொன்னேன். உன் பிடிவாதத்தினாலேதான் இவ்வளவு அமர்க்களமும் ஏற்பட்டது. இந்த வீட்டுப் பழக்கம்

இதுதான். உனக்கு இஷ்டமிருந்தால் இரு; இல்லாவிட்டால் புறப்பட்டுப் போய்விடு.''

''லட்சுமி, இதை இன்னும் நீ சொல்லித் தெரிஞ்சுக்கிற அளவுக்கு இந்த நாராயணன் முட்டாள் அல்ல. இனிமேல் பட்டினிகிடந்தாலும் கிடப்பேன்; இந்த அநாசார வீட்டிலே கையை நனைக்க மாட்டேன். ராத்திரி வண்டிக்கே நான் புறப்பட்டுப் போயிடறேன். என்னமோ, நான் சாளக்ராம பூஜை பண்றது வீண்போகல்லை; அந்த வேதபுரீசுவரர் தான் தக்க சமயத்திலே காப்பாத்தினார். நல்ல வேளை! உனக்குத் துணையா என் பிள்ளையையும் வேறே இந்தக் கும்பல்லே கொண்டு வந்து தள்ளாமல் பிழைச்சேனே. பாவம்! ராமபத்திரன்; அவன் வேதவித்து. இதெல்லாம் காதாலே கேட்டாலே பிராணனை விட்டுடுவான். இந்தச் சங்கீதக்காரன் குடும்ப சகவாசமே வேண்டாம். இனிமேல் நடவா நடை நடந்தாலும் உன் பெண்ணுக்கு என் பிள்ளை கிடையாது. சுப்பராமா, இது நிச்சயம், நிச்சயம்.''

''நிச்சயம் என்ன நாராயணா? நீ தயங்காமல் ராமபத்திரனைச் சுசீலாவுக்குக் கொடுக்க மாட்டேன் என்று சத்தியமேகூடப் பண்ணிவிட்டுப் போகலாம். அவள் உன் பிள்ளையை நம்பிப் பிறக்கவில்லை. நீ மறுப்பதற்காக நான் கவலைப்படப் போவதும் இல்லை.''

''நீ எதுக்குத்தான் சுப்பராமா கவலைப்பட்டிருக்கே இப்போ இதுக்குக் கவலைப்படறதுக்கு?''

''ஆமாம். கவலையைப் போக்குகிற வித்தைதானே சங்கீதம்? அதை ஆராதிக்கிறவனே கவலைப்பட்டுக் கொண்டு கிடந்தால், அவன் மற்றவர்களுடைய கவலையைப் போக்குகிறது ஏது?''

''அதுக்குத்தான் நான் ஒரு யோசனை சொல்லறேன். வித்தையைக் கத்துக் கொடுத்தே; வீட்டிலே இடம்

கொடுத்தே; அவனுக்கே ஒரு வழியாப் பெண்ணையும் கொடுத்துடு. நீங்கள்ளாந்தான் ஒரே சங்கீத ஜாதிக் காராளாச்சே; நிம்மதியாப்போயிடும்.''

பேசிக்கொண்டே நாணா மாமா, கித்தான் பைக்குள் தம்முடைய துணிமணிகளைத் திணித்துக்கொண்டிருந்தார். லட்சுமியம்மாளுக்குக் கோபம் தாங்கவில்லை. அதற்கு மேலும் அவளால் அடக்கிக்கொண்டு பொறுமையாக இருக்க முடியவில்லை.

''அண்ணா, இப்படிக் கலகம் பண்ணத்தான் இத்தனை வருஷம் கழித்துப் புறப்பட்டு வந்தாய் என்றால், அதற்கு நீ வாரமல் ஊரிலேயே இருந்திருக்கலாம். ஊரிலிருந்து வந்தவரை ஒரு வாய்ச் சாதம் சாப்பிட விடாமல், நீயும் சரிக்குச் சரி வாயாடறது எனக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை. இனிமேலும் ஒரு வார்த்தை நீ அவாளைப் பற்றிப் பேசினால், பிறகு நான் பொல்லாதவாளய் விடுவேன்'' என்றாள் லட்சுமியம்மாள் துக்கம் தாளாமல்.

உடனே நாணா மாமா, ''நீ பின்னே வேறே எப்படிப் பேசுவாய்? நீ எனக்காகப் பரிஞ்சு பேசுவாய்னு நான் துளிக்கூட எதிர்பார்க்கவில்லை! நீ ஒரு அசடு, மக்குன்னு எனக்கு இப்பவா தெரியும்? இல்லேன்னா பவித்திரமான சங்கீதத்து மேலே பழியைப் போட்டுட்டு, இப்படி நீசத் தனமான காரியங்களிலே எல்லாம் பிரவர்த்திக்க உன் புருஷனுக்குப் புத்தி போகுமா? தைரியந்தான் வருமா? உள்ளூரிலே ஒரு குடும்பம், வெளியூரிலே ஒரு குடும்பம். சே! சங்கீதம் மட்டும் ஒசத்தியாய் இருந்தாப் போதாது சரித்திர சுத்தமும் வேணும். அதுதான் மனுஷனை உயர்ந்த நிலைக்குக் கொண்டு போகிறது. சங்கீதக்காரன்னா இப் படித்தான் இருக்கணும்னு விதி இல்லை. மகான்கள்ளாம் இந்த மண்ணிலே பிறக்கல்லியா; தியாகப்ரம்மமும், தீட்சித ரும், சாஸ்திரிகளும் நமக்கு வாழ்ந்து காட்டல்லியா? நாம தான் படிச்சுத் தெரிஞ்சுக்கலை. அவா போட்ட பிச்சை

யைச் சாப்பிட்டுப் பிழைக்கிறவனுக்கு, அவாளுக்கு இல்லாத இத்தனை கர்வமும் மமதையும் இருக்கலாமோ? உங்க அண்ணாவுக்கு இது பிழைப்பு இல்லைன்னாலும், சங்கீதத்தைப் பற்றி என்ன தெரியும்; வைதீகமும் வட்டிக் கடையுந் தானேன்னு அலட்சியமா நெனைச்சுடாதே. சாமகானம் தலைகீழாப் பாடம் பண்ணிருக்கேன்.''

''போதும் அண்ணா உன் பெருமை எல்லாம். உன்னைப்பற்றி நான் ஒன்றும் குறைவாக நினைத்துவிடவில்லை.'' வார்த்தையை முடிக்கு முன்பே துயரம் குரலில் கரகரக்க லட்சுமியம்மாள் உள்ளே சென்றுவிட்டாள்.

மாமா வாசற்படியைத் தாண்டுகிறவரையில் சுசீலா மாடியிலிருந்து வெளியே தலையைக் காட்டவில்லை. அவளுக்கு உள்ளூர மகிழ்ச்சி. எப்படியோ தன் கல்யாணப் பேச்சு. ஆரம்பிக்காமலே முடிந்து போனதில் அவளுக்கு நிம்மதி. காயத்திரி கலங்கிப்போய், சமையற்கட்டிலிருந்து வெளியே வரவில்லை; அப்பா வந்ததும் இப்படி ஒரு சண்டை மூண்டு, மனஸ்தாபம் காத்திருக்கும் என்று அவள் எதிர் பார்க்கவே இல்லை.

'போய் வருகிறேன்' என்றுகூடச் சொல்லிக் கொள்ளாமல் அண்ணா புறப்பட்டுப் போய்விட்டான். இத்தனை வருஷங்களுக்குப் பிறகு வந்த அவனைக் கணவனும் மனைவியுமாக வாயார உபசரித்துப் பத்து நாள் வைத்துக் கொண்டு அனுப்பக் கொடுத்து வைக்கவில்லை. அண்ணாவும் அப்படியெல்லாம் ஒரு வீட்டில் படியேறிப்போய் உட்கார்ந்துகொண்டு விடுகிறவனல்ல, ஆனால், அவனுக்கு எவ்வளவுதான் சொத்து இருந்தாலும் இந்த முன்கோபம் ஆகாது. பாவம்! ராத்திரி எட்டு மணிக்குத்தான் அவனுக்கு வண்டி. அதுவரைக்குங்கூட இங்கே இல்லாமற் போய் விட்டான். காபிக்கு என்ன பண்ணுகிறானோ! ராத்திரிச் சாப்பாட்டுக்கு என்ன பண்ணப்போகிறானோ; ஆசையோடு வந்தவனைக் கழுத்தைப் பிடித்துத் தள்ளினாற்போல் தள்ளியாகி விட்டது.

புடைவைத் தலைப்பை வாயில் திணித்துக்கொண்டு, அழுகுரல் தன் கணவர் காதுக்கு எட்டிவிடக் கூடாதே என்று, சகோதர பாசம் தாளாமல் உள்ளத்துக்குள்ளேயே குலுங்கக் குலுங்க அழுதாள் லட்சுமியம்மாள்.

ஹரியின் மனவேதனையைப் பற்றி வர்ணிக்கவே இயலாது, அவன் புழுங்கி செத்துக் கொண்டிருந்தான். தனக்காக வீட்டில் உறவினர்களுக்குள் ஏற்பட்ட மனக் கசப்பை அவனால் தாங்க முடியவில்லை; அதே சமயம்_ தம் உறவினரையும் மதியாமல், அவனுக்கு அவ்வளவு கௌரவம் கொடுத்து ஆதரித்துப் பேசிய குருநாதருடைய அன்பை எண்ணிப் பார்க்கையில் அவரது பாசச் சுமையைத் தாளாமல் அவனது இதயமே வெடித்துச் சிதறிவிடும் போலிருந்தது.

'ஈசுவரா, இத்தனை அன்புக்கும் கருணைக்கும் நான் பட்டிருக்கும் கடனை, இந்தக் குடும்பத்துக்கு எத்தனை ஜன்மங்களில்தான் ஈடு செய்து தீர்க்கப் போகிறேன்? இந்த உடல் - அவர்கள் இட்ட சோற்றால் வளர்ந்து ஆளாகியது; நான் பெற்ற அறிவு - அவர்கள் இட்ட பிச்சை; அவர்கள் மனமுவந்து அளித்த ஆசிகள். குருநாதா, உங்கள் அன்பைத் தாங்க என்னால் முடியவில்லை. என் இதயத்துக்கு வலு வைக் கொடுத்தருளுங்கள்' என்று காவிரி மண்டபத்தில் உட்கார்ந்து ஹரி சிறு குழந்தையைப் போல் விக்கி விக்கி அழுதான். அப்பொழுது தண்ணீர் எடுக்க வந்த சுசீலா இடுப்பில் குடத்து நீருடன் அவனையே பார்த்தபடி நின்றாள்.

## 9. மனம் செய்த மாயை

நாணாவின் அந்த ஒரு வார்த்தை, உறுதியான தோளையும், சதைக் கோளங்களையும், எலும்புக் கவசங்களையும் கடந்து பலமான ஊமையடியாக, பாகவதரின் நெஞ்சின் அடித்தளத்தில் விழுந்துவிட்டது. அந்த அடியின் வேதனையைத் தாங்க முடியாமல் அவர் உள்ளத்துக்குள்ளேயே துடித்தார்.

'மனத்தை அடக்கி வசப்படுத்திவைக்கத் தெரியாமல், சபலத்துக்கு இதயத்தில் இடம் கொடுத்து இத்தனை காலமும் வாழ்ந்துவிட்டு, இன்று திடீரென்று யாரோ ஏதோ சொன்னதை நினைத்துக் கொண்டு வருந்துவது கோழைத்தனம் அல்லவா? நானே இப்படி வருந்தினால் என்னை நம்பித் தன் வாழ்வையே ஒப்படைத்திருக்கும் சுந்தரி எப்படிக் கலங்குவாள்? அவளுடைய அழகுக்கும் ஞானத்துக்கும் அவள் விரும்பியிருந்தால் மகாராஜாக்களைக் கூட மணந்திருக்க முடியுமே! இசையின் மீதுள்ள ஆர்வத்தினால் தானே இந்தப் பாடகனை மணந்துகொண்டு தன் சமூகத்தையும் எதிர்த்து வாழ்கிறாள்? இது போன்ற எத்தனை அவதூறுகளை அவள் கேட்டிருப்பாள்? அவள் இதுவரை எதைப்பற்றியாவது கவலைப்படுவதாகக் காட்டிக் கொண்டிருக்கிறாளா?'

பாகவதர் தமக்குத் தாமே கேள்வியும் பதிலுமாக ஜோடித்து, ஒடிந்து விழுந்த மனத்தைத் தேற்றி நிறுத்த முயன்றார். அதில் அவருக்கு வெற்றியும் தோல்வியும் மாறி மாறிக் கிடைத்தன.

மனம் அமைதியை நாடி அலைந்தது. இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் அவர் இசையைத்தான் சரணடைவது வழக்கம். 'எவ்வளவு சுலபமாக, எவ்வளவு கேவலமாக, ''சரித்திர சுத்தமில்லாதவன்'' என்று நாணா குறைகூறிச் சென்றுவிட்டான்!' என்ற உள்ளக் குமுறல் அடங்கவே இல்லை.

'இவர்கள் எல்லாரும் மறக்கப்பட வேண்டியவர்கள். இவர்களுடைய பேச்சும் செய்கைகளும் ஒதுக்கப்பட வேண்டியவை. இவர்களைப் பற்றி எனக்கு என்ன கவலை?' என்று மனத்தைத் தேற்றிய வண்ணம் தம்பூராவை எடுத்து வைத்துக்கொண்டு உட்கார்ந்தார்.

விரல்கள் தந்தியை மீட்டின. ஆனால் அது 'சுந்தரி, சுந்தரி' என்றே ஒலித்தது. சிந்தனை அவரை மீண்டும் அநாதையாக்கி ஓடிவிட்டது. மனம் சுருதியின் ஒலியில் சென்று லயிக்கவே மறுத்தது.

லட்சுமி நிற்கும் இடத்தில் சுந்தரியும்; சுசீலாவும், காயத்திரியும் நிற்கும் இடத்தில் வசந்தியும் சிரித்த வண்ணம் நின்றுகொண்டிருந்தனர். சுழல் விளக்கைப் போல் உருவங்கள் மாறி மாறிச் சுழன்றன. அவருடைய கண்கள் மட்டும், தன்னை அவதூறுக்கு ஆளாக்கிய-அல்ல-தன்னால் அவதூறுக்கு ஆளாகியுள்ள சுந்தரியையே வெறிக்கப் பார்த்தன.

சுப்பராம பாகவதர், பிரபல இளம் வித்துவானாகப் பொற்கொடி கட்டிப் பறந்த காலம். திருவிடைமருதூரில் வசதியுள்ள குடும்பத்தில் பிறந்த இளம்பெண் சுந்தரி, அவரது இசையில் உள்ளத்தைப் பறிகொடுத்தாள். அவரிடம் பயிற்சி பெற்றுச் சங்கீதத்தில் முன்னேற வேண்டுமென்று விரும்பினாள். சிறுவயதிலேயே பெற்றோரை இழந்து பாட்டியின் ஆதரவில் இருந்த அவள் தன் ஆசையைக் கூறினாள். பாட்டியும் பேத்தியினுடைய

விருப்பப்படியே பாகவதரிடம் சங்கீதப் பயிற்சிக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தாள். ஆனால் சுப்பராம பாகவதர் சுந்தரிக்குப் பாடம் சொல்லிக்கொடுக்க ஒப்புக் கொள்ளவில்லை.

சுப்பராம பாகவதருக்கு அப்பொழுதே அநேக சிஷ்யர்கள் இருந்தார்கள். வீட்டிலேயே தங்கிச் சங்கீதம் சொல்லிக் கொள்கிறவர்களும், வேளைக்குப் பாடத்துக்கு மாத்திரம் வருகிறவர்களுமாகப் பலவிதம். ஆனால் பெண்களுக்கு மாத்திரம் சிட்சை சொல்லிக் கொடுப்ப தில்லை என்ற முடிவோடு இருந்தார், காரணம், அவருக்குப் பெண்களிடம் வெறுப்போ, அல்லது அவர்கள் சங்கீதம் கற்றுக்கொள்ள அருகதையற்றவர்கள் என்ற எண்ணமோ அல்ல. அவர்களுக்கு அவ்வளவு உயர்ந்த வித்தையைக் கஷ்டப்பட்டுக் கற்றுக் கொடுப்பதனால் முழுப்பலன் இருப்ப தில்லை என்பது அவர் கருத்து.

எவ்வளவு சிரத்தை எடுத்துக் கொண்டு அவர்களுக்குச் சொல்லிக் கொடுத்தாலும், அவர்கள் கற்றுக் கொள்கிற அவர்களது சங்கீதம் திருமணத்தோடு அநேகமாக முற்றுப் பெறுகிறது. அதனால் கற்றுக் கொடுத்த வித்துவானுக்கும் புகழ் இல்லை; கற்றுக் கொண்ட பெண்ணுக்கும் பிரபலம் இல்லை. இத்தகைய வீண் முயற்சியில் இறங்குவானேன்? சிட்சை சொல்லிக் கொடுத்துச் சம்பாதித்தாகவேண்டும் என்ற அவசியமும் இல்லாததனால், பாகவதர் சுந்தரிக்குச் சொல்லிக் கொடுக்க மறுத்தார். ஆனால் சுந்தரியின் பாட்டியும், 'அவர் இணங்காதவரையில் விடப்போவ தில்லை' என்று தீர்மானமாக இருந்தாள்.

இறுதியில் சுப்பராமனுடைய மாமனாரே சிபாரிசு செய்தார். அந்த அம்மாள்படுகிற அவஸ்தையையும், அந்தப் பெண்ணுக்குப் பாட்டுக் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதி லுள்ள ஆர்வத்தையும் கண்டு மாப்பிள்ளையை ஒப்புக்

கொள்ளும்படி கூறினார், சுப்பராமனும் சில நிபந்தனை களின் பேரில், சொல்லிக் கொடுப்பதாக ஒப்புக்கொண்டார்.

'சிட்சை முடிந்து நன்றாகக் கச்சேரிகள் செய்கிறவரை திருமணத்தைப் பற்றியே சிந்திக்கக்கூடாது. அதன் பிறகு, மணந்து கொண்டாலும், உன் வித்தையை வளர்த்து ஆதரிக்கும் குணமுடைய கணவனையே தேர்ந்தெடுத்து மணக்க வேண்டும்' என்ற பாகவதரின் நிபந்தனைகளுக்குச் சுந்தரி எவ்வித மறுமொழியும் கூறாமல் சம்மதம் தெரிவித் தாள். இதை அவர் எதிர்பார்க்கவில்லை என்றாலும், அதற்கு மேலும் மறுத்துப் பேச முடியவில்லை.

விஜயதசமியன்று சுந்தரிக்கு சிட்சை ஆரம்பமாயிற்று. தட்டு நிறையப் பூவும் பழமும் பணமுமாகக் கொண்டு வந்து வைத்துக் குருவை வணங்கினாள். சுந்தரி, வயதில் தன்னொத்தவளாயினும் குருபத்தினி என்ற முறையில் உள்ளே சென்று லட்சுமியையும் வணங்கிவிட்டுத் திரும் பினாள்.

'பெண் கெட்டிக்காரிதான்' என்று கண்டுகொண்ட சுப்பராமனுக்கு உள்ளூர மகிழ்ச்சி, பரம திருப்தி. இரண் டாம் நாளும், சுந்தரி பாட்டியுடன் தவறாமல் பாகவதர் வீட்டிக்கு வந்து கற்றுக் கொண்டு போனாள் அதன் பின் வாரம் ஒரு முறை பாகவதர் திருவிடை மருதூருக்குச் சென்று பாடம் சொல்லிக் கொடுத்து வருவார்.

சுந்தரியின் ஆர்வத்தையும், சங்கீதத்தில் அவள் அடைந்து வரும் அபிவிருத்தியையும் கண்டு, சுப்பராமன் உள்ளத்துக்குள்ளேயே பூரித்தார். தாம் கற்ற வித்தையை யெல்லாம் அவளுக்கு அப்படியே கரைத்துப் புகட்டினார். அவளும், அதை அப்படியே கிரகித்துக் கொள்ளக்கூடிய சிறந்த பாத்திரமாகத் திகழ்ந்தாள்.

பயிற்சி பூர்த்தியானதும், அரங்கேற்றத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளையெல்லாம் பாகவதருடைய விருப்பப்படியே சுந்தரியின் பாட்டி பிரமாதமாகச் செய்தாள். திருவிடைமருதூர்க் கோயிலில் மூகாம்பாள் சந்நிதியில் அரங்கேற்றம் விமரிசையாக நடைபெற்றது. மகாவித்துவான்கள் எல்லாரும் வந்திருந்து கச்சேரியைக் கேட்டுச் சுப்பராமனையும் சுந்தரியையும் ஆசீர்வதித்தனர். சுந்தரி மேடைமீது சர்வாலங்கார பூஷிதையாகப் பணிவுடன் அமர்ந்து, சிறிதும் சபைக் கூச்சம் இல்லாமல், தன் திறமையெல்லாம் பிரகாசிக்கப் பாடினாள்.

சுந்தரியின் பாட்டி பெருமையாலும் மகிழ்ச்சியாலும் பூரித்துப்போனாள். கண்ணேறு படாமலிருக்க வீட்டுக்குச் சென்றதும், முதல் காரியமாகப் பேத்திக்குத் திருஷ்டி சுற்றிப் போட்டாள். ஆனால் அதையும் மீறி எப்படியோ ஒரு கொள்ளிக் கண் சுந்தரியின் மீது பட்டுத்தான் விட்டது.

ஆம்! சுந்தரி அரங்கேற்றத்துக்கு மேடைமீது உட்கார்ந்து பாடிய பிறகு அடுத்த கச்சேரிக்கு அவள் மேடைமீது உட்கார்ந்து பாடவே இல்லை. அதற்கான வாய்ப்பே அவளுக்குக் கிட்டவில்லை.

காரணம் வேறொன்றும் இல்லை. அன்று சுந்தரிக் கச்சேரி செய்கிறபோதே சுப்பராமன் மனத்துக்குள் திட்டமிட்டுவிட்டார்; ஆயுள் முழுவதும் சுந்தரி தமக்கே சொந்தமாகி, அவளுடைய இசையை நினைத்தபோதெல்லாம் கேட்டுப் பருகி இன்புற வேண்டும். அதற்கு-சுந்தரி மாற்றானுக்கு மனைவியாகாமல், அவளைத் தாமே ஏற்றுக் கொள்வது ஒன்றுதான் வழி என்ற எண்ணம் எப்படியோ சுப்பராமன் உள்ளத்தில், கோவிலிலேயே பிறந்து விட்டது. வீட்டுக்கு வந்ததும் அவளைத் தனியாக அழைத்தார்.

குருதட்சிணையாக அவள் கொடுத்த பொன்னையும் பொருளையும் தட்டோடு அவள் எதிரில் வைத்தார். அவள்

பிரமித்து நின்றாள். ''சுந்தரி, இவையொன்றும் எனக்கு வேண்டாம். இவற்றுக்கு மேலாக, இவற்றை விட எத்தனையோ ஆயிரம் மடங்கு உயர்ந்த ஒன்றை உன்னிடம் யாசிக்கப் போகிறேன். நீ தருவாயா?'' என்று அவளது இரண்டு கைகளையும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு கேட்டார்.

குருநாதருடைய இந்தத் திடீர்ச் செய்கையும் போக்கும், சுந்தரியைத் திடுக்கிட வைத்தன. அவள் செயலற்றுச் சிலை போல் நின்றாள்.

''நீங்கள் என்னிடம் எதை விரும்பினாலும் அதை நான் மறுக்காமல் அளிக்க சித்தமாக இருக்கிறேன். தங்கள் மனத்தில் உள்ளதைத் தாராளமாகச் சொல்லலாம். அதற்கு உங்களுக்கு உரிமை உண்டு. அதை நிறைவேற்றுவது என் கடமை'' என்று பாகவதருடைய தயக்கத்தை போக்கினாள் சுந்தரி. உடனே பாகவதர், ''சுந்தரி, உரிமைக்கும் கடமைக்கும் அப்பாற்பட்டதை என் மனம் நாடிவிட்டது. என் தகுதிக்கு மேல் அல்லது தகாத ஒன்றை நான் விரும்புகிறேன் என்பதும் எனக்குப் புலனாகிறது. ஆனால் என்னால் என் எண்ணங்களினின்றும் மீள முடியவில்லை. என் மனம் உன்னையே நாடுகிறது. ஆனால் என் விருப்பத்துக்காக நீ எதையும் பலவந்தமாக ஏற்றுக்கொள்ளக்கூடாது. தாராளமாக உன் மனத்திலுள்ளதைத் தெரிவிக்கலாம். அதைப் பற்றி நான் எவ்வித தப்பெண்ணமும் கொள்ள மாட்டேன். என் ஆசை தவறாக இருந்தால் என்னை மன்னித்துவிடு'' என்று பாகவதர் சுற்றிச் சுற்றிப் பேசிக் கொண்டிருந்த போதே சுந்தரி இடைமறித்துக் கூறினாள்:

''நீங்கள் தீண்டிய இந்தக் கரங்கள் இரண்டும்; இனி ஆயுள் முழுவதும் உங்கள் சேவைக்காகவே காத்திருக்கும். நீங்கள் விரும்பியதைக் கேட்டதில் எவ்வித தவறும் இல்லை. ஆனால் உங்கள் மனைவியும் உலகமுமே என்னைத் தூற்றுவார்கள். இந்த உலகத்தைப்பற்றிக் கவலைப்படுகிறவள்

அல்ல நான்; ஆனால் உங்கள் மனைவியைப்பற்றிச் சிந்திக்காமல் இருக்க முடியவில்லை. நான்தான் உங்களை இந்த நிலைக்குக் கொண்டு வந்தேன் என்று தூற்றலாம். ஒரு பெண்ணே மற்றொரு பெண்ணின் வாழ்க்கைக்குப் போட்டியாக முளைத்த கொடுமைக்கு ஆளாகி விட்டேன். இந்தத் துயரந்தான் என் மனத்தைப் பெரிதும் வருத்துகிறது. ஆனால் இனிமேல் அதைப் பற்றியும் சிந்தித்துப் பயன் இல்லை. விதிப்படி நடப்பவை நடந்தேறி விட்டன. இதோ உங்கள் சொத்து; ஏற்றுக் கொள்ளுங்கள்'' என்று கூறியவள் அவர் பாதங்களில் வணங்கினாள்.

பாகவதர் ஒரு நிமிஷம் வெடித்துச் சிதறுவதுபோல் வெலவெலத்துப் போய் விட்டார். அவரது நாடி நரம்புகள் எல்லாம் துடித்தன. உடல் முழுவதும் தெப்பமாக நனைந்துவிட்டது. முதலில் தம் செவிகளையே அவரால் நம்ப முடியவில்லை என்றாலும், கண்முன் நிகழும் காட்சிகளைக் ஏற்காமல் இருக்க முடியவில்லையே!

அப்போது அவர் உள்ளத்தில் ஓர் அர்த்த மற்ற சந்தேகம் எழுந்தது. தன் எண்ணத்தைக் கேட்டவுடன் சுந்தரி வேதனைப்படுவாள், அல்லது ஒரேயடியாக மறுத்து விடுவாள் என்று அவர் எண்ணியதற்கு மாறாகக் காரியங்கள் நடைபெறவே, 'அவளும் ஒரு வேளை தன்னையே நினைத்துக் கொண்டிருப்பாளோ?' என்று எண்ணினார். ஆனால் அது எவ்வளவு அபத்தம் என்பதை அவரால் உணர முடிந்தது.

எண்ணங்களின் சுமையாக இயங்கிக்கொண்டிருந்த பாகவதரைச் சுந்தரியின் ஸ்பரிச உணர்ச்சி, சுய உணர்வுக்கு உந்தித் தள்ளியது. அவர் பாதங்களில் 'டப் டப்' பென்று உஷ்ணமான கண்ணீர்த் துளிகள் விழுந்தன. அவளைத் தூக்கி நிறுத்தினார் பாகவதர்.

இதயமே சுக்கு நூறாக வெடித்துச் சிதறிவிடும் போலிருந்தது அவருக்கு. "சுந்தரி, அழுகிறாயா? நான் தான் உன்னிடம் முன்னமே கூறிவிட்டேனே; இது என்னுடைய வேண்டுகோளேயன்றிக் கட்டளையல்ல என்று. உன் விருப்பத்துக்கு மாறாக எதுவும் நடைபெறக் கூடாது. இதில் உனக்கு நான் ஒரு வார அவகாசம் தருகிறேன். நன்றாக ஆசோசனை செய். உன் பாட்டியைக் கலந்து கொண்டு முடிவு கூறினால் போதுமானது. ஒரு காரியத்துக்குத் துணிவதற்கு முன்பு, யோசிப்பதற்காக எத்தனை காலம் வேண்டுமானாலும் செலவிடலாம் ;காத்திருக்கலாம்; ஆனால் முடிவுக்கு வந்தபிறகு அதைப்பற்றி எண்ணி வருந்தக் கூடாது. இதை நன்கு ஞாபகத்தில் வைத்துக்கொள். திடீரென்று நான் இத்தனை பெரிய கேள்வியைக் கேட்டு உன்னைத் திணறவைப்பேன் என்று நீ சிறிதும் எதிர்பார்த்திருக்கமாட்டாய். ஏன், நானே எதிர்பார்த்தவன் அல்ல.

"உனக்கு இத்தனை காலம் நான் சிட்சை சொல்லிக் கொடுத்தபோது உன் எதிரில் மணிக் கணக்கில் உட்கார்ந்திருந்துவிட்டு எழுந்திருப்பதைப் பெருந் தபஸ்போல எண்ணி வெற்றிகண்டிருக்கிறேன். கண்டவரைக் கிறங்கவைக்கும் உன் கட்டழகு என் சிந்தையில் மிருகவெறியை ஊட்டியதில்லை. ஆனால் அரங்கேற்ற மேடையில் உன்னைக் கண்டதும், உன் தெய்விக இசையைக் கேட்டதும்; நான் மனம் பேதலித்துப் போனேன். என் வாழ்வின் ஜீவ ஒளியாக என்றும் நீ என் அருகிலேயே இல்லாவிட்டால் நான் உயிருடன் இருக்க முடியாதுபோல ஒருவிதப் பயமும் ஏக்கமும் என்னைத் தாக்கின. இறுதியில் முழுக்க முழுக்க உன்னை என்னுடையவளாகவே ஆக்கிக் கொள்வதைத் தவிர, இதற்கு வேறு மார்க்கமே இல்லை என்று என் மனம் முடிவு செய்துவிட்டது."

உள்ளத்தைத் திறந்து கொட்டிக்கொண்டிருந்த பாகவதர் சட்டென்று ஒரு நிமிஷம் நிறுத்தினார்.

''சுந்தரி, ஏன் எதற்குமே பதில் பேசாமல் நின்று கொண்டிருக்கிறாய்? இதுவரை நான் என் மனப் போராட்டத்தைத்தான் கூறினேனே தவிர, என் புத்தித் தடுமாற்றத்துக்கு ஒத்துழைக்குமாறு உன்னை நான் வற்புறுத்தவில்லை. நான் மணமானவன். பேராசையால் இரண்டாந் தாரமாக உன்னையும் ஏற்க என் மனம் விழைகிறது. ஆனால் உன் இளமனத்தில் எத்தனையோ பசுமையான எண்ணங்களை நீ சுமந்து கொண்டிருக்கலாம். உன் அழகுக்கும், அறிவுக்கும், இப்போது நீ அடைந்திருக்கும் சங்கீதத்திறமைக்கும் அழகிலும் இளமையிலும் செல்வத்திலும் சிறந்த மணமகன் உனக்கு நாளையே வரலாம். அதுவே உன் விருப்பமாகவும் இருக்கலாம். ஆகவே நான் உன்னிடம் முன்பே கூறியபடி ஒரு வார அவகாசம் உனக்காக இல்லாவிட்டாலும் எனக்காக எடுத்துக் கொள்கிறேன். நீ இப்போது அவசரப்பட்டு ஏதாவது பதில் கூறிவிட்டால், என் இதயமே நின்றுவிடும். ஆகவே காலம் நம் இருவருக்கும் சில நாளாவது மன அமைதியைக் கொடுக்கட்டும். நான் வருகிறேன் சுந்தரி'' என்று புறப்பட்டார்.

அவள் சட்டென்று கூறினாள், ''எங்கே புறப்படுகிறீர்கள்? என் வரையில் இனிமேல் யோசிப்பதற்கு ஒன்றும் இல்லை. நான் முடிவு செய்துவிட்டேன்.'' அவளுடைய சொற்கள் கணீரென்று அவர் செவிகளில் ஒலித்தன.

''என்ன சுந்தரி? அதற்குள்ளாகவா? வேண்டாம்.'' சுப்பராமன் படபடப்புடன் கூறினார்.

''ஏன்? இந்த அவகாசம் போதாதா? இவ்வளவு காலமில்லாமல், என்னைப் பார்த்து இப்படிக் கேட்கவேண்டும் என்று உங்களுக்கு இந்த எண்ணம் திடீரென்றுதானே எழுந்தது? அதை உடனே நிறைவேற்றுவதைத்தான் என் கடமையாக மதிக்கிறேன். உங்கள் மனம் கோணாமல் நடக்க வேண்டுமே என்பதைத் தவிர நான் எனக்கென்று

எந்த விருப்பு வெறுப்புக்களையும் தனியாகச் சுமந்து கொண்டு வாழவில்லை. இனிமேல் எனக்கு இதுபற்றி யோசிப்பதற்கோ, யாருடைய அபிப்பிராயங்களையும் கேட்பதற்கோ விருப்பமில்லை. ஆனால் நீங்கள் எனக்கு ஒரு வாக்குறுதி கொடுக்கவேண்டும்; கொடுக்கிறீர்களா?', என்று கேட்டாள்.

''தாராளமாகக் கேள், சுந்தரி;'' என்றார் சுப்பராமன்.

அவள் நிதானமாகவே கூறினாள்: ''இனிமேல் நான் மேடையேறிக் கச்சேரி செய்யப் போவதில்லை. இன்று நான் செய்த கச்சேரிதான் என் முதலும் முடிவுமான கச்செரி.''

இதைக் கேட்டதும் சுப்பராமன் அப்படியே நடுநடுங்கிப் போனார்.

''சுந்தரி, உனக்கு என்ன பைத்தியமா? இதற்காகவா உனக்கு இத்தனை அரும் பாடுபட்டுக் கற்றுக் கொடுத்தேன்? உன்னால்; உன் இணையற்ற சங்கீதத்தினால் என் பெயரும் புகழும் உயரும்; சிறந்த கலைஞானமுடைய ஒரு பெண்ணரசியை முழுக்க முழுக்க எனக்கே சொந்த மாக உரிமை கொண்டாடப் போகிறேன் என்கிற என் கனவுகள் அனைத்தையும் ஒரே நொடியில் தகர்த்தெறிந்து, என் தலையில் பெரிய இடியாகப் போடுகிறாயே சுந்தரி! இது நியாயமா? உன் அசட்டுத் தனமான பேச்சுக்களை இத்துடன் நிறுத்திக்கொண்டு, இசைக் கலைக்கும் உனக்கும் பெருமையைத் தேடிக் கொள். ஆயிரமாயிரம் ரசிகர்கள் உன் இசைவெள்ளத்தில் திளைத்து மெய்ம்மறக்கவேண்டும்; எங்கும் உன் புகழ் பரவ வேண்டும். இதுவே என் விருப்பம். அதை அப்படியே நிறைவேற்றுவது உன் கடமை'' என்று மழை கொட்டுவது போல் உள்ளுக்குள் எழுந்த உணர்ச்சியை அப்படியே கொட்டித் தீர்த்து விட்டார்.

அத்தனையையும் பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருந்த சுந்தரி அவரை நோக்கி மெல்லச் சிரித்தாள். அந்தச் சிரிப்பின் பொருள் அவருக்கு விளங்கவில்லை. அதன் காரணம் அவருக்குப் புரியவில்லை. ஆனால் அதன் வேகத்தைத் தாளமுடியாமல் அவர் மௌனியானார் சொற்களை அவளது சிரிப்பு மென்று விழுங்கி அவரை ஊமையாக்கியது.

''உங்களிடம் எதிர்த்துப் பேச நேர்ந்துவிட்டதற்காக முதலில் நீங்கள் என்னை மன்னிக்கவேண்டும். நீங்கள் இத்தனை நேரம் பேசிய அத்தனை விஷயங்களையும் நான் அப்படியே ஒப்புக்கொள்கிறேன். ஆனால் நான் அசட்டுத்தனமாக எந்த முடிவும் செய்யவில்லை. செய்த முடிவை இனி மாற்றிக்கொள்வதாக எனக்கு உத்தேசமும் இல்லை. என்னால் இசைக் கலைக்குப் பெருமை ஏற்படும் என்றால் அதைவிட அந்தக் கலைக்கு உங்களால் அதிகப் பயன் ஏற்படும். உலகத்தில் நல்ல சங்கீதக்தைப் பரப்ப வேண்டியது உங்கள் பணியாகவே இருக்கட்டும். நான் என்றும் தங்கள் அன்புக்கும் அபிமானத்துக்கும் பாத்திரமான ரசிகையாகவே உங்களிடம் கற்றுக்கொண்ட வித்தையால் உங்களையே மகிழ்விக்கும் சேவகியாகப் பணிசெய்யவே என்னை அனுமதியுங்கள். அல்லாமல்-இருவரும்-கச்சேரிகள் செய்து நம்முடைய சங்கீதத்துக்கிடையே உயர்வு தாழ்வுகளைக் கற்பித்து, பிறர் விமர்சிக்க இடம் தரவேண்டாம். ஒருக்கால் அது நம் உறவை முறித்தாலும் முறிக்கலாம். இசையால் ஒன்றுபட்ட நாம் என்றாவது ஒருநாள் பிரிந்து வாழவும் அந்த இசையே காரணமாகக் கூடாது என்பதனாலேயே நான் தொழில் செய்வதை மறுக்கிறேன். கற்றுக்கொண்ட கலையைக் காசாக்கத்தான் வேண்டும் என்பதில்லையே! ஆயுள் முழுவதும் ஆத்மத் திருப்திக்காகவே என் இசைக் கலையை அர்ப்பித்து விட்டேன். நான் வணங்கும் உங்கள்

மீது ஆணையாக இந்த உறுதியிலிருந்து பிறழ மாட்டேன். இது சத்தியம்!''

சுந்தரி வார்த்தைகளைக் கூறி முடிக்கவில்லை. அண்ட சராசரங்களும் நிலை பெயர்ந்து தலைமேல் விழுந்து விட்டாற்போல் சுப்பராமன் இடிந்துபோய் உட்கார்ந்து விட்டார்.

## 10. பிரிந்தவர் கூடினர்

அன்று சுந்தரியின் வார்த்தைகளைக் கேட்டதும் பாகவதருக்குக் கோபம் வந்ததென்னவோ உண்மைதான். ஆனால் அதற்காக அத்தனை கடுமையாக அவளிடம் நடந்துகொண்டிருக்க வேண்டாமே.

அந்தக் காட்சிகள் மீண்டும் மீண்டும் அவர் நினைவில் தோன்றிப் பழைய சம்பவங்களைக் கிளறிவிட்டன—

''எப்போது உன் புகழை - முன்னேற்றத்தைக் கண்டு எனக்குப் பொறாமை ஏற்படலாம், நமக்குள் எண்ணங்கள் மாறும் என்று என்னைப்பற்றி எண்ணி விட்டாயோ இனி உன்னிடம் என் மனம் ஒட்டாது. நாம் இருவரும் சேர்ந்து வாழவும் முடியாது'' என்று சுந்தரியிடம் கோபித்துக் கொண்டு அவர் புறப்பட்டார். உடனே—

''நில்லுங்கள்! நீங்கள் புறப்பட்டுப் போவதை நான் தடை செய்யவில்லை; ஆனால் அதற்குள் நான் என் மனத்திலுள்ளதைக் கூறிவிடுகிறேன். அதன் பிறகு நீங்கள் விருப்பப்படியே போகலாம்'' என்று தடுத்துக் கூறிய அவளது சொற்கள் அவர் செவிகளில் அசரீரிபோல் மீண்டும் ஒலித்துக் கொண்டேயிருந்தன.

சுந்தரி கூறினாள்: இன்று என் வாழ்க்கையில் மிகப் பெரிய குதூகலம் நிறைந்த மங்கள நாள் என்று நான் எண்ணி எண்ணி மகிழ்ந்துகொண்டிருந்தேன். இறுதியில் என் மகிழ்ச்சியெல்லாம் கனவாகவே ஆகிவிட்டது. இன்று மேடை ஏறிப் பாடும்போது கூட நான் எண்ணவில்லை; பாடி முடிந்ததும் இத்தனை பெரிய சூறாவளி என்னைச்

சூழ்ந்துகொள்ளும் என்று. பெறுதற்கரிய பேற்றைப் பெற்றுவிட்டதாகத்தான் மேடையில் பாடும் போது மகிழ்ந்து கொண்டிருந்தேன. ஆனால் நான் அநுபவித்த ஆனந்தம் மொட்டிலேயே கருகிமடிந்து விட்டது. கச்சேரி முடிந்து இரண்டு மணிநேரம் ஆகவில்லை; என்னைக் கண்ணீரும் கம்பலையுமாகக் கதறக் கதற அடித்துவிட்டு நீங்கள் புறப்பட்டுச் செல்லத் தயாராகி விட்டீர்கள்.

''உங்களைப் பொறாமைக்காரர் என்றோ, என் நல் வாழ்வில் அக்கறை இல்லாதவர் என்றோ நான் ஒருக்காலும் கூறவில்லை. நீங்கள் அப்படி எண்ணினால், அது நான் கூறிய வற்றைத் தவறாகப் புரிந்து கொண்டதாகவே ஆகும். கிடைத்தற்கரிய பேறாகிய தாங்களே என்னை ஆட்கொண்ட பின்; நான் கற்றுக் கொண்ட இசையையும் உங்களுக்கே சமர்ப்பித்து மகிழவே விரும்புகிறேன் என்றால் அது குற்றமா? இருவரும் தொழிலில் இறங்கி, நம்மில் ஏற்றத் தாழ்வுகளை எடைபோடும் பொறுப்பையும், விமரிசனம் செய்யும் சந்தர்ப்பத்தையும் ரசிகர்களுக்கு அளித்து; மன ஆயாசத்திற்கு வகைசெய்ய வேண்டாமென்று கூறினால் அது தவறா? இந்த ஜென்மத்தில் உங்களையன்றி மற்றோர் ஆடவரை நான் மனந்தாலும் நினையேன். நீங்கள் எங்கிருந் தாலும் உங்களுக்காகவே உங்கள் நினைவாகவே இங்கேயே இருந்து என் வாழ்நாளை ஓட்டிவிட என்னால் முடியும். இவ்வளவு தான் நான் கூற விரும்பியவை; இனி தங்கள் விருப்பம் போல் தாராளமாகச் செல்லலாம்'' என்று கூறியவள் பதிலுக்குக்கூட காத்திராமல் உள்ளே சென்று விட்ட காட்சி, திரைப்படம் போல் மீண்டும் ஒரு முறை அவரது இதயத் திரையில் ஓடி நின்றது.

அந்தக் காட்சியைக் காணச் சகிக்காதது போல் கண்கள் நீரை உமிழ்ந்தன. கோபந்தான் எத்தனைக் கொடியது! அது மனிதனை என்ன பாடு படுத்திவிடுகிறது?

சுந்தரியுடன் கோபித்துக் கொண்டு வந்த சுப்பராமன் அதன் பிறகு நீண்டநாள்வரை திருவிடைமருதூர்ப் பக்கம் எட்டிப் பார்க்காமலே இருந்துவிட்டார். அவரது உள்ளத்தில் அவளை எப்படியாவது மறந்துவிட வேண்டும் என்ற எண்ணந்தான் முழுக்க முழுக்க இருந்தது. ஆனால் ஒருநாள் அவருடைய நண்பர் பிடில் பஞ்சாமி சுந்தரியைப் பற்றிக் கூறிய செய்தியைக் கேட்டதும் சுப்பராமன் பதறிப் போனார்.

உடனே மறு ரெயிலிலேயே திருவிடை மருதூருக்குச் சென்று சுந்தரியைக் கண்டார். படுத்த படுக்கையாய் இருந்த அவளைப் பார்த்ததும் அவர் கண்ணில் நீர்கசிந்தது. அழகு கொழிக்கும் அவளது பொன்னிற மேனி, மெருகு குன்றி களையிழந்து காட்சியளித்தது. அலையலையாக நெளியும் கருங்கூந்தல் எண்ணெய் கண்டு பல நாட்கள் ஆகிக் காற்றில் பறந்து கொண்டிருந்தது. அழகையே அவள் அழித்துக் கொண்டு வாழும்போது—அழகுக்கு அழகூட்டும் நகைகளையா அணிந்துகொள்ளப் போகிறாள்? சூறையாடப் பட்ட இளவரசி போல் அவள் மஞ்சத்தில் கிடந்தாள்.

பாகவதரைக் கண்டதும் அவளது முகத்தில் ஓர் ஒளி பிறந்தது. வறண்டிருந்த உதடுகளில் ஜீவ களையுள்ள புன்னகை பூத்தது. எழுந்திருக்க முயன்றாள். அவளால் இயலவில்லை. திரும்பப் படுக்கையில் விழுந்துவிட்டாள்.

''பேசாமல் அப்படியே படுத்திரு'' என்று செல்லமாய் அதட்டினார். உதவிக்கு அருகில் ஒரு சிறு பெண் மட்டுமே இருந்தாள். பாட்டியைக் காணவில்லை.

சுந்தரியிடம், பாட்டி எங்கே என்று விசாரித்தார். விழித் திரைகளில் நீர் படிய அவள் முகத்தைத் திருப்பிக் கொண்டாள். ''பாட்டியம்மாவா? அவுங்க ஒரு மாசத்துக்கு முன்னமே செத்துப் போயிட்டாங்களே!'' பக்கத்தில் இருந்த சிறுமி தான், பாகவதருக்குப் பதில் அளித்தாள். சுப்பராமனுக்குத் 'திக்' கென்றது. எவ்வளவு பெரிய துக்கத்தைச்

சுமந்து கொண்டு அவள் ஆதரவின்றி அநாதையைப் போல் இருக்கிறாள் என்று எண்ணிய போது, அவருக்கே தாளவில்லை.

''பாட்டிக்கு என்ன உடம்பு? என்ன செய்தது? நீ ஏன் எனக்குச் சொல்லி அனுப்பக் கூடாது அல்லது ஒரு வரி எழுதக்கூடாது?'' என்று கேட்டார்.

''சொல்லியனுப்புவதற்கான உறவுடன் நீங்கள் இங்கிருந்து செல்லவில்லையே! மேலும், பாட்டி இறக்கிற வரை உங்களைப் பார்க்காமலே இருப்பது நல்லது என்றே எனக்குப் பட்டது. அதனால்தான் நானும் சொல்லி அனுப்பவில்லை. அன்று அரங்கேற்றம் முடிந்து வந்து பிறகு நாம் இருவரும் பேசிக் கொண்டிருந்த காரசாரமான சம்பாஷணைகளைப் பற்றிப் பாட்டி நீங்கள் போன பிறகு கேட்டாள். நான் அத்தனையையும் விவரமாகச் சொன்னேன். இதைக் கேட்டதும் அவளுக்குக் கோபம் கண்மண் தெரியாமல் வந்து விட்டது. 'சிட்சை சொல்லிக் கொடுத்தார் என்றால் அதற்குத் தகுந்த பரிசுகளைக் கொடுத்தோம். இன்னும் வேண்டுமென்றால், கேட்டதெல்லாம், கேட்ட போதெல்லாம் மனம் கோணாமல் கொடுப்போம்; வித்தையைச் சொல்லி கொடுத்தவர் என்று ஆயுள் முழுவதும் அன்போடு இருப்போம்; அவரது ஆசியோடு வாழ்வோம். ஆனால், அதற்காக உன்னையே அவர் கேட்பதா? லாபத்தில் சாப்பிடலாம்; முதலையே தின்று விட்டால் வியாபாரம் பிழைக்குமா? என்று உங்களை வாய்க்கு வந்தபடிப் பேசினாள். ஏற்கெனவே அவளுக்கு ரத்தக் கொதிப்பு உண்டு. நானும் டாக்டரும் அவளுக்கு எவ்வளவு கூறியும் அவளது ஆவேசம் அடங்கவில்லை. அவளுடைய சம்மதத்தைக் கேளாமல் நானும் உங்கள் எண்ணத்துக்குச் 'சரி' என்று தலையாட்டி விட்டது அவளுக்குத் தாளவில்லை. 'என்பெண்இருந்தால் இப்படியெல்லாம் நடக்கப் பாாத்துக் கொண்டிருப்பாளா?

நோட்டம் பார்த்து முளையிலேயே கிள்ளி எறிந்து, வளர வேண்டிய விதமாக வளர்த்திருப்பாளே! பாவிக்கு அவ்வளவு சமர்த்தும் சாமர்த்தியமும் இருக்கக் கண்டுதான் எமனுக்கே பொறுக்கவில்லை; கொண்டு போய் விட்டான். ஜாம்பவான் மாதிரி நான் இருக்கிறேன் எல்லாத் துன்பங்களையும் பார்த்து அநுபவிக்க'-என்று என் தாயை நினைத்து ஓயாமல் அழுதாள். 'என் மனத்தைக் கலைத்து விட்டீர்கள்' என்று உங்களை வாயாரத் திட்டிக் கொண்டே இருந்தாள்; திட்டிக் கொண்டே ஒரு நாள் போயும் சேர்ந்தாள்''.

''ஏன், உன் பாட்டியின் இறுதி ஆசை பூர்த்தியாக இப்போது நான்தான் வந்து விட்டேனே, பாட்டிக்குப் பதில் உன் வாய் வலிக்கிற வரை என்னை திட்டித் தீர்த்து விடு. பாவம்! அவளுடைய ஆத்மாவாவது சாந்தியாகட்டும்'' என்று சுப்பராமன் கூறிய போதே, அருகில் இருந்த சின்னப் பெண்ணும் அவருடன் சேர்ந்து சிரித்தாள்.

பிறகுதான் சுப்பராமனுக்கே சுருக்கென்றது. 'இப்போது நாம் ஒரு நோயாளியைப் பார்க்க வந்திருக்கிறோம். அதுவும் பஞ்சு கூறியது போல்-தங்கச் சிலை போல் இருந்த சுந்தரி, புழுதியில் கிடக்கும் மண் பொம்மை போன்ற நிலைக்கு வரக் காரணம் நானேதான். அவளை அவள் போக்குக்கு விடாமல் ஆசையை திசைமாற்றி விட்டுப் பிறகு உதாசீனமும் செய்து விட்டுச் சென்ற தாங்க முடியாத ஏமாற்றம்தான் ஊமையடியாக விழுந்து அவளைக் கிடத்தி விட்டது. இனி மேல் அவள் முன் போல் எழுந்திருந்து, பழைய குதூகலமும் கலகலப்பும் பெற ஏதாவது வழி செய்வதுதான் நம்முடைய தற்போதைய பணியேயன்றிப் பரிகாசத்துக்கு இது அல்ல நேரம்'-என்று அவரது மனமே கடமையை சுட்டிக் காட்டியது.

அவர் அவளருகில் உட்கார்ந்து மிகவும் பரிவோடு விசாரித்தார்; ''இந்தப் பெண்ணைத் தவிர உனக்கு வேறு யாரும் துணைக்கு இல்லையா, சுந்தரி?''

''இல்லாமல் என்ன? நான் என்ன அநாதை என்று எண்ணிக் கொண்டீர்களா? என்னைப் பார்த்து, என் பாட்டைக் கேட்டு ஒரு மகாவித்துவானே மயங்கிப் போய் விட்டார். போனவர் மயக்கம் தெளிந்து பாவம், இன்று தான் வந்திருக்கிறார்'' என்று கூறி விட்டு கலகல வென்று நகைத்தாள். அவரும் அவளுடன் சேர்ந்து சிரித்தார் அதன் பிறகு அந்த வீட்டில் அந்தச் சிரிப்பு ஓயவே இல்லை..

# 11. அதிசயப் பெண்

எதை வேண்டுமானாலும் ஒரு பெண் விட்டுக் கொடுக்க - துறக்க தயாராக இருப்பாள். ஆனால் தன் கணவனுடைய ஸ்தானத்தை மட்டும் அவள் யாருக்காகவும் இழக்கவோ விட்டுக் கொடுக்கவோ இணங்கமாட்டாள். தன் புருஷன் தன்னைத் தவிர வேறொரு பெண்ணிடம் அன்பு கொண்டிருக்கிறான் என்பதையோ அல்லது தன் நாயகன் மேல் அந்நியப் பெண் ஒருத்தி ஆசை காட்டுகிறாள் என்பதையோ சகித்துக் கொள்வதோடு, ஆதரவு காட்டவும் வேண்டுமானால் - அந்தப் பெண்ணுக்கு எவ்வளவு மனோ பலம் இருக்கவேண்டும்? லட்சுமிக்கு அந்த மனோபலத்தை இறைவன் அளித்திருந்தான் போலும்!

இரண்டு குழந்தைகளுக்குத் தாயாகியிருந்தாலும் புதுமணமான இளம் பெண்தான் அவளும், கணவனைப் பற்றிய ஆயிரமாயிரம் கனவுகளும் இன்ப நினைவுகளும் லட்சுமியின் உள்ளத்திலும் கிளைத்துக் கொண்டுதான் இருந்தன. ஆயினும் இவற்றையெல்லாம் மீறி தன் கணவருக்கும் சுந்தரிக்குமிடையே உள்ள காதலை எண்ணிப் பார்த்தாள். கோபத்துக்குப் பதில் கருணைதான் பிறந்தது- ஆத்திரத்துக்குப் பதில் ஓர் அபலைப் பெண்ணின் வாழ்வை எண்ணி அன்புதான் அவள் உள்ளத்தில் இடம் பெற்றது. சுந்தரிக்குப் பணமும் காசும் இருக்கலாம்; ஆனால் அவளை விடத் தானே ஒரு வகையில் சீமாட்டியாக லட்சுமிக்குப் பட்டது. அந்த வகையில் சுந்தரிக்குத் தன்னாலான உதவியைச் செய்வது கடமை என்றே அவளுக்குத் தோன்றியது.

சுந்தரியின் பாட்டி இறந்து போன செய்தியைக் கணவர் மூலம் அறிந்ததும் லட்சுமி ஒருமுறை திருவிடை மருதூருக்குச் சென்று துக்கம் விசாரித்து வந்தாள். பிறகு அடிக்கடி சுந்தரியைப் போய்ப் பார்த்து ஆறுதல் சொல்லிவிட்டு வந்தால்தான் மனத்துக்குச் சமாதானம் ஏற்படும் போலிருந்தது லட்சுமிக்கு. வெள்ளை உள்ளத்தோடு மனம் விட்டுப் பழகும் சுந்தரியின் குழந்தையுள்ளமும், செல்வத்தில் புரண்டும்; துளியும் கர்வமில்லாத அவள் பண்பும் லட்சுமியைப் பெரிதும் ஈர்த்துவிட்டன.

தன் கணவருடைய விருப்பம் இல்லாமலோ அல்லது அவராகவே விரும்பியோ, எப்படியோ சுந்தரி அவர் வாழ்வில் பங்கு பெற்று விட்டாள். அதற்காக லட்சுமி சுந்தரியை வெறுக்கவில்லை; தன் வாழ்வில் குருக்கே வந்து விட்டவளாக எண்ணவில்லை. ''இனி நீயும் நானும் அவருடைய இரு கண்கள்'' என்றாள். அதை நிரூபிக்கச் சுந்தரியின் பாட்டி இறந்தது லட்சுமிக்கு ஒரு பொன்னான சந்தர்ப்பமாக அமைந்தது.

கணவரோடு மீண்டும் ஒரு நாள் சென்ற லட்சுமி, ''நீ தனியாக இவ்வளவு பெரிய வீட்டில் இருந்து என்ன பண்ணப்போகிறாய்? என்னுடன் கொஞ்ச நாள் வந்து இரு. மனத்துக்கும் ஆறுதலாக இருக்கும்'' என்று கூறிப் பிடிவாதமாக அவளைச் சுவாமி மலைக்கு அழைத்து வந்து விட்டாள்.

அப்போது காயத்திரி ஐந்து வயதுப் பெண். சுசீலாவுக்கு ஒரு வயது. சுந்தரிக்குச் சுவாமிமலை வாழ்க்கை மிகவும் பிடித்திருந்தது. நாள் முழுவதும் வீடு நிறையச் சிஷ்யர்களையும், ஒவ்வொருவருக்கும் அவரவர்களின் ஞானத்துக்கும் அநுபவத்திற்கும் தகுந்தாற்போல் முன்னும் பின்னுமாகப் பாடங்கள் நடந்து வருவதையும் கண்டு ரசித்தாள்.

ஆனால் அவர்களில் ஒரு பெண்கூட இல்லை. ஆம், இந்த விஷயத்தில்தான் பாகவதர் தீவிரவாதியாயிற்றே. தனக்காக அவர் எவ்வளவு தூரம் கொள்கையை விட்டுக் கொடுத்திருக்கிறார் என்பதையும், விட்டுக் கொடுத்து விட்டு அகப்பட்டுக் கொண்டு விழிப்பதையும் ஒரு கணம் மனத்துக்குள் எண்ணிப் பார்த்து நகைத்துக் கொண்டாள் சுந்தரி.

அவள் சுவாமிமலைக்கு வந்து ஏழெட்டு மாதங்களுக்கு மேல் ஆகிவிட்டன. அப்போது சுந்தரி ஐந்து மாதங்களாகியிருந்தாள். அவளை நல்ல நாள் பார்த்து ஊருக்கு அனுப்பி வைத்தாள் லட்சுமி, கூடவே அவளுக்குத் துணையாக; விட்டோடு இருந்து கவனித்துக்கொள்ளக் கூடிய நல்ல சமையற்காரி அம்மாளையும் அனுப்பி வைத்தாள்.

சுந்தரி சுவாமி மலையில் இருந்தபோது புதிதாகச் சில உருப்படிகளைப் பாடம் பண்ணியிருந்தாள். இன்னும் சில புதிய கீர்த்தனங்களைப் பாடம் பண்ணிக்கொண்டு போக வேண்டும் என்பது அவள் விருப்பம். 'இன்னும் இரண்டு மாசம் கழித்துப் போகிறேனே அக்கா?' என்று கேட்கலாமா என்று கூடத் தோன்றியது. ஆனால் அதற்குப் போதிய துணிவு இல்லாததால் விட்டு விட்டாள். ஆனால் அவளுடைய தயக்கத்தைக் கண்டு லட்சுமியே, 'ஒன்றுக்கும் கவலைப்படாமல் போய் இரு. நானும் அவருமாக அங்கு வந்து உன்னுடன் மாறி மாறி இருக்கத்தான் போகிறோம்- தம்பூரா நாதத்தைக் காற்றா கொண்டு போய்விடும்? தைரியமாகப் போய்வா. பிரசவத்துக்கு, நான்தான் கூட இருக்கப் போகிறேன். கவலைப்படாதே'' என்று ஆறுதல் கூறினாள்.

சுந்தரியும் சிரித்துக்கொண்டே, பூட்டியிருந்த இரட்டை மாட்டு வண்டியில் ஏறி உட்கார்ந்து கொண்டாள். சமையற்

காரியும் ஏறிக்கொண்டவுடன் பிடில் பஞ்சு அண்ணா வண்டியில் ஏறி அமர்ந்துகொண்டார். ஸ்டேஷன் வரைக்கும் அவர்களோடு துணைக்குச் சென்று டிக்கெட் வாங்கிக் கொடுத்துவிட்டுத் திரும்பினார். பாகவதரிடம் வந்து "சுப்பராமா, நீ பூர்வஜன்மத்தில் நல்ல சங்கீதத்துக்காக மட்டும் பூவை எடுத்துப் போடவில்லை; லட்சுமியையும் சுந்தரியையும் போல இரண்டு பெரிய நிதிகளுக்காகவும் வாய்நிறைய அர்ச்சனை பண்ணியிருக்கிய்; அதெல்லாம் இந்த ஜன்மத்தில் பலிதமாகிறது" என்று மனதாரக் கூறினார். சுப்பராம பாகவதருக்கும இதைக் கேட்க மகிழ்ச்சியாகவே இருந்தது.

பாகவதரும் பஞ்சு அண்ணாவும் நல்ல சிநேகிதர்கள், பழக்கம் காரணமாக அவர்கள் இருவரும் மிகவும் சகஜமாகவும் வேடிக்கையாகவும் பேசுவார்கள். சங்கீத வித்துவான்களிடையே, அதிலும் குறிப்பாகப் பக்கவாத்தியக் காரர்களுள் பஞ்சு அண்ணாவுக்கு மிகவும் நல்ல பெயர். மேலும் அவர் நல்ல ஞானஸ்தர். பாட்டுக்'கு அநுசரணையாகப் பிடில் வாசிப்பதில்; மிகவும் பெயர் பெற்றவர். யாருடைய கச்சேரியில் பஞ்சு அண்ணா பிடில் வாசித்தாலும் கச்சேரி 'களை' கட்டிவிடும்.

அரங்கேற்றத்துக்குப் பிறகு நடந்த விஷயங்கள் இரண்டு மூன்று மாதங்களுக்குப் பிறகுதான் பஞ்சு அண்ணாவுக்குத் தெரிய வந்தன. திருவிடைமருதூருக்கு ஏதோ வேலையாகச் சென்றார் எதேச்சையாக, 'சுந்தரியை பார்த்து நாளாயிற்றே' என்று வீட்டுக்குள் நுழைந்தவர் கற்சிலைபோல் பிரமித்து நின்றுவிட்டார். கல்லில் வடித்த சிலைபோல் இளமையழகு கொழித்துக்கொண்டிருந்த சுந்தரி உருக்குலைந்து மனநோயால் பீடிக்கப்பட்டு வைத்தியத்

துக்கும்; வைத்தியர்களுக்கும் அப்பாற்பட்டுப் படுத்த படுக்கையாகக் கிடந்தாள்.

அழகின் அதிதேவதையே மண்டபத்தின் மத்தியில் கொலுவீற்றிருப்பதேபோல் அன்று அவள் கச்சேரி செய்த அழகைக் கண்டவர்; இன்று புழுதியில் உருட்டிவிடப்பட்ட வீணையைப் போல அவள் இருப்பதைக் கண்டு பதறிப் போனார்.

சுந்தரி பஞ்சுஅண்ணாவிடம், நடந்த விவரங்கள் அனைத்தையும் ஒன்று விடாமல் கூறிக் கண்ணீர் விட்டாள். கச்சேரி முடிந்து வீட்டுக்கு வந்ததும், குரு அது வரையில் இல்லாத புதுமாதிரியாகத் தன்னிடம் கேட்டகேள்வி யையும், அதைக் கேட்டுத் தான் அடைந்த அதிர்ச்சி யையும், அதற்குத் தான் விதித்த நிபந்தனையையும் கூறினாள். அதைக் கேட்டு அவர் தன்னைத் தவறாகப் புரிந்து கொண்டு தன் வீட்டுப்பக்கம் திரும்பிக்கூடப் பாராமல் இந்த இரண்டு மூன்று மாதமாக இருப்பதையும்-பாட்டி இறந்ததையும், தானும் இறக்கிறவரை அவர் அப்படி வராமலே இருந்தாலும் 'நான் அவருக்காகவே வாழ்ந்து அவர் நினைவுடனேயே இறப்பேன்' என்றும் கூறிக் கொண்டு வரும்போதே தாங்க முடியாத துக்கத்தினால் சுந்தரியின் குரல் தழுதழுத்தது.

பஞ்சு அண்ணாவினால் அதற்கு மேலும் அந்த இடத்தில் நிற்க நிலைகொள்ளவில்லை. ''சுப்பராமனுக்கு இப்படி ஒரு சபலம் ஏற்பட்டிருக்க வேண்டாம். அதன் பிறகு அர்த்தமில்லாமல் வீம்புக்கு இப்படி ஒரு பெண்பாவத்தையும் கொட்டிக் கொண்டிருக்க வேண்டாம். நான் நாளையே அவனைப் பார்த்து உனக்கு வேண்டியதைச் செய்கிறேன். நீ கொஞ்சங் கூடக் கவலைப்படாதே'' என்று ஆறுதல் கூறிப் புறப்பட்டுவிட்டார்.

அதன் பிறகு அவர் சுப்பராமனிடம் வந்து மிகவும் கோபித்துக்கொண்டதுடன், சுந்தரியின் கவலைக்கிடமான உடல் நிலையையும் விளக்கி, உடனே சென்று பார்த்து வரும்படி தூண்டினார்.

அன்று பஞ்சு அண்ணா நல்ல உள்ளத்தோடு தம்மைத் தூண்டிவிடாமல் இருந்தால் அநியாயமாக ஒரு ஞான தீபம் கவனிப்பாரற்றுக் காற்றில் அணைந்து போயிருக்கும்; சுந்தரிக்கும் ஒரு வாழ்வு கிடைத்து ; தனக்கும் அவளிடம் இப்படி ஓர் அழகான பெண் குழந்தை பிறந்திருக்கமாட்டாள். அதைத்தான் சுப்பராமன் இப்போது எண்ணிப் பார்த்துக்கொண்டார்.

'நாணாவைப் போன்றவர்கள் என்னைப் பற்றி எது வேண்டுமானாலும் அவதூறு பேசிவிட்டுப் போகட்டும். அதைப்பற்றி ஒன்றும் கவலையில்லை. கலை எப்படி மனித ஆட்சிக்கு கட்டுப்படாததோ ; அதைப் போலவேதான் அந்தக் கலையை ஆட்சி செய்யும் கலைஞனும், சாதாரண மனிதர்களின் மனப்பான்மைக்கும் கட்டுப்பாட்டுக்கும் கட்டுப்படாமல், தனக்கென்று ஒரு வழியில் தன்னிச்சைப் படியே செல்லக்கூடியவன். அவனை யாராலும் புரிந்து கொள்ள முடியாது; பணியவைக்கவும் முடியாது. இதுதான் கலைஞனின் வாழ்க்கை' என்று தம் மனத்துக்குள்ளே சமாதானம் செய்துகொண்டவண்ணம் ''ஹரி'' என்று உரக்க அழைத்தார். இப்போது அவரது மனம் கட்டுப் பாட்டுக்குள் அடங்கியிருந்தது. விரல்கள் தந்தியை மீட்டின. எதிரொலி கேட்டுத் திரும்பினார். ஹரி தம்பூராவுடன் தன் இடத்தில் அடக்கமாக வந்து உட்கார்ந்திருந்தான். அவனுடைய முகத்தில் ஓடிக்கொண்டிருந்த கவலைக் கோடுகளை பாகவதர் கடைக்கண்ணால் லேசாகப் பார்த்துத் தெரிந்து கொண்டார்.

தந்தையும் மகனும் தழுவிக்கொண்டு நிற்பதைப் போல் இரண்டு தம்பூராக்களும் சுருதி சுத்தமாக நன்கு இணைந்து வீடு முழுவதும் நாத ஒலி பரப்பின. அதன் பிறகு பொங்கி எழுந்த இசைவெள்ளத்தில்- மனத்தில் இருந்த கவலைக் குப்பைகள் கண்ணுக்குத் தெரியாமல் மூழ்கி மறைந்தன. அப்போது யாரோ 'படபட' வென்று கதவைத் தட்டுகிற சப்தம் கேட்கவே ஹரி தம்பூராவை நிறுத்தினான். பாகவதர் தம்மை மறந்து பாடிகொண்டே இருந்தார்.

## 12. கதவு திறந்தது

அத்தனை நேரம் கதவு தட்டிய சப்தம் பாகவதர் காதில் விழவில்லை. ஆனால் ஹரியினுடைய மெல்லிய தம்பூரா ஓசை நின்றதுமே பாகவதருக்குச் சுய உணர்வு வந்து விட்டது. பார்த்தார். எதிரே இருந்த ஹரியைக் காண வில்லை. தம்புரா பட்டுப்பாயில் கிடத்தியிருந்தது. கதவு திறந்து கிடந்தது.

பாடம் நடக்கும்போது ஹரி எழுந்து போனதில்லை. ஹரிமட்டுமில்ல; எந்தச் சிஷ்யனுமே எழுந்து போகக் கூடாது. பாகவதர் ஊரில் இருந்தால் நாள் தவறாமல் பாடம் நடக்கும். பாடம் சொல்லிக் கொடுக்கும்போது கதவைச் சாத்திவிடுவார். கச்சேரி பேச வந்தவர்கள் ஆனாலும் சரி, பாடம் நடக்கிறபோது வந்தால், முடிகிற வரையில் காத்திருந்துதான் ஏற்பாடு செய்து கொண்டு போவார்கள். அவர்களுக்கே இந்தக் கட்டுப்பாடு என்றால்-; வீட்டிலுள்ளவர்கள் அநாவசியமாகக் கதவைத் தட்டிவிடுவார்களா? பாகவதர்; சிஷ்யர்கள் விஷயத்தில் இவ்வளவு பொறுப்பும் அக்கறையும் எடுத்துக்கொண்டு மனச்சாட்சியோடு நடந்து கொள்வதற்குக் காரணம், சிறு வயதில் இந்தச் சங்கீதத்துக்காக அவர் பட்ட கஷ்டங்களே.

சங்கீதம் வராது என்று தோன்றினால்; அவனிடம் தம் கருத்தை உடனே கூறி அனுப்பிவிடுவாரே அன்றி, அவன் ஆயுள் பாழாகிற பாவத்தை அவர் ஒரு நாளும் செய்த தில்லை.

தம் வீடு தேடி வரும் சிஷ்யர்களுக்கு நேரமும் காலமும் இன்றி; குளிக்கும்போதும் சாப்பிடும் போதும், படுக்கும் போதுங்கூட அருகிலேயே வைத்துக் கொண்டு புதிய

பாடங்களைச் சொல்லிக் கொடுத்து, பழைய பாடங்களைப் பற்றிய சந்தேகங்களை விளக்குவார். தமக்குப் பிற்காலத்தில் தம் பரம்பரையான சங்கீதத்தையும் பெயரையும் வழி வழியாகக் கொண்டு செல்ல; அவருக்கு அருமையான நிதியைப் போல் ஹரி கிடைத்துவிட்டான். இதை அவர் தம் குருவின் கடாட்சமாக, பூர்வஜன்ம புண்ணியமாமாகக் கருதினார். ஹரியும், அதற்குத் தகுந்த பாத்திரம் என்று தச் சகல விதத்திலும் நிரூபித்தான். தம்மிடம் பாடம் சொல்லிக் கொள்ள வந்திருக்கும் சிஷ்யர்களை வீட்டிலுள்ள யாரும் எந்த வேலைக்கும் ஏவக்கூடாது என்று அவர் கண்டிப்பாகச் சொல்லியிருந்தார். ஆனால் ஹரியே அந்தக் குடும்பத்தின் அத்தனை வேலைகளையும், பொறுப்புக்களையும் சிறுகச் சிறுகத் தானே மேற்கொண்டான். அதைக் கண்டு லட்சுமியம்மாள் பூரித்துப் போனாள். இதயத்துக்குள்ளேயே அவனுக்கு ஆயிரமாயிரம் நல்லாகசிளை வழங்கினாள்.

இப்படி ஆதியிலிருந்தே வைரம்பாய்ந்திருந்த எண்ணத்தைத்தான் நாணா மாமா வந்து இரண்டு நாளில் ஒரு கலக் குக்கலக்கிப் பார்த்தார். கையை எடுத்தவுடன் நீர் மீண்டும் ஒன்று கூடிவிடுவதே போல்; அண்ணா போனவுடனேயே அந்தச் சலனமும் அவள் மனத்தின்றும் மறைந்துவிட்டது.

சிறிது நேரத்துக்கெல்லாம் அறைக்குள் நுழைந்த ஹரி குருவின் காதருகில் வந்து, "வெளியூரிலிருந்து ஓர் அம்மாளும் பெண்ணும் காரில் வந்திருக்கிறார்கள்; உங்களைப் பார்க்க வேண்டுமாம்" என்று பணிவோடு கூறினான்.

பாகவதர் ஒரு கணம் அவனை உற்றுப்பார்த்துக் கொண்டிருந்துவிட்டு எழுந்திருந்தார்.

— 'யார் வந்தால் என்ன? இதற்காகவா நீ பாதியில் எழுந்து போனாய்? என்னைப்பார்க்க வருகிறவர்கள் என்னைப் பார்க்காமலா போய்விடப் போகிறார்கள்?'- என்ற பொருள் அப்போது அவருடைய பார்வையில் தொனித்தது.

ஹரி மிகவும் பயந்து விட்டான். பதிலே பேசாமல் அவரைத் தொடர்ந்தான். ஹாலில் இருந்த நாற்காலியில் அமர்ந்திருந்த தாயும் மகளும் பாகவதரைக் கண்டதும் மிகுந்த பணிவுடன் எழுந்து வணக்கம் தெரிவித்தனர் அவரும் அவர்களைப் புன்சிரிப்புடன் வரவேற்ற வண்ணம் அருகிலுள்ள ஆசனத்தில் அமர்ந்தார். வாசலில் அவர்கள் வந்திருந்த நீல நிறக் கார் நின்றிருந்தது.

பாகவதரைப் பற்றி அந்த அம்மாள் தான் அறிந் திருந்த பெருமைகளைச் சிறிது நேரம் பேசி விட்டு, பிறகு தன்னைப் பற்றியும், தாங்கள் வந்த காரியத்தைப் பற்றியும் சுருக்கமாகக் கூறினாள்.

தஞ்சையைச் சேர்ந்த அந்த அம்மாளின் பெயர் கங்கா பாய். மராட்டியரான அந்த அம்மாளுடைய கணவர் பெரிய சர்க்கார் உத்தியோகம் பார்த்துச் சமீபத்தில் கால மானவர். பெரிய செல்வரான அவர்களுடைய ஒரேபெண் தான் அருகில் இருக்கும் காந்தாமணி.

கங்காபாய்க்கு, மகளைப் போலவே சங்கீதத்தில் அபார மோகம். ஆனால் அவளுக்கு கிட்டாத சாரீர பாக்கியத்தைப் பெண் அடைந்திருந்தாள். சிறந்த வித்து வானிடம் முறையோடு சங்கீதம் கற்றுக் கொண்டு பிரமாதமாகப் பிரகாசிக்க வேண்டும் என்ற ஆர்வத்துட னேயே அவர்கள் வந்திருந்தனர்.

அத்துடன், கங்காபாய் 'தனக்கு நாட்டியத்திலும் அளவு கடந்த ஆசையும், சிறிது பயிற்சியும் உண்டு' என்று கூறி, இப்போது ஆடுவதை நிறுத்திப் பல வருஷங்கள் ஆகி விட்டன என்பதையும் கூறினாள்.

'நல்ல வேளை; நாட்டியம் பிழைத்தது' என்று அந்த அம்மாளின் ஆகிருதியைப் பார்த்து, அருகிலிருந்த சுசீலா மனத்துக்குள் சிரித்துக் கொண்டாள்.

ஆனால், காந்தாமணியின் தாய்க்கு நாட்டியம் தெரியும் என்பதை அந்த அம்மாளைப் பார்த்ததுமே புரிந்து கொள்ளலாம்.

பாகவதர் வந்ததும் எழுந்து நின்று வணக்கம் செய்த தோரணையும், பிறகு ஒவ்வொரு வார்த்தைக்கும் அபிநயம் பிடிப்பது போல் கையை ஆட்டியும், முகத்தில் உணர்ச்சி களைக் கொட்டியும்; தெளிவாகப் பேசிய அழகையும் பாகவதர் மட்டுமின்றி உள்ளேயிருந்த காயத்திரியும், லட்சுமியம்மாளுங்கூட ரசிக்கத் தவறவில்லை. ஆனால் இத்தனைக்கும் காந்தாமணி மட்டும் அடக்கமே உருவாகத் தன் தாய் கூறுகிற அத்தனையையும் கேட்டபடி உட்கார்ந் திருந்தாள். பிறகு கங்காபாய் வந்த காரியத்தைப் பற்றிக் கூறினாள்.

"நான் உங்களிடம் இதுவரை வந்த காரியத்தைப் பற்றிப் பேசாமல், சுயபுராணம் பேசி உங்கள் பொன்னான நேரத்தை வீணாக்கிவிட்டேன்; மன்னிக்க வேண்டும்" என்று கூறிய போதே பாகவதர் இடைமறித்து, "நேரம் என்னவோ பொன்னானதுதான்; ஆனாலும் பரவாயில்லை. நீங்கள் தாரளமாகப் பேசலாம்" என்றார்.

"நான் வருகிறபோது உள்ளே பாட்டுச் சப்தம் கேட்டுக் கொண்டிருந்தது. ஆனந்தமாக இருந்தது. ஆனால் அவசர காரியமாகப் பன்னிரண்டு மணிக்கு நான் கும்பகோணத்தில் இருக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. அதனால்தான் உங்களைப் பாதியில் கூப்பிட்டுத் தொந்தரவு செய்துவிட்டேன். இதோ அருகில் இருப்பவள் என் மகள், பெயர் காந்தாமணி. இவளுக்குச் சங்கீதத்தில் அளவுக்கு மீறிய ஆசை. அதிலும் உங்கள் பாட்டு என்றால் ஒரே பைத்தியம்."

ஆமாம், "இந்தப் பெண்ணை நான் எங்கோ பார்த்த ஞாபகமாக இருக்கிறதே!" என்று பாகவதர் கூறும்போதே,

''எங்கோ என்ன? உங்கள் கச்சேரி தஞ்சாவூர் வட்டாரத்தில் எங்கே நடந்தாலும் கேட்கத் தவற மாட்டாள். ஒரு சபா பாக்கி இராது. அழைப்பில்லாத கல்யாண கச்சேரியாக இருந்தால் கூட வெட்கப்படாமல் போய் விடுவாள். கண்ணை மூடிக்கொண்டாலன்றி இவளை நீங்கள் கச்சேரியில் எப்படிப் பார்க்காமல் இருக்க முடியும்'' என்று கங்காபாய் கூறிக் கொண்டிருக்கும் போதே எல்லாருக்கும் சிரிப்பு வந்துவிட்டது.

லட்சுமியம்மாள் அடுக்களை உள்ளேயிருந்து 'ஹரி' என்று கூப்பிட்டாள், குருவுக்குப் பின்னால் நாற்காலியைப் பிடித்துக் கொண்டு நின்றிருந்த ஹரி, உள்ளே சென்று மூன்று தம்ளர் காபியுடன் வந்தான்.

முறையே அதைக் கங்காபாயிடமும், காந்தாமணியிடமும் வைத்து விட்டு மற்றொன்றை சுசீலாவின் எதிரில் வைத்தான்.

''நாங்கள் இப்போது வரும்போது தானே சாப்பிட்டு விட்டு வந்தோம்? அதற்குள் காபியா?'' என்று கங்காபாய் கூறிய போதே, ''அம்மா, எதிர்த்துப் பேசாமல் எடுத்துக் குடியம்மா'' என்று ஏதோ கோயில் பிரசாதத்தை மறுப்பது போல் தாயை கண்டித்த காந்தாமணி சட்டென்று எழுந்து பாகவதரை நோக்கி, ''ஆமாம் உங்களுக்கு...?'' என்று பணிவோடு கேட்டாள். அப்போது அவளது பார்வை ஹரியின் பக்கம் சென்று மீண்டதைச் சுசீலாதான் கவனித்தாள்.

''நான் ஒரு நாளைக்கு இரண்டு தடவைக்கு மேல் காபி குடிப்பதில்லை, நினைத்த போதெல்லாம் நிறையக் குடித்துக் கொண்டிருந்தவன்தான். இப்போது அதற்கு மேல் சாப்பிட்டால் உடம்புக்கு ஒத்துக் கொள்வதில்லை'' என்று பாகவதர் காந்தாமணிக்குச் சமாதானம் சொன்ன போது சுசீலா ஹரியைக் கூப்பிட்டாள்.

"ஹரி, இந்தக் காபியை நீயே குடி; இல்லையென்றால் உள்ளே கொண்டு போய்க் கொடு. என்னைக் கேட்காமல் உன்னை யார் கொண்டு வரச் சொன்னது?" என்று சுசீலா அந்த வீட்டில் தனக்குள்ள உரிமையை நிலை நாட்டுவதே போல் கடிந்து கொண்டாள்.

உடனே பாகவதர் சிரித்துக் கொண்டே, "சும்மா சாப்பிடு சுசீலா; கூடத் துணையில்லாவிட்டால் புதிதாக வந்திருப்பவர்களுக்குச் சங்கோசமாக இருக்காதா என்றுதான் ஹரி உனக்கும் சேர்த்துக் கொண்டு வந்திருக்கிறான். இது தெரியாமல் அவனைக் கோபிக்கிறாயே!" என்று மகளை அடக்கினார்.

அதற்குள் காந்தாமணி, "ஆமாம், எங்களுக்கும் துணை வேண்டாமா?" என்று சிபாரிசு செய்தாள். சுசீலாவுக்கு அந்த வார்த்தை நாராசமாக இருந்தது. அத்துடன், கடைந்தெடுத்த தங்க விக்கிரகம் போன்ற அவள் அழகையும், வைரமும் தங்கமுமாக அவள் வாரிச் சொரிந்து கொண்டு தன் இயற்கையழகைப் பன்மடங்காகப் பிரகாசிக்கச் செய்வதையும் பார்க்க சுசீலாவுக்குப் பற்றிக் கொண்டு வந்தது.

'இவர்கள் எதற்காக இங்கே அப்பாவைத் தேடிக் வந்திருக்கிறார்கள்? கச்சேரி சொல்லவா? அப்படியானால் வந்த காரியத்தை சட்டுப்புட்டென்று முடித்துக் கொண்டு போக வேண்டியதுதானே? கச்சேரி சொல்லவானால் அம்மாவே வந்தால் போதாதா? இந்த அழகியையும் இழுத்துக் கொண்டு வர வேண்டுமா?' என்றெல்லாம் சுசீலாவின் மனம் குமுறியது.

சுசீலாவின் உள்ளக் குமுறலை தணிக்கவோ; தூண்டவோ கங்காபாய் சட்டென்று விஷயத்துக்கு வந்தாள். "இவளுக்கு உங்களுடைய சங்கீதத்தில் அளவுக்கு மீறிய பைத்தியம் என்று முன்னமேயே

சொன்னேன். இப்போது இவளை உங்களிடம் ஒப்படைத்து விட்டுப் போகலாம் என்றுதான் வந்திருக்கிறேன். அதற்கு உங்களுடைய ஆதரவான பதிலைத் தாருங்கள்'' என்று கூறி நிறுத்தினாள்.

ஆனால், பாகவதர் உடனே, ''நான் உங்களுக்கு என்ன உதவி வேண்டுமானாலும் செய்யக் காத்திருக்கிறேன். ஆனால் இனிமேல் சிட்சைக்கு மாத்திரம் யாரையும் ஏற்றுக் கொள்ளுவதாக உத்தேசம் இல்லை'' என்று கூறி விட்டார். இதைக் கேட்டதும் அந்த அம்மாளுக்குக் கையிலெடுத்த காபி நடுங்க ஆரம்பித்து விட்டது. அவள் முகம் சுண்டிப்போய் வேதனையே உருவாகக் காட்சி யளித்தது.

''என்ன, நீங்கள் இப்படிச் சொன்னால் எப்படி? நாங்கள் எவ்வளவு ஆசையோடு உங்களைப் பார்க்க வந்திருக்கிறோம்! பெரியவரான நீங்கள் எப்படியாவது அவளுக்குப் பாட்டுச் சொல்லிக் கொடுத்து முன்னுக்குக் கொண்டுவர வேண்டும். ஆரம்பப் பாடங்களைச் சொல்லக் கொடுக்கிற கஷ்டங்களை உங்களுக்கு நான் வைக்கவில்லை. வர்ணம் வரை நான் சொல்லிக் கொடுத்திருக்கிறேன். மேற் கொண்டு முறையோடு உங்களிடம் நல்ல சங்கீதம் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்துடன் வந்திருக்கிறோம். நீங்கள் இருக்கிற இடத்துக்கே இவளை அனுப்பி வைக் கிறேன். வாரத்துக்கு இரண்டு நாள் சொல்லிக்கொடுத்தால் போதும்; இவள் பிடித்துக் கொள்வாள். எப்படியாவது மனசு பண்ணியாக வேண்டும்'' என்று வேண்டிக் கொண் டாள்.

பாகவதரும் அதற்கு மிகவும் இதமாகவே பதில் கூறினார்; ''நீங்கள் சொல்லுவதெல்லாம் சரிதான். எனக் கும் உங்கள் ஆசையைத் தீர்க்கவேண்டாம் என்கிற எண்ண மில்லை. ஆனாலும் வயதாகிவிட்டது. உடம்பில் திராணி யில்லை என்னும் போது; என்னால் ஆகாததை

உண்மையைச் சொல்லித்தானே ஆகவேண்டும்? இதோ நிற்கிறானே; இவன்தான் இப்போது என்னிடம் கடைசியாக வந்துள்ள சிஷ்யன். அப்படியும் இப்படியுமாகப் பல்லைக் கடித்துக்கொண்டு எப்படியோ எனக்குத் தெரிந்ததையெல்லாம் சொல்லி வைத்திருக்கிறேன். இன்னும் கொஞ்சம் மேருகேற்றி உருப்படியாக இவனை வெளியேற்றி விட்டாலே எனக்கு முழுப்பாரமும் தலையிலிருந்து இறங்கியதுபோல. அதற்குள் இன்னொரு மூட்டையையும் தூக்கி வைத்துக்கொள்ளச் சொல்கிறீர்களே; நியாயமா? நீங்களே சொல்லுங்கள்'' என்று கங்காபாயைப் பார்த்துக் கேட்டார்.

ஆனால் கங்காபாய் வாயே திறக்கவில்லை. காந்தாமணியின் முகத்தில் ஏமாற்றம் ஏகபோகமாக ஆட்சி செய்தது. அவள் குனிந்த தலை நிமிரவேயில்லை.

என்ன, ஒன்றும் பேசமாட்டேன் என்கிறீர்களே! என்னடா இப்படி முகத்தில் அடித்தது போல் மறுத்து விட்டேனே என்று கோபமாக இருக்கிறதா?'' பாகவதர் கேட்டார்.

உடனே அந்த அம்மாள், முகத்தில் பலவந்தமாகப் புன்னகையை வரவழைத்துக் கொண்டவாறு, ''கோபமா? அதுவும் உங்களிடமா? ஆனால் நாங்கள் வரும்போது வழியெல்லாம் எவ்வளவோ எண்ணிக்கொண்டேவந்தோம். நீங்கள் எங்கள் திட்டங்களையெல்லாம் ஒரேயடியாகத் தகர்த்துவிட்டீர்கள். இது எங்களுக்குப் பெரிய அதிர்ச்சிதான். ஆனாலும் உங்களிடம் ஒன்று கேட்கிறேன். தடை இல்லையென்றால் சொல்கிறேன். உங்களுடைய இந்தச் சிஷ்யரைக் கொண்டே சொல்லிக் கொடுக்கச் செய்து; நீங்கள் மேற்பார்வை பார்த்தால்கூடப் போதும். பிறகு உங்கள் இஷ்டம்'' என்று கூறினாள்.

''ஹரிக்கு இன்னும் சொல்லிக் கொடுக்கிற அளவுக்குப் போதாது. கொஞ்ச நாள் போகட்டும், பார்க்கலாமே'' என்று கூறி அனுப்பிவிட்டார்.

காந்தாமணியும் அவள் தாயும் அழமாட்டாக் குறையாகப் புறப்பட்டுச் சென்றார்கள். சுசீலாவுக்குப் பெரு மகிழ்ச்சியாக இருந்தது. 'அவளுக்குப் பாட்டுச் சொல்லிக் கொடுக்க ஹரியையாவது ஏற்பாடு செய்யுங்கள்' என்று காங்காபாய் கேட்டதற்கு அப்பா 'சரி' என்று சொல்லி விடுவாரோ என்று அவள் கவலைப்பட்டாள். ஏனோ தெரியவில்லை, சுசீலாவுக்குக் காந்தா மணியைக் கண்டதுமே பொறாமை. இப்போது காந்தாமணி ஏமாற்றமடைந்து சென்றதில் அவளுக்கு அளவற்ற மகிழ்ச்சி.

லட்சுமியம்மாளுக்கும் காயத்திரிக்கும் இந்த விஷயத்தில் பாகவதரிடம் சிறிது வருத்தந்தான். 'இவ்வளவு ஆசையோடு வீடு தேடி வித்தையை யாசிக்கிறவர்களுக்கு நிர்த்தாட்சிண்யமாக இல்லை என்று எதற்காகச் சொல்ல வேண்டும்? பணம் காசை லட்சியமில்லாமல் கொட்டிக் கொடுக்கிறவர்களுக்கு இல்லாமல் பின் யாருக்குத்தான் இந்த வித்தை? சாப்பாட்டுக்கு இல்லாதவனா கச்சேரிக்குக் கூப்பிட்டுக் காசும் பணமும் அள்ளிக்கொடுக்க போகிறான்? என்ன இருந்தாலும் இவ்வளவு நல்ல மனிதர்களை உதறித் தள்ளியிருக்க வேண்டாம்' என்றே லட்சுமியம்மாளுக்குத் தோன்றியது. ஆனால் அதைக் கணவரிடம் கூறத் தைரியமுமில்லை; விருப்பமுமில்லை.

பாகவதற்கு மட்டும் திருப்தி, ஹரியை பெரிய கண்டத்திலிருந்து மீட்டுவிட்டோம் என்பதுதான் அது.

அவனைப் பிறகு தனியாகக் கூப்பிட்டுக் கேட்டார்; ''உன்னை அவர்கள் பாட்டுச் சொல்லிக் கொடுக்கக் கூப்பிட்டார்கள். ஏராளமாகப் பணமும் காசும் கிடைக்கும். ஆனால் உன்னை நான் அனுப்ப இஷ்டப்படவில்லை.

உன்னைக் கேட்காமலே ஏதோ காரணம் கூறி மறுத்து விட்டேன். அவர்களுக்குச் சொல்லிக் கொடுத்தால் நல்லது என்று உனக்குத் தோன்றுகிறதா? நீ என்ன நினைக்கிறாய்?''

''நான், எனக்கென்று எதையும் நினைத்துப் பார்ப்பதில்லை. என்னையே நான் உங்களிடம் முழுக்க முழுக்க ஒப்படைத்துவிட்ட பின்; எனக்கென்று நினைக்கவோ மறுக்கவோ சொந்தமாக என்ன இருக்கிறது? நீங்கள் என்ன எண்ணுகிறீர்களோ; எதை விரும்புகிறீர்களோ அதையே என் ஆயுள் உள்ளவரை செயலாக்கிக் கொண்டிருப்பேன். உங்கள் இதயத்தில் இடம் பெற்ற அன்றே உங்கள் குடும்பத்தில் ஒருவனாகிவிட்டேன். நீங்கள் என்னைப் பிரித்து அபிப்பிராயம் கேட்பதை எண்ணி என் மனம் வேதனையடைகிறது'' என்றான் ஹரி.

''ஹரி, உன்னை நான் பிரித்துப் பேசவில்லை. உன்னை இனி என்னிடமிருந்து பிரிக்க யாராலும் முடியாது. ஆயினும் என் மனதில் தோன்றிய சந்தேகத்தைக் கேட்டேன்; அவ்வளவுதான். பெண்களுக்குச் சங்கீதம் சொல்லிக் கொடுக்க இஷ்டப்படாதவன் நான். அவர்களுக்குச் செலவிடும் நேரம் வீண் விரயம் என்பது என் கருத்து. திருமணமாகிற வரை தங்கள் பெண்ணுக்குச் சங்கீதமும் கொஞ்சம் தெரிந்திருக்கட்டுமே என்று வருகிறவர்களுக்கு ஆசானாக விளங்க நான் தயாராயில்லை. சங்கீதத்தை அவ்வளவு மலிவாக்கி விலை பேசவும் நான் விடுவதில்லை. எனக்கென்று ஒரு கொள்கை வைத்துக்கொள்ள எனக்கு உரிமை உண்டு; இல்லையா? அந்த உரிமையை நான் உன் தலையிலும் சுமத்தி என் கொள்கைகளை உன்கையில் ஒப்படைத்து விட்டேன். அதைக் காப்பாற்ற வேண்டியது உன் இஷ்டம்'' என்று கூறி முடித்தார்.

குருநாதர் கூறியதைப் பதிலே பேசாமல் ஹரி கேட்டான். பாகவதரே மீண்டும், ''உன்னோடு இன்று மத்தி

யானத்துக்கு மேல் திருவிடைமருதூருக்குப் போகலாமென்று இருக்கிறேன். சுந்தரி உன்னைப் பார்க்க வேண்டும் என்றாள். நீ அங்கே வந்து ரொம்ப நாளாகிறதே! இன்று சாப்பாட்டுக்கு மேல் இரண்டு பேருமாகப் போய் வருவோம்'' என்று சொன்னார்.

பாகவதர் வெளியே போனதும் சுசீலா ஹரியை வம்புக்கு இழுத்தாள். ''அம்மா, இனிமேல் ஹரிக்குத் திருவிடைமருதூர் வேலைதான் சரியாக இருக்கும். அங்கேயும் புருஷத்துணை வேண்டாமா? ஏன் ஒரு வழியாக அவனை அங்கேயே வேலைக்கு அமர்த்திவிட்டால் என்ன?'' என்று கேலியும் கிண்டலுமாகப் பேசியபோதே லட்சுமியம்மாள் பெண்ணைக் கண்டித்தாள்.

''வர வர உனக்கு நாக்குத் துளிர்த்துவிட்டது. கொஞ்சங் கூட மட்டுமரியாதை இல்லாமல் பேசுகிறாய். அப்பா காதிலே விழுந்தால் உன் தோலை உரித்துவிடுவார். பேசாமல் உள்ளே வந்து காரியத்தைப் பார்; இல்லாவிட்டால் கதைப் புத்தகத்தை எடுத்துக் கொண்டு மாடியைப் பார்க்கப் போய்ச் சேர்'' என்றாள்.

சுசீலாவுக்கும் இப்போதுதான் அது எத்தனை பெரிய விஷயம் என்று புலனாகி உடம்பில் உறைத்தது. அயினும் அவள் அதை ஒப்புக்கொள்ளத் தயாராயில்லை. ''இப்போது நான் என்ன அம்மா சொல்லி விட்டேன்; பெரிதாகப் பயமுறுத்துகிறாய்?'' என்று பதிலுக்கு இரைந்தாள்.

''அம்மா ஒன்றும் பயமுறுத்தவில்லை. இந்த வீட்டிலே நீதான் எல்லாரையும் மிரட்டிக் கொண்டிருக்கிறாய். திருவிடைமருதூர்ச் சித்தியைப் பற்றியும்; வசந்தியைப் பற்றியும் பேச்சே எடுக்கக்கூடாது என்று அப்பா உனக்கு எத்தனை தடவை சொல்லியிருப்பார்? இதற்காக எவ்வளவு திட்டும் வசவும் வாங்கியிருப்பாய்?'' என்று காயத்திரி கூறி முடிப்பதற்குள் சுசீலா அக்காவிடம் சீறிப் பாய்ந்தாள்.

''ஆமாம், பெரிய சித்தி! உனக்கு இதையெல்லாம் எண்ணிக் குறித்துக் கொண்டிருப்பதுதானே வேலை? ஹரியைப் பற்றி நான் ஏதாவது பேச வாயைத் திறந்தால், ஈசல் மாதிரி எல்லாரும் வந்து விடுகிறீர்கள் சண்டைக்கு. யார் எக்கேடு கெட்டுப்போனால் எனக்கென்ன? போய்க் குஷியாக வசந்தியைப் பார்த்துக்கொண்டே இருக்கட்டும்'' என்று கூறிய சுசீலா அங்கே ஒரு நிமிஷங்கூட நிற்காமல் மாடியை நோக்கிச் சென்று விட்டாள். அப்போது, ''என்ன இங்கே இரைச்சல்?'' என்று கேட்டுக் கொண்டே உள்ளே நுழைந்த பாகவதர் ஹரியைக் கூப்பிட்டு, ''இன்று திருவிடைமருதூர் புரோகிராம் கான்சல்'' என்று கூறிக்கொண்டே சாய்வு நாற்காலியில் சாய்ந்தார்.

## 13. நிதி சால ஸுகமா?

ஆங்கில ஆட்சியில் அடிமைப்பட்டுக் கிடந்த இந்தியக் கிராமங்களில் சுவாமிமலை என்னும் சிற்றூரும் ஒன்று. குன்றுதோறாடும் குமரன், குருநாதனாக வந்து குடிகொண்டிருக்கும் ஆறுபடை வீடுகளில் இந்தப் புண்ணியஸ்தலமும் ஒன்று.

காவிரி ஆற்றின் செழுமையை மூலதனமாகக் கொண்டு இருமருங்கிலும் செழித்து வளர்ந்த தென்னஞ் சோலைகள்; கண்ணைக் கவரும் இயற்கை அழகோடு கொஞ்சிக்கொண்டிருக்கும் பூஞ்சோலைகள்; பச்சைப் பசேல் என்று—மரகதப் பாய் விரித்தது போன்ற வயல் வெளிகள் — அவற்றில் அறுவடைக்குத் தயாராகித் தலை சாய்த்து நிற்கும் நெல் மணிகள். அந்தப் பொற்கதிர்களைத் தடவிக்கொண்டே அலை அலையாய்த் தவழ்ந்து செல்லும் இனிய தென்றல் காற்று-

ஆற்றங்கரைத் தெருவை ஒட்டி மக்கள் குளிப்பதற்காக மன்னர்களால் கட்டப்பட்ட கல், படித்துறை. அதன் கரையோரச் சுவர்களில் எவ்வித ஆபாசக் கிறுக்கல்களும் இல்லாமல்; வெள்ளையும் காவியும் கால வெள்ளத்தில் கரைந்து கொண்டிருந்தது.

கரையில் அடர்ந்து கிளை பரப்பி நிற்கும் வயோதிக ஆலமரம். அதன் அருகே யாரோ இணையாக நட்டிருந்த வேப்ப மரமும் செழித்து வளர்ந்திருந்தது. அரச மரத்தைச் சுற்றிலும், கல்லிலே வடித்து நிறுத்தப்பட்டிருக்கும் நாகராஜாக்கள்.

சற்று தூரத்தில் உயரமாக அழகானதொரு நாலுகால் மண்டபம். வழிப்போக்கர்கள் வந்து தங்கி இளைப்பாறிச் செல்லுவார்கள். பல சமயங்களில் அங்கே கிராமத்து ஆடுகள்தான் தங்களின் பலதரப்பட்ட வண்ணக் குட்டிகளுடன் குஷியாகக் குதித்து விளையாடிக் கொண்டும்; இளைப்பாறிக் கொண்டுமிருக்கும்.

வீட்டை விட்டு வெளியேறிய காலத்தில் ஹரி எங்கு சுற்றியும் இந்த மண்டபத்தைதான் தனது புகலிடமாகக் கொண்டிருந்தான். அவன் பாடினாலும், படுத்தாலும், பட்டினி கிடந்தாலும், யாரும் எதிர்ப்புத் தெரிவிக்காத இந்த சுதந்திரம் அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது. ஒரு நாள் பாகவதர் இந்த மண்டபத்திற்கு வந்துதான் அவனை ஆட் கொண்டார்.

ஊருக்கு நடுநாயகமாய், சிறிய மலையுச்சியில் விளங்கிக் கொண்டிருந்தது சுவாமி நமதஸ்வாமி ஆலயம். ஆலயத்தைச் சுற்றி உருவான மாட வீதிகள், சிறிய அக்கிரகாரங்கள்; ஆற்றங்கரைத் தெருக்கள், சன்னிதித் தெரு, ஊருக்குள் ஊடுருவி, அங்கொன்றும், இங்கொன்று மாய்ப் பற்பல தொழில் புரிவோர் வசிக்கும் தெருக்கள்; பல பிரிவு மக்கள்.

"சாதிகள் இல்லையடி பாப்பா! - குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்!"

என்று முழங்கிய பாரதியின் வேத வாக்கையோ—

"ஆயிரம் உண்டிங்கு ஜாதி - எனில்
அன்னியர் வந்து புகல் என்ன நீதி? - ஓர்
தாயின் வயிற்றில் பிறந்தோர் - தம்முள்
சண்டை செய்தாலும் சோதரர் அன்றோ?"

என்று கேட்ட பாரதியின் அறிவுரையையோ ஏற்றுக் கொள்ளும் பக்குவமுமின்றி — அறிவு அடிமைப் பட்டுக் கிடந்த இந்திய மக்கள்—

''வண்ணங்கள் வேற்றுமைப்பட்டால் - அதில்
மானுடர் வேற்றுமையில்லை,''

என்று உணராத-அல்லது உணரமறுக்கும் வெள்ளையருக்கு அடிமைப்பட்டு, வெட்கமின்றி வெண்சாமரம் வீசிக் கொண்டிருந்த காலம்.

''ஒன்றே குலம்; ஒருவனே தேவன்''

என்கிற தத்துவமோ—

''எல்லோரும் ஓர் இனம் - இங்கு
எல்லோரும் ஓர் நிறை,'' என்கிற
ஒருமைப்பாட்டு உணர்வோ - ஒரு சிறிதுமில்லாது—

ஆத்திகத்தையும்; சனாதனதர்மங்களையும்; இந்து மதக் கோட்பாடுகளையும் சரிவரப் புரிந்து கொள்ள முனையாமல் - தங்களுக்குள் ஜாதிமத பேதங்களினால் மனம் பேதலிக்கப்பட்டு; அவற்றில் ஆழ்ந்த பற்றும், நம்பிக்கையும்- ஆவேசமான ஈடுபாடும் கொண்டவர்களால் சிலர் ஒதுக்கப்பட்டும்; சிலர் மறைமுகமாக நிராகரிக்கப் பட்டும்; பலர் பகிரங்கமாகவே அவமானத்திற்கும், கண் டனங்களுக்கும் இலக்காகி - அக்கிரகாரத்துக் கிணறு முதல்; பொதுக் குளம் வரை - மனிதனுக்கு மனிதன் உள்ள சம உரிமைகள் கூட மறுக்கப்பட்டு--

அனைவருக்கும் பொதுவான ஆண்டவனை ஆலயத்தில் சென்று தரிசிக்கக் கூட அக்கினிப் பிரவேசம் அவசியமாகி விட்ட அந்த கால கட்டத்தில்—

சுப்பராம பாகவதர் அந்த ஊரிலேயே வித்தியாச மானவராக; மாறுபட்டவராக விளங்கினார்.

மகாத்மா காந்தியிடம் அளவற்ற பக்தியும், ஈடுபாடும்; அவரது கொள்கைகளிலும் லக்ஷியங்களிலும் அசைக்க முடியாத நம்பிக்கையும் கொண்டிருந்த லக்ஷக்கணக்கான தீவிர காந்திய வாதிகளில் பாகவதரும் ஒருவராக - ஆனால் குறிப்பிடத் தக்கவராகத் திகழ்ந்தார்.

கதரைத் தவிர வேறு உடை உடுத்த மாட்டார். தம்பூரா கையில் இல்லாத நேரங்களில், அவரது கரங்களில் தக்கிளியோ - சர்க்காவோ சுழன்று கொண்டிருக்கும்.

பாகவதர் ஒரு கொள்கை வைத்திருந்ததார். தன்னுடைய கச்சேரி எங்கு நடந்தாலும், இறுதியில் இரண்டு தேசியப் பாடல்கள் பாடாமல், மங்களம் பாட மாட்டார். இதனாலேயே சில பிரமுகர்கள், பெரிய அரசு உத்தியோகஸ்தர்கள் போன்றவர்கள், பிரிட்டிஷ் ஆட்சிக்கு அஞ்சி, தங்கள் வீட்டுத் திருமணம் போன்ற விசேஷங்களுக்கு பாகவதரை அழைக்கப் பயப்படுவார்கள். ஆயினும் பாகவதர் இதையெல்லாம் பொருட்படுத்தமாட்டார். அவருக்கு யாரைப் பற்றியும், எதைப் பற்றியும் கவலை இல்லை.

"தைரியமிருந்தால் மேடையிலேயே எனக்கு விலங்கிட்டு அழைத்துப் போகட்டும். ஜெயிலில் இருக்கிறவர்களுக்காக, யார் அங்கே போய்க் கச்சேரி செய்யப் போகிறார்கள்? ஆனந்தமாய் அவர்களுக்காக நான் போய் பாடுகிறேன்" என்பார். ஈடு இணையற்ற இசையினாலும், இம்மாதிரியான காரியங்களினாலும் பாகவதர் உள்ளூரிலும், வெளியூர்களிலும் ஏராளமானவர்களின் உள்ளத்தைக் கவர்ந்திருந்தாலும், திடீரென்று மீண்டும் அவர் செய்த ஒரு புரட்சியைக் கண்டு ஊரே ஒன்று கூடிப் பேசியது.

எங்கோ பிறந்த - ஊர் பேர் தெரியாத வேற்று ஜாதிப் பையனை அழைத்து வந்து வீட்டோடு சரி சமானமாக வைத்துக் கொண்டு; அவனுக்கு வித்தையும் சொல்லிக் கொடுக்க அவர் முனைந்த போது - ஊர் முழுதும் கூடிப் கூடிப் பேசினாலும்; பாகவதரின் முகத்துக்கு நேரே நின்று இதைப் பற்றிக் கேட்க யாருக்கும் துணிவு இல்லை.

ஏனெனில் - இது போன்ற ஒரு செயலுக்காக முன்பு ஒரு சமயம் பாகவதரிடம் எதிர்ப்புக் கொடி காட்டித் தோற்றுப் போனவர்கள் அவர்கள்.

மற்றவர் வர்ணிப்பது போல் - உயர் அந்தண வகுப்பில் பிறந்த பாகவதர்; சிஷ்யையாயிருந்த வேற்று ஜாதிப் பெண் சுந்தரியை அவர் இரண்டாந்தாரமாக மணந்து கொண்டு வீட்டுக்கு வந்தபோது—

ஊரே திரண்டு, அவர் வீட்டு வாசல் முன் கூடி நின்றது. ஆனால் பாகவதர் அசையவில்லை. கையிலெடுத்த தம்பூராவைக் கீழே வைக்காமல் விரல்கள் மீட்டிக் கொண்டிருந்தன. கண்ணை மூடிக் கொண்டு, நாட் கணக்காய், இரவு பகல் அன்ன ஆகாரமின்றி இசை மழையாய் இதயத்தினுள் பொழிந்து கொண்டிருந்தார்.

''இன்னும் இப்படியே ஒருநாள் நீடித்தால் ரத்தம் கக்கி பாகவதர் இறந்து விடுவார்''- என்று அவரைப் பரிசோதித்த உள்ளூர் டாக்டர், வெளியே நின்று கொண்டிருந்த கூட்டத்தினரிடம் எச்சரித்துச் சென்று விட்டார்.

லக்ஷ்மியும், சுந்தரியும், 'கோ'வென்று கதறி அழுது கொண்டிருந்தனர். பாகவதர் மட்டுமா பட்டினி? வீடு முழுதுமே நாலு நாள் பட்டினியாயிற்றே!

இதற்கு மேலும் இந்தக் கொடிய காட்சியைப் பார்த்துச் சகித்துக் கொண்டிருக்க உள்ளூர் வாசிகளால் இயலவில்லை. எத்தனைதான் ஜாதிப் பித்துக் கொண்டவர்களாயிருந்தாலும்; எதற்கும் உருகாத கல் நெஞ்சுக்காரர்கள் அல்லவே அவர்கள்!

வாசலிலே கூடியிருந்தவர்கள் கூட்டமாகச் சென்று பாகவதர் கால்களில் விழுந்து வேண்டி - உண்ணாவிரதம் முடிவுக்கு வந்தது.

பாகவதரிடமும், அவரது ஒப்பற்ற இசை மீதும் மட்டற்ற மதிப்பும், மரியாதையும் கொண்டுள்ளவர்கள் அவர்கள். நாள் தவறாமல் எத்தனையோ பெரிய மனிதர்கள் காரைப் போட்டுக் கொண்டு அவரைத் தேடித்

தினம் சுவாமி மலைக்கு வருகிறார்கள். அவரால் - அவரது இசையின் சிறப்பால் - அந்த சிற்றூருக்கே எவ்வளவு பெருமை?

சுப்பராம பாகவதரைப் பொறுத்த வரையில்; இசையே அவருக்கு - இறைவன்; அதை ஆராதிக்கிறவர்கள் யாரா யிருந்தாலும் - அவர்கள் எந்தப் பிரிவைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அனைவரும் இறைவனின் இசை வடிவங்களே! அவருடைய ஜாதி சங்கீத ஜாதி!

இப்படியொரு கொள்கையையும் அதில் தீவிரப் பிடிப்பும் உடைய பாகவதரிடம் மீண்டும் ஒரு முறை ஹரிக்காக - யாரோ ஊர் பேர் தெரியாத அந்தப் பையனை வீட்டோடு சேர்த்து கொண்டதற்காக எதிர்ப்புத் தெரிவிக்க - ஊர்க் காரர்கள் விரும்பவில்லை.

ஏனெனில்—

முன்பு, சுந்தரி சம்பந்தப்பட்ட விஷயத்தின் போது பாகவதர் யாரென்பது ஊர் மக்களுக்குப் புரிய வாய்ப் பில்லை; எதிர்த்தார்கள் இப்போது—

ஹரி விஷயத்தின் போது அவர்கள் பாகவதரைப் புரிந்து கொண்டு மௌனமாகி விட்டார்கள்.

சுவாமி மலையில் நாகரிகம் அடியெடுத்து வைக்கத் துவங்கியிருந்த காலம். மின்சார விளக்கிலும் - ரயில் வண்டியிலும் ஊமைப் படங்களிலும் இருந்த பிரமிப்பு நீங்கி- வெள்ளித் திரையில் தமிழ் பேசும், பாடும் படங்கள் வந்த போது, மக்கள் பிரமித்துப் போனார்கள்.

அளவோடு-ஆனால் செழுமையோடு கூடிய ஜனத் தொகை கொண்ட அந்தச் சிறிய கிராமத்திற்கு ஆறு மாதத்திற்கு ஒரு முறை - டூரிங் டாக்கீஸ் என்கிற பெயரில் பெரிய படுதாக்களைத் தூக்கி நிறுத்தி அடித்திருக்கும்

டெண்ட் கூடாரத்தில், புதிசு புதிசாக தமிழ் டாக்கி படங்கள் வந்து போய்க் கொண்டிருந்தன.

ஆறு மாதத்திற்கு ஒருமுறை - தன்னுடைய பெயரை மட்டும் மாற்றிக் கொண்டு டூரிங் டாக்கீஸ் ஸ்திரமாகவே இருந்து கொண்டிருக்கும்.

ஆற்றங்கரையை ஒட்டினாற் போலுள்ள பொட்டல் வெளியில் அந்த டூரிங் டாக்கீஸ் இருந்தது. ஐந்து மணிக்கெல்லாம் ஜெனரேட்டர் ஓடத்துவங்கி ரிகார்டு போடத் துவங்கி விடுவார்கள்-கிராமத்து மக்கள் மின்சார விளக்குகளை டூரிங் டாக்கீசில்தான் கண்டு களிக்க முடியும். ஊரின் உள்ளே-காவிரிக் கரைத் தெருக்களிலும், அக்கிரகாரத்து வீதிகளிலும், இருபது அடி இடைவெளியில் நிறுத்தப்பட்டிருக்கும் கல்தூண்களின் தலையில் பொருத்தப்பட்டிருக்கும் சீமை எண்ணெ விளக்கு ஒளியிலும்; வீட்டுப் பெண்கள் இல்லந்தோறும் மாடப் புரைகளில் ஏற்றி வைத்திருக்கும் நல்லெண்ணெ அகல் விளக்கொளியிலும் தெருக்கள் தூங்கி வழிந்து கொண்டிருக்கும்.

சரியாகப் பகல் பதினோரு மணிக்கெல்லாம், அன்று இரவு வெள்ளித் திரையில் மின்னப் போகும் டாக்கியின் பெயர்ப் பலகைகளை மாட்டு வண்டியின் இருமருங்கிலும் கட்டிக் கொண்டு, பிரபல சினிமா நட்சத்திரங்கள் பாடிய பாப்புலரான பாடல்களை பாண்டு வாத்தியத்தில் வண்டியினுள் ளிருந்தபடி உரக்க முழங்கிக் கொண்டும் சினிமா வண்டி ஊர் முழுதும் பவனி வரும். அந்போது—

அன்றைப் படத்தின், நடிகநடிகையர் புகழ்ப்பட்டியலுடன் நீண்ட கதைச் சுருக்கத்தையும் தாங்கி, ஒரு சுவாரஸ்யமான கட்டத்தில், 'மீதியை வெள்ளித்திரையில் கண்டு களியுங்கள்' என்று முடியும் சஸ்பென்சுடன் கலர் கலராக பல வண்ணங்களில் இருபுறமும் அச்சடிக்கப்பட்ட நீண்ட நோட்டீசுகளை

வினியோகித்துக் கொண்டும்; சில சமயங்களில் சினிமா வண்டியிலிருந்து, கூண்டுக்கு வெளியே ஆகாசத்தை நோக்கி கத்தை கத்தையாக வீசி எறியவும் செய்வார்கள்.

காற்றில் கலைந்து, பல வண்ணங்களில் சிதறிப் பறக்கும் நோட்டீசுகளை கிராமத்து விடலைப் பையன்களும்; சமயத்தில் பெரியவர்களும் கூட குஷியும் கும்மாளமுமாய், எம்பிக் குதித்து, பறக்கும் நோட்டீசைத் தாவிப் பிடிப்பார்கள்.

பாண்டு வாத்தியமும், சினிமா வண்டியின் பின்னே தொடர்ந்து செல்லும் சிறுவர்களின் கூச்சலும், சந்தோஷ ஆரவாரமும் தெருவைக் கலக்கிக் கொண்டிருக்கும்.

குழந்தைகள் மட்டும்தான் இப்படி என்றில்லை; பாண்டுமுழக்கத்தோடு சினிமாவண்டி தங்கள் தெருவிற்குள் நுழைந்தால்- கிராமத்து மக்கள் அனைவரும் ஒருவித ஆவலுடன் தங்கள் தங்கள் வீட்டு வாசல் தூண்களைப் பிடித்துக் கொண்டு நின்று கவனிக்கத் தவற மாட்டார்கள்.

நோட்டீசை வாங்கி, வரி விடாமல் படித்து முடிக்கும் போது— ஆச்சர்யத்தால் அவர்களது விழிகள் அகன்று விரியும்.

சினிமா வண்டி பாகவதர் வீட்டை அடையும் போது வேறு யார் வராவிட்டாலும்; சுசீலா தவறாமல் வாசலுக்கு ஓடி வந்து விடுவாள்.

ஹரி ஊரில் இருந்தால்- அவன்தான் ஓடிப் போய் நோட்டீஸ் வாங்கிக் கொண்டு கொடுத்தாக வேண்டும். அப்பாவோடு வெளியூர் போயிருந்தால், தெருப் பையன் களிடம் கெஞ்சிக் கேட்டோ- இல்லை நேரே வண்டிக்கே போயோ தவறாமல் சுசீலா நோட்டீசை வாங்கி கதைச் சுருக்கத்தைப் படித்து முடித்து விட்டுத்தான் மூச்சு விடுவாள். அதில் அவளுக்குப் பிடிக்காத விஷயம்- 'மீதியை

வெள்ளித் திரையில் காண்க— அல்லது கண்டு களியுங்கள்', என்கிற வரிகள் தாம்.

'அதையும் எழுதி விட்டால் என்ன? குடியா முழுகிப் போய் விடும்? முடிவு தெரிந்து விட்டால் சினிமாவிறகு வர மாட்டார்கள் என்கிற பயம் போலிருக்கிறது'- என்று எரிச்சலோடு முணு முணுத்தபடி உள்ளே போவாள்.

ஊரில் இருக்கும் போது, நல்ல படமென்றால்— அதுவும் மறுநாள் வெளியூரில் கச்சேரிகள் ஏதுமில்லாதிருந்தால்- பாகவதர் குடும்பத்தோடு சினிமாவிற்குப் போவார்.

பாகவதர் குடும்பத்தினர் சினிமாப் பார்க்க வருகிறார்கள் என்றால் உள்ளூர்வாசியான டூரிங் டாக்கீஸ் மானேஜர் கிருஷ்ணாராவ், முன்னமேயே ரிசர்வ் செய்து டிக்கெட்டுக்களை வீட்டில் கொண்டு வந்து கொடுத்து விடுவார். பாகவதரிடம் அளவற்ற அன்பும், மரியாதையும் கொண்டவர் அவர்.

கொட்டகையில் தரை, பெஞ்சு, நாற்காலி என்கிற மூன்று வகுப்புகளுக்கு மேல், 'குஷன் வைத்த நாற்காலி' என்கிற ஸ்பெஷல் வகுப்பும் இருந்தது. பிரமுகர்களுக்கான விசேஷ வகுப்பு அது.

பாகவதர் குடும்பத்தில் யார் வந்தாலும், அந்த ஸ்பெஷல் வகுப்பில்தான் படம் பார்ப்பார்கள்.

முசிறி சுப்ரமணிய ஐயர் நடித்த ''பக்த துக்காராம்''; மகாராஜபுரம் விசுவநாத ஐயரும், கே.பி. சுந்தராம்பாளும் நடித்த ''நந்தனார்''; திருவாவடுதுறை டி. என். ராஜ ரத்தினம் பிள்ளை நடித்த ''கவி காள மேகம்'', போன்ற படங்கள் வந்தால், ஹரியையும் அழைத்துக் கொண்டு இரண்டு மூன்று தடவைகள் கூட அந்தப் படங்களைப் பாகவதர் பார்ப்பார்.

ஏனென்றால் அவைகள் எல்லாம் சிறந்த சங்கீதப் படங்களாக இருக்கும். ''இப்படிப்பட்ட பிரபல சங்கீத வித்வான்கள் மேடையில் செய்யும் கச்சேரிகளை எல்லாம் சமயம் கிடைத்தபோது எங்கு நடந்தாலும் போய்க் கேட்க வேண்டும்; அப்போதுதான் ஞானம் வளரும்; மனதில் நமக்கும் புதிய புதிய கற்பனைகள் பிறக்கும்'' என்று ஹரிக்கு உபதேசம் செய்வார்.

கிட்டப்பாவின் சங்கீதத்தில் பாகவதருக்கு அளவற்ற மோகம். கிட்டப்பாவும், சுந்தராம்பாளும் நடித்த ஸ்பெஷல் நாடகங்கள் மாதக் கணக்கில் ஓடும். பாகவதர் இயன்ற போதெல்லாம் திரும்பத் திரும்பப் போவார். கதைக்காகவும், கம்பெனியின் சீன் ஜோடனைக் காட்சிகளுக்காகவும் மட்டுமல்ல; கிட்டப்பா வேலன், வேடன், விருத்தனாகவோ; அல்லது வேறு எந்த வேடத்தில் வந்தாலும் அவருக்கு கிட்டப்பாவின் பாட்டுத்தான் முக்கியம். நேற்று பாடியதுபோல் இன்று பாடுகிற கல்யாணியோ, காம்போதியோ இருக்காது. புதிய புதிய கற்பனைகள்—அலாதியான பிர்க்கா சாரீரம். அந்த இசையை நன்கு ரசித்து அனுபவிக்கத் தெரிந்த கூட்டமாகையால்; கொட்டகையில் ஊசி விழுந்த ஓசைகூடக் கேட்கும். அவ்வளவு நிசப்தமாக இருந்து நாடகம் பார்ப்பார்கள். ஒலிபெருக்கி போன்ற வசதிகள் இல்லாத அந்தக் காலத்தில்; முன்னால் சோபாவிலிருக்கிற பிரமுகர் முதல்; முன்னூறு அடி தூரத்தில் தரையில் உட்கார்ந்து கேட்கிற ரசிகன் வரை நன்றாகக் கேட்டு ரசிக்கும் வண்ணம் அமைந்த சாரீரம்—ஐந்தரைக் கட்டை சுருதியில் கிட்டப்பாவைப் போல் இப்படி மேல் பஞ்சமம்வரைப் போய் இனிமை குறையாமல் யாரால் பாட முடியும்? என்று பாகவதர் பூரித்துப் போவார்.

பத்து வயதில் குருகுலவாசத்தை பூர்த்தி செய்து அரங்கேறிய பாகவதர்; தமது பனிரெண்டாவது வயதிலேயே

பிரமாதமாப் பாடி; பெரிய பெரிய வித்வான்களின் வரிசை யில் இடம் பிடித்து விட்டவர்.

வயதும்; அனுபவமும்; ஏறஏற அவரது இசை; பட்டை தீட்டிய வைரம் போல் ஒளிவீசிப் பிரகாசித்தது.

ஒருசமயம் பிரபலமான கிராமபோன் கம்பெனியொன்று பாகவதருடைய பாட்டைப் பதிவு செய்ய வந்து கேட்ட போது மறுக்காமல் கொடுத்தார். 'தாரிநி தெலிசு கொண்டிநி' என்னும் சுத்த சாவேரி ராகக் கீர்த்தனை இரு பாகங்களில் வெளிவந்தபோது பாகவதருக்கு 'ராயல்டி' யை அள்ளி கொடுத்தது. அதன் பிறகு பல கம்பெனிகள் அவரது இசையைத் தங்கள் தட்டுகளில் பதிவு செய்து கொள்ளப் போட்டி போட்டன.

ஆனால் சுமார் பத்துப் பாட்டுக்கள் வெளிவருவதற்குள் ஒரு கம்பெனியோடு ஏற்பட்ட தகராறு காரணமாக, "இனி நீங்கள் லட்ச ரூபாய் கொடுத்தாலும் என் பாட்டு உங்களுக்கு இல்லை" என்று சொல்லி வந்துவிட்டார். காரணம் அப்படிப் பிரமாதமானது ஒன்றுமில்லை.

பாகவதர் திவ்யமான சாரீர சம்பத்துப் பெற்றவர். கணீரென்று உச்ச ஸ்தாயிவரையில் சஞ்சரிக்கக்கூடிய வசதி யான தொண்டை. வாய்த்துக் கொண்டால் மேல் பஞ்ச மத்துக்குக்கூட அநாயாசமாகப் போய் நின்று விடுவார். ஜிலுஜிலுப்புக் குறையாது; துளி பிசிர் இருக்காது.

அன்று கல்யாணியில் 'நிதி சாலஸுகமா' என்னும் கிருதி பதிவாக இருந்தது. பாகவதர் குறிப்பிட்ட நேரத் துக்குப் பக்கவாத்தியங்களுடன் வந்துவிட்டார். முதல் பாகத்தில் விஸ்தாரமாக ராகம் பாடிப் பல்லவியை முடித் தார். இரண்டாவது பாகத்தில் அநுபல்லவியும், சரணத்தில் நிரவல் ஸ்வரமும் பாடினார்.

ஆனால் ஏனோ தெரியவில்லை, இரண்டாவது பகுதி ஒலிப்பதிவாளருக்கு மிகுந்த சிரமத்தைக் கொடுத்தது. —'மமத பந்தனயுத; நரஸ்துதி சுகமா,' என்னும் அடியை மேலே நிரவல் செய்யும்போது பாகவதர் தம்மை மறந்து பாடினார். அவரது உச்சஸ்தாயிக் குரலைக் கேட்டு ஒலிப் பதிவாளர் மகிழ்ந்தார். ஆனால் கால வரம்புகளுக்காக யந்திரத்தை நிறுத்திவிட்டு; மீண்டும் பாடச் சொன்னார். பாகவதரும் பாடினார்,

ஆனால் எத்தனை தரம் பாடினாலும், தடவைக்குத் தடவை பிரமாதமாகப் பாடினார். பாகவதரிடம் கற்பனைக்கு என்ன பஞ்சம்? ஆனால் அதைத்தான் கம்பெனிக்காரர் விரும்பவில்லை. பாட்டுப் பதிவுக்குரிய கால அளவில் ஏற்றத்தாழ்வு இருந்துகொண்டே இருந்தது.

''இன்னும் ஒரு தடவை சரியாகப் பாடுங்கள் மகராஜ்: எடுத்து விடுகிறேன்'' என்றார்.

அவ்வளவுதான் — அதற்குமேல் ஒலிப்பதிவாளர் தவறு தலாக ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் பாகவதருக்குக் கோபம் பிரமாதமாக வந்துவிட்டது.

''அப்பொழுது இவ்வளவு நேரமா நான் சரியாகப் பாட வில்லை என்று உன் அபிப்பிராயமா? அதனால்தான் எடுக்க வில்லையா? நீ எடுக்கவே வேண்டாம். இந்தா உன் பணமும் ஆச்சு, நீயும் ஆச்சு. இனிமேல் நீயும் என்னிடம் வராதே நானும் வரவில்லை'' என்று கூறி, அங்கவஸ்திரத்தை உதறித் தோள்மேலே போட்டுக் கொண்டு வந்து விட்டார். அதன் பிறகு—

தவறாக ஏதாவது நடந்திருந்தால் மன்னிக்கும்படி தங்கள் ஊழியரின் சார்பில் அந்த ஆங்கிலக் கம்பெனியே பாகவதருக்குப் பல கடிதம் எழுதியது. பாகவதர் மசியவே இல்லை, ஆனால் அந்த ஒரு பக்கத்தை அவருக்காக அந்தக்

கம்பெனி நெடுநாள்வரை அப்படியே அழிக்காமல் வைத்திருந்தது.

பல மாதங்களுக்குப் பிறகு பாகவதருக்கு மீண்டும் இந்த விஷயத்தைக் குறிப்பிட்டுக் கம்பெனி அழைப்பு விடுத்தது. அவர்களுடைய பெருந்தன்மையைக் கண்டு பாகவதரும் மனம் மாறினார்; இசைத்தட்டு முழுமை பெற்றது. அப்படி வெளிவந்த இசைத்தட்டு சங்கீத உலகத்தையே ஒரு கலக்குக் கலக்கிவிட்டது.

எல்லோர் வாயிலும் 'நித சால ஸுகமா' முழங்கிற்று; அந்த இசைத்தட்டு, கம்பெனிக்கும் பாகவதருக்கும் பணத்தை அள்ளிக் கொடுத்தது.

இப்படிச் சம்பாதிக்கிற ராயல்டி பணத்தை எல்லாம் பாகவதர் ஒரு நல்ல காரியத்துக்காக அர்ப்பித்தார். கிராமபோன் கம்பெனியிலிருந்து கிடைக்கிற அந்தப் பணத்தை அவர் குடும்பச் செலவுக்கு எடுத்துக் கொள்வதில்லை. அத்துடன் தம் கையிலிருந்து மேலும் பணம் போட்டு ஊருக்கு மத்தியில் நல்ல இடத்தில் பஜனை மடம் ஒன்று கட்டினார். இந்தச் செய்தியை அறிந்தவுடனே பாகவதருடைய உற்ற நண்பரும் சிறந்த சங்கீத ரசிகருமான, மதுரை, மகாராஜா ஹோட்டல் பத்மநாப ஐயர், பஜனை மடத்துக்காக மிகவும் பெரிய அழகான தஞ்சாவூர் ராமர் பட்டாபிஷேகப் படமொன்றையும், படம் வைக்க வேண்டிய மண்டபச் செலவுக்காக ஆயிரம் ரூபாய் பணத்தையும் அனுப்பி வைத்தார்.

இப்படிச் சிறப்பு வாய்ந்த பஜனைமடத்தில் ஒவ்வொரு வருஷமும் ஸ்ரீராமநவமி உற்சவத்தைப் பாகவதர் மிகச் சிறப்பாகக் கொண்டாடினார். கிராமத்திலும் வெளியூரிலும் உள்ள பல பிரபுக்கள் நிறையப் பொருளுதவி செய்தனர். பஜனை மடத்துக்கு வெளியே பிரம்மாண்டமான பந்தல் போட்டுப் பத்து நாட்களும் பெரிய பெரிய வித்துவான்களை வரவழைத்து நல்ல கச்சேரிகளை நடத்தினார். தினம் ஏழை

களுக்கு அன்னதானமும், விடயாற்றி உற்சவத்தன்று கிராமத்து ஜனங்களுக்குப் பந்தலில் பெரிய சமாராதனையும் நடைபெறுவது வழக்கம்.

இதற்கு ஒவ்வொரு வருஷமும் பாகவதர் முன்னிலையில் உற்சவக் கமிட்டி கூடித் தலைவர்களையும், நிர்வாகக்கமிட்டி அங்கத்தினர்களையும் தேர்ந்தெடுப்பார்கள். அந்த வருஷமும் உற்சவத்துக்கான கமிட்டிக்கூட்டம், அன்று மாலை நடைபெற இருப்பதாகக் காரியதரிசி பாபு, பாகவதரிடம் வந்து கூறினார். அதனால்தான் அவர் ஹரியையும் அழைத்துக் கொண்டு திருவிடைமருதூருக்குப் போக இருந்த திட்டத்தை மாற்ற நேர்ந்தது.

பாகவதர் உள்ளூரில் இருக்கிற நாட்கள் மிகவும் குறைவு. அதனாலேயே அவர் ஊரிலிருப்பதை அறிந்ததும் வழக்கம்போல் கமிட்டிக் கூட்டத்துக்குப் பாபு ஏற்பாடு செய்துவிட்டார். பாகவதர் எவ்வித மாறுதலையும் ஏற்படுத்த விரும்பவில்லை. கமிட்டி விவகாரங்கள் எல்லாம் முடிந்த பிறகு மறுநாள் காலையில் முதல் வண்டிக்கே பாகவதரும் ஹரியும் திருவிடைமருதூருக்குப் புறப்பட்டனர்.

## 14. நல்ல வாரிசு

திருவிடைமருதூரில் சுந்தரியின் அழகான மிகப் பெரிய வீடு மகாதானத் தெருவில் இருந்தது. படியேறி உள்ளே நுழைந்ததுமே சுவாமிமலை வீட்டில் இருப்பதே போல் சிரித்த முகத்துடன் கூடிய பாகவதரின் மிகப் பெரிய புகைப் படமொன்று வந்தவர்களை வரவேற்கும்.

நடு ஹாலில், அழகிய வேலைப்பாடமைந்த நாற்காலி களும் சோபாக்களும் போடப்பட்டிருந்தன. பழைய பெரிய வீடாயினும் புதிய தோற்றத்துடன் காணப்பட்டது. ஆங் காங்கே விலையுயர்ந்த பொருட்களும், அழகிய பெரிய படங் களும், நிலைக் கண்ணாடிகளும், பளிங்குக்கல் பதித்த சுவர் களும் வீட்டுக்கு மதிப்பூட்டின.

ஹரியும் பாகவதரும் உள்ளே நுழைந்ததும் சுந்தரிதான் அவர்களை வரவேற்றாள்.

''நேற்றே உங்களை எதிர்பார்த்தேன்'' என்று சுந்தரி கூறியவுடன், ''அது என்னவோ சுந்தரி! நானும் ஹரியும் சேர்ந்து இங்கே வர எப்போது புறப்பட்டாலும் சரி உடனே ஏதாவது ஒரு தடங்கல் வருகிறது. நேற்றுப் புறப் பட்டு; இன்று வந்து சேர்ந்திருக்கிறோம்'' என்று ஹாஸ்ய மாகக் கூறிவிட்டு எதிரில் இருந்த வெள்ளி வெற்றிலைப் பெட்டியைத் தம் பக்கமாக இழுத்தார்.

உடனே சுந்தரி, ''இதோ இரண்டு நிமிஷத்தில் காபி கொண்டு வருகிறேன். சாப்பிட்டுவிட்டு பிறகு வெற்றிலை போடலாம்'' என்றாள்.

அதற்குள் மாடியிலிருந்து இறங்கி வந்த வசந்தி கூந்தலை ஈரம் போகக் கோதிக்கொண்டே, ''ஏன் அப்பா, ரெயில் பதினேழு மணி நேரம் லேட்டா?'' என்று கேள்வி செய்த வண்ணம் அருகில் வந்து அமர்ந்து கொண்டாள்.

வசந்தியின் ஹாஸ்யத்தை ரசித்தபடியே அவளை ஏறிட்டுப் பார்த்தான் ஹரி.

அன்றலர்ந்த மலர்போல் அழகுடன் விளங்கிய அவளைப் பார்க்கும் போதெல்லாம்; அவனுக்குக் கூடவே சுசிலாவின் நினைவும் வரும். கைதேர்ந்த சிற்பியொருவன் ஒரே அச்சில் கடைந்தெடுத்த தந்த விக்கிரகம்போல் இருக்கும் அவர்களது உருவ ஒற்றுமையைக் கணநேரம் மனத்துக் குள்ளே நினைத்து வியந்து கொண்டான்

வசந்தி சுசீலாவின் தங்கையாக இருந்தாலும் உடலமைப்பில், சற்றுப் பெரியவள் போலவே காணப் பட்டாள். சுருட்டைத் தலையும் தங்க நிறமும் வசந்தி என்றால்; பொன்னிறமும் முழங்கால் வரை நீண்ட கூந்தலு மாகச் சுசீலா விளங்கினாள். சுசீலாவின் வட்டக் கரிய விழிகளில் எப்போதும் குறும்பும் கோபமும் துள்ளி விளை யாடும். வசந்தியின் விழிகளில் அமைதியும் அடக்கமும் தேங்கி நிற்கும்.

உள்ளேயிருந்து வந்த தாயாரின் குரலைக் கேட்டதும் வசந்தி எழுந்து உள்ளே சென்றாள். அவள்காதில் பூரித்த வைரத்தோடு; கன்னத்தில் வீசிக் கொட்டிற்று. சற்றைக் கெல்லாம் காபி பலகாரங்களுடன் வெளியே வந்த வசந்தி, அவர்கள் இருவருக்கும் கொடுத்தாள். பலகாரம் சாப்பிட் டானதும் பாகவதர், ''கோட்டு வாத்தியம் ராயர்வாள் வீடுவரைப் போய்வருகிறேன்'' என்று சொல்லி புறப்பட்டுச் சென்றார். ஹரி வீட்டிலேயே இருந்தான்.

சுந்தரி சமையல் வேலைகளைத் துரிதமாக முடித்துக் கொண்டு ஹாலுக்கு வருவதற்கும், பாகவதர் வெளியி லிருந்து வருவதற்கும் சரியாக இருந்தது. ஆனால் அவர் கூடவே, வேறொரு சங்கீத வித்துவானையும் அழைத்து வந்திருந்தார். வயது அறுபதுக்கு மேலிருக்கும். அவரது தோற்றமும் சிவந்த மேனியும்; தும்பைப்பூப் போன்ற தலைமுடியும் நீண்டு வளர்ந்த தாடியும் அவர் பழுத்த பழம் என்பதைக் காட்டின.

''ராயர்வாள் வீட்டுக்குப் போயிருந்தபோது எதேச் சையாக ராமையாப் பிள்ளையவர்களைப் பார்த்தேன். நம்முடைய அதிர்ஷ்டம், பிள்ளையவர்களைச் சந்திக்கிற பாக்கியம் கிடைத்தது. இவர் முன் ஹரியைப் பாடச் சொல்ல வேண்டுமென்று ரொம்ப நாள் ஆசை. பிடிவாத மாக அழைத்து வந்து விட்டேன்'' என்று சுந்தரியிடம் பாகவதர் கூறினார்.

ஹரியின் பாட்டுக்கு உடனடியாக ஏற்பாடாயிற்று. அறையிலிருந்த பட்டு ஜமக்காளத்தைக் கொண்டு வந்து நடு ஹாலில் விரித்தாள் வசந்தி. ஹரி தம்புராவை நாலரைக் கட்டைக்குத் துல்லியமாகச் சுருதி சேர்த்துக்கொண்டு உட்கார்ந்தான். குருநாதரையும் பிள்ளையவர்களையும் வணங்கிவிட்டுப் பாட ஆரம்பித்தான். ஸாவேரி வர்ணத்தை அவன் நாலு காலம் வெகு கச்சிதமாகப் பாடி நிறுத்திய வுடனே பிள்ளையவர்கள் தம்மையும் மீறி, ''சபாஷ்! சபாஷ்!'' என்று வஞ்சனையில்லாமல் வாய் திறந்து கூறினார். அதன் பிறகு ஹரி பாடிய ஒவ்வொரு கிருதியும், ராக ஆலாபனையும், ஸ்வரம் பாடுகிற பந்தாவும் பிள்ளை யவர்களைப் பரவசப் படுத்தின.

மைனாக் குருவி போன்ற அவனது சாரீரத்திலிருந்த ஜிலுஜிலுப்பையும், முற்றிய மாதுளையிலிருந்து உதிர்ந்

தோடும் முத்துக்களைப் போன்று அவனது தொண்டையில் மூன்றுஸ்தாயிகளும் அநாயாசமாகப் புரண்டோடிய—துளி பிசிறில்லாத பிர்காவையும் கண்டு அனைவரும் வியந்தனர். பாகவதரையே உரித்து வைத்தாற்போன்று ஒவ்வொரு ராகத்திலும் அவன் கையாள்கிற பிடியையும், அடுக்குப் பாறை போல் படிப்படியாகவும், சரளமாகவும், நடை பேதங்களுடன் ஸ்வரம் பாடுகிற பந்தாவையும், சர்வலகு சுத்தத்தையும் கண்டு பிள்ளையவர்கள் பிரமித்துப் போனார்.

கடைசியாக ஒரு திருப்புகழைப் பாடி முடித்தவுடன் பிள்ளையவர்கள் ஹரியை அப்படியே வாரி எடுத்து மார் போடணைத்துக் கொண்டார். அவரது குழி விழுந்த கண்களில் வைரத் துண்டுகளைப் போல நீர்த்துளிகள் மின்னின.

''உனக்கு இறைவன் வற்றாத தீர்க்காயுசைக் கொடுக்க வேண்டும். அது ஒன்றுதான் நான் என் வாயால் வாழ்த்தக் கூடியது. மற்றதெல்லாம் உனக்கு இருக்கிற வித்தைக்குத் தானே தேடி வந்து அடையும்'' என்று ஆசீர்வாதம் செய்தார். பாகவதரைப் பார்த்து, ''சுப்பராமா, உனக்குப் பிறகு பெயர் சொல்ல நல்ல பரம்பரையை உண்டாக்கி விட்டாய். நீ அதிர்ஷ்டக்காரன் தான்'' என்றார்.

ஹரியினுடைய கையிலிருந்த தம்பூராவைப் பெற்றுக் கொண்ட வசந்தி நன்றிப் பெருக்குடன் பிறர் அறியா வண்ணம் அவனை ஒரு முறை பார்த்து விட்டு, மாடியை நோக்கிச் சென்றாள்.

சாப்பாடு முடிந்தது. சிறிது நேரத்துக்கெல்லாம் பிள்ளையவர்கள் ஹரியைக் கூப்பிட்டார். இடுப்பில் இருந்த பட்டுப் பையைப் பிரித்து, பழனி விபூதியை அவன் நெற்றியில் இட்டு ஆசிர்வதித்தார். அருகில் நின்று கொண்டிருந்த மற்றவர்களுக்கும் விபூதி கொடுத்தார்.

பிறகு வசந்தியைப் பார்த்து, ''இந்தத் தடவைதான் பாடாமல் ஏமாற்றி விட்டாய். இனி ஒரு சமயம் வந்தால் இப்படி அவசரப் பட்டுக் கொண்டு புறப்பட மாட்டேன். நீ பாடுகிற வரை, மாசக் கணக்கானாலும் சரி, இந்த இடத்தை விட்டு நகர மாட்டேன். என்ன சரிதானே வசந்தி?'' என்றார்.

உடனே வசந்தி, ''என்ன மாமா, நானாகவா பாட மாட்டேன் என்கிறேன்? எனக்குப் பாடத் தெரிந்தால் அல்லவா பாடுவதற்கு? அப்பாவுக்குப் பெண்களுக்குப் பாட்டுச் சொல்லிக் கொடுக்கவே பிடிக்காது, அதனால் தானே அவர் என்னிடம் இவ்வளவு நாளாகச் சங்கீதத்தைப் பற்றியே பேசுவதில்லை?'' என்றாள் வருத்தத்துடன்.

இதைக் கேட்டதும் பிள்ளையவர்கள் மிகுந்த ஆச்சரியத்துடன், ''அப்படியா சுப்பராமா?'' என்று கேட்டார். பாகவதர் பதில் ஏதும் கூறாமல் மௌனமாக இருந்தார்.

உடனே வசந்தி, ''நான் பொய் சோல்லவில்லை மாமா; எனக்குப் பாட்டுச் சொல்லிக்கொண்டு நன்றாகப் பாட வேண்டும் என்ற ஆசைதான். ஆனால் நானாகப் என்ன செய்ய முடியும்? 'பாட்டுக் கற்றுக் கொள்ளுவதாக இருந்தால் கச்சேரி பண்ண வேண்டும்' என்பது அப்பாவின் விருப்பம். ''கச்சேரி பண்ணப் போவதானால், நீ பாட்டுக் கற்றுக் கொள்ள வேண்டாம்''— இது அம்மாவின்

உத்தரவு. இதற்கு நீங்கள்தான் மாமா தயவு செய்து ஒரு வழி செய்துவிட்டுப் போக வேண்டும்'' என்றாள் மிகுந்த துக்கத்துடன்.

''சுப்பராமா, நீ பிரமாதமாகப் பாடுவாய் என்று தான் எனக்குத் தெரியும். இப்படியெல்லாம் நீங்கள் ஆளுக்கொரு கொள்கையை வைத்துக் கொண்டிருப்பீர்கள் என்று தெரியாமல் கேட்டுவிட்டேன்'' என்ற பெரியவர் உடனே, ''ஆமாம், நானும் தெரிந்துக் கொள்ளத்தான் கேட்கிறேன்; சுந்தரி சொல்வதிலாவது ஒரு விதத்தில் காரணம் இருக்கிறது. ஆனால் நீ சொல்லுவதில் என்ன நியாயம் இருக்கிறது? பாட்டுக் கற்றுக் கொள்கிறவர்கள் எல்லாரும் கச்சேரி பண்ணித்தான் ஆக வேண்டுமா? பிறகு இவர்கள் பண்ணுகிற கச்சேரியை எல்லாம் கேட்டுத்தான் ஆகவேண்டும் என்று வருகிறவர்கள் மென்னியைப் பிடிப் பாயோ? என்னப்பா இதெல்லாம் அர்த்தமில்லாமல்?'' என்றார்.

''நான் அர்த்தம் இல்லாமல் சொல்லவில்லை பிள்ளையவர்களே. பாட்டுக் கற்றுக் கொள்கிறவர்கள் எல்லாரும் கச்சேரி பண்ணித்தான் ஆகவேண்டும்; அதை எப்படி இருந்தாலும் கேட்டுத்தான் ஆகவேண்டும் என்று நான் சொல்லவில்லை. ஆனால் நன்றாகக் கச்சேரி பண்ணுகிற அளவுக்குத்தான் என்னால் உழைத்துச் சொல்லிக் கொடுக்க முடியும். கச்சேரி பண்ணும் உத்தேசம் உள்ளவர்கள் மட்டும் வரட்டும். ஆனால் பெண்களிடம் இந்தக் கண்டிப்பை எதிர்பார்க்க முடியாது. அதனால் அவர் களுக்கு நான் சொல்லிக் கொடுப்பதில்லை. இது என் கொள்கை. இதை வலிய நான் யார் தலையிலும் திணிக்க வில்லையே! எனக்கென்று ஓர் அபிப்பிராயம் இருந்தால் அது தப்பா?''

''தப்பில்லைதான். ஆனால் நான் உன்னை ஒன்று கேட்பேன்; கோபித்துக் கொள்ள மாட்டாயே?''

''நிச்சயம் மாட்டேன்.''

''அப்படியானால் உன் கொள்கையைச் சுந்தரி தலையில் ஏன் திணிக்கவில்லை?''

பாகவதர் வாய் மூடி மௌனியாகிவிட்டார். பிள்ளையவர்களின் இந்தக் கேள்வியை அவர் எதிர்பார்க்கவில்லை விதிவசத்தால் நேர்ந்த விஷயத்துக்கு அவர் எப்படி விளக்கம் கொடுக்க முடியும்?

''சுப்பராமா, போனது போகட்டும்; ஆராதித்து, ஒரு பெண் தெய்வத்தின் கருணையால் அடையப்பெற்ற இவ் வித்தையை, அந்த இனத்திற்கே மறுப்பது நியாயமாகாது. இப்போது உன் பெண்ணுக்குப் பாட்டுச் சொல்லிக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் இருப்பது, அவள் பேச்சிலிருந்து தெரிகிறது. யாராக இருந்தாலும், ஆர்வமுள்ளவர்களைத் தடுக்கலாகாது. ஆகவே வசந்திக்குப் பாட்டுச் சொல்லிக் கொடுக்க வேண்டியது ஹரியின் பொறுப்பு. அதற்கு வேண்டிய நேரத்தை நீதான் அவனுக்கு ஒதுக்கிக் கொடுக்க வேண்டும். கற்றுக்கொண்ட வித்தை அவளுக்கும் ரசிகர்களுக்குந்தான் சொந்தம். அதாவது, யோக்கியதையும் திறமையும் அடைந்தால் தொழில் செய்யட்டும். இல்லாவிட்டால் சுவானுபவமாக இருக்கட்டும். அதைப்பற்றி இப்போது நாம் யோசிக்கக்கூடாது; நம்மால் முடிவு சொல்லவும் முடியாது. அது அவ்வளவு முக்கியமல்ல'' என்று பாகவதரிடம் கூறிக்கொண்டே வந்த பிள்ளையவர்கள், வசந்தியின் பக்கம் திரும்பி, ''என்னம்மா, நான் சொல்லுவது சரிதானா? உனக்குச் சம்மதந்தானா?'' என்று கேட்டார்.

சம்மதத்தின் சாயலாக வசந்தி தலையை ஆட்டினாள். மகிழ்ச்சியினால் அவள் முகம் மலர்ந்தது. அதைக் கண்டு சுந்தரியின் உள்ளமும் குளிர்ந்தது. ஆனால் பாகவதரின் உள்ளமோ கண நேரத்துக்குள் கருமேகங்களால் சூழப்பட்ட வானம் போல் இருண்டுவிட்டது. அந்த இருளில் மூழ்கிப் போன தம்முடைய கொள்கையையும், அதை ஊட்டி வளர்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டுக் கொண்டிருந்த ஹரியையும் திக்குத்திசை தெரியாமல் தேடிக் கொண்டிருந்தார்.

பிள்ளையவர்கள் சிரித்தபடியே ஊருக்குப் புறப்பட்டார்.

# 15. இரண்டு சிஷ்யைகள்

பிள்ளையவர்கள் கூறிய விளக்கம் பாகவதரின் சிந்தனையைக் கிளறியது. 'வித்தையை யாசித்து வருகிறவர்களுக்கு இல்லை என்னாமல் இயன்றவரை வாரி வழங்குவதை விட்டு; அதற்கென்று சில சட்ட திட்டங்களை வகுத்துக்கொண்டு எத்தனை பெரிய பாவம் செய்து விட்டேன்! கடமையைச் செய்வதை விட்டுப் பலனைப் பற்றிச் சிந்திக்க நான் யார்?'' அதைப் பற்றிக் கேட்க எனக்கு என்ன உரிமை இருக்கிறது?

'பிள்ளையவர்கள் கூறியது போல் சுந்தரியின் விஷயத்தில் என் கொள்கைகளும் எண்ணங்களும் ஈடேறாததோடு என் வாழ்க்கையையே அல்லவா மாற்றிக் கொண்டேன்? வாழ்க்கையில் எத்தனையோ அழகான பெண்களைப் பார்த்திருக்கிறேன்; பழகியிருக்கிறேன்; மனத்தில் சபலத்துக்கு இடம் கொடுத்ததில்லை. சுந்தரியிடம் மட்டும் என் மனத்தில் ஏன் திடீரென்று விபரீதமான எண்ணம் தோன்றி, ''உன்னையே எனக்குக் காணிக்கையாகக் கொடு'' என்று துணிந்து கூறுவதற்குரிய தைரியம் எப்படிப் பிறந்தது?

'சுந்தரியைச் சிறந்த பாடகியாக நான் உருவாக்கினாலோ அல்லது அவளே உருவாகியிருந்தாலோ அது என் திறமைக்கு ஓர் எடுத்துக்காட்டு; என் உழைப்புக்கு ஏற்ற பலன். அவ்வளவு தானேயன்றி; அவளையே அடைய வேண்டுமென்று நினைத்தது சரிதானா? அவள் மனத்

தானும் நினைத்தறியாத ஒரு விஷயத்தை—அவளைக் கேட்டு தெரிந்து கொள்ளாமலே அவள் உள்ளத்தில் திணிக்கலாமா?'—

சிந்திக்க வேண்டிய காலத்தில் சிந்திக்காமல் அகாலத்தில் பாகவதர் மனம் சிந்தித்துக் கொண்டிருந்தது. ஆனால் ஒன்றுமட்டும் அவர் மனத்துக்குச் சத்தியவாக்காகப் புலனாயிற்று.

—'சுந்தரி எனக்காகவே பிறந்தவள். பூர்வ ஜன்மத்து விட்ட குறை தொட்டகுறை இருந்திருக்கிறது. இல்லாவிட்டால் பிறப்பு வளர்ப்பைப் மீறி இந்தப் பிணைப்பு ஏற்பட்டிருக்க முடியாது' -- என்ற உண்மைதான் அது.

பாகவதர் குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டிருந்த காலத்திலேயே வேதாந்தப் போக்கு அவர் உள்ளத்தின் அடித்தளத்தில் ஓடிக் கொண்டே யிருந்தது. லட்சுமியை மணந்து கொண்ட பிறகும், சுந்தரி வந்த பிறகும் குடும்ப வாழ்க்கையில் பாகவதர் இன்பத்தை நுகர்ந்ததெல்லாம் மிகக் குறுகிய காலந்தான். மூன்றுபெண்களும் பிறந்து வளர ஆரம்பித்தபோதே அவர் ஒரு முடிவுக்கு வந்துவிட்டார். இல்லறத்தைத் துறப்பதற்கான பயிற்சிகளில் ஈடுபட்டார். அதற்கு நாதோபாசனையே சிறந்த மார்க்கம் என்று கருதி அதிலேயே முனைந்தார். சங்கீதத்துக்கே வாழ்நாளை அர்ப்பித்தார். சிறந்த மாணாக்கர்களை உருவாக்கினார்.

பிள்ளையவர்களின் வாயால் இத்தனை புகழ்ச்சிக்குப் பாத்திரமானவர்களே கிடையாது. பெரிய பெரிய வித்துவான்கள் அவருடைய ஒரு 'சபாஷை' ஆயிரம் பொன்னாடைகளுக்கு மேலாகக் கருதுவர். அவர் தலையசைத்தால் அவர்கள் உள்ளத்தில் குஷி பிறக்கும். அவர் வாயார வாழ்த்தி விபூதி கொடுப்பதை முருகனே விருத்த வடிவில் வந்து கொடுப்பதாக எண்ணி அள்ளிப் பூசிக்

கொள்வர். அவர் தொட்ட காரியம் துலங்கும்; பட்ட பொருள் மணக்கும்.

'இனி மேல் ஹரிக்கு ஒரு குறைவுமே இல்லை. அவன் பிழைத்துக் கொள்வான்' என்று பாகவதர் நம்பினார். அத்துடன் தம் மனத்தில் இருந்த வித்தியா கர்வத்தையும் மாயையையும் அவர் அன்று வந்து அழித்து விட்டுச் சென்றதாகவே பாகவதருக்குத் தோன்றியது இல்லா விட்டால் எத்தனையோபேர் வாதாடியும்; எடுத்துரைத்தும் மாறாத அவர் மனம் மாறுமா? அன்று முதலே வசந்திக்குப் பாட்டுச் சொல்லிக் கொடுக்க ஹரியையே குருவாக நியமித்து, இரண்டாம் நாள் பாடத்தையும் ஆரம்பித்து வைத்தார்.

வசந்திக்குப் பாடம் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது. பாகவதரோடு கச்சேரிக்குப் போகாத நாட்களில் ஹரி தவறாமல் திருவிடை மருதூருக்குச் சென்று வந்தான்.

இதனால் சுசீலாவின் மனத்தில் எல்லையில்லாத கோபம் மூண்டது. தனக்குச் சொல்லிக் கொடுக்க அப்பாக்வுகு விருப்பமில்லை. இப்போது வசந்திக்கு ஹரியையே இங்கிருந்து அனுப்புகிற அளவுக்கு ஆகி விட்டது. 'அவள் எந்த விதத்தில் உயர்ந்தவளாகி விட்டாள்?' இந்தக் கேள்வி சுசீலாவின் மூச்சாக எப்போதும் வந்து கொண்டேயிருந்தது.

ஹரி திருவிடைமருதூருக்குப் புறப்படும் போதும் அங்கிருந்து வரும் போதும், "இன்று என்ன பாடம் நடந்தது? எப்படிப்பாடினாள்?" என்று சுசீலா விசாரிக்கத் தவறுவதில்லை. ஹரியும் கடமைப்பட்டவன்போல் அதைச் சொல்லத் தவறுவதில்லை. நாளடைவில் இது சுசீலாவின் உள்ளத்தில் பெரிய பொறாமைப் புயலை உண்டாக்கியது.

தந்தையிடம் வந்து, ''நானும் பாட்டுச் சொல்லிக் கொள்ளப் போகிறேன். எனக்கும் நீங்கள் சொல்லித் தாருங்கள்'' என்று வம்பு செய்ய ஆரம்பித்தாள். பாகவதருக்கு இப்போது அவள் ஆசைப் படுவது தவறாகத் தோன்றவில்லை. ஆனாலும் இது அவசியந் தானா என்று யோசித்தார்; மனைவியிடமும் கலந்தார்.

''சுசீலாவுக்கு நீங்கள், பாட்டுக்கு ஏற்பாடு செய்யா விட்டால் அவள் ஹரியைப் பாடாய் படுத்தி அவனைத் திருவிடை மருதூருக்கும் போகவிடாமல் நிறுத்திவிடுவாள். அவள் சுபாவந்தான் உங்களுக்குத் தெரியுமே! ஏதோ முடிந்த வரைக்கும் ஊரிலிருக்கும் போது சொல்லிக் கொடுங்கள். இல்லாவிட்டால் விட மாட்டாள்'' என்றாள் லட்சுமியம்மாள்.

அதைக் கேட்ட பாகவதர், ''நான் அவளுக்குச் சொல்லிக் கொடுப்பதா? உருப்பட்டாற் போலத்தான். பாடம் நடக்காது; சண்டைதான் நடக்கும்; அழுகை தான் மிஞ்சும். அந்த வாயாடிக்கும் எனக்கும் ஒத்து வராது. வேண்டுமானால் ஹரியையே ஏற்பாடு செய் கிறேன். அவன்தான் அவளுக்கு லாயக்கு. அவள் இழுத்த இழுப்புக்கெல்லாம் போய்க் கொண்டு, எது சொன்னாலும் பதில் பேசாமல் இருப்பான். அதற்கு வேறு எந்தச் சங்கீதக்காரனும் ஒப்பமாட்டான்'' என்று கூறிவிட்டார்.

''சரி, எப்படியோ ஏற்பாடு செய்து சுசீலாவுக்கும் ஆரம்பித்து வையுங்கள். வெட்டி வம்புக்குப் பதிலாக சங்கீதத்தையாவது கற்றுக் கொள்ளட்டும்'' என்றாள் லட்சுமி.

நல்ல நாளில் சுசீலா ஹரியின் முன்னால் உட்கார்ந்து 'ஸா..பா..ஸா.., பிடித்தாள். அப்பா மற்றவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பதை வீட்டிலிருந்த படி கேட்டுக்

கேட்டே ஏழெட்டு ஆதி தாள வர்ணங்கள் வரை, சுசீலா பாடம் செய்து வைத்திருந்தாள். அவளுடைய புத்தி சாலித்தனத்தை எண்ணி ஹரி மனத்துக்குள்ளேயே வியந்து கொண்டான். போட்டிக்காக அவள் பாட்டுக் கற்றுக் கொள்ளவில்லை; அப்படியே கற்றுக் கொண்டாலும் அது தவறல்ல என்று ஹரி தீர்மானித்தான். ஏனெனில் சுசீலாவுக்கு உண்மையிலேயே இசையில் ஆர்வம் இருப்பது தெரிந்தது. கேள்வி ஞானத்தைக் கொண்டே அவள் அடைந்திருந்த முன்னேற்றம், அவளுக்குச் சிரமமில்லாமல் மேற்பாடங்களை எடுக்க உதவியாக இருந்தது. ஸரளி, ஜண்டை, ஸ்தாயி வரிசைகள், தாட்டு வரிசைகள், அலங்காரம் ஆகிய வற்றையெல்லாம் சுசீலா ஒரு வாரத்துக்குள் சரியாக ஒப்பித்து விட்டாள். ஸ்வர ஜதிகளும், கீதமும், ஒரு மாதம். பிறகு அவள் கற்று வைத்திருந்த வர்ணங் களுக்கு மெருகூட்டி மேலும் சில ஆதிதாள வர்ணங்களை ஹரி அவளுக்குச் சொல்லிக் கொடுத்தான். சுசீலாவின் தொண்டை இனிமை ஹரிக்கு வியப்பாக இருந்தது. இந்தக் குரலை வீணே சண்டை போட்டுக் கத்தி வீணாக்குகிறாளே என்று வருந்தினான்.

பத்துப் பதினைந்து ஆதிதாள வர்ணங்களுக்குப் பிறகு, பைரவியில் அடதாள வர்ணத்தை ஹரி முதலாவதாக ஆரம்பித்தான்.

உடனே சுசீலா, ''எனக்குத்தான் பைரவியில் ஆதி தாள வர்ணம் பாடம் ஆகியிருக்கிறதே; வேறு ஏதாவது புதிய ராகமாக எடு'' என்றாள்.

ஹரி அவளை ஒரு முறை முறைத்துப் பார்த்தான். ''இதுவரை நீ குருநாதரின் மகள் என்ற மரியாதை கொடுத்து நீ படுத்துகிற பாட்டுக்கெல்லாம் உட்பட் டிருந்தேன்; இனிமேல் அதை எல்லாம் மூட்டை கட்டி

வைத்துவிடு. இப்போது நான் உனக்குக் குரு. மரியாதையோடும், பணிவோடும் இரு'' என்று சொல்ல அவன் நாக்குத் துடிதுடித்தது. ஆயினும் மறுகணமே தன் எண்ணத்தை மாற்றிக்கொண்டான்.

'இவளை இப்படியெல்லாம் பேசி வழிக்குக் கொண்டு வர முடியாது. அப்படி வந்தாலும் அதில் சுவாரசியம் இருக்காது' என்று எண்ணி, மனத்தில் ஒரு திட்டம் வகுத்துவிட்டான்.

''அப்போது உனக்குப் பைரவி வேண்டமா?'' என்று மிகவும் சாதாரணமாகக் கேட்பதுபோல் கேட்டான்.

சுசீலா அவனை ஒரு முறை உற்றுப் பார்த்தாள். ''பைரவி ராகமே இனிமேல் எனக்கு வேண்டாமென்றா சொன்னேன்? எனக்கு என்ன அத்துடன் சண்டையா மனஸ்தாபமா? ஏதாவது ஒரு புது ராகத்தில் சொல்லிக் கொள்ளலாம் என்று ஆசைப்பட்டேன்; அவ்வளவுதான்'' என்றாள்.

ஹரி மனத்துக்குள் அவளுக்கு ஆதிதாளத்தில் நடந்திருக்கிற வர்ணங்களை ஞாபகப்படுத்திப் பார்த்தான். பிறகு, ''சரி, ஆரம்பிக்கலாமா?'' என்று உற்சாகத்துடன் கேட்டான்.

சுசீலா சரியென்று தலையை அசைத்தாள்.

ஹரி தன் நோட்டுப் புத்தகத்தை அவள் முன்னால் பிரித்து வைத்து ஆரோகண அவரோகணத்தைப் பாட ஆரம்பித்தான்.

சுசீலா திடுக்கிட்டு ஹரியின் முகத்தைப் பார்த்தாள்.

''கதன குதூகலமா?''

''ஆமாம். ஏன், பெயரைப் பார்த்தவுடன் உன் குதூகலம் இருந்த இடம் தெரியாமற் போய்விட்டது?''

''இந்த வர்ணம் எனக்கு எப்படிவரும்?''

''வாயால் வரும். மனத்தால், புத்தியால் வரும்.''

''ஊஹூம்; எனக்கு வரவே வராது. யாராவது எடுத்ததுமே இந்த வக்ரராகத்தில் வர்ணத்தைக் கற்றுக் கொள்வார்களா? வருமா?''

''உனக்கு எல்லாம் வரும். நீதான் மகா புத்திசாலி யாயிற்றே. பாடம் ஆகாத புது ராகத்தில் வேண்டுமென்று பைரவி ஆரம்பித்தவுடன் சொன்னவள் நீதான? உனக்கு இருபது ஆதிதாள வர்ணம் வரும்; அதாவது சுமாராகத் தெரியும். அதைத் தவிர எனக்குத் தெரிந்த அடதாள வர்ணங்களின் அட்டவணை முன்பக்கத்தில் இருக்கிறது. அதில் உனக்கு எந்த ராகத்தில் வேண்டுமோ அதைச் சொல்லு. ஆரம்பிக்கிறேன்'' என்றான் ஹரி.

சுசீலா விடுவிடென்று விழிகளைப் புத்தகத்தின் மேலும் கீழும் ஓட்டினாள். பிறகு சிரித்துக்கொண்டே, ''இந்தக் கல்யாணி வர்ணம் சொல்லிக்கொள்ளுகிறேன்'' என்றாள்.

ஹரி சட்டென்று, ''முடியாது'' என்று மறுத்தான். ''உனக்கு ஆதிதாளத்தில் 'வனஜாட்சி' பாடமாகி யிருக்கிறதா இல்லையா?'' என்று கேட்டான்.

''இருக்கிறது.''

''பிறகு வேறு ஏதாவது புதிதாகக் கேள்.''

''வேறு என்ன இருக்கிறது?''

''பஹுதாரியும், மனோரஞ்சனியும்.''

''அவை இப்போது எப்படி வரும்?'' என்ற சுசீலா உடனே, ''பரவாயில்லை. சங்கராபரணம், காம்போதி, மோஹனம், சாவேரி, தோடி, பந்துவராளி ஆனந்த பைரவி இவற்றில் எதையாவது சொல்லிக் கொடு.' என்றாள்.

''உன் இஷ்டத்துக்கு இங்கே பாடம் நடக்காது. வேண்டுமானால் நீ முதலில் சொன்னபடி ஆதிதாளத்தில் உனக்கு நடக்காத புதிய ராகத்தில் சொல்லிக் கொடுக்கிறேன். இல்லையென்றால் உன் இஷ்டத்துக்குக் கல்யாணியும் காம்போதியும் இப்போது கிடையாது; முதலில் பைரவி வர்ணந்தான் ஆரம்பிப்பேன். எது சம்மதம் என்று சீக்கிரம் சொல்லு. எனக்குப் பத்தரை மணி வண்டிக்குத் திருவிடைமருதூர் போயாக வேண்டும்'' என்று ஹரி துரிதப்படுத்தினான்.

சுசீலா ஒரு கணம் அப்படியே விக்கித்துப் போனாள்.

'எப்படி இருந்த ஹரி எப்படி மாறிப் போனான்!' என்று அவள் மனத்துக்குள்ளேயே அதிசயித்துக் கொண்டாள். பாடம் ஏறி ஏறி வித்வத் வந்தவுடன், படிப் படியாகத் தன்னையும் அறியாமல் உயர்ந்து போய்க் கொண்டேயிருப்பதை அவள் கவனித்தாள். இனி அவன் தனக்கு அடங்க மாட்டான் என்ற பயம் அவள் உள்ளத்தை கவ்விக் கொண்டது. ஆகவே அவனிடம் இனிமேல் முரட்டுத் தனமாக நடந்து கொள்ளுவது தவறு என உள் மனம் எச்சரித்தது. அவனே தனக்குக் குருவாக வந்து வாய்ப்பான் என்று அவள் எதிர் பார்க்கவேயில்லை. மேலும் அவன் ஆரம்பத்திலேயே அவள் தலையில் ஒரு குட்டுக் குட்டி விட்டான். அந்த வலி அவள் நெஞ்சில் ஆழப் பதிந்துவிட்டது. அந்த வேதனையை அவள் ரசித்துக் கொண்டிருந்தபோது—

''என்ன, தூக்கம் வருகிறதா?'' ஹரி அவள் சிந்தனையைக் கலைத்தான்.

''தூக்கமா?'' அவள் ஆச்சரியத்துடன் கேட்டாள்.

''பின்னே இப்படியே தம்பூராவை வைத்துக் கொண்டு எதிரும் புதிருமாகப் போட்டோவுக்குப் போஸ் கொடுக்

கிறாப்போல் உட்கார்ந்து கொண்டேயிருந்தால் என்ன அர்த்தம்? பைரவி ஆரம்பிக்கட்டுமா?''

''ஹரி, ஒரு சின்னச் சந்தேகம். கேட்கலாமா?''

''என்ன?''

''போட்டோ என்றதும் ஞாபகத்துக்கு வருகிறது. நாம் இருவரும் இப்படியே பாட்டுச் சொல்லிக் கொள்வதுபோல் ஒரு போட்டோ எடுத்துக் கொண்டால்....''

''உருப்பட்டாற்போலத்தான்! அடதாள வர்ணம் ஆரம்பிப்பதற்குள்ளேயே கச்சேரிக்கு உட்கார்ந்திருக்கிற நினைப்பு வந்துவிட்டாற் போலிருக்கிறது. இந்த வெட்டிப் பேச்செல்லாம் வேண்டாம்; எங்கே பாடு.''

''ஸா, ரி நீ தா *நீ ஸாரீ, கஸாரீ''

சுசீலா கணீரென்று பாடினாள். ஹரி இரண்டு மூன்று முறை அவளைத் திருத்தினான்.

— 'பாடம் முடிகிற வரை நீ எப்படி வேண்டுமானாலும் என்னை ஆட்டி வைத்துக் கொள்; தம்பூராவைக் கீழே வைத்து விட்டால் பிறகு நான்தான் உனக்கு வாத்தியார். ஞாபகம் இருக்கட்டும். இன்று நீ திருவிடைமருதூர் போவதைப் பார்க்கிறேன்' என்று எண்ணிக் கொண்டாள். ஆனால் அன்று எப்படியோ சுசீலாவின் எண்ணப் படியே ஹரிக்கு திருவிடைமருதூர் போக முடியாமற் போய் விட்டது.

பாகவதர் பம்பாய் போயிருந்தார். அங்கே இன்னொரு கச்சேரிக்கு அவரைக் கேட்டதனால், 'டிசம்பர் முப்பத்தோராம் தேதிக் கச்சேரியை ஒத்திப் போட முடியுமா?, என்று திருநெல்வேலி சபா காரியதரிசியைக் கேட்டு ஹரி தந்தியடித்திருந்தான். 'பாகவதருக்கு எப்படிச் சௌகரியமோ அப்படிப் போடுகிறோம். அத்தனை தூரம் பம்பாயில் இருக்கிறவர்கள் பாகவதரின் பாட்டைக் கேட்க

அவ்வளவு ஆசைப்பட்டு இன்னொரு நாள் கேட்டிருக்கிற போது; அதற்கு நாமும் ஒத்துழைக்க வேண்டியதுதானே நியாயம்?' என்று காரியதரிசி மிகவும் கண்ணிமாகப் பதில் எழுதிவிட்டார்.

ஆகவே, பம்பாயிலுள்ள மற்றொரு கச்சேரியையும் உடனே ஒப்புக் கொள்ளும்படி பாகவதருக்கு அன்றே தந்தி அடித்து, விவரமாகத் தபால் எழுத வேண்டிய காரியங்களும் இருந்த படியால் ஹரி சுவாமி மலையை விட்டு அசைய முடியவில்லை. மறு நாள்தான் சென்றான்.

ஹரிக்கு லட்சுமியம்மாளிடமும் சரி, சுந்தரியிடமும் சரி, மிகுந்த மரியாதை உண்டு. பாகவதரிடம் எப்படிப் பணிவோடு நடந்து கொள்வானோ, அப்படித்தான், அவர்களிடமும் அவன் நடந்து கொள்வான். சொல்லப் போனால் சுந்தரியிடம் அவனுக்குச் சற்றுப் பயம் உண்டென்று கூடச் சொல்லலாம். 'சங்கீதத்தில் அந்த அம்மாள் தனக்குச் சமமான யோக்கியதையை உடையவள்' என்று தன் குருநாதர் வாயாலேயே சொல்லக் கேட்டிருந்ததனால் ஜாக்கிரதையாகவே நடந்து கொண்டான்.

ஆனால் லட்சுமியம்மாளிடம் அவனுக்குப் பெற்ற தாயைப் போல உரிமையும் அன்பும் அதிகம். அதனால் அங்கே பயமும் கட்டுப்பாடும் இல்லை. அதேபோலத்தான் ஹரியிடம் சுசீலாவும் வசந்தியும் நடந்து கொண்டனர். சுசீலாவுக்கு அவனிடம் உரிமை அதிகம். தான் இடுகிற கட்டளையை நியைவேற்ற அவன் கடமைப் பட்டவன் என்ற நினைப்பு, தங்கள் வீட்டோடு இருந்து சாப்பிட்டு வித்தைக் கற்றுக் கொண்டவன் என்ற எண்ணம் அவளுக்கு. அதனால் ஹரியிடம் அவளுக்கு மதிப்புக்குப் பதில் அலட்சியந்தான் மேலோங்கி நின்றதோ!—அவள் உள்ளத்தைப் புரிந்து கொள்ளவே முடியாது.

வசந்தியோ, ஹரியைத் தெய்வமாக மதித்து வழிபட்டாள். அவனுடைய வசீகரத் தோற்றமும் அடக்கமும்

அவளை ஆட்கொண்டு விட்டன. அவனால்தான் தன் உள்ளத்து எண்ணம் ஈடேற வகை ஏற்பட்டது என்ற வகையில் அவனிடம் அவளுக்கு அளவு கடந்த பக்தியும் பாசமும் பெருக்கெடுத் தோடின.

ஹரி இடுகிற கட்டளையினின்றும் அவள் பிறழுவ தில்லை. தன் விருப்பு வெறுப்புகளுக்கு இடம் கொடுப்ப தில்லை. அவன் விருப்பத்துக்கெல்லாம் அவள் குரலைத் திருப்பினாள். அவனாகப் பார்த்துக் கற்றுக் கொடுப்பதை தவிர எதிர் வார்த்தை பேச மாட்டாள்.

இப்படி இரண்டு வித குண விசித்திரமுள்ள சிஷ்யை களுக்கு ஹரி குருவாக விளங்கினான். அங்கே சுசீலா அவனுக்குக் கட்டளையிடுகிறாள். இங்கே வசந்தி அவன் நாவசைவுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறாள். ஆனால் இருவருமே புத்திசாலிகள். குணத்தைத் தவிர அறிவில் அவர்களுக்குள் ஏற்றத் தாழ்வு இல்லை. ஒரே மரத்துக் கனிகள் அல்லவா?

''இன்று என்ன புதுப் பாடம் எடுக்கலாம்?'' என்று ஹரி கேட்டான்.

வசந்தி பதிலே பேசவில்லை.

''நான் கேட்டது காதில் விழவில்லையா? உன்னைத் தான் கேட்கிறேன்'' என்றான் ஹரி மீண்டும்.

''எனக்கு என்ன சொல்லிக் கொடுக்கவேண்டும் என்பது உங்களுக்குத்தானே புரியும்; என்னைக் கேட் டால்?'' என்றாள் வசந்தி.

ஹரி மனத்துக்குள் சிரித்துக் கொண்டான். அப்போது சுந்தரி உரத்தக் குரலில், ''ஹரி ஹரி'' என்று திண்ணைப் பக்கத்திலிருந்து கூப்பிடுகிற குரலைக் கேட்டு இருவருமே எழுந்து வாசலைப் பார்க்க விரைந்தனர்.

அவர்களைப் பார்த்ததும் சுந்தரியின் கண்களில் நீர் வந்து விட்டது; ''ஹரி இந்த ஆள் சுவாமி மலையிலிருந்து

வந்திருக்கிறார். என்ன சொல்லுகிறார் .என்று கேள்' என்று கூறி விட்டுத் தாங்க முடியாத துக்கத்தோடு உள்ளே சென்றாள்.

பம்பாயிலிருந்து வந்த பாகவதர் சென்டிரல் ஸ்டேஷனில் இறங்கியபோது ரெயிலிலிருந்து இடறி விழுந்து அடிபட்டு ஊருக்கு வந்திருப்பதாகவும்; உடனே ஹரியை அழைத்து வரச் சொன்னதாகவும் வந்திருந்த ஆள் கூறவே ஹரியும் வசந்தியும் செயலிழந்து நின்றனர்.

## 16. பாடியது யார்?

'நம்பிக்கை' என்ற மகத்தான கவசத்தைப் பூட்டித் தான் மனிதனைக் கடவுள் உலகுக்கு அனுப்பிவைக்கிறார். நம்பிக்கை இல்லையேல் வாழ்வு ஏது? அதில் ரசனைதான் ஏது?

ஆனால் பாகவதருடைய வாழ்க்கை என்னவோ ரசனையற்றுத்தான் போய்விட்டது. ரெயில் விபத்தி லிருந்து அவர் பிழைத்ததே மறுபிறப்பு என்றுதான் எல்லோரும் எண்ணினர். பம்பாய் மெயிலில் வந்து இறங்கிய பாகவதர், வண்டியிலிருந்து பிளாட்பாரத்தில் காலை வைந்தபோது வண்டி ஒரு முறை குலுங்கி முன்னும் பின்னும் அசைந்து நின்றது. பிடித்திருந்த பிடியை விட்டுப் பாகவதர் அப்படியே நிலைதவறி விழுந்து விட்டார். பஞ்சு அண்ணா பாய்ந்து வந்து பிடித்துக் கொள்வதற்குள் மண்டையில் பலமான அடிபட்டு ரத்தம் வந்தது. பாக வதரும் பிரபலமானவர், விழுந்த இடமும் பிரபலமான இடம்; கூட்டம் கூடிவிட்டது. பாகவதரை ஆஸ்பத்ரிதிக்குக் கொண்டு போனார்கள். நல்ல காலம், உயிருக்கு ஒன்றும் ஆபத்தில்லை என்றாலும், தலையிலும், காலிலும் அடி பலமாகத்தான் பட்டு விட்டது.

முதல் சிகிச்சை செய்த டாக்டர் எவ்வளவு கேட்டுக் கொண்டும் பாகவதர் சென்னையில் தங்க மறுத்து, "நான் ஊருக்கே போய்விடுகிறேன். அதுதான் எனக்கு நிம்மதி" என்று கூறிவிட்டார்.

பாகவதருடன் பிரயாணம் செய்த சங்கீத ரசிகர் ஒருவர், ''அப்படியானால் நீங்கள் ரெயிலில் போகக்கூடாது'' என்று கூறித் தமது காரை அனுப்பி வைத்தார்.

பாகவதர் வந்து சேருவதற்குள் அந்த விஷயம் ஊரில் பரவிவிட்டது. அவர் சுவாமிமலை வந்ததும் லட்சுமியம்மாள் உடனே அந்தக் காரை திருவிடைமருதூருக்கு அனுப்பி வைத்தாள். சுந்தரியும் வசந்தியும் ஹரியும் புறப்பட்டு வந்தபோது வீடு முழுவதும் கூட்டமாக இருந்தது.

பாகவதருடைய தலையில் இருந்த கட்டைப் பார்த்து சுந்தரியும் வசந்தியும் கலங்கிவிட்டனர். ஹரி அவர் கட்டிலிலேயே உட்கார்ந்திருந்தான். நினைவு திரும்பிய போதெல்லாம் அவர் ஹரியின் பெயரையே சொல்லிக் கொண்டிருந்தார்.

அவன் அவரருகிலேயே இருந்து இரவுபகல் பாராமல் உதவி வந்தான். பகலெல்லாம் அவனுக்கு, கச்சேரி கேட்டு எழுதுகிறவர்களுக்குப் பதில் எழுதுவதும், கச்சேரி ஒப்புக் கொண்டிருக்கிற இடங்களுக்குப் பாகவதர் சுகவீனம் காரணமாக வர இயலாமை குறித்துக் கடிதம் எழுதுவது மாக வேலைகள் அதிகம் இருந்தன.

வசந்தியும் சுந்தரியும் வந்த அன்றே திரும்ப ஊருக்குச் சென்றுவிட்டனர். பிறகு, தினம் ஒருதடவை அவர்களில் யாராவது ஒருத்தி வந்து பார்த்து விட்டுச் சென்றாள்.

தந்தையைப் பார்க்க வேண்டுமென்று தோன்றிய போதெல்லாம் வசந்தி தயங்காமல் வந்தாள். காயத்திரியும் பெரியம்மாவும் அவளிடம் மிகவும் அன்போடு பழகினார்கள். விரைவிலேயே பாகவதருடைய உடல் தேறி வந்தது. தலைக்கட்டைப் பிரித்தார்கள்; தழும்பு ஆறி வந்தது. ஆனாலும் குளிக்கவோ, எழுந்து நடமாடவே கூடாது என்று டாக்டர் கட்டளை பிறப்பித்திருந்தார்.

ஒப்புக்கொண்ட கச்சேரிகள் எல்லாம் ரத்தாகின்றனவே என்று அவர் மனம் வேதனைப்பட்டது. அந்த வேதனைகளை மறந்திருக்க அவருக்கு ஒரே மருந்துதான் பயனுள்ளதாக உதவியது; ஹரியை ஓயாமல் பாடச்சொல்லிக் கேட்பதுதான் அது—

இந்தச் சந்தர்ப்பத்தில் ஹரிக்குப் புதிய பாடங்கள் நிறைய நடந்தன. சாதாரண சமயமாக இருந்தால் பாகவதர் மாதத்தில் பத்து நாள் ஊரில் தங்குவதே அபூர்வம். அதிலும் பாடம் நடத்த நான்கு நாள் கிடைப்பதே அரிது. இப்போது கிடைத்திருக்கும் சந்தர்ப்பத்தை ஹரி பரிபூர்ணமாகப் பயன் படுத்திக் கொண்டான்.

பாகவதர் அவனுக்கு சிம்மநந்தன தாளத்தில் ஒரு பெரிய பல்லவியைச் சொல்லிக் கொடுத்திருந்தார். அதை அவன் பாடிக் காட்டிக் கொண்டிருந்த போது, வாசலில் நாலைந்து பேர்—பாகவதரைப் பார்க்க வந்தவர்கள்—உள்ளே பாடிக் கொண்டிருப்பதை அறிந்து திண்ணையிலேயே உட்கார்ந்திருந்தனர்.

லட்சுமி அம்மாள் அவர்களைத் தெரிந்துக் கொண்டு உள்ளே வந்து உட்காரும்படி கேட்டுக் கொண்டும் அவர்கள் பாட்டு முடிகிற வரையில் திண்ணையிலேயே இருந்தனர். காரணம், வந்திருந்தவர்கள் பஜனை மடத்தின் நிர்வாகிகள்; பாகவதரின் குணத்தை நன்கு அறிந்தவர்கள்.

பாடம் முடிந்து லட்சுமியம்மாள் போய்க் கூறவும், பாகவதர் அவர்களை ''வாருங்கள் வாருங்கள்'' என்று அன்புடன் வரவேற்றார். சிறிது நேரம் உடல் நிலையைப் பற்றி விசாரித்த பின் அவர்கள் வந்த காரியத்தைக் கூறினர்:

''வருகிற வெள்ளிக் கிழமையிலிருந்து பஜனை மடத்தில் ஸ்ரீராமநவமி உற்சவம் ஆரம்பம். அன்று உங்கள் கச்சேரி

போட்டிருக்கிறது. உங்களுடைய சௌகரியத்தைத் தெரிந்து கொண்டு போகலாம் என்றுதான் வந்திருக்கிறோம்'' என்றனர்.

''என் சௌகரியம் என்ன இருக்கிறது? இதைப் பற்றி உங்களுக்கு முன்னதாக நான் யோசனை செய்து வைத்திருக்கிறேன். இப்போது உங்களுடைய அபிப்பிராயமும் தெரிந்து விட்டால் முடிவான மாதிரிதான்.''

''இது உங்களுடைய சொந்த உற்சவம் மாதிரி. நீங்கள் எப்படிச் சொன்னாலும் அதன்படி நடக்கிறோம்.''

பாகவதர் ஒரு நிமிஷம் அவர்களுடைய முகத்தைப் பார்த்து விட்டுக் கூறினார்.

''நான் இப்போது சொல்லப் போவது என் சம்பந்தப்பட்ட விஷயம். இல்லாவிட்டால் இதற்குள், 'நீங்கள் இப்படிச் செய்யுங்கள், அல்லது அப்படிச் செய்யுங்கள்' என்று அபிப்பிராயத்தைக் கூறியிருப்பேன். இது பொது விஷயம். என்னதான் என்னை நீங்கள் எல்லாரும் தூக்கி வைத்துப் பேசினாலும் நாளைக்குக் கமிட்டியில் யாராவது ஒரு வார்த்தை சொல்லும்படி ஆகிவிட்டால் எனக்குத் தாங்காது. அதற்காகத்தான் முதலிலேயே இவ்வளவு தயங்குகிறேன்.''

''அண்ணா, அப்படியெல்லாம் ஒருக்காலும் நேரவே நேராது. உங்களை மீறிப் பேசக் கூடியவர்கள் இந்த ஊரில் யாரும் இல்லை. நீங்கள் தாராளமாக உங்கள் மனத்திலுள்ளதைச் சொல்லலாம்'' என்றார் உதவிக் காரியதரிசி.

பக்கத்தில் இருந்த ஹரியைப் பார்த்துச் சிரித்தபடி, பாகவதர் கேட்டார், ''ஹரி பாடி நீங்கள் கேட்டதில்லையே?''

''கேட்டதில்லை. ஆனால் வந்ததும் தம்புரா சப்தம் கேட்டது. பாடம் நடக்கிறது என்று எண்ணினோம்.

பிறகு நீங்களே பாடிக் கொண்டிருந்தீர்கள். அதனால் உங்களைத் தொந்தரவு செய்யாமல் ஆனந்தமாகத் திண்ணையில் உட்கார்ந்த படியே கேட்டுக்கொண்டிருந் தோம்.''

பாகவதர் மனத்துக்குள் சிரித்துக் கொண்டார். அவர் உள்ளத்தில் மகிழ்ச்சி பாவோடியது.

''சற்று முன்பு உள்ளே பாடியது என் பாட்டைப் போலவா இருந்தது?'' இந்தக் கேள்வியைக் கேட்ட போது அவரது மனம் பெருமையால் பூரித்தது.

''என்ன அண்ணா இப்படிக் கேட்கிறீர்கள்? உங்கள் பாட்டு எங்களுக்குத் தெரியாதா?''

''இல்லை, நீங்கள் ஏமாந்துவிட்டீர்கள். இந்த உடம் போடு நான் பாடுகிறதாவது? வாயைத் திறந்தால் தலையில் 'விண் விண்' என்று தெறிக்கிறது. நீங்கள் கேட்டது ஹரியினுடைய பாட்டு.''

பாகவதர் கூறி முடிக்கு முன்பு, வந்திருந்தவர்கள் ஆச்சரியத்தினால் வாயைப் பிளந்தனர்.

''என்ன அண்ணா இது? ஷண்முகப்பிரியாவில் அத்தனை பெரிய பல்லவியை இத்தனை அழகாகப் பாடியது ஹரியா? நீங்கள் இப்போது சொல்லியுங்கூட எங்களால் நம்ப முடியவில்லை, அண்ணா!''

''சரி, உங்களுக்கும் ஹரியினுடைய பாட்டுப் பிடித்துப் போய்விட்டது. அப்படியானால் நான் ஒன்று சொல்லுகிறேன்; அதன் படிச் செய்யலாமா?''

''தாராளமாக.''

''இந்த வருஷம் எனக்குப் பதிலாக ஹரியைப் பாட வைத்து விடுவது; என்ன சொல்லுகிறீர்கள்?''

பாகவதருடைய இந்த வார்த்தையைக் கேட்டதும் வந்திருந்த அத்தனை பேருடைய முகங்களும் மலர்ந்தன.

காரியதரிசி பாபு சட்டென்று எழுந்து நின்று, ''நாங்கள் இனி என்ன அண்ணா சொல்லப்போகிறோம்? சற்று முன்பு நீங்கள் உடம்புக்கு முடியாதென்று கூறியதும் நாங்கள் உங்களிடம் என்ன கேட்க வேண்டுமென்று எண்ணினோமோ அதை நீங்கள் சொல்லிவிட்டீர்கள். கமிட்டியில் பாஸ் செய்து பத்திரிகை அச்சடித்து விடுகிறோம் அண்ணா'' என்றார்.

அத்தனை நேரம் அங்கே நடந்தவற்றைப் பார்த்துக் கொண்டிருந்த ஹரி, சட்டென்று பாகவதரின் கால்களில் சாஷ்டாங்கமாக விழுந்தான். அவன் இமைகள் நீர் கோத்து ஈரமாக இருந்தன.

''ஐயா, இவர்கள் எல்லாம் ஏதோ உற்சாகத்தில் என்னைக் குஷிபடுத்திப் பேசிவிட்டார்கள். குருவி தலையில் பனங்காயைச் சுமத்துவது போல, அரங்கேற்றங் கூட ஆகாத என்னைக் கொண்டுபோய் அத்தனை பெரிய சதஸில் உட்கார வைத்தால் என்னால் சாமளிக்க முடியுமா?'' என்றான் பணிவாக.

''எல்லாம் சமாளிப்பாய். உன் யோக்கியதையையும் திறமையையும் இவர்கள் சொல்லியா நான் தெரிந்து கொள்ளப் போகிறேன்? பனங்காய் அல்ல, பர்வதத்தையே தாங்குகிற சக்தி உனக்கு இருக்கிறது. ராமர் சந்நிதியில் வெள்ளிக்கிழமை உனக்கு நடக்கப் போகிறது பார்; அதுதான் உன் அரங்கேற்றக் கச்சேரி. ஒன்றுக்கும் கவலைப்படாதே. எல்லாம் ஜமாய்த்துவிடுவாய்'' என்றார் பாகவதர்.

சிறிது நேரம் எல்லாரும் கச்சேரியைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தனர். ஹரிக்கு யாரைப் பக்கவாத்தியமாகப் போடுவது என்பதைப்பற்றிச் சர்ச்சையைக் கிளம்பினார் பாபு. பிடிலைப் பொறுத்தவரை கைராசிக்காரரான பஞ்சு

அண்ணா தாம் என்பது எல்லாருடைய அபிப்பிராயமும். மிருதங்கத்துக்கும், மற்றப் பக்கவாத்தியங்களுக்கும் அப்படியும் இப்படியுமாக எல்லாம் போட்டுப் பார்த்து இறுதியில், 'பாகவதருக்கு வழக்கமாக உள்ள பழைய செட்டே இருக்கட்டும்; ஒன்றும் மாற்ற வேண்டாம்' என்ற முடிவுக்கு வந்து நின்றனர். பாகவதருக்கும் அதுவே சரி என்று பட்டது. "இப்படியே கமிட்டியில் பாஸ் பண்ணி நோட்டீசுக்குக் கொடுத்துவிடுகிறோம். உடம்பை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளுங்கள் அண்ணா" என்று கூறி விடைபெற்றுச் சென்றனர்.

அவர்கள் போனபிறகுதான் பாகவதருக்கு நல்ல மூச்சு வந்தது. ஹரியைப்பற்றி அவர்கள் எல்லாரும் புகழ்ந்து பேசியதும், தம்முடைய ஸ்தானத்திலேயே; முதல்நாள் ஹரியினுடைய கச்சேரியை அவர்கள் போட இருப்பதும் அவருக்குப் பெருமையாகத்தான் இருந்தன. ஆனால் அதே சமயத்தில், இது விஷயமாகக் கமிட்டியிலோ, அடுத்துப் பாடப்போகிற வித்துவான்களுக்கிடையிலோ ஏதாவது அபிப்பிராய பேதம் தலைதூக்கி விடக் கூடாதே என்றும் எண்ணினார்.

காரணம், ஹரி முதன் முதலாகக் கச்சேரிக்கு உட்காருகிறவன்; இளம் வித்துவான். அரங்கேற்றம் இது தான். இப்படி இருக்கும் போது அநுபவம் மிக்க பிரபல வித்துவான்கள் தவறாக எண்ணி விடக் கூடாதே என்பது தான் அவரது கவலைக்குக் காரணம்.

இப்படிப் பல விதமான எண்ணங்களில் உழன்ற அவரது சிந்தனையைச் சுசீலா கலைத்தாள். பெண்ணின் அழைப்பைக் கேட்டு உணர்வு பெற்ற பாகவதர் திரும்பிப் பார்த்தார்.

பழரசத்தைத் தகப்பனாருக்குக் கண்ணாடித் தம்ளரில் ஊற்றிக் கொடுத்துக் கொண்டே, "ஏன் அப்பா, இந்த

வருஷம் உங்களுக்குப் பதிலாக ஹரியா பஜனை மடத்தில் பாடப் போகிறான்?'' என்று கேட்டாள்.

''ஆமாம்! அதற்குள் உனக்கு எப்படித் தெரியும்? நோட்டீஸ் கூட நாளைக்குத் தானே தயாராகும்?''

''போங்கள் அப்பா. வீட்டுக்குள் நடக்கிற விஷயத்தை நோட்டீஸில் பார்த்துத் தான் தெரிந்து கொள்ள வேண்டுமா?''

''பின், உன் வழக்கபடி ஒட்டுக் கேட்டுக்கொண் டிருந்தாயோ?''

''ஆமாம் உங்களுக்கு எப்போதும் என்னைக் குற்றம் சொன்னால்தான் பிடிக்கும். நான் ஒன்றும் ஒட்டுக் கேட்க வில்லை; உடைசலும் கேட்கவில்லை. ஹரிதான் சற்று முன்பு அக்காவிடம் கொல்லையில் வந்து பிரமாதமாக அளந்து கொண்டிருந்தான்; 'என்னைக் கேட்காமலே அப்பா எல்லா ஏற்பாடும் செய்து விட்டார். எப்படித்தான் சமாளிக்கப் போகிறேனோ? நல்ல பெயர் இல்லா விட்டாலும் கெட்ட பெயராவது வாங்கிக் கொடுக்காமல் இருந்தால் போதும்' என்று.''

உடனே பாகவதர், ''அதை நீ ஒட்டுக் கேட்டுக் கொண்டு வந்துதானே இங்கே சொல்லுகிறாய்? இல்லா விட்டால் உனக்கு எப்படித் தெரியும்? சுசீலா, நீ இந்தப் பழக்கத்தை விட்டுவிடு. நிச்சயம் உன்னை அருகில் வைத் துக்கொண்டு இதை அவன் காயத்திரியிடம் சொல்லியிருக்க மாட்டான். அவன்தான் உன்னைக் கண்டாலே நடுங்கு கிறானே!'' என்றார்.

''என்னைக் கண்டு எதற்கு நடுங்க வேண்டும்? நான் என்ன கரடியா, புலியா?'' என்று கேட்டுச் சிரித்தாள் சுசீலா.

''சரி சரி, வாயாடி! ஹரியைப் பார்த்தால் இங்கே வரச் சொல்'' என்றார் பாகவதர்.

உடனே சுசீலா, ''அவன் வைத்தியர் வீட்டுக்குப் போயிருக்கிறான். என்னப்பா விஷயம்?'' என்றாள்.

''ஒன்றுமில்லை; கச்சேரிக்கு முன்னால், எல்லாப் பக்கவாத்தியங்களோடும் இரண்டு நாளைக்குப் பாடி பார்த்துக் கொள்ள வேண்டும். பிறகு அங்கே வந்து மிருதங்கக்காரருடைய 'ததிங்கிணத்தோமி' லும் கஞ்சீராக் காரருடைய 'மோராவிலும்'; கடக்காரருடைய கோர்வையிலும் மிரண்டு தாளத்தைக் கோட்டை விட்டு விடாமல் ஒத்திகை பார்த்துக் கொள்வது நல்லதல்லவா? பஞ்சு அண்ணா ஒருவரைத்தான் அவனுக்குத் தெரியும். குழந்தை மாதிரி அநுசரித்துக் கொண்டு போய்விடுவார் நல்ல பழக்கமுண்டு. மீதிப் பேர் அவனுக்குப் புதிசுதானே? அவர்களை நான் வரச் சொன்னேன் என்று இவன் போய்ச் சொன்னால் உடனே வருவார்கள். அதற்குத்தான் கூப்பிடுகிறேன்.''

''சரி அப்பா, ஹரி வந்ததும் உடனே சொல்லுகிறேன்'' என்று கூறிய சுசீலா உள்ளே சென்றாள்.

பாகவதர் அவள் செல்லுகிற திக்கையே பார்த்துக் கொண்டிருந்தார்.

'இந்தச் சுசீலா இன்னும் கொஞ்சங்கூடத் திருந்த வில்லை; அப்படியே தானே இருக்கிறாள்? இவளுக்கு எப் போது கோபம் வரும், எப்போது சிரிப்பு வரும், அழுகை வரும் என்று இன்னும் யாராலும் கண்டு பிடிக்கவே முடிய வில்லையே! ஹரியிடம் இவள் எப்படியோ நடந்துகொண்டு போகட்டும்; பரவாயில்லை. விரட்டி விரட்டிப் பிடிக்கிற இவளுடைய பூனைச் சுபாவத்துக்கு ஒத்தாற்போல், பதுங் கிப் பதுங்கி வாழ அவனும் கற்றுக் கொண்டுவிட்டான். ஆனால் இந்தச் சுபாவத்தோடு நாளைக்கு இவள் புருஷன் வீட்டில் போய் எப்படி வாழப் போகிறாள்? அல்லது இவளது இந்தக் குணத்துக்கு யாரால் ஈடு கொடுக்க முடியும்?' என்று எண்ணி எண்ணிக் கவலைப்பட்டார்.

''கூப்பிட்டீர்களா அப்பா?''—

மல்லாந்தபடி யோசித்துக்கொண்டே இருந்தவர், சட்டென்று குரல் வந்தபக்கம் திரும்பிப் பார்த்தார். பக்கத்தில் காயத்திரி நின்றுகொண்டிருந்தாள்.

''உன்னை நான் கூப்பிடவில்லையே?'' பாகவதர் ஆச்சரியத்துடன் கூறினார்.

''பாருங்கள் அப்பா, சுசீலாவின் குறும்புத்தனத்தை. 'அப்பா உன்னைக் கையோடு கூப்பிடுகிறார்' என்று பருத்திக் கொட்டை அரைத்துக்கொண்டிருந்த என்னை இங்கே துரத்தி விட்டிருப்பதை''. காயத்திரி சிணுங்கினாள்.

''போகட்டும்; அதுதான் பருத்திக் கொட்டை தின்கிற ஜன்மம் என்று தெரிந்திருக்கிறதே; நீ போய் வேலையைப் பார். ஹரி வந்தால் என்னிடம் அனுப்பி வை'' என்று சமாதானம் கூறி அனுப்பினார்.

காயத்திரி மறு வார்த்தை பேசாமல் தலையை அசைத்துவிட்டு உள்ளே சென்றாள். அவருடைய உள்ளம் ஒரு முறை குலுங்கியது- தாங்க முடியாத துக்கம் அவரது நெஞ்சுக் குழியை அடைத்துக் கொண்டது. அதை மென்று விழுங்குவதற்குள் பிராணனே போய் விடும் போலிருந்தது. கண்ணிலிருந்து நீர் மாலை மாலையாக வழிந்தோடியது.

'நிச்சயம் சுசீலா அமோகமாக, ஆனந்தமாக வாழ்க்கையிலே துளிக் கூட கஷ்டப்படாமல்தான் இருப்பாள். அவளை போன்ற இறுமாப்புச் சுபாவமும்; உலகத்தை எட்டி உதைக்கிற முழங்கால் உறுதியும் உள்ளவர்களால்தான் இந்தப் பூமியில் நடமாட முடியும். இல்லாவிட்டால் இந்தப் பொல்லாத உலகம் காயத்திரியைப் போன்ற மாணிக்கங்களை மண்ணில் உருட்டிக் கல்லால் தான் நசுக்கி விடும்!'

—'அம்மா காயத்திரி; உன்னைப்போல இத்தனை சத்தியமும் தன்மானமும் ரோஷமும் உள்ளவர்களுக்கு இது காலமல்ல. இல்லாவிட்டால், பூவும் மஞ்சளுமாகப் பூத்துக் குலுங்கிப் புதுவாழ்வு வாழ வேண்டிய இத்தனை சிறிய வயதில் உன் நெற்றி பாழாகி இந்தக் கோலம் வந்திருக்குமா; வீட்டுக்கு மூத்தப் பெண்; செல்லமாக வளர்ந்தவள்; உன் குணத்துக்கு ஒரு குறையும் வரக் கூடாது; நீ பிரமாதமாக வாழவேண்டும் என்று எண்ணித் தானே பணத்தைத் தண்ணீராக இறைத்துத் தங்க விக்கிரகம் மாதிரி ஜோடி சேர்த்தேன்? ஒரு வேளை தங்கமாக இருந்ததனாலேதான் 'அவனுக்கு' ஆபத்து வந்ததோ? எமதர்ம ராஜனுக்கு உன் புருஷனை அபகரித்துக் கொண்டு போக வேண்டும் என்ற ஆசை வந்ததோ? —திருமணமாகி ஆறே மாதத்தில் என் பெண்ணின் தாலியைப் பறித்துக் கொண்டு போய்விட்டாயே; கொள்ளைக்காரா!' என்று குலுங்கக் குலுங்க அழுத பாகவதர், ''அப்பா'' என்ற குரலைக் கேட்டுக் கண்களைத் துடைத்துக் கொண்டு திரும்பினார். எதிரே வசந்தி நின்று கொண்டிருந்தாள்.

## 17. பால் கறக்கவா?

பாகவதரைப் போன்ற மனோதைரியமும், நெஞ்சுறுதியும் உள்ளவர்களைப் பார்ப்பது அரிது. எந்த நிலைமையையும் எதிர்த்து நின்று உறுதியோடு சமாளிக்கும் ஆற்றல் பெற்றவர். எதற்கும் கலங்காதவர். அப்படிப்பட்டவரே அன்று கண்கலங்கி விட்டார்.

கச்சேரி ஒன்றுக்காகக் காலண்டரைப் புரட்டிப் பார்ப்பதைத் தவிர, எதிர் காலத்தைப் பற்றி அவர் கனவுகூடக் காண்பவரல்ல. அதற்காக எந்தத் திட்டமும் அவர் வகுக்கவில்லை. ஆனால் இப்போது அதையெல்லாம் தாம் கவனிக்கத் தவறியது பெரும் தவறு என்று அடிக்கடித் தோன்ற ஆரம்பித்தது. குடும்ப பாரத்தைப் பற்றி சிந்திக்கலானார். காயத்திரியைப் பற்றி நினைத்த போதெல்லாம் கண் கலங்கியது. அவளுடைய எதிர்காலத்துக்கு ஏதாவது ஏற்பாடு செய்தாக வேண்டும் என்று எண்ணினார்.

சுசீலா, வசந்தி திருமணததைப் பற்றி எண்ணினார். இத்தனைக்கும் மேலாக ஹரியைப் பற்றி எண்ணிக் கவலைப் பட்டார். இப்படி கவலைப்படுவதே வழக்கமாகி விட்ட பின் இனித் தாம் எழுந்து சச்சேரி செய்ய முடியும் என்ற தைரியத்தையும் அவர் அறவே இழந்து விட்டார். திடீரென்று ஒரேயடியாக முதுமையை அடைந்து; உடல் தளர்ச்சியடைந்து விட்டாற்போல் தோன்றியது அவருக்கு. கண் கலங்கியது.

அருகில் இருந்த வசந்தி, "ஏன் அப்பா அழுகிறீர்கள்?" என்று கவலையோடு கேட்டபோது, அவளுக்கு என்ன பதில் கூறுவதென்றே அவருக்குத் தெரியவில்லை.

''உங்களையெல்லாம் எண்ணித்தான் அம்மா கவலைப் படுகிறேன்'' என்று பொதுவாகத்தான் அவரால் கூற முடிந்தது. ஆனால், அப்படிக் கூறியதே எத்தனை தவறாகிவிட்டது!

''எங்களைப்பற்றி என்னப்பா கவலை? அம்மாவும் நானும் இருப்பது உங்களுக்குப் பாரமாகத் தோன்றுகிறதா அப்பா?''

வசந்தியின் வார்த்தைகள் 'சுரீர்' என்று பாகவதரின் உச்சி நரம்பைச் சென்று தாக்கின.

''வசந்தி, நான் என்ன சொன்னேன்; நீ என்ன பதில் சொல்லுகிறாய்? உங்களைப் பற்றி என்றால், நீயும் அம்மாவுந்தானா? இங்கே உள்ளவர்களை ஏன் தள்ளி வைத்துவிட்டாய்? உன்னை நான் மிகவும் புத்திசாலி என்று எண்ணியிருந்தேனே, வசந்தி! இந்த வார்த்தைகள் உன் பெரியம்மா காதில் விழுந்தால் அவள் மனம் என்ன பாடு படும்? உங்களைப் பற்றி என்றால் காயத்திரி, நீ, சுசீலா ஆகியவர்களையும் பற்றித் தான் கூறினோன். மனிதன் எழுந்து நடமாடும்போது மனமும் கூத்தாடுகிறது. அவன் விழுந்து விட்டால் அதுவும் படுத்துவிடுகிறது, இனிமேல் முன்போல் எழுந்து நடமாடுவேன் என்ற நம்பிக்கை எனக்கே இல்லை.'' பாகவதர் மளமளவென்று பேசித் தீர்த்தார்.

''நான் தவறாகப் பேசிவிட்டதற்கு என்னை மன்னித்து விடுங்கள் அப்பா. நீங்கள் இவ்வளவு கவலைப்பட்டு அதைரியமடைவதற்கு அர்த்தமே இல்லை. இப்போது எங்களுக்கு என்ன வந்துவிட்டது? நீங்கள் விரைவிலேயே குணமடைந்து கச்சேரி பண்ணத்தான் போகிறீர்கள். வீணாக நீங்களே இப்படிக் கவலைப்பட்டால், எங்களுக்கு ஆறுதல் கூற யார் இருக்கிறார்கள்? நீங்கள் கீழே விழுந்த செய்தியைக் கேட்டதிலிருந்து, அம்மா அரை வயிற்றுக்குக் கூடச் சாப்பிடுவதில்லை. 'எல்லாரையும் போல் கூடவே

இருந்து இந்தச் சமயத்தில் பணிவிடை செய்யக்கூடக் கொடுத்து வைக்காத பாவியாகிவிட்டேன்' என்று அழுது கொண்டே இருக்கிறாள். ஆனால் யார் எது வேண்டுமானாலும் நினைத்துக் கொள்ளட்டும்; நான் இப்போது தினம் வந்து உங்களைப் பார்த்து விட்டுப் போவது என்று வைத்துக் கொண்டிருக்கிறேன்'' என்றாள் வசந்தி.

இதைச் கேட்டதும் பாகவதர் சற்றுக் கோபமாகப் பேசினார்: ''யார் உன்னை என்ன நினைத்துக் கொள்ள இருக்கிறது? நீ என்னுடைய பெண்; உன் தாய் என் மனைவி. இந்த விஷயத்தை ஒளிவு மறைவில்லாமல் வைத்துக் கொண்டிருக்கிறேன். இந்தச் சுப்பராமன் தவறான வழிக்குப் போக மாட்டான். என் மனத்துக்குச் சரி என்று பட்டதை இந்த உலகமே எதிர்த்து வந்தாலும், நான் அதிலிருந்து தவற மாட்டேன். அதற்கு ஹரியினுடைய உதாரணம் ஒன்று போதாதா? அவனை நான் வீட்டோடு வைத்துக் கொண்டு சங்கீதம் சொல்லிக் கொடுப்பதற்கு என்னை எத்தனை பேர் எவ்வளவு கேள்விகள் கேட்டிருப்பார்கள் என்று உனக்குத் தெரியுமா? நான் எதையாவது லட்சியம் செய்திருப்பேனா? இந்தப் பொறாமை பிடித்த உலகம் —பிறர் வாழ்ந்தாலும் பார்க்கப் பிடிக்காமல் கண்ணை மூடிக்கொள்ளும்; தாழ்ந்தாலும்; எங்கே உதவி கேட்க வந்து விடுவானோ என்று பயந்து கண்ணை மூடிக் கொள்ளும். இதை நானா மதிப்பவன்?''

உணர்ச்சி வேகத்தோடு பேசியதானால் பாகவதருக்கு இரைத்தது. அதற்குள் ஹரியும் அங்கே வந்தான். உடனே பாகவதர் அவனிடம், ''போன காரியம் என்ன? ராஜப்பாவையும், சாமாவையும் பார்த்தாயா? என்ன சொன்னார்கள்?'' என்று கேட்டார்.

''அவர்கள் இரண்டு பேருமே வெளியூர்க் கச்சேரி முடிந்து வெள்ளிக் கிழமை காலையில்தான் ஊருக்கு வருகிறார்களாம்'' என்று ஹரி கூறினான்.

''சரி, ஆண்டவன் விருப்பப்படியே நடக்கட்டும். அதற்கு மேல் நாம் என்ன செய்ய? இந்த இரண்டு நாளைக்கும் நீ எனக்கு ஒன்றும் செய்யவேண்டாம்; இங்கே இருப்பவர்கள் கவனித்துக் கொள்வார்கள். கச்சேரிக்கு வேண்டியதை எல்லாம் தயார் பண்ணிக் கொள்'' என்றார்.

வசந்தி ஹரியை ஓரக் கண்ணால் ஒரு முறை பார்த்தாள். பாகவதர் உடம்பு சரியில்லாமல் ஆனதிலிருந்து வசந்திக்கும் சுசீலாவுக்கும் பாடம் நின்று போய் விட்டது. அதன் பிறகு ஹரி திருவிடைமருதூருக்குப் போகவில்லை. வசந்தியாலோ ஹரியைப் பார்க்காமல் ஒரு நாள் கூட இருக்க முடியாது போலிருந்தது. அதற்கேற்ப அம்மாவின் உத்தரவும் அநுகூலமாக இருந்தது. சுசீலாவின் கண் காணிப்பைப் பற்றியோ அலட்சியத்தைப் பற்றியோ அவள் லட்சியம் செய்யத் தயாராக இல்லை.

ஹரி மாடிக்குப் போனதும் சிறிது நேரத்துக்கெல்லாம் வசந்தியும் மாடிக்குச் சென்றாள். ஹரி பாடுவதற்காக உட்கார்ந்தான். அவளைப் பார்த்ததும் அவனுக்கு வியப்பாக இருந்தது.

''என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்? இங்கேயும் வந்து விட்டாளே என்றா? உங்களிடம் ஒரு விஷயம் கேட்க வேண்டும். அதை அப்புறம் சொல்கிறேன். முதலில் தம்பூராவை இப்படிக் கொடுங்கள். நான் போடுகிறேன்; பிறகு நீங்கள் பாடலாம்'' என்று கையை நீட்டினாள்.

ஹரிக்கு உடம்பு முழுவதும் குப்பென்று வியர்த்து விட்டது. 'வர வர வசந்தியின் துணிச்சல் பெருகிக் கொண்டே போகிறதே! இன்றைக்கு என்ன, வாட்ச்மென் சுசீலா ஸி ஐ.டி. வேலையை விட்டு ஓடிப்.போய் விட்டாளா? எங்கே அவளை இன்னும் காணவில்லை? வசந்தி வந்தது தெரிந்தால் இதற்குள் நூறு தடவை குறுக்கும் நெடுக்குமாக வந்திருப்பாளே!' என்று ஆச்சரியப்பட்டான்.

''நான் கேட்டதற்குப் பதில் சொல்லாமல் யோசனை யில் ஆழ்ந்து விட்டீர்களே; உங்கள் அரங்கேற்றத்துக்கு நான்தான் தம்பூரா போடப்போகிறேன், சரிதானா?''

''ரொம்ப சரி, பிரமாதமாக இருக்கும். அப்படியே செய்துவிடு. எழுந்து போகிற கூட்டம் உனக்காகவாவது கலையாமல் கடைசி வரையில் இருக்கும்'' என்றான்.

அதற்குள் கீழேயிருந்து ''ஹரி, ஹரி!'' என்ற சுசீலா வின் குரலைக் கேட்டு இருவரும் பேச்சை நிறுத்தினர்.

''காணோமென்று கவலைப்பட்டீர்களே! இதோ வந்தாச்சு. போய் என்னவென்று கேட்டு வாருங்கள்'' என்றாள் வசந்தி.

ஹரி அவள் முகத்துக்கெதிரே போலிக் கோபத்தோடு கையைக் காட்டிவிட்டுக் கீழே இறங்கினான்.

ஹரியைக் கண்டதும், ''வசந்தி எங்கே? பாடச்சொல்லி அப்பா அனுப்பினாராம். பாட்டையும் காணோம், தம்புராச் சத்தத்தையும் காணோம். அரை நாழிகையா அரட்டைதான் கேட்டுக் கொண்டிருக்கிறது. அரங்கேற்றத் துக்கு இன்னும் இரண்டு நாள் இல்லை. இது தான் சாதகம் போலிருக்கிறது! வாருங்கள் சாப்பிட'' என்று கூறி, அடுக்களையை நோக்கிச் சென்றாள்.

வசந்தி இதைக் கேட்டுக்கொண்டே கீழே இறங்கி வந்தாள். ''இவள் என்ன என்னை அதிகாரம் பண்ணு கிறது? அரட்டை அடிக்கிறாளாமே அரட்டை! இந்த வீட்டுக்கு இவள் எஜமானியா, அல்லது சர்வாதிகாரியா? நீங்கள் இந்த வீட்டில் இவளோடு எப்படித்தான் இருக் கிறீர்களோ, தெரியவில்லை. நானும் பார்த்துக் கொண்டு தான் வருகிறேன் இவள் படுத்துகிற பாட்டை. அப்பா விடம் சொன்னால்தான் நல்லது. எனக்கு சாப்படும் வேண்டாம், ஒன்றும் வேண்டாம். நீங்கள் போய்ச்

சாப்பிடுங்கள்'' என்றாள் வசந்தி, தன் கோபத்தைக் கட்டுப்படுத்த முடியாமல்.

''நீ சாப்பிடாமல் வேண்டுமானாலும் இரு; ஆனால் அப்பாவிடம் மட்டும் சுசீலாவைப்பற்றி ஒன்றும் சொல்லி விடாதே. அவர் ஏற்கனவே மிகுந்த மனவேதனையுடன் இருக்கிறார். இதைக்கேட்டதும் அவருக்குக் கோபம் வந்து ஏதாவது பேசினால் பிறகு அதன் பலனை நான்தான் சுசீலாவிடம் அநுபவிக்க வேண்டும். அதற்குச் சம்மத மானால் நீ தாராளமாய்ப் போய்ச் சொல்.''

ஹரியினுடைய வார்த்தையைக் கேட்டதும் வசந்திக்கு மேலும் கோபம் பற்றிக்கொண்டு வந்தது.

''நீங்கள் இப்படிப் பயந்து பயந்து நடுங்குவதனால் தான் அவள் உங்களை இப்படி விரட்டுகிறாள். உங்களுக்கே அதுதான் இஷ்டமென்றால் அநுபவியுங்களேன்! எனக் கென்ன?'' என்றவள், தந்தை படுத்திருந்த அறைக்குச் சென்றுவிட்டாள்.

ஹரி கூறிய வார்த்தைகளை மீண்டும் நினைவுக்குக் கொண்டு வந்தபோது வசந்திக்கு நெஞ்சை நெருடுவது போல் இருந்தது. சுசீலாவின் அலட்சியமான பேச்சுக்கு உடனே சரியான பதிலடி கொடுக்காமல் இருந்துவிட்டதை எண்ணி அவள் உள்ளம் குமுறியது. 'இனிமேல் அப்பா வைப் பார்க்கக்கூட இங்கே அடிக்கடி வரக்கூடாது; ஹரிக்கு எப்போது ஊருக்கு வரத் தோன்றுகிறதே அப்போது வரட்டும், பார்த்துக் கொண்டால் போதும்' என்று வசந்தியின் உள்ளம் ஒருகணம் எண்ணியது.

பாகவதர் புரண்டு படுத்தார்.

''அப்பா!'' என்று மெதுவாகக் கூப்பிட்டாள் வசந்தி.

அரைத்தூக்கத்திலோ மயக்கத்திலே இருந்த பாகவதர் தம் விழிகளை மெதுவாகத் திறந்து, ''என்ன?'' என்று மகளை நோக்கினார்.

''ஹரியின் அரங்கேற்றத்துக்கு அம்மாவும் நானும் வரட்டுமா அப்பா?'' என்று கேட்டாள் வசந்தி.

''இது என்னம்மா அசட்டுக் கேள்வி? உன் அம்மா வந்திருந்து ஆசிர்வதித்து அனுப்பாமலா ஹரி கச்சேரிக்குப் போய் விடுவான்? நீயும் அம்மாவும் வெள்ளிக் கிழமை காலையிலேயே வந்துவிடுங்கள் என்று கூறியபோதே லட்சுமி யம்மாள் கையில் ஒரு பாட்டிலுடன் அங்கே வந்தாள்.

மனைவியைப் பார்த்ததும் பாகவதர் சிரித்துக் கொண்டே, ''உன் பெண் என்னவோ சொல்லுகிறாள், பார். என்ன என்று கேள்'' என்று தூண்டிவிட்டார்.

லட்சுமியம்மாள் உடனே, ''அதையும் கேட்கிறேன். நீங்கள் முதலில் இதைக் கேளுங்கள். சாப்பிடக் கூப்பிட்டு அனுப்பினேன். வரவில்லை. காலையில் வந்தவளுக்குப் பசிக்காமல் எப்படி இருக்கும்? 'பசியே இல்லை' என்று ஹரியிடம் சொல்லியனுப்பியிருக்கிறாளே உங்கள் பெண்'' என்றாள் கணவரைப் பார்த்து.

''சரிதான். நீயும் ஒரு புகாரை வைத்துக் கொண் டிருக்கிறாயா? நாம் இரண்டுபெரும் இப்படி மாறி மாறிக் கேள்விகள் கேட்டுக்கொண்டிருந்தால் குழந்தை திணறிப் போய்விடுவாள். அது இருக்கட்டும்: கையில் என்னவோ கொண்டு வந்திருக்கிறாயே, என்ன அது? என்று மெது வாகப் பேச்சை மாற்றினார் பாகவதர்.

''சுந்தரிக்கு ஆவக்காய் ஊறுகாய் என்றால் ரொம்பப் பிடிக்கும். நேற்று சித்தூரிலிருந்து உங்கள் ஆந்திர சங்கீத ரசிகர் கொண்டு வந்தாரே, அதில் ஒரு பாட்டிலை அனுப்பலாம் என்று கொண்டு வந்திருக்கிறேன், வசந்தி யிடம் கொடுத்து அனுப்பட்டுமா?''

''ஏன்? நீதான் ஒரு தடவை வசந்தியோடு திருவிடை மருதூருக்குப் போய் வாயேன். ஹரியின் அரங்கேற்றத் துக்குக் காலையிலேயே எல்லாருமாக இங்கே வந்து

விடுங்கள். என்ன யோசிக்கிறாய்? நான் சொல்லுவது சரிதானே?''

''சரிதான். போனால் சுந்தரி கூட நீங்கள் சொல்வது போல் சந்தோஷப்படுவாள். ஆனால் இங்கே உங்களை எப்படித் தனியாக விட்டுப் போவது?''

''அசடு மாதிரி பேசாதே. நான் இங்கே தனியாகவா இருக்கிறேன்? படுக்கையில் விழுந்த பிறகு ராஜோபசாரம் அல்லவா நடக்கிறது? தினம் என்னைப் பார்த்துப் போக எத்தனைப் பேர் வருகிறார்கள்! பேசாமல் போய் வா. ஹரியும் உன் பெண்களும் இருக்கிறார்கள்; கவனித்துக் கொள்வார்கள். நிம்மதியாக நீ இரண்டு நாள் இருந்து விட்டு வா'' என்று மனைவிக்கு உத்தரவு கொடுத்து வசந்தியோடு சேர்த்து அனுப்பினார்.

அம்மா போன பிறகு, வீட்டு வேலை முழுவதும் காயத்திரி தலைமேல் விழுந்தது- ஹரி குருவுக்குப் பணி விடை செய்வதும், குடும்பத்துக்கு வேண்டிய காரியங் களைச் செய்வதும், அரங்கேற்றத்துக்காகத் தன்னைத் தயார் செய்துகொள்வதுமாக நேரம் போதாமல் திணறி னாள். சுசீலாவுக்கோ ஹரியை விரட்டிக் கொண்டிருப் பதற்கே நேரம் போதவில்லை.

ஹரி சாப்பிட்டு முடிந்ததும் கையலம்பிவிட்டு வந்தான். சாப்பிட்ட எச்சிலைக் காயத்திரி சாணமிட்டு மெழுகிக் கொண்டிருந்தாள். தேய்க்க வேண்டிய காலியான பாத்தி ரங்கள் ஒரு பக்கம் குவிந்திருந்தன. அம்மா இருந்தால் இப்படி இவ்வளவு வேலைகளையும் போட்டுவிட்டுச் சுசிலா வெளியே போயிருக்கமாட்டாள். ஆனால் அம்மா இல்லா தது அவளுக்கு எல்லா விதத்திலும் கொண்டாட்டமாகி விட்டது. இனிமேல் காயத்திரிதான் அவ்வளவு பாத்திரங் களையும் தனியாகத் தேய்க்கவேண்டும். அதன் பிறகு அடுக்களையைக் கழுவிவிட்டுத் தேய்த்த பாத்திரங்களை

அதனதன் இடத்தில் கவிழ்த்து முடிப்பதற்குள் அப்பாவுக்குக் காபிக்கு நேரமாகிவிடும். உடனே பால் கறக்கப் போய்விடுவாள்.

ஹரி யோசித்தான். அவனுக்குப் பாத்திரம் தேய்க்கத் தெரியாது; மாடு கறக்கவும் தெரியாது. பாத்திரம் தேய்ப்பதைவிட மாடு கறப்பது அவனுக்குச் சுலபமாக பட்டது. அதில் காயத்திரிக்கு உதவி செய்தால் என்ன? ஒரு வேலை என்றால் ஒரு வேலை. அது அவளுக்கு மிச்சந்தானே?

ஒரு முடிவுக்கு வந்தவனைப் போல், தேய்க்க வேண்டிய பாத்திரங்களை முதலில் கிணற்றங்கரையில் கொண்டு போய்ப் போடலாம் என்று எண்ணினான். அப்போது அடுக்களையிலிருந்து வந்த காயத்தரி அவன் கையில் இருந்த வெண்கலப் பானையைப் பிடுங்கிக் கீழே வைத்தாள்.

''ஆண்பிள்ளைகள் செய்ய வேண்டிய வேலையைத் தான் ஆண்பிள்ளைகள் செய்ய வேண்டும். இது உன் வேலை அல்ல. போய்ச் சாதகம் பண்ணு. கச்சேரிக்கு இன்னும் இரண்டு நாள் கூட இல்லை. அப்பாவை நான் பார்த்துக் கொள்கிறேன். அவரைப் பற்றிய கவலைகளை மறந்து நீ மாடிக்கு போ'' என்று உத்தரவு பிறப்பித்து விட்டுப் பற்றுப் பாத்திரங்களுடன் பின்கட்டை நோக்கி நடந்தாள்.

ஹரி அவள் சென்ற திக்கையே வெறிக்கப் பார்த்த படி நின்று கொண்டிருந்தான். காயத்திரியின் உருவில் ஒரு பெண் தெய்வம் அசைந்து செல்வது போல் தோன்றியது. ஆனால் அந்தத் தெய்வத்துக்கு ஆலயமும் இல்லை, வழிபாடும் இல்லை. சாந்நித்தியம் இல்லாத மூர்த்தியைப் போல் அவள் வாழ்வை இழந்துவிட்ட ஒரு சிலை!

தன்மீது மட்டும் அல்ல, தன் முன்னேற்றம் பற்றியும் அவள் கொண்டிருக்கும் அக்கறையையும், சற்று முன்பு

தன்னை உற்சாகப்படுத்தி அவள் கூறிய ஆறுதலான வார்த்தைகளையும் திரும்பத் திரும்ப மனத்துக்குள் எண்ணிப் பார்த்துக் கொண்டான். அவன் மனம் சுய நலத்தை நாடி மாடிக்குச் செல்வதை ஒப்பவில்லை. கொல்லையை நோக்கி நடந்தான். அவனைக் கண்டதும் காயத்திரிக்கு ஆச்சரியமாக இருந்தது.

''பாடப் போகச் சொன்னேன்; இங்கே வந்து நிற்கிறாயே. என்ன விசேஷம்?'' என்று கேட்டாள்.

''இன்றைக்கு நான்தான் பால் கறக்கப் போகிறேன். அதற்குள், தேய்த்த பாத்திரங்களை யெல்லாம் இங்கே கொடுங்கள். உள்ளே கொண்டு போய் வைக்கிறேன்'' என்றான்.

''கொஞ்சம் முன்தானே சொன்னேன், இதெல்லாம் என்வேலை என்று? நாளைக்குப் பெரிய சங்கீத வித்வானாகப் போகிறவன் இப்படிப் பாத்திரம் அலம்பவும் மாடு கறக்கவும் ஆசைப்படலாமா?'' சிரித்துக் கொண்டே கேட்டாள் காயத்திரி.

''பரவாயில்லை. நான் பரம்பரைச் சங்கீத வித்வானாக இருந்தால் நீங்கள் சொல்லுவது சரியாக இருக்கலாம். நான் உங்களால் வித்துவானாக உருவாக்கப்பட்டவன். அந்த நன்றியைக் காட்டாமல் போலி கௌரவம் கொண்டாட நான் விரும்பவில்லை. அது எனக்கு வேண்டவும் வேண்டாம். உதவிக்கு வருகிறவனைத் தடுக்காமல் செம்பைத் தேய்த்துக் கொடுங்கள். இன்று நான் தான் பால் கறக்கிறேன்.''

''இத்தனை நாள் சுசீலாவால் வெறும், திட்டோடும் வசவோடும் இருந்தது. இன்று உன் உடம்புக்கு உதையும் கேட்கிறது போலிருக்கிறது.''

ஹரி ஒன்றும் புரியாமல் ஒரு கணம் விழித்தான்.

"நான் பொய் சொல்லுகிறேன் என்று மலைக்கிறாயா? செம்பை எடுத்துக் கொண்டு மடியைத் தொடு. 'சொத்' தென்று உதை கொடுக்காவிட்டால் என் பேர் காயத்திரி அல்ல. இந்த மாடு என்னைத் தவிர வேறு யாருக்கும் மசியாது என்று உனக்குத் தெரியாதா? பேசாமல் உள்ளே போய்ப் பாடு. என்னிடம் உனக்கு அன்பு இருப்பது எனக்குத் தெரியும். அதை இப்படியெல்லாம் காட்டிப் பசுவிடம் பல்லை உடைத்துக் கொள்ள வேண்டாம். கச்சேரி செய்கிற இந்த அழகான முகத்திலே கட்டுப் போட்டுக் கொள்ள வேண்டும் என்று ஆசையாக இருக்கிறதா?

ஹரிக்கு உடம்பெல்லாம் புல்லரித்தது. 'அழகான முகம்!'-காயத்திரியின் வாயால் கேட்ட அந்தச் சொல் அவனுக்கு அமுதமாக இனித்தது.

"சொல்லச் சொல்லக் கேளாமல் இன்னும் கொல்லையிலேயே ஏன் சுற்றிக் கொண்டிருக்கிறாய்? போலீஸ்காரர்கள் கெடுபிடியும் வேண்டித்தான் இருக்கிறது. இந்தச் சுசீலா எங்கே தொலைந்து போனாள்?"

"என்னைப் பயமுறுத்துகிறீர்களா?"

"பயமுறுத்தவில்லை. இன்னும் ஐந்து நிமிஷத்தில் பாட்டுச் சத்தம் காதில் விழாவிட்டால் அப்பாவைக் கூப்பிட்டு விஷயத்தைச் சொல்லி விடுவேன்!"

மறுநிமிஷம் ஹரி அங்கிருந்த மின்னலைப் போல் மறைந்து மாடிக்குச் சென்றான். ஆனால் அதே சமயம் படியேறும்போதே பாகவதர் அறையிலிருந்து வந்த முனகல் சப்தமும்; 'ஹரி ஹரி' என்று நூலிழையில் வந்த தீனமான ஒலியும் அவனை மேலே செல்ல முடியாமல் அங்கேயே தடுத்து நிறுத்தின.

அறைக்குள் ஹரி ஓடிச்சென்று பார்த்தபோது பாகவதர் மூச்சுவிடத் திணறிக் கொண்டிருந்தார். நெஞ்சுவலி பொறுக்க முடியவில்லை என்று ஜாடை காட்டினார்.

ஹரி சட்டென்று அருகில் உட்கார்ந்து நெஞ்சைத் தடவிவிட்டான். முதுகில் நீலகிரித் தைலத்தைத் தடவி நன்றாகத் தேய்த்துவிட்டான். கொல்லையில் இருந்த காயத்திரிக்குக் குரல் கொடுத்தான். அவள் வந்து பார்த்த போது வலி பொறுக்க முடியாமல் பாகவதர் கண்களை மூடிக்கொண்டிருந்தார்.

''அப்பாவுக்கு என்ன ஹரி?'' என்று மிக்க பரபரப்புடன் கேட்டாள்.

''என்னவோ தெரியவில்லை. திடீரென்று நெஞ்சை வலிக்கிறதாம். துடித்துக் கொண்டிருக்கிறார். போய் டாக்டரை அழைத்து வரட்டுமா?''

''வேண்டாம். கொஞ்சம் பார்த்துக் கொண்டு கூப்பிடலாம். முதலில் கொஞ்சம் தவிடு வறுத்துக் கொண்டு வருகிறேன். ஒத்தடம் கொடுத்துப் பார்ப்போம்'' என்று சொல்லி அடுக்களையை நோக்கி விரைந்தாள் காயத்திரி.

வாணலியை, அப்பா படுத்திருந்த அறைக்குக் கொண்டு வந்து, சிறுகச் சிறுக தவிட்டை வறுத்துத் துணியில் கிழியாகக் கட்டி ஹரியிடம் கொடுத்தாள். அந்த இளஞ்சூடு பாகவதருக்கு அப்போது இதமாக இருந்தது. மூச்சு முன்னைவிடச் சற்று சுகமாக விட முடிந்தது. விழிகளைத் திறந்து ஹரியையும் காயத்திரியையும் மாறி மாறிப் பார்த்துவிட்டு, ''சுசீலா எங்கே?'' என்று கேட்டார்.

''இப்போது வந்துவிடுவாள்; நீங்கள் தூங்குங்கள்'' என்று காயத்திரி அப்பாவை வேண்டிக்கொண்டாள்.

இரவு முழுவதும் பாகவதர் முனகிக்கொண்டும் விழித்துக்கொண்டும் இருந்தார். அதனால் உறக்கம் வந்தவர்களாலும் தூங்க முடியவில்லை. இந்த உபாதையைச் சுசீலாவினால் ஒரு நாள் கூடத் தாங்க முடியவில்லை. அப்பாவின் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டே இருந்த அவளுக்குத் தூக்கம் தூக்கமாக வந்தது. அடுக்கடுக்காகக்

கொட்டாவிகளை விட்டாள். கண்ணைக் கசக்கிக் கொண்டு பார்த்தாள்; எழுந்து நடமாடிப் பார்த்தாள்; புஸ்த கத்தை விரித்து வைத்துக்கொண்டு படித்துப் பார்த்தாள் கையில் இருந்த புஸ்தகம் அவளையும் அறியாமல் நழுவிக் கீழே விழுந்தது. அதை அலமாரியில் கொண்டு வைக்கிற சாக்கில் அந்த அறையிலிருந்து பூனை மாதிரி நழுவியவள் பிறகு அங்கே வரவே இல்லை. அவள் சேஷ்டைகளை ஆரம்பத்திலிருந்து கவனித்த ஹரியும் காயத்திரியும் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டனர்,

''அவள் இங்கே சாயங்காலத்திலிருந்து என்ன செய் தாள்? பேசாமல் அவளை எட்டு மணிக்கே அனுப்பியிருக் கலாம்'' என்றாள் காயத்திரி.

உடனே ஹரி, ''ஆ! நாமாக அனுப்பினால், 'உங்க ளுக்கு மட்டும்தான் பொறுப்பா? எனக்கு இல்லையா?'' என்று நம்மிடம் படையாகச் சண்டைக்கு வந்துவிட மாட்டாளா!'' என்று கூறியபோது பாகவதர் இருமினார்.

சங்கிலி மாதிரி அதைத் தொடர்ந்து பல இருமல்கள் வந்தன. அது அடங்குவதற்குள் மிகவும் களைத்துப்போய் விட்டார். உடம்பு குலுங்க குலுங்க இருமியதில் விழிகளில் நீர் வழிந்தது. அருகில் இருந்த துண்டால் கண்களைத் துடைத்த ஹரியைப் பார்த்து, ''மணி என்ன?'' என்று கேட்டார்.

பிறகு இரண்டு மணி நேரங்களுக்கெல்லாம் மீண்டும் நெஞ்சுவலி பெரிதாக வந்துவிட்டது. ''ஹரி, உங்கம்மா எங்கேடா?'' என்று பாகவதர் முனகினார்.

''நீங்கள் சொல்லியனுப்பினபடியே, அம்மாவும் எல்லாரும் காலையில் வந்துவிடுவார்கள்'' என்று சமா தானம் கூறினாள் காயத்திரி.

ஆனால் காலையில் லட்சுமியம்மாளும், வசந்தியும் சுந்தரியும் வீட்டுக்குள் நுழைந்தபோது அங்கே கண்ட காட்சி, அவர்களை நடுங்க வைத்துவிட்டது. பாகவதரைச் சுற்றிலும் எல்லாரும் நின்றிருந்தனர். நோயாளியின் கையில் ஊசி ஒன்றைப் போட்டுத் திரும்பிய டாக்டரிடம், ''ஒன்றும் ஆபத்தில்லையே டாக்டர்?'' என்று கவலையோடு கேட்ட காயத்திரியின் குரல் அவர்களின் நெஞ்சைக் கலக்கியது.

## 18. குருவின்றி வேறில்லை

பாகவதர் எதிர்பாராமல் திடீரென்று நெஞ்சுவலி வந்து அவஸ்தைப்படுவது புதிய அநுபவமல்ல. இரண்டு வருஷங்களுக்கு முன்பு மதுரையிலும், ஆறு மாதங்களுக்கு முன்பு திருவனந்தபுரத்திலும் கச்சேரி முடிந்ததும் இதேபோல் நெஞ்சுவலி கண்டது. அங்குள்ள ரசிகர்களும், சபாக் காரியதரிசியும் பதறிப் போயினர். ஐந்து நிமிஷத்துக்குள் மூன்று டாக்டர்கள் வந்துவிட்டனர். அவர்கள் பாகவதருக்கு உடனடியாகச் சிகிச்சை செய்து குணப்படுத்தினாலும் அவரது உடம்பைப் பரிசோதித்த அவர்கள், 'உங்கள் இதயம் பலவீனமாக இருக்கிறது. நீங்கள் சிறிது காலம் கச்சேரியே செய்யக்கூடாது. நல்ல ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டும்' என்று வற்புறுத்தத் தவறவில்லை.

ஆனால் பாகவதர் அதைச் சரி என்று கேட்டுக் கொண்டாலும், பிறகு தம் விருப்பப்படிதான் நடந்து கொண்டார். பாடத் தெரிந்த வாயை மூடத் தெரிய வில்லை.

''வேறு என்ன தண்டனை கொடுத்தாலும் ஏற்றுக் கொள்வேன். ஆனால் என்னால் பாடாமல் மட்டும் இருக்கமுடியாது. அப்படிப் போகிற உயிரானால் அது ஆனந்தமாகப் பாடிக்கொண்டிருக்கும்போதே போகட்டும். தம்பூராவை மீட்டிக்கொண்டே ராமனுடைய பாதார விந்தத்திலே போய்ச் சேர்ந்துவிட வேண்டும் என்றுதான் எனக்கும் ஆசை'' என்று கூறிவிட்டார்.

அதன்படியே அஞ்சாமல் தொழில் புரிந்தார். ஆனால் மூன்றாவது தடவையாக இப்போது நெஞ்சுவலி வந்து விடவே தம்முடைய எதிர்காலத்தையும் தமக்குப் பிற்காலத் தையும் பற்றி அவருக்கு அச்சம் உண்டாயிற்று. சிந்தனை யில் ஆழ்ந்து போனார்.

திருவிடைமருதூரிலிருந்து சுந்தரியையும் வசந்தியையும் அழைத்துக் கொண்டு வீட்டுக்குள் நுழைந்த லட்சுமிக்கு, கணவருடைய கட்டிலைச் சுற்றியிருந்த கூட்டத்தையும், டாக்டரையும் பார்த்ததும் வயிற்றைக் கலக்கியது. வைத்தியம் பார்த்த டாக்டரைக் காயத்திரி கேட்ட கேள்வியும், அவர் அளித்த பதிலும் இருதயத்தையே நிறுத்திவிடும்போல் இருந்தன. "இந்தக் கண்டத்துக்கு அண்ணா பிழைத்தது மறு பிழைப்புத்தான். ஆனால் இனிமேல் கொஞ்ச நாளைக்குக் கண்டிப்பாக அவர் பரிபூரண ஓய்வு எடுத்துக் கொண்டாக வேண்டும்" என்று இதற்கு முன் பலர் கூறியதையே அவரும் எச்சரித்து, மருந்தும் மாத்திரைகளும் எழுதிக் கொடுத்துச் சென்றார்.

டாக்டர் கூறியபடியே மருந்துகளை வாங்கி வந்து, அவர் குறிப்பிட்ட நேரப்படி ஹரி தவறாமல் கொடுத்தான். காலை ஏழு மணிக்கு இருந்த நிலைமை மாறி, பத்து மணிக்குப் பாகவதரால் சுமாராகப் பேச முடிந்தது.

"எல்லாரையும் மிகவும் பயமுறுத்தி விட்டேன்; இல்லையா?" என்று சுந்தரியையும் வசந்தியையும் பார்த்து அவர் கேட்டார்.

அதற்கு அவர்கள் எந்தவிதப் பதிலையும் கூறாமல், உண்மையிலேயே பயந்தபடி நின்றனர்.

பக்கத்தில் இருந்த ஹரியின் பக்கம் அவர் திரும்பிப் பார்த்தார். "பஜனை மடத்திலிருந்து யாராவது வந்திருந் தார்களா?" என்று கேட்டார்.

''காரியதரிசியும். கணபதியும் வந்திருந்தார்கள். இரவு எட்டு மணிக்குக் கச்சேரியாம். ஏழரைக்கெல்லாம் புறப்பட்டு வந்தால் போதும் என்று சொல்லிவிட்டுப் போனார்கள். மருந்து வாங்கிக்கொண்டு வரும்போது பார்த்தேன்: வழக்கம்போல் பந்தலெல்லாம் பெரிதாகப் போட்டிருக்கிறார்கள். வழக்கத்தைவிட இந்தத் தடவை சுவரொட்டியைப் பெரிசாக அச்சடித்து, எல்லா வித்துவான்களுடைய பெயர்களும் போட்டிருக்கிறார்கள்'' என்று கூறினான் ஹரி.

''முதலில், உன் பெயர் போட்டிருக்கிறதா?'' என்று பாகவதர் கேட்டார். ஹரி அதற்கு எந்தப் பதிலும் கூறாமல் மௌனமாக நின்றான். 'எனக்கு ஏது பெயர்? நானும் என் பெயரும் எல்லாம் நீங்களே உருவாக்கியதல்லவா?' என்று அவன் மனத்துக்குள்ளேயே எண்ணங்கள் உருண்டோடின,

''என்ன ஹரி, நான் கேட்டேனே? நோட்டீசில் இன்றையக் கச்சேரி யார் என்று போட்டிருக்கிறது?'' என்று. பாகவதர் அதே கேள்வியைத் திரும்பவும் கேட்டார். அதற்குள் வசந்தி சிரித்துக் கொண்டே, 'நான் சொல்லுகிறேன் அப்பா, உங்களுடைய பெயர்தான் போட்டிருக்கிறது'' என்றாள்.

''என் பெயரா?'' என்று ஆச்சர்யத்துடன் கேட்டார் பாகவதர்,

''ஆமாம் அப்பா. சங்கீத சாகரம் மகாவித்துவான் சுப்பராம பாகவதர் என்பதைத்தான் பெரிய கொட்டை எழுத்தில் போட்டிருக்கிறார்கள். பிறகு அவர்களின் சிஷ்யன் 'ஹரி பாடுவார்' என்பதைப் பூச்சிப் பறக்கிற மாதிரி எழுத்தில், அருகில் வந்து பார்த்தாலன்றித் தெரியாதபடிப் போட்டிருக்கிறார்கள்'' என்று தன் குறையை மறைமுகமாகத் தெரிவிப்பதுபோல், ஆதங்கத்துடன் கூறினாள் வசந்தி.

''பரவாயில்லை. பெரிய எழுத்தில் போடாவிட்டாலும்? சிறிய எழுத்தில் பெரிய வித்துவான் இருக்கிறான் என்பதை ஹரி நிரூபித்துவிட்டால் போகிறது'' என்று மெதுவாகக் கூறிவிட்டுப் பிறகு, ஹரியிடம் தனிமையில் கூறினார்: ''நீ இப்போதே அரசூருக்குப் போய் உன் அப்பா, சித்தி, மாமா எல்லாரிடமும் உன் அரங்கேற்றத்தைப் பற்றிச் சொல்லி ஆசீர்வாதம் வாங்கிக்கொண்டு வந்துவிடு'' என்றார்.

ஆனால் வாயே திறக்காத ஹரி, அந்த இடத்தை விட்டு அசையவில்லை. பாகவதர் வற்புறுத்தினார்.

''முன்பே ஒரு சமயம் உன் மாமா, 'இன்னும் அரங்கேற்றம் ஆகவில்லையா?' என்று கேட்டதாகச் சொன்னாய். இப்போது சொல்லாவிட்டால் பின்னால் பேச்சுக்கு இடமாகாதா?'' என்று அவர் கேட்டுக் கொண்டிருந்த போதே ஹரி, நெடுஞ்சாண் கிடையாக விழுந்து குருவின் இரு பாதங்களையும் பிடித்துக் கொண்டு கூறினான்;

''எனக்கு இவைதாம் உலகத்தில் தாய் தந்தை, சுற்றம், உறவு அனைத்தும் என்றோ எல்லாவற்றையும் உதறி வந்துவிட்ட என்னைக் கொண்டு போய் மீண்டும் எதிலும் ஒட்ட வைக்க வேண்டாம். என்னைப் பற்றி எதற்கும் கவலைப்பட, இந்த உலகில் யாரும் இல்லை. அவர்களுக்கு வேண்டியவை நானும் என் நலனுமல்ல; என் உழைப்பும், நான் ஈட்டும் பொருளுமே. நான் உழைத்துப் பொருளீட்டும் போது என் கடமையைச் செய்தால் போதும். இப்போது என்னைத் தாங்கள் எங்கும் அனுப்ப வேண்டாம்'' என்று ஹரி மிகவும் பணிவோடு மறுத்துக் கூறிவிட்டான்.

பாகவதர் அவனை அன்புடன் அணைத்து, அவன் முதுகை வருடி, ''உன் விருப்பம் அதுவானால் அப்படியே நடக்கட்டும்'' என்று கூறினார்.

நெஞ்சிலிருந்த ஏதோ பெரிய பாரத்தைக் கீழே உதறி விட்டாற் போல்; அதன் பிறகுதான் ஹரியின் மனம் சமாதானம் அடைந்தது. சற்றுக் காலாறக் காவிரிக் கரைப் பக்கமாக நடந்து வந்தான்.

பஞ்சு அண்ணாவும், ராஜப்பாவும் இப்படிச் செய்வார்கள் என்று, ஹரி நினைக்கவே இல்லை. தன்னுடைய குரு அழைத்துங்கூட, அவர்கள் ஒத்திகைக்கு வராததுதான் அவன் மனத்தில் வேதனையை மூட்டியது. 'பாகவதர் தாம் படுக்கையில் விழுந்து விட்டாரே; இனி மேல் என்ன?' என்ற நினைப்பா, அல்லது, 'அரங்கேற்றக் கச்சேரிதானே!' என்கிற அலட்சியமா? எதுவாக இருந்தாலும், இவர்களுக்குப் புத்தி வர வேண்டும் என்று அவன் மனம் தவித்தது. ஆனால்—

ஹரி வீட்டுக்குள் நுழைந்த போது, பிடில் பஞ்சு அண்ணாவும், மிருதங்கம் ராஜப்பாவும் பாகவதர் அருகில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தனர். அவர்கள் வந்திருக்கிற காரணத்தை உணர்ந்து கொண்ட ஹரி, சட்டென்று உள்ளே சென்று தம்பூராவோடு வந்து உட்கார்ந்து கொண்டான்.

''பத்து நாளாவது பிடில் மிருதங்கத்தோடு சேர்த்துப் பாட வைத்து, உன்னைத் தயார் பண்ண வேண்டுமென்று நினைத்தேன். பஞ்சு அண்ணாவுக்கும், ராஜப்பாவுக்கும் இன்றுதான் தயை பிறந்திருக்கிறது. இப்போது நீ, மேடையில் கச்சேரி பண்ணுவதாகவே நினைத்துக் கொண்டு பாடு. அதுதான் ஒரே வழி. இப்போது கூட இவர்கள் இருவரும் இங்கே வரவில்லையானால் நீ என்ன செய்வாயோ அப்படி நினைத்துக் கொண்டு பாடு'' என்றார் பாகவதர் ஹரியிடம்.

இந்த வார்த்தை பஞ்சு அண்ணாவுக்கும் ராஜப்பாவுக்கும் சற்று துன்புறுத்துவதாகத்தான் இருந்தது.

எத்தனைதான் வெளியூர்க் கச்சேரிகள் இருந்தாலும், ஹரியின் அரங்கேற்றத்துக்கு அவர்கள்தாம் பக்க வாத்தியம் என்று ஏற்பாடான விஷயம். மனம் இருந்தால், நிச்சயம் எப்படியும் ஒரு வாரமாவது ஹரியுடன் சேர்ந்து வாசித்து அவனது கூச்சத்தைப் போக்கியிருக்க முடியும். அவர்கள் அப்படி நடந்து கொள்ளவில்லை. அதை மனத்தில் வைத்துக் கொண்டுதான் பாகவதர் அப்படிக் கூறினார் என்பது அவர்களுக்குப் புரிந்தது.

அதே போல, குருவின் நோக்கம் என்ன என்பதும், அவர் எதை மனத்தில் வைத்துக் கொண்டு இப்படிப் பேசுகிறார் என்பதும் ஹரிக்கும் நன்கு புரிந்தது. ஆனால் 'பஞ்சு அண்ணா மீதும், ராஜப்பா மீதும் உள்ள நம் வருத் தத்தைக் காட்ட வேண்டிய இடம் இது அல்ல', என்று மனத்துக்குள் முடிவு செய்துகொண்டான். மறுகணம் எல்லாவற்றையும் மறந்து, சுமார் இரண்டு மணி நேரம் ஹரி பாடினான். ஆனால் திருவிடைமருதூரில் பக்கவாத் தியம் இல்லாமல் அவன் பாடிய திறமையில் பாதியைக் கூடப் பாகவதரால் அன்று ஹரியின் பாட்டில் காண முடியவில்லை. 'ஒரு வேளை பையன் பெரிய பக்க வாத்தி யத்தைப் பார்த்ததும் பயந்துவிட்டானோ?'' என்று அவர் மனதுக்குள் எண்ணிக்கொண்டார். ஆயினும் தம் ஐயத்தை அவர் வெளிப்படுத்தி அவனை அதைரியப்படுத்த விருப்பமில்லாமல் உற்சாகப்படுத்தினார்.

பஞ்சு அண்ணாவும், ''பிரமாதமாகப் பாடுகிறானே! கீர்த்தனைகள் எல்லாம் கச்சிதம். ராகங்கூட பரவாயில்லை. போகப் போகச் சரியாகிவிடும். நிரவலும், ஸ்வரமும் இன்னும் கொஞ்சம் விஸ்தாரமாகப் பாடினால் கச்சேரி 'ஏ ஒன்' தான். 'வழி' எல்லாம், அவ்விடத்துப் பாணி அப் படியே சொட்டுகிறது'' என்று கூறினார். ஆனால் அதை யெல்லாம் பாகவதர் காதில் வாங்கிக் கொள்ளவில்லை.

''சரி, அப்போ நீங்கள் எல்லாரும் நேரே மடத்துக்கே வந்துவிடுகிறீர்களா? இவனும் இங்கிருந்து நேரே அங்கே வந்துவிடுவான்'' என்று கூறி, ''என்ன ஹரி?'' என்று அவனைப் பார்த்துக் கேட்டார்.

''ஆமாம், நானும் அப்படித்தான் நினைத்தேன். இவர்கள் நேரேயே மடத்துக்கு வந்துவிடட்டும்; நாம் இங்கிருந்து போய்விடலாம்'' என்றான்.

''அப்படியே'' என்று பஞ்சு அண்ணாவும் ராஜப்பாவும் விடை பெற்றுக்கொண்டு, ஹரியைப் பார்த்துத் தலையை ஆட்டிச் சென்றனர்.

அவர்கள் சென்ற பிறகு ஹரி தம்பூராவைக் கீழே வைத்தான். கட்டிலில் இருந்த பாகவதருடைய பாதங்களில் முகத்தைப் பதித்துக்கொண்டு சிறு குழந்தையைப் போல் தேம்பித் தேம்பி அழுதான். அந்த அழுகைக்குக் காரணம் அவருக்கு மட்டும் புரிந்தது. அவனைத் தேற்றினார்.

உலகத்திலுள்ள மகிழ்ச்சியெல்லாம் உருண்டு திரண்டு பாகவதரின் நெஞ்சில் குடிகொண்டிருந்தது. சுசீலாவும் வசந்தியும் கச்சேரிக்குப் போகத் தங்களைச் சிங்காரித்துக் கொண்டிருந்தனர். அதிலும் அவர்களுக்குள் போட்டி மூண்டது.

சுசீலாவும் வசந்தியும் புடவையையும் பின்னலையும் போட்டி போட்டு மாற்றி மாற்றி அலங்காரம் செய்து கொள்வதைக் கண்டு, 'கச்சேரி செய்யப் போவது ஹரியா அல்லது இவர்களா' என்று எண்ணி சுந்தரியும் லட்சுமியும் சிரித்துக் கொண்டனர்.

ஹரி கச்சேரிக்குத் தயார் செய்து கொண்டு குருவின் அருகில் வந்து நின்றான். அவனைத் தம் பக்கத்தில் உட்காரும்படி சமிக்ஞை செய்தார் பாகவதர்.

இதற்குள் வசந்தி நச்சரித்துக் கொண்டிருந்த ஒரு விஷயம் ஹரியின் நினைவுக்கு வந்தது. கேட்டால் நடக்காது, சரியில்லை என்பதுடன், அதைப்பற்றிக் குரு விடம் கேட்கவும் அவனுக்குத் தைரியமில்லை.

ஆயினும் அவள் அந்த அறைக்குள் வருகிற சமயம் பார்த்து, "வசந்திக்கு உங்களிடம் ஏதோ கேட்க வேண்டு மாம்" என்று மெதுவாகக் குருவிடம் கூறினான்.

பாகவதர் பெண்ணைப் பார்த்தார். "ஒன்றுமில்லை யப்பா; இன்று இவர் கச்சேரிக்கு நான் தம்பூராப் போடலாமா என்று கேட்டேன்; அதுதான்" என்றாள்.

அதற்குப் பாகவதர் பதில் சொல்வதற்குள், சுசீலா ஹரியின் தம்பூராவையே கையில் எடுத்துக்கொண்டு வந்த படி "அப்பா, இன்று நான்தான் கச்சேரிக்கு தம்பூரா போடப் போகிறேன்" என்றவண்ணம் அறைக்குள் நுழைந்தாள். இதைக் கண்ட ஹரிக்கும் வசந்திக்கும் தூக்கிவாரிப் போட்டது.

பாகவதர் நிதானமாக வசந்தியின் பக்கம் திரும்பி, "அதோ அந்த அறையில் என்னுடைய தம்பூரா இருக்கிறது. அதை எடுத்துக்கொண்டு வா" என்றார். வசந்தி சந்தோஷத்தோடு வேகமாகச் சென்று அதை எடுத்துக் கொண்டு வந்தாள்.

"சரி, நீங்கள் இரண்டு பேரும் சுருதி சேர்த்துக் கொண்டு, தம்பூரா போடுங்கள். ஹரியின் கச்சேரியை இன்னொரு நாள் சாவகாசமாக வைத்துக் கொண்டால் போகிறது. அதற்கு இப்போது என்ன அவசரம்? இன்று உங்கள் தம்பூராக் கச்சேரி நடக்கட்டும்" என்றார்.

அப்பா இப்படித் தங்களை ஏககாலத்தில் அவமானப் படுத்துவார் என்று அவர்கள் எதிர்பார்க்கவே இல்லை. வசந்தி தம்பூராவை அதன் இடத்தில் வைத்து விட்டுத்

திரும்பினாள். சுசீலாவினால் பொங்கி வந்த அழுகையை அடக்க முடியவில்லை.

''பஜனை மடத்தில் தம்பூராப் போடறத்துக்குன்னு ஒருத்தர் இருக்காரே; உங்களுக்கேன் சிரமம்? இந்த மாதிரி வழக்கமில்லாத வழக்கமெல்லாம் செய்யலாமா? பத்துப் பெரிய மனிதர்களும், வித்துவான்களும் வந்து கூடுகிற இடம் அல்லவா அது?'' என்றார். சகோதரிகளுக்கும் அப்போதுதான் தங்களுடைய தவறு புரிந்தது.

மணி ஏழு அடித்தது. அடுக்களைக் காரியங்களையெல்லாம் முடித்துக் கொண்ட லட்சுமியம்மாள் கணவருக்கு ராத்திரிக்கு வேண்டிய ஆகாரத்தை ஒரு பாத்திரத்தில் போட்டு அந்த அறையில் கொண்டு வந்து வைத்தாள். சுந்தரியும் அங்கு வந்தாள்.

அவளுடைய அழகையும் அன்றைத் தோற்றத்தையும் கண்ட பாகவதருக்கு, இறந்த கால நினைவுகள் வந்தன. காயகல்பம் சாப்பிட்ட மாதிரி வயதினால் தீண்டப்படாத அவளுடைய உடற்கட்டையும், அழகையும் கண்டு மனம் பூரித்தார். இந்தக் கோலத்தில் அவர் சுந்தரியைக் கண்டு பல வருஷங்கள் ஆகிவிட்டன. காரணம், அவள் வீட்டை விட்டு இம்மாதிரிப் பொது இடங்களுக்கென்று எப்பொழுதாவது புறப்பட்டிருந்தால்தானே!

பாகவதரும் அப்படியெல்லாம் அவளைத் தம்முடன் புதிய இடங்களுக்கு அழைத்துக் கொண்டு போகிற வழக்கம் இல்லை. இன்று அவளை அலங்கார பூஷிதையாகப் பார்த்த போது அவர் மனம் பெருமையால் பூரித்தது. லட்சுமியம்மாளைப் பற்றி அவருக்குக் கவலை இல்லை. என்றுமே அவளுக்கு; அவருக்காகவும் குடும்பத்துக்காகவும் உழைத்துக் கொண்டிருப்பதிலேயேதான் இன்பம். 'சுந்தரி மட்டும் இப்படி இருக்கிறாளே' என்கிற பொறாமை மனப்

பான்மையோ, ஒப்பிட்டுப் பார்க்கும் சுபாவமோ அவளுக்கு இல்லை. அதனாலேயே அவரால் அத்தனைகாலம் இரண்டு குடும்பங்களையும் ஏற்று நிம்மதியாக நடத்த முடிந்தது.

வாசலில் இரட்டை மாட்டு வண்டி பூட்டித் தயாராக நின்று கொண்டிருந்தது. ஹரி குருவின் பாதங்களை வணங்கி விட்டு எழுந்திருந்தான், கண்களில் நீர் துளித்தது. பாகவதர் லட்சுமியைக் கூப்பிட்டார். கச்சேரிக்குப் போகும் போது அவர் அணியும் பீதாம்பரத்தையும் சில்க் ஜிப்பாவையும் கொண்டு வரச் சொன்னார். "இவற்றை எல்லாம் போட்டுக் கொண்டு வா" என்று பணித்தார்.

வியப்புத் தாங்க முடியாமல் தயங்கிக் கொண்டிருந்த ஹரியின் கையில் கொடுத்து, "ஊம். சீக்கிரம் ஆகட்டும்" என்று துரிதப்படுத்தினார். அழகே உருவான ஹரி அவற்றையெல்லாம் போட்டுக் கொண்டு எதிரே வந்து நின்ற போது, 'நமக்கு இந்த வயதில் ஒரு மகன் இருந்தால், அவனும் இப்படித்தானே ஹரியைப் போல் இருப்பான்!' என்று லட்சுமியம்மாளின் மனம் எண்ணிப் பார்த்துக் கொண்டிருந்தது. ஹரி லட்சுமியம்மாளையும் சுந்தரியையும் சாஷ்டாங்கமாக வணங்கினான். மாடத்தில் இருந்த விபூதியை ஹரியின் நெற்றியில் இட்டு, "முருகன் உனக்கு ஒரு குறையும் வைக்கமாட்டார். உன் குருவைப் போலவே மகாவித்துவானாகப் பிரகாசிக்கப் போகிறாய்" என்று ஆசிர்வதித்த போது லட்சுமியம்மாளின் விழிகளில் நீர் பெருகியது. சுந்தரியைப் போல் அவளுக்கு உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொள்ளத் தெரியாது என்பதைப் பாகவதர் அறிவார். ஆனால், ஏறத்தாழ அவரும் லட்சுமியின் நிலையில்தான் கலங்கிய கண்களுடன் இருந்தார்.

இதற்குள், "அண்ணா!" என்ற உற்சாகமான அழைப்பைக் கேட்டு எல்லாரும் திரும்பி பார்த்தனர்.

''புறப்படலாமா?'' என்று கேட்டவண்ணம் காரிய தரிசி பாபு உள்ளே நுழைந்தார்.

''வாங்கோ வாங்கோ'' என்று அவரை உற்சாகமாக வரவேற்ற பாகவதர், ''இதற்காகவா நீங்கள் இவ்வளவு தூரம் வந்தீர்கள்? இதோ இவர்கள் எல்லாரும் கிளம்பிக் கொண்டே இருக்கிறார்கள்'' என்றார்.

''அதற்கில்லை அண்ணா. பிடில், மிருதங்கம் எல்லாம் வந்தாயிற்று. பந்தலில் இப்போதிருந்தே கூட்டம் தாங்க வில்லை; பஜனை மடத்தைச் சுற்றிலும் வேறு ஏகப்பட்ட ஜனங்கள். சரியாக எட்டு மணிக்கெல்லாம் ஆரம்பித்தால் தான் தாக்குப் பிடிக்க முடியும்'' என்றார்.

''அதற்கென்ன? அப்படியே ஆரம்பித்தால் போகிறது. கொஞ்சமா விளம்பரம் செய்திருக்கிறீர்கள்? கூட்டத்துக்குக் கேட்பானேன்?''

''அதெல்லாம் ஒன்றும் இல்லை அண்ணா. விளம்பரம் செய்தால் மட்டும் ஜனங்கள் வந்து விடுகிறார்களா? எல்லாம் ஜனங்களுக்கு உங்கள் மேல் இருக்கிற அபிமானம். 'உங்கள் பிரதம சிஷ்யன் பாடப்போகிறான்; கேட்க வேண்டும்' என்று பெரிய பெரிய வித்துவான்களும், கனவான்களும், வெளியூரிலிருந்துகூட வந்திருக்கிறார்கள்'' என்றார்.

உடனே பாகவதர், ''என்னவோ போங்கள். சங்கீத வித்துவானுடைய வாழ்க்கை இப்படி முகஸ்துதியிலே மயங்கித்தான் போகிறது'' என்றார்.

''அதெல்லாம் ஒன்றுமில்லை அண்ணா'' என்று மறுத்த பாபு, ''அப்பொழுது நான் வேண்டுமானால் தம்பூராவை எடுத்துக் கொண்டு முன்னால் புறப்படட்டுமா? நீங்கள் எல்லாரும் வண்டியில் வந்து சேருங்கள்'' என்றார்.

உடனே பாகவதர், ''வேண்டாம், வேண்டாம். தம்பூராவுக்குத்தான் வண்டி வேண்டுமே தவிர இவர்களுக்கெல்லாம் என்ன? அதைத் தூக்கிக்கொண்டு நீங்கள் நடந்து போகக் கூடாது. பாபு ஸார், நீங்கள் கவலைப்படாமல் போங்கள்; இதோ இவர்களும் பின்னாலேயே வந்து விடுவார்கள்'' என்று கூறி அனுப்பி விட்டார்.

சுமார் பத்து நிமிஷங்களுக்கெல்லாம் வீடே காலியாகி விட்டது. தனிமையில் விடப்பட்ட பாகவதரைத் தவிர எல்லாருமே கச்சேரிக்குப் போய் விட்டார்கள். ஆனால் இந்த மனம் என்பது இருக்கிறதே, அது விஷமம் செய்கிற பொல்லாத குழந்தையைப் போன்றது. நாலு பேர் இருந்தால் வாலைச் சுருட்டிக் கொண்டிருக்கும். தனிமையில் விட்டு விட்டால் பிறகு அது பண்ணுகிற லூட்டியை இந்த ஒட்டை உடம்பால் தாக்குப் பிடிக்கவே முடியாது.

மனத்தின் சேஷ்டைகளைத் தாங்க முடியாமல் பாகவதர், நெருப்பில் விடப்பட்ட புழுப்போல் துடித்துக் கொண்டிருந்தார். பஜனை மடமும், அதற்கு முன்னால் வருஷந்தோறும் போட்டிருக்கும் பந்தலும் அவர் மனக் கண்முன் வந்து நின்றன. அதில் வருஷம் தவறாமல் நடக்கும் அவருடைய முதல்நாள் கச்சேரி, இந்த வருஷந் தான் இல்லை. ஆனால் அதற்காக அவர் வருத்தப்பட வில்லை. தம்முடைய வாரிசு ஒருவனைத் தயார் செய்து கச்சேரிக்கு அனுப்பிவிட்ட பெருமையும் மகிழ்ச்சியும் அவருக்கு இருக்கத்தான் இருந்தன.

ஹரியைப் பற்றி அவர் என்னவெல்லாம் கனவு கண்டு கொண்டிருந்தார்! அவனுடைய அரங்கேற்றத் துக்குத் தனியாகப் பத்திரிகை அடித்து, எல்லா வித்துவான் களையும் வரவழைத்து இன்னும் பிரமாதமான ஏற்பா டெல்லாம் செய்ய வேண்டுமென்று அல்லவா அவர்

எண்ணிக் கொண்டிருந்தார்? ஆனால் இத்தனைக்கும் சோதனையைப் போல்; தெய்வம் அவன் பாடுகிற இடத்துக்குக் கூடப் போக முடியாமல் அவரைப் படுக்கையில் அல்லவா கிடத்திவிட்டது!

அதே சமயத்தில், பாபு கூறிய வார்த்தைகள் அவர் நினைவுக்கு வந்தன.—'ஒரு வேளை அப்படியும் இருக்குமோ? சிஷ்யன் பாடுகிறான் என்பதற்காகவே கூட்டம் கூடியிருந்தால்? பாகவதர் எப்படித் தயார் செய்திருக்கிறார் என்று பார்க்கவே வித்துவான்களும் வந்திருந்தால்? ''எப்போது பையனை மேடையில் ஏற்றுவதாக உத்தேசம்?'' என்று அவனுடைய ஒளி பொருந்திய முகத்தைப் பார்த்துக் கேட்காதவர்களே இல்லையே! இப்போது அவர்கள் எல்லாரும் தவறாமல் வந்திருப்பார்கள்; அவரால்தான் போகமுடியவில்லை.

'ஹரி எப்படிப் பாடப் போகிறானோ. நான் எதிரில் இருந்தாலாவது சற்றுத் தைரியமாகப் பாடுவான். இப்போது முற்றும் புதிய மனிதர்களுக்கு மத்தியில், புதிய அநுபவமாகத் தனிமையில் மேடையேறி உட்கார்ந்திருக்கிறான். எதிரே திரண்டிருக்கும் ஜன சமுத்திரத்தைப் பார்த்துச் சபைக் கூச்சம் ஏற்பட்டுப் பயந்துவிடாமல் இருக்க வேண்டுமே. பஞ்சு அண்ணாவும் ராஜப்பாவும் என்னதான் வேண்டியவர்கள் என்றாலும், எல்லாம் ஓரளவுக்குத்தான். கச்சேரி, மேடை, தொழில் என்று வந்துவிட்டால்; அவரவர் தங்கள் தங்களுடைய திறமையையும் புகழையும் நிலைநாட்டிக் கொள்வதிலேயே கண்ணாக இருப்பார்கள். மேலும் மத்தியான்னம் செட்டுச் சேர்த்து வாசித்ததிலேயே ஹரியை அவர்கள் எடை போட்டு வைத்திருப்பார்கள். ஆனால் இன்று ஹரி பக்க வாத்தியத்தோடு சேர்ந்து வீட்டில் பாடியது என்னவோ எனக்கே திருப்தியாக இல்லை. ஏதோ கடனே என்று-அவர்கள் வாத்தியத்தைத் தூக்கிக் கொண்டு வந்ததுபோல் - அவனும் கடனுக்குப் பாடித் தீர்த்துவிட்டான்.

'இப்படியே அவன் மேடையிலும் பாடிவிட்டால்...?'' என்று எண்ணிப் பார்க்கையில், அவரையும் அறியாமல் ஒருவிதக் கவலையும் பயமும் அவர் மனத்தைச் சூழ்ந்து கொண்டன.

'ஹரி எப்படிப் பாடிக் கச்சேரியை முடித்துக் கொண்டு வந்துவிட்டாலும்; எனக்கு எதிரில் யாரும் அவனைப்பற்றி உண்மையான விமரிசனத்தைக் கூறமாட்டார்கள். நல்லதை மிகைப்படுத்திக் கூறினாலும் கூறுவார்களே தவிர; நன்றாக இல்லாவிட்டால் அதைச் சொல்லவே மாட்டார்கள். என் வீட்டிலிருந்து போயிருப்பவர்களில் எல்லாருமே விஷயம் தெரிந்தவர்கள். லட்சுமிக்கும், காயத்திரிக்கும் யார் எது பாடினாலும், எப்படிப் பாடினாலும் எல்லாமே பிரமாதந் தான். சுந்தரிக்கு நோட்டம் தெரியும். ஆனால் நன்றாக இல்லாததை என் மனம் புண்படும் என்று கூறமாட்டாள். சுசீலா தாட்சண்யமில்லாமல் உள்ளதைக் கூறக்கூடியவள். ஆனால் ஹரியைப் பொறுத்த வரையில் அவன் அவள் விரோதி. தேவாமிருதமாகப் பாடினாலும் அவள் குறை கூறாமல் இருக்கமாட்டாள். வசந்திக்கு இப்போதிருந்தே ஹரியிடம் குருபக்தி பொங்கி வழிகிறது. குருநிந்தனைக்கு ஒப்பமாட்டாள்; உண்மை வராது. ஆக; அந்தரங்கமான இவர்கள் இத்தனை பேரையும் விட்டு; ஹரியின் பாட்டைப் பற்றி, ஊரிலுள்ள இன்னொருவர் சொல்லித்தானா நான் நல்லது கெட்டது தெரிந்து கொள்ளவேண்டும்? இப்படி ஒரு துரதிர்ஷ்டம் எனக்கு ஏற்பட வேண்டுமா? என்று எண்ணும் போதே தாங்க முடியாத துக்கம் அவரது உள்ளத்தை மூடிக் கொண்டது. அப்போது 'ஐயா'! என்ற பழக்கமான குரல் அவர் செவியருகில் ஒலித்தது.

## 19. அரங்கேற்றம்

விழித்துக்கொண்ட சிறு குழந்தை தொட்டிலிலிருந்து தலையைத் தூக்கிப் பார்ப்பது போல; பாகவதர் கட்டிலில் படுத்தபடியே குரல் வந்த திசையைத் திரும்பிப் பார்த்தார். எதிரே வண்டிக்கார நாகசாமி பணிவோடு நின்று கொண்டிருந்தான்.

"அவுங்களை யெல்லாம் கொண்டு போய்ப் பத்திரமா பஜனை மடத்திலே விட்டுட்டேனுங்க" என்று அவன் சொல்லும் போதே பாகவதருடைய உள்ளத்தில் திடீரென்று ஒரு யோசனை தோன்றியது.

"நாகசாமி, கச்சேரி ஆரம்பமாகிவிட்டதா?" என்று பரபரப்புடன் கேட்டார்.

"இல்லீங்க; இன்னும் அரை மணி ஆவும் போலே இருக்கு. கலெக்டர் வந்துதான் ஆரம்பிச்சு வெக்கப் போறாராம்; அவரும் அவர் சம்சாரமும் வர்ரதுக்காகக் காத்துக்கிட்டிருக்காங்க" என்றான் நாகசாமி.

"ரொம்பக் கூட்டமோ?"

"அதை ஏன் எசமான் கேக்கிறீங்க? பஜனை மடத் தெருவைத் தாண்டி, வடக்குத் தெருவெல்லாம் ஒரே கும்பல். தெக்கேத் தெருவிலேயே வண்டி நின்னுப் போச்சு. அப்பாலே, ஐயா, அம்மா எல்லாம், இறங்கிப் போறதுக்கே ஜனங்கள் வழி விட மாட்டேன்னுட்டாங்க. யாரோ ஒருத்தர் வந்து தம்பூராவை வாங்கிக்கிட்டு, 'பாடறவங்களுக்கு வழியை விட்டாத்தானே கச்சேரி செய்ய

முடியும்?''ன்னு சொன்ன பிறகுதான் கூட்டம் வழி விட்டுது. அம்மா எல்லாரும் பஜனை படத்துக்குப் பின்புறமா உள்ளே நுழைஞ்சாங்க'' என்று முடித்தான் நாகசாமி.

இதையெல்லாம் கேட்டதும் பாகவதர் நிமிர்ந்து உட்கார்ந்தார். 'கலெக்டர் வந்து கச்சேரி ஆரம்பிப்ப தற்குள் நான் அங்கே போய் விட வேண்டும். நேரிலேயே ஹரியின் கச்சேரியைக் கேட்க வேண்டும்; அவனுடைய கச்சேரியைப் பற்றி வேறு யாருடைய அபிப்பிராயமும் வேண்டாம்' என்ற முடிவுக்கு அவர் மனம் வந்துவிட்டது. சட்டென்று, ''நாகசாமி, நீ எனக்கு ஓர் உதவி செய்ய வேண்டுமே'' என்றார்.

''என்ன எசமான்?''

''என்னை எப்படியாவது நீ கச்சேரி நடக்கிற இடத்துக்கு அழைத்துப் போக வேண்டும்.''

''என்ன எசமான்? இந்த உடம்போடியா?''

''பரவாயில்லை நாகசாமி. இன்று ஹரி பாடுவதை நான் கேட்காவிட்டால் என் பிராணன் இப்போது இங்கேயே போய்விடும். என்னை வண்டியிலே ஏற்றி உட்கார்த்திவிடு. செட்டி மண்டபத்துக்குப் பக்கமாக வண்டியைக் கொண்டு நிறுத்தினால் போதும். பாட்டு நன்றாகக் கேட்டும்; ஓரளவு மேடையும் தெரியும். ஊம், சீக்கிரம்! என்னை ஒரு கை பிடி. உனக்கு வேறு எங்கேயும் சவாரி போக வேண்டியதில்லையே? பணத்தைப் பற்றி யோசிக்காதே'' என்றார்.

''என்னங்க ஐயா, இப்படிப் பேசறீங்க? சவாரியையும் பணத்தையும் பார்த்தா, நான் உங்க குடும்பத்திலே பழகிக் கிட்டிருக்கேன்? உங்களுக்கு உடம்பு சரியில்லையே, அழைச்சுப் போனா அம்மா ஏதாவது சொல்லுவாங்களே அப்படீன்னுதான் சாமி யோசிக்கிறேன்'' என்று நாகசாமி கூறியபோதே பாகவதர் இடைமறித்தார்.

''அதெல்லாம் ஒன்றும் வீணாக யோசிக்காதே. இப்படி என் பக்கம் வந்து ஒரு கை பிடி. கச்சேரியை ஆரம்பத்திலிருந்து எனக்குக் கேட்டாக வேண்டும்'' என்று துரிதப்படுத்தினார்.

அதற்கு மேலும் நாகசாமியால் மறுக்க முடியவில்லை. நாலைந்து தலையணைகளை எடுத்து வண்டியில் பரப்பினான். பாகவதரைப் பத்திரமாக வண்டியில் ஏற்றி உட்கார வைத்தான். வீட்டைப் பூட்டிச் சாவியை அவரிடம் கொடுத்தான். மறுகணம் 'ஜல் ஜல்' என்று இரட்டை மாட்டு வண்டி செட்டி மண்டபத்தை நோக்கி ஓடியது.

பாகவதர் குறிப்பிட்ட இடத்தில், ஓரமாக நாகசாமி வண்டியைத் திருப்பி நிறுத்திக் கொண்டான். குழுமியிருந்த ஜன சமுத்திரத்தையும், பஜனை மடத்தையும் வண்டியில் இருந்தபடியே பாகவதரால் பார்க்க முடிகிறது. மேடைமீது ஜகஜ்ஜோதியாக விளக்குகள் எரிந்து கொண்டிருக்கின்றன.

பாகவதர் வருவதற்கும் மேடை மீது இருந்த ராமர் படத்துக்கு ஹாரத்தி காட்டுவதற்கும் சரியாக இருந்தது. வண்டியில் இருந்தபடியே பாகவதர் கன்னத்தில் போட்டுக் கொண்டார்.

ஹரி சபையை மேலெழுந்த வாரியாக நோட்டம் விட்டான். மேடை மீது பஜனை மடத்தில் அத்தியயனம் செய்யும் பிள்ளைகளும், சில பெரியவர்களும், பக்கமாக உட்கார்ந்திருந்தனர். முன் வரிசையில் பெரிய வித்துவான்கள் அமர்ந்திருந்தனர். பெண்கள் பகுதியில் முன் வரிசையில் சுசீலாவும் வசந்தியும்; அவர்களுக்குப் பின்னால் லட்சுமியம்மாளும் சுந்தரியும் காயத்திரியும் உட்கார்ந்திருந்தனர். சபையைப் பார்த்த ஹரி சட்டென்று திடுக்கிட்டான். முன்வரிசையில் காந்தாமணி அவனையே

பார்த்த வண்ணம் உட்கார்ந்திருந்தாள். அவளுக்குப் பக்கத்தில் அவள் தாயார் இருந்தாள். ஹரியும் அவளை ஒரு கணம் பார்த்துவிட்டுத் திரும்பிக் கொண்டான்.

பஜனை மடத்துக் குருக்கள் தீபாராதனைத் தட்டை ஹரியிடம் நீட்டுகிறார். கற்பூரத்தைக் கண்ணில் ஒற்றிக் கொண்ட ஹரி, எதிரே இருந்த வித்துவான்களுக்கும் ரசிகப் பெருமக்களுக்கும் கை குவித்து வணக்கம் தெரிவித்தான். குருநாதரையும், ஸ்ரீராமசந்திர மூர்த்தியையும் ஒரு கணம் மனதில் ஸ்மரித்துக் கொண்டு தியானத்தில் இருந்தான். பிறகு, 'ஆரம்பிக்கலாமா?' என்ற தோரணையில் பக்கவாத்தியக்காரர்கள் பக்கம் பார்த்தான். பாகவதர் ஒரு நிமிஷம் மனத்துக்குள் வியந்து கொண்டார். 'பாட்டுத்தான் சொல்லிக் கொடுத்தோம். இந்தப் பந்தா எல்லாம் எங்கே கற்றுக் கொண்டான்? அவன் மேடையில் உட்கார்ந்திருக்கிற அழகே போதுமே!' என்று மகிழ்ந்து போனார்.

''கலெக்டர் பேசி விட்டாராம்'' என்று நாகசாமி யாரிடமோ விசாரித்து வந்து கூறினான்.

''பரவாயில்லை. எனக்கு அது முக்கியமல்ல'' என்று பாகவதர் கூறிய போதே, பஞ்சு அண்ணாவும், ராஜப்பாவும் தலையை ஆட்டினார். மறுகணம் தம்பூராவின் இனிய ஓசையைத் தழுவிக்கொண்டு ஹரியின் குரல் காற்றிலே 'கணீரெ'ன்று ஒலித்தது.

பாகவதர் எதிர்பார்க்கவே இல்லை. எடுத்ததுமே 'நாட்டக்குறிஞ்சி' வர்ணத்தை துரித காலத்தில் ஆரம்பித்தான். அதை மூன்று காலம் பாடி, மளமள வென்று பத்து ஆவர்த்தனம் ஸ்வரம் விவகாரமாகப் பாடி அவன் முடிப்பதற்குள் 'சடசட' என்று மழை பெய்வது போல் கரகோஷம் காதைப் பிளந்தது. பஞ்சு அண்ணாவும் ராஜப்பாவும் அதற்குள் உஷாராகி விட்டனர்.

அதன் பிறகு 'ஹம்ஸத்வனி' ராகத்தை விரிவாகப் பாடி 'வாதாபி கணபதிம்' என்ற தீக்ஷதர் கிருதியைப் பிரமாதமாகப் பாடினான்.

பஞ்சு அண்ணாவுக்கு இரண்டாவது பாட்டிலேயே வேர்த்து விட்டது. 'ராஜப்பாவின் பேச்சைக் கேட்டுப் பயலைத் தப்பாக எடை போட்டுவிட்டோம். ஒத்திகைக்கு வரவில்லை என்பதை மனத்தில் வைத்துக் கொண்டுதான் பயல் ஆரம்பத்திலேயே இப்படி தண்ணீர் காட்டு கிறான்: இன்னும் என்ன பல்லவியை, எத்தனை களைச் சவுக்கத்தில் தயார் பண்ணி வைத்திருக்கிறானோ? இந்த ராஜப்பாவுக்கு என்ன, தொப்பியைத் தட்டிக் கொண்டு போய்விடுவான். பாட்டுக்கு ஈடு நான் அல்லவா கொடுத் தாகவேண்டும்? இரண்டுங்கெட்டான் இடத்தில் ஸ்வரத்தை நிறுத்திவிட்டுத் திரும்பிப் பார்க்கிறான். வாங்கி வாசிக்கா விட்டால் எனக்கல்லவா அவமானம்?' என்ற கவலை அவரைப் பிடித்துக் கொண்டது. அவர் அதை மறைத்துக் கொண்ட வண்ணம், பாடுகிற ஹரியை மிகவும் ரசித்து, 'பலே! சபாஷ்!' என்று சமயம் வாய்த்த போதெல்லாம் அவனைக் குஷிப்படுத்தி, அவனுடைய அபிமானத்தைத் தம் பக்கம் திருப்ப முயன்றார்.

ஆனால் ஹரியோ, ஆரம்பத்தில் இரண்டு மணி நேரத் துக்கு அபூர்வ ராகமாகவும், புதிய புதிய கீர்த்தனைகளாக வுமே பாடிக்கொண்டிருந்தான். இந்தக் களேபரத்தில், பஞ்சு அண்ணாவுக்குப் பழக்கமான உருப்படிகளுக்குங்கூடத் தடுமாற்றம் கண்டுவிடும் போலிருந்தது. உண்மையிலேயே பஞ்சு அண்ணா அத்தனை வருஷ அநுபவத்தில், அன்று போல் வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டு தொழில் செய்ததில்லை. அவருடைய மேதா விலாசத்தை விழுங்கு கிற மகா மேதையாக ஹரி கச்சேரி செய்துகொண் டிருந்தான்.

அவனுடைய சாரீரத்தையும், சாதக பலத்தையும் கண்டு, எதிரே இருந்த பெரிய பெரிய வித்துவான்களே பிரமித்தனர். அவன் ராகம் பாடுகிற பந்தாவையும், கச்சிதமாகக் கீர்த்தனைகளைப் பொறுக்குகிற அழகையும், கச்சேரியை நிர்வகித்துப் போகிற திறமையையும் கண்ட அனைவரும், ஹரியின் இடத்தில் பாகவதரே அமர்ந்திருப்பதாகத்தான் உணர்ந்தனர். அதே குரல், அதே பாணி அதே சிரிப்பு!

ஹரி மெய்ம்மறந்து கல்யாணி ராகத்தைப் பாடிக்கொண்டிருந்தான். அவன் பாடிக்கொண்டிருந்தான் என்பதைவிட அந்த ராகதேவதையே அவன் முன்னால் வந்து நர்த்தனமாடிக் கொண்டிருந்தாள் என்றுதான் சொல்லவேண்டும். லட்சுமியம்மாளுக்கு அப்படியே மெய் சிலிர்த்துவிட்டது. ‘அப்பனே நீ போன ஜன்மத்தில் என்ன பூஜை செய்தாயோ, அல்லது எந்த மகானுடைய அவதாரமோ எனக்குப் புரியவில்லை. உன் குரலும், நீ பாடுகிற பாட்டும் யாராலும் சொல்லிக் கொடுத்து வருவன அல்ல, ஏதோ நாங்கள் செய்த பாக்கியம், தெய்வம் உன்னை எங்களிடம் கொண்டு வந்து சேர்த்திருக்கிறது. உன்னுடைய அருமை தெரியாமல் நாங்கள் ஏதாவது நடத்தியிருந்தாலும், ஹரி, எங்களை மன்னித்துவிடு. இனிமேல் நீ, எங்கள் வீட்டுக்கு வந்து ஒரு துரும்பை எடுத்துப் போட நான் அநுமதிக்கமாட்டேன், என்று எண்ணிக் கொண்டாள். சுந்தரி இந்த உலகத்திலேயே இல்லை. தன் இரு கண்களையும் மூடிக் கொண்ட அவள் ஹரி செய்கிற நாதோபாசனையில் அப்படியே மூழ்கி விட்டாள்.

ஹரி கல்யாணி ரகாம் பாடி முடித்தவுடன் எதிரே இருந்த மகாவித்துவான் முத்தையா பாகவதர் சட்டென்று எழுந்து நின்றார். சபையோரை நோக்கி, ‘‘ரஸிகமணிகளே, இந்தக் குழந்தையின் பாட்டு, பெரிய மகாராஜாக்கள்

முன்னிலையிலும், பிரபுக்கள் எதிரிலும் பாடவேண்டிய பாட்டு. வெறுங்கையுடன் வந்து தெரியாமல் உட்கார்ந்து விட்டேன். என்னிடம் இப்போது இருப்பது இவ்வளவு தான். ஆனால் இது. இவன் பாடிய கல்யாணிக்குக் கோடியில் ஒன்று பெறாது. இருந்தாலும் இது என் ஆசீர்வாதம்'' என்று கூறித் தம் கையில் போட்டிருந்த தங்கத் தோடாவைக் கழற்றி ஹரியின் கையில் பூட்டினார். அப்போது சபையில் எழுந்த ஆரவாரம் அடங்கிப் பஞ்சு அண்ணா பிடில் வாசிக்கச் சிறிது நேரம் ஆயிற்று.

கல்யாணி ராகத்தைத் தமக்குக் கிடைத்த வரப் பிரசாதமாக எண்ணித் தமக்குத் தெரிந்த திறமையை எல்லாம் காட்டி பஞ்சு அண்ணாவும் வெளுத்து வாங்கினார். ஆனால் என்னதான் தேனாக இருந்தாலும், அமுதத்துக்கு ஈடாகுமா? அதை பஞ்சு அண்ணாவும் பாரபட்சமில்லாமல் மனமார ஒப்புக் கொண்டார். நெரடான தாளத்தில் அமைந்த ஒரு கிருதியில் ஹரி விட்ட இடத்தில் ராஜப்பா தனி ஆவர்த்தனம் வாசித்துக் கொண்டிருந்தார்.

இந்த நிகழ்ச்சிகளையெல்லாம் பார்த்தப் படித் தன்னை மறந்து கச்சேரியை ரசித்துக் கொண்டிருந்த பாகவதரின் நினைவுகள், அவரை இறந்த காலத்தை நோக்கி இழுத்துச் சென்று கொண்டிருந்தன.

''பாகவதர்''—என்கிற அடைமொழி இல்லாமல்—வெறும், சுவாமி மலை சுப்பராமனாக அவர் முன்னுக்கு வந்து கொண்டிருந்த நேரம். பூர்வஜென்ம வாசனையோ; விட்ட குறை - தொட்ட குறையோ - அல்லது கடுமையான உழைப்பும்; இயற்கையான ஞானமும்; அறிவும் திறமையுமோ ஏதோ ஒன்று—குருநாதர் முன்னிலையில் இளம் வயதில் அரங்கேறிய சுப்பராமன் மிகக் குறுகிய காலத்திற்குள், புகழேணியின் உச்சிக்குச் சென்றுவிட்டார்.

அந்த வயதில் சுப்பராமன் ராகங்களைக் கையாள்கிற பாணியையும்; அவரது அபாரமான ஸ்வரஞானத்தையும் கண்டு பெரிய வித்வான்களே பிரமித்துப் பாராட்டினர்.

ஆயினும் அவருடைய இசையில் 'தேசியம்' கலப்பதாகச் சில பிராசீன வித்வான்கள் குறைபட்டுக் கொண்டனர். சுப்பராம பாகவதரோ—

'ஒரு கச்சேரிக்கு சம்பிரதாய சுத்தம் எவ்வளவு முக்கியமோ'— அதே போல ஜனரஞ்சகமும் முக்கியம் என்றே எண்ணினார்.

பலாச்சுளையில் தேனைத் தடவுவது போல— 'யமன் கல்யாணி, ஹிந்தோளம், தேஷ், தர்பாரி கானடா, சிந்து பைரவி' போன்ற குறிப்பிட்ட சில ராகங்களில் அவர் லேசாகத் தேசியம் கலந்து பாடும் போது; கேட்கிறவர்கள் சொக்கிப் போவார்கள். சாமானிய ரசிகர்களும் தம்மை மறந்த ஆனந்தத்தில் கரகோஷம் செய்வார்கள். அப்போதெல்லாம் அவர்—

'எனக்கு இதுதான் முக்கியம். என்னுடைய பாட்டைக் கேட்டுப் பாமரரும் ரசிக்க வேண்டும். பொது இடங்களில் கச்சேரி செய்ய எனக்குக் கிடைத்த மேடையை— சாஸ்த்ரீய சங்கீதத்தில் எனக்குள்ள மேதா விலாசத்தைப் பிரகடனப் படுத்தக் கிடைத்த ஒரு வாய்ப்பாகக் கருதி - பயன்படுத்த நான் விரும்பவில்லை.

சங்கீதத்தைப் பற்றி அதிகம் தெரியாத - லட்சக் கணக்கானவர்களையும் என் இசை சென்று தொட வேண்டும். அவர்கள் உள்ளங்களை என் இசை மகிழ்விக்க வேண்டும் என்பதற்காகவே பாடுகிறேன்'— என்றே எண்ணினார்.

அதனாலேயே தன்னுடைய கச்சேரியில் ஒரு பகுதியைத் தமிழ் பாடல்களுக்காக ஒதுக்கினார். அருணாசலக் கவி ராயரின் 'ராம நாடக' கிருதிகளையும்; கோபால கிருஷ்ண பாரதியின் 'நந்தனார்' சரித்திரப் பாடல்களையும் அவர்,

மெய்மறந்து பொருள் செறிந்து பாடும் போது கேட்பவர்கள் மெய் சிலிர்த்துப் போவார்கள்.

இன்று அந்தக் கலையில் ஹரி அப்படியே தன் வாரிசாகவே விளங்குவதைக் கண்ட போது, ''முருகா இது நிச்சயமாக நான் கற்றுக் கொடுத்த வித்தை மட்டுமல்ல; மங்கி இருண்டிருக்கும் பெட்ரோமாக்ஸைப் பின் போட்டுப் பிரகாசமடையச் செய்வானே; அதைப் போல் - இவன் உள்ளத்தில் அக்கினிக் குழம்பாகக் கனன்று கொண்டிருந்த இசையைத்தான், சிறிது தூண்டி விட்டிருக்கிறேன்; அது ஜெகஜ்ஜோதியாக இன்று சுடர் விட்டுப் பிரகாசிக்கிறது.

ஆனால், இந்த ஒளி விளக்கை அடையாளம் கண்டு; தேடிக் கொணர்ந்து தூண்டி விட்டு; இசை உலகிற்கு அறிமுகப்படுத்திய பெருமை ஒன்றுதான் எனக்குரியது'— என்றெல்லாம் மனம் போனபடி பாகவதர் எண்ணிக் கொண்டிருந்தார்.

ஆம்! — ஹரியின் அன்றையப் பாட்டு; கற்றுக் கொடுத்தவரையே, பிரமிக்க வைத்துக் கொண்டிருந்தது.

விதம் விதமான மலர்களை நாடிச் சென்று; சுவையுள்ள தேனைத் திரட்டி உண்ணும் வண்டுகளைப் போல் எண்ணற்ற வித்வான்களின் இசைகளைக் கேட்டு; அவர்கள் ஒவ்வொருவரிடமும் உள்ள சிறப்பு அம்சங்களையெல்லாம் ஹரி தனதாக்கிக் கொண்டிருந்தான்.

அவன் மோஹனம் பாடிய போது மஹாராஜபுரமும்; தோடி பாடிய போது—ராஜரத்தினம் பிள்ளையும் கண்முன் வந்து நின்றார்கள்.

தன் பாட்டைத் தவிர, இப்படிப் பலதரப்பட்ட பிரபல வித்வான்களின் இசை நிகழ்ச்சிகளையெல்லாம் நிறையக் கேட்டு; ஞானத்தைப் பெருக்கிக் கொள்ள வேண்டுமென்று உபதேசித்தவரும்; அதற்கான வாய்ப்புக்களை அளித்து அவனை உருவாக்கியவரும் பாகவதரேதான்.

திருவையாற்றில் ஸ்ரீ தியாகராஜர் ஆராதனை விழா வின்போது கச்சேரிகள் நடக்கும் நான்கு நாட்களும் பாக வதருடனேயே ஹரீ இருப்பான். திருவிசநல்லூர் ஐயா வாள் உத்ஸவத்திலும்; கும்பகோணம் சோலையப்பன் தெருவில் நடக்கும் ஸ்ரீ ராமநவமி உத்ஸவத்திலும்— சிறியது-பெரியது என்று பாராமல்; ஒரு வித்வான் பாடுவது விடாமல் ஹரி சென்று அவ்வளவு கச்சேரிகளையும் கேட்பான்.

அவைகளினால் ஏற்பட்ட அனுபவம்; கேள்வி ஞானம் - நீரிலிருந்து பாலைப் பிரித்து உண்ணும் அன்னப் பறவை போல அவனுக்குப் பயன் பட்டிருக்கிறது.

ஒவ்வொரு ராகங்களிலும், கிருதிகளிலும், என்றோ, எங்கோ, யாரிடமோ கேட்ட நல்ல நல்ல சிறப்பான அம் சங்கள்; 'அபூர்வப் பிடிகள்' இவற்றையெல்லாம் அவ்வப் போது திரட்டி, ஒன்று விடாமல் கிரஹித்துத் தனதாக்கிக் கொண்டு ஹரி இன்று அதை ஜனங்களுக்குத் தன் குரலில்; தன் பாணியில் வழங்கிய போது— மக்கள் மகிழ்ந்து போனார்கள். ரசிகர்கள் தங்கள் தங்கள் அபிமான வித் வான்களின் அபூர்வ இசையைக் கேட்பது போல் பூரித்துப் போயினர். ஆனால்—

ஹரி அதற்காக தான் கற்றுக் கொண்டதையும், கேட்ட வற்றையும், கிளிப் பிள்ளை மாதிரி ஒப்புவிக்கவு மில்லை.

—தன் குருவின் பாணியிலிருந்து மாறுபட்டோ, அல்லது தனக்கென்று ஒரு 'தனித் தன்மை' இல்லாமலோ பாடு கிறான் என்று யாருமே சொல்ல முடியாத அளவிற்கு ஹரி தன்னுடைய அரங்கேற்றக் கச்சேரியிலேயே —எவருடைய அனுமானத்திற்கும், அளவு கோலுக்கும் அப்பாற்பட்ட இசை மேதையாகத் தோன்றினான்.

அருகிலிருந்த பஞ்சு அண்ணா பூரித்துப் போனார். சிறிய ஆலம் விதையினுள்—கொம்பும், கிளையும், வேரும்

விழுதுகளுமாய் அண்டம் பரப்பி நிற்கும் பெரிய ஆலமரம் கண்ணுக்குத்தெரியாமல் இருப்பதுபோல் இருந்த ஹரியை- அவர், உளமார, 'நீ பல்லாண்டு பேரும் புகழுடனும் வாழ வேண்டும்' என்று மனம் நிறைந்து வாழ்த்தினார்.

ராஜப்பா தனி ஆவர்த்தனத்தைப் பிரமாதமாக முடித்து விட்டுச் சோர்ந்துபோய்; அப்ளாஸைப் பற்றி நினைக்கவே நேரமின்றிச் சோடா குடித்துக் கொண்டிருந்தார். கர கோஷம் காதைப் பிளந்தது.

வண்டியில் இருந்த பாகவதர் விக்கி விக்கி அழுது கொண்டிருந்தார். ஹரி கல்யாணி ராகம் பாடியபோது அவரது விழிகளில் படர்ந்துவந்த கண்ணீர், அவன் பல்லவியை அநுபவித்துப் பாடிக்கொண்டிருந்தபோது கரை கடந்துவிட்டது. அதன் பொருள், அவரது உள்ளத்தில் பெரும் கிளர்ச்சியை மூட்டித் தம்மையும் மீறி அவரை உணர்ச்சி வெள்ளத்திலாழ்த்தி விட்டது. மேலும் அந்தப் பல்லவியை அவர் அவனுக்குச் சொல்லிக் கொடுக்கவே இல்லை.

தனி ஆவர்த்தனத்திற்குப் பிறகு ஹரி பாடிய அஷ்ட பதியிலும்; அருட்பாவிலும் அவன் ரசிகர்களை மெய் மறக்கச் செய்து விட்டான்.

> ''தாயாகித் தந்தையுமாய்த்
> தாங்குகின்ற தெய்வம்—
> சேயாக எனை வளர்க்குந்
> தெய்வ மகா தெய்வம்,''

என்னும் வள்ளலாரின் அருட்பா வரிகளை ஹரி மனமுருகிப் பாடும்போது—அவன் உள்ளத்தில் குருநாதர்தான் குடி கொண்டிருந்தார்.

கேட்பவர்கள் மட்டுமின்றி பாடுகிற ஹரியே கண்கலங்கி விட்டான். குரல் கம்மி வார்த்தைகள் தொண்டையில் இடறின.

பாகவதர் வண்டியிலிருந்து இறங்கி அப்படியே ஓடிச் சென்று ஹரியைக் கட்டிக் கொள்ள மாட்டோமா என்று தவித்தார்.

நாகசாமி பதறிப் போய், ''எசமான், எசமான், உங்களுக்கு நல்ல உடம்பு இல்லை. அழாதீங்க. உங்களை நான் இங்கே அழைத்து வந்ததே தப்பு'' என்று புலம்பினான்.

''நாகசாமி, நான் அழவில்லையடா; இது ஆனந்தக் கண்ணீர். எனக்கு ஒன்றும் வந்துவிடாது. இந்தப் பாட்டைக் கேட்க என்னை இங்கே கொண்டுவந்த உனக்கு நான் கோடிப் பொன் கொடுத்தாலும் ஈடாகாது. என்னை நீ இங்கே கொண்டுவராமல் இருந்தால்; இந்த ஆனந்தத்தை நான் எந்த ஜன்மத்தில் அநுபவிக்க முடியும்?'' என்று அவர் உணர்ச்சி வசப்பட்டுப் பேசும்போது, செஞ்சுருட்டியில் ஒரு கிருதியை ஹரி பாடிக் கொண்டிருந்தான்.

''புல்லாய்ப் பிறவி தரவேணும் கண்ணா,
புனிதமான பலகோடிப் பிறவி தந்தாலும்
பிருந்தாவன மதிலொரு—
புல்லாய்ப் பிறவி தரவேணும்''

இந்தப் பாட்டைப்பாடி முடிப்பதற்குள் ஹரி கண்ணனையும் ராதையையும், எண்ணற்ற கோபியரையும் அவன் ரசிகர்கள் முன் கொண்டுவந்து நிறுத்தி; சுவாமிமலையையே பிருந்தாவனமாக்கி விட்டான்.

தேவர்கள் பூமாரி பொழிவதுபோல் ரசிகர்கள் எழுப்பிய கரகோஷம் விண்ணை முட்டியது.

பாகவதர் வெகுவாகச் சோர்ந்து போனார். உடல் நிலைக் கோளாற்றினால்; அவரால் எந்த உணர்ச்சியையுமே அளவோடுதான் ஏற்றுக் கொள்ளவோ அநுபவிக்கவோ முடிந்தது. நாகசாமியிடம் கூறியது போல் உண்மை

யிலேயே அவர் இப்படி ஓர் உணர்ச்சியை அநுபவித்த தில்லை. எல்லாரும் தம்மைப் பிரமாதமாகப் பாடுவதாகப் புகழ்வதைத்தான் அவர் கேட்டிருக்கிறார். ஆனால் அப்படி அனைவரும் புகழும் படி தம் பாட்டு எப்படி இருக்கும் என்பதை அவர் அன்றுதான் முழுக்க முழுக்க அநுபவித்தார்.

'ஆயுளில் நல்ல சிஷ்யனை உருவாக்கி, அற்புதமான பரம்பரையை உண்டாக்கி விட்டோம்; இனிமேல் இந்த உயிர் போனாலும் இருந்தாலும் அக்கறை இல்லை' என்று தமக்குள்ளேயே பேசிக் கொண்டார்.

'அரை மணி நேரத்துக்கு மேல் அவகாசம் இல்லை' என்று கூறித் திறப்பு விழாவுக்கு வந்திருந்த கலெக்டரும் அவர் மனைவியும் ஹரி மங்களம் பாடி முடிக்கிற வரையில் உட்கார்ந்த இடத்தைவிட்டு அசையவில்லை.

கச்சேரி முடிந்ததும் கலெக்டர் காரியதரிசியைக் கூப்பிட்டு, "நான் ஒரு இரண்டு வார்த்தை பேச வேண்டுமென்று ஆசைப் படுகிறேன்; பேசலாமா?" என்றதும் காரியதரிசிக்கு ஆனந்தமும் ஆச்சரியமும் தாங்க வில்லை. "பேசுங்கள். தாராளமாகப் பேசுங்கள்" என்று மேடைக்கு அழைத்துப் போனார்.

நல்ல சங்கீத ஞானமுள்ள அந்தக் கலெக்டர் உணர்ச்சி வசப்பட்டு ஹரியைப் பாராட்டிப் பேசி, தம் மனைவி கொடுத்த தங்கச் சங்கிலியையும் பரிசாக ஹரிக்கு அணி வித்து விட்டுப் புறப்பட்டார். மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

கச்சேரி முடிந்ததும் மக்கள் முண்டியடித்துக் கொண்டு ஹரியைப் பார்க்க மேடையைச் சுற்றிலும் கூடிவிட்டனர். கலெக்டரை வழியனுப்பிவிட்டு வந்த காரியதரிசி ஹரியை மடத்திலேயே சாப்பிட வேண்டுமென்று வற்புறுத்தினார்.

ஆனால் ஹரி, ''குருநாதரைப் பார்த்து வணங்கி விட்டுத்தான் சாப்பாட்டைப் பற்றிய விஷயமெல்லாம்'' என்று பிடிவாதமாகச் சொல்லிப் புறப்பட்ட போது, கூட்டத்தில் இருந்த யாரோ ஒருவர், ''அதோ செட்டி மண்டபத்துக்குப் பக்கத்தில் மாட்டு வண்டியில் தான் பாகவதர் இருக்கிறார்'' என்று கூறினார். இதைக் கேட்டதும் பிரமித்துப்போன ஹரி, மறுநிமிஷம் கையில் பிரசாதத்துடன் செட்டி மண்டபத்தை நோக்கி விரைந் தான். ஆனால் அங்கே பாகவதரோ, வண்டியோ இல்லை.

அத்தனை பெரிய கூட்டத்தில், கச்சேரி முடிந்ததும் ஹரி இருந்த இடத்தை லட்சுமியும் மற்றப் பெண்களும் எப்படி நெருங்க முடியும்?

''நாம் மெதுவாக வீட்டுக்குப் போய் விடலாம். ஹரி பின்னால் வரட்டும். வண்டிக்காகக் காத்திருந்தால் நேர மாகி விடும்'' என்று லட்சுமியம்மாள் எல்லாரையும் அழைத்துக்கொண்டு, கூட்டத்தின் மத்தியிலிருந்து விடுபடுவ தற்குள் சுசீலா, ''ஐயோ, அம்மா!'' என்று பெரிதாக அலறினாள். பக்கத்தில் இருந்தவர்கள், ''என்ன, என்ன?'' என்று பரபரப்புடன் கேட்டனர்.

''என் நெக்லஸை யாரோ அறுத்துக் கொண்டு போய்விட்டார்கள் அம்மா!'' என்று சுசீலா குழந்தை போல் அழுதுகொண்டே தன் கழுத்தைத் தடவிக் காட்டினாள். தங்க நெக்லஸ் கண்மூடிக் கண் திறப்ப தற்குள் பறி போய்விட்டது. இதற்குள் விஷயம் காட்டுத் தீ போல் பரவி, ''திருடன், திருடன்!'' என்ற குரலும். ''அதோ ஓடுகிறான், பிடியுங்கள், பிடியுங்கள்!'' என்ற கோஷமும் வட்டாரம் முழுவதும் பரவிவிட்டன.

லட்சுமியம்மாளும் சுந்தரியும் என்ன செய்வதென்றே தெரியாமல் நின்றனர். வசந்தியின் மனமோ சுசீலா படும்

வேதனையைத் தாளாமல் தவித்தது. அதற்குள் காசியதரிசி இந்தச் சமாசாரத்தைக் கேட்டுப் பாகவதர் வீட்டுப் பெண்கள் இருந்த இடத்துக்கு ஓடி வந்தார்; கலவரப்பட்டிருந்த அவர்களுக்கு ஆறுதல் கூறினார். "நான் இப்பொழுதே போலீசுக்குத் தகவல் கொடுத்து திருடனைக் கண்டுபிடிக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்கிறேன். நீங்கள் வண்டியில் போங்கள்" என்று கூறியபோதே ஹரியும் அங்கே வந்து சேர்ந்தான்.

ஹரியைக் கண்டதும் காரியதரிசிக்குச் சற்றுத் தெம்பு வந்தது. "ஹரி, சுசீலாவின் நெக்லெஸை எவனோ அறுத்துக்கொண்டு ஓடிவிட்டான். நான் போலீசில் புகார் கொடுத்து ஆக வேண்டிய காரியங்களைக் கவனிக்கிறேன். நீங்கள் இவர்களைப் பத்திரமாக வீட்டுக்கு அழைத்துப் போங்கள்" என்றார்.

அதற்குள் லட்சுமியம்மாள், "நீங்கள் மேற்கொண்டு ஆகவேண்டியதைக் கவனியுங்கள். எனக்கு என்னவோ நம்பிக்கை இல்லை. கையை விட்டுப் போன பொருள் இனிமேல் கிடைக்கவா போகிறது?" என்று வருத்தத்துடன் கூறியபடிப் புறப்பட்டாள்.

ஹரி எல்லாருடனும் வீட்டை அடைந்த போது உள்ளேயிருந்து தம்பூராவின் இனிய நாதமும் ராக ஆலாபனையும் அவர்களை வரவேற்றன.

ஹரி, ஒரு கணம் தயங்கினான். குருநாதரின் குரல் தான். பாகவதர் கல்யாணி ராகத்தை ஆலாபனை செய்து கொண்டிருந்தார். 'வண்டியில் வந்ததே தவறு. இந்த உடம்போடு இவர் ஏன் பாட வேண்டும்?' என்று அவன் மனத்துக்குள் கவலை கொண்டான்.

சாதாரண சமயமாக இருந்தால், சுசீலாவே கேலி செய்திருப்பாள். ஆனால் அவளுடைய கேலியும் கிண்டலும் நெக்லெஸோடு பறி போய் விட்டன. பெட்டிப்

பாம்பாக அடங்கி ஒடுங்கித் தன் தாயின் நிழலில் மறைந்து கொண்டே அப்பா முகத்தில் விழிக்க அஞ்சி வீட்டுக்குள் ஓடிவிட்டாள்.

கச்சேரி முடிந்து எல்லாரும் வந்து விட்டதைக் கூடக் கவனிக்காமல் மெய் மறந்து பாடிக் கொண்டிருக்கும் பாகவதரிடம் லட்சுமியம்மாள் சற்றுக் கோபமாகவே கேட்டாள்: “கதவைத் திறந்து போட்டுக் கொண்டு, இப்படிக் கண்ணையும் மூடியபடி உட்கார்ந்து பாடு கிறீர்களே! போன இடத்தில்தான் பறி கொடுத்தாயிற்று. இங்கேயும் எவனாவது உள்ளே புகுந்து குடிக்கிற செம்பையும், கட்டிக் கொள்கிற துணியையும் கொள்ளை யடித்துக் கொண்டு போகட்டும். அப்புறம் எல்லாருமாகச் சேர்ந்து தெருவில் போய் நிற்கலாம்'' என்று படபட வென்று பேசினாள்.

பாகவதர் சட்டென்று தம்பூராவை நிறுத்திவிட்டு மனைவியின் முகத்தைப் பார்த்தார். மறுகணம் அவ ருடைய பிரகாசமான முகம் வாடிக் கறுத்தது. ஹரியின் பாட்டை எட்ட இருந்து கேட்ட தம்மைவிட; அருகில் இருந்து கொண்டு; அங்கே அவனுக்குக் கிடைத்த எல்லாக் கௌரவங்களையும் கண்ட லட்சுமிதான் அதிக மகிழ்ச்சி யடையக் கூடியவள். கச்சேரி முடிந்ததும் அவர்கள் எல்லாரும் ஒரே மகிழ்ச்சியோடும், மன நிறைவோடும் வருவார்கள் என்று அவர் எதிர்பார்த்ததற்கு மாறாக, ஹரி உட்பட அத்தனை பேருடைய முகமும் சாம்பிக் கிடந்தன, 'ஏதோ நடந்துள்ளது' என்பதை அறிந்த அவர், “என்ன விஷயம்? எல்லாரும் ஏன் இப்படிப் பேய் அறைந் தாற் போல் இருக்கிறீர்கள்?'' என்றார் பாகவதர்.

“எல்லாம் உங்கள் பெண் சுசீலாவைக் கேளுங்கள்; சொல்லுவாள். போட்டாப் போட்டியும், பொறாமையும் இருந்தால் இப்படித்தான் கைமேல் பலன் கிடைக்கும்.

குடுகுடுவென்று கொண்டு போய்க் கச்சேரியில் நெக்லெஸைத் தொலைத்திருக்கிறாள். நீங்களே விசாரியுங்கள்'' என்று லட்சுமியம்மாள் கூறிய போதே, உள்ளே இருந்த சுசீலாவின் விம்மல் ஒலி பெரிதாகக் கேட்டது. அதைக் கேட்டதும் சுந்தரியின் மனம் வேதனைப்பட்டது.

''குழந்தையைக் கோபித்துக் கொண்டால் அவள் என்ன செய்வாள்? அவளாகவா தொலைத்தாள்? ஏதோ போதாத வேளை!'' என்று சுந்தரி கூறியபோதே, லட்சுமியம்மாள், ''கச்சேரி கேட்க வருகிறவளை; சதிர் ஆடப் போகிறவள் மாதிரி, பெட்டியில் இருக்கிறதை எல்லாம் எடுத்து வாரிப் போட்டுக் கொண்டு யார் வரச் சொன்னது? எவன் கண்ணைப் பறித்ததோ, அறுத்து எடுத்துக் கொண்டு போனான்! இனிமேல் கிடைத்த அன்றுதான் நிச்சயம்'' என்றாள்.

''காரியதரிசி சொன்னதிலிருந்து எனக்கு என்னவோ எப்படியும் அது கிடைத்துவிடும் என்றுதான் தோன்றுகிறது. போலீசில் புகார் கொடுத்துத் தேடச் சொன்னால் அகப்படாமல் எங்கே போய்விடும்?'' என்று ஆறுதல் கூறினாள் சுந்தரி.

பாகவதருக்கு விஷயம் புரிந்து விட்டது. நெக்லெஸின் விலையை எண்ணி அவருடைய மனமும் ஒரு கணம் சங்கடப்பட்டது. என்றாலும், 'போனது போய்விட்டது. இனிமேல் அதற்காக அமர்க்களப்படுத்தி என்ன பிரயோசனம்? நம்முடைய பொருளானால் கிடைக்கட்டும்' என்று சமாதானப்படுத்திக் கொண்டார். மேலும், அவருக்கு அப்போது இருந்த மன மகிழ்ச்சியில் ஹரியைத் தவிர உலகில் எந்த பொருளுமே பொருட்டாகத் தோன்றவில்லை. தம் லட்சியத்தை எல்லாம் அள்ளிக் கொட்டி உருவாக்கிய ஹரி; அதைச் செவ்வனே நிறைவேற்றி

விட்டான். இனி அவனது எதிர்காலம் ஒன்றுதான் அவருடைய லட்சியம். மற்றவை— ஒதுக்கி எறியப் பட வேண்டிய குப்பைகளாகவே அவருக்குத் தோன்றின.

... வண்டியில் உட்கார்ந்து கச்சேரியைக் கேட்டபோது அவருடைய மனத்தில் அத்தகைய எண்ணந்தான் நிலைத்திருந்தது.

## 20. குருதட்சணை

பாகவதருக்கு வாழ்க்கையில் இரண்டு குறைகள் இருந்தன. பிள்ளை இல்லாதது ஒன்று; தமக்குப் பிற் காலத்தில் பெயர் சொல்லச் சிறந்த சிஷ்யன் ஒருவனாவது வேண்டுமே என்பது மற்றொன்று. இப்போது அவருக்கு அந்த இரண்டுமே கிடைத்துவிட்டன. பணத்தையும் காசையும் சம்பாதித்துவிடலாம். இந்த இரண்டு இன்பங் களையும் இறைவனாகக் கொடுக்காத வரையில் அநுபவிக்க முடியுமா?

'அவற்றையே அடைந்த பிறகு, அற்ப நகையும் பண்டமுமா பெரியவை? கண் மூடித் திறப்பதற்குள் மகாவித்துவான் ஒருவர், கையில் இருந்த தோடாவைக் கழற்றிப் போட்டார்; ஊருக்கெல்லாம் அதிகாரி ஒருவர் பொன்னாலும் பூவாலும் மாலையைக் கழுத்தில் போட்டு வாயாலும் விண்ணுயரப் புகழ்ந்துவிட்டுப் போகிறார். இதற்கு இணை உண்டா? இவையெல்லாம் சாதாரணமாக எல்லோருக்கும் கிடைக்கக்கூடிய பாக்கியங்களா?'

எல்லாரும் உள்ளே சென்றவுடன், ஹரி; கையில் இருந்த தோடாவையும், சங்கிலியையும் குருவின் முன் வைத்து அவருடைய பாதங்களில் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தான்.

''யார் சந்தோஷப்பட்டால் என்ன? கச்சேரிக்கு உட்கார்ந்தது முதல்; நீங்கள் எதிரில் இருந்து கேட்கிற பாக்கியத்துக்கு நான் கொடுத்து வைக்கவில்லையே என்ற வேதனையுடன் தான் பாடினேன்'' என்று ஹரி கூறியதும்

பாகவதர் இடைமறித்து, ''நான்தான் நீ வர்ணம் பாட ஆரம்பிப்பதற்கு முன்னாடியே வண்டியில் வந்துவிட்டேனே! நீ கல்யாணி பாடும்போதெல்லாம் நான் அழுது கொண்டேதான் கேட்டேன். பஞ்சு அண்ணாவையும் ராஜப்பாவையும் ஒத்திகைக்கு வராத கோபத்தை வைத்துக்கொண்டு நீ விரட்டியதையும் ரசித்துக்கொண்டே இருந்தேன். ஆனால் நீ கல்யாணி பாடியதைக் கேட்டு, வீட்டுக்கு வந்ததும் நான் செய்ய எண்ணியதை எனக்கு முந்தி, முத்தையா பாகவதர் செய்து விட்டார். ஆனால் அதற்காக உன்னை விட்டுவிடுவேன் என்று எண்ணாதே. எங்கே, உன் வலக் கையைக் காட்டு'' என்று கூறியவர், மடியில் இருந்த ஒரு தங்கத் தோடாவை எடுத்து அவனது வலக்கரத்தில் இழுத்துப் பூட்டினார்.

அப்போது அங்கே வந்த சுந்தரி தன் கையில் இருந்த ஒரு வைர மோதிரத்தை எடுத்துப் பாகவதரிடம் கொடுத்தாள்.

பாகவதர் அதை ஆர்வத்துடன் பெற்றுக் கொண்டு, ஹரியைப் பார்த்து, ''நீ எத்தனை தோடாக்களும் மெடல்களும் சங்கிலிகளும் வாங்கினாலும் சரி, சுந்தரியின் இந்த மோதிரத்துக்கு அவை ஈடாகா; சுந்தரியே உன்னைப் பாராட்டிப் பரிசளித்திருக்கிறாள் என்றால் அதற்கு இணையே இல்லை. இவள் அவ்வளவு பெரிய விதுஷி'' என்றார். உடனே சுந்தரி, ''மோதிரத்தை நான் ஹரிக்கென்று சொல்லியா கொடுத்தேன்? இத்தனை நேரம் பஜனை மடத்தில் நீங்கள் பண்ணின கச்சேரிக்காக ஹரிக்குப் பரிசா? அந்த மோதிரம் உங்களுக்குத்தான்'' என்றாள்.

இதைக் கேட்டதும் பாகவதர் 'கடகட'வென்று சிரித்தார். சிரித்துவிட்டு உடனே, ''இப்போது இப்படிச் சிரிப்பதுகூடக் குற்றமாகி விடும். பாவம்! லட்சுமி நெக்லெஸ் கெட்டுப்போன கவலையில் இருக்கிறாள்'' என்று கூறி, ''இன்று ஹரியின் கச்சேரியைக் கேட்டவர்கள் எல்லாரும் சொல்லுகிறதைத்தான் நீயும்

சொல்லுகிறாய், அதற்காக — பாடுபட்டவனுக்குத்தானே பரிசு கொடுக்க வேண்டும்?'' என்று பாகவதர் கூறினார்.

உடனே சுந்தரி, ''நானும் அதைத்தான் சொல்லுகிறேன். பாடுபட்டவர்களுக்குப் பலன் வேண்டாமா? அதைக் கொடுக்காவிட்டால் கற்றுக்கொண்டவனுக்குத் தான் வித்தை தக்குமா? அவனை இப்படிப் பாடும்படிச் செய்ய நீங்கள் பட்ட பாட்டுக்கு; ஹரியின் குருதட்சணையாகத்தான் நான் உங்களுக்கு இந்த மோதிரத்தைத் தருகிறேன். இதை அங்கீகரித்து அணிந்துகொண்டு அவனை ஆசீர்வதியுங்கள்'' என்று கூறினாள்.

சுந்தரியின் இந்த வார்த்தைகளைக் கேட்டதும் பாகவதர் பிரமித்துப் போய் அவளைப் பார்த்தார். ஹரி மெய்சிலிர்த்துப் போனான். 'எவ்வளவு பெரிய சம்பிரதாய ரீதியான விஷயத்தை; எப்படிப்பட்ட சமயத்தில் சுந்தரி நினைவில் வைத்துக்கொண்டு அதை நிறைவேற்றுகிறாள்!' என்று அவளுடைய அறிவின் விசாலத்தை அவர் வியந்தார்.

ஹரியோ, கண்ணிலிருந்து மாலை மாலையாகக் கண்ணீர் வழிந்தோடச் சுந்தரியைப் பார்த்துத் தன் இரு கைகளையும் கூப்பி, ''அம்மா ! நீங்கள் என்னிடம் கொண்டுள்ள கருணைக்கு வணக்கங்கள். ஆனால் நீங்கள் இப்போது கூறிய விஷயத்தை நான் எப்பொழுதும் மறந்ததே இல்லை. ஆனால் பரம ஏழையான நான் பணத்துக்கு எங்கே போவேன்? வித்யா பூர்த்தி தினத்தில் குருவுக்குக் காணிக்கை செலுத்தக்கூட விதியற்ற நிலையில் இருக்கிறேனே என்ற கவலை என்னை உயிருடனேயே கொன்றது. ஆனால் என் மனக்குறையைத் தெய்வமே முன்னின்று தீர்ப்பதேபோல், குருதட்சணை கொடுப்பதற்கென்றே இரு பரிசுகள் கிடைத்தன போலும்'' என்றவன்—

முத்தையா பாகவதர் போட்ட தோடாவையும், கலெக்டர் கொடுத்த சங்கிலியையும் கழற்றித் தேங்காய்

பழங்களின்மேல் வைத்துக் குருவின் கையில் கொடுத்து வணங்கினான்.

மனநிறைவோடு பெற்றுக்கொண்ட பாகவதர், "இப்போது உன் மனக்குறை நீங்கி விட்டதல்லவா?" என்று அப்படியே ஹரியை மார்போடு அணைத்துக்கொண்ட வண்ணம் உள்ளே இருந்த லட்சுமியை அழைத்தார்.

மனைவியைப் பார்த்ததும், "இதோ பார்த்தாயா? ஹரி பெரிய பணக்காரன் ஆகிவிட்டான். குருதட்சணை கொடுக்காமல் இருக்கக் கூடாதாம். இவற்றை எனக்குத் தன் ஆசாரிய தட்சணையாகக் கொடுத்திருக்கிறான். உள்ளே கொண்டு வை" என்று நீட்டினார் மனைவியிடம்.

லட்சுமி கணவரை விழித்துப் பார்த்துவிட்டு, "என்ன? விளையாடுகிறீர்களா? பெண் நெக்லெஸைத் தொலைத்து விட்டாள் என்று தவிக்கிறேனே; ஏற்றுக் கொள்கிறாளா பார்க்கலாம் என்று என்னை ஆழம் பார்க்கிறீர்களா?" என்று இரைந்து கேட்டாள்.

பிறகு லக்ஷ்மியம்மாள் ஹரியின் பக்கம் திரும்பி, "ஏண்டாப்பா ஹரி, நீ என்ன கொடுப்பாய் என்று எதிர்பார்த்தா உனக்கு இவர் பாட்டுச் சொல்லிக் கொடுத்தார்? உன் மனசு இருக்கிறதே; அதைவிட இந்தத் தோடாவும் சங்கிலியுமா உயர்ந்து விட்டன. இனி மேல் இந்த மாதிரியெல்லாம் பிரித்து வைத்து நடந்து கொள்ளாதே; எனக்குத் தாளாது. நானும் கலெக்டர் பெண்டாட்டி மாதிரி இருந்தால், கூட்டத்தில் அப்போதே நாலு வடம் சங்கிலியைக் கழற்றிக் கொடுத்து அனுப்பியிருப்பேன். இங்கே கிட்டே வா. கச்சேரி கேட்ட போது எனக்கு ஏற்பட்ட குறையை இப்பவே தீர்த்துக் கொள்கிறேன். உன் சந்தோஷத்துக்காக நீ கொடுத்த இந்த இரண்டையும் உங்கள் குரு ஏற்றுக் கொண்டு என்னிடம் கொடுத்துவிட்டார். இப்போது இவை

இரண்டும் என்னுடையவை. நீ மேடையிலே உட்கார்ந்து பாடி எங்களையெல்லாம் கண்ணீரால் கரைய வைத்தாயே, அதற்காக உனக்குத் தங்கத்தினால் அபிஷேகம் பண்ணி னாலும் தகும். ஆனால் இப்போது கையில் இருப்பவை இவைதாம்'' என்று கூறித் தோடாவை ஹரியின் கையில் போட்டு, செயினையும் கழுத்தில் போட்டாள்.

''அது என்ன, பவித்திர விரலில் வைரம் டால் அடிக் கிறது? சுந்தரி கொடுத்ததா? எடுங்கள் இப்படி'' என்று கணவரிடமிருந்து அதையும் வாங்கி, ''சுந்தரி, உன் ராசிக் கையாலே இந்த மோதிரத்தையும் ஹரியின் விரலில் போட்டு விடேன்'' என்றாள் லட்சுமியம்மாள் மிகவும் பரிவோடு.

எல்லாரும் லட்சுமியின் கம்பீரமான சொல்லுக்கு, மந்திர சக்தியால் கட்டுப் பட்டவர்கள் போல் செயல் புரிந்தனர்.

கையில் தோடாவும், கழுத்தில் சங்கிலியும், விரலில் மோதிரமும் அணிந்து கொண்டு நின்ற ஹரியைப் பார்த்து, ''இடையில் ஒரு பீதாம்பரமும், தலையிலே மயிற்பீலி கிரீடமும் இருந்தால் ஹரி, சாட்சாத் கிருஷ்ணன்தான்'' என்றார் பாகவதர்.

ஹரி சிரித்துக் கொண்டே எல்லாவற்றையும் கழற்றி லட்சுமியம்மாளிடம் கொடுத்தபடி, ''செட்டி மண்ட பத்துக்குப் பக்கத்தில் இருப்பதாக யாரோ சொன்னார்கள். கச்சேரி முடிந்ததும் நேராக அங்கே ஓடி வந்தேன். உங்களைக் காணோம்'' என்றான்.

''ஆமாம், நீங்கள் எல்லாரும் என்னைச் சீக்காளி ஆக்கி வீட்டில் விட்டுப் போய் விட்டீர்கள். எனக்கு இங்கே இருப்புக் கொண்டால்தானே? ஆனால் வீட்டுச் சாவி என்னிடம் இருந்ததனால், கச்சேரி முடிந்து இங்கே வந்து காத்துக் கொண்டிருக்கப் போகிறீர்களே என்று; கலெக்டர்

பேசி முடித்ததுமே புறப்பட்டு வந்து விட்டேன். இங்கே வந்து தம்பூராவைப் பார்த்ததும் உன்னைப் போல் பாடிப் பார்க்க வேண்டும் என்ற ஆசை வந்துவிட்டது; பாடிக் கொண்டிருந்தேன். அதற்குள் நீங்களும் வந்து விட்டீர்கள்'' என்று பாகவதர் கூறினார்.

மறுநாள் காலை சுமார் எட்டு மணிக்கு டாக்டர் வந்தார். பாகவதரின் உடம்பைப் பரிசோதித்து, ''உடல் நிலை தேறியிருக்கிறது. தலைக் காயங்கூட ஆறிவிட்டது. நான் சொன்னபடியே, நல்ல ஓய்வு எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள்'' என்று கூறியபோது பாகவதர் உள்பட அங்குள்ள அனைவரும் லேசாக மனத்திற்குள் சிரித்துக் கொண்டனர். தலைக்குத் தடவ ஒரு களிம்பையும் உள்ளுக்குச் சாப்பிடப் புதிய மருந்தையும் எழுதிக் கொடுத்துவிட்டு டாக்டர் புறப்பட்டார். அதற்குள் ஹரியைப் பார்த்து, ''நேற்றுப் பிரமாதமாகப் பாடினீர் களாமே? கலெக்டர் ரொம்பப் புகழ்ந்து பேசினாராமே? இதோ என் பாராட்டுர்கள்'' என்று கூறிய வண்ணம் அவனது கையைப் பிடித்துக் குலுக்கி மகிழ்ச்சியைத் தெரிவித்துவிட்டுச் சென்றார்.

பிறகு சற்றைக்கெல்லாம் அங்கே வந்த காரியதரிசி, பாகவதரிடம் ''சமாளிக்க முடியாத ஜனத்திரளில் நம் வீட்டிலிருந்து வந்தவர்களை வண்டி வைத்து அனுப்ப முடியாமற் போய்விட்டது'' என்று மிகவும் குறைப் பட்டுக் கொண்டார். பிறகு, ஹரி பிரமாதமாகப் பாடின தையும், அதை எல்லோருமே புகழ்வதையும் கூறினார். உடனே நெக்லெஸ் நினைவு வரவே, ''ஏதோ திருஷ்டி பரிகாரம் மாதிரி இப்படி ஓர் அசந்தர்ப்பம் நேர்ந்து விட்டது'' என்று வருத்தம் தெரிவித்தார்.

''போனால் போகிறது. நம்முடைய பொருளானால் தானே கிடைக்கிறது'' என்று பாகவதர் சமாதானம் கூறினார்.

டாக்டர் குறித்துக் கொடுத்துச் சென்ற மருந்துகளை வாங்கிக் கொண்டு ஹரி வீட்டை அடைந்த போது காரியதரிசியின் குரல் கேட்டது. உள்ளே நுழைந்ததும் வேறு இரண்டு புதிய நபர்கள் பாகவதரின் அருகில் நாற்காலியில் உட்கார்ந்து பேசுவதைக் கண்டான்,

மருந்தும் கையுமாக உள்ளே வந்த ஹரியைக் கண்டதும் புதியவர்கள் எழுந்து வணக்கம் தெரிவித்துவிட்டு அமர்ந்தனர்.

காரியதரிசி, அருகில் இருந்தவர்களை ஹரிக்கு அறிமுகம் செய்து வைத்து, ''இவர்தாம் கரூரில் புதிதாகத் துவங்கியிருக்கும் 'தும்புரு கான சபாவின்' செயலாளர், நேற்று உங்களுடைய கச்சேரியைக் கேட்டுப் பரவசமாகி விட்டார். இவருக்கு உங்கள் பாட்டு மிகவும் பிடித்திருக்கிறது. அடுத்த மாதமே அவர்கள் சபாவில் உங்களுடைய கச்சேரியை வைக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறார். உங்களுக்கு எந்தத் தேதி செளகரியப்படும்? என்ன ரேட் கொடுக்க வேண்டியிருக்கும்? என்றெல்லாம் கேட்டார். நேரிலேயே போய்ப் பேசிக் கொள்வோம் என்று அழைத்து வந்துவிட்டேன்'' என்று கூறி, ''இதோ, இவரும் என் நண்பர்தாம். வேலூரில் புரந்தரதாஸர் உற்சவம் ஒவ்வொரு வருஷமும் சிறப்பாக நடத்துகிறார்'' என்று அறிமுகப்படுத்தியபோது; ''ஏன், நம் அண்ணாவுக்கே தெரியுமே. இரண்டு வருஷத்துக்கு முன்பு அண்ணா கச்சேரி கூட பிரமாதமாக நடந்ததே. இந்த வருஷங்கூட முதல் நாள் அண்ணாவின் கச்சேரியும், அடுத்த நாள் ஹரியின் கச்சேரியும் சேர்த்து ஏற்பாடு செய்யலாம் என்றுதான் வந்திருக்கிறேன்'' என்றார் வேலூர் வாசு.

அதற்குப் பாகவதர், ''நீங்கள் எல்லாரும் என்னிடம் வைத்திருக்கிற அன்புக்கும் அபிமானத்துக்கும் நான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் நான் இனி எழுந்து பாடுவது என்பது அவ்வளவு சீக்கிரத்தில் இல்லை. நேற்று

ஹரியின் பாட்டைக் கேட்டதும் எனக்கும் ஆசை வந்து விட்டது. உட்கார்ந்து அரைமணி தான் பாடியிருப்பேன்; அதற்குள் தலை சுற்றலும் மயக்கமும் வந்துவிட்டன. மண்டை ஓட்டுக்குள் ஏதோ ரெயில் ஓடுகிறமாதிரி இரைச்சல். அதற்குப் பிறகு தோடியாவது பாடியாவது? ஆதலால் ஹரியின் கச்சேரி நடக்கிறபடி நடக்கட்டும். பிறகு தெய்வ சங்கல்பம்போல், போகப்போக பார்த்துக் கொள்ளலாம்'' என்று கூறினார்.

எல்லாருக்கும் அதுவே சரியென்று பட்டது.

பிறகு காரியதரிசி, ''அவர்கள், முன்பணம் கொண்டு வந்திருக்கிறார்கள். ஹரிக்கு என்ன கொடுக்க வேண்டுமென்று நீங்கள் கூறிவிட்டால் அதைக் கொடுத்து விட்டுப் போவார்கள். சௌகரியமான தேதியையும் குறித்துக் கொண்டு விடலாம்'' என்றார்.

இதைக் கேட்டதும் பாகவதர் சிரித்தார். ''என்ன காரியதரிசி ஸார், எல்லாப் பொறுப்பையும் என் தலையில் போட்டால் எப்படி? இறக்கை முளைத்த பிறகு, அது அது தானே பறந்து கொள்ள வேண்டியதுதான். சிஷ்யனைத் தயார் செய்து விட வேண்டியதுதான் குருவின் பொறுப்பே தவிர; அதன் பிறகு லௌகிக விஷயங்களில் நான் தலையிடமாட்டேன். அது அவ்வளவு உசிதமும் அல்ல. கச்சேரி செய்யப் போகிறவன் அவன். இனிமேல் அவனுடைய வாழ்க்கையைத் தன் யோக்கியதைக்குத் தகுந்த மாதிரி அமைத்துக் கொள்ள வேண்டியது அவனே. ஹரியையே கேளுங்கள்'' என்றார்.

ஹரியோ, தனக்கு ஒன்றும் தெரியாது என்றும்; குரு சொல்வதுபோல் செய்வதாகவும் சொல்லி விட்டான்.

''என்ன அண்ணா இது? நீங்கள் ஹரியை கேட்கச் சொல்கிறீர்கள். ஹரியோ, நீங்கள் போய்ப் பாடச்

சொன்னால் பாடுகிறேன், கொடுக்கச் சொன்னதைக் கொடுங்கள்; வாங்கிக் கொள்கிறேன்' என்கிறான். இப்படி இரண்டு பேருமே சொல்லிக் கொண்டிருந்தால் எப்படி? நானே உங்களை ஒன்று கேட்கிறேன்; கோபித்துக் கொள்ளாதீர்கள். பஜனை மடக் கச்சேரிக்கு உங்களை வந்து நான் கேட்டதும், நீங்கள் ஹரியைக் கேட்டுக் கொண்டா எங்களுக்குச் சொன்னீர்கள்? இப்போதும் அப்படியே, நீங்கள் தாம் ஒரு முடிவு சொல்ல வேண்டும். நீங்கள் என்ன கொடுக்கச் சொல்கிறிர்களோ அதைக் கொடுக்க என் நண்பர்கள் இருவரும் தயார். பளிச்சென்று சொல்லுங்கள் அண்ணா'' என்று விஷயத்தை முடித்து விட்டார் செயலாளர்.

''கடைசியில் எல்லாருமாகச் சேர்ந்து என் தலை மேலேயே பொறுப்பைப் போட்டு விட்டீர்கள். சரி நான் ஒன்று சொல்லுகிறேன். ஹரியின் பாட்டை நாம் எல்லாரும் கேட்டோம். அவனை நீங்கள் இளம் வித்துவான்கள் செட்டில் சேர்க்கிறீர்களா; பெரிய வித்துவான்கள் லிஸ்ட்டில் சேர்க்கிறிர்களா? வயதையும் அநுபவத்தையும் பற்றி நான் கேட்கவில்லை. வித்தையைப் பற்றி; ஹரியின் திறமையைப் பற்றி மட்டும் பேசுகிறேன். என்ன நினைக்கிறீர்கள் என்றார்.

பாகவதருடைய இந்தக் கேள்வி, அவர்கள் எல்லாரையுமே திக்கு முக்காட வைத்தது. ''என்ன அண்ணா இது? உங்களுடைய சங்கீதப் பிடிகளை எல்லாம் போட்டு இப்படி எங்களை மடக்கினால் நாங்கள் என்ன பதில் பேசுவதென்றே தெரியவில்லை. ஹரியின் பாட்டைக் கேட்டுவிட்டுத்தான் இந்த ஏற்பாடு பண்ணினோம். கேட்டவர்கள் அத்தனைப் பேருக்குமே ஹரியினுடைய பாட்டுக் கச்சேரி ரொம்பப் பிடித்திருக்கறது. எல்லாருக்குமே நல்ல அபிப்பிராயந்தான் அடுத்த வாரம், 'ரசிக ரஞ்சனி' பத்திரிகையிலே கூட ஹரியின் பாட்டைப் பற்றி

விமரிசனம் வந்தாலும் வரலாம். அந்தப் பத்திரிகையில் நம்ப சஞ்சீவிதான் சங்கீத விமரிசனம் எல்லாம் எழுதுகிறவர்.

அவரும் கச்சேரியைக் கேட்டு அசந்து போனார். என்னைக் கண்டதும், 'பயல் வெளுத்து வாங்கி விட்டான். என் பெண் அம்புலு கல்யாணம் நிச்சயமானால் இந்தப் பையன் கச்சேரிதான். பெயரில் இளம் வித்துவானே தவிர, பாட்டு நன்றாக முற்றித் தெறித்தது' என்றார். 'இப்படியெல்லாம் சொன்னால் போதாது. அது உங்களுக்கும் எனக்குந்தான் தெரியும். ஊருக்குப் போனதும் மனத்தில் பட்டதை ஆணித் தரமாக அடித்து எழுதுங்கள்' என்று சொன்னேன். இன்று காலை வண்டிக்குத்தான் புறப்பட்டுப் போனார். என்ன எழுதியிருக்கிறார் என்று அடுத்த வாரம் பத்திரிகை வாங்கிப் பார்த்தால்தான் தெரியும்'' என்றார் காரியதரிசி.

''அது சரி, விஷயம் நம்மிடம் பிரமாதமாக இருக்கலாம்; ஆனால், உலகத்துக்குத் தெரிய, அச்சும் பேப்பரும் அவர்களிடம் அல்லவா இருக்கின்றன? எப்படியோ ஹரியின் விஷயமாக நீங்கள் எவ்வளவு சிரத்தை எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பது, இப்போது நீங்கள் சொல்லித்தானே தெரிகிறது?'' என்றார் பாகவதர்.

அதற்குள் அருகில் இருந்த கரூர்க்காரர், ''நானே சொல்லி விடுகிறேன். எங்கள் சபா ஆரம்பித்து இரண்டு வருஷம்தான் ஆகிறது. வெளியில் பிரபலமாகவில்லையே தவிர, உள்ளூரில் நிறைய ஆதரவும்; ஏராளமான உறுப்பினர்களும் இருக்கிறார்கள். நாங்கள் பெரிய வித்துவான்களுக்குக் கொடுக்கிற 'ரேட்'டையே, ஹரிக்குக் கொடுக்கிறோம். சரிதானே? நான் அங்கே போய்த் தேதி குறிப்பிட்டு எழுதலாமா?'' என்று கேட்டார் அதைப் போலவே வேலூர்க்காரரும்; முன்பு பாகவதருக்கு எப்படி நடந்து

கொண்டோமோ அதையே ஹரிக்கும் செய்வதாக ஒப்புக் கொண்டார்.

பிறகு காரியதரிசி, ''ஹரி இவ்வளவு பிரமாதமாகப் பாடியதுபற்றி ஊரே புகழ்கிறது. ஆனால் திருஷ்டி பரிகாரம் போல் இப்படி ஓர் அசந்தர்ப்பம் நேர்ந்துவிட்டது'' என்று வருத்தம் தெரிவித்தார்.

உடனே பாகவதர், ''போனால் போகட்டும்; நம்முடைய பொருளானால் தானே கிடைக்கிறது'' என்று சமாதானம் கூறினார்.

''நெக்லெஸ் எங்கேயும் போய்விடாது. கலெக்டர் வந்துபோன இடமாயிற்றே. நேற்றிரவே போலீஸ்காரர்கள் எவனோ ஒருவனைப் பிடித்து வைத்திருக்கிறார்கள். யாரோ சிங்கப்பூர் பக்கிரியாமே; கொள்ளிடக் கரையில், அவனிடந்தான் நகை இருக்கிறதாம். ஸ்டேஷனில் கட்டி வைத்து அடிக்கிற அடியில் நகையைக் கக்கிவிட வேண்டாமா? எப்படியும் நகை கிடைத்துவிடும். கவலை வேண்டாம்'' என்று கூறியபோது ஹரிக்கு அப்படியே பூமி தலை கீழாகச் சுழல்வது போலிருந்தது.

கையில் இருந்த புதிய நோட்டுக்களையே பார்த்துக் கொண்டிருந்த பாகவதர், ஹரியின் பசுமையான எதிர் காலம் அதில் பளபளத்துக் கொண்டிருப்பதைக் கண்டார். வேலூர்க்காரரும் கரூர்க்காரரும் ஹரியின் கச்சேரிக்காகக் கொடுத்துவிட்டுப் போன முன்பணமே அது.

'இதுதான் ஹரி கச்சேரிக்காக வாங்கும் முதல் அட்வான்ஸ். இனிமேல் இவை போன்ற வாய்ப்புக்கள் அவனுக்குத் தொடர்ந்து ஏற்பட்டுக்கொண்டே இருக்கும். அவன் க்ஷேமமாக இருக்க வேண்டும்' என்றே பாகவதர் இறைவனைப் பிரார்த்தித்தார்.

'ஆற்றங்கரை மண்டபத்தில் அநாதையாக இருந்தவனது குரலை எனக்குக் காட்டி; இறைவன் உலகில்

எவ்வளவு பெரிய காரியத்தைச் சாதிக்கச் செய்துவிட்டான்? விதையை நடுவதா பெரிது? அது நன்றாகத் தவிர்த்துச் செடியாகி மரமாகிச் சேதமுறாமல் வளர்ந்து பூவும் காயுமாகப் பூத்துக் குலுங்கினால் அல்லவா மரம் நட்டவனின் மனம் பூரிக்கும்? அந்தப் பூரிப்பை எனக்குப் பூரணமாக ஆண்டவன் அளித்து விட்டான்' என்று எண்ணி மகிழ்ந்தார் பாகவதர்.

''சுசீலாவின் நெக்லெஸ் கிடைத்துவிடும்'' என்று காரியதரிசி சொல்லிப் போனதும், லட்சுமியம்மாளும் மற்றவர்களும் நகையே திரும்பக் கிடைத்து விட்டாற்போலத் தான் மகிழ்ந்தனர். சுசீலாவுக்குப் போன உயிர் திரும்பி வந்தாற் போலிருந்தது. ஆனால் பாகவதரோ, நகை பறி போனவுடன் எப்படிப் பதறாமல் அமைதியாக இருந்தாரோ அப்படியே நகை கிடைத்துவிடும் என்ற செய்தியைக் கேட்டதும் அமைதியாகவே இருந்தார்.

லட்சுமியைக் கண்டதும் பாகவதர் கையில் இருந்த நோட்டுக்களையெல்லாம் கொடுத்து, ''பத்திரமாக எடுத்து உள்ளே வை. வேலூரில் எனக்குக் கச்சேரிக்கு வந்திருக்கிறது. அட்வான்ஸ் பணங்கூட வாங்கியாகி விட்டது. எல்லாரும் தமாஷாகப் போய் விட்டு வருவோம். என்ன சொல்லுகிறாய்?'' என்று மகிழ்ச்சியுடன் கேட்டார்.

''கையை நீட்டி அட்வான்ஸ் வாங்கியாகி விட்டது. கச்சேரி பண்ண முடியாவிட்டாலும் ஏதாவது தமாஷாவாவது பண்ணிவிட்டு வாருங்கள். வேலூரிலெ உங்களுக்குத் தெரிந்த மனிதர்கள் யாராவது இல்லாமலா போய் விடுவார்கள், காப்பாற்றுவதற்கு? வீணாக எங்களுக்கு வேறு எதற்கு அநாவசியச் செலவு?'' என்றாள் லட்சுமியம்மாள் சிரித்துக்கொண்டு.

உடனே பாகவதர் சுந்தரியின் பக்கம் திரும்பி, ''சுந்தரி, பார்த்தாயா உன் அக்காவை? வாயில்லாப்

பூச்சி பரமசாது, என்று சொல்லுவாயே. சிறிது நேரத்துக்குள் என்ன போடு போட்டுவிட்டாள் பார்த்தாயா? இனிமேல் நான் எழுந்திருக்கவே மாட்டேன்; இப்படியே இங்கேயே விழுந்து கிடக்கப் போகிறேன் என்று இவளுக்கு நினைப்புப் போலிருக்கிறது. அப்படித்தானே?'' என்றார்.

''அப்படி உங்களை யார் சொன்னார்கள்? இன்றே வேண்டுமானாலும் மேடையிலே போய் உட்கார்ந்து பாடி விட்டு வாருங்கள். எங்களையெல்லாம் வீணாகக் கூப்பிட வேண்டாம் என்றுதான் சொல்லுகிறேன். பாவம்! பாகவதரைப் பணத்துக்கு ஆசைப்பட்டு அனுப்பி விட்டார்கள் என்று நாளை எங்களை அல்லவா ஊர் உலகம் நொறுக்கும்?''

''சரி சரி, போதும், விடு. இப்பொழுது நான் கச்சேரிக்குப் போகிற நிலையில்தான் இருக்கிறேன்! அது இருக்கட்டும், இந்தப் பணத்தை வீட்டுச் செலவுக்கு எடுத்துக்கொண்டு விடாதே. இதெல்லாம் ஹரியின் பணம். அவனைக் கரூரிலும் வேலூரிலும் கச்சேரிக்குப் பேசி முன்பணம் கொடுத்துவிட்டுப் போகத்தான் காரியதரிசி இங்கே வந்திருந்தார். பயலுக்கு அதிர்ஷ்டம் ஆரம்பமாகிவிட்டது; என்ன சொல்லுகிறாய்?''

''ஆகவேண்டியதுதானே? காலையில் ஆற்றுக்குக் குளிக்கப் போய்விட்டு வருவதற்குள் என்னை வழிமறித்துக் கொண்டு ஹரியைப் புகழாதவர் இல்லை. எந்தக் கொள்ளிக் கண்ணாவது பட்டு வைக்காமல் இருக்க வேண்டுமே என்றுதான் கவலைப்பட்டேன். வந்ததும் உழக்கு நிறைய உப்பும் மிளகாயும், முச்சந்தி மண்ணுமாக ஹரி தலையைச் சுற்றிப் போட்டேன். துளியாவது கமற வேண்டுமே!'' என்றாள் லட்சுமி.

''ஆமாம் ஆமாம். என் கண்ணேபட்டிருக்கும். அவன் நேற்றுப் பாட்டா பாடினான்? தேவகானமாக அல்லவா

பொழிந்து தள்ளிவிட்டான்?'' என்று பாகவதர் கூறிக் கொண்டிருக்கும்போது பஞ்சு அண்ணாவும் ராஜப்பாவும் வந்தனர். அவர்களைக் கண்டதும் பாகவதர் மிகுந்த உற்சாகத்துடன் வரவேற்றார். லட்சுமியும் சுந்தரியும் உள்ளே சென்றார்கள்.

நேற்று உங்கள் சிஷ்யன் வெளுத்துக் கட்டிவிட்டான்'' என்று கூறிக்கொண்டே பஞ்சு அண்ணா பாகவதரின் பக்கத்தில் அமர்ந்தார்.

''எல்லாம் உங்களைப் போன்ற பெரியவர்களுடைய ஆசீர்வாதந்தான்'' என்றார் பாகவதர் அவர்களைப் பார்த்து.

''பெரியவர்களாவது ஒண்ணாவது! இத்தனை வயதும் அநுபவமும் ஆகி என்ன பண்ணுகிறது? எங்கே, ஹரி இருக்கிறானா?'' என்றார் பஞ்சு அண்ணா உள்ளே பார்த்தபடியே.

''இல்லை, வெளியே போயிருக்கிறான். நாம் தாராள மாகப் பேசிக்கொள்ளலாம்'' என்றார் பாகவதர்.

''இதில் என்ன அண்ணா ஒளிவுமறைவு? இரவு முழு வதும் தூக்கமே வரவில்லை. பொழுது விடிந்ததுமே உங்களை வந்து பார்த்துச் சொன்னால்தான் சமாதானம் ஆகும்போலிருந்தது. நேரே வந்துவிட்டேன்.''

''ஆமாம், ராஜப்பாவை எங்கே பிடித்தீர்கள்?''

''கும்பகோணத்திலிருந்து ஒரு காரியமாக வந்தேன். அவனும் இதே நோக்கத்தோடுதான் வந்து கொண்டிருந் தான். வழியிலே கலந்துகொண்டோம். அப்பா! இந்த மாதிரி; கச்சேரிக்கு உட்கார்ந்து முழுசாக நான்கு மணி நேரம் 'தம்' கட்டி வாசித்து எத்தனை நாளாயிற்று? அப்படியே அந்தக் காலத்தில் நீங்கள் பால்யத்திலே

பாடுவீர்களே, அதுதான் எனக்கு நினைவு வந்தது. அழுதுவிட்டேன். இவ்வளவு சரக்கை வைத்துக் கொண்டு அன்று இங்கே பூனைப் போலப் பாடி எப்படி ஹரி ஏமாற்றி விட்டான் பார்த்தீர்களா?'' என்றார்.

'எல்லாம் வண்டியிலே உட்கார்ந்து பார்த்துக் கொண்டுதானே இருந்தேன்? நான்கு தடவை உங்களைத் தேடி வீட்டுக்கு வந்தானே. 'பையன் புதிதாயிற்றே! இரண்டு நாளைக்குச் சேர்ந்தாற் போல அவனுடன் வாசித்துத் தயார் செய்வோம்' என்று உங்களுக்குத் தோன்றியதா? அலட்சியமாக நினைத்துக் கொண்டுதானே அன்று இங்கே நீர் அப்படிப் பிடில் வாசித்தீர்? ராஜப்பாவோ தான் பெரிய மேதாவி மாதிரி தன் விவகாரத்தையெல்லாம் பூனை மாதிரி இருந்தவனிடம் காட்டினான். இன்னோர் அசடாக இருந்தால் பயந்து போய் விழிக்கும்! 'புலி வாலை அல்லவா போய்த் திருகி விட்டோம்?' என்று—பாய்ந்த பிறகுதானே உங்களுக்குப் புரிந்தது?' என்று எண்ணிக் கொண்டார் பாகவதர்.

அங்கு வந்த சுசீலா, ''நேற்று நீங்கள் மிகவும் நன்றாக வாசித்தீர்கள் அண்ணா'' என்று பஞ்சு அண்ணாவிடமும், ''உங்களையுந்தான்'' என்று ராஜப்பாவிடமும் கூறினாள்.

''ஆமாம் ஆமாம். எல்லாரும் சேர்ந்து கேலி செய்யுங்கள்'' என்று கூறிய படி ஏதோ அவர் பேச நினைப்பதற்குள் பாகவதர் குறுக்கிட்டு, ''அது இருக்கட்டும்; முக்கியமான விஷயத்தை மறந்து விட்டேனே. ஹரிக்கு இந்த மாதம் வேலூரிலும், கரூரிலும் கச்சேரிக்கு முன் பணம் கொடுத்துவிட்டுப் போயிருக்கிறார்கள். அவர்கள் கேட்டிருக்கும் இந்த நாலைந்து தேதியிலும் உங்களுக்கு எந்தத் தேதி சௌகரியம் என்று சொன்னால் ஹரி வந்ததும் பதில் எழுதிப் போடச் சொல்லுகிறேன்; என்ன சொல்லுகிறீர்கள்?'' என்று கேட்டார்.

''சொல்லுவதற்கு என்ன அண்ணா இருக்கிறது? வீட்டுக்குப் போனதும் முதற் காரியமாக டைரியைப் பார்த்து ராஜப்பாவையும் கலந்து கொண்டு விஷயத்தைச் சொல்லி அனுப்புகிறேன்'' என்று சொல்லிப் பஞ்சு அண்ணா எழுந்தார். ராஜப்பாவும் கூடவே புறப்பட்டார்.

அவர்கள் போன பிறகு பாகவதரது மனம் மீண்டும் ஹரியைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தது.

'தாயினும் சாலப்பரிந்து' பல்லவியை அவனுக்கே தெரியாமல் அவன் எப்போது தயார் பண்ணினான்?—அதைக் கேட்க வேண்டுமென்று நேற்றிலிருந்து நினைத்துக் கொண்டிருந்தார். ஆனால் ஞாபகமே வரவில்லை. இப்போது கூட அவருக்கு ஒரு சந்தேகம் எழுந்தது. 'ஒரு வேளை அடுத்தக் கச்சேரிக்கும் ஏதாவது புதுப் பல்லவி தயார் பண்ணுவதற்குத்தான் காவிரி மண்டபத்தைப் பார்க்கப்போய் விட்டானோ?' என்று எண்ணினார்.

ஏனெனில் ஹரிக்கு ஆரம்பத்தி லிருந்தே லய சம்பந்தமான விஷயங்களில் அதிக விருப்பம் உண்டு. மிகவும் நெரடான ஸ்வரக் கோவைகளைக் கூட அநாயாசமாகப் பாடக் கூடிய திறமை அவனுக்கு இருந்தது. ஆனால், பாகவதருக்கு ஹரியை அந்த வழியிலேயே விட்டு விட விருப்பமில்லை. ஏனென்றால், சங்கீதம் சுகாநுபவத்துக்காக ஏற்பட்ட வித்தை. வண்ண மலரிலே மென்மையும் மணமும் பொருந்தியிருப்பதே போல் இசையிலே ராகம், பாவம் தாளம் ஆகிய எல்லாம் ஒன்றோடு ஒன்று இணைந்து பரிணமிக்கவேண்டும். அதைக் காயகன் மறந்து, விவகாரத்திலேயே ஈடுபடத் தொடங்கி விட்டால், மலர்களின் இதழ்களைப் பிய்த்துப் பறக்க விடுவதே போல் பிறகு அவனுக்கு அதிலேதான் புத்தி போகும். சுகாநுபவத்தை அவனும் மறந்து விடுவான்; அதுவும் நாளடைவில் தானாகவே அவனை மறந்து விடும். ஆகவே சிறந்த

அறுசுவை உணவில் ஓர் அம்சமாக லயமும் சோபிக்க வேண்டுமே தவிர, தெவிட்டும் பதார்த்தத்தைப் போல் சங்கீதத்தின் இனிமையையும் சுகத்தையும் மிஞ்சுகிற எந்த விவகாரமும் கச்சேரியில் இருக்கக்கூடாது என்பது பாகவதருடைய கொள்கை. அதையேதான் அவர் தம் கச்சேரிகளில் கையாண்டார். பாகவதருடைய கச்சேரியின் சிறப்பே அதுதான். அதில் நானாவித ருசியும், ரசமும் இருக்கும். மகாவித்துவான்கள் 'சபாஷ்' போடும் அம்சமும், இளம் தலைமுறையினர் புரிந்துகொண்டு பின்பற்ற வேண்டிய விஷயமும் இருக்கும்; பாமர மக்களின் மனத்தைக் கவரும் அம்சமும் இருக்கும். இப்படி ஜனரஞ்சகமான கச்சேரிதான் பாகவதருடைய சிறப்பு. கச்சேரியில் வந்து உட்கார்ந்துவிட்டால் சற்றுக்கூட அலுப்புச் சலிப்புத் தோன்றாது.

நேரம் ஓடிக்கொண்டே இருந்தது. நாழிகை செல்லச் செல்லப் பாகவதருடைய மனம் ஹரியின் வருகையைப் பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தது. சிறிது நேரத்தில் வந்துவிடுவதாகச் சொல்லி வெளியே போனவன் ஏன் இவ்வளவு நேரமாகியும் காணவில்லை? 'எங்கே போயிருப்பான்? சுந்தரியும் வசந்தியும் ஊருக்குப் போகக் காத்திருக்கிறார்களே! ரெயிலேற்றி அனுப்பவாவது வருவானா? இம்மாதிரிச் சொல்லாமல் அவன் எங்கும் போனதில்லையே?'—

ஆனால், அவருடைய எண்ணத்துக்கும் ஊகங்களுக்கும் அப்பாற்பட்ட நிலையில், ஒரு தலைபோகிற காரியத்தில் ஈடுபட்டிருந்தான் ஹரி. ஆம்! அது அவனுக்கு ஒரு சுய கௌரவப் பிரச்சனை.

## 21. அப்பாவின் ஆசை

விதி மனிதனை எதிர்காலத்தை நோக்கித்தான் இழுத்துச் செல்கிறது. இறந்த காலத்துக்குச் செல்ல அது அவனை அநுமதிப்பதில்லை. அந்த மகாசக்தியைப் பற்றி எண்ணிக்கொண்டே ஹரி நடந்தான். பாகவதர் அவனை முதல் நாளே 'ஊருக்குப் போய்ப் பெற்றோரை வணங்கி ஆசி பெற்று வா' என்று அனுப்பினார். அப்போது அவன் அந்தக் குடும்பத்தைச் சென்று காண விரும்பவில்லை. ஆனால், தெய்வம் சோதனையைப் போல் அவனை மறுநாளே அந்தக் குடும்பத்தை நோக்கிக் கோலெடுத்து விரட்டியனுப்பிய விந்தையை எண்ணிக் கொண்டே அவன் அரசூரை அடைந்தான்.

ஹரி தன் வீட்டுக்குள் நுழைந்தபோது பெரியசாமி தன் மனைவியின் படுக்கைக்கு அருகில் குத்திட்டு உட்கார்ந்திருந் தான். சாணமிட்டு மெழுகிய தரையில், அங்கும் இங்கும் அழுக்குத் துணிகள் பரப்பிக் கிடந்தன, பெரியசாமி ஒருமுறை தன் எதிரில் நின்ற உருவத்தை ஏறிட்டுப் பார்த்தான்.

எத்தனை வருஷங்களுக்குப் பிறகு, எப்படி மாறு வேஷத்தில் வந்தால் என்ன, பெற்றவர்களுக்குப் பிள்ளை யைத் தெரியாமலா போய் விடும்?

நீண்ட நாட்களுக்குப் பிறகு தன் வீடு தேடி வந்திருக்கும் மகனைப் பெரியசாமிக் கிழவனும் முனியம்மாளும் அடையாளம் கண்டுகொள்ள எவ்விதக் கஷ்டமும் இருக்க வில்லை.

''அப்பா!'' என்று அழைத்த அவனது குரலைக் கேட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டான் பெரியசாமி. ஆனால் படுக்கையில் கிடந்த முனியம்மாள்தான் ஹரியைக் கண்டதும் எழுந்து உட்கார்ந்து, ''வா கண்ணப்பா, இப்படி என் பக்கத்திலே வந்து உட்காரு. உன்னெப் பார்த்து எம்மாம் நாளாச்சு! எங்களை எல்லாம் ஒரே முட்டா மறந்துட்டியே!'' என்று அழைத்தாள்.

ஹரி ஒரு கணம் வியப்புற்றான்.

கடுகடுப்பும் கோபமும் குரோதமும் கொந்தளித்த அந்தக் குரலில்தான் இப்போது எத்தனை அன்பு! முனியம்மாளின் பழைய குரல் எங்கே? உருவத்தில்தான் எத்தனை மாறுதல்? தெருக்கூத்தில் ராணி வேஷம் போட்டு சிம்மாசனத்தில் உட்கார வைக்கலாம் போல இருந்த அழகும்; கட்டுமஸ்தான உடலும் எங்கே போய் விட்டன?

''உங்களுக்கு என்ன உடம்புக்கு? ஏன் இப்படி ஒரே யடியாக இளைத்துத் துரும்பாய் போய்விட்டீர்கள்?'' என்று கவலையுடன் கேட்டான் ஹரி.

''இனிமே இந்த உடம்பு துரும்பாத்தான் ஏன் தம்பி இருக்கணும்? ஒவ்வொருநாளா எண்ணிக்கிட்டே தான் இருக்கேன். ஆனால் அது என்னை ஏமாத்திட்டுப் போய்க் கிட்டே இருக்கு. இப்பனாச்சும் உனக்கு எங்க ஞாபகம் வந்து பார்க்க வரணும்னு தோணிச்சே; அதுவே எனக்குப்போதும். சின்ன வயசிலே உன்னை நான் ரெம்பக் கொடுமைப் படுத்திட்டேன். விறகுக்கட்டையாலே அடிச்சு வீட்டை விட்டுத் தொரத்தினேன். அந்தப் பாவத்துக்குள்ள பலனையும் நான் நல்லா அநுபவிச்சுட்டேன். ஆனால் இப்பக்கூட எனக்குத் தோணுது; நானா உன்னை அப்படிச் செய்யல்லே. நீயும் இங்கேயே இருந்தால் உங்க அப்பனைப் போலே கழுத்து ஆட்டங்கண்டாக்கூட லைட்டைக் கீழே

போடாமெத் தூக்கிக்கிட்டுத்தான் அலையணும், ஏதோ தெய்வம் உனக்கு இம்மானாச்சும் கருணை காட்டிச்சே. அதுதான் எனக்கு வேணும்'' என்று கொட்டித் தீர்த்தாள்.

பெரியசாமி திரும்பவும் மனைவியருகில் வந்து உட்கார்ந்து கொண்டு, ''இப்போ இங்கே எதுக்கு அவன் வந்திருக்கான்னு கேளு. ஒன் ராமாயணத்தை எல்லாம் கேட்டுக்க அவன் வரல்லே'' என்று அலுப்போடு கூறினான்.

' உனக்கு இப்போ என்ன வந்துட்டுது? ஒரே முட்டாக் காயறே. வீட்டுக்கு வந்து நிக்கிற பிள்ளே கூப்பிட்டாக் கூடப் பேசமாட்டேங்கறியே? அவன்கூடப் பேசினா என்ன, உன் வாய் முத்து உதிர்ந்தா போகும்? இல்லே, போறப்பே உன் தலையிலே அவன் கல்லைத் தூக்கிப் போட்டுட்டுப் போனானா?'' என்று கணவனைக் கடிந்து கொண்டாள் முனியம்மா.

ஹரி யோசித்தான்; 'அடிக்கவோ கோபிக்கவோ பெற்றவர்கள் உரிமையுள்ளவர்கள்; ஆனால் அவர்களிடம் அன்பும் பணிவும் கொண்டிருக்க வேண்டியதுதானே பிள்ளைகளின் கடமை? வெறுப்பை வெறுப்பால் வெட்டி வீழ்த்திவிட முடியுமா? அதைத் தடுக்க அன்பென்னும் கேடயம் அல்லவா வேண்டும்?' தந்தையின் சீற்றம் அவன் மனத்தை வருத்தவில்லை.

ஹரி நெடுஞ்சாண்கிடையாகத் தந்தையின் பாதங்களில் விழுந்து வணங்கினான். பதறிப்போன பெரியசாமி, ''டேய் டேய், எழுந்திருடா! என்னை ஒன்னும் நீ கும்பிட வேண்டாம். நான் ஆசீர்வாதம் பண்ணினவுடனே நீ பெரிய சங்கீத வித்வானாயிடப் போறியா? இல்லே ஊர் உலத்திலே பெரிய பெரிய ஜரிகை வேஷ்டி போட்டுக்கிட்டு மகா வித்வானுங்க இருக்கச்சே, நீதான் பாடிக் கிழிக்கப் போறியா? உனக்கும் சங்கீதத்துக்கும் என்ன,

சம்பந்தம்? உன் அப்பன் வித்துவானா? இல்லே, உங்க ஆயி வித்துவானா? உனக்குத்தான் புத்தி கெட்டுப் போச்சுன்னா அவங்களுக்குமா புத்தி கெட்டுப் போகணும்? என் தொழிலை ஆசையாக் கத்துக் கொடுத்தேன். பெரிய கெட்டிக்காரனாகிச் சுயமாச் சம்பாதிச்சு மாயண்டியைப் போலே பெரிய கடையெல்லாம் வச்சு முன்னுக்கு வருவேன்னு நினைச்சேன். இந்தக் குடும்பத்திலே அக்கறை இருந்தா நீ இப்படி எங்களை விட்டுட்டு ஓடிப்போவியா? இங்கே குழந்தைகளை வெச்சுகிட்டு நான் என்ன கஷ்டப் படறேன்னு உனக்குத் தெரியுமா? இப்பவும் கண்ணப்பா, ஒன்னும் கெட்டுப் போகல்லே. நீ சரின்னு என் தொழிலைச் செய்யறதாச் சொல்லு. நாளைக்கே நல்ல கம்பெனியிலே வேலை வாங்கித் தறேன். ரெண்டு வருஷம் கஷ்டப் பட்டாலும் சொந்தக் கம்பெனி சின்னதா ஆரம்பிச்சுடலாம். குடும்பத்தை உன் கையிலே ஒப்படைச்சுட்டு நான் நிம்மதியா இருப்பேன். இல்லேன்னா நீ உருப்பட மாட்டே'' என்று கூறியபோதே முனியம்மாள் சீறி விழுந்தாள்.

''உனக்குப் பைத்தியந்தான் பிடிச்சிருக்கு. வீடு தேடி வந்த பிள்ளையை இம்மாந்தான் பேசுவியா; இன்னமும் பேசுவியா? ஏதோ கும்பிட்டா, கடவுளை நெனச்சுக் கையைக் காட்டுவியா; ஒன் மனசிலே பெரிய விசுவாமித்திர மவரிசின்னு நெனப்போ? பெரிய சாபம் கொடுக்கறியே! நீ பொழுதுக்கும் லைட்டைத் தூக்கிச் சம்பாரிச்சு எம்மாங் காசு வச்சிருக்கே; அவனையும் அந்தத் தொழில் பண்ண லேன்னு திட்டறே. ஏதோ அதினாச்சியும் நல்லாப் பாட்டுப் பாடி நாலு எடத்துக்குப் போய்க் கைநிறையச் சம்பாரிச்சா......அது ஒனக்கும் எனக்கும் இல்லாமே வேறே யாருக்கு?'' என்று முனியம்மாள் பேசிக்கொண்டிருந்த போதே ''நான் இங்கே ஒரு முக்கியமான விஷயமாக வந்தேன்'' என்று கூறிய ஹரி, ஆமாம், சிங்கப்பூர் மாமா எங்கே?'' என்று குறுக்கே ஒரு கேள்வியைக் கேட்டான்.

"அது எங்கனாச்சும் ஊரை சுத்தப் போயிருக்கும். போற இடம், வர்ற இடம் தெரிய நம்மகிட்டே சொல்லிக் கிட்டாப் போவுது? என்ன தம்பி, ஏதாவது விசயமா?" என்றாள் முனியம்மாள்.

பக்கிரியைப் பற்றிய பேச்சை எடுத்தவுடனே முனியம் மாளின் முகம் போன போக்கை ஹரி கவனித்தான். அதில் பிரதிபலித்த துயரமும் வேதனையும் அவன் மனத்தையும் தொட்டன.

சிங்கப்பூர் மாமா பக்கிரியைச் சிறு வயதில் கண்ணப்ப னாக இருந்தபோது பார்த்திருக்கிறான் ஹரி. எத்தனையோ வருஷங்களுக்குப் பிறகு ஒரு முறை சமீபத்தில் பார்த்தான். ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து வந்து கொண்டிருந்த தன்னை எப்படியோ அடையாளம் கண்டுகொண்டு பக்கிரியே வலுவில் கூப்பிட்டுப் பேசியதை நினைக்கையில் ஹரிக்கே ஆச்சரியம் தாங்கவில்லை.

ஆனால், முனியம்மாளுக்கோ - அவன் ஒரே தம்பி யாகையால் - பக்கிரியிடம் அளவுக்கு மீறிய வாஞ்சை. பக்கிரியும் எப்போதாவது ஒரு தடவை சிங்கப்பூரிலிருந்து இந்தப் பக்கம் வருகிறவர்கள் வசம் அக்காவுக்கென்று அருமையான சிங்கப்பூர் வாசனைச் சோப்பு இரண்டை வாங்கி அனுப்புவான். அதைப் பூசிக்கொண்டு, தன் தம்பிக்குத் தன்மீது எத்தனை அன்பு, எத்தனை பாசம் என்று ஊர் முழுக்கப் பறை சாற்றி மகிழ்ந்து போவாள். "சிங்கப்பூரிலே தம்பி பெரிய உத்தியோகம் பாக்குது. கைநிறையச் சம்பாரிச்சுக்கிட்டு வரும். அதுக்கு நம்ப பக்கத் திலே நல்ல பெண்ணாப் பார்த்துக் கட்டி வைக்கணும்" என்று, வருவோர் போவோரிடம் அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பாள்-

இப்போது ஊரோடு வந்துவிட்ட பக்கிரியைப் பார்த்த வுடனே அவன் அங்கே என்ன உத்தியோகம் பார்த்திருக்க

முடியும் என்பது அவளுக்கு நன்கு புரிந்தது. 'என்றைக்குத் தலையில் கல் விழப்போகிறதோ?' என்று நடுங்கிக் கொண்டேதான் இருந்தாள்.

இடுப்பில் சில்க் கைலியும், பச்சைப் பட்டைப் பெல்ட்டும், ஹாங்காங் பனியனுமாகக் காட்சியளிக்கும் பக்கிரி அந்தப் பிராந்தியம் முழுவதும் பிரபலமாகியிருந்தான். எப்போதும் பத்து நண்பர்கள் அவனைச் சுற்றிலும் இருப்பார்கள். அவன் பழகுவதையும். இனிக்க இனிக்கப் பேசுவதையும் கண்டு மயங்காதவர் இல்லை. ஊரிலிருந்து எவ்வளவு புதையல் கொண்டு வந்தானோ; அதை எங்கே புதைத்து வைத்திருக்கிறானோ; அது பக்கிரிக்குத்தான் வெளிச்சம். ஆனால், இடுப்புப் பெல்ட்டில் எப்போதும் பணம் இருந்துகொண்டே இருக்கும்.

அந்த ஊரிலுள்ள டீக்கடைக் காரனுக்குச் சிங்கப்பூர்ப் பக்கிரி கண் கண்ட தெய்வம். கடை வாசலில் யாருடனோ கம்பீரமாக நின்று கொண்டு "டேய் காளி, சைனா டீ இரண்டு போடு. அர்ஜண்ட்!" என்று ஆர்டர் கொடுக்கிற அழகும், குடித்து முடித்ததும் இடுப்பிலுள்ள பெல்ட்டைத் திறந்து புத்தம் புதுப் பத்து ரூபாய் நோட்டு ஒன்றை நீட்டி அங்கே நிற்கும் தன் நண்பர்களுக்கெல்லாம் சேர்த்துத் தானே டீக்குப் பணம் கெடுத்து விட்டு, ஒரு பீடியைப் பற்ற வைத்துக் கொண்டு போய் விடுவதும் டீக்கடைக் காரனுக்குக் கண் கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

இதனால் பக்கிரியுடன் சுற்றுவதற்காகவே சிலர் ஆசைப்பட்டனர். வயிற்றுக்கு வஞ்சனையில்லாமல் சாப்பிடுவான்; பிறருக்கும் வாங்கித் தருவான். 'தஞ்சாவூர் மிலிடரி ஹோட்டலி'ல் பக்கிரிக்குப் பற்று வரவே இருந்தது. ஆனால் அவன் உள்ளூரில் என்ன தொழில் செய்கிறான்; இன்னும் இவனிடம் எவ்வளவு பணம் இருக்கிறது என்னும் விவரம் யாருக்கும் தெரியாது.

பக்கிரி மட்டும், அடிக்கடி ''இந்த ஊரிலே ஒரு டூரிங் டாக்கீஸ் போட்டா எப்படி இருக்கும்?'' என்று தன்னைச் சுற்றிலும் இருப்பவர்களைப் பார்த்துக் கம்பீரமாகக் கேட்பான்.

''பிரமாதமா இருக்கும் அண்ணே!'' என்று குரல் வரும்.

''நல்லா வசூல் ஆகும் அண்ணே. என்ன படம் கொண்டாறப் போறீங்க?'' என்று இன்னொரு கேள்வி பிறக்கும்.

இப்படியே அனைவரும் அவனது எண்ணத்தை ஆதரிப்பார்கள். ஆனால் இப்படி டூரிங் டாகீஸைப் பற்றிய பேச்சிலேயே பருவம் மாறி, மழைக்காலம் வந்து விடும். வருண பகவான் மீது பழியைப் போட்டு விட்டுப் பக்கிரி சினிமாக் கொட்டகையை இழுத்து மூடி விடுவான்.

வேறு ஏதாவது புது வியாபரத்தைப் பற்றி ஆலோசனை நடக்கும். இத்தனை சாமர்த்தியமும் அவன் சிங்கப்பூரிலேயே கற்றுக் கொண்டதல்ல. இந்தியாவிலும் அவன் சுற்றாத ஊர் இல்லை. சென்னையும், பம்பாயும் அவனுக்கு நல்ல அத்துப்படி. கல்கத்தா, சிங்கப்பூரிலிருந்து காற்று வாங்கப் போகிற இடம் மாதிரி.

''அடிக்கடி வியாபார விஷயமாக இங்கே எல்லாம் வருவேன். உடனே போய் விடுவேன்'' என்று அவனே கூறுவான். அது என்ன வியாபாரம், அப்படி என்ன அவசரம் என்று மாத்திரம் சொல்ல மாட்டான்.

ஒரு சமயம் நாகப்பட்டினத்தில் பக்கிரியைப் பார்த்ததாகப் பெரியசாமியின் சிநேகிதன் ஒருவன் வந்து சொன்னான். ஆனால், 'இது வரை வந்தவன் அரசூருக்கு வந்து என்னைப் பார்க்காமல் போயிட்டானே பாவி!' என்று முனியம்மமேள் வெகுநாள் வரை முனகிக் கொண்டே இருந்தாள். இப்போது அவளுடைய ஆசையைத்

தீர்க்கத்தானோ என்னவோ, நிரந்தரமாக அவளுடனேயே வந்து தங்கி விட்டான். ஆனால் இப்போது முனியம்மா ளுக்கு அவன் முன் போலவே எங்காவது கண்காணாத சீமையில் இருந்தால் தேவலை போலிருந்தது.

பேசிக் கொண்டிருந்த போதே பெரிய பெண் திரெளபதி இரண்டு குவளைகளில் ஆவி பறக்கக் காபி என்ற பெயரில் ஒரு கரிய நிறப் பானத்தைக் கொண்டு வந்து எதிரில் வைத்து விட்டு ஓடப் போனாள்.

முனியம்மாள் அவளைக் கூப்பிட்டாள். ''என்னடி ஒரேமுட்டா பாவலா எல்லாம் காட்டறே? இது யாருன்னு நெனைச்சுகிட்டு ஓடறே? அண்ணன் காலிலே வந்து விளுடி!'' என்று விரட்டினாள். உடனே திரெளபதி விழுந்து கும்பிட்டாள். பிறகு எழுந்து சற்று ஓரமாக நின்று கொண்டாள். வறுமை அந்த வீட்டை எப்படி ஆட்சி செய்து வருகிறது என்பதை அவனால் உணர முடிந்தது. தெருவாசலில், கூச்சனும் கும்மாளமும் போடும் குழந்தைகளையும் பார்த்தான். உறை கழற்றிய தம்பூரா மாதிரி இருந்த அவர்களது தேற்றம் அவன் கண்ணில் நீரை வரவழைத்தது.

''என்ன தம்பி, காப்பியெக் குடிக்காமெ பார்த்துக் கிட்டே இருக்கே; ஆறிப்போனா, இந்த இளவு காபி நல்லாவா இருக்கும்? சீக்கிரம் சூட்டோடு குடிச்சுடு'' என்று முனியம்மாள் துரிதப்படுத்தினாள். அப்போதுதான் ஹரிக்குத் தன் எதிரிலுள்ள காபியின் ஞாபகம் வந்தது. திரெளபதியின் பக்கம் திரும்பி, ''தங்கச்சி, எனக்கு வேண்டாம். நான் இப்போது வரும்போதுதான் குடித்து விட்டு வந்தேன். அப்பாவும் நீயும் குடியுங்கள். கொண்டு போ'' என்று ஹரி கூறியபோது, ''என்ன கண்ணப்பா, கொண்டு வந்த காபியை யாராவது திருப்பி அனுப்பு வாங்களா? உனக்குப் பிடிக்காவிட்டால் போகிறது;

கொண்டா இப்படி'' என்றவாறு பக்கிரி உள்ளே நுழைந்தான்.

''நல்லாக் குடி; வேளாவேளைக்குக் கிளப்பிலே நீ மட்டும் தின்னுபுட்டு ஊரைச் சுத்த வேண்டியது; எப்ப னாச்சும் நெனச்சா வந்து குதிக்கிறே; அக்காங்கறே தங்கச்சிங்கறே. கையிலே ஏதோ பெரிசாப் பணம் வெச் சிருக்கேன்னு பயமுறுத்தறே; கண்ணிலேயும் காம்பிக்க மாட்டேங்கறே. எங்கனாச்சும் ஒழுங்கா ஒரு இடத்திலே, கையிலே இருக்கிற பணத்துக்குக் கடை கண்ணி வச்சிருந் தாலும் யாருனாச்சும் வந்து பொண்ணு தருவாங்க. நமக்கும் மருவாதை இருக்கும். இப்படியெ போய்க்கிட் டிருந்தா என்னதான் முடிவு? ஆமா, நான் தான் கேக் கிறேன்; இந்த வீட்டுக்குள்ளாற நீ அடி எடுத்து வச்சு எத்தனை நாளாச்சு? எங்கே போயிருந்தே? கண்ணப்பன் உன்னைப் பாக்கணும்னு எம்மா நாழியாக் காத்துகிட்டு இருக்குது, தெரியுமா?'' என்று முனியம்மாள் ஆவேசத் தோடு கூறியபோது பக்கிரி 'ஆங்' என்று ஒரு முறை சூள் கொட்டினான்.

''அவன் ஏன் என்னைத் தேடிவரப் போறன்? நீ சொன்னாலும் நான் நம்ப வேண்டாமா? பெரிய கலெக் டரே அல்ல வந்து ஐயாவுக்கு மாலை போட்டிருக்காரு! அதுவும் ரோஜாப் பூமாலை மாத்திரமா? தங்கச் சங்கிலி, கையிலே காப்பு! என்கூட எல்லாம் பேசுவானா'' என்று கூறியே படியே கையிலிருந்து காபியை ரசித்துக் குடித் தான். 'இரு இரு. உன்னையும் போலிஸ்காரன் கொண்டு போய்த் தங்கக் காப்புப் போடத்தான் போகிறான்' என்று மனத்துக்குள் எண்ணிக்கொண்ட ஹரி, பக்கிரி தன் கச்சேரிக்கு வந்திருந்ததை ஊர்ஜிதம் செய்துகொண்டு தன் சித்தி பக்கம் திரும்பினான்.

''சித்தி, இப்படி நான் சொல்லுகிறனே என்று என்னைக் கோபித்துக் கொள்ளாதே. மாமாவுக்கு வியா

பகம் ஜாஸ்தியாகிவிட்டது. அவருடைய சக்திக்கு மேலே பணம் தேவை போலிருக்கிறது; மாமா குறுக்கு வழியில் இறங்கிவிட்டார். நீ என்மீது வருத்தப்பட்டுப் பிரயோசனம் இல்லை. நான் உண்மையைத் தான் சொல்லுகிறேன். மாமாவைப் போலிஸ் தேடுகிறது. அவரைப் பிடித்துக்கொண்டு போகப்போகிறார்கள். ஒரு திருட்டுக் கேஸிலே மாமா இப்போது சரியாக மாட்டிக் கொண்டாயிற்று. நான் இதைச் சொல்லிவிட்டுப் போகத்தான் வந்தேன்'' என்று கூறினான்.

'போலிஸ்' என்ற வார்த்தையைக் கேட்டதும் முனியம்மாளுக்கு உடம்பெல்லாம் உலுக்கியது. பக்கிரிக்கும் உள்ளூற நடுக்கந்தான்; என்றாலும் அதை அவன் வெளிக்குக் காட்டிக்கொள்ளவே இல்லை. ஆனால் கலவரமடைந்த முனியம்மாள், ''என்ன கண்ணப்பா, என்ன விஷயம்? கொஞ்சம் சீக்கிரமாச் சொல்லு'' என்று பதற்றத்துடன் கேட்டாள்.

''விஷயம் ரொம்ப முற்றிப் போய்விட்டது சித்தி. சற்று முன்பு மாமா கூடச் சொன்னாரே, கலெக்டர் எல்லாம் வந்ததாக. நேற்று அந்த பஜனை மடத்தில் என் கச்சேரி நடந்தது. ஒரே கூட்டம். கூட்டம் சேர்ந்தால் யாருக்குக் கொண்டாட்டம் என்று சொல்லவேண்டுமா?— எந்தத் திருட்டுப் பயலோ கச்சேரி முடிந்து கூட்டம் கலைகிறபோது 'லபக்'கென்று எங்கள் பாட்டு வாத்தியார் பெண்ணின் கழுத்திலே இருந்த நெக்லெஸை அறுத்துக் கொண்டு ஓடிவிட்டான். போலிசில் புகார் கொடுத்தாயிற்று. போலிசார் நேற்று ராத்திரிக்குள் ஜரூராக வேலை செய்து திருடனைப் பிடித்து உள்ளே அடைத்து வைத்திருக்கிறார்கள், ஆனால் நகை அவனிடத்தில் இல்லை. போலீசுக்கு அந்தக் கேடியைத் தெரியுமாம். அந்தக் கேடிக்கும் அல்லது திருட்டுக்கும் மாமாவுக்கும் என்ன சம்பந்தம் என்று எனக்குத் தெரியாது. ஆனால்

போலீசுக்கு மாமாவைப் பற்றிய தகவல் போயிருக்கிறது. சிங்கப்பூர் பக்கிரியிடந்தான் நகை இருப்பதாகவும், எல்லாரும் ஒரே கும்பல் என்றும் அவனே கூறிவிட்டான். அது உண்மையோ பொய்யோ, இன்னும் சிறிது நேரத்தில் போலீஸ் நம் வீட்டைத் தேடி வந்துவிடும். அதனால்தான் இந்த விஷயம் என் காதில் பட்டதும், அப்படி ஏதாவது தவறுதலாக நடந்திருந்தாலும்; மீளுவதற்கு உண்டான வழியைப் பார்க்கலாம் என்று இத்தனை அவசரமாக இங்கு ஓடிவந்தேன்'' என்று ஹரி கூறி முடிப்பதற்குள் முனியம்மாள் ஒப்பாரி வைத்து அழ ஆரம்பித்துவிட்டாள்.

அக்காள் அழுவதைப் பார்த்ததும் பக்கிரிக்கும் மனசு தாங்கவில்லை. வெளியில் பார்ப்பதற்குப் பக்கிரி எப்படித் தோன்றினாலும் உள்ளுக்குள் வெறும் கோழை. அதுவும் தன் அக்காளிடம் அவனுக்கு அளவுக்கு மீறிய பாசம். ஆகவே எதற்கும் கலங்காத பக்கிரி அக்காவின் கண்ணீரைப் பார்த்ததும் கலங்கிவிட்டான்.

''தம்பி, உண்மையாச் சொல்லு; இந்தத் திருட்டிலே உனக்குச் சம்பந்தம் உண்டா? கண்ணப்பன் சொல்றதெல்லாம் நெசந்தானா?'' என்று முனியம்மாள் பெரிசாகக் குரல் கொடுத்து அழ ஆரம்பித்துவிட்டாள்.

# 22. வாக்குறுதி

முனியம்மாளின் அழுகையையும் ஆர்ப்பாட்டத்தையும் கண்டு பயந்த பக்கிரி தன்னைச் சுதாரித்துக்கொண்டு, வெளிக்கு ஒன்றையுமே லட்சியம் செய்யாதவன் போல் காணப்பட்டான். பிறகு சற்றுக் கோபமாக, ''எனக்கும் இந்தத் திருட்டுக்கும் என்ன அக்கா சம்பந்தம்? ஊரிலே எவனோ திருடினானாம்; எவனோ என்னைப்பத்திச் சொன்னானாம் போலீசு வந்துடுமாமே! போலீசைப்பத்தி எனக்குத் தெரியாதா அக்கா? கலெக்டர் இவனுக்கு வேண்டியவரா இருந்தா இவனோட, உள்ளார வரட்டுமே; ஒரு கை பார்க்கிறேன்!'' என்று ஹரியைப் பார்த்துக் கூறினான்.

உடனே ஹரி, ''சரி. நான் வருகிறேன் சித்தி. அகப்பட்டுக் கொள்கிறவரையில், எல்லாருமே இப்படித்தான் வீறாப்பாகப் பேசுவார்கள். இப்போது மாமன் பேசுகிற பேச்சைப் பார்த்தால், ஏதோ நானே கலெக்டரிடம் சொல்லிப் போலீஸை அனுப்பப்போவது போல் இருக்கிறது. எனக்கென்ன சின்னம்மா வந்துவிட்டது? நகையைப் பற்றி அவர்கள் ஒன்றும் கவலைப்பட்டுச் சாகவ்லலை. அதைக் கண்டுபிடித்து ஒப்படைக்க வேண்டியது போலீசின் பொறுப்பாகிவிட்டது. நான் அங்கே இருக்கிறவன். காதில் கேள்விப்பட்ட விஷயங்கள் உண்மையாகிவிட்டால் நம் குடும்பத்துக்குத்தானே அவமானம்; முடிந்தால் அதற்கு முன் தடுத்துப் பார்க்கலாம்' என்றுதான் அவர்களிடங்கூடச் சொல்லாமல் ஓடி வந்தேன். இனிமேல் என் பொறுப்பு முடிந்துவிட்டது. நான் வருகிறேன் சித்தி'' என்று எழுந்த

ஹரியை, ''இரு கண்ணப்பா'' என்று முனியம்மாள் அமையமர்த்தினாள்.

அருகில் இருந்த பக்கிரியின் இரு கைகளையும் சட்டென்று கெட்டியாகப் பிடித்துக் கொண்டு கண்ணீர் வடித்தபடியே அவள், ''தம்பி, என் தலை மேலே அடித்துச் சத்தியம் பண்ணு. நெசம்மா ஒனக்கு இந்த நெக்லெஸைப் பத்தி ஒண்ணுமே தெரியாதா? கண்ணப்பன் சொல்லறதெல்லாம் பொய்யா? ஏன் தயங்கறே? இப்போ நீ உண்மையை மறச்சு; இதெல்லாம் நெசமாயிருந்தா நான் இந்தக் குழந்தைங்களை கிணத்திலே தள்ளிப் போட்டு; நானும் விழுந்து செத்துப் போயிடுவேன். போலீசு வர்றத்துக்குள்ளே உள்ளதைச் சொல்லி நகையைக் கொடுத்துட்டு ஓடிப்போயிடு. கண்ணப்பனுக்குத் தெரிஞ்ச அந்தக் கலெக்டர் காலிலே விழுந்தாச்சும் உன்னனக் காப்பாத்தச் சொல்லறேன். நெசத்தை மட்டும் மறைச்சுப் புடாதே'' என்று இரு கண்ணிலும் நீர் வழியக் கேட்டாள்.

பக்கிரி மலைத்துப் போய் அக்காவின் முகத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். அணு அணுவாக உயிரை விட்டுக் கொண்டிருந்த அவளுக்கு அவனைக் காப்பாற்றுவதில் இருந்த ஆர்வமும், அவனிடம் இருந்த பாசமும் அவனது நெஞ்சைத் தொட்டன. இறுகப் பற்றியிருந்த அவளுடைய கரங்களிலிருந்து தன் கரத்தை மெல்ல இழுத்துக் கொண்டான். சொற்கள் அவனது உதடுகளிலிருந்து தயங்கித் தயங்கி வெளி வந்தன.

''அக்கா, நான் இதுவரைக்கும் செஞ்சதெல்லாம் தப்புத்தான். ஆனால், நான் இங்கே வந்தப்புறம்-அதுவும் உன்னைப் பார்த்த பிறகு என் மனசு ரொம்பக் கஷ்டப் பட்டுப் போச்சு. நிறைய சம்பாதிச்சு உன்னைச் சுகமா வைக்கணும்னு எனக்கு ஆசை. சக்தியை மீறித்-தகுதியை மீறி நிறைய சம்பாதிக்க உலகத்திலே ரெண்டு மூணு

வழிங்கதான் இருக்கு. கொலை பண்ணணும்; கறுப்புச் சந்தை; கள்ளக் கடத்தல் செய்யணும்; திருடணும். எனக்குத் திருட்டுத் தொழில் சுட்டுப் போட்டாலும் வராது. பாக்கிக்கெல்லாம் இந்தப் பட்டிக்காட்டிலே என்ன வேலை இருக்கு? கையிலே நான் சிங்கப்பூரிலே யிருந்து கொண்டு வந்த பணம் எல்லாம்; வந்த ஒரு மாசத்திலே தீர்ந்து போச்சு'' என்று பக்கிரி பேசிக் கொண்டு வந்த போதே, ''அப்போ போன மாசம் என் கையிலே அம்பது ரூவா; அதுக்கு முன்னே எழுவத்தஞ்சு ரூவா கொண்டு வந்து கொடுத்தியே. அந்தப் பணம் எல்லாம்....?'' என்று முனியம்மாள் ஆச்சரியத்துடன் கேட்டாள்.

''எல்லாம் பிக்பாக்கெட், திருட்டு இதிலேயெல்லாம் எனக்குக் கிடைச்ச கமிஷன்தான். ஆனால் நான் கையை நீட்டி ஒரு திருட்டுப் பண்ணல்லே.''

''தூ! போரும்டா உன் பெருமையும் லட்சணமும்! விஷயத்தைச் சீக்கிரம் முடி'' என்று ஏதோ வரப் போகிற பெரிய ஆபத்தை எதிர்பார்த்து முனியம்மாள் வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டு கேட்டாள்.

''அதுதான் சொல்லிக்கிட்டே வறேனே அக்கா. நான் எனக்காக மட்டுமா இந்தக் காரியத்தையெல்லாம் செய்தேன்? ஏதோ பெரிய மனுஷன் மாதிரி உங்கிட்டே குந்திகிட்டு நியாயம் விசாரிக்கிறானே இந்தத் துரை; இது வரை இந்தக் குடும்பத்தைப் பத்தி நெனச்சுப் பார்த்திருக் கிறானா? நீயும் உன் குழந்தைகளும், வயசான அப்பனும் உசிரோட இருக்காங்களா—செத்துப் போயிட்டாங்க ளான்னு வந்து பார்த்திருக்கானா? இந்தான்னு ஒரு காலணாக் காசு நம்ம குடும்பத்துக்குக் கொடுத்து ஒத்தாசை பண்ணியிருப்பானா? இப்பக்கூடச் சொல்ல றேன்; இந்த நகையை இவன்கிட்டேச் சேர்த்துடறேன்.

நம்ப குடும்பத்தையும், தன் குடும்பமா நெனச்சு இவன் காப்பாத்தறதாச் சத்தியம் பண்ணிக் கொடுக்கச் சொல்லு. பொண்ணைக் கட்டிக் கொடுத்தாவணும்; புள்ளங்களையும் ஆளாக்கியாகணும். உன் சீக்குக்கு, நீ இனிமே மேலே போற இடத்திலேதான் வைத்தியம் பார்க்கணும்; சோறே, மருந்து மாதிரி எப்பனாச்சும் கிடச்சா; நெதமும் மருந்துக்கு வேறே நீ எங்கே அக்கா போறது?'' என்று கேட்டு, அவன் ஹரியைப் பார்த்தான்.

''அதற்கு நான் என்ன செய்ய? இவ்வளவு நாளாய் ஏண்டா நீயும் என்னை மாதிரி திருடிக்கொண்டு வந்து கொடுக்கவில்லை?' என்ன கேட்கிறாயா!'' என்று ஹரி கோபத்தோடு கேட்டான்.

''இந்தாப் பாரு. இந்த வீறாப்பெல்லாம் எங்கிட்டே வேண்டாம். வெட்டிப் பயல்களுக்கெல்லாம் பதில் சொல்லிக்கிட்டிருக்க நான் ஆளில்லை. இந்தக் குடும்பத் துக்கும் உனக்கும் என்ன சம்பந்தம்? என்னை கேக்கற துக்கு உனக்கு என்ன உரிமை இருக்கு? அப்படி இருந்தாப் பேசு—'என் ஆயுசு பூரா இந்தக் குடும்பத்தை மறக்காமெ என் சொந்தக் குடும்பம் என்கிற நெனப்போடேயே இந்தக் குடும்பத்தையும் காப்பாத்தறேன்'னு சித்தி கையிலே அடிச்சுச் சத்தியம் பண்ணிக் கொடு. இந்த நிமிஷமே உன் நெக்லெஸை வீகி எறியறேன். இத்தோட இந்தப் பக்கிரி பழைய தொழிலை விட்டுட்டு; எந்தக் கடையிலேனாச்சும் பீடி சுருட்டிப் பிழைச்சுப்பான். ஊம், ஏன் முழிக்கிறே? கையிடுல அடின்னதும், ''ஐயோ காசு போயிடுமே' ன்னு கவலை வந்துட்டதில்லை?'' என்று பக்கிரி கிண்டலாகக் கூறிக் கொண்டிருந்த போதே ஹரி ஆவேசமாகப் பேசினான்

''மாமா, நீ எதையும் சொல்லிக் கொடுத்து நான் தெரிந்துகொள்ள வேண்டும் என்கிற அவசியமில்லை. இப்போது நானே பிறருக்குப் பாரமாக இருக்கிறேன்.

சமயம் வந்தால்; என் பொறுப்பு என்ன என்று எனக்குந் தெரியும். இப்போது அந்தப் பேச்செல்லாம் வேண்டாம். ஐயா வீட்டு நகையைப் பற்றி ஏதாவது இருந்தால் பேசு. இல்லாவிட்டால் நான் வருகிறேன்.''

''அ! இப்படி ரொம்பப் பேரு பின்னாலே கொடுக்கிறவங்க. பணத்தைப் பத்திப் பேசினவுடனே நைசா நழுவப்பாக்கிறியே; நீயா கொடுக்கப் போறவன்? உன் மனசிலே நல்ல எண்ணம் இருந்தா, 'சம்பாதிக்கிற காலத்திலேயாவது கொடுகிகிறன்'னு கையிறே அடிச்சிருக்க மாட்டியா?'' என்றான் பக்கிரி.

உடனே ஹரி, 'இந்தா மாமா, என் மனத்திலே இருக்கிற எண்ணம் நல்லதா கெட்டதா என்பதைப் பற்றி நான் விண்டு காட்ட முடியாது. ஆனால் உனக்காக— நான் அறியாத என் தாயின் மீது ஆணை இடுகிறேன்; இந்தக் குடும்பத்தை மறக்க மாட்டேன். போதுமா? சித்தியையும் அவளுடைய குழந்தைகளையும் காப்பாற்ற வேண்டியது என் பொறுப்பு. இனி மேலாவது சீக்கிரமா நெக்லெஸைக் கொடு மாமா. நான் எனக்காக அவசரப் படவில்லை; எவ்வளவு பெரிய ஆபத்தில் சிக்கிக்கொண்டு இருக்கிறோம் என்பதை நீ இன்னும் அறியாமல் இருக்கிறாயே என்றுதான் எனக்கு வருத்தமாக இருக்கிறது'' என்று ஹரி கூறிக்கொண்டு வந்தபோதே பக்கிரி அவன் இரண்டு கைகளையும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான்.

''தம்பி, அந்தப் பொண்ணு உங்க ஐயா வீட்டுப் பொண்ணுன்னு முதல்லேயே தெரிஞ்சிருந்தா, கூட்டத்திலே நோட்டம் பார்த்துக்கிட்டிருந்தப்பவே திருட்டுக் கழுதையைக் கன்னத்திலே அறைஞ்சு துரத்தியிருப்பேன். பாவிப் பசங்க! எங்கேயோ இருந்த என்கிட்ட வந்து, அண்ணே, ஏதோ ஜமின்தார் வீட்டுப் பொண்ணு மாதிரி

அழகா இருக்கு. கழுத்திலே வைர நெக்லெஸ் டால் அடிக்குது. கச்சேரி முடிஞ்சு கூட்டம் எழுந்திருச்சதும், கழுத்திலே விரலாலே லேசா ஒரு சுண்டுச் சுண்டினாப் போதும் அண்ணே; ஐயாயிரமோ பத்தாயிரமோ! அப்புறம், ஆறு மாசத்துக்கு இந்தப் பொளப்பை எல்லாம் மறந்திற லாம்'னு சொல்லி வந்து உசிரை வாங்கினாங்க. நானும் நெசந்தான்னு நம்பிட்டேன். அறுத்துகிட்டு வந்ததுக்கப் புறம் வாங்கிப் பார்த்தா இமிடேஷன் கல்லு. அதுக் குள்ளாற, எட்டத்திலே எங்கியோ வந்த போலீசைப் பாத்துட்டு அரண்டு போய் ஓடி, அநாவசியமா மாட்டிக் கிட்டான்.''

''இந்த ராமாயணத்தையெல்லாம் உன்னிடம் யாரு கேட்டது மாமா? இப்போ நகை எங்கே? அதை எடு'' என்றான் ஹரி.

''என் கையிலே இருந்தா, நான் இதுக்கு முன்னே கொத்திருக்க மாட்டேனா? அது இப்போ வேறொரு பார்ட்டிகிட்டே இருக்கு. நீ எதுக்கும் எனக்காக ஒரு காரியம் செய்யணும். செய்யரியா?'' என்று கேட்டான்.

''கேட்காமலிருக்கவா நான் இத்தனை தூரம் வந்து; உன்னோடு இத்தனை அவஸ்தைப்படுகிறேன். விஷயத்தை முடித்துச் சீக்கிரம் என்னை விடு'' என்றான் ஹரி.

''தம்பி, நான் இப்பவே போய் அந்த ஆளைப் பார்த்து நகையை வாங்கிக் கொண்டு சாயங்காலமா உங்க வீட்டுக் கொல்லைப்புறம் வந்து நிக்கிறேன், நீ என்னைச் சந்தித்து நெக்லெஸை வாங்கிக் கொண்டு விடு. ஆனால் அதுக்கு முன்னே நீ எனக்கு ஓர் உதவி செய்யணும். போலீசிலே நேற்றுக் களவு போனது பற்றிப் புகார் எழுதிக் கொடுத்திருக்கீங்க இல்லையா? அந்த நகை கிடைத்து விட்டதாகவும்; புகாரை வாபஸ் வாங்கிக் கொண்ட

தாகவும் ஒன்று எழுதி ஸ்டேஷனில் சேர்த்து விட வேண்டும். முடியுமா?'' என்று பக்கிரி கேட்டதும் ஹரி சிரித்தான்.

''என்ன மாமா, இதுதான் சிங்கப்பூர் வேலையா? நகை கைக்கு வருவதற்கு முன்னால் இப்படி எழுதிக் கொடுக்கும் அளவுக்கு எந்த முட்டாள் இருப்பான்? திருடியதும் போதாதென்று; அதிலிருந்து மீளுவதற்கு இப்படி ஒரு தந்திரம் என்னிடமே செய்கிறாயா?'' என்றான்.

உடனே பக்கிரி, ''சரி, என்னை மன்னித்துவிடப்பா. என்னிடம் உனக்கு நம்பிக்கை இருக்கும் என்ற நினைப்பில் பேசி விட்டேன். நகை கிடைத்ததுமாவது உடனே எழுதிக் கொடுக்க ஏற்பாடு செய். அது ரொம்ப முக்கியம். நீ சொன்ன அடையாளப்படி இன்று இருட்டுகிற நேரத்தில் உன்னை உங்கள் வீட்டு வேலியோரமாகச் சந்திக்கிறேன். 'நீ கொல்லையில் கிடந்தது' என்று சொல்லி, வீட்டில் சேர்த்துவிடு. கடிதமும் மறக்காதே. அதுவரை நான் தலைமறைவாகத் தான் இருக்க வேண்டி வரும்'' என்று பக்கிரி பேசிக்கொண்டிருந்த போதே வீட்டு வாசலைத் தாண்டி ஜீப் ஒன்று வந்து நின்றது—அதில் பின்புறம் இருந்த இரண்டு போலீஸ்காரர்களைக் கண்டதும் பக்கிரி ஹரியை அப்படியே பரபரவென்று இழுத்துக்கொண்டு ஒரே ஓட்டமாக எவர் கண்ணிலும் படாமல், கொல்லையை நோக்கி ஓடினான். இருவரும் சுவரைத் தாண்டினர்.

''நீ உள்ளே இருந்தால் இருவருக்குமே ஆபத்து. நம் திட்டமெல்லாம் தவிடுபொடியாகிவிடும். அதனால் தான் உன்னையும் கையோடு இழுத்துக்கொண்டு வந்து விட்டேன். அக்காவைப் பற்றிக் கவலையில்லை. அது சமாளிச்சுக்கும். நீ மறந்துடாமே இருட்டினதும் வேலி கிட்டே வந்துடு'' என்று கூறிய பக்கிரி வடக்கு நோக்கி

மின்னலைப் போல் மறைந்தான். ஹரி வேகமாகத் தெற்கு நோக்கி நடந்து அந்தப் பயங்கர எல்லையைக் கடந்தான்.

ஹரி தவித்துக் கொண்டிருந்தான். திருடனைப் போல், 'எப்போது இருட்டும், எப்போது இருட்டும்' என்று அவன் மனம் இருட்டுக்காக ஏங்கியது. இருட்டியதும் சொன்னபடி தவறாமல் பக்கிரி வரவேண்டுமே என்று கவலைப்பட்டான். அப்படியே வந்தாலும் வழியில் எங்காவது மாட்டிக் கொள்ளாமல் நகையோடு வந்து சேர வேண்டுமே என்று, வேண்டாத தெய்வங்களை எல்லாம் வேண்டிக்கொண்டான். வந்ததும் பக்கிரியை எங்கே சந்திக்க வேண்டும் என்று, இருட்ட ஆரம்பிக்கு முன்பே ஒரு முறை கொல்லையில் ஒத்திகை பார்த்துக் கொண்டான்.

'நம் வீட்டிலுள்ளவர்களே குருவின் வீட்டுச் சொத்தைத் திருடுவதா? இது மிகப் பெரிய துரோகம் அல்லவா? அந்தக் குற்றத்தை யார் செய்தால் என்ன? அதில் நமக்கும் பங்கு உண்டல்லவா? பக்கிரி மாமாவிடமே நேரில் சென்று வாதாடிப் பார்ப்போம். மசிந்தால் நம் மானம் பிழைக்கட்டும். மசியாவிட்டால் போலீஸ் இருக்கவே இருக்கிறது' என்ற எண்ணத்துடனேயே அவன் அரசூருக்குப் போனான்.

ஆனால் அங்கே சென்றபோது. அவன் எண்ணத்துக்கு அப்பாற்பட்ட விஷயங்கள் நடந்தேறிவிட்டன. வலுவில் எப்படியோ ஒரு நிர்ப்பந்தத்தில் சிக்கிக்கொண்டு, சம்பாதிக்கத் துவங்குமுன்பே செலவுக்கு ஒப்பந்தம் தேடிக் கொண்டதோடு மட்டுமின்றிச் சத்தியமும் செய்து கொடுத்தாகிவிட்டது.

ஹரி உள்ளே நுழைந்ததும், ''யாரோ உங்களைக் கலெக்டர் வீட்டில் பார்த்ததாகச் சொன்னார்களே! அதற்குள் எப்படி இங்கே வந்தீர்கள், டீச்சர் ஸார்?'' என்று சுசீலா கேலியாகக் கேட்டாள்.

ஆனால் ஹரி எதையும் லட்சியம் செய்யாமல் 'பக்கிரி' ஜபமே செய்துகொண்டிருந்தான்.

பாகவதர் அவனிடம், பஞ்சு அண்ணாவும் ராஜப்பாவும் வந்ததைக் கூறினார். அவர்களையே வேலூரிலும் கரூரிலும் சபாக் கச்சேரிகளுக்கு ஏற்பாடு செய்திருப்பதாகவும், ஹரியின் அட்வான்ஸிலிருந்து அவர்களுக்கு முன் பணம் தரவேண்டும் என்றும் சொன்னார்.

'உன் பணம், அட்வான்ஸ்' என்று குருநாதர் குறிப்பிடும் போது முன்பாக இருந்தால், 'என்னை அவர்களிடமிருந்து பிரித்துப் பேசுகிறார்களே. எனக்கென்று எதற்காகத் தனிப்பணம், தனிச் சுகம்?' என்றுதான் எண்ணியிருப்பான். ஆனால் இப்போது அவன், தன்வரையில் அந்தக் குடும்பத்துடனேயே ஒன்றிவிட்டவனாக இருந்தாலும், அதையும் மீறித் தனக்கென்று அதாவது தன்னைப் பெற்று வளர்த்த குடும்பத்துக்காகவாவது சம்பாதிக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் அவனை வாட்டியது. பிறந்த வீட்டுக்கும் புகுந்த வீட்டுக்கும் நல்லபடியாக நடந்துகொள்ள வேண்டிய, மணமான பெண்ணின் நிலையில் அவன் இருந்தான். வாக்களித்தபடி வருமானத்தில் ஒரு பகுதியையாவது அவர்களுக்கு அவன் கொடுத்தாக வேண்டும். இதைத் தன் பொறுப்பில் நிறைவேற்ற முடியாது என்பதை அவன் உணர்ந்தான். குருநாதரிடம் அனைத்தையும் கூறி, அவர் கருத்துப்படி நடப்பதைத் தவிர அவனுக்கு வேறு வழியே இல்லை. அதுவே அவன் மனத்துக்கு நிரந்தரமான நிம்மதியைத் தருகிற வழியாகவும் தோன்றியது. ஆனால், அதை அவரிடம் கூறத் தக்க தருணத்தை எதிர் பார்த்திருந்தான்.

சிந்தனையைத் தொடர்ந்து பொழுதும் ஓடிக் கொண்டுதான் இருந்தது. விதை தூவி விட்டு வானத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும் விவசாயியைப் போல் பக்கிரியை

வரச் சொல்லிவிட்டு ஆகாயத்தைப் பார்த்துக் கொண் டிருந்தான் ஹரி. மாலை ஆகியது; இருள் பரவிக் கொண்டே வந்தது. கொல்லைக்கும் வாசலுக்கும் அலைந்தான். ஹரியின் இந்தச் செய்கை காயத்திரிக்கு மிகுந்த ஆச்சரியத்தை அளித்தது.

''என்ன டீச்சர் ஸார், கொல்லையிலேயே இன்று சுற்றிக் கொண்டிருக்கிறீர்கள்?'' என்று சுசீலா கூட ஒரு தடவை கேலியாகக் கேட்டு விட்டாள். யாரும் சந்தேகிக்க இடம் கொடுக்காமல் நடந்து கொள்ள வேண்டும். அப் போதுதான், 'நகை கொல்லையில் கிடந்தது' என்று சொல்லி எடுத்துக் கொடுத்தால் எல்லாரும் நம்புவார்கள் என்று திட்டமிட்டிருந்தான். ஆனால் இம்மாதிரியான காரியங்களில் அநுபவம் இல்லாததனாலும், ஒரு வேளை பக்கிரி சற்று முன்பே வந்து தன்னைக் காணாமல் ஏமாந்து போய்விடக் கூடாதே என்ற பரபரப்பினாலும் அவன் அடிக்கடிப் போய்ப் பார்த்து வந்தான்.

ஆனால் பக்கிரி உண்மையிலேயே ஏமாற்றிவிட் டான். கையெழுத்து மறையும் வேளையில் சரியாக அங்கே வந்து விடுகிறேன் என்று கூறியவன் இரவு மணி எட்டு ஆனபிறகும் வரவில்லை. சரியாக எட்டரை மணிக்குத்தான் வந்தான். அதுவும் வெறும் கையுடன் வந்து நின்றான். அந்தப் பார்ட்டி வெளியே போயிருப்பதாகவும் எப்படியும் இன்னும் ஒன்று அல்லது இரண்டு மணி நேரத் துக்குள் கண்டிப்பாக வந்துவிடுவதாகவும் அவன் கூறவுமே ஹரிக்குத் தன்னையும் மீறி அழுகையும் கோபமும் மாறி மாறி வந்தன.

''இந்தத் தகவலைச் சொல்லுவதற்குத்தானா இத்தனை நேரம்? பார்ட்டி எங்கே? புதுச்சேரிக்குப் போயிருக்கிறானா, பம்பாய்க்குப் போயிருக்கிறானா, சரக் குப் பிடிக்க?''

''என்ன கண்ணப்பா, கோபித்துக் கொள்கிறாயே! டவுனுக்குப் போயிருக்கிறான் என்று சொன்னால் புதுச் சேரியா பம்பாயா என்று கிண்டல் செய்கிறாயே!''

''டவுனுக்கு எதற்காகப் போயிருக்கிறான்? விலை விசாரிக்கவா, இல்லை, விற்றுக் காசாக்கவா?''

''கண்ணப்பா, உனக்கு இன்னும் சிறுபிள்ளைத்தனம் போகவில்லை. நகை எங்கேயும் போய்விடவில்லை. கவலைப் படாதே. வீட்டிலிலேயேதான் இருக்கிறது. அவன் மனைவியிடம் விஷயத்தைக் கேட்டுக்கொண்டு தான் வந்திருக்கிறேன். நடுச் சாமமானாலும் அவன் வந்ததும் நகையைக் கொண்டு வந்து கொல்லையில் போட்டுவிடுகிறேன். நீ உன் சௌகரியப்படி இரவிலோ காலையிலோ கண்டெடுத்துக்கொள். ஆனால் பொழுது விடிந்ததும் போலீஸில் புகாரை வாபஸ் வாங்க மட்டும் மறந்து விடாதே. அப்பொழுது நான் வரட்டுமா? போலீஸ் கெடுபிடி அதிகமாக இருக்கிறது.''

''அது இருக்கட்டும்; நீ இருட்டிலே நகையைக்கொண்டு வந்து சாணத் தொட்டியில் வீசி எறிந்து விட்டுப் போனால் அதை யார் தேடிக் கண்டுபிடிக்கிறது?''. ஹரி கவலையோடு கேட்டான்.

''சரி தம்பி, நான் ஒன்று சொல்லுகிறேன். கேட் கிறாயா?'' என்று பக்கிரி ஹரியைத் தன் அருகே இழுத் துக் காதோடு ஏதோ கிசுகிசுத்தான். உடனே ஹரி, ''அதுதான் சரி. அப்படியே செய். ஆனால் உன்னை நம்பலாமா? சொன்னபடி செய்யாமல் ஏமாற்றிவிட மாட் டாயே?'' என்று கேட்டு முடிக்குமுன், ''உங்கப்பன் ஆணை. சத்தியமாக நம்பு. விட்டேன், விட்டேன் போதுமா?'' என்றான்.

'உங்களுக்கெல்லாம் சத்தியம் ஒரு கேடு. என் அப்பன் செத்தால் என்ன, இருந்தால் உனக்கென்ன?'' என்று

மனத்துக்குள் எண்ணியபடியே, ''சரி சரி, சீக்கிரமாகப் போய் பார்ட்டியைச் சந்திக்கிற வழியைப்பார்'' என்று பக்கிரியைத் துரத்திவிட்டு உள்ளே போனான் ஹரி. ஆனால் அத்தனை நேரம் அங்கு நடந்த சம்பாஷணை களை ஓர் உருவம் கேட்டுக்கொண்டிருந்ததை, பாவம் ஹரி எப்படி அறிவான்!

நெக்லெஸ் விஷயமாக நடந்த அனைத்தையும் காயத் திரியிடம் மட்டுமாவது கூறிவிட வேண்டும் என்றுதான் ஹரி துடித்தான். ஆனால் அதற்கான சந்தர்ப்பம் வாய்க் கவே இல்லை.

ஹரிக்குத் தூக்கம் வரவில்லை. சுவரில் இருந்த கடிகாரம் மணி அடிப்பதை எண்ணிக்கொண்டே யிருந் தான். ஆனால் வீட்டிலுள்ள எல்லாரும் நல்ல தூக்கத் தில் இருந்தனர். முதல்நாள் கச்சேரிக்காக விழித்தது, பிறகு குறைப்பொழுதுக்கும், காணாமற்போன நகையைப் பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டு தூங்காமல் இருந்தது எல்லாம் சேர்ந்து அனைவரும் நன்றாகத் தூங்கிக்கொண் டிருந்தனர்.

நடுச் சாமம் இருக்கும். தொழுவத்தில் கட்டியிருந்த பசு, 'ம்மே ம்மே' என்று பெரிதாகக் கத்தியது. அருகில் இருந்த கன்றுக்குட்டியும் தாயின் குரலுக்கு பதில்குரல் கொடுத்தது. பசு கத்துவதைக் கேட்டு விழித்துக்கொண்ட லட்சுமியம்மாள், ''காயத்திரி, கொல்லையிலே பசு கத்து கிறதே. வைக்கோல் இல்லையா?'' என்று கேட்டாள்.

விழித்துக் கொண்ட காயத்திரி, ''இல்லையே அம்மா. நிறைய போட்டு விட்டுத்தானே வந்து படுத்துக் கொண் டேன்?'' என்றாள்.

''பின் ஏன் இப்படி விடாமல் கத்துகிறது? கன்றுக் குட்டியும் கத்துகிறதே! ஒரு வேளை எல்லாவற்

றையும் தின்று விட்டதா? எதற்கும் பார்த்து விட்டு வருவோம்'' என்றாள்.

''சரி அம்மா என்று காயத்திரியும் எழுந்தாள். இந்தச் சம்பாஷணையைக் கேட்டுக் கொண்டிருந்த ஹரிக்கு மூச்சே நின்று விடும் போல் இருந்தது. பசுவின் அலறலுக்குக் காரணம் பக்கிரி கொல்லையில் வந்திருப் பதுதான் என்பது ஹரிக்கு நன்றாக விளங்கியது. 'நாய் செய்கிற வேளையை இந்தப் பசு செய்து மானத்தை வாங்கி விடும்போல் இருக்கிறதே!' என்று அவன் கவலைப் பட்டுக் கொண்டிருந்த போதே காயத்திரி லட்சுமியம் மாளுடன் தூக்கக் கலக்கத்தோடு புழக்கடைப் பக்கம் ஹரிக் கேன் லைட்டுடன் போனாள்.

ஹரியின் இருதயம் வேகமாக அடித்துக் கொண் டிருந்தது.

# 23. பொருள் கிடைத்தது

தன் திட்டங்களைத் தவிடு பொடியாக்க வேண்டு மென்று ஏதோ ஒரு சக்தி கங்கணம் கட்டியிருப்பது போல் ஹரிக்குத் தோன்றியது. திடீரென்று பசு கத்துமென்றோ, காயத்திரி எழுந்து செல்லுவாள் என்றோ அவன் எண்ணவே இல்லை.

கூடவே தானும் எழுந்து போய்ப் பார்க்க எண்ணி னான். ஆனால் இப்போது அங்கே எப்படிப் போவது? 'என்ன நேர்ந்தாலும் தான் இந்த இடத்தை விட்டு எழுந்திருப்பது உசிதமல்ல. கொல்லையில் சிங்கப்பூர்ப் பக்கிரி நின்றிருப்பதைப் பார்த்துக் காயத்திரி பயந்து கூச்சல் போட்டால் பிறகு எழுந்து போகலாம்' என்று மனத்தை அடக்கிக் கொண்டு படுத்துக் கிடந்தான்.

காயத்திரி கொல்லைக் கதவுகளை திறந்து கொண்டு போன போது பரம சாது போல் தொழுவத்தில் நின்ற பசு அவளைப் பார்த்து ஆசையோடு கழுத்தை நீட்டியது. 'போக்கிரி, பாதி ராத்திரி வந்து உனக்குச் சொரிந்து கொடுக்க வேண்டுமாக்கும்? இதற்காகவா இப்படிக் கத்தி எல்லாரையும் எழுப்பினாய்?' என்று கழுத்தையும், இரண்டு கொம்புகளுக்கு மத்தியிலும் சிறிது நேரம் சொறிந்து கொடுத்தாள். பசுவும் அந்தச் சுகத்தில் தலையைப் பக்குவமாக நாலாப்பக்கமும் திருப்பித் திருப்பிக் காட்டியது. காயத்திரி கையை எடுத்தவுடன் கன்றுக்குட்டி 'ம்மே' என்று பெரிசாகக் கத்தியது.

''அடப் போக்கிரி! இந்த வயசிலேயே உனக்கு இத்தனை பொறாமையா? இரு, இரு. முதுகில் இரண்டு வைக்கிறேன்'' என்று செல்லமாகக் கடிந்து கொண்டு அதன் அருகில் சென்ற காயத்திரி மறு கணம் சிலை போல் பிரமித்து நின்றாள்.

கையிலிருந்த லாந்தர் வெளிச்சித்தில் கன்றுக்குட்டியின் கழுத்தில் சுசீலாவின் நெக்லெஸ் டால் அடித்தது.

காயத்திரியின் உடம்பெல்லாம் 'குப்' பென்று வியர்த்துக் கொட்டியது. உலகத்திலுள்ள பயமெல்லாம் ஒன்று திரண்டு வந்து அவளை அப்பிக் கொண்டது.

சுசீலாவின் கழுத்திலிருந்த நெக்லெஸை அறுத்துக் கொண்டு போனவன் அதைக் கன்றின் கழுத்தில் கட்டிய மர்மம் அவளுக்குத் தெரியும்; 'ஆனால் அந்தத் திருடன் இன்னும் போகாமல் கொல்லையிலேயே ஒளிந்துகொண்டிருந்தால்?' என்று எண்ணிப் பார்த்தவுடன் காயத்திரிக்கு உச்சிமுதல் உள்ளாங்கால் வரை ஓர் உலுக்கு உலுக்கியது. அங்கே விநாடியும் தாமதிக்கத் தைரியமில்லாமல் நெக்லஸைக் கழற்றிக் கொண்டு தன் தாயாரின் அருகில் ஓடி வந்தாள்.

''என்னடி, ஏன் கத்தியது?'' என்று லட்சுமியம்மாள் விசாரித்தாள்.

ஒரு நிமிஷம் என்ன பதில் சொல்லுவதென்று காயத்திரி தயங்கினாள். பிறகு சட்டென்று, சும்மாதான் அம்மா கத்தியிருக்கிறது. போட்ட வைக்கோல் அப்படியே இருக்கிறது. போனவுடன் கழுத்தை நீட்டுகிறது. சொரிந்து கொடுக்க வேண்டுமாம். முதுகில் நாலு வைத்து விட்டு வந்தேன்'' என்று பளிச் சென்று பதில் கூறினாள்.

''எல்லாம் நீ செய்து காட்டியிருக்கிற பழக்கந்தானே சந்தோஷம் வந்தால் கழுத்தைக் கட்டிக் கொண்டு கொஞ்சு

கிறது. சரி, விளக்கைச் சின்னதாக்கி விட்டுத் தூங்கு'' என்று கூறித் தானும் படுத்துக்கொண்டாள்.

காயத்திரியோடு போட்டி போட்டுக்கொண்டு குறைப் பொழுதுக்கும் தூக்கம் வராமல் அந்த வீட்டில் இன்னோர் உயிரும் தவித்தது. 'கொல்லையில் போன காயத்திரி என்ன ஆனாள். அவள் தாயிடம் என்ன பதில் சொல்லப் போகிறாள். பக்கிரி அவள் கண்ணில் பட்டிருப்பானோ? இல்லை, சொன்னது போல் கன்றுக் குட்டியின் கழுத்தில் நெக்லெஸைக் கட்டிவிட்டு ஓடிப் போயிருப்பானா?' என்று எண்ணித் தவித்தான் ஹரி.

சாயங்காலமெல்லாம் அவன் கொல்லைப் பக்கம் சுற்றியதைச் சுசீலாவைப் போலவே, காயத்திரியும் கவனிக்கத் தவறவில்லை. இப்படி அவன் நடந்து கொள்கிற வழக்கமில்லை. என்றாலும் அதைப் பற்றிக் காயத்திரி அக்கறை கொள்ளாமல் விட்டுவிட்டாள். சுசீலா சி. ஐ. டி. போல் அவனுடைய செய்கை ஒவ்வொன்றையும் கண்காணித்து வந்தாள்.

ஆனால் யார் செய்த பூஜா பலனோ, இருட்டிய பிறகு அக்கம் பக்கம் பார்த்துக்கொண்டே ஹரி கொல்லைப் பக்கம் சென்றதைச் சுசீலா கவனிக்கவில்லை. யாருடனோ அவன் பேசியதையெல்லாம் மறைந்திருந்து கேட்டவள் காயத்திரி தான். ஆனால், அதையே சுசீலா கேட்டிருந்தாள் வேறு வினையே வேண்டாம்!

இப்போது காயத்திரிக்கு மடியில் இருந்த நெக்லெஸ் பாராங்கல்லைவிட அதிகமாகக் கனத்தது. மாடு சத்தம் போட்டு அம்மாவையும் அவளையும் எழுப்பி அனுப்பியிரா விட்டால், யாருக்கும் தெரியாமல் நிச்சயம் ஹரிதான் அதைக் கன்றுக் குட்டியின் கழுத்திலிருந்து எடுத்திருப்பான். அதன் பின்னர் அதை என்ன செய்வான் அல்லது எப்படி

இந்த வீட்டில் சேர்க்க நினைத்திருந்தான் என்பது அவளுக்குத் தெரியவில்லை. ஆனால் நேற்று அவர்கள் பேசிக்கொண்ட ரகசியம் இந்தக் கன்றுக் குட்டியின் கழுத்தில் நெக்லெஸைக் கொண்டு கட்டுகிற விஷயம்தான் என்பது அவளுக்குப் புரிந்தது.

'அநேகமாக இன்றிரவு ஹரி தூங்கியிருக்கமாட்டான். எல்லாம் அவனுக்குத் தெரிந்திருக்கும்' என்று காயத்திரி எண்ணியதற்கு ஏற்பவே; கருக்கலில் அவள் எழுந்திருக்கும் போதே அவனும் எழுந்திருந்து பின்கட்டுக்குச் சென்றான்.

தொழுவத்துக்குள் நுழையப் போன ஹரியைக் காயத்திரி மெதுவாகக் கூப்பிட்டாள். ''வீணாக அங்கே போய்த் தேடாதே! நான் ராத்திரியே கழற்றிக் கொண்டு வந்து விட்டேன். இந்தா'' என்று இடுப்பிலிருந்த நெக்லெஸை எடுக்கப் போனாள்.

ஹரி உடனே, ''எடுக்க வேண்டாம் அக்கா. அது கொல்லையில் கிடந்தது என்று வீட்டில் சேர்ப்பித்து விடுங்கள். எனக்காக இந்த உதவி செய்ய வேண்டும். பிறகு உங்களுக்கு நான் எல்லா விஷயங்களையும் விரிவாகச் சொல்லுகிறேன்'' என்று அவன் சொல்லி முடிக்கு முன்னர், 'நீ ஒன்றும் சொல்ல வேண்டாம். எல்லா விஷயமும் எனக்கும் தெரியும்' என்பதே போல் காயத்திரி அவனைப் பார்த்தாள். ஆனால் ஹரிக்கு அவளை அப்படி விட்டுவிட விருப்பமில்லை. இதைவிட நல்ல சந்தர்ப்பம் கிடைக்குமோ கிடைக்காதோ என்று, காரியதரிசி மூலம் கேள்விபட்டதிலிருந்து, பக்கிரி முன்னிலையில் சத்தியம் செய்து கொடுத்தது, நகையை மீட்க ஏற்பாடு செய்தது வரை, அத்தனையும் விளக்கமாகவும் சுருக்கமாகவும் சொல்லி காயத்திரிக்குத் தான் நிரபராதி என்பதைப் புரிய வைத்து விட்டான். பிறகுதான் கவலையை மறந்து தம்பூராவை எடுத்து வைத்துக் கொண்டு ஆனந்தமாகப் பாட உட்கார்ந்தான்.

பொழுது விடிந்து வெகு நேரமாகிவிட்டது. சோம்பல் முறித்துக் கொண்டே எழுந்த சுசீலா, "என்ன டீச்சர் ஸார், இன்று சாதகம் எல்லாம் அமர்க்களமாக இருக்கிறது. வேலூர்க் கச்சேரியா?" என்று ஹரியிடம் கிண்டலாகப் பேசியபடியே கையில் பற்பொடியைக் கொட்டிக் கொண்டு கிணற்றங்கரையை நோக்கிப் போனாள்.

சற்றைக்கெல்லாம், 'அம்மா' என்று கொல்லையிலிருந்து கத்திய சுசீலாவின் பலத்த குரலைக் கேட்டு, அடுக்களையில் பால் காய்ச்சிக் கொண்டிருந்த லட்சுமியம்மாள் என்னவோ ஏதோ என்று புழக்கடையை நோக்கி ஓடினாள். ஹரி பாடுவதை நிறுத்திவிட்டுக் காதைத் தீட்டிக் கொண்டான். காயத்திரி குளியல் அறையிலிருந்து வெளியே வரவேயில்லை.

சுசீலா இடக்கையில் காணாமற் போன நெக்லெஸைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு, "அம்மா! இது நான் பல் தேய்க்கிற இடத்திற்கருகில் கிடந்தது அம்மா" என்று ஆச்சரியத்துடன் நீட்டினாள். லட்சுமியம்மாள் சட்டென்று பெண்ணின் கையிலிருந்த நெக்லெஸை வாங்கிப் பார்த்தாள். "இது உன்னுடைய நெக்லெஸ்தானேடி?" என்றாள் ஆச்சரியத்துடன்.

"ஆமாம். அம்மா!"

"இது இங்கே எப்படி வந்தது?"

"அதுதானம்மா எனக்கும் தெரியவில்லை. தொட்டியிலிருந்து ஜலம் எடுக்க குனிந்தேன். பக்கத்திலே 'பளபள' என்றது. எடுத்துப் பார்த்தேன்; என்னுடைய அதே நெக்லெஸ்."

"அறுத்துக் கொண்டு போனவனே கொண்டு வந்து போட்டு விட்டானா? அதுதான் ராத்திரியெல்லாம் பசு

கத்திக் கொண்டேயிருந்ததோ. நல்ல வேளை, வந்த திருடன் அவள் கழுத்திலும் நாலு போடாமல் போனானே!''

''எடுத்துச் சென்றவன் எப்படியம்மாத் திருப்பிக் கொண்டு வந்து போட முடியும்? அவன் தான் போலீஸில் இருக்கிறதாகப் பாபு ஸார் வந்து சொல்லிவிட்டுப் போனாரே'' என்றாள் சுசீலா.

''அப்படி என்றால், நீ கச்சேரிக்கு நெக்லெஸை போட்டுக் கொண்டு போகவில்லை என்று நினைக்கிறேன். கழுத்தில் போட்டுக் கொண்டு, முகம் கழுவ வந்தபோது இங்கே விழுந்து விட்டதோ என்னவோ? பாவம் அநியாயமாக இந்தப் போலீஸ் யாரையோ பிடித்து அடைத்து வைத்திருக்கிறதே!'' என்று அங்கலாய்த்த வண்ணம், ''ஏண்டி சுசீலா விழிக்கிறாய்? உனக்குக் கச்சேரிக்கு நெக்லெஸைப் போட்டுக் கொண்டு வந்த தாக நன்றாக ஞாபகம் இருக்கிறதா?'' என்று லட்சுமி யம்மாள் படபடப்புடன் கேட்டாள்.

''இரு அம்மா, அதுதான் யோசிக்கிறேன். கழுத்திலே மாட்டிக்கொண்டது ஞாபகம் இருக்கிறது. பிறகு முகத் தில் எண்ணெய் வழிகிறது என்று மறுபடியும் கிணற் றடிக்கு வந்தேன்'' என்று சுசீலா கூறிமுடிப்பதற்குள், ''பின்பு என்ன? அது இங்கேயே கழன்று விழுந்துவிட்டது. நல்ல வேளை, தெருவில் விழாமல் போனதே'' என்று லட்சுமியம்மாள் முடித்தாள். சுசீலாவின் அஜாக்கிரதை யையும் அதிர்ஷ்டத்தையும் பற்றியே பேசினாள். அதற்குள் குளியலறையிலிருந்து வந்த காயத்திரி, ''என்ன அம்மா, ஏன் சுசீலா கத்தினாள்?'' என்று ஒன்றுமே தெரியாதது போல் கேட்டாள். அதன் பிறகு காயத்திரி உட்பட எல்லாருமே லட்சுமியம்மாளின் வார்த்தைகளை ஊர்ஜிதம் செய்வதுபோல் சுசீலாவுக்கு அசட்டுப்பட்டம் கட்டினர்.

ஹரி மனதில் காயத்திரியை வணங்கியபடி தம்பூராவை எடுத்து வைத்துவிட்டு எழுந்து போனான்.

அதற்குள் உள்ளே வந்த சுசீலா, ''என்ன டீச்சர் ஸார், உங்களுக்கு நேற்றே தெரியும் இல்லையா?'' என்று கையிலிருந்த நெக்லெஸை ஆட்டியபடியே கேட்டாள்.

''என்ன அது?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டான் ஹரி.

''அது தான் டீச்சர், நேற்றுச் சாயங்காலத்திலிருந்து சுத்திச் சுத்திக் கொல்லையில் தேடிக்கொண்டு இருக்கவில்லை?''

''நான் என்ன தேடினேன் சுசீலா?', அவன் குரலின் ஸ்தாயி உயர்ந்து நின்றது.

''சரிதான் ஸார். ஏன் என்னிடமே இப்படி மறைக்கிறீர்கள்? இதோ என் நெக்லெஸ் கிடைத்து விட்டது எல்லாருக்குமே, இதை நான் கொல்லையில் போட்டுவிட்டுக் கச்சேரிக்கு வந்திருப்பேன் என்று சந்தேகம் போலிருக்கிறது. நீங்களும் இதைத்தானே நேற்றுச் சாயங்காலத்திலிருந்து கொல்லையில் தேடினீர்கள். அக்கா கூடக் காலையில் கொல்லையைக் கூட்டிப் பெருக்கியிருக்கிறாள். ஆனால் யார் கண்ணிலேயும் படாமல் என் கையிலேயே கிடைத்திருக்கிறது பார்த்தீர்களா!'' என்று சுசீலா பெருமையுடன் கூறினாள்.

இதைக் கேட்டதும், ''நெக்லெஸ் கிடைத்து விட்டதா? இப்படிக் கொடு பார்க்கலாம்'' என்று ஹரி கையை நீட்டினான்.

ஹரியினுடைய நடிப்பைக் கண்டு காயத்திரி மனத்துக்குள் சிரித்துக் கொண்டாள்.

''எந்தப் போலிஸ் உதவியுமின்றி நானே கண்டு பிடித்துவிட்டேன்'' என்று சுசீலா குதித்துக் கொண்டே

போய் அப்பாவிடம் நெக்லெஸ் கிடைத்துவிட்டதைக் கூறினாள்.

பாகவதர் மனத்துக்குள் வியந்து கொண்டார். அதற்குள் சுசீலா, ''என்னப்பா இவ்வளவு சந்தோஷ சமாசாரத்தைச் சொல்லுகிறேன்; நீங்கள் ஒன்றுமே பதில்பேசவில்லை? என் நகை திரும்ப கிடைத்துவிட்டதில் உங்களுக்குச் சந்தோஷத்தையே காணோமே?'' என்று அலுத்துக் கொண்டாள்.

பாகவதர் அவளையும் அருகிலிருந்த லட்சுமியம்மாளையும் பார்த்து, ''நகையைத் தொலைத்து விட்டு வந்ததற்காக உன்னை நான் கொபித்துக் கொண்டால் அல்லவா, கிடைத்துவிட்டதற்காகப் பாராட்ட! பிராணனை விட்டுப்பாடி, உழைத்துச் சம்பாதித்த காசு. தெய்வம் என்று ஒன்று இருந்து எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டுதானே இருக்கிறது. அது தெருவில் காணாமற் போனதைக் கொல்லையிலே கொண்டு வந்து போட்டு சத்தியத்தைக் காப்பாற்றுகிறது. இதற்கு உன்னை நான் புகழ்ந்து மாலை போட வேண்டுமா?'' என்று பாகவதர் கூறியபோதே, ''அண்ணா'' என்று அழைத்துக் கொண்டு காரியதரிசி உள்ளே வந்தார்.

''இப்போது நான் வரும்போது செல்லிக்கொண்டிருந்தீர்களே, அது லட்சத்தில் ஒரு வார்த்தை. சத்தியம் என்று ஒன்று உலகத்தில் இன்னும் உயிரோடு இருக்கத்தான் செய்கிறது. அதை யாராலுமே மறைக்க முடியாது அண்ணா'' என்று அவர் கூறியபோது, ''இல்லையா பின்னே? நாம் ஒருவருடைய சொத்துக்கு அநியாயமாக ஆசைப்படாமல் இருந்தால், பகவான் நம்முடைய சொத்தை இன்னொருவன் விரலாலே தொடப் பார்த்துக் கொண்டிருப்பானோ? அதைத்தான் இப்பொழுது சொல்லிக் கொண்டிருந்தேன்'' என்றபடி சுசீலாவின் பக்கம் திரும்பி,

''சுசீலா, என்னிடம் வந்து சொன்னாயே, அதை இவரிடம் அல்லவா முதலில் சொல்ல வேண்டும். சொல்லு'' என்றார் பாகவதர். ''என்ன அண்ணா விஷயம்?'' என்று காரிய தரிசி ஆச்சரியத்துடன் கேட்டார்.

''என்னுடைய நெக்லெஸ் கிடைத்துவிட்டது மாமா. இன்று காலையில் கொல்லைப்புறம் போனேன். கிணற்றடியிலே கிடந்தது'' என்று சுசீலா கொடுத்தாள்.

அதை ஆச்சரியத்துடன் வாங்கிப் பார்த்துக்கொண்டிருந்தபோது பாகவதர், 'நகைதான் கிடைத்துவிட்டதே, காரியதரிசியிடம் சொல்லிப் போலீஸில் புகார் கொடுத்திருப்பதை வாபஸ் வாங்கச் சொல்லலாமா?' என்று ஹரி கேட்டான். அதற்குள் நீங்களே வந்துவிட்டீர்கள். ஆமாம், நீங்கள் வந்த விஷயத்தைக் கூறவே இல்லையே?'' என்று கேட்டார்.

''ஒன்றுமில்லை அண்ணா. நெக்லெஸ் விஷயமாகப் போலீஸ் ஒருவனைப் பிடித்து வைத்திருப்பதாகச் சொன்னேன் அல்லவா? அவன் தனக்கு ஒன்றும் தெரியாது என்று சாதிக்கிறான். போலீஸ் இன்னும் எங்கெல்லாமோ தேடிக்கொண்டிருக்கிறார்கள். நல்ல வேளையாக நமக்குப் பொருள் கிடைத்துவிட்டது முதல் காரியமாகப் போலீஸில் கொடுத்த புகாரை வாபஸ் வாங்கி விடுகிறேன்'' என்று கூறிப் புறப்பட்டார்.

மளமளவென்று பொழுது ஏறிக்கொண்டே போவது போல் ஹரியும் பிரபலமாகிக்கொண்டே வந்தான். ஆயினும் சுந்தரி அவனைப் புகழ்வதை நிறுத்தவில்லை.

''நீ அன்று பஜனை மடத்தில் பாடியபோது, உன் குருவினுடைய அந்த நாட்கள்தாம் என் நினைவுக்கு வந்தன. குரலைக்கூடக் கடவுள் உனக்கு அவரைப் போலவேதான் கொடுத்திருக்கிறார். அன்று நீ பாடிய

கல்யாணியைப் போல நான் என் ஆயுளில் கேட்டதில்லை'' என்றாள்.

உடனே ஹரி, ''போதும், போதும். நீங்களே என்னை இப்படியெல்லாம் கேலியாகப் பேசினால் நான் என்ன சொல்லமுடியும்? இதே கல்யாணியை நான் எப்போதாவது வீட்டில் பாடிக்கொண்டிருக்கும் போது ஐயாவே என் அருகில் வந்து, நீ இப்போது பாடியதைச் சுந்தரி அருகில் இருந்து கேட்க வேண்டும். அவளுக்கு கல்யாணி ராகம் என்றால் உயிர். அவளைப்போல் அந்த ராகத்தை என்னால்கூடப் பாட முடியாது. அவளுடைய பாட்டைக் கேட்டால் பட்ட மரமும் துளிர்க்கும்' என்று கூறக் கேட்டிருக்கிறேன். அப்படியிருக்க, நீங்களா என் பாட்டைப் புகழ்வது?'' என்று கூறிக்கொண்டிருக்கும் போது வஸந்தி தம்பூராவை எடுத்து வைத்துக்கொண்டு உட்கார்ந்தாள்.

ஹரி வசந்தியிடமிருந்து தம்பூராவை வாங்கித் துல்லியமாகச் சுருதி சேர்த்துக்கொண்டு சுந்தரியைப் பார்த்து, ''நான் இன்று உங்களிடம் ஒன்று கேட்கலாமென்று நினைக்கிறேன். கேட்கவா?'' என்று கேட்டான்.

''என்ன இன்றைக்கு அம்மாவிடம் பேசுவதற்கே இத்தனை பீடிகை?'' என்று சிரித்துக்கொண்டே கேட்டாள் வசந்தி.

''உனக்கு அம்மாவாக இருக்கலாம். ஆனால் அவர்களுடைய வித்தைக்கு நான் மதிப்புக் கொடுத்துத்தானே ஆக வேண்டும். அம்மாவின் பாட்டைக் கேட்க வேண்டுமென்பது என்னுடைய நீண்ட நாள் ஆசை இங்கே வரும் போதெல்லாம் பாடிக் கேட்க வேண்டுமென்று எண்ணியே வருவேன். ஆனால் ஒவ்வொரு சமயமும் கேட்க அதற்கான துணிவில்லாமலே சென்று விடுவேன்'' என்று ஹரி கூறும் போதே, ''ஆனால் இன்று துணிந்து

விட்டாய் போலிருக்கிறது'' என்று சுந்தரி வேடிக்கையாகக் கூறியபடி ஹரியிடம் தம்பூராவைக் கேட்டாள்.

உடனே ஹரி பரவாயில்லை. இன்று எனக்கு இந்தப் பாக்கியமும் கிடைக்கட்டும்; நானே போடுகிறேன். நீங்கள் பாடுங்கள்'' என்றான்.

உடனே சுந்தரியும் எவ்வித மறுப்பும் கூறாமல் கணீ ரென்று பாட ஆரம்பித்தாள். எத்தனை நாட்களுக்குப் பிறகு உட்கார்ந்து பாடப் போகிறோம் என்று சுந்தரி முதலில் தயங்கினாள். ஆனால் பாடப் பாட தயக்க மெல்லாம் தானாகவே சுந்தரியை விட்டு விலகின. ''தான் பாடுவதை விட்டாலும், பாட்டு தன்னை விடாமல் - விலகாமல் - பற்றிக் கொண்டுதான் இருக்கிறது; நாம் நன்றாக முன் போலவே பாடுகிறோம் என்பது அவளுக்கே புரிந்தது. மனத்தில் மேலும் மேலும் உற்சாகம் பிறந்தது. சுந்தரி தன்னை மறந்து பாடினாள்.

அன்று சுந்தரி தனக்குப் பிடித்தமானவைகளாகப் பாடினாள்; பாகவதருக்குப் பிடித்தமானவைகளையும் பாடினாள்; பிறகு ஹரி கேட்டதையெல்லாம் பாடிக் கொண்டேயிருந்தாள். கல்யாணியை அவள் பாடிக் கேட்ட பிறகு ஹரிக்கே, 'இதுவல்லவா கல்யாணி? குரு நாதருடைய வித்வத் திறமை இங்கேயல்லவா பிரகாசிக் கிறது? தாயாரிடம் இருக்கும் இத்தனை பெருமைகளும் தெரியாமலா வசந்தி என்னிடம் பாட்டுச் சொல்லிக் கொள்ள ஆசைப்பட்டாள்? இத்தனை நாளும் என் னுடைய பாட்டைக் கேட்டு சுந்தரி என்ன நினைத்துக் கொண்டிருப்பாளோ?' என்று ஹரி சிந்தனையில் ஆழ்ந் திருந்தான்.

''என்ன ஹரி, தூக்கம் வருகிறதா? பாதியில் பாதியில் மீட்டுவதை நிறுத்தி விடுகிறாயே'' என்று சிரித்தபடிக் கூறிய சுந்தரி எழுந்து கொண்டே, ''சரி,

நான் உள்ளே போய்க் காரியங்களை கவனிக்கிறேன் நீ வசந்திக்குப் பாடத்தை எடு. இன்று தங்கி விட்டு நாளை போகலாம் என்றால் கேட்க மாட்டேன் என்கிறாய்; ஏன் அங்கே அப்படி என்ன அவசரம்?'' என்று கேட்டாள்.

உடனே அருகிலிருந்த வசந்தி, தாயாரிடம், ''நீ சும்மா இரு அம்மா. எல்லாம் நாளைக்குப் போனால் போதும். இன்று போவதைப் பார்க்கிறேன். சுசீலாவிடம் ஒரு நாளைக்கு பேச்சு வாங்கா விட்டால் ஒன்றும் மோச மில்லை'' என்றாள்.

சுந்தரி, ''சரிதான், இப்பொழுதே கேலி பண்ண ஆரம்பித்து விட்டாயா?'' என்று செல்லமாக மகளைக் கடிந்து கொண்ட வண்ணம் அடுக்களையை நோக்கிப் போனாள்.

ஹரி, சுந்தரி கூறிய 'இப்பொழுதே' யின் பொருளைத் தேடி ஆராய்ச்சிப் பண்ணிக் கொண்டிருந்தான்.

''ஏன் இப்படி விழிக்கிறீர்கள்? நாளைக்குப் போனால் போதும் என்றவுடன் சுசீலா பயம் பிடித்து விட்டதா? இனிமேல் அவள் ஏதாவது உங்களிடம் வாயாடினால் நான் சும்மா விடப் போவதில்லை'' என்று கூறிய வண்ணம் வசந்தி தம்பூராவை மீட்டினாள்.

'இப்பொழுது எனக்கு என்ன புதிதாய்க் கிரீடம் முளைத்து விட்டது. இனிமேல் அவளை நீ சும்மா விடாமல் இருப்பதற்கு' என்று எண்ணியபடி வசந்தியிடம், ''ஆமாம், உனக்கு ஒரு விஷயம் தெரியுமா? சுசீலாவின் நெக்லெஸ் கிடைத்து விட்டது. வந்ததுமே சொல்ல மறந்து விட்டேன்'' என்று மகிழ்ச்சியுடன் கூறினான் ஹரி.

''ஆமாம்' இதுதான் எனக்கு இப்போது ரொம்பக் கவலை. பெரிய ஐயாயிரம் ரூபாய் வைர நெக்லெஸ் பறி

போய்விட்டது. அது இப்போது கிடைத்து விட்டது. வெற்றி முரசு கொட்டுங்கள். இரண்டும் இமிட்டேஷன் கள்'' என்று தோளில் இடித்துக்கொண்டு பாட ஆரம் பித்தாள்.

உடனே ஹரி, ''ஆமாம், நீ பணக்காரி. எல்லாரும் உன்னைப்போல் அசல் வைரத்திலேயே ஜொலிக்க முடி யுமா?'' என்று கூறி முடிக்கு முன்னர், வசந்தி சட் டென்று பாடுவதை நிறுத்தி விட்டு ஹரியினுடைய முகத்தை உற்று நோக்கினாள்.

''அவளைச் சொன்னால் உங்களுக்கு ஏன் இப்படி கோபம் பொத்துக்கொண்டு வருகிறது? 'அவள் இமிடே ஷன் இல்லை, நான் தான் இமிடேஷன்' என்று தானே குத்தலாகப் பேசுகிறீர்கள்?'' அவள் கண்களில் கண்ணீர் பொல பொலவென்று வந்துவிட்டது.

ஹரி பதறிப் போனான். அவனுக்கு என்ன செய்வ தென்று புரியவில்லை. உள்ளே திரும்பிப் பார்த்தான். சுந்தரி அடுக்களையில்தான் இருந்தாள். வசந்தியைப்பற்றி அவதூறாகப் பேச வேண்டுமென்றோ, சுசீலாவைப் புகழ வேண்டுமென்றோ அவன் மனத்தாலும் கருதியவனல்ல.

ஆனால் இதை அவனால் வசந்தியிடம் விளக்க முடியவில்லை. விளக்கினாலும் அவள் ஒப்புக் கொள்ளத் தயாராயில்லை. சொன்னதையே சொல்லிக் கொண் டிருந்தாள்.

ஹரி எழுந்து, ''சரி, இன்று இத்துடன் பாடம் போதும். நான் வந்த நேரம் சரியில்லை. நாளை வருகிறேன்'' என்று கூறுமுன் வழியை மறித்துக்கொண்டு நின்ற வசந்தி, ''அம்மா, சிக்கிரம் இங்கே வந்து பாரேன்'' என்று கத்தினாள்.

கையில் உப்புமாவையும் காபியையும் எடுத்து வந்த சுந்தரி, ''எதற்கடி, இப்படிப் பெரிதாகக் கத்தி அமர்க்களப்

படுத்துகிறாய்?'' என்று பெண்ணை அதட்டிய வண்ணம் அங்கு வந்தாள்.

''பாரம்மா, இப்பவே புறப்பட்டுப் போகிறேன் என்று கிளம்பி நிற்பதை?'' என்று வசந்தி தாயாரிடம் ஹரியைப் பார்த்துக் குற்றம் சாட்டும்போதே அவளுடைய குரல் கரகரத்துக் கண்களில் நீர் தளும்பியது.

உடனே சுந்தரி, ''சரி, சரி, இரண்டு பேரும் டிபனைச் சாப்பிடுங்கள். ஹரி ஒன்றும் போகமாட்டான்; நான் பார்த்துக்கொள்கிறேன். என்னடா பாட்டுச் சப்தம் காணோமே என்று பார்த்தால் இரண்டு பேரும் சண்டை போட்டுக்கொண்டிருக்கிறீர்கள். வசந்தி, இதற்கெல்லாம் கொஞ்ச நாள் போகட்டும். உன் முரட்டுச் சுபாவத்தை இப்பவே காட்டாதே; ஹரி பயந்து போய், பிறகு கல்யாணம் பண்ணிக் கொள்ள மாட்டேன் என்று சொல்லி விடப் போகிறான்'' என்று சுந்தரி கேலியாக பேசியபோது ''போ அம்மா'' என்று வசந்தி சிணுங்கினாள்.

ஹரி கையில் எடுத்த உப்புமாத் தட்டு நழுவித் 'தடா'லென்று தரையில் விழுந்தது.

## 24. வீண் பழி

ஹரியினுடைய மனம் ஒரேயடியாகக் குழம்பிப் போயிருந்தது. தன்னை வசந்தி விரும்புகிறாள் என்பதை அவளுடைய பேச்சினாலும் செயல்களினாலும் ஹரி யூகித்து வைத்திருந்தான். ஆனால், அதற்கு அநுசரணை யாகவோ அல்லது அவள் எண்ணத்தை வளர்க்கும் முறை யிலோ அணுவளவுகூட இடம் கொடுக்காமல் அவன் மிகவும் ஜாக்கிரதையாகவே நடந்துகொண்டான். அதே சமயம் தன் உள்ளத்தில் அது போன்ற நினைவுகளுக் கெல்லாம் இடமில்லை என்பதையும் அழுத்தமாகச் சுட்டிக் காட்டத் தவறியதில்லை.

ஆனால், மகளின் விருப்பமே தாயின் விருப்பமும் என்று அறிந்ததும்தான், ஹரிக்குத் தூக்கி வாரிப் போட்டது. தன்னையும் வசந்தியையும் இணைத்து இணைத்துப் பேசிய பேச்சுக்களைக் கேட்டு, அவன் மனம் கலங்கிப் போனான். தனக்கு விருப்பமில்லாத ஒரு விஷயத்தைப் பற்றிச் சுந்தரிக்கு எதிராகச் சொல்ல வேண்டி வந்து விடுமோ என்று அஞ்சினான். அந்தக் கவலையைச் சுமந்து கொண்டே ஹரி ரெயில் ஏறினான்; ரெயிலிலிருந்தும் இறங்கினான்.

சுவாமிமலையில் காலடி வைத்தவுடனே ஹரியின் மற்றக் கவலைகள் எல்லாம் பறந்துவிட்டன. ஆனால் அதே சமயம் புதிய கவலை அவனை ஆட்கொண்டது.

ஹரி வீட்டை அடையும்போது, லட்சுமி அம்மாள் திண்ணையில் உட்கார்ந்திருந்தாள். ஹரி உள்ளே போக

வழியில்லாமல் சுசீலா வாசற்படியை மறைத்தவண்ணம் நின்றிருந்தாள்.

இதைப் பார்த்துவிட்டு, "வழியை விடேண்டி அவனுக்கு உள்ளே போக" என்று சுசீலாவை அதட்டினாள் லட்சுமியம்மாள்.

சுசீலாவின் முகம் கோபத்தினால் வீங்கிப் போயிருந்தது. உள்ளே நுழைந்த ஹரியைத் தொடர்ந்து அவளும் வேகமாக உள்ளே சென்றாள். போகும் போதே பெண்ணிடம், ஹரிக்குச் சாதம் போடுமாறு திண்ணையில் இருந்தபடி லட்சுமியம்மாள் குரல் கொடுத்தாள். ஆனால் சுசீலா அதைக் காதில் வாங்கிக் கொண்டதாகவே காட்டிக் கொள்ளவில்லை.

ஹரி வந்துவிட்டதைக் காயத்திரி அப்போதுதான் கவனித்தாள். பாகவதர் ஹரியைக் கண்டதும் திருவிடைமருதூரிலுள்ள யோகக்ஷேமங்களை விசாரித்துத் தெரிந்து கொண்டார். அதற்குமேல் அவனை அவர் ஒன்றும் கேட்கவில்லை. பாகவதருக்கு ஹரி எங்கிருந்தாலும் ஒன்றுதான். இரண்டுமே அவர் வீடுதாமே?

ஆனால் சுசீலா விடவில்லை. பின்னாலேயே சென்றவள், ஹரியை, "இன்றைக்கும் அங்கேயே தங்கிவிட்டு மெதுவாக வருகிறதுதானே? இப்போது இங்கே என்ன அவசரம்?" என்று கேட்டாள்.

ஹரி ஒன்றும் பதில் பேசவில்லை. ஆனால் சுசீலா விடாமல், "உங்களைத்தான் கேட்கிறேன். நேற்றுக் காலையில் திருவிடைமருதூருக்குப் போய் இன்று இவ்வளவு நேரம் வரை அங்கே என்ன செய்தீர்கள்?" என்று கேட்டாள்.

"பாடம் சொல்லிக் கொடுக்கப் போனேன். பாட்டுச் சொல்லிக் கொடுத்து விட்டு வந்திருக்கிறேன்" என்றான் ஹரி.

''நான் சொல்லுகிறேன்; நீங்கள் பாட்டுச் சொல்லிக் கொடுக்கப் போகவில்லை. அதற்கு இரண்டு நாளா?

''நீ எது வேண்டுமானாலும் சொல்லலாம். நான் அதற்காகத்தான் போனேன். போன வாரம் முழுவதும் பாடமே எடுக்கவில்லை. அடுத்த வாரமும் ஓய்வு இருக்காது. அதனால்தான் இரண்டு நாள் சேர்ந்தாற்போல் பாடம் எடுத்தேன்.''

''சுத்தப் பொய். வசந்தியுடன் அரட்டை அடிப்பதற்காகவே நீங்கள் இங்கிருந்து போயிருக்கிறீர்கள். நீங்கள் ஊர் ஊராய்க் கச்சேரி செய்த பெருமையை எல்லாம் அவர்களிடம் பீற்றிக் கொள்ளப் போயிருக்கிறீர்கள். அவர்கள் அம்மாவும் பெண்ணுமாக, 'ஆஹா ஓஹோ' என்று உங்களைப் புகழ்ந்தவுடன் கண்மண் தெரியவில்லை. அங்கேயே சுற்றிக் கொண்டு இருந்து விட்டீர்கள். இல்லாவிட்டால், எனக்குந் தானே அதே போல் பாடம் எடுத்து நாளாயிற்று. உட்கார்ந்து அரைமணி எனக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டுமென்று உங்களுக்குத் தோன்றியிருக்கிறதா?''

ஹரி 'ஜிவு ஜிவு' என்றிருக்கும் அவளுடைய முகத்தை உற்றுப் பார்த்தான். கோபத்திலும் அவள் அழகாகவே இருந்தாள். மிகவும் தணிவான குரலிலேயே அவன் பேசினான்:

''சுசிலா, நானா உனக்குப் பாடம் எடுக்கமாட்டேன் என்றேன்? நீதானே நாக்கில் புண் இருக்கிறது, பாட முடியவில்லை என்று சொன்னாய்? ஆனால் இப்போது நன்றாய் ஆறிவிட்டது என்று நினைக்கிறேன்.''

''எப்படி?''

''இல்லாவிட்டால் உன்னால் இப்படித் துரித காலத்தில் பேச முடியுமா?''

''கிண்டல் வேறு பண்ணுகிறீர்களா?''

ஏன், பண்ணக்கூடாதா?''

''நான் அப்படிச் சொல்லி எத்தனை நாளாயிற்று? இல்லை, அப்படியே நீங்கள் 'இன்று பாடம் சொல்லிக் கொடுக்கப் போகிறேன் வா!' என்றால் நான் மாட்டேன் என்று சொல்லிவிடப்போகிறேனா. உங்களுக்கு உண்மை யில் எனக்குப் பாட்டுச் சொல்லிக் கொடுப்பதில் அக் கறையோ, ஆர்வமோ இருந்தால் தானே அப்படியெல்லாம் கேட்பதற்கு!''

''இல்லை சுசீலா! இதெல்லாம் நீயாக கற்பனை பண்ணிக் கொள்வது. எனக்கு இரண்டு பேருமே ஒன்று தான்.''

''இதை நான் நம்பத் தயாராயில்லை. உங்களுடைய குறியெல்லாம் 'வசந்தி நன்றாக பாடவேண்டும். சீக்கிரம் அவளை மேடையில் உட்கார வைத்துப் பெயர் சம்பாதிக்க வேண்டும்' என்பதுதானே. உங்களுடைய கெட்ட எண்ணம் எனக்கா தெரியாது?''

''அப்படியே இருந்தாலும், அது எப்படிக் கெட்ட எண்ணம் ஆகும் சுசீலா? உன்னைத் தவிர இதை யாரும் இப்படிப் பேச மாட்டார்கள்?''

''ஆமாம், இந்த வீட்டில் எல்லாருக்கும் நான்தான் பொல்லாதவள், கெட்ட எண்ணக்காரி திருப்திதானே?'' பதிலுக்குக்கூடக் காத்திராத சுசீலா தாங்கமுடியாத கோபத்தோடு மாடியை நோக்கிப் போனாள்.

காயத்திரி நீண்ட பெருமூச்சு விட்டாள். ஹரி வீட் டுக்குள் நுழைந்ததிலிருந்து, அதுவரை நடந்த விஷயங்கள் அனைத்தையும் அவள் உள்ளேயிருந்தபடியே கேட்டாள்.

'ஹரியைப் பற்றி இவளுக்கு ஏன் இத்தனை அக்கறை? அவனிடம் யார், எப்படி நடந்து கொண்டால் இவளுக்கு

என்ன? அதைப் பற்றியெல்லாம் விசாரிக்கவோ, கண்டிக்கவோ இவள் யார்? என்ன உரிமையில் இவள் இப்படி ஹரியையும் மற்றவர்களையும் விரட்டிக் கொண்டிருக்கிறாள்? இவளை இப்படியே வளர விடுவது தவறு' என்கிற முடிவுக்குக் காயத்திரியின் மனம் வந்தது.

பீஷ்மர் அம்புப் படுக்கையில் படுத்திருந்ததைப் போல் பாகவதர் உடம்பில் இனிப் புதிதாய் ஊசிகுத்த இடமில்லாமல் படுத்திருந்தார்,

ஹரி சம்பாதிக்கிற பணமெல்லாம், மருந்தாகவும் மாத்திரையாகவும், ஊசியாகவும் மாறிமாறிப் பாகவதரின் உடம்பில் சென்றது. கை நிறையச் சோற்றை யெடுத்துச் சாப்பிட முடியாமல்; வாய் நிறைய மருந்தைக் குடித்துத் தான் பாகவதர் உயிரைப் பிடித்துக்கொண்டிருந்தார்.

நெஞ்சுவலி குறைவாக இருந்தால்; வயிற்றுவலியால் புழுப்போல் துடித்தார். நாபியிலிருந்து குரலை எழுப்பிப் பந்தல் கோடியில் இருப்பவன் வரை கேட்க தேவகானமாகப் பொழிந்தவர்; கட்டிலில் படுத்து நரகவேதனைப் பட்டுக்கொண்டிருந்தார். வயிற்றில் 'அல்ஸர்' உருவாகியிருக்கிறதாம். ஒரு பருக்கை விழுந்தால் ஊசி குத்துவது போல் வலித்தது. வர வரச் சாப்பாடே மருந்தாகியது. பார்த்துப் போகிறவர்கள் எல்லாம் கண்ணீர் பெருக்கினர். பாகவதருடைய பொன்னான மனத்துக்கும், நல்லெண்ணத்துக்கும் இப்படிப்பட்ட அவஸ்தைகள் என்ன நியாயம்?

பாகவதர் இறந்தகாலத்தைப் பற்றி எண்ணிப் பார்த்தார். அவரைப் போலவே இன்று ஹரியும் இசை உலகில் கொடிகட்டிப் பறந்து கொண்டிருக்கிறான். இந்த மகிழ்ச்சியும் ஆத்ம திருப்தியுமே அவரது உடலுக்கும் உள்ளத்துக்கும் ஆறுதல் அளிக்கும் மருந்தாக இருந்தன. ஹரிக்கு

ஏராளமாகக் கச்சேரிகள் நடக்கிறபடியால் அவனும் பாதி நாள் ஊரிலேயே இருப்பதில்லை.

நாளுக்கு நாள் பெருகிவரும் பணத்தின் தேவையையும், காத்திருக்கிற வைத்தியச் செலவுகளையும் ஹரி மனத்திற்கொண்டு தனக்கு வருகிற ஒரு கச்சேரியைக் கூடத் தவறவிடாமல் உழைத்துப் பாடினான். குருவைப் போல் தொழில் பண்ணினான். ஆனால் அவரைப்போல் பணத்தைத் துச்சமென்று மதிக்கவில்லை.

ஹரியினுடைய பெயரும் புகழும் நாளுக்கு நாள் பெருகி, பெரிய பெரிய சபைகளிலெல்லாம் அவனுடைய கச்சேரிகள் ஏற்பாடாயின. கல்யாண சீசனில் ஓய்வு ஒழிச்சல் இல்லாமல், ஒவ்வோர் ஊரிலும் அவனுடைய கச்சேரி நடந்தது. பணம் இல்லாவிட்டாலும், தன்னை அழைக்கும் உற்சவக் கச்சேரிகளுக்கும் அவன் போகாமல் இருப்பதில்லை. ஆனால் அவன் செய்கிற ஒரு கச்சேரியி லாவது அவனைக் கல்யாணி பாடாமல் ரசிகர்கள் விட மாட்டார்கள்.

ஹரியும் மறுக்காமல் ரசிகர்கள் விரும்பிக் கேட்டதை யெல்லாம் பாடிவிட்டுத்தான் எழுந்திருப்பான். பத்திரிகைகளில் அவனுடைய பெயர் அடிக்கடி வந்தது. இதனால் பக்கிரியும், ஹரியை அடிக்கடிச் சந்தித்துக் குடும்பச் செலவுக்குப் பணம் கேட்கத் துவங்கினான்.

பாகவதருக்குத் தெரியாமல் ஹரி எந்தக் காரியமும் செய்வதில்லை. அவரே பக்கிரியின் விருப்பத்துக்கேற்ப ஹரியை அவனுடைய ஏழைக் குடும்பத்துக்கு அதிகம் உதவும்படி கூறினார். ஹரியும் அதன்படியே செய்தான்.

அப்பாவின் உடல்நலக் குறைவுக்குப் பிறகு, அதையே ஒரு காரணமாகக் கொண்டு சுசீலா பாட்டை நிறுத்தி

விட்டாள். ஆனால் வசந்திக்குப் பாடம் சொல்லி கொடுக்க ஹரி போவது அவளுக்குப் பிடிக்கவில்லை. அதற்காக ஹரியைக் கண்டித்து; அங்கே போகக்கூடாது என்று தடுக்கவோ, உத்தரவு போடவோ அவளுக்குத் தைரியமில்லை. எனவே—வசந்திக்குப் பாடம் எடுத்து விட்டு வந்தால் எதையாவது வைத்துக்கொண்டு ஹரியை வம்புக்கு இழுத்து அவன் மனத்தைப் புண்படுத்தால் இருக்கமாட்டாள்.

தஞ்சாவூர் மாரியம்மன் கோவில் தெப்ப உற்சவத்தில் ஒரு நாள் ஹரியின் கச்சேரி ஏற்பாடாகியிருந்தது. நோட்டீசில் ஹரியின் பெயரைப் பார்த்து சுற்று வட்டார மக்கள் வந்துகூடிவிட்டனர். மின்சார விளக்குகளினாலும், வண்ண வண்ண மலர்களினாலும் தெப்பம் மிக அழகாக அலங்கரிக்கப் பட்டிருந்தது.

சுவாமிக்குப் பக்கத்தில் கச்சேரி செய்வதற்கான மேடை அமைக்கப்பட்டிருந்தது. அதைச் சுற்றிலும் தெப்பத்தில் அமர்ந்து கச்சேரி கேட்க மிகவும் முக்கியமானவர்களும், பிரபலஸ்தர்தர்களும், கோயிலைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்களுமே அநுமதிக்கப் பட்டிருந்தனர். ஹரி வருவதற்கு முன்பே தெப்பத்திலும், கரையிலும் ஆயிரக்கணக்கான மக்கள் காத்திருத்தனர்.

முறிப்பிட்ட சமயத்துக்கு ஹரி கச்சேரி செய்யும் மேடையில் வந்து அமர்ந்தான். பக்கவாத்தியக்காரர்கள் எல்லாம் முன்னரே வந்து அமர்ந்திருந்தனர். சுருதி சேர்த்துக் கொண்டு ஹரி குருவை நினைத்துப் பாடத் துவங்கினான்.

மகிழ்ச்சியூட்டும் மனோகரமான இரவு நேரத்துப் பக்திப் பரவசச் சூழ்நிலை; மெல்லிய அலையெழுப்பிச் சுற்றி வரும் தெப்பம்; கடலிலிருந்து அலைகள் எழுவதே

போல், குளத்தின் நடுவிலிலிருந்து ஹரி இன்னிசை அலையெழுப்பிக் கேட்போரைப் பரவசத்தில் ஆழ்த்தினான். மெய்ம்மறந்து பாடிய ஹரி எதேச்சையாகத் திரும்பிய போது; தெப்பத்தில், பெண்கள் வரிசையில் காந்தாமணியும் அவள் தாயாரும் அவனையே பார்த்த வண்ணம் கச்சேரியை ரசிப்பதைக் கண்டான். இதைச் சற்றும் எதிர்பாராத ஹரி வியப்புடன் கச்சேரியைத் தொடர்ந்தான். இதே போல் தான் சற்றும் எதிர்பாராமல் அன்று அவனுடைய அரங்கேற்றக் கச்சேரிக்குக் காந்தாமணியும், அவள் தாயாரும் முன் வரிசையில் வந்து உட்கார்ந்து கொண்டு அவனை வியப்பில் ஆழ்த்தினார்கள்.

வித்தையை யாசித்துத் தாயும் மகளுமாகத் தன் குருநாதரைத் தேடி வந்ததும் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றதும் அவன் நினைவில் மின்னல் போல் தோன்றி மறைந்தன.

அமைதி தவழும் காந்தாமணியின் சாந்தமான முகமும்; அவளுடைய இசை ஆர்வமும் அவனை உற்சாகப் படுத்துவது போலிருந்தது.

அந்த உற்சாகத்தினால்தானோ என்னமோ - ஹரி தன் திறமையை எல்லாம் காட்டி தெய்வ சன்னிதியில் தேனினுமினிய தன் இசையால் அனைவரையும் மெய்ம் மறக்கச் செய்தான்.

## 25. அழகு ஆராய்ச்சி

**கா**லை மணி சுமார் பத்து இருக்கும். ஹரி குளித்து சாப்பாட்டை முடித்து, ஏதோ ஒரு பல்லவியைத் தன் மனத்துக்குள் பாடி விரலைக் கூட்டிக் கழித்துக் கொண்டிருந்தான். அப்போது அவன் தங்கியிருந்த தஞ்சை ராஜாசத்திரத்து வாசலில் அழகிய நீல நிறக் கார் ஒன்று வந்து நின்றது.

அதிலிருந்து இறங்கிய காந்தாமணியின் தாயார், ஹரியின் அறை நம்பரை நன்றாக உற்றுப் பார்த்து விட்டு சாத்தியிருந்த கதவை லேசாக விரல்களினால் தட்டினாள்.

ஹரி கதவை நன்றாகத் திறந்து, காந்தாமணியின் தாயாரை அன்புடன் வரவேற்று அருகிலிருந்த நாற்காலியில் உட்காரும்படி கேட்டுக் கொண்டான்.

உடனே காந்தாமணியின் தாயார், "என்னை நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள் என்று நம்புகிறேன். நான் காந்தாமணியின் அம்மா. சுவாமி மலைக்கு ஒரு தடவை நானும் என் பெண்ணுமாக வந்திருந்தோம். ஞாபகம் இருக்கிறதா?" என்று கேட்டாள்.

"நன்றாகச் சொன்னீர்கள், நான் உங்களை மறக்கவே இல்லையே- நேற்றுக்கூடச் தெப்பத்தில் உங்களையும் காந்தாமணியையும் பார்த்தேனே!"

"ஆமாம். ஆமாம் உங்களுடைய கச்சேரியைக் கேட்பதற்கென்றே நாங்கள் வந்திருந்தோம். பிரமாதமாகப் பாடினீர்களே! இரவு முழுவதும் பாப்பா

உங்கள் பாட்டைப் பற்றியேதான் பேசிக் கொண்டிருந்தாள். இன்று சாயங்காலம் பிருகதீசுவரர் கோவிலில் கச்சேரி இருக்கிறதல்லவா? என்று காந்தாமணியின் தாயார் கூறிய போதே ஹரி இடைமறித்து, ''ஆமாம், அதுதான் சாப்பிட்டுவிட்டுச் சிறிது ஓய்வு எடுத்துக் கொள்ளலா மென்றிருந்தேன். நீங்களும் வந்தீர்கள்'' என்றான்.

''ஆமாம்...ஓய்வு எடுத்துக்கொள்ளுகிற நேரமாயிருக்கும் என்று காந்தாமணியிடம் ஆனமட்டும் சொல்லிப் பார்த் தேன். உன்னைப் பிடிவாதமாக 'அனுப்பிவைத்து விட்டாள்'' என்று மன்னிப்புக் கேட்கும் தோரணையில் காந்தாமணியின் தாயார் கூறினாள்.

''பரவாயில்லை, சும்மாச் சொல்லுங்கள்''.

''ஒன்றுமில்லை. இப்போது உங்களை எப்படியாவது கையோடு வீட்டுக்கு அழைத்து வரவேண்டுமென்று பாப்பா எனக்கு 'உத்தரவு போட்டாள். இரவு, கோயில் கச்சேரி முடிந்ததும், நீங்கள் அப்படியே ரெயிலுக்குப் போய்விடுவீர் களாம். என்னை வீட்டில் இருக்க விடாமல் துரத்தி விட்டாள். தயவுசெய்து இப்போது என்னுடன் வீட்டுக்கு ஐந்து நிமிஷம் வந்துபோகச் சௌகரியப்படுமா?'' என்று அன்போடும் பணிவோடும் கேட்டாள்.

''முடியாதே'' என்று இழுத்தான் ஹரி.

''சரிதான், இதைப் போய் நான் அவளிடம் சொன் னால் என்னை கொன்றுவிடுவாள். அவளுடைய பிடிவாதம் உங்களுக்குத் தெரியாது.''

''சரி, நாளைக் காலையில் கார் அனுப்புங்கள், வருகிறேன். நான் இரவு கச்சேரி முடிந்ததும், ரெயிலுக்குப் போகப் போவதில்லை. நாளை திருச்சி தேவர் ஹாலில் ஒரு கச்சேரி இருப்பதனால், காலையில் இங்கிருந்துதான் திருச்சி போகிறேன்'' என்றான் ஹரி.

இதைக் கேட்டதும் காந்தாமணியின் தாயார் முகத்தில் மகிழ்ச்சி பொங்கியது.

''அப்படியானால் ரொம்ப சந்தோஷம். காலையில் கார் அனுப்புகிறேன். தயவு செய்து அவசியம் வர வேண்டும்'' என்று கூறி விடை பெற்றாள்.

அன்றிரவு கச்சேரியின்போது கபிருநீசுவரர் ஆலயத்தில் கூட்டம் நிரம்பி வழிந்தது. கச்சேரி மேடையின் முன் வரிசையில், தன்னுடைய ஒவ்வொரு கச்சேரிக்கும் தவறாமல் விஜயம் செய்யும் ரசிகர்களை ஹரி கண்டான். மேடை மீது ஹரி, ஏறி அமர்ந்ததுமே அவர்கள் ஹரிக்கு வணக்கம் தெரிவித்தனர். அனைவருக்கும் ஹரியும் பதில் வணக்கம் தெரிவித்தான். அந்தக் கச்சேரிக்குக ாந்தாமணியும் அவள் தாயாரும் வந்திருந்தனர் என்று சொல்ல வேண்டியதில்லை.

பிருகதீசுவரர் பேரிலுள்ள கிருதிகளை ஹரி மனமுருகிப் பாடியபோது அனைவரும் மெய்ம்மறந்தனர். மகுடியில் கட்டுண்ட நாகம்போல் அவர்கள் இசையில் திளைத்திருந் தனர். சிறுவன் ஒருவன்; யாரோ எழுதிய சீட்டு ஒன்றை ஹரியிடம் கொடுத்தான்.

பிரித்துப் பார்த்தான் ஹரி. அதில் கல்யாணி பாடும்படி கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தது. நேற்றுத் தெப்பத்திலும் அவனுக்கு இதே அநுபவம் ஏற்பட்டிருந்தது. ஆனால் கடிதம் வரும்வரை இன்று அவனுக்குக் கல்யாணி பாடுவதாக உத்தேசமில்லை. எனினும் சீட்டு வந்த பிறகு பாடாமல் மறுக்க மனம் வரவில்லை.

கல்யாணியில் விஸ்தாரமாக ராகம், தானம், பல்லவி பாடி நிறுத்தியதும் எழுந்த கரகோஷம் கோவிலெங்கும் எதிரொலித்தது. நிரவலும் ஸ்வரமும் அவன் பாடிய அழகைக் கண்டு காந்தாமணி பிரமித்துப் போனாள்.

மறுநாள் காலையில் தவறாமல் காந்தாமணியின் வீட்டிலிருந்து கார் வந்துவிட்டது. முதல்நாள் கச்சேரி முடிகிறவரை இருந்த காந்தாமணியும், அவள் தாயாரும் ஹரியை, மறுநாள் தங்கள் வீட்டில்தான் சாப்பிட்டாக வேண்டும் என்று உரிமையோடு கூறியபடியால் அவனும் மறுக்க முடியாமல் ஒப்புக் கொண்டான்.

வீடு என்று அழைக்கப்படும் காந்தாமணியின் அரண்மனை போன்ற பங்களாவினுள் ஹரி நுழையும் போதே பிரமித்துப் போனான். காந்தாமணியின் தாயார் ஹரியை வரவேற்று நடுஹாலில் போட்டிருந்த சோபாவில் அமரச் செய்தாள். பிறகு 'இதோ, வரு கிறேன்' என்று அவசரமாக உள்ளே சென்றாள். ஹரி எழுந்து அந்த அழகிய ஹால் முழுவதும் நோட்டம் விட் டான். அழகிய பூனை ஒன்று அறை முழுவதும் உரிமை யுடன் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தது.

தவழும் குழந்தையிலிருந்து, பருவப் பெண்ணாகத் திகழும் அன்று வரையில் காந்தாமணியின் பற்பல விதமான புகைப் படங்கள் சுவரில் அழகாகத் தொங்கின. அந்தப் படங்களை வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்த ஹரி, ''எல்லாம் என்னுடைய படங்கள்தாம்'' என்ற குரலைக் கேட்டுத் திரும்பினான்.

முத்துக்கள் மின்ன, சிரித்தபடியே கையில் காபியுடன் காந்தாமணி அவன் எதிரில் வந்து நின்றாள்.

''உங்களை ரொம்ப நேரம் காக்க வைத்து விட்டதற்கு மன்னிக்க வேண்டும்'' என்று காபியை ஹரியிடம் நீட்டி னாள் அவள்.

கைநீட்டிக் காபியை வாங்க வேண்டும் என்ற உணர்வு கூட இல்லாமல் ஹரி காந்தாமணியின் முகத்தையே பார்த்தான்.

மலரின் மென்மையும், பொன்னின் நிறமும், மின்னலின் ஒளியும் தென்றலின் நளினமும் பெற்ற தேவமகள் போல் அவள் காட்சியளித்தாள். பார்த்துக் கொண்டே இருக்கத் தூண்டும் அழகைப் பாராதவன் ரசிகனாக இருக்க முடியுமா? ரசிகத்தன்மை இல்லாதவனிடம் கலைத் தன்மை இருக்குமா? கலைத் தன்மை இல்லாதவனைக் காந்தாமணி கண்ணெடுத்துப் பார்ப்பாளா?

''இந்தாருங்கள், காபி. எவ்வளவு நாழிகையாகக் காத்திருக்கிறேன்? ஆறிப்போய்விடாதா?''

ஹரிக்குச் சூடுபட்டது, ''ஆறிப் போனால் போகிறது. கையை வலிக்காதா?'' முதல் தடவையாக ஹரி உளறினான்.

பூனை 'மியாவ்' என்று பதில் குரல் கொடுத்தது.

கையிலிருந்த காபியைப் பார்த்தபடி, காந்தாமணியின் அழகை சுவைத்த ஹரி பதில் கூறு முன்னர், ''நேற்று நீங்கள் பாடிய பாட்டு இன்னும் என் காதுகளில் ரீங்காரம் செய்கிறது ஸார். முந்தாநாள் நானும் அம்மாவும் தெப்பம் பார்க்க வந்திருந்தோம். கச்சேரி முடிந்து உங்களைப் பார்த்து, அம்மாவைக் கொண்டாவது பாராட்டிவிட்டு வந்தால்தான் என் மனம் சமாதானம் அடையும் போலிருந்தது. ஆனால் அந்தக் கூட்டத்தில் அம்மாவினால் அது எப்படி முடியும்.'' காந்தாமணி குறைப்பட்டுக் கொண்டாள்.

''அதனாலென்ன? பரவாயில்லை. அதுதான் இப்போது வட்டியும் முதலுமாகப் புகழ்ந்து தள்ளி விட்டீர்களே'' என்றான் ஹரி.

''நீங்கள் திருச்சியிலிருந்து எப்போது திரும்புவீர்கள்?'' என்று காந்தாமணியின் தாயார் கேட்டாள்.

''ஏன்? கச்சேரி முடிந்ததும் மறு ரெயிலிலேயே புறப் பட வேண்டியதுதான். எனக்கு அங்கே வேற என்ன வேலை?'' என்றான் ஹரி.

''அப்போ சரி, பஞ்சாங்கம் தருகிறேன். ஒரு நல்ல நாள் பாருங்கள். நீங்கள் திருச்சியிலிருந்து வந்ததுமே இவளுக்குப் பாடம் ஆரம்பித்து விட வேண்டும். மாசம் நீங்கள் கேட்டதைத் தந்து விடுகிறேன். அப்போதுதான் இவள் வாய் ஓயும்'' என்ற காந்தாமணியின் தாயார் சுவரில் மாட்டியிருந்த பஞ்சாங்கத்தை ஹரியின் கையில் கொடுத்தாள்.

ஹரிக்குத் 'திக்' கென்றது. 'இவற்காகவா இத்தனை பூர்வ பீடிகையும் உபசாரமும்?' ஹரி யோசனையில் ஆழ்ந்தான்.

கண்கள்தாம் பஞ்சாங்கத்தில் பதிந்திருந்தனவேயன்றி, மனம் குருநாதரையே சுற்றியது.

—தாயாரும் பெண்ணுமாகக் காரைப் போட்டுக் கொண்டு சுவாமி மலைக்கு வந்ததும், இதே காந்தா மணிக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கத் தன் குருநாதர் மறுத்ததும், அவர்கள் மனமுடைந்து வெளியேறியதும் அவன் மனத்திரையில் நிழற்காட்சிகள் போல் ஓடின.

குருநாதருக்குத் தெரிந்தால் அவர் இதற்கு ஒப்புக் கொள்வாரோ மாட்டாரோ; ஆனால் இந்தச் சமயத்தில் பணத்தின் தேவை எவ்வளவு முக்கியமாக இருக்கிறது. இன்னும் அவர் குணமாக எத்தனை மாதம் ஆகிறதோ! அதுவரை கச்சேரியை மட்டும் நம்பிக் கொண்டிருக்கலாமா? அப்படியே தனக்குக் கச்சேரிகள் வந்தாலும்; தேவை அதை விட அதிகமாக அல்லவா இருக்கிறது. இப்படியொரு நிரந்தர வருமானத்துக்கு வழி செய்துகொண்டால், மனத் துக்கு நிம்மதியாக இருக்குமல்லவா?—

''என்ன சார், எனக்கு என்றவுடன் பஞ்சாங்கத்தில் நாள்கூட அகப்படமாட்டேன் என்கிறதா? ரொம்ப நேரமாகப் பார்க்கிறீர்களே?'' காந்தாமணி கலகலவென்று நகைத்தபடிக் கேட்டாள்.

''பஞ்சாங்கத்தில் நாளுக்கென்ன பஞ்சம்? யாருக்கு வேண்டுமானாலும் கிடைத்துவிடுகிறது. எனக்குத்தான் வந்து சொல்லிக் கொடுக்க முடியுமா என்று யோசிக்கிறேன்'' என்றான் ஹரி.

''பாரம்மா, கடைசியில் இவர் சொல்லுகிறதை'' காந்தாமணி இரைந்து தாயாரிடம் முறையிட்டாள்.

''நீ சும்மா இரம்மா. நான் பார்க்கிறேன்'' என்று உள்ளே சென்ற காந்தாமணியின் தாயார் மறு நிமிஷம், ஒரு தட்டு நிறைய வெற்றிலை பாக்கு, பழம், புஷ்பங்களை வைத்து எடுத்துக் கொண்டுவந்து பெண்ணின் கையில் கொடுத்தாள். அதைக் கையில் பெற்றுக் கொண்ட காந்தாமணி. ஹரியின் பாதத்தில் வைத்து வணங்கி எழுந்தாள்.

ஹரி திடுக்கிட்டு எழுந்தான். ''இதெல்லாம் என்ன காந்தாமணி? எழுந்திரு. நான் என்ன, சொல்லிக் கொடுக்கமாட்டேன் என்றா சொன்னேன்? ஆனால் எதற்கும் என் குருநாதரிடம் ஒரு வார்த்தை கேட்காமல் ஒப்புக் கொள்ளலாமா? இன்று திருச்சி கச்சேரி முடிந்ததும் ஊருக்குச் சென்று எல்லா விபரத்துக்கும் உங்களுக்கு எழுதுகிறேன்'' என்றான்.

உடனே காந்தாமணி கேட்டாள்: ''குருகூடாது என்றால்; நீங்கள் எனக்குச் சொல்லிக்கொடுத்த மாட்டீர்கள் இல்லையா?''

''எப்படியாவது உனக்கு நான் பாட்டுச் சொல்லிக் கொடுக்க முயற்சி செய்கிறேன்; போதுமா?''

''முயற்சி செய்தால் போதாது. நிச்சயமாகச் சொல்லித் தரவேண்டும்.''

''சத்தியம் வேண்டுமானால் செய்து தரட்டுமா''. ஹரியினுடைய இந்த வார்த்தைகளைக் கேட்டதும் காந்தாமணியின் உள்ளத்தில் நம்பிக்கையும், அதே சமயம் நாணமும் படிந்து அவளது முகம் குங்குமம் போல் சிவந்தது.

ஹரி, சுவரிலிருந்த கடிகாரத்தை ஏறிட்டுப் பார்த்ததும், ''சத்திரத்துக்குப் போய் சாமன்களை எடுத்து கொண்டு புறப்படுவதற்குத்தான் நேரம் இருக்கும் போலிருக்கிறது'' என்று புறப்பட்டான்.

காந்தாமணியின் தாயார் ஒரு பையில் தட்டிலிருந்த சாமான்களை யெல்லாம் போட்டுக் காரில் கொண்டு வந்துவைத்து, டிரைவரிடம், ''இவரைக் கூட இருந்து பத்திரமாக ரெயில் ஏற்றிவிட்டு வா, கோபால்'' என்று உத்தரவிட்டாள்.

கார் புறப்படும்போது காந்தாமணி வாசற்படிவரை வந்து வழி அனுப்பினாள்.

சத்திரத்திலிருந்த பெட்டி படுக்கைகளை எல்லாம் கோபால் காரில் ஏற்றிவிட்டான். தம்பூராவைக் கையில் எடுத்துக்கொண்டு அறையைப் பூட்டப்போன ஹரி மறுகணம் திடுக்கிட்டுத் திரும்பினான். வாசற்படியினருகில் பக்கிரி நின்றுகொண்டிருந்தான்.

''இங்கே எங்கே வந்தாய்?'' என்று ஹரி சற்று அதிருப்தியோடு கேட்டான்.

''மாரியம்மன் கோவிலுக்கு வந்தேன். அப்படியே உன்னை அக்காவும் பார்த்துட்டு வரச் சோல்லிச்சு. பாத்துட்டுப் போகலாம்னும் வந்தேன்.''

''நான் இங்கே இருக்கேன்னு உனக்கு யார் சொன்னது?''

''ஒருத்தர் சொல்லணுமா? மானேஜர் ரூம்மே போய் போர்டைப் பார்த்தா, தானே வந்துபோனவங்க பேரு தெரியுது. இங்கே இல்லேன்னா திருச்சிக்குப் போயிட்டேன்னு நினைச்சுக்கறேன்.''

''ஓகோ, அதுவுங்கூட உனக்குத் தெரியுமா? ஆமாம், கச்சேரியை எண்ணிக் கொண்டிருந்தால்தானே பங்கு வாங்க முடியும்? ஏராளமாய்ச் செலவு செய்து என்னை இந்த நிலைக்குக் கொண்டு வந்தவர்கள் இல்லையா!''

''இந்தா ஹரி, நீ இப்படி ஏதோ எனக்கு இனாம் கொடுக்கிறாப் போலே ஒவ்வொரு வாட்டியும் பேசற தானா, இந்த வசூல் பண்ற வேலை எனக்கு வேணாம். முடியாதுன்னு அக்காகிட்டேயே கண்டிச்சுச் சொல்லிப் பிடறேன். ஏதோ அது சாப்பாட்டுக்கு இல்லேன்னு சொல்லி அனுப்பிச்சு; நான் வந்தேன்,''

''மாமா, இப்படி நீ என்னிடம் பேசுவதால் ஒரு பிரயோசனமும் இல்லை. கச்சேரிக்குப் போய்ப் பாடு வதற்கு முன்னாலேயே பணத்துக்கு வந்து நின்றால் நான் எங்கே போவேன்? மாரியம்மன் கோயிலில் நான் பணத்துக் காகப் பாடவில்லை; பிரசாதத்துக்குத்தான் பாடினேன். அது எனக்குப் பணத்துக்கு மேலே பெரிசு. வீட்டிலே பசி என்றால் இந்தப் பழங்களையெல்லாம் சாப்பிடட்டும், கச்சேரிக்குப் போய் வந்த பிறகு வா; ஏதாவது தருகிறேன். இப்போது என்னிடம் காலணா கிடையாது'' என்று கூறிக் கொண்டே ஹரி, காந்தாமணி வீட்டில் கொடுத்த பழங்களை எல்லாம் பக்கிரி நீட்டிய துண்டில், ''இந்தா'' என்று தலைகீழாகக் கொட்டினான்.

ஆனால் அதே சமயம், பையிலிருந்த அந்தப் பழங்க ளுக்கு மத்தியிலிருந்து, இரண்டு நூறு ரூபாய் நோட்டுக்

களும் சேர்ந்து விழவே, பக்கிரி லபக்கென்று பணத்தைக் கையில் எடுத்துக் கொண்டான்.

''தம்பி, நீ பெரிய ஆளப்பா! கைநிறையப் பணத்தை வெச்சுக்கிட்டுத்தானே, இப்போ என்கிட்டே காலணாகூடக் கிடையாதுன்னு பொய் சொன்னே. பரவாயில்லே, கோயில்லே இருநூறு ரூபாய் கொடுத்திருக்காங்களே'' என்று பக்கிரி கூறிக் கொண்டிருக்கும்போதே, காரிலிருந்த கோபால், ரெயிலுக்கு நேரமாகிவிட்டதை அறிவிக்க வண்டியிலிருந்தபடி 'ஹார்ன்' அடித்தான். ஆனால் இதொன்றும் காதில் விழாமல் சிலைபோல் ஹரி அப்படியே பிரமித்து நின்று கொண்டிருந்தான்.

## 26. நல்ல முடிவு

திருச்சிக்குப் போகிற வழியெல்லாம் ஹரி காந்தா மணியைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தான். அது அவனுக்கே ஆச்சரியமாகத் தோன்றியது. மானின்மிடுக்கும், மயிலின் ஒயிலும் கூடிய காந்தாமணியின் நளினம் அவன் கருத்தைக் கவர்ந்து ரசிகத் தன்மையைத் தூண்டிவிட்டது. வசந்தியிடமும் சுசீலா விடமும்-ஏன், அவன் சந்தித்த மற்ற எந்தப் பெண்களிடமும் கண்டறியாத—ஏதோ ஒருவிதக் கவர்ச்சி அவனை அவளிடம் இழுத்தது.

காந்தாமணிக்குப் பாட்டுச் சொல்லிக்கொடுக்க, குருநாதர் அநுமதிக்கிறாரோ இல்லையோ என்கிற பெரும் கவலை அவன் மனத்தில் எழுந்தது. ஆனால் அதையும் மீறி எப்படியாவது காந்தாமணிக்குப் பாட்டுச் சொல்லிக் கொடுத்தே ஆகவேண்டும் என்ற நிலை ஏற்பட்டுவிட்டதை அவன் எண்ணிப் பார்த்தான்.

பையில் பழத்தைப் போட்டு நிரம்பிக் கொடுத்தவர் கள்; அதில் இத்தனை பணத்தையும் போட்டிருப்பார்கள் என்று யார் எதிர்பார்த்திருப்பார்கள்? ஒரு வேளை அந்தப் பணம் தவறுதலாகப் பழத்துடன் வந்துவிட்டதோ? அப்படி இருந்தால அது திருப்பிக் கொடுக்க வேண்டிய பணம் அல்லவா? தெரியாமல், இப்படிப் பக்கிரியின் முன் பையைத் தலைகீழாகக் கொட்டி; திருட்டுப் பயலின் வாயால் திருட்டுப் பட்டம் வேறு வாங்கிக் கட்டிக் கொள்ளும்படி ஏற்பட்டுவிட்டதே என்று மனம் வருந் தினான்.

சங்கீதம் கற்றுக் கொள்வதற்கென்று ஒரு முறை தன் குருநாதருடைய வீடு தேடி வந்து அவர்கள் அடைந்த ஏமாற்றத்தை - ஏன், ஒரு வகையில் அதை அவமானம் என்றுகூடச் சொல்லலாம் - அவன் மறக்கவில்லை. ஆனால் இத்தனை செல்வமும் அந்தஸ்தும் இருந்தும் அவர்கள் அதைப் பெருந்தன்மையோடு மறந்துவிட்டனர். இல்லா விட்டால் பாகவதருடைய சிஷ்யனான அவனைக் தேடிக் கொண்டு, மகளுக்காக அம்மா சத்திரத்துக்குத் தூதுவர இசைவாளா?

'சுசீலாவுக்கும் வசந்திக்கும் பாட்டுச் சொல்லிக் கொடுப்பது தவறு இல்லையானால்; காந்தாமணிக்குச் சொல்லிக் கொடுப்பது மட்டும் தவறாகிவிடுமா? ஆனால் இத்தனைக்குப் பிறகு அதை மீறுவது எப்படி? எனவே காயத்திரியுடன் ஆலோசித்து வேறு ஏற்பாடு செய்து விட்டு, காந்தாமணிக்கு ஒரு நல்ல நாளில் பாடம் ஆரம் பித்துவிட வேண்டியது தான்' — என்று ஓடுகிற ரெயிலில் அவன் மனம் ஒரு முடிவுக்கு வந்தது.

திருச்சியிலிருந்து திரும்பிய ஹரி நேராக சுவாமி மலையில் இறங்கினான். அப்போது ஏதேச்சையாகக் காயத்திரி மட்டுமே இருந்ததனால், ஹரிக்கு மிகவும் சௌகரியமாகப் போய்விட்டது. சுசீலா, அம்மாவுடன் டாக்டர் வீட்டுக்குச் சென்றிருந்தாள்.

ஹரி மூன்று நாள் கச்சேரி விஷயங்களையும் சொல்லி, காந்தாமணியைச் சந்தித்த விதத்தையும் விளக்கினான்.

''அவர்களுக்குப் பணத்தைப் பற்றிக் கவலை இல்லை. எத்தனை ரூபாய் கேட்டாலும் கொடுப்பார்கள். நான் ஊரில் இருக்கும்போது மட்டும் போய்ப் பாடம் எடுத் தால் போதும். மிகவும் அடக்கமான மனிதர்கள். ஏதோ நம்முடைய அப்பா பாணியில் அவர்களுக்கு அப்படி ஓர் ஆர்வம். முதல் நாளோ அர்த்தமில்லாமல்

பழத்தையும் பணத்தையும் பையில் கொட்டிக் கொடுத்து அனுப்புகிறார்கள். ஆனால் பாவி பக்கிரிதான் எங்கிருந்தோ எமன் மாதிரி வந்து எனக்கே தெரியாமல் இருந்ததைத் தட்டிக் கொண்டு போய்விட்டான்'' என்று காந்தாமணியைப் பற்றின விவரங்களைச் சொன்னான்.

உடனே காயத்திரி, ''பக்கிரியை எதற்காக அநாவசியமாகத் திட்டுகிறாய்? அவன் தனக்காகவா கேட்கிறான்? அவன் இல்லாவிட்டால், நீ, அல்லவா ஒவ்வொரு தடவையும் ஊருக்குப் போக வேண்டியிருக்கும்?'' என்று கூறினாள். ஹறி பதில் பேசவில்லை.

பிறகு ஹறிக்கு அவளே ஒரு யோசனை சொல்லிக் கொடுத்தாள். ''காந்தாமணியின் பெயரை எடுத்தால் மறுபடியும் அப்பா மறுக்கலாம். ஆகவே யாரோ ஒரு தஞ்சாவூர் மிராசுதாருக்கு - பெயர் கல்யாணராமன் என்று வேண்டுமானாலும் சொல்லு - டியூஷன் சொல்லிக் கொடுக்கப் போகிறேன் என்று சொல்லு. அப்பாவின் வைத்தியச் செலவு போகிற போக்கைப் பார்த்தால் வீடு, நகைகள் எல்லாவற்றோடு ஆளையும் சேர்த்து விழுங்கி விடும் போல் இருக்கிறது. சுந்தரியிடமிருந்து எவ்வளவு தான் பற்றிக் கொள்கிறது? அளவு இல்லையா? அப்பாவுக்கு அதுவே பெரிய பாரமாக மனத்தை உறுத்துகிறது. ஆனால் இதில், நீ அவருக்கு அநுசரணையாகத் தொழிலும் செய்கிற யோக்கியதை அடைந்துவிட்ட திருப்தியினால் தான், அவர் ஒரளவாவது மன நிம்மதியுடன் இருக்கிறார்'' என்று கூறினாள்.

ஹறி காயத்திரியின் புகழ் மாலைக்கெல்லாம் கழுத்தை நீட்ட விரும்பாதவன் போல், வேகமாகப் பஞ்சாங்கத்தைப் புரட்டிச் சௌகரியமான ஒரு நாளைத் தேர்ந்தெடுத்தான். அன்று வருவதாகத் தஞ்சைக்கும் கடிதம் எழுதிப் போட்டான்.

சற்றைக்கெல்லாம் கையில் மருந்துடன் ஆஸ்பத்திரியிலிருந்து சுசீலா வந்தாள். ஹரியைப் பார்த்ததும், ஊருக்குப் போய் வந்த விவரங்களை விசாரித்தபடியே தந்தையின் அறைக்குச் சென்றுவிட்டாள்.

''தஞ்சாவூர் விஷயத்தை மறந்து போய்க்கூடச் சுசீலாவிடம் மூச்சு விட்டு விடாதீர்கள்'' என்று ஹரி காயத்திரிக்கு ஞாபகப்படுத்தினாள்.

காயத்திரி சிரித்துக் கொண்டே, ''சரிதான்; நான் உன்னை எச்சரிக்கை செய்ய வந்தால், நீ எனக்குச் சொல்லிக் கொடுக்கிறாயா? சுசீலாவுக்கு மட்டும் அல்ல; வசந்தி, அப்பா, அம்மா எல்லாருக்குமே, காந்தாமணி—கல்யாணராமன்தான். இதை நன்றாக நீ ஞாபகத்தில் வைத்துக்கொள்; உளறிவிடாதே'' என்று கூறினாள்.

அப்பொழுது அங்கு வந்த சுசீலாவைப் பார்த்தபடி காயத்திரியிடம் ஹரி, ''அக்கா, எனக்குத் தஞ்சாவூரில் கிடைத்திருச்கிற புது டியூஷனைப் பற்றிச் சுசீலாவுக்குச் சொல்ல வேண்டாமா?'' என்று அவள் வயிற்றெரிச்சலைக் கிளப்பினான்.

''அதையெல்லாம் நான் சொல்லிக் கொள்கிறேன். அப்பா தூங்கி எழுவதற்குள் நீ சீக்கிரம் உன் குளியலை முடித்துவிட்டு வா; சீக்கிரம்'' என்று காயத்திரி அவனைத் துரிதப்படுத்திய போதே வெளியிலிருந்து லட்சுமியம்மாள் ''ஹரி எப்பொழுது ஊரிலிருந்து வந்தாய்? எல்லாம் சௌகரியமாக நடந்ததா?'' என்று கேட்டுக் கொண்டே உள்ளே நுழைந்தாள்.

உடனே ஹரியும், ''எல்லாம் உங்கள் ஆசிர்வாதத்தினால் நன்றாகவே நடந்தது அம்மா. திருச்சியில் கச்சேரிக்கு வந்த அத்தனை பேரும், ஐயாவைப் பற்றியே என்னிடம் பேசிக் கொண்டிருந்தார்கள். ஐயாவின் உடம்பைப் பற்றிக் கேட்டு, அவர்கள் எல்லாரும் மாய்ந்து

போனார்கள்'' என்று அவன் கூறிய போதே லட்சுமியம்மாளின் கண்களில் நீர் பளபளத்தது.

''ஆமாம். திருச்சிப் பக்கமெல்லாம் இவருக்கு ரொம்பப் பேர். 'பாகவதர் பாகவதர் என்று உயிரையே வைத்திருக்கிறார்கள்' என்று என்னிடம் வந்து எத்தனையோ தடவை சொல்லியிருக்கிறார்'' என்று லட்சுமியம்மாள் குரல் தழுதழுக்கக் கூறினாள்.

இதற்குள் பாகவதர் விழித்துக்கொண்டு இருமுகிற சப்தம் கேட்கவே, எல்லாரும் அருகில் சென்றனர். புதிதாக வாங்கி வந்த மருந்தை அவுன்ஸ் கிளாசில் ஊற்றிக் கொடுத்தாள் சுசீலா. ''ஆரஞ்சு வேண்டுமானால் உரித்துத் தரட்டுமா?'' என்று கேட்ட லட்சுமியம்மாளிடம், ''ஒன்றும் வேண்டாம். ஊரிலிருந்து ஹரி எப்போது வந்தான்? என்னை எழுப்பக்கூடாதோ?'' என்று குறைப் பட்டுக்கொண்டார் பாகவதர்.

அருகில் இருந்த ஹரியின் கையைப் பிடித்துக் கொண்ட வண்ணம், ''கச்சேரி எல்லாம் நன்றாக நடந்ததா ஹரி? தெப்பத்தில் ரொம்பக் கூட்டமோ?'' என்று பரிவுடன் விசாரித்தார்.

உடனே அருகில் இருந்த லட்சுமி, ''கச்சேரி எல்லாம் ரொம்பப் பிரமாதமாகப் பண்ணிவிட்டுத்தான் வந்திருக்கிறானாம். திருச்சியிலே கச்சேரிக்கு வந்த ஒவ்வொருத்தரும் உங்களைத்தான் விசாரித்தார்களாம். 'குருவினுடைய பாணி அப்படியே சொட்டுகிறதே' என்று புகழாதவர் இல்லையாம்'' என்று கூறும்போதே, ''அது ஒன்றுதான் நான் செய்திருக்கிற பாக்கியம்'' என்றார் பாகவதர்.

கையில் இருந்த அவுன்ஸ் கிளாஸை வாங்கி வைத்த லட்சுமியம்மாள், ''ஏன் பசி இல்லை என்கிறீர்கள்? ஹரி ஆசையோடு வாங்கி வந்திருக்கிறான். ஒரு பழம் உரித்துத் தருகிறேனா; தின்றால் என்ன?'' என்றாள்.

"ஹரி வாங்கி வந்ததா? கொடு கொடு. இதை ஏன் நீ முதலிலேயே சொல்ல வில்லை?" என்றார்.

லட்சுமியம்மாள் சிரித்தபடியே, பழத்தை உரித்துக் கொடுத்துக்கொண்டே கூறினாள்; "இது மட்டுமல்ல; இனிமேல் உங்களுக்கு அடிக்கடி வெற்றிலை போடத் தஞ்சாவூர் வண்ணாத்திச் சீவலும், எங்களுக்கு முந்திரிப் பருப்பும் கிடைக்கும். ஹரிக்குத் தஞ்சாவூரில் ஒரு பெரிய மிராசுதார் வீட்டுப் பிள்ளை சிஷ்யனாகக் கிடைத்திருக் கிறானாம். பாடத்துக்குப் போகும்போதும் வரும்போதும் வாங்கி வரலாம் அல்லவா? என்று கூறினாள்.

இதைக் கேட்டதும் பாகவருக்கு ஆனந்தம் தாங்க வில்லை. "அப்படியா, பலே பலே! விஷயத்தை இரண்டு பேருமாகக் கொஞ்சம் கொஞ்சமாகத்தான் அவிழ்த்து விடுகிறீர்கள். ஆமாம், மிராசுதாரருக்குத் தஞ்சாவூரே தானா, இல்லை. அங்கிருந்து பக்கத்துக் கிராமமா? உனக்கு எப்போதெல்லாம் வரச் சௌகரியப்படும் என்று சொல்லிவிட்டாயா? இது என்ன ஆரம்பப் பாடமா, அல்லது ஏற்கனவே கொஞ்சம் பரிச்சயம் உண்டா?" என்று கேள்விகளை ஒன்றன்மேல் ஒன்றாகக் கேட்டார்.

ஹரிக்குக் குருவிடம் பொய் சொல்ல வேண்டியிருக் கிறதே என்ற வேதனை உள்ளூற இருந்தாலும். வேறு வழி இல்லையே என்ற உணர்வுடன் அத்தனை கேள்வி களுக்கும் தயங்காமல் பதிலளித்தான். ஆனால் காயத்திரி கூறியிருந்ததுபோல், காந்தாமணி கொடுத்த இருநூறு ரூபாயைப் பற்றி மட்டும் பிரஸ்தாபிக்கவே இல்லை.

எல்லாவற்றையும் கேட்ட பிறகு பாகவதருக்கு நம்பிக்கை பலமாக விழுந்தது. "ஹரி எப்படியும் பிழைத்

துக்கொள்வான். அதற்கு வேண்டிய உழைப்பும் சாமர்த்தியமும் அவனிடம் இருக்கின்றன. மனிதர்களிடம் எப்படிப் பக்குவமாக நடந்துகொண்டு அவர்களைக் கவர வேண்டும் என்ற கலையும் அவனுக்குக் கைகூடியிருக்கிறது. மிராசுதாரர் என்ன, ஜமீன்தார் என்ன, பெரிய பெரிய மகாராஜாக்களே அவனைக் கூப்பிட்டு அனுப்பிக் கௌரவிக்கப் போகிறார்கள். எல்லாம் தெய்வ சங்கல்பம். ஏதோ ஹரி மலைமேல் விளக்குப் போல் பிரகாசித்தால், அதை ஏற்றி வைத்த பெருமை ஒன்றுதான் என்னுடையது'' என்று கண்களை மூடிக்கொண்டு பாகவதர் மனத்துக்குள்ளேயே மகிழ்ந்து கொண்டிருந்தார். அந்த மகிழ்ச்சியிலேயே உறங்கிப் போனார்.

ஊருக்கு வந்ததும், காந்தாமணிக்குப் புறப்பட்டு வருகிற தேதியைக் குறிப்பிட்டு எழுதிய கடிதத்திலேயே, வேறொரு முக்கியமான விஷயத்தையும் எழுதியிருந்தான் ஹரி. அது வேறொன்றும் அல்ல; ''எந்த விதமான பதில் கடிதமும் நீ சுவாமி மலைக்கோ எனக்கோ எழுத வேண்டாம்'' என்பதுதான். அதன்படி தன் கடிதத்துக்குப் பதில் வராது என்பது அவனுக்குத் தெரிந்திருந்தாலும், 'போட்ட கடிதம் போய்ச் சேர்ந்திருக்குமா?' என்ற புதுக் கவலை ஏற்பட்டது.

வீட்டை விட்டு வெளியே போக நேரும்போதெல்லாம், 'நாம் இல்லாதபோது காந்தாமணியிடமிருந்து பதில் கடிதம் ஏதாவது தவறுதலாக வந்து விடுமோ?' என்று மனம் தவித்தது. ஆனால் ஹரியின் இந்தக் கவலைகள் யாவும் காந்தாமணியின் வீட்டுக்குள் நுழைந்ததுமே தீர்ந்து போயின.

காந்தாமணியும் அவள் தாயும் ஹரியைக் கண்டதும் மிக்க அன்புடன் வரவேற்று உபசரித்தனர். கடிதம் கிடைத்ததையும், பதிலுக்கு நன்றி தெரிவிக்கக்கூட வழியில்லாமல், அதில் தங்களுக்குத் தடை உத்தரவு பிறப்பித்திருந்ததையும்

சுட்டிக் காட்டிக் காந்தாமணி பெரிதாகக் குறைப்பட்டுக் கொண்டாள். ஆனால் அதற்கெல்லாம் ஹரி தக்க பதில் கூறி அவர்களைச் சமாதானப் படுத்தினான்.

''குருநாதருக்குத் தெரியாமல் என் ஆயுளில் இதுவரை நான் எந்தக் காரியத்தையும் செய்தவன் அல்ல. ஆனால் உங்களுடைய அன்பையும், காந்தாமணியின் இசை ஆர்வத்தையும் என்னால் ஒதுக்கித் தள்ளமுடியாமல்தான்; நான் இந்தக் காரியத்துக்கு உடன் பட்டேன்'' என்று ஹரி கூறிய போதே காந்தாமணியின் தாய் குறுக்கிட்டு, ''ஆமாம், ஆமாம்; எங்களுக்குக் கூட ஒரே கவலையாகத்தான் இருந்தது. ஊருக்குப் போய் யோசித்துச் சொல்லுகிறேன் என்று கூறிவிட்டீர்களே; அங்கே போனால் பாகவதர் என்ன சொல்கிறாரோ என்ற பயந்தான். உங்களையும் தடுத்து விடாமல் இருக்க வேண்டுமே என்று நானும் காந்தா மணியும் அம்பாளை வேண்டிக்கொண்டே இருந்தோம்'' என்று ஒரே மூச்சில் கூறி நிறுத்தினாள்.

''நீங்கள் கவலைப்பட்டதும் நியாயம்; அத்துடன் வேண்டிக் கொண்டதும் வீண் போகவில்லை. நான் என் குருவிடம் உண்மையைக் கூறி ஒரு வேளை அவர் என்னைத் தடுத்துவிட்டால், பிறகு என்னால் அவருடைய வார்த்தையை மீறிக் கொண்டு வர இயலாது. ஆகையால் காந்தாமணியைப் பெரிய மிராசுதார் வீட்டுப் பிள்ளையாக —கல்யாணராமனாக்கி அவரிடம் அநுமதி கேட்டேன். உங்கள் பிரார்த்தனை பலன் தந்துவிட்டது. வந்து விட்டேன்'' என்று ஹரி கூறினான்.

''எனக்காக நீங்கள் இவ்வளவு சிரமம் எடுத்துக் கொண்டதற்கு நான் மிகவும் கடமைப் பட்டிருக்கிறேன்'' என்று காந்தாமணி நன்றி தெரிவித்தாள்.

ஹரி எதையோ நினைத்துக் கொண்டவன் போல், ''ஆமாம், உங்களிடம் வந்ததுமே ஒன்று கேட்க வேண்டு

மென்று இருந்தேன். அன்று பழங்களுடன் இரண்டு நூறு ரூபாய் நோட்டுகள் தவறுதலாக என் பைக்குள் வந்து விட்டன. இந்தாருங்கள்'' என்று சட்டைப் பையிலிருந்து எடுக்கப் போனபோதே காந்தாமணியின் தாய் தடுத்துக் கூறினாள்.

''தவறுதலாக ஒன்றும் ஏற்பட்டுவிடவில்லை. நானே தான் தட்டில் பழங்களுடன் அதை உங்களுக்காக வைத்திருந்தேன். நீங்கள் அதைத் திருப்பித்தரக் கூடாது; இது காந்தாமணியின் விருப்பம்'' என்று கூறினாள். ஹரி மறுக்கவில்லை.

மாடியில் இருந்த பெரிய ஹாலில் விரிக்கப்பட்டிருந்த ரத்தினக் கம்பளத்தில் அழகான தம்பூரா ஒன்று படுத்துக் கிடந்தது. பக்கத்தில் இருந்த, ரவிவர்மா தீட்டிய பெரிய சரஸ்வதி படத்துக்கு அழகிய ரோஜாப்பூ மாலை போட்டிருந்தது. எதிரே இருந்த தட்டில், உதிரி மலர்கள், வாசனைச் சந்தனம், குங்குமம், கர்ப்பூரம், ஊதுவத்தி, அவல், பொரிகடலை, நாட்டுச் சர்க்கரை, பழ வகைகள் எல்லாம் நிவேதனத்துக்குத் தயாராக இருந்தன.

ஹரி பூஜைக்கு வேண்டிய சாமான்களை ஒழுங்காக எடுத்து வைத்துக் கொண்டான். பாகவதர் சொல்லிக் கொடுத்தது போல, பூஜையை முறையாகச் செய்தான். பண்டிகை நாளைப்போல காந்தாமணியும் அவள் தாயும் அதிகாலையிலேயே குளித்துப் புத்தாடை உடுத்து மிகுந்த பக்தியோடு காணப்பட்டனர். தனக்கும், சங்கீத வித்தைக்கும் அவர்கள் எவ்வளவு மதிப்பும் கௌரவமும் காட்டுகிறார்கள் என்பதை அவன் மனம் நன்கு உணர்ந்தது.

ஹரி தம்பூராவைக் கையிலெடுத்துப் பார்த்தான். அது பிரமாதமான தந்த வேலைப்பாடுகள் கொண்ட

புத்தம் புதிய திருவனந்தபுரம் தம்பூரா. ஒரு முறை மீட்டினான். அது அவனுடன் மலையாளத்தில் கொஞ்சுவதுபோல் இருந்தது.

"பாகவதர் சாரே! ஞான் ஜெனிச்சப் பின்னீடு, வித்வான்மாராயிட்டு, நிங்கள் கையில் தன்னெயாணு ஆத்யமாயிட்டு வன்னிட்டுள்ளது; அது என்றே பாக்யம். நவ்லதாயிட்டு கல்யாணியில் ஒரு பாட்டுப் பாடணும்; என்றே செவிகொண்டு கேள்கட்டே."

"ஓ! அங்ஙனே தன்னே ஆகட்டே" என்று சிரித்துக் கொண்டே தனக்குத் தெரிந்த அரைகுறை மலையாளத்தில் பேசியபடி ஹரி தம்பூராவைக் கீழே வைத்தான்.

அவன் அங்குள்ள எல்லாப் படங்களுக்கும், வாத்தியத்துக்கும் தீபாராதனை காட்டிவிட்டுக் கர்ப்பூரத் தட்டைக் கீழே வைத்தான். அவசரமாகக் கண்ணில் ஒற்றிக்கொண்ட காந்தாமணியின் தாய் வேலையைக் கவனிக்க வேகமாகக் கீழே இறங்கிச் சென்றாள்.

ஹரி தம்பூராவை எடுத்துச் சுத்தமாகச் சுருதி சேர்த்துக் காந்தாமணியிடம் நீட்டினான். அதை அவள் எழுந்து நின்று தொழுது இரு கரங்களாலும் வாங்கிக் கண்களில் ஒற்றிக் கொண்டாள். புதிய அவளுடைய நோட்டுப் புத்தகத்தைக் கையில் எடுத்து ஓரத்தில் மஞ்சள் குங்குமம் தடவினான் ஹரி.

பிறகு, "உனக்கு எத்தனை வர்ணம் பாடம் ஆகியிருக்கிறது?" என்று கேட்டான்.

"பத்துப் பதினெட்டு வர்ணங்கள் வரைத் தெரியும். கீர்த்தனைகள் சுமார் முப்பது வரும்."

"அடேயப்பா! இவ்வளவு பாடம் ஆகியிருக்கிறதா? என்னென்ன வர்ணங்கள் தெரியும்?"

காந்தாமணி பழைய பாட்டுப் புத்தகத்தை எடுத்து நீட்டினாள். அதில் வரிசைப்படி அட்டவணையில் இருந்த ராகங்களின் பெயர்களைப் பார்த்துவிட்டுப் புதிய வர்ணம் ஒன்றின் பல்லவியை எழுதி அவள் கையில் கொடுத்தான்.

அதை அவன், இரண்டு மூன்று முறை தம்பூராவை மீட்டிக் கொண்டே பாடிக் காண்பித்தான். காந்தாமணி மறு தடவை ஹரி சொல்லிக் கொடுத்ததை அப்படியே துளியும் அப்பழுக்கின்றிப் பளிச்சென்று பாடினாள்.

அவன் முகம் மகிழ்ச்சியால் மலர்ந்தது. பிறகு அநுபல்லவியையும் சிட்டாஸ்வரத்தையும் சொல்லிக் கொடுத்தான். அதைப் பாடம் செய்யச் சொல்லிவிட்டுக் காந்தாமணியைப் பழைய வர்ணம் ஒன்றைப் பாடச் சொன்னான்.

அவள் கணீரென்ற குரலில் கானடா வர்ணத்தை இரண்டு காலம் பாடி நிறுத்தினாள்.

''ஏதாதது ஒரு ராகம் பாடிக் கீர்த்தனை பாடு.''

காந்தாமணி உதட்டைப் பிதுக்கினாள்.

''ஏன்?''

''.........''

''ராகம் பாட வராதா?''

''ஊஹூம்.''

''அதைச் சொல்வதற்கென்ன? கீர்த்தனை பாடு.''

இரண்டு நாள் கச்சேரியிலும் ஹரி பாடிய 'ஹரிஸ்மரணே மாடோ நிரந்தர' என்னும் அதே கீர்த்தனையைக் காந்தாமணி மிகவும் அழகாகப் பாடினாள். அதைக்கேட்டு அவன் பிரமித்தே போனான். தன்னைவிட மிகவும் அழகா

கவும் இனிமையாகவும் அந்தப் பாட்டை அதிக மெருகுடன் அவள் பாடிவிட்டதைக் கண்டு அவனால் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

அவன் அவளிடமிருந்து தம்பூராவைக் கையில் வாங்கிக் கொண்டான். ''பிரமாதமாகப் பாடிவிட்டாயே! எங்கே, அந்தச் சங்கதிகள் எனக்குப் பேசுகின்றனவா என்று பார்க்கிறேன்'' என்று அந்தப் பாட்டை மீண்டும் புதிய கற்பனையில் அவள் பிடித்த பிடிகளையும் மீறி பாடிப் பார்த்தான்.

'பெரிய சங்கீத வித்துவான்களிடம் பழகுவது மிகவும் கஷ்டம், அவர்களிடம் ஒவ்வொரு வார்த்தையையும் ஜாக்கிரதையாக எண்ணிப் பேச வேண்டும்; எதிராளியின் ஒவ்வொரு செய்கையையும் அவர்கள் உரைக்கல்லில் போட்டுப் பார்ப்பார்கள்' என்று தாயார் கூறும் சொற்கள் அவள் நினைவுக்கு வந்தன. 'நான் எதேச்சையாக அவர் பாடிய பாட்டைப் பாடியதை அவர் தவறாக எடுத்துக் கொண்டு, என் மூக்கை அறுப்பது போல் மறுபடியும் பாடிக் காட்டி என் தலையில் குட்டினாரோ!' என்று எண்ணிக் கண்கலங்கினாள் காந்தாமணி. பூனை அவள் முகத்தையே பரிதாபமாகப் பார்த்துக் கொண்டிருந்தது.

''நான் ஏதாவது தவறுதலாக நடந்து கொண்டால் என்னை மன்னியுங்கள்'' என்று அவள் அவனை நோக்கிக் கூறியதைக் கேட்டதுந்தான் அவனுக்கே அது புரிந்தது.

''உன் மனத்தை வருத்த வேண்டுமென்று நான் அந்தப் பாட்டைப் பாடவில்லை. நீ பாடிக் கேட்டதும் ஏதோ ஓர் ஆர்வத்தில்; உன்னைப்போல் பாட வேண்டுமென்ற ஆசையில் அப்படிச் செய்துவிட்டேன். வேறு ஒன்றும் வித்தியாசமாக எண்ணிக் கொள்ளாதே'' என்று அவளுக்கு

ஆறுதலாகவும், சமாதானம் செய்கிற தோரணையிலும் அவன் கூறினான்.

இதைக் கேட்டதும் காந்தாமணிக்கு வியப்பு இன்னும் அதிகமாகிவிட்டது. ''சரிதான், நன்றாக இருக்கிறது, நீங்கள் பேசுவது! உங்கள் மனத்துக்கு ஆயாசம் அளித்து விட்டேனா என்று மன்னிப்புக் கேட்க நான் அல்லவா துடித்துக் கொண்டிருக்கிறேன்?'' என்று அவள் கூறியதும் இருவரும் சேர்ந்து கலகல வென்று சிரித்தனர்.

அந்த ஒலியைக் கேட்டுக் கீழே இருந்த காந்தா மணியின் தாய் வேகமாக மாடியை நோக்கி வந்தாள்.

## 27. திருமணப் பேச்சு

நாள்தோறும் நடக்கும் நிகழ்ச்சிகள் சந்தர்ப்ப விசேஷத்தால் அரிய நிகழ்ச்சிகள் ஆகிவிடுகின்றன அல்லவா? சுந்தரிக்கும் அவ்வாறே நேர்ந்தது.

பாகவதர் உடல்நலக் குறைவுற்றது முதல், அவரோடு அவள் தனித்துப் பேசவே முடியவில்லை. அவள் வருகிற நேரத்தில் யாராவது பாகவதரோடு இருந்து கொண்டே இருப்பார்கள். அவர்களுக்கு மத்தியில் அவள் என்ன பேச முடியும்? ஆனால் ஆரம் பத்தில் இதை அத்தனை பெரிய விஷயமாகக் கருதாத சுந்தரிக்கு; பேச வேண்டிய தேவை ஏற்பட்ட போது, அதுவே பெரிய விஷயமாகி விட்டது. மனம் விட்டுப் பேசக் கூட வாய்ப்பே இல்லாமல் போயிற்று.

வசந்தி—ஹரி, திருமண விஷயமாக அவள் ஜாடை மாடையாகப் பாகவதரிடம் குறிப்பிட்டிருக்கிறாள். பாகவதரும் அதை நல்ல ஏற்பாடென்றே ஆமோதித் திருந்தார். ஆனால் அதற்காக எந்த முயற்சியையும் அவர் மேற்கொள்ளவில்லை.

இப்போது அதுபற்றி மீண்டும் பேச்சு வார்த்தைகளைத் துவக்கி, விரைவிலேயே முடிவு கண்டுவிட வேண்டுமென்று சந்தர்ப்பத்தை சுந்தரி ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். அந்த எதிர்பாராத வாய்ப்பு அன்று அவளுக்குக் கிட்டியது.

வீட்டுக்குள் நுழைந்த சுந்தரியைக் கண்டதும் லட்சுமியம்மாளுக்கு மிகவும் சந்தோஷமாகப் போய் விட்டது.

''பாபுராஜபுரத்தில் ஒரு முக்கியமான கல்யாணம், சுந்தரி. எப்படிப் போவது; காயத்திரியையாவது விட்டுத்தான் போக வேண்டும்போல் இருக்கிறதே என்று எண்ணிக் கொண்டிருந்தேன். நல்ல சமயத்தில் நீ வந்து சேர்ந்தாய். பார்த்துக்கொள். சாயங்காலம் வந்துவிடுகிறோம்'' என்று சொல்லி எல்லாரையும் அழைத்துக் கொண்டு லட்சுமியம்மாள் புறப்பட்டுச் சென்றாள்.

'தெய்வந்தான் இவர்களை வெளியில் அனுப்பி வைக்கிறது' என்று எண்ணியபடி சுந்தரி பாகவதரின் அறைக்குள் சென்றாள்.

'என்ன வந்தாலும் என்னை அசைக்க முடியாது என்று சொல்லிச் சொல்லி, அசைய முடியாமல் இப்படி ஒரேயடியாகப் படுத்துவிட்டீர்களே! தலைவலி, காய்ச்சல் என்று ஒரு நாள் போர்த்திக் கொண்டு படுத்துக் கிடக்க உங்களுக்குப் பிடிக்காதே!' என்று வாய்த்த தருணத்தில் சுந்தரி, தன் மனத்தில் உள்ள துயரத்தையெல்லாம் வார்த்தைகளில் வடித்தாள்.

''ஓட்டைச் சட்டி போன்ற பொக்கையான உடம்போடு, மனிதனுக்கு இத்தனை கர்வம் கூடாது என்றுதான் பகவான் என் தலையில் ஒரு குட்டுக் குட்டியிருக்கிறார். இதற்கு வருத்தப்பட்டுப் பிரயோசனம் என்ன? லட்சுமி ஏதோ கல்யாணத்துக்கும் போக வேண்டும் என்று கூறியிருந்தாளே; போய்விட்டாளா?'' என்று கேட்டார் பாகவதர்.

''நீங்கள் தூங்கிக் கொண்டிருந்தீர்கள். எழுப்ப வேண்டாம் என்று என்னிடம் பார்த்துக் கொள்ளச் சொல்லி விட்டுப் போயிருக்கிறார்கள்.''

''காயத்திரிகூடவா இல்லை?''

''இல்லை. நம் இரண்டு பேரையும் தனியாக விட்டு விட்டு எல்லாரும் போய்விட்டார்கள்.''

''இரண்டு பேராய் இருக்கிறோம்? தனி என்கிறாயே!''

''ஆமாம். இன்னும் இடக்குக்கு ஒன்றும் குறைச்சல் இல்லை.''

''அது சங்கீதத்தோடு பிறந்தது; உடம்போடுதான் போகும். இப்படி நாம் உட்கார்ந்து பேசி எத்தனை நாளாயிற்று சுந்தரி?''

''ஆமாம், இப்போ நாளை எண்ணிக்கொண்டிருக்கிறேன்; அதற்குள் போனவர்கள் திரும்பி வந்துவிடுவார்கள். பேசவேண்டிய விஷயம் வண்டி இருக்கிறது. என்னவோ ஹரிகூட ஊரில் இல்லை போல் இருக்கிறது. எப்போது வருகிறானாம்?'' என்று சுந்தரி கேட்டாள்.

''உனக்குத் தெரியாதா? உன்னிடம் சொல்லிக் கொண்டு வந்ததாகச் சொன்னானோ!''

''தெரியும். தஞ்சாவூரில் யாரோ ஒரு மிராசுதார் வீட்டுப் பையனுக்குப் பாடம் ஆரம்பிக்கப் போவதாகச் சொன்னான்.''

''பின்னே என்ன? நேற்றுப் போனவன் ஒரு வழியாக அங்கேயே தங்கி இரண்டாம் நாள் பாடத்தையும் சொல்லிக் கொடுத்துவிட்டு வரலாம் என்று இருக்கிறானோ என்னவோ? இல்லாவிட்டால் அதற்கென்று ஒரு தடவை இங்கே வந்து மறுபடியுந்தானே போயாக வேண்டும்?'' என்று கூறிவிட்டு, ''கச்சேரிக்கெல்லாம் போய் வந்தானே; எல்லாம் எப்படி நடந்ததாம். விசாரித்தாயா?'' என்று சுந்தரியிடம் கேட்டார்.

''நான் விசாரிப்பானேன்? வந்தவுடனே அவன் அதைப்பற்றி என்னிடமும் வசந்தியிடமும் மிகவும் சந்தோஷமாகச் சொன்னான். போன இடத்தில் எல்லாரும் உங்களைப் பற்றியே விசாரித்தார்களாம். 'பாகவதரை

அப்படியே பயல் உரித்து வைத்திருக்கிறான்' என்று எல்லாரும் ஒவ்வொரு கச்சேரியையும் கேட்டு விட்டு மூக்கின் மேல் விரலை வைக்கிறார்களாம்.

"இதையும் அவனே பெருமையாக வந்து உன்னிடம் பீற்றிக்கொண்டானா?" என்று பாகவதர் சுந்தரியிடம் குறுக்கிட்டுக் கேட்டபோது அவருடைய குரலில் ஹரி ஏதோ குற்றம் செய்துவிட்டது போன்ற குறுகுறுப்புத் தென்பட்டது.

"நான் அப்படியா உங்களிடம் சொன்னேன்? ஹரிக்கு அப்படியெல்லாம் பேசத் தெரியுமா? எல்லாம் நம் ராஜப்பாவே வந்து சொல்லிவிட்டுப் போனார்" என்றாள் சுந்தரி.

இதைக் கேட்டதும் பாகவதருடைய உள்ளம் உண்மையிலேயே மகிழ்ச்சியால் நிறைந்தது. இசையுலகில் தம் புகழையும் பரம்பரையையும் நிலைநாட்டச் சரியான வாரிசைத் தேர்ந்தெடுத்துவிட்ட மனநிறைவு அவர் உடலெல்லாம் பாவோடியது. அந்த நிம்மதியையாவது அந்திம காலத்தில் தமக்கு அளித்த இறைவனுக்கு, அவர் இதயத்தினுள்ளேயே சிரம்தாழ்த்தி வணங்கினார்.

சுந்தரி அவரிடம் மெதுவாகக் கேட்டாள்; "இன்று உங்களிடம் ஒரு முக்கியமான விஷயத்தைப்பற்றிப் பேசலாம் என்று நினைக்கிறேன். கேட்கலாமா? இப்படி ஒரு சந்தர்ப்பத்துக்கு எத்தனை நாளாய்க் காத்துக் கொண்டிருந்தேன்?"

இந்த வார்த்தைகளைக் கூறியபோது சுந்தரியின் குரல் தழுதழுத்தது. பாகவதர் நீண்ட பெருமூச்சு விட்டார். பிறகு சுந்தரியைப் பார்த்துக் கூறினார்: நீ லட்சுமியைப் பற்றி இப்படித் தவறாக நினைத்துச் பேசுவாய் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை. அவளைப் போல்,

உன்னையும் என்னையும் புரிந்துகொண்டு நடக்கும் பெண்ணை இந்த உலகத்தில் பார்க்கவே முடியாது.''

''நீங்களும் இப்படி என் பேச்சைத் தவறாகப் புரிந்துகொண்டு பேசுவீர்கள் என்று நானும் எதிர்பார்க்க வில்லை. இப்போது நான் அக்காவைப்பற்றியா குற்றம் சொன்னேன்? ஏன் உங்களுக்கு நான் எது பேசினாலும் குற்றமாகப் படவேண்டும்.''

''பார்த்தாயா? இதிலிருந்தே தெரிந்துகொள். கடவுள் எல்லாம் நல்லதைத்தான் செய்வார் என்று. நாம் இரண்டு பேருமே சந்தித்து இரண்டு வார்த்தை தனியாகப் பேசிக்கொள்வதற்குள் உனக்குக் கோபம் வந்துவிட்டது. சண்டை வந்துவிட்டது. நீ தவறாகச் சொல்லவில்லை. ஏதோ வியாதிக்காரன், நானே உன்னைத் தவறாகச் சொல்லிவிட்டேன். கொஞ்சம் பொறுத்துக் கொள்ளக் கூடாதா?''

'எங்கே அன்பும் பாசமும் அதிகம் இருக்கின்றனவோ, அங்கேதான் சண்டையும் துக்கமும் இருக்கும் என்பார்கள். அது எனக்குத்தான் சரியாக இருக்கிறது' என்று எண்ணிக் கொண்ட சுந்தரி வாயைப் பொத்திக் கொண்டு சப்தம் வெளியே வராதபடி முயற்சி செய்தாள். பாகவதர் அருகில் இருந்த அவளுடைய தலையை அன்புடன் தடவிய படியே கூறினார்: ''நீ இன்னும் பச்சைக் குழந்தையாகவே தான் இருக்கிறாய், சுந்தரி. அன்றையிலிருந்து இன்றுவரை அதே சுபாவம், அதே போக்கு, அதே குணம். பெண்ணுக்குக் கல்யாணம் செய்ய வேண்டிய வயது வந்த பிறகுங்கூட நீ இன்னும் அதே பழைய சுந்தரியாகவே இருக்கிறாய். துளியும் மாறுதல் இல்லை.''

பாகவதருடைய இந்த வார்த்தையைக் கேட்டதும் சுந்தரிக்குச் சட்டென்று நினைவுக்கு வந்தது. கண்களைத் துத்டைதுக் கொண்டு, முகத்தைச் சற்றுத் தெளிவாக்கிக்—

கொண்டாள். ஆனால் அவள் பேசுவதற்குள் பாகவதர் கேட்டார்; ''என்னவோ முக்கியமான விஷயம், தனியாகப் பேச வேண்டும் என்று சொன்னாயே! இந்த அழுகையைப் பற்றித்தானா?''

சுந்தரி சிரித்துவிட்டாள். ''ஆமாம். இந்தக் கிண்டலுக்கு ஒன்றும் குறைச்சல் இல்லை.''

''பின் எதில்தான் எனக்குக் குறைச்சல்? அதையாவது சொல்லு, கேட்கிறேன்.''

''இரண்டு பெண்களைப் பெற்று வைத்துக் கொண்டிருக்கிறீர்களே, அவர்களுடைய கல்யாணத்தைப் பற்றிக் கொஞ்சமாவது உங்களுக்குக் கவலை இருக்கிறதா?''

''எல்லாம் நீங்களே சொல்லுங்கள்; நீங்களே கேளுங்கள்.—'இனி ஒன்றைப் பற்றயும் நான் கவலைப் பட்டு அலட்டிக் கொள்ளக்கூடாது' என்று நேற்றுவரை நீங்கள் எல்லாரும் டாக்டரோடு கூடிக் கூடிப் பேசினீர்கள்; எனக்கு உபதேசமும் செய்தீர்கள். இன்று மனுஷன் கொஞ்சம் கண்ணைத் திறந்தவுடன், 'கவலைப் படவே இல்லையே'—என்று கேட்கிறீர்கள். இனிமேல் நீ என்ன; படைத்த பிரும்மா வந்து சொன்னாலும்கூட என்னால் எதற்காகவும் கவலைப்பட முடியாது. கவலைகளுக்கும் ஒருவழியாக நான் மங்களம் பாடி விட்டேன், பெண்களுக்கு வரன் இனிமேலா பிறக்கப் போகிறார்கள்? நீதான் வசந்தியின் விஷயத்தை ஒருவழியாக முடித்து விட்டாய். இனிமேல் சுசீலா ஒருத்திதானே? அவள் பெரிய வீராங்கனை. அவளுக்குப் புருஷனைப்பார்த்துக் கல்யாணம் பண்ணி வைக்க எனக்குச் சாமர்த்தியம் போதாது. புருஷனை அவளேதான் தேர்ந்தெடுக்க வேண்டும்'' என்று கூறி மெல்லச் சிரித்தார்,

''ஆமாம், வசந்தியின் விஷயத்தை நான் என்னவோ முடித்துவிட்டதாகச் சொல்லுகிறீர்களே! நான் என்ன முடித்துவிட்டேன்? உங்கள் அபிப்பிராயத்தைக் கேட்காமல் அது முடிவாகிவிடுமா?''

''என்னுடைய அபிப்பிராயத்தை அன்றே சொல்லி விட்டேனே. பெண்ணுக்கும் பிள்ளைக்கும் ஒருவரை ஒருவர் பிடித்துப் போய்விட்டால் சீக்கிரமே கல்யாணத்தை நடத்தி விட வேண்டியதுதான்,

இதைவிட ஹரிக்கு நாம் நல்லது வேறு எதுவும் செய்ய முடியாது. வசந்தியின் குணத்துக்கும் அறிவுக்கும் அவன் தான் புருஷனாக இருக்கத் தகுதியுடையவன். திருமணத் துக்குப் பிறகும் அவன் நம்மை விட்டுப் பிரிந்து போக முடியாது என்ற மகிழ்ச்சிதான் எனக்கு எல்லாவற்றையும் விடப் பெரிதாகப் படுகிறது'' என்று உணர்ச்சி பொங்கக் கூறி நிறுத்தினார்.

உடனே சுந்தரி, ''வசந்தியின் சம்மதத்தை நான் கேட்கவே வேண்டியதில்லை. நீங்கள் எனக்குப் பாட்டு சொல்லிக் கொடுக்க வந்து செய்த காரியத்தை அவள் ஹரியிடம் பாட்டுக் கற்றுக்கொண்டு செய்து வருகிறாள். வரவர அங்கே டியூஷனா நடக்கிறது? பாவம்! ஹரிதான் என்னவோ தொண்டை கிழியக் கத்திவிட்டுப் போகிறான். அவள், பாட்டைத் தவிர மீதி அரட்டையெல்லாம் அடித்துக் கொண்டிருக்கிறாள். அவனும் ஒரு நாளாவது அவளைக் கோபித்துக் கொண்டு, கண்டிக்கவோ திட்டவோ செய்வானாக்கும் என்று பார்க்கிறேன். அவன் வாயே திறப்பதில்லை'' என்றாள்.

''ஒரு வேளை இப்போதே பெண்டாட்டி தாசனாகி விட்டானோ என்னவோ? இருக்கட்டுமே அப்படியுந்தான் ஒரு ஜோடி!''

''தாராளமாய் இருக்கட்டுமே. நானா வேண்டாம் என்கிறேன்? லட்சுமி அககாவிடம் இந்த அபிப்பிராயத் தைச் சொன்னீர்களா?''

''இனிமேல் சொன்னால் போயிற்று. ஹரியும் இப் போதுதானே நாலு கச்சேரிக்குப் போய்க் காசு

சம்பாதிக்கிற நிலைக்கு வந்திருக்கிறான்? கையில் இருக்கிற பிள்ளை எங்கே போய்விடுவான்?''

''நான் இப்போதே எதையும் அவசரமாகச் செய்யச் சொல்லவில்லையே! நமக்குள் இப்படி ஓர் அபிப்பிராயம் இருக்கிறது என்பது மட்டும் தெரியட்டும் என்றுதானே சொல்கிறேன்?''

''அதைப் பற்றிக் கவலைப்படாதே. நானே சமயம் வாய்க்கும் போது லட்சுமியிடம் சொல்லி விடுகிறேன். அவளுக்கும் இந்த ஏற்பாடு மிகவும் சந்தோஷமாகத்தான் இருக்கும். ஹரியைப் பற்றிக் கேட்கவே வேண்டாம். நீ சொல்லுவதுபோல் நாம் எது சொல்றோமோ அதுதான் அவனுக்கு வேதவாக்கு'' என்று கூறிக் கொண்டிருந்த பொழுதே வாசற் கதவை யாரோ படபடவென்று தட்டினார்கள்.

சுந்தரி கதவைத் திறந்தாள். கையில் மருந்துப் பெட்டியுடன் குடும்ப டாக்டர் நின்றுகொண்டிருந்தார்.

''வாருங்கள்'' என்று சுந்தரி அவரை உள்ளே அழைத்துச் சென்றாள்.

பாகவதரின் உடலை பரிசோதித்த டாக்டர், ''ராத்திரி நன்றாகத் தூங்கினாரா?'' என்று கேட்டார். தெரிந்தோ தெரியாமலோ சுந்தரி தலையை ஆட்டி விட்டு, ''உடம்பு எப்படி இருக்கிறது டாக்டர்?'' என்று ஓர் எதிர்க் கேள்வியைக் கேட்டாள்.

டாக்டர் சுந்தரியைப் பார்த்து, ''பரவாயில்லை'' என்று கூறிவிட்டு, பிறகு பாகவதரைப் பார்த்துக் கூறினார்: ''நான் இப்படிச் சொல்லிவிட்டேனே என்று நீங்கள் படுக்கையில் எழுந்து உட்கார்ந்துகொண்டு பாட ஆரம்பித்து விடக் கூடாது. நீங்கள் இனிமேல்தான் மிகவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். வயிற்றில் புண் இருக்கிறது.

எந்தக் காரியத்துக்காகவும் மனத்தையோ உடம்பையோ அலட்டிக் கொள்ளக்கூடாது. மறுபடியும் 'அட்டாக்' வராமல் நீங்களே உங்களை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளவேண்டும்'' என்று எச்சரித்தார்.

''அதையெல்லாம் என்னிடப் சொல்லி என்ன செய்ய? இவர்களிடம் சொல்லுங்கள். எல்லாம் இவர்கள் கையில் தான் இருக்கிறது. சிரிப்பு மூட்டினால் சிரிக்கிறேன்; இவர்கள் அழ வைத்தால் அழுகிறேன். என்னைத்தான் எடுப்பார் கைப்பிள்ளையாகத் தெய்வம் முடக்கிப்போட்டு விட்டதே!'' என்றார் பாகவதர்.

''பார்த்தீர்களா? இப்போதுதானே நான் உங்களுக்குச் சொன்னேன்? இப்படி நமக்கு நேர்ந்துவிட்டதே என்று சற்று முன் கூறிய கவலை ஒன்று போதுமே உங்கள் உடல்நலனைப் பறிக்க? விரைவிலேயே நீங்கள் எழுந்து முன்போல் ஆகிவிடப் போகிறீர்கள்'' என்று ஆறுதலான வார்த்தை களைக் கூறுவிட்டு டாக்டர் விடைபெற்றுச் சென்றார்.

சுந்தரி டாக்டர் சென்ற திக்கையே பார்த்துக் கொண்டிருந்தாள். 'கணவருக்குப் பணிவிடை செய்ய இனி எப்போது சந்தர்ப்பம் கிட்டுமோ; அருகில் இருக்கக் கூடக் கொடுத்து வைக்கவில்லையே!' என்ற வருந்தம் சுந்தரிக்கு மேலிட்டது.

ஹரியின் கச்சேரி எங்கே நடந்தாலும் அங்கே அவனுக்கென்று விசிறிகள் கூட்டம் திரண்டு வந்தது. தஞ்சையிலும், திருச்சியிலும் இன்னும் எண்ணற்ற சபை களிலும் அவனுடைய கச்சேரி தொடர்ந்து நடந்து, ஏராளமான சிறந்த ரசிகர்களைத் திரட்டித் தந்தது. ரசிகர்களின் பாராட்டுக்களோடு, பத்திரிகைளின் சிறந்த விமரிசனங்களும் அடிக்கடி வெளியாகி அவனுக்குப் புகழ் சம்பாதித்துக் கொடுத்தன.

அடிக்கடி கச்சேரிகளுக்கு ஏற்பாடாகி, பம்பாயும், டில்லியும், பட்டணமும் அவனுக்குச் சர்வ சாதரணமாகி விட்டன. நாளடைவில் ஹரியின் கச்சேரி இல்லாத பெரிய மனிதர்கள் வீட்டுத் திருமணமே இல்லை என்று ஆகி விட்டது.

இப்படி வாழ்க்கையில், பாதி நாள் ரெயிலிலும், கச்சேரி மேடைகளிலும் ஹரிக்குக் கழிந்தது. இத்தனைக்கு மத்தியிலும் ஓய்வு இருக்கும் போதெல்லாம் காந்தாமணி யின் வீட்டுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பதை அவன் நிறுத்தவில்லை. மிகக் குறுகிய காலத்துக்குள் காந்தாமணி வெகுவாக முன்னேற்றம் அடைந்து வந்தாள். படிப்படி யாக அவள் பழைய பாடந்தர முறைகளை எல்லாம் மாற்றிக் கொண்டாள். முழுக்க முழுக்க ஹரியின் பாணியே அவளுடைய பாட்டில் அமைந்துவிட்டது.

வசந்தியிடமும் சுசீலாவிடமும் ஹரி எதிர்பார்த்து ஏமாந்ததைக் காந்தாமணி ஈடுசெய்தாள். தனக்குக் கிடைத்த கால அவகாசத்துக்குள், அவள் அவனது திறமையை நன்கு பயன் படுத்திக்கொண்டாள். அவன் இரண்டு நாளைக்கு ஒரு கீர்த்தனை சொல்லிக் கொடுக்கத் திட்டமிட்டிருந்தால், அவள் ஒரு நாளைக்கு இரண்டு கீர்த்தனைகளை அவனிடம் பிடிவாதமாகக் கற்றுக் கொண்டு, அடுத்த தடவை பாடத்துக்கு ஹரி வரும் போது அவன் பிரமிப்பில் ஆழும்படிப் பாடிக் காட்டினாள்.

இதனால் அவர்களிடையே போட்டி வலுத்தது. அது அவனுடைய அபிவிருத்திக்கு உதவியாக இருந்தாலும், நாளடைவில் அவள் தன்னையே மிஞ்சிவிடுவாள் என்ற உண்மையான அச்சம் அவனது உள்ளத்தில் ஏற்பட்டது.

ஆகவே தன்னைப் பின்பற்ற முடியாதபடி, அவள் குழம்பித் திணறும் வண்ணம், புதுப் புதுச் சங்கதிகளைக் கிருதியில் ஆராய்ந்து சேர்த்தும், ராகங்களில் அவள்

எண்ணிக்கூடப் பார்க்க முடியாத இடங்களையெல்லாம் தொட்டு சஞ்சரித்தும், தன் குருதியைப் பிழிந்து குரலைக் கூட்டினான் ஹரி.

அதே சமயம் — காந்தாமணி என்னும் கருவியால் நாம் முன்னைவிட எத்தனை தூரம் சங்கீதத்தில் அபிவிருத்தி அடைந்திருக்கிறோம் என்பதை எண்ணிப் பார்த்து மனம் பூரித்தான்.

தந்தி மணியார்டரும், சாதாரண மணியார்டரும் ஹரிக்குப் பல ஊர்களிலிருந்து வந்தவண்ணம் இருந்தன. காந்தாமணியோ, ஹரி வரும்போதெல்லாம் எத்தனை சொல்லியும் கேளாமல், பிடிவாதமாக நூறும் இருநூறும் பையில் திணித்து அனுப்புவாள்.

பாகவதரின் வீட்டில் செல்வம் கொழித்தது. பக்கிரிக்கும் இடைவிடாமல் யோகம் அடித்துக் கொண்டிருந்தது. அக்காவுக்கு அளவோடு கொடுத்துவிட்டுக் 'கொசிரை' எல்லாம் தன் செலவுக்கு வைத்துக் கொண்டான். சாதாரணக் கைலியும், சிங்கப்பூர் பனியனும் போய், சில்க் கைலியும் கிளாஸ்கோ மல் ஜிப்பாவுமாகக் காட்சி அளித்தான்.

ஆனால் இவற்றையெல்லாம் ஹரி கண்டும் காணாமலும் இருந்துவிட்டான். தன்னிடம் பணத்தையும் வாங்கிக் கொண்டுபோய், ஏழை போல் வேஷமும் போட்டுக் கொண்டு அலையாமல், இப்படிப் பளிச்சென்று காட்சியளிக்கும் பக்கிரியின் நேர்மையை வரவேற்றான். எப்படியாவது அவர்களும் சௌகரியமாக இருக்கட்டும் என்ற எண்ணத்துடன் இருந்து வந்தான்.

இப்படி இசையின்பத்தில் சுகவாழ்வு வாழ்ந்து கொண்டிருந்தவன், புறவாழ்வுக் கவலைகளை எல்லாம் கைவிட்டான். மனம் எப்போதும் ஆனந்தத்தினால் நிறைந்திருந்தது. அதை அவன் தேகத்தின் காந்தியும், முகத்தின்

வசீகரமும் எடுத்துக் காட்டின. வாழ்க்கையில் ஒழுக்கத்தையும், கொள்கையில் நேர்மையையும் கடைப் பிடித்து வந்த அவன்; ஆண்களில் அழகனானவும், அறிவில் மேதையாகவும் விளங்கினான். தன்னை இந்த நிலைக்கு உயர்த்திய பாகவதருக்கு அவன் எத்தனை செய்தாலும் தகும், ஏற்கும் அல்லவா? சம்பாதிப்பதை எல்லாம் செலவழித்தாவது குருவைக் குணப்படுத்திவிட வேண்டு மென்று அவன் மனம் துடித்தது. போகிற ஊர்களில் அபூர்வமாகக் கிடைக்கும் பழங்களும், அவருக்குப் பிடித்தமான பொருள்களுமாகக் கொண்டு வந்து குவித்தான்.

ஆனால், அத்தனையையும் ஏற்றுக் கொண்டு அமைதி யுடன் இருக்கப் பாகவதரின் உள்ளம் என்ன கல்லால் ஆனதா? தாம் சம்பாதித்துக் கொண்டு வந்த காலத்தில் நடந்ததைவிடக் குடும்பச் செலவைச் சுருக்கினார். வயிறார எல்லாரும் உண்பதைத் தவிர மீதியை ஹரியின் பெயரிலேயே பாங்கில் சேமித்து வைத்தார். பணத்தின் தேவை, எப்போது ஏற்படும் ஏற்படாது என்று யாராவது அறுதியிட்டுக் கூறமுடியுமா? இன்று ஹரி இதைப்பற்றி லட்சியம் இல்லாதவனாகவோ; கவலைப்படாதவனா கவோ இருக்கலாம். ஆனால் நாளை?

'திருமணமாகி வசந்தியோடு அவன் வாழ்க்கை நடத்தும்போது? சுந்தரி கேட்கமாட்டாள். 'நேற்றுவரை என் புருஷன் சம்பாதித்தது எங்கே? என்று வசந்தி கேட்க மாட்டாள். கேட்டுவிட்டால்? அவளிடம் வெட்கமில் லாமல் இந்த மானங்கெட்ட வயிற்றையா காட்டிக் கொண்டு நிற்பது?'—

இப்படி, முக்காலமும் உணர்ந்து செயல் புரியும் முனிவரைப் போல் எண்ணிக் கொண்டு பாகவதர் ஹரியின் முன்னேற்றத்துக்கான காரியங்களையே செய்து கொண்டு வந்தார்.

ஹரியிடம் இப்போதெல்லாம் வசந்தி முன்போல் அதிகம் எதிர்வார்த்தை யாடாமலும், அரட்டை அடிக்காமலும், பாடத்துக்கு வந்தால் மிகவும் சிரத்தையுடன் நடந்து வந்தாள். திருமணப் பேச்சுக்களைத் தன் தாய், அப்பாவுடன் முடித்துக் கொண்டு வந்ததை அவள் அறிவாள். அறிந்ததிலிருந்தே ஹரியைப் பார்க்கும் போதெல்லாம் வசந்திக்கு ஒருவித நாணம் பிறந்துவிடும். ஆனால் அவன் இதற்கு எவ்வித மதிப்போ பொருளோ கொடுக்காமல் தன் கடமையை மட்டும் செய்துவிட்டுக் கண்ணியமாகச் சென்று கொண்டிருந்தான். வசந்தியும் சுந்தரியும் எத்தனை முயன்றும் ஹரியின் உள்ளக் கிடைக்கையயோ, வசந்தியை மணந்து கொள்வது பற்றிய அவன் கருத்தையோ, அவர்களால் அறிந்து கொள்ள முடியவில்லை. எல்லாவற்றுக்கும் எப்போதும் சிரித்து மழுப்புகிற புன்னகை ஒன்றுதான் அவனுடைய பதிலாக இருந்தது. அந்த மழுப்பலின் அடித்தளத்தில் ஏதோ மர்மம் இருப்பதாக வசந்தியின் சூட்சும புத்திக்குத் தென்பட்டது. ஆனால் வெளுத்ததெல்லாம் பாலென்று எண்ணும் சுந்தரிக்கு அப்படி எண்ணத் தோன்றவில்லை. ஹரி மனம் விட்டுப் பேச வெட்கப்படுகிறான், கூச்சப்படுகிறான் என்று எண்ணியே ஏமாந்தாள்.

## 28. இசைப் போட்டி

சுசீலாவின் சுபாவம் மாறவில்லை. அவள் முயன்றாலும் அதை மாற்றிக்கொள்ள முடியவில்லை. ஹரிக்கு சமூகத்தில் தனி மதிப்பும். அந்தஸ்தும் படிப் படியாக ஏற்பட்டு நிலைத்துங்கூட, வீட்டுக்குள் வந்து விட்டால் சுசீலா ஏதாவது பேசி அவன் மனத்தைப் புண் படுத்தாமல் இருக்கமாட்டாள். வெளியூர்க் கச்சேரி முடிந்து வந்த அலுப்பைக்கூடப் பார்க்காமல் ஹரி உடனே தஞ்சாவூர்க் கல்யாணராமனை எண்ணிக்கொண்டு ஓடு வதைப் பற்றி அவள் குறை கூறாத நாளே இல்லை.

ஹரியின் உடையிலும் பூசிக் கொள்ளும் சென்டிலும் அவள் பிழை கண்டாள். அதனால் அவன் தனக்காக வாங்கி வருவது தேவாமிருதமாக இருந்தாலும் அதைப் பிரியமாக ஏற்றுக் கொள்வதில்லை.

அதற்காக ஹரி தன் காரியம் எதையும் நிறுத்தி விடவில்லை; மாற்றிக் கொள்ளவும் இல்லை. மற்றவர்கள் அவனை ஒதுக்கிவிடவும் இல்லை. அம்மாவுக்கென்று தஞ்சாவூர்க் குடமிளகாய் கூடை கூடையாய் வாங்கி வருவான். பாகவதர் அவன் தஞ்சாவூருக்குப் புறப்படும் போதே வண்ணாத்திக் கடைச் சீவலுக்கு ஆர்டர் கொடுத்து விடுவார். காயத்திரிக்கும் வசந்திக்கும் மிகவும் பிடிக்கு மென்று வீசைக் கணத்தில் முந்திரிப் பருப்பு வாங்கி வருவான். சுசீலாவுக்கு மட்டும் பிரத்தியேகமாக ஒவ்வொரு தடவையும் விதவிதமான பட்டு ரவிக்கைத் துண்டுகளை வாங்கி வருவான். எல்லாருக்கும் ஐயன்

கடைத்தெரு வாசனைக் கதம்பமும், 'திண்டு'ம் பஞ்சமில்லாமல் வாங்கி வருவான். அன்றே அதைத் திருவிடைமருதூருக்கும் கொண்டுபோய்க் கொடுப்பான்.

சுந்தரியும் வசந்தியும் இவற்றைப் பார்த்து மகிழ்ந்து போவார்கள். ஹரியின் அன்பையும் குணத்தையும் எண்ணி வியந்தபடி, 'பெண் அதிர்ஷ்டக்காரிதான்' என்று சுந்தரி மனத்துக்குள் எண்ணிக்கொள்வாள். ஆனால் சுசீலா மட்டும் அவன் ஆசையோடு வாங்கி வரும் எதையுமே விரலாலும் தீண்டமாட்டாள். ஹரி அதைப் பற்றிக் கவலைக் கொள்வதில்லை. மறுமுறையும் அவன் சுசீலாவுக்காக ஏதாவது வாங்கி வருவது தப்பாது.

ஹரி வரும்போதெல்லாம் காந்தாமணி கேலி பண்ணத் தவறவே மாட்டாள். அவன் ஊருக்குப் போகும்போது ஒவ்வொரு தடவையும் ஏதாவது சாமான்களை வாங்கி நிரப்பிக்கொண்டு செல்வது காந்தாமணிக்கு எப்படியோ தெரிந்துவிட்டது. அநேகமாக டிரைவர் மூலந்தான் தெரிந்திருக்கவேண்டும் என்று ஹரி நம்பினான். ஏனெனில் கடைத் தெருவைச் சுற்றிக்கொண்டு அவன் ஊர்வலம் செல்வதைச் சுசீலாவைப் போல் பின்னால் வந்து நோட்டம் பார்க்கிற சுபாவம் காந்தாமணிககு இல்லை. அவளுடைய பெரும்போக்கு யாருக்குமே வராது.

தான் கொடுத்தனுப்புகிற பணம் பாதிக்குமேல் இப்படி வழியிலேயே பூவும் காயுமாய் உதிர்ந்துவிடுகிறது என்று அறிந்து கொண்டவுடன், அந்தச் செலவை அவளே ஒவ்வொரு தடவையும் வலுவில் வந்து ஏற்றுக்கொண்டு வாங்கி அனுப்புவாள், ஹரி எத்தனை மறுத்தாலும் அவளிடம் பலிக்காது. ஆனால் மறுமுறை வந்ததும் ஹரியைக் கேலி செய்யவும் அவள் தவறமாட்டாள்.

"இப்படித் தஞ்சாவூரையே ரெயிலில் ஏற்றிக் கொண்டு போவதற்குப் பதில் உங்கள் குருநாதர் குடும்

பத்தையே இங்கே அழைத்து வந்து குடி வைத்துவிடுவது தானே?'' என்று ஒரு நாள் அவள் விளையாட்டாகக் கேட்டுவிட்டாள். அவ்வளவுதான், அப்படியே தம்பூரா வைக் கீழே வைத்துவிட்டுப் புறப்பட்டுவிட்டான் ஹரி.

அன்று ஹரியைச் சமாதானம் செய்து திரும்ப வீட்டுக்குள் இருத்துவதற்குள் காந்தாமணியின் தாய்க்குப் போதும் போதுமென்றாகி விட்டது. குருவைப் பற்றியோ, அவர் குடும்பத்தைப்பற்றியோ ஏதாவது கூறி விட்டால் அது ஹரிக்குத் துளிக்கூடப் பொறுக்காது என்று உணர்ந்த காந்தாமணி அதை நன்றாக முடிச்சுப் போட்டு வைத்துக் கொண்டாள்.

ஆம், அவனுக்குக் கோபமோ மனவருத்தமோ ஏற்பட் டால்; அந்தக் கணநேரத்துக்குள் தன் மனம் என்ன பாடு படுகிறது என்பதை, அன்றுதான் காந்தாமணி நன்கு உணர்ந்து கொண்டாள். ஹரி கோபித்துக் கொண்டு புறப்பட்டவுடன், தன் தாயால் சமாதானப் படுத்த முடியாமல் அவன் வராமலே போய்விட்டால் என்ன ஆகும் என்று அவளால் எண்ணிக்கூடப் பார்க்க முடிய வில்லை.

வரவர, ஹரியை வாரத்துக்கு ஒரு முறையாவது பார்ாமல் இருக்க நேர்ந்துவிட்டால் அவளுக்குப் பைத் தியமே பிடித்துவிடும்போல் தோன்றியது. அவனுடைய இனிய குரலை என்றும அருகில் இருந்து கேட்டுக்கொண்டே இருக்கவேண்டும் போல் அவளுள் ஓர் ஆவல் அபரிமிதமாக எழுந்தது.

அவனுடைய பேச்சிலும் அவனுடைய பாட்டைப் போலவே இனிமை கமழ்வதைக் கண்டுகொண்டவள் காந்தாமணி. 'அந்த இனிமை என்றுமே என்னைச் சுற்றிச் சூழ்ந்திருக்கலாகாதா?' என்று அவள் அடிக்கடி தன் மனத்துக்குள்ளேயே சஞ்சலப்பட்டுக் கொண்டிருந்தாள். தன்னிடம் அவனை அழைத்து வந்த தெய்வம், தன்னை

யும் அவனோடு சேர்த்துவிட அருள் புரியட்டும் என்பதே அவளது இடையறாத பிரார்த்தனையாக இருந்தது. பிறகு பிரார்த்தனைக்கு உரிய பலனையும் அவள் மனம் கனவு காண ஆரம்பித்தது.

கையில் இருந்த பூனையை இப்படியும் அப்படியும் புரட்டி விளையாடிக் கொண்டிருந்தாள் காந்தாமணி. அன்று அவள் மனம் மிகுந்த குதூகலத்துடன் இருந்தது. அந்த மகிழ்ச்சியில், ஹரி அன்று மிகவும் சோர்ந்து வந்திருப்பதை அவள் கவனிக்கத் தவறிவிட்டாள். அவனும் தன் சுகவீனத்தை வெளிக்குக் காட்டிக் கொள்ளவில்லை. ஆனால் வழக்கத்துக்கு மாறாக ஹரி, வந்தவுடன் காந்தாமணியிடம் சூடாக ஒரு தம்ளர் காபி கொண்டு வரும்படி கூறினான். பையில் இருந்த ஒரு மாத்திரையை எடுத்து வாயில் போட்டுக்கொண்டு, ஹரி தயாராகக் காத்துக் கொண்டிருப்பதற்குள் அவள் கையில் காப்பியோடு வந்துவிட்டாள்.

சூடான காபி நெஞ்சை நனைத்துக்கொண்டு உள்ளே சென்றதும் ஹரிக்குச் சற்றுப் புதுத் தெம்பு வந்தது. வழக்கம்போல் அவள் தம்பூராவைக் கையில் எடுத்துக் கொண்டு அவனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து மீட்டிக் கொண்டிருந்தாள்.

ஹரி அவளைப் பார்த்து, ''என்ன பாடலாம்?'' என்று கேட்டான்.

''உங்களுக்கு என்ன தோன்றுகிறதோ சொல்லுங்களேன்.''

''போன தடவை என்ன நடந்தது?''

''நாயகி.''

''அப்போது இன்று 'தர்பார்' வைத்துக் கொள்வோமா?'' ஹரி வேண்டுமென்றே கேட்டான்.

''வேண்டாம். 'லதாங்கி' பாடலாம். நான் அரை மணி பாடுகிறேன். நீங்கள் வந்த சங்கதி வராமல், ஒரு மணி பாடவேண்டும்.''

''லதாங்கியையா?'' ஹரி பெருமூச்சுடன் கேட்டான்.

''ஏன்? கல்யாணியில் காட்டுகிறீர்களே உங்கள் கைவரிசையை எல்லாம்; இதிலும் காட்டுங்கள். எப்பொழுது பார்த்தாலும் எந்தக் கச்சேரியிலும் கல்யாணி தானா? ஒன்றில் நீங்களாக அதை ஆரப்பித்துவிடுகிறீர்கள்; அல்லது ரசிகர்கள் அதைக் கேட்காமல் விடுவதில்லை. ஏன்? கல்யாணியைப் போலவே எழுபத்திரண்டு மேள கர்த்தா ராகங்களையும் அத்தனை பிரமாதமாக உங்களைப் பாட வைக்கட்டுமா? ஆனால் இந்தச் சாதைனக்கு நீங்களும் என்னுடன் ஒத்துழைக்க வேண்டும்; சரிதானா?'' பதிலை எதிர்பார்த்து அவனுடைய முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

''ஹூம். சரி, ஆரம்பி. கரும்புத் தின்னக் கூலியா?'' என்றான் ஹரி சிரித்துக்கொண்டே.

காந்தாமணி மகிழ்ச்சியோடு கண்களை மூடிக்கொண்டு இசையில் மூழ்கிப் போனாள். மீட்டுகிற அவள் விரல் நுனிகளிலிருந்து தம்பூரா வழிப் பாய்ந்து பரவிய நாத வெள்ளம், அறை முழுவதும் நிரம்பியது. சற்றைக்கெல்லாம் அவள் லதாங்கியாகவே மாறிவிட்டாள். பூனை அவள் காலடியில் உறங்கிக் கொண்டிருந்தது.

ஹரி பிரமிப்போடு அவள் பாடுகிற அழகைப் பார்த்துக்கொண்டும்; கேட்டுக்கொண்டும் இருந்தான். காந்தாமணியின் கற்பனைத் திறன் அவனைத் திணற அடித்துவிடும் போலிருந்தது. 'இனிப் பாட என்ன மீதம் வைத்திருக்கிறான்? ஒரு மணி நேரம் இன்று இவளுக்கு நான் எப்படிப் பதில் சொல்லி மீளப் போகிறேன்?'— என்று

அவன் மனம் கவலைப்பட்டபோது காந்தாமணி பாட்டை முடித்துவிட்டு, தம்பூராவை ஹரியின் பக்கம் திருப்பினாள்.

ஹரி அவளை பரிதாபமாகப் பார்த்தான். 'இன்று என்னை விட்டுவிடு. நான் மிகவும் சோர்ந்து போய், உடல் நலமில்லாமல் வந்திருக்கிறேன். நம்முடைய போட்டியை இன்று ஒரு நாள் ஒத்தி வைத்துக் கொள்ளலாமே!' என்று அவன் விழிகள் அவளிடம் கூறாமல் கூறின. ஆனால் அதைப் புரிந்து கொள்ள முடியாத காந்தாமணி, ''என்ன யோசிக்கிறீர்கள்? இப்படியே ஒவ்வொரு தடவையும் பயப்படுகிற மாதிரி நடித்துவிட்டுப் பிறகு நான் பாடின இடமே தெரியாமல் அடிப்பதுதானே உங்கள் வழக்கம்? இன்று மட்டும் என்ன?'' என்று துரிதப்படுத்தினாள்.

காப்பியின் தெம்பும், மாத்திரையின் சக்தியும் அடங்கி ஓய்ந்து கொண்டிருந்த வேளையில், காந்தாமணியின் உற்சாகமூட்டும் வார்த்தைகள் அவனை எங்கோ கொண்டு செல்வதுபோல் இருந்தன. அவள் கையில் இருந்த தம்பூராவை ஹரி கையில் வாங்கிக் கொண்டான். சற்றைக்கெல்லாம் தன்னை மறந்து ஆவேசம் வந்தவனைப் போல் அவன் பாடிக் கொண்டே இருந்தான். காந்தாமணி கூறிய வார்த்தைகள் மெய்யோ, பொய்யோ; ஆனால் உண்மையிலேயே அவன் அந்த ராகத்தைப் பாட ஆரம்பித்த பிறகு, அவள் அத்தனை நேரம் கொண்டு வந்து நிறுத்திய லதாங்கி எங்கோ ஓடியே போய்விட்டாள்.

கடிகாரம் அறுபது நிமிஷத்தை எப்பொழுதோ கடந்து சென்றுவிட்டது. கண்களில் மாலை மாலையாக நீர் வழிந்தோட ஹரியைப் பார்த்துக்கொண்டே இருந்தாள்.

திடீரென்று ஹரியின் பார்வையில் ஒரு பயங்கரத்தை அவள் கண்டாள். அவன் கையில் இருந்த தம்பூரா அவன் பிடியிலிருந்து நழுவியது. இமைக்கும் நேரத்துக்குள், அவள் சட்டென்று விழப்போன தம்பூராவைக் கையில்

தாவிப் பிடித்துக் கொண்டாள். ஆனால் அதே சமயம் ஹரி அப்படியே சுருண்டு தன் மீது விழுந்ததை அவள் எதிர் பார்க்கவேயில்லை. வாயிலிருந்து ரத்தம் வழிந்தது. திடுக்கிட்டுப் போன அவள் பரபரப்புடன் அவனைத் தூக்கித் தன் மடியில் கிடத்திக்கொண்டு ''அம்மா!'' என்று அலறிய அலறல் அந்த வீடு முழுவதும் எதிரொலித்தது. விழித்துக் கொண்ட பூனை எதையோ கண்டு பயந்து விட்டது போல் படிக்கட்டுகளின் வழியே பாய்ந்து ஓடியது.

விளையாட்டுப்போல நாலு நாட்கள் ஓடிப்போய் விட்டன. தஞ்சாவூர்ப் பாடத்துக்குச் சென்ற ஹரியை இன்னும் காணவில்லை என்றவுடன் வீட்டிலுள்ள எல்லா ருமே தவியாய்த் தவித்துக் கொண்டிருந்தனர். பாக வதரும் லட்சுமியம்மாளும் சரியாகச் சாப்பிட்டு இரண்டு நாட்கள் ஆயின. வாய் ஓயாமல் அவனைப்பற்றியே பேசிக் கொண்டிருந்தனர்.

கவலைப்பட அவன் பச்சைக் குழந்தை அல்ல; என் றாலும் கவலையாக இருந்தது. திருவிடைமருதூருக்கும் வரவில்லையாம். பஞ்சு அண்ணாவும் ராஜப்பாவும் ஊரில் இல்லாததனால் அங்கே போய்த் தேடவேண்டிய அவசியம் இல்லை என்று பாகவதர் தடுத்துவிட்டார். பின் எங்கே போயிருப்பான் என்பது யாருக்குமே புரியாவிட்டாலும், பாகவதருக்கும் காயத்திரிக்கும் உள்ளூற ஒரு விதச் சந்தேகம் இருந்தது.

'ஒருவேளை அரசூருக்குப் போயிருப்பானோ, அல்லது பக்கிரியினால் ஏதாவது ஆபத்து ஏற்பட்டிருக்குமோ? இப் போது அரசூருக்குப் போகவேண்டிய அவசியம் இல்லையே! அவன் அப்படி அந்தக் குடும்பத்துடன் எவ்விதத் தொடர்பும் கொண்டாடுபவன் அல்லவே! அரங்கேற்றத் துக்கே செல்ல மறுத்தவனாயிற்றே. ஆனால் பக்கிரியைப் பற்றிப் பயப்பட வேண்டிய அவசியம் என்ன இருக்கிறது?

ஹரிதான் அவன் கேட்கும் போதெல்லாம் பணம் கொடுத்துக்கொண்டு வருகிறானே. பின் எங்கே தான் போயிருப்பான்? ஒருவேளை தஞ்சாவூரிலேயே இருக்கிறானோ? புறப்பட்டுப்போய் ஒரு நடை பார்த்து வருவதற்கு இல்லாவிட்டாலும், தந்தி அடிப்பதற்குக்கூட விலாசம் கேட்டுத் தெரிந்து வைத்துக் கொள்ள வில்லையே!'' என்று பாகவதர் கவலைப்பட்டுப் புலம்பிக் கொண்டிருந்தார்.

எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு லட்சுமியம்பாள் பிரமை பிடித்தாற்போல் மூலையில் இடிந்து போய் உட்கார்ந்திருந்தாள்.

சுசீலா மட்டும் அடிக்கொரு தரம் எல்லாரிடமும் சீறி விழுந்துகொண்டே இருந்தாள். ''தஞ்சாவூரிலே எந்தக் கல்யாணராமன் வீடு என்று யார் கண்டார்கள்? எங்கே போய்த் தேடுவது?'' என்று திரும்பத் திரும்பக் கூறினாள்.

''இத்தனை சாமர்த்தியமாய் இப்போது பேசுகிறவள்; நீதான் அவன் போய் வருகிற இடத்து விலாசத்தைக் கேட்டுக் குறித்து வைத்துக் கொள்ளுவதற்கு என்ன? ஏன் செய்யவில்லை?'' என்று லட்சுமியம்மாள் பொறுக்க முடியாமல் சுசீலாவிடம் கோபித்துக்கொண்டாள்.

வீட்டில் நடக்கும் இத்தனையையும் பார்த்துக்கொண்டு ஒன்றும் தெரியாதவள் போல்; ஒன்றுமே கூற முடியாமல் காயத்திரி தவித்துக் கொண்டிருந்தாள்.

'நிச்சயமாக ஹரி தஞ்சாவூரில் காந்தாமணியின் வீட்டில்தான் இருக்க வேண்டும்; ஏதோ தவிர்க்க முடியாத காரணத்தினால்தான் அவன் அங்கே தங்கியிருக்க வேண்டும்; போன இடத்தில் அங்கே அவர்களில் யாருக்கு என்ன உடம்போ, ஹரி உதவிக்குத் தங்கி விட்டான் போல இருக்கிறது. இருந்தாலும் ஒரு கடிதங்கூடவா போடக் கூடாது?' என்று எண்ணிய காயத்திரி சிறிது மனவேதனை கொண்டாள்.

நான்கு நாளாக ஹரியைக் காணோம் என்றதும் சுசீலா திருவிடைமருதூருக்குப் போய் வந்தாளே தவிர, அங்கே சுந்தரியிடமோ, வசந்தியிடமோ ஹரியைத் தேடிக் கொண்டு வந்திருப்பதாகக் கூறவே இல்லை.

எதேச்சையாக வந்தவள் போல், ஹரி அங்கும் வர வில்லை என்ற விஷயத்தை மட்டும் கிரகித்துக் கொண்டு திரும்பிவிட்டாள். ஆனால் அன்று அப்பாவைப் பார்த்துப் போக வசந்தி சுவாமிமலைக்கு வந்தபோது தான், அவளுக்கு இந்த விஷயமெல்லாம் தெரிய வந்தது.

ஹரியை நான்கு நாளாகக் காணவில்லை. தேடிக் கொண்டிருக்கிறார்கள் என்று அறிந்தவுடன் வசந்தி திடுக்கிட்டுப் போனாள். சொல்லொணாத கவலையும் வேதனையும் அவளைச் சூழ்ந்துகொண்டன. அந்த நிமிஷமே அங்கிருந்து ஓடிப்போய் அம்மாவிடம் இந்தச் செய்தியைக் கூற அவள் உள்ளம் துடித்தது. ஆனால் அங்கே இருந்த அத்தனை பேருடைய கவலையையும் வேதனையையும் விடவா அது முக்கியம்? அப்படி உடனே புறப்பட்டுச் செல்லுவது அப்பட்டமான சுயநலம் அல்லவா என்று அவள் மனமே குத்திக் காட்டியது.

ஆயினும் அவளுக்குச் சுசீலாவின்மீது வந்த கோபத்தை மட்டும் அடக்கவே முடியவில்லை. ஊருக்கு வந்தவள் ஒரு வார்த்தை சொல்லவில்லையே! காயத்திரி அக்காவும் பெரியம்மாவும் இல்லாதபோது சுசீலாவைத் தனியாகச் சந்தித்து, வாய்க்கு வந்தபடிப் பேசித் தீர்த்துவிட வேண்டுமென்று அவள் துடித்தாள். அதற்கான சந்தர்ப்பத்தை அவள் மனம் எதிர்பார்த்துக் கருவிக் கொண்டிருந்தது. ஆனால் சோதனையைப் போல் வசந்தி ஊருக்குப் புறப்பட்டுப் போகிற வரையில் சுசீலா அவள் கண்ணில் அகப்படவே இல்லை.

காயத்திரிதான் வீட்டுக் காரியங்களைக் கவனித்தாள். லட்சுமியம்மாளின் நிலையைப் பார்த்ததும் வசந்திக்கு ஒன்றுமே பேசக்கூடத் தைரியம் வரவில்லை. அவளையும் அறியாமல் கண்களில் நீர் கசிந்தது.

''வருகிறேன் பெரியம்மா'' என்று சொல்லிக் கொண்டு புறப்பட்ட வசந்தியை லட்சுமியம்மாள் கையைப் பிடித்து அருகில் அமர்த்திக் கொண்டாள்.

''ஊருக்குப் போனதும் அம்மாவிடம் இங்கேயுள்ள விஷயத்தைச் சொல்லாதே. சுந்தரியால் இதைத் தாங்கிக் கொள்ள முடியாது. கேட்டால் பிராணனையே விட்டு விடுவாள். ஹரி சின்னக் குழந்தையா; கவலைப் பட்டுத் தேடித் திரிய? அவனுக்கு எத்தனையோ சிநேகிதம்; எவ்வளவோ காரியங்கள். கச்சேரி பண்ணிச் சம்பாதிக்கிறது போதாதென்று இந்தக் குடும்பத்தையும் அவன்தானே கொண்டு செல்ல வேண்டியிருக்கிறது? பெற்ற பிள்ளைகூட இந்தக் காலத்தில் உருகமாட்டான்; 'ஐயா இப்படி ஒரேயடியாகப் படுத்துக்கொண்டு விட்டாரே, என்று அவன் அத்தனை கவலைப்பட்டுக் கொண்டு கிடக்கிறான். 'ஐயாவுக்குச் சீக்கிரமே ஏதாவது நல்ல வைத்தியமாகச் செய்தாகவேண்டும். எத்தனை ஆயிரம் செலவானாலும்; பெரிய டாக்டர் யாரையாவது பிடித்து உடம்பைக் குணப் படுத்தினால்தான் எனக்கு நிம்மதி', என்று ஓயாமல் கூறிக்கொண்டே இருப்பான். நமக்காக, எங்கே, யாரைத் தேடிக்கொண்டு அலைகிறானோ? அவனுக்காக நாம் அநாவசியமாக இங்கே, கவலைப் பட்டுக் கொண்டு கிடக்கிறோம், அதனால்தான் சுசீலாவைத் திருவிடை மருதூருக்கு அனுப்புகிறபோது, உன் அம்மாவிடம், 'ஹரியைக் காணவில்லை; தேடிக்கொண்டு வந்திருக்கிறேன்' என்று காட்டிக் கொள்ளாமல் பார்த்து விட்டு வா என்று நான் சொல்லி அனுப்பினேன்'' என்று லட்சுமியம்மாள் கூறிக்கொண்டிருந்தபோதே வசந்திக்குச் 'சுரீர்' என்றது.

'நல்ல வேளையாகச் சுசீலாவின் வாயில் அகப்பட்டுக் கொள்ளாமல் தப்பினோம்' என்ற ஆறுதல் அவளுக்குப் பிறந்தது. ஆனால் பெரியம்மா சொன்னபடி ஊருக்குப் போனதும் அம்மாவிடம் எதையும் ஒளித்துக்கூற அவள் விரும்பவில்லை. உடனே அம்மாவிடம் சென்று ஹரியைப் பற்றிய விஷயத்தைக் கூறினால்தான் சமாதானம் ஆகும் போலிருந்தது. அதற்காகவே அவள் சீக்கிரம் புறப்பட்டுவிட்டாள்.

வசந்தி வாசற்பக்கம் வந்தபோது; கையில் ஏதோ கடிதத்துடன் உள்ளே நுழைந்த சுசீலா, வசந்தியைக் கண்டதும் தலையை இடத் தோள் பட்டையில் இடித்துக் கொண்டு வேகமாக உள்ளே சென்றாள். அவளுடைய அவமதிப்பைத் தாங்க வசந்தியால் முடியவில்லை. அந்தக் கணத்தில் அவளுக்கு எப்படித்தான் அத்தனை ஆவேசம் வந்ததோ தெரியவில்லை. ''சுசீலா!'' என்று உரக்கக் கூவிக்கொண்டே வீட்டினுள் திரும்பினாள்.

ஆனால் அதைக் காதில் வாங்கிக்கொள்ளாதவள் போல் கையில் இருந்த கடிதத்தைத் தந்தையிடம் படித்துக் காட்டிவிட்டு, ''ஹரிக்கு உடம்பு சரியில்லையாம் அம்மா'' என்று தாயினிடம் கடிதத்தைக் கொடுத்துச் சுசிலா கண்ணீர் விட்டாள்.

வசந்தியால் இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. 'அடேயப்பா, என்னமாக நீலிக் கண்ணீர் வடிக்கிறாள்! நேரில் இருந்தால் திட்டிக் கொண்டே இருப்பதும், கண்காணாதபோது கண்ணீர் விடுவதும் - என்ன மாய்த்தான் வேஷம் போடுகிறாள்! எங்கிருந்துதான் இதையெல்லாம் கற்றுக் கொண்டாளோ மாய்மாலக்காரி!' என்று மனத்துக்குள் சுசீலாவைத் திட்டிக் கொண்டே சென்றாள் வசந்தி.

# 29. கொஞ்சும் அழகு

ஹரி விழித்தவுடன் எதிர்ச்சுவரில் இருந்த காலண்டர் தான் அவன் கண்ணில் பட்டது. தரையில் உட்கார்ந்து பாடிக் கொண்டிருந்தவன், காந்தாமணியின் கட்டிலில் இடம் பெற்ற வரலாற்றையும், இடையே மூன்று நாள் ஓடிப்போனது எப்படி என்பதையும் சிந்தித்துக் கொண்டே எழுந்திருக்கப் போனவன் பதறிப் போய்த் தன் கால்களைப் பின்னுக்கு இழுத்துக் கொண்டான்.

மண்ணில் நடந்து சென்றவன் பாததூளி பட்டுக் கல்லொன்று பெண்ணாகி எழுந்த வித்தையைப் போல— ஹரியின் கால் பட்டு, கட்டிலின் கீழே படுத்திருந்த காந்தாமணி உறக்கம் கலைந்து வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தாள்.

அதற்குள் அங்கே வந்த காந்தாமணியின் தாய் மிக்க மகிழ்ச்சியுடன், ''டீச்சர் ஸார், விழித்துக் கொண்டு விட்டீர்களா? நல்ல வேளை, எங்கள் வயிற்றில் பாலை வார்த்தீர்கள்! அப்படியே படுத்திருங்கள்'' என்று கூறிக் கொண்டே ஹரியின் அருகில் வந்தாள்.

விழிப்பு வந்ததும் கொடுக்கும்படி டாக்டர் தந்த மருந்தையும், மாத்திரையையும் ஹரியின் கையில் கொடுத்துச் சாப்பிடச் செய்தாள். ''உடம்பு இப்போது எப்படி இருக்கிறது?'' என்று மிகவும் கவலையோடு கேட்ட அவள் முகத்தைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே ஹரி கூறினான்: ''உங்களுக்கெல்லாம் வீண் சிரமத்தைக் கொடுத்து மிகவும் பயமுறுத்தி விட்டேன்.''

''வீண் சிரமமா? யாருக்கு? உங்களுக்கு இத்தனை கஷ்டமும் ஏற்பட நான்தான் காரணம். வரும்போதே உங்களுக்கு உடம்பு சரியில்லை என்று என்னிடம் ஒரு வார்த்தை சொல்லக்கூடாதா?''

''இப்பொழுது யார் சொன்னார்கள்?''

''யாரும் சொல்லவில்லை. சட்டைப்பையில் இருந்த மாத்திரைகளைப் பார்த்துத் தெரிந்துகொண்டோம். இங்கே வந்து இப்படி ஆகிவிட்டதே என்று, நான் பயந்து விட்டேன். நீங்கள் கண்விழித்து எழுந்திருக்க வேண்டுமே என்று, நான் இந்த உலகத்தில் வேண்டாத தெய்வம் ஒன்று பாக்கியில்லை'' என்று காந்தாமணி கூறினாள்.

அப்போது அங்கு வந்த அவர்கள் குடும்ப டாக்டர் ''அதுமட்டுமல்ல மிஸ்டர் ஹரி; கடந்த நாலைந்து நாட்களில், உங்களை வந்து பார்க்காத டாக்டர் இந்த ஊரில் ஒருவர் பாக்கி இல்லை'' என்று சிரித்தபடியே கூறினார்.

ஹரியைச் சோதனை செய்துவிட்டு, ''இனிமேல் ஒன்றுக்கும் கவலைப்பட வேண்டியதே இல்லை'' என்று கூறி, ''நல்ல ஆகாரங்கள், பழங்கள், ஹார்லிக்ஸ் மட்டும் கொடுங்கள். ஆனால் கண்டிப்பாக இன்னும் இரண்டு நாளாவது படுக்கையை விட்டு எழுந்திருக்காமல் ஓய்வு எடுத்துக் கொள்ளவேண்டும்'' என்றவர் ஒரு டானிக்கையும் எழுதிக் காந்தாமணியின் தாயின் கையில் கொடுத்தார்.

உடனே காந்தாமணியின் தாய், ''அப்படியே இவள் கையையும் கொஞ்சம் பாருங்கள். ஹரி படுத்ததிலிருந்து, இவள் விழியே மூடவில்லை. இப்படியே கட்டிலின் கீழே உட்கார்ந்து கொண்டு, நேற்றுப் பகல் முழுவதும் இருமிக் கொண்டே இருந்தாள்'' என்று மகளைப் பற்றிச் சிபாரிசு செய்தாள்.

''அதெல்லாம் ஒன்றுமில்லை. இனிமேல் எல்லாம் சரியாகிவிடும். சாப்பிட்டுவிட்டு நன்றாகத் தூங்கச்சொல்—

லுங்கள். இன்னும் ஒரு வாரத்துக்குத் தம்பூராவின் பக்கமே இரண்டு பேரும் போகக் கூடாது'' என்று கூறிச் சென்றார் டாக்டர்.

ஹரியும் காந்தாமணியும் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்துக்கொண்டனர். உடனே ஹரி, ''இப்பொழுது எனக்கு ஒன்றுமில்லை. வீணே நீங்கள் யாரும் கவலைப்பட வேண்டியதில்லை. மத்தியான்ன வண்டிக்கே நான் ஊருக்குப் போயாகவேண்டும். ஒரு தகவலும் இல்லாமல், என்னைக் காணவில்லையே என்று அங்கே எல்லாரும் கவலைப்பட்டுக் கொண்டிருப்பார்கள். எப்படியும் நான் இன்று புறப்பட்டுப் போய்விடத்தான் போகிறேன்'' என்று ஹரி தீர்மானமாகக் கூறினான்.

இதைக் கேட்டதும் காந்தாமணியும் அவள் தாயும் ஹரியை ஆச்சரியத்துடன் பார்த்தனர்.

''நன்றாகத்தான் இருக்கிறது! ஏன் ஸார், இதை நீங்கள், டாக்டர் வந்தபோது சொல்லுவதெற்கென்ன? அவரைக் கேட்காமல் இப்போது உங்களை அனுப்பிவைத்தால் அவருக்கு நாங்கள் என்ன பதில் சொல்லுவது?'' என்று உள்ளபடியே பயந்ததுபோல் காந்தாமணியின் தாய் கூறினாள்.

காந்தாமணியும், தாயின் வார்த்தைகளையே ஹரிக்குச் சிபாரிசு செய்தாள். ''உங்களை இரண்டு நாளைக்குக் கட்டிலை விட்டுக் கீழே இறங்க, நான் அநுமதிக்கமாட்டேன். யார் என்னைத் திட்டினாலும் பரவாயில்லை'' என்று கூறிய காந்தாமணி, பதிலுக்குக்கூட காத்திராமல் தாயையும் அழைத்துக் கொண்டு கீழே சென்று விட்டாள்.

தனிமையில் இருந்த ஹரியைச் சிந்தனை மொய்த்துக் கொண்டது. அந்தச் சிந்தனைகளில் சுசீலாவும், வசந்தியும் காயத்திரியும், பாகவதரும், லட்சுமியம்மாளும், சுந்தரியும் சுற்றிச் சுற்றி வந்தார்கள்.

அவர்களுக்கெல்லாம் என்ன பதில் கூறுவது என்றே தெரியாததுடன், தான் இருக்கும் இடத்தையும் தெரிவிக்க முடியாத நிலையில் அகப்பட்டுக்கொண்டதையே எண்ணி ஹரி வேதனைப்பட்டான்.

சர்வசாதாரணமாகக் கூறிய பொய்க்கு, இத்தனை காலத்துக்குப் பிறகு சோதனை ஏற்பட்டதை எண்ணிப் பார்த்தான். காந்தாமணிதான் கல்யாணராமன் என்கிற உண்மை வெளியானால், எப்படி இருக்கும்? எத்தனை உயர்ந்த நோக்கத்துடன், அந்தப் பொய்யைச் சொல்லிக் காரியத்தை மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டது என்பதைப் பற்றிச் சொன்னால், யாராவது நம்புவார்களா?

'காயத்திரிக்குக்கூட என் நிலையை விளக்க முடியாமற் போய்விட்டதே!' என்று எண்ணித்தான் ஹரி வருந்தினான்.

''என்ன ஸார், யோசனை பலமாக இருக்கிறது? முதலில் வாயை கொப்புளித்துக் காபி சாப்பிடுங்கள்'' என்றாள் காந்தாமணி.

முகத்தைத் துடைத்துக் கொண்டு துண்டைக் கொடுத்தவன், பூசிக்கொள்ளத் திருநீறு கேட்டான். கீழே போய்ப் பழனி விபூதியைக் கொண்டு வந்நாள்.

அதை' ''முருகா, சுவாமிநாதா'' என்று எடுத்து அள்ளி அவன் பூசிக்கொண்டான். எதிரில் ஒரு தாம்பாளத்தில் இட்டிலி இருந்தது. ''இவ்வளவு நெய்யை அதன் தலையில் உருட்டி வைத்துத் தருகிறாயே; உடம்புக்கு ஒத்துக் கொள்ளுமா!'' என்று கேட்டான்

''எல்லாம் ஒத்துக்கொள்ளும். பேசாமல் வாயைத் திறந்து சாப்பிடுங்கள்.''

''மனிதன் கீழே விழுந்துவிட்டால், நிமிர்ந்து நிற்கிறவர்கள் ஆட்டி வைக்கிறபடி ஆட வேண்டும் போலிருக்கிறது. இப்படி, நெய்க்கு இட்லியைத் தொட்டுக் கொண்டு தின்று எனக்குப் பழக்கமில்லை காந்தாமணி, சொல்வதைக் கேள்.''

''நான் சொல்லுவதைத்தான் நீங்கள் கேட்கவேண்டும். ஏனென்றால் டாக்டர் சொன்னபடித்தான் நான் செய்கிறேன்'' என்றாள்.

''தொட்டதற்கெல்லாம், அம்மாவும் பெண்ணும் டாக்டர் மீது பழியைப் போட்டுவிடுங்கள். எப்படியோ உங்களிடம் வந்து அகப்பட்டுக் கொண்டுவிட்டேன். சொன்னபடி கேட்காத வரை விடமாட்டீர்கள்; ஒழுங்காகக் கேட்டுவிடுகிறேன்.''

''அப்படி வாருங்கள் வழிக்கு. கரும்பு தின்னக் கூலி கேட்கிறீர்களே!'' என்றாள் காந்தாமணி புன்னகை பூத்தவாறு.

அந்தப் பார்வை, மின்னல் வேகத்தில் அவன் விழி வழிப் பாய்ந்து, புலன்கள் அனைத்தையும் ஒரு முறை ஆட்டி அலைக்கழித்துவிட்டது. ஹரியால் ஏறிட்டும் பார்க்க முடியவில்லை.

மந்திரசக்தியால் கட்டுண்டவன் போல் அவள் நீட்டிய கரத்திலிருந்து ஓவல்டினை வாங்கி, மளமளவென்று குடித்துத் தீர்த்தான்.

காலியான பாத்திரங்களை டிரேயில் அடுக்கி எடுத்துக் கொண்டு புறப்பட்டவளை, ''காந்தாமணி!'' என்று ஹரி அழைத்தான்.

அவள் ஆர்வத்தோடு திரும்பிப் பார்த்தாள்.

''நீ டிபன் சாப்பிட்டுவிட்டு மாடிக்கு வரும்போது, எனக்கு ஓர் உதவி செய்ய முடியுமா?''

''என்ன வேண்டும்? தபால் கார்டு தானே?''

''ஆமாம்'' என்றான் வியப்புடன்.

''கொண்டு வருகிறேன்'' என்று மகிழ்ச்சி பொங்கக் கூறிவிட்டு அவள் கீழே இறங்கிச் சென்றாள்.

வாழ்க்கையில், ஹரி அநுபவித்த துன்பமே அதிகம். அதற்கு பரிகாரமாகத்தான் இன்பத்தையும் மகிழ்ச்சியையும் கடவுள் இப்போது சிறிது சிறிதாக அவனுக்கு அளித்து வருகிறார் போலும். ஆனால், அந்த ஆனந்தத்துக்கும் அடித்தளத்தில் ஏதோ ஒரு வேதனை அவன் நெஞ்சை வாட்டியது.

'நான் ஏதாவது தவறு செய்கிறேனா—என்று எண்ணிப் பார்த்தான். 'உன்னால் முடியாது' என்று காயத்திரி அவனைப் பார்த்துச் சிரிப்பது போல் தோன்றியது. கண்களை கசக்கி விட்டுக் கொண்டு பார்த்தான். அந்த உருவமும், அந்தச் சிரிப்பும் மாறவே இல்லை. மீண்டும் கண்ணைக் கசக்க கையை உயர்த்தினான். காந்தாமணி அவன் கரங்களைப் பிடித்துக்கொண்டாள்.

''என்ன இது? பகலில் விழித்துக் கொண்டே தூங்குகிறீர்களா? எதிரில் நிற்கிற என்னை எதற்காகக் கண்ணைக் கசக்கிக்கொண்டு பார்க்கிறீர்கள்? ஏதாவது கனவு கண்டீர்களா?''

ஹரி அவளுடைய தளிர்க்கரங்களிலிருந்து, தன் கையை மெல்ல விடுவித்துக் கொண்டான்.

''கார்டு கொண்டு வந்தாயா காந்தாமணி?''

''இதோ.''

''பேனாவையும்'' கொடேன்.

''நீங்கள் சொல்லுங்கள்; நான் எழுதுகிறேன்.''

''ஏன்? டாக்டர் கடிதங்கூட என்னை எழுதக்கூடாது—என்று சொன்னாரா?''

காந்தாமணி சிரித்துக்கொண்டே கேட்டாள்: ''ஏன்? 'வாத்தியாருக்கு உடம்பு சரியில்லை, இரண்டு நாள் கழித்துத்தான் வருவார்' என்று நான் எழுதக்கூடாதா? ஒரு வேளை எனக்குத் தெரியாத ரகசியம் ஏதாவது எழுதப் போகிறீர்களா?''

''உன்னைப் புத்திசாலி என்று எண்ணிக் கொண்டிருக்கிறேன். இம்மாதிரி அசட்டுக் கேள்விகளை நீ கேட்கக்கூடாது.''

''அப்படி நான், என்ன கேட்டுவிட்டேனாம்?''

''இன்னும் என்ன கேட்க வேண்டும்? கல்ராணராமனை எங்கள் வீட்டில் எல்லாரும் ஆண்பிள்ளை என்று தான் எண்ணியிருக்கிறார்கள். இப்போது சொல், நீ யார்? கல்யாணராமனா, காந்தாமணியா?''

காந்தாமணி அவன் கண்களையே பார்த்துக்கொண்டிருந்துவிட்டு, அடித் தொண்டையில் மெல்லக்கேட்டாள்; ''நான் யார் என்று சொல்ல வேண்டுமா? சொல்லவா... சொன்னால் ஒப்புக்கொள்வீர்களா? கோபிக்க மாட்டீர்களே?''

ஹரி செயலிழந்தவன்போல், மிக அருகிலிருக்கும் அவள் முகத்தையே பார்த்தான்.

''ஏன் பதில் பேச மாட்டேன் என்கிறீர்கள்?'' காந்தாமணி அவன் தோள்களைப் பிடித்து உலுக்கிக் கேட்டாள்.

''நான் எதற்காகப் பேச வேண்டும்? நீதானே, ஏதோ சொல்கிறேன் என்றாய். கேட்க வேண்டியவன் ஊமையாகத்தானே இருக்க வேண்டும்?''

''ஊமையாக மட்டும் இருந்தால் போதாது. இனிமேல் நீங்கள் குருடாகவும் இருக்க வேண்டும். என் பெயர்

காந்தாரி; ஆனால் தேவகாந்தாரி அல்ல!'' புதிர் போட்டாற்போல் கூறியவள் விடுவிடென்று கீழே சென்று விட்டாள்.

ஹரி மட்டும் அந்தப் பெயரையே மனத்துக்குள் உருட்டிக் கொண்டிருந்தான். 'காந்தாமணிக்கும் காந்தாரிக்கும் என்ன சம்பந்தம்' என்று அவன் குழம்பிக்கொண்டிருந்தபோது, கையில் அவள் கொடுத்த தபால் கார்டுடன் ஒரு காகிதம் இருப்பதைக் கண்டான். அதைப் பிரித்துப் பார்த்த ஹரி பிரமித்துப் போனன்.

'காந்தாமணி—ஹரி' என்று எழுதி, அதில் அவள் பெயரில் உள்ள 'மணி'யையும், தன் பெயரிலுள்ள 'ஹ' வையும் நீக்கி, கூட்டியே அவள் தன் பெயரைக் காந்தாரி ஆக்கிக்கொண்டிருக்கிறாள் என்பது அவனுக்குப் புரிந்தது. ஆனால், அதே சமயம் தன்னைக குருடனாக, திருதராஷ்டனாக ஆகவேண்டுமென்று கூறியதின் உட்பொருளும் அவனுக்குப் புரிந்தது. காந்தாமணி போட்ட புதிரை அவிழ்த்துவிட்டதில் அடையவேண்டிய மகிழ்ச்சிக்குப் பதில், ஹரியின் உள்ளத்தில் கவலையே மேலோங்கியது.

இரவு மணி பத்தடித்தது. ஹரி கட்டிலில் படுத்திருந்தான். ஏனோ அவனுக்குத் தூக்கமே வரவில்லை. நாளை இரவு அவன் சுவாமி மலையில் படுத்துக் கொண்டிருப்பான். பஞ்சணையும் கட்டிலும் இன்றோடு சரி. ஆனால், அந்த மன அமைதியும், நிறைவும், இந்த வசதிகளை அநுபவிக்கும்போது ஏன் ஏற்படவில்லை? குணமானதும் உடனேயாவது புறப்பட்டுப் போயிருக்க வேண்டாமா? அதன் பிறகும் கடிதம் எழுதிப் போட்டுவிட்டு அதிக நாள் ஏன் தங்க வேண்டும்?

அவன் மனத்தில் பயம் சூழ்ந்து கொண்டது. 'ஊருக்குப் போனதும் காயத்திரிக்கு என்ன பதில் கூறுவது? அவள் என்னுடைய இந்தச் செய்கையை ஆதரிப்பாளா?

எவ்வளவு பெரிய தவறு செய்துவிட்டேன்?' என்று ஹரி தன்னையே கடிந்து கொண்டான்.

ஆனால், அதே சமயம், தான் மயக்கமுற்று விழுந்ததும், பணத்தைப் பணமென்று பார்க்காமல் செலவு செய்து, இரவு பகலாய் அருகில் இருந்து கண் விழித்து உயிரூட்டிய காந்தாமணியையும், அவள் தாயையும் மீறிக் கொண்டு புறப்படவும் அவனால் முடியவில்லையே!

கீழே சுவரிலிருந்த பெரிய கடிகாரம் மீண்டும் ஒரு முறை ஒலித்தது. இரவு மணி பத்தரை. எதேச்சையாக நிலைப் படி பக்கம் திரும்பியவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

இருள் சூழ்ந்த அறையில் மங்கலாக ஒளியை உமிழ்ந்து கொண்டிருந்த விடிவிளக்கின் தடத்தில், ஓர் உருவம் நிழலாடுவது போல் இருந்தது.

ஹரி கூர்ந்து கவனித்தான். எழுந்து உட்கார்ந்து "யார்?" என்றான்.

காந்தாமணியின் செல்லப் பூனை, துள்ளி அவள் கட்டிலில் ஏறியது. "உஸ்! ஏன் சத்தம் போடுகிறீர்கள்?" என்று அவன் வாயைக் கையால் மூடினாள் காந்தாமணி.

"நீயா?"—ஹரியின் குரல் குழறிற்று.

வாயைப் பொத்திய கையை, அவள் எடுக்கவே இல்லை. கை மகிழம்பூவாக மணத்தது. ஹரியின் உடல் நடுங்கியது. மாடிப்படியை அவன் கண்கள் துழாவின.

இருளில், நிலவின் ஒளியாகத் தான் அருகில் இருக்கையில்; விளக்கைப் போட எழுந்தவனின் கையைக் கெட்டியாகப் பிடித்துத் தடுத்தாள் காந்தாமணி.

"கையை விடு" என்று உதறியவனின் குரல், மார்கழி மாதக் குளிரில், நடுக்குளத்தில் நிற்பவனைப் போல் நடுங்கியது.

''ஏன் இப்படிப் பயந்து சாகிறீர்கள்?''

''ஆமாம், நீ ஏன் இப்போது இங்கு வந்தாய்?''

''ஏன்? வரக்கூடாதா?''

''வரலாமா?''

''அப்படித்தான் வருவேன்.''

''ஓ! இது உன் வீடு என்பதனாலா?''

''இல்லை, நீங்கள் என்னுடையவர் என்பதனால்.''

ஹரிக்கு உடம்பெல்லாம் 'குப்' பென்று வேர்த்தது.

''உடம்பு ஏன் இப்படி, அநாவசியமாக நடுங்குகிறது? நான் என்ன பேயா, பிசாசா?''

நனைந்துவிட்ட அவனுடைய கழுத்தையும் நெற்றியையும் துடைக்கப் போன காந்தாமணியின் கையை, ஹரி தடுத்து நிறுத்தினான்.

'பேய்க்கும் பிசாசுக்கும் நான் பயப்படுகிறவனல்ல. சுடுகாட்டின் பக்கத்தில்தான் என் வீடு' என்று கூறப் போனவன், ''இப்போது நீ போய்விடு காந்தாமணி, இல்லாவிட்டால் சத்தம் போட்டு அம்மாவைக் கூப்பிடுவேன்'' என்றான்.

''அம்மாவை ஏன் கூப்பிட வேண்டும்? என்னை உங்களுக்குப் பிடிக்கவில்லையா?''

''............''

''ஏன் பேச மாட்டேன் என்கிறீர்கள்? நான் உங்கள் கண்ணுக்கு அழகாக இல்லையா?''

''நான் அப்படியா சொன்னேன்?''

''பின் ஏன் என்னைப் 'போ போ?' என்று விரட்டியபடி இருக்கிறீர்கள்? நான் இங்கு வரக் கூடாதா?'' அவள் அவனையே பார்த்துக் கேட்டாள்; கண்களிலே காமம் மின்னியது.

''வரலாம்; ஆனால் இந்த நிலையில் அல்ல; உன்னை நான் இப்படி எதிர் பார்க்கவில்லை.''

''என்ன செய்ய? நான் இந்நிலைக்கு ஆளாகிவிட்டேன்.'' காந்தாமணி அவன் தலையை வருடிக்கொண்டிருந்தாள்.

''அது உன்னுடைய குற்றம்.''

''இல்லை, என்னை இந்த நிலைக்குக் கொண்டு வந்தவர் நீங்கள் தாம்.''

''நானா?''

''ஆமாம்.''

ஆச்சரியத்தினால், ஹரியின் நாக்கு மேலண்ணத்தில் ஒட்டிக்கொண்டது. காந்தாமணி ஹரியின் தோள்களைப் பற்றியவாறு கூறினாள்: ''உங்களுடைய இசையைக்கேட்டு என்றோ என் மனத்தைப் பறிகொடுத்திருந்தேன். ஆனால் இந்தச் சமீப காலத்தில், உள்ளத்தையும் குணத்தையும் கண்டு கொண்டபின், இனி நீங்கள் இல்லாமல் நான் இல்லை என்ற முடிவுக்கு வந்துவிட்டேன். எனக்கு அந்தப் பாக்கியம் கிட்டுமா?''

காந்தாமணியின் பேச்சைக் கேட்கக் கேட்க, குடத்துள் விளக்காக அவனுள் அடங்கிக் கிடந்த ஓர் உணர்ச்சி, மலையின் உச்சியில் பற்றி எரியும் பேரொளியாகக் கிளம்பத் தலைப்பட்டது.

ஹரி மிகவும் அமைதியாகவே கூறினான்: ''காந்தாமணி, நீ இப்போது இங்கிருந்து போய்விடுவது நல்லது. எதையும் நாளை பேசிக்கொள்ளலாம்.''

''காலையில்தான் நீங்கள் ஊருக்குப் போய்விடப் போகிறீர்களே!'' காலடியில் வந்து நின்ற பூனையைக் கையில் எடுத்து அணைத்துக் கொண்டவாறு கூறினாள்.

''அதற்காக?''

"எனக்கு இந்த ஓர் இரவுதான்; அதுவும் சில மணி நேரந்தான் சொந்தம். அதற்குள், என் மனத்தில் உள்ளதை எல்லாம் உங்களிடம் கூறாவிட்டால், என் இதயமே வெடித்துவிடும் போலிருக்கிறது. இந்த உலகில் நான் ஓர் அநாதை. எனக்கு வேறு யார் இருக்கிறார்கள்?" விக்கலும் விசும்பலுமாக இந்த வார்த்தைகளைக் கூறி முடிக்கு முன் காந்தாமணி சிறு குழந்தைபோல் அழுது விட்டாள்.

கண்களிலிருந்து வழிந்த கண்ணீர், ஆவி நீரைப் போல், அவன் புறங்கையின் மேல் உருண்டோடியது.

"அழாதே, அழாதே. இப்போது என்ன நேர்ந்து விட்டது? உன் சத்தத்தைக் கேட்டு, அம்மா மேலே வந்து நிற்கப் போகிறாள். அப்புறம் எனக்கு இந்த வீட்டிலே வேலை இல்லை. அதற்குத் தான், இன்று நீ இப்படி ஆரம்பித்திருக்கிறாய்."

"அப்படி ஒரு நாளும் நேராது."

"நேரத்தான் போகிறது."

"நேர்ந்தால் நானும் உங்களோடு வந்து விடுவேன்; என்னை ஏற்றுக்கொள்வீர்களா?"

"நிச்சயம் மாட்டேன்." —இடியே தலைமேல் இறங்கி விட்டாற்போல் ஹரி நடுங்கியபடியே கூறினான்:

"ஆனால் அந்த நிலைமையை உனக்கு ஏற்படுத்துவதற்கு முன் நானே கீழே சென்று விடுகிறேன்" என்று எழுந்தவனைக் காந்தாமணி மறித்தாள்.

"நில்லுங்கள். நானே போய் விடுகிறேன். அநாவசியமாக எனக்காக நீங்கள் ஏன் கீழே போகவேண்டும்? பயப்படாமல் நிம்மதியாகத் தூங்குங்கள். அம்மா வரமாட்டாள்; ஏனென்றால் அவள் கீழே இல்லை?" என்று கூறி, பதிலுக்குக்கூடக் காத்திராமல் விருட்டென்று செல்ல முயன்றவளை ஹரி தடுத்து நிறுத்தினான்.

''என்ன? அம்மா இல்லையா?''

''இல்லை. பிருகதீசுவரர் கோயிலுக்குக் கதை கேட்கப் போயிருக்கிறாள். ஒரு மணிக்குத்தான் வருவாள்.''

''இதை ஏன் நீ சொல்லவில்லை?''

''என்னை நீங்கள் எதைச் சொல்ல விட்டீர்கள்; வந்ததிலிருந்து, 'போ போ' என்று விரட்டிக் கொண்டிருந்ததைத் தவிர? இந்த உலகில் யாருக்குமே நான் வேண்டாதவளாகி விட்டேன்.''

''சொல்ல வந்ததை, நீ வருத்தப்படாமல் தாராளமாகச் சொல்; நான் கேட்கிறேன்.'' ஹரி விளக்கைப் போட்டான்.

''இனிமேல் சொல்ல என்ன இருக்கிறது? சொல்ல வேண்டியதை நான் சொல்லிவிட்டேன். நானே வெட்கத்தை விட்டு மீண்டும் கூறுகிறேன்; என் ஆசை தவறாகக் கூட இருக்கலாம். ஆனால் என்னால் உங்களை மறக்க முடியவில்லை. முன்பு உங்கள் இசையைப்பற்றி மட்டுமே அறிந்திருந்தேன். இப்போது உங்களுடன் பழக நேரிட்ட சொற்ப நாட்களுக்குள், உங்கள் உயர்ந்த உள்ளம் என்னை வசீகரித்துவிட்டது. என்னை மணந்து கொள்ள உங்களுக்குச் சம்மதாமா?''

''உன் விருப்பம் இப்படி இருக்கும் என்று நான் எண்ணவில்லை காந்தாமணி. ஆனால், நான் அதை நிறைவேற்ற முடியாமைக்கு வருந்துகிறேன். எனக்கு முன்பே திருமணமாகிவிட்டது.''

ஹரி வார்த்தைகளை முடிக்கவில்லை; காந்தாமணி பதறியே போனாள். ''உங்களுக்கு திருமணம் ஆகி விட்டதா?'' வார்த்தைகள் ஆச்சரியத்தின் எல்லைக் கோட்டையே தாண்டி நின்றன.

"'குழந்தைகள் கூட இருக்கின்றன. கர்த்தா ராகமே என் மனைவி. ஜன்ய ராகங்களே என் குழந்தைகள். இசையை ஆராதிப்பதைத் தவிர எனக்குத் தனியாக வேறு வாழ்க்கை கிடையாது. நீ எண்ணுவது போல், எனக்கு எவ்வித அந்தஸ்தும் இல்லை. கூறப் போனால், உன்னை மனத்தாலும் நினைத்துப் பார்க்கிற அருகதைகூட எனக்கு இல்லை. என் புற அழகையும், புகழையும் பார்த்து நீ ஏமாந்து விட்டாய்; இவற்றுக்கெல்லாம் புறம்பே உள்ள, என் உண்மை உருவம் உன் கண்ணுக்குப் புலப்பட்டால் நீயல்ல, எந்தப் பெண்ணுமே என்னை ஏறெடுத்தும் பார்க்க மாட்டாள் என்றே எண்ணுகிறேன்.

"'கூலிக்குக் காஸ் விளக்குத் தூக்கிப் பிழைக்கிற, ஓர் ஏழைக் குடும்பத்தில் பிறந்த நான், இசையில் பற்றுக் கொண்டதனால், சிற்றன்னையாலும், பெற்ற தந்தையாலும் கொடுமைக்கு ஆளானேன். வீட்டை விட்டே விரட்டப்பட்டு உயிரை மாய்த்துக் கொள்ளக் காவிரித் தாயை சரணடைந்தேன். ஆனால்,என்னை ஏற்றுக்கொள்ள விரும்பாத அன்னை, பாகவதரின் காலடியில் என்னை ஒதுக்கி விட்டாள். அன்று என்னை அன்போடு கை தூக்கி ஆதரித்தவர், இன்றுவரை என்னை ஆட்கொண்டு வருகிறார்.

"'இந்த உலகில், தாயும், தந்தையும், குருவும், தெய்வமும், அனைத்துமே எனக்கு அவர்தாம். நீ விரும்பி, ஏற்றுக்கொள்ள விழைகிற இந்த உடம்பு அவருடையது. உயிர் அவருடையது. இப்படி எதுவுமே எனக்கென்று சொந்தம் இல்லாத என்னிடம், எதை நீ யாசிக்கிறாய்? உனக்கு நான் எதைக் கொடுக்க முடியும்? உன்னை நான், மிகச் சிறந்த மாணவிகளில் ஒருத்தியாகத் தான் கருதி, மட்டற்ற மகிழ்ச்சி கொண்டிருக்கிறேன். உன் குரல் என்னைக் கவர்ந்தது. உன் புத்திசாலித்தனமும்,

சிறந்த இசைத் திறனும், என்னை உன்னிடம் இத்தனை தூரம் அன்பு செலுத்தி ஈடுபாடு கொள்ளச் செய்தன. இவையன்றி, வேறு எதைப் பற்றியும் நான் எண்ணிய வனல்ல. நீயும் அநாவசியமாக வேறு எதைப் பற்றியும் எண்ணாதே. 'நீ என் மாணவி. நான் உன் குரு' என்ற உறவைத் தவிர, வேறு எந்தப் பாத்தியதையும் நமக்குள் இருக்கக் கூடாது. அப்படி யிருந்தால்தான், நான் இனியும் இந்த வீட்டுக்கு வருவதில் அர்த்தம் இருக்கிறது. ஒரு முடிவைத் தேர்ந்தெடுக்க வேண்டியது உன் பொறுப்பு" என்று ஹரி மூச்சு விடாமல் கூறிய போதே, காந்தா மணிக்குத் துக்கம் பீரிட்டுக் கொண்டு வந்தது. அவள் தன்னையும் மீறி அழுதுவிட்டாள். அதே சமயம் வாசற் கதவை யாரோ பலமாகத் தட்டுகிற சத்தம் கேட்கவே, கண்களைத் துடைத்துக் கொண்டு அவள் வேகமாகக் கீழே இறங்கி ஓடினாள். பூனையும் அவளைத் தொடர்ந்தது.

# 30. பெரிய விலாசம்

தஞ்சாவூருக்குப் பாடத்துக்குப் போனவனைக் காண வில்லையே என்று, பாகவதர் கவலைப்பட்டுக் கொண் டிருந்தார். அவரோடு சேர்ந்து, வீட்டிலுள்ள அனைவருமே துயரத்தில் ஆழ்ந்திருந்தனர். அந்த துயரத்துக்கு மத்தியில் ஹரியிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. போன இடத்தில் உடம்பு சரியில்லாமற் போய் விட்டதென்றும், இப்போது சற்றுக் குணம் என்றாலும், மிராசுதார் வீட்டினர் யிடிவாதமாக இரண்டு நாள் தங்கி, உடம்பை பூரணக் குணப்படுத்திக் கொண்டு போகலாம் என்று வற்புறுத்துவதனால், வியாழன் காலை புறப்பட்டு வருவ தாகவும் எழுதியிருந்தான்.

அதைப் படித்ததும் பாகவதர் பதறிப் போனார்.— ''கண்காணாத இடத்தில், உடம்பு சரியில்லாமற் எதற் காகத் தங்க வேண்டும்? ஆளை அனுப்பலாம் என்றாலும், விலாசங்கூட அவன் எழுதவில்லையே! அவர்கள் அவனை நன்றாகக் கவனித்துக் கொள்ள வேண்டுமே; சங்கீதக் கலைக்கே அவன் பொக்கிஷமாயிற்றே. சுவாமிநாதன் தாம் அவனைக் காப்பாற்றி அனுப்பி வைக்க வேண்டும்'' என்று சதா வேண்டிக் கொண்டேயிருந்தார். லட்சுமி யாலும் கணவருடைய இதே வார்த்தைகளைத்தான் எதிரொலிக்க முடிந்தது.

காயத்திரி மட்டும், 'ஹரிக்கு ஒன்றும் நேர்ந்து விடாது. ஒரு குறைவுமில்லாமல் காந்தாமணி கவனித்துக் கொள் வாள். ஹரிக்குப் பெண்களிடம் அபிமானத்தைப் பெற்று

விடுகிற ராசி என்றுமே உண்டு, அதிலும் பணக்காரியான காந்தாமணியைப் பற்றிக் கேட்கவா வேண்டும்? ஹரிக்கு அங்கே இந்நேரம், ராஜ வைத்தியந்தான் நடக்கும்' என்று காந்தாமணியைப் பற்றி உயர்வாகவே கற்பனை செய்து மனத்தைத் தேற்றிக் கொண்டாள்.

வசந்தி, எல்லா விஷயங்களையும் கேட்டுத் தெரிந்து கொண்டுதான், ஊருக்குப் புறப்பட்டாள். ஹரியின் விஷயத்தில், தனக்கும் அம்மாவுக்கும் பங்கு உண்டு; அவனுக்கு ஏற்படும் நல்லது கெட்டதற்குத் தாங்களும் பாத்தியதைப் பட்டவர்கள் அல்லது அதற்காக வேதனைப்படுகிறவர்கள் என்று அங்கே அதிகமாக யாரும் காட்டிக் கொள்ளாதது, வசந்திக்கு உள்ளூற வேதனையை அளித்தது. ஒரு விதத்தில், தன்னையும் அம்மாவையும், அநேகமாக எல்லாரும் மறந்து விட்டதாகவோ, ஏன் ஒதுக்கிவிட்டதாகவோ கூட வசந்திக்குத் தோன்றியது. ஆனால் அவள் தன் அநுபவக் குறைவினால் அப்படி எண்ணிவதாகவே, சுந்தரி மகளைக் கண்டித்தாள். ஆனால் அதை வசந்தி ஒப்புக் கொள்ளத் தயாராக இல்லை. 'வரவர, பெரியம்மாவைத் தவிர, அந்த வீட்டில் நம்மை யாரும் மதிப்பதில்லை' என்று அவள் கூறினாள்.

''நீ சொல்லுகிறபடியே இருந்தாலும், 'அதற்காக நாம் அவர்களை ஒதுக்க முடியாது; ஒட்டிக்கொண்டுதான் வாழ்ந்தாக வேண்டும். யார் எப்படி இருந்தாலும், இனி மேல் எனக்கு எல்லாம் ஒன்றுதான். ஆனால், ஹரி எப்படி நம்மிடம் இருக்கிறான் என்பதுதான் நமக்கு முக்கியம்'' என்று கூறினாள்.

குறிப்பிட்டபடி ஹரி தஞ்சாவூரிலிருந்து வியாழக் கிழமை சுவாமிமலைக்கு வந்து சேர்ந்தான். அவனைக் கண்டவுடன்தான், பாகவதருக்கும், லட்சுமியம்மாளுக்கும் தெம்பு வந்தது.

சுசீலா வாய் ஓயாமல், ஹரியைக் கோபித்துக் கொண்டே இருந்தாள். ''மேல் விலாசம் இல்லாமல், மொட்டைக் கடிதம் எழுதிப் போடுகிற பழக்கம் என்ன பழக்கம்? எங்களுக்கெல்லாம் எத்தனை கவலை யாய்ப் போய்விட்டது! வந்து ஒருநடை பார்க்கலாமென் றால் கூட, தஞ்சாவூரில் மிராசுதாரர் கல்யாணராமன் வீடு என்றால் யார் கண்டார்கள்? எங்கே தேடிக்கொண்டு போவது?'' என்று கேள்விமேல் கேள்வியாகக் கேட்டு ஹரியைத் திணற அடித்தாள்.

ஹரி, அதற்கெல்லாம் சேர்த்து ஒரே பதில்தான் கூறி னான்: ''நான் மிகவும் பலவீனமாக இருக்கிறேன். இன்னும் பூரண குணம் அடையவில்லை'' என்றான்; 'உன் தாக்குதல்களை என்னால் தாங்க முடியாது' என்பதே போல்.

ஹரி ஊரில் இல்லாதபோது வந்த கடிதங்களைக் கொண்டு வரும்படி பாகவதர் கூறினார். சுசீலா அவற் றைக் கொண்டு வந்து ஹரியினிடம் கொடுத்தாள். முக்கிய மான கடிதங்களுக்கு அவன் உடனே பதில் எழுதிப் போட்டான்.

பாகவதரைப் பார்க்க டாக்டார் வந்தார். அப்போது அருகில் இருந்த சுசீலா, ஹரியின் உடம்பையும் பார்க்கும் படி கூறினாள். ஹரியையும் சோதித்து நீளமான 'பிரிஸ் கிரிப்ஷன்' ஒன்றை எழுதிக் கொடுத்தார். ''அதிக உழைப் பினால் ஏற்பட்ட பலவீனத்தைத் தவிர, வேறு ஒன்று மில்லை'' என்று சொன்னார்.

''டாக்டர் சொல்லிவிட்டுப் போனது ஒரு புறம் இருக் கட்டும்; கச்சேரிக்குப் போய்ப் பாட வேண்டியது தீராத விஷயம். ஆனால், திருவிடைமருதூருக்கும், தஞ்சாவூருக் கும், இப்போது டியூஷனுக்குப் போகாவிட்டால் என்ன?'' - இதுதான் சுசீலாவின் கேள்வி.

ஆனால், ஹரி செய்கிற காரியத்தில் தலையிடுவதை பாகவதரும், லட்சுமியம்மாளும் குறைத்துக் கொண்டு, "அவனுக்குத் தெரியாதா? இன்னும் அவன் என்ன பச்சைக் குழந்தையா?" என்று ஒதுங்கியே நடந்துகொண்டார்கள்.

பாகவதர் படுக்கையில் விழுந்ததிலிருந்து பெருகிய குடும்பச் செலவுக்கு எல்லா வருவாயும்தான் தேவைப் பட்டது. போன நாள், போகாத நாள் என்று, கணக்குப் பார்க்காமல், மாதம்மாதம், நானூறோ, ஐநூறோ தஞ்சாவூர் மிராசுதார் கொடுத்ததாக ஹரி கொண்டு வந்து கொடுத்துக் கொண்டிருக்கிறான். இந்த நிலையில் அறவே டியூஷனுக்கும் போகாமல் இருந்தால் எப்படி?

'ஹரி படுகிற சிரமத்தைப் பார்த்து, திருவிடைமருதூருக்காவது போவதைக் கொஞ்ச நாள் நிறுத்திக்கொள்ளச் சொல்லலாம் என்றாலோ, அது பெரிய விபரீதமாகிவிடும், சுந்தரிக்குப் புரிந்தாலும், வசந்தி சிறிசு; இரண்டுங்கெட்டான். ஏதாவது தவறாக எடுத்துக் கொள்வாள். எல்லாவற்றுக்கும் மேல்; நாளைக்கு அவனையே கட்டிக் கொள்ளப் போகிறவள்' என்று பலவாறு எண்ணிப் பார்த்த பிறகு, லட்சுமியம்மாள் ஏதும் கூறாமல் இருந்துவிட்டாள். அவன், முதல் நாள் திருவிடைமருதூருக்குப் போனபோது சுசீலா தடுத்துப் பார்த்தாள். ஹரி அதைக் காதில் வாங்கிக் கொள்ளாமல், அம்மாவிடம் சொல்லிக்கொண்டு புறப்பட்டுச் சென்றுவிட்டான்.

வர வரத் தன்னை, ஹரி லட்சியம் செய்வதில்லை என்று சுசீலாவின் உள்ளத்தில், லேசாக உறுத்திக் கொண்டே இருந்தது. பணம் காசை உத்தேசித்துத் தஞ்சாவூருக்குப் போவதாவது அவசியம் என்று அவள் ஒப்புக்கொள்ளத் தயாராக இருந்தாள். ஆனால், 'திருவிடைமருதூருக்குப் போய் இப்போது வசந்திக்குக் கிளாஸ்

எடுத்தால் வயிறா நிறையப் போகிறது? போகவிட்டால் தலை வெடித்துவிடுமா; அரங்கேற்றம் நின்று போகுமா?' என்று மனத்துக்குள்ளேயே பொருமிக் கொண்டாள்.

ஹரிக்குத் தஞ்சாவூரிலிருந்து வந்ததிலிருந்து, மன நிம்மதி இல்லை. காந்தாமணியின் மனத்தை மிகவும் புண் படுத்திவிட்டதாக, உள்ளுணர்வு அவனை உறுத்திக் கொண்டேயிருந்தது.

பார்க்கப் போனால், இதற்கெல்லாம் முதல் குற்ற வாளி, தானே என்பதை உணர்ந்தான். ஆதியிலிருந்தே அவன், தன்னை ஒரு பாட்டு வாத்தியாராக எண்ணிக் கொண்டு, அந்த வீட்டுக்குச் செல்லவில்லை. சத்திரத்தில் தங்கியிருந்தவனை, வருந்தி அழைத்துச் சென்றார்கள்; ராஜ உபசாரம் செய்தார்கள். அவனுடைய பாட்டு அவர் களுக்குப் பிடித்திருந்தது. பெண்ணுக்கு, ஹரி பாட்டுச் சொல்லிக் கொடுக்க ஒப்புக்கொள்ள வேண்டுமே என்று கவலைப்பட்டாள் காந்தாமணியின் தாய்.

ஆரம்பத்தில், அவனும் பிடி கொடுக்காமல் சற்றுப் பிகுவோடுதான் நடந்து கொண்டான். ஆனால் நாளடை வில், அவனுடைய பிடிகள் எல்லாமே நழுவிப் போய், அவன் அவர்களுடைய அன்புப் பிடியில் வசமாகச் சிக்கிக் கொண்டான். காந்தாமணிக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கப் போவதைக் கச்சேரிக்குப் போவதைவிட முக்கியமாகவும், அதிக மதிப்புள்ளதாகவும் கருதினான். அப்படிக் கருதுவது அவனுக்கு மகிழ்ச்சியை அளித்தது; திருப்தியைத் தந்தது. ஆனால், அந்த அதிர்ஷ்டத்தில் திடீரென்று இப்படி இடி விழுமென்று அவன் எதிர் பார்க்கவே இல்லையே!

சுவாமிமலை டாக்டர் எழுதிய டானிக், நன்றாகவே வேலை செய்தது. ஹரிக்குப் பழைய தெம்பு மீண்டு, மிகுந்த உற்சாகமாகவே காணப்பட்டான். இடையே இரண்டு மூன்று கல்யாணக் கச்சேரிகளுக்கும் போய் வந்

தான். மத்தியில் ஒரு வாரத்துக்கு அவனுக்குச் சிறிய ஓய்வு இருந்தது. அதில், தஞ்சாவூருக்குப் போகலாம் என்று ஹரி முடிவு செய்திருந்தான். அவன் ஊருக்கு வந்த பிறகு காந்தாமணியிடமிருந்து தன்னைப் பற்றி விசாரித்துக் கடிதம் ஏதாவது வரும் என்றே ஆவலுடன் எதிர்பார்த்தான். ஆனால், அது எத்தனை பெரிய பைத்தியக்காரத்தனம் என்பது அவனுக்குப் பிறகு பட்டது. காந்தாமணியைக் கடிதம் எழுதக்கூடாது என்று எச்சரித்தவனே அவன்தானே?

எப்படியும், மறுநாளே தஞ்சாவூர்ப் பாடத்துக்குப் போய்விட்டு வந்தால்தான் அவன் மனத்துக்கு அமைதி ஏற்படும்போல் இருந்தது. காந்தாமணியைப் பார்க்காமல் அவனால் இருக்க முடியவில்லை. பாகவதர் அவனை நேசிப்பதுபோல், அவன் காந்தாமணியை நேசித்தான். அன்று அவனுடைய பேச்சு காந்தாமணிக்கு அதிர்ச்சியை அளித்திருந்தாலும், புத்திசாலியான அவள், யோசித்துப் பார்த்து என்ன முடிவு செய்து வைத்திருக்கிறாள் என்று அறிந்துகொள்ள வேண்டாமா என்று அவன் மனம் பறந்தது.

மறுநாள் காலை தஞ்சாவூருக்குப் புறப்பட்டது போது சுசீலா, "போகிற இடத்தின் விலாசத்தைக் கொடுத்து விட்டுப்போங்கள்" என்று குறுக்கே நின்றாள்.

"ஏன், மறுபடியும் நான் அங்கே போய்ப் படுக்கையில் விழுந்து விடுவேன் என்ற? அப்படியெல்லாம் ஒரு நாளும் நேராது. நூறு ரூபாய் டானிக் சாப்பிடிருக்கிறேன். ஆறு மாதத்துக்கு கவலை இல்லை; வழியைவிடு" என்றான் ஹரி.

உடனே சுசீலா, "உங்களைப் பற்றி இங்கே கவலைப் படுவதாகவா நான் கூறினேன்?" என்றாள் அலட்சியத்துடன்.

"பின் எதற்கு விலாசம் கேட்கிறாய்?"

"எல்லாருடைய கவலைக்கும் பாத்திரமாய்ப் படுத்திருக்கும் அப்பாவுக்காகத் தான் கேட்கிறேன், விலாசத்தைச் சொல்லுங்கள்."

ஹரி பரிதாபமாகத் திரும்பிப் பார்த்தான். காயத்திரி கதவோரமாக நின்று, 'மாட்டிக் கொண்டாயா?' என்பது போல் சிரித்தாள்.

"என்ன விழிக்கிறீர்கள்? விலாசம் மறந்து போய் விட்டதா?" சுசீலா ஒரு சொடுக்குச் சொடுக்கினாள். பொங்கி வந்த சிரிப்பை அடக்கிக்கொண்டு ஹரி அவளை விழித்துப் பார்த்தான்.

"விலாசம் மறந்துவிட்டது என்று யார் சொன்னார்கள் சுசீலா? நீ போய்ப் பேப்பரும் பென்சிலும் கொண்டு வா; எழுதிக் கொடுக்கிறேன்" என்றான் ஹரி,

"இதற்குப் பேப்பரும் பென்சிலும் வேண்டாம். சும்மாச் சொல்லுங்கள். நான் மாடிக்குப் போய்க் குறித்துக் கொள்கிறேன்" என்றாள் சுசீலா.

"சரி சரி, உன் இஷ்டம். விலாசத்தைச் சொல்லி விடுகிறேன்" என்ற ஹரி, "ஆர். கல்யாணராமன், கேர் ஆஃப் ஆதிநாராயண சேஷசாயி வைகுண்ட நாதன், பாலஸ் கார்டன்ஸ், 112 / 283 கட்பாலஸ் ரோடு, ஏழாவது சந்து, தஞ்சாவூர்", என்று கூறி முடிப்பதற்குள், "கொஞ்சம் இருங்கள்" என்று குறுக்கிட்ட சுசீலா, "பெரிய மிராசுதார், ராவ்பகதூர் என்று கூறிவிட்டுச் சந்தையும் பொந்தையும் சொல்கிறீர்களே" என்று கூறிக்கொண்டே 'பேப்பரும் பென்சிலும் எடுத்து வருகிறேன்', என்று மாடியை நோக்கி ஓடினாள். வெற்றிப் புன்னகையோடு ஹரி காயத்திரியைப் பார்த்துச் சிரித்தான்.

''பிழைத்துக் கொள்வாய்'' என்று அவளும் பதிலுக்குச் சிரித்தாள். மறுபடியும் சுசீலா வருவதற்குள் ஹரி புறப்பட்டுச் சென்று விட்டான்.

ஓடுகிற ரெயில் ஜன்னல் வழியே வெளியுலகைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தான் ஹரி.

பண்டாரவாடை ஸ்டேஷன் வந்ததும், ஹரி இரண்டு மூன்று கவுளி, இளம் வெற்றிலையாக வாங்கிப் பையில் வைத்துக் கொண்டான். காந்தாமணியின் தாய், மிகவும் அதிகமாக வெற்றிலை போடும் பழக்கமுடையவள். அது அவளுக்காகத்தான். அதேபோல் ஒவ்வொரு முறை போகும் போதும், ஹரி மறக்காமல் காந்தாமணிக்காக சுந்தரப்பெருமாள் கோவில் ஸ்டேஷனிலிருந்து, வெள்ளரிப் பிஞ்சு வாங்கிப் போவது வழக்கம். இம்முறை, அவன் கொஞ்சம் அதிகமாகவே வெள்ளரிப் பிஞ்சுகளை வாங்கிப் பையில் அடைத்துக் கொண்டான். திருவனந்தபுரம் பாஸஞ்சர் தஞ்சாவூர் ஸ்டேஷனுக்குள் நுழைந்தது.

ஹரி, வேகமாகப் பையைத் தூக்கிக்கொண்டு கீழே இறங்கினான். ''அண்ணா நமஸ்காரம்'' என்று, இரண்டு கையிலும் காபி டிரேயை ஏந்திய வண்ணம், வி. ஆர். ரூம் பையன் ஹரிக்குத் தலையால் வணக்கம் தெரிவித்தான். அவன் சங்கீத ரசிகன். ஹரியும் பதில் வணக்கம் கூறி மேலே நடந்தான். சிறந்த சங்கீத ரசிகர்களும், அனேகமாக அனைத்து பிரபல சங்கீத வித்வான்களுக்கும் நண்பரான வி. ஆர். ரூம், உப்புமா ராயருடன் அந்தப் பையனை ஹரி அடிக்கடிப் பாகவதரோடு செல்கையில் பார்த்திருக்கிறான்.

தொடர்ந்து வந்த பையன், ஹரியை மறித்து நின்று கொண்டு, ''காபி சாப்பிடுங்கள் அண்ணா'' என்று யாருக்கோ ஸ்பெஷலாக எடுத்துப் போன காபியை ஹரியிடம் நீட்டினான்.

இம்மாதிரியான ரசிகர்களிடம், லௌகிகப் பேச்சோ, மறுத்துப் பேசுவதோ பயன்படாது என்பது ஹரிக்குத்

தெரியும். ஏனெனில், அவர்களுடைய உபசாரம் உதட்டிலிருந்து வருவதில்லை; அந்தரங்க சுத்தியுடன் இதயத்திலிருந்து வருவது. ஆகவே, அவர்கள் மனத்தைப் புண்படுத்த ஹரிக்கு விருப்பமில்லை.

மறுக்காமல், அவன் நீட்டிய காபியை மளமளவென்று குடித்துவிட்டுச் சட்டைப்பைக்குள் கைவிட்டுப் பணத்தோடு ஹரி திரும்பினான்; பக்கத்திலிருந்த பையனைக் காண வில்லை. 'டாடா' காட்டிக்கொண்டே, இன்ஜின் வரைப் போய்விட்டான். இப்படிப்பட்ட விசிறிகள் ஹரிக்கு ரெயிலும் பஸ்ஸூம் ஓடுகிற மார்க்கத்தில் அனேகர் உண்டு.

அந்தப் பையனை மனத்தால் வாழ்த்திக் கொண்டே, மேம்பாலம் ஏறப் போனான். கையிலிருந்த பையை யாரோ பிடுங்குவது போல இருக்கவே, ஹரி திரும்பிப் பார்த்தான். பக்கிரி மந்தகாசம் புரிந்து கொண்டே, இரண்டு கைகளினாலும் ஹரியிடமிருந்த பையைப் பிடிவாதமாகக் கேட்டு வாங்கி, நாய்க் குட்டி போல் குழைந்து கொண்டே பின்னாலேயே பாலத்தில் ஏறினான்.

"எங்கே இவ்வளவு நூரம், மாமா?" ஹரி மெது வாகக் கேட்டான்.

"நாளாயிற்று! உங்களைப் பார்த்துவிட்டுப் போக லாம் என்றுதான் வந்தேன்" என்றான் பக்கிரி. இப்போ தெல்லாம் பக்கிரி, மருமானை மரியாதை போட்டுத்தான் அழைப்பது வழக்கம்.

ஹரி சிரிக்காமல் கேட்டான்: "சாதாரணமாகவே பேசு மாமா. நமக்குள்ளே மரியாதை எதற்கு? நான் இப்போது இங்கு வருவேன் என்று உனக்கு எப்படித் தெரிந்தது?"

அவன் பதில் சொல்லாததைக் கண்டு, இந்தச் சிங்கப் பூர்க் கைலியைக் கட்டிக்கொண்டு என் பின்னால் வரக்

கூடாதென்று, உனக்கு நூறு தடவையாவது நான் சொல்லியிருப்பேன் இல்லையா மாமா?'' என்றான் ஹரி.

''கோவிச்சுக்காதே தம்பி; பொய் சொல்லிப்பிட்டேன். நான் இப்படி இங்கே உன்னைச் சந்திப்பேன்னு நினைக்கவே இல்லை. எதிர்பாராமல் பார்த்தவுடன், தொட்டுக் கூப்பிடணும்னு ஆசையிலே கூப்பிட்டேன்.'' பக்கிரி மிகுந்த தாழ்ந்த குரலிலேயே கூறினான்.

இருவரும் பேசிக்கொண்ட, வண்டிப் பேட்டையை அடைந்தனர்.

''சரி, ஊரிலே எல்லாரும் சௌக்கியந்தானே?',

''எல்லாரும் சௌக்கியந்தான். அப்பாருக்குத்தான் ரொம்ப டேஞ்சரா இருக்கு. பாவாடை நிதம் ரெண்டு வேளையும் வந்து கவனிச்சு, மருந்துத் தண்ணி வாங்கிக் கொடுக்கிறான்.''

ஹரிக்குச் 'சுரீர்' என்றது. பக்கிரியின் பேச்சில் தொனித்த அபஸ்வரம் அவன் மனத்தைக் கலக்கியது. மின்னல் வேகத்தில் பாவாடையோடு, சித்தியின் பழைய நினைவும் அவன் நெஞ்சில் ஈட்டியைப் பாய்ச்சியது.

''அப்பனைக் கவனித்துக் கொள்ளப் பாவாடைதான் வேண்டுமோ? ஏன் மாமா, பணம் நான் கொடுக்கிறேன்; உனக்கு வீட்டோடு இருந்து குடும்பத்தைக் கவனித்துக் கொள்ளக்கூட முடியவில்லையா?''

''நீ கொடுக்கிறதைக் கொண்டு மாத்திரம் குடும்பம் நடக்குமா தம்பி?''

''அதுக்காக? நீயும் ரெயிலடி, பஸ் ஸ்டாண்டு, சினிமாக் கொட்டகை இங்கே எல்லாம் சம்பாதிக்கப் புறப்பட்டிருக்கிறாயா?''

''............''

''ஏன் மாமா பேசவில்லை?''

''............''

''உன்னாலே பேச முடியாது மாமா. உனக்குத் தான் இப்போ வெல்லாம் வெட்கம், மானம் எல்லாம் புரிய ஆரம்பித்து விட்டதே!''

''கோபிச்சுக்காதே தம்பி. இனிமே இந்தப்பாவாடைப் பயல் வீட்டுக்குள்ளாற நுழைஞ்சான்னா, காலை முறிச்சுப் புடறேன். வெளையாட்டில்லே; சத்தியமாகச் சொல்ல றேன் தம்பி!''

''ஏன் மாமா, சத்தியம் பண்ணினவுடனே, 'விட்டேன் விட்டேன்னு' அலறுவாயே. இப்போது பண்ணின சத்தியத்தை மாத்திரம், கெட்டியாய்ப் பிடிச் சுக்கப் போறியா?''

பக்கிரி குனிந்தபடியே சிரித்துக் கொண்டான். ஹரி பையிலிருந்து நாலைந்து வெள்ளரிப் பிஞ்சுகளை எடுத்து அவன் கையில் கொடுத்தான். பக்கிரி அதை அம்மன் கோயில் பிரசாதத்தைப் போல் பயபக்தியுடன் வாங்கிக் கொண்டான்.

''பணம் இருக்கிறதா, தீர்ந்து விட்டதா?''

''இன்னுமா தம்பி அது இருக்கும்? உன்னைப் பார்த்தே ஒரு மாசத்துக்கு மேலே ஆவுதே. அதுக்கும் முந்தித்தான் நூறு ரூவா கொடுத்தே?''

''ஏன் மாமா, நான் கணக்கா கேட்டேன்?''

''அதுக்கு இல்லே தம்பி; நீயும் கஷ்டப்பட்டுச் சம்பாதிக்கிறே; நல்ல எண்ணத்தோட கொடுக்கிறே. அத்தெ, நாங்க ஆழும் பாழும் ஆக்கலேன்னு சொல்ல றேன்.''

''மாமாவோடு பேச்செல்லாம் பிரமாதமாகத்தான் இருக்கு. ஸெண்ட் பூசுவதெல்லாம் இன்னும் இருக்கிறதா; இல்லே... விட்டாச்சா?''

''ஸெண்டாவது, மண்ணாவது தம்பி! கல்யாணத்துக்கு நிக்கிற ரெண்டு அக்கா பெண்ணுங்களையும், மானம் போகாமே கட்டிக் கொடுத்தாப் பத்தாதா? நான் ஒண்ணு சொன்னாக் கோவிச்சுக்க மாட்டியே?''

''சும்மாச் சொல்லு மாமா!''

இருவரும் நடந்தே கடைத்தெரு வரை வந்துவிட்டனர். பக்கிரி மெதுவாகக் கூறினான்: ''எங்கனாச்சும், ஒரு ஆயிரம் ரூபாய் புரட்டிக் கொடுத்தியானா, ரெண்டையும், எவன் கையிலாவது பிடிச்சுக் கொடுத்திடலாம். பின்னாலே நமக்குப் பெரிய, மலையத்தனை பாரம் குறைஞ்ச மாதிரி.''

''ஆயிரம் ரூபாய்''?—ஹரியின் உதடுகள் முணுமுணுத்தன. அதில், இரண்டு பேருடைய வாழ்க்கை மலருகிறது. தன் சகோதரிகளுக்காக, அவன் இதுகூடச் செய்ய வேண்டாமா?

''என்ன தம்பி யோசிக்கறே? கல்யாணச் செலவைப் பத்தியா?''

''ஆமாம்.''

''அதைப்பத்தி இப்போ என்ன தம்பி? உங்கிட்டே ஒரு வார்த்தை சொல்லி வச்சேன். சௌகரியப்படும் போது பார்த்துக்கிட்டாப் போவுது. இதுக்காக நீ வீணாக் கஷ்டப் படக்கூடாது.''

''கஷ்டம் ஒன்றும் இல்லை, மாமா. இந்தக் கல்யாணத்தைச் சீக்கிரமே நடத்திவிட வேண்டியதுதான். எனக்கு வேண்டியவர்கள் இந்தத் தஞ்சாவூரிலேயே இருக்கிறார்கள். நான் கேட்டால், எவ்வளவு வேண்டுமானாலும் கொடுப்பார்கள். அவர்களைக் கேட்டுத்தான், ஐயாவுக்குப் பெரிய வைத்தியமே செய்யலாம் என்று இருக்கிறேன்.''

''எந்த ஐயா? வாத்தியாருக்கா?''

''ஆமாம். அப்படியே கூட ஆயிரம் வாங்கி உன் கையில் கொடுத்தால், நீ எல்லாவற்றையும் கச்சிதமாக முடித்து விடமாட்டாயா?''

''நிச்சயமா, தம்பி.''

ஆயிரம் ரூபாய் அப்போதே தன் கைக்கு வந்து விட்டது போலவும்; தன் மேற்பார்வையில் அரசூரே கிடுகிடுக்கும்படி இரண்டு கல்யாணங்களையும் நடத்தி வைப்பது போலவும் பக்கிரி மகிழ்ந்தான்.

குறுக்கே போன ஜட்கா ஒன்றை, ஹரி கைதட்டிக் கூப்பிட்டான். பக்கிரி, தன் கையிலிருந்த பையை அதில் வைத்தான். ஹரி ஏறி உட்கார்ந்ததும் கம்பியைப் போட்டுவிட்டு, என்ன செய்ய வேண்டும்?' என்ற பாவனையில் உத்தரவுக்காகக் காத்திருந்தான்.

ஹரி, பக்கிரியின் சாப்பாட்டுச் செலவுக்கு ஐந்து ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்துக் கொடுத்தான். ''ராத்திரி என்னை ஸ்டேஷனில் சந்தி மாமா. உனக்கு ஏதாவது முடிவு சொல்லுகிறேன்'' என்று பக்கிரியை விடை கொடுத்து அனுப்பினான். பிறகு குதிரை வண்டி ஹரியின் உத்தரவுப்படி காந்தாமணியின் வீட்டை நோக்கி வேகமாக ஓடியது.

பக்கிரியோடு நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்த தனால், ஹரிக்கும் நன்றாகப் பசித்தது. சுவாமிமலையில் சாப்பிட்ட இட்டிலியும் காபியும், எப்போதோ ஜீரண மாகிவிட்டன. ஆனால், பக்கிரியுடன் ஹோட்டலுக்குள் நுழைய அவன் விரும்பவில்லை. நடுவழியில் வண்டியை நிறுத்தி, ஹோட்டலுக்குள் நுழையவும் அவன் விரும்ப வில்லை. ஏனெனில், ஹரியின் தலையைக் கண்டதுமே, முதலில், தட்டில் பலகாரத்தைக் கொண்டுவந்து வைத்துச்

சாப்பிடச் செய்த பிறகுதான் காந்தாமணியின்தாய் வேறு பேச்சைத் துவக்குவாள். ஆகவே, 'வழியில் பணத்தையும் செலவு செய்து; அவர்கள் மனஸ்தாபத்தையும் ஏன் சம்பாதித்துக் கொள்ளவேண்டும்?' என்று எண்ணி, பையிலிருந்த வெள்ளரிப் பிஞ்சை எடுத்து வாயில் போட்டுக் கொண்டான். அது, உப்பும், நீரும், இனிப்பும், கலந்த மாவாய் அவன் வாயில் கரைந்தது. அதற்குள் குதிரை வண்டி காந்தாமணியின் வீட்டு வாசலில் வந்து நின்றது.

மகிழ்ச்சியோடு, வண்டியிலிருந்து பையுடன் இறங்கிய ஹரி, வாசற்படியருகில் சென்றதும் அப்படியே பேய் அறைந்தாற்போல் திடுக்கிட்டு நின்றான். காந்தாமணியும், அவள் தாயும் அவனை வரவேற்பதற்குப் பதில்; கதவில் பெரிதாகத் தொங்கிய கொண்டிருந்த அலிகார் பூட்டுத் தான் ஹரியை வரவேற்றது. ஹரிக்கு ஒரு நிமிஷம் ஒன்றுமே புரியவில்லை. அவன் மனத்தை என்னமோ செய்தது.

# 31. சாயம் வெளுத்தது

ஏமாற்றம் தாங்காமல் ஹரி, கதவில் தொங்கிய பூட்டையே பார்த்துக் கொண்டிருந்தான்.

'அவர்கள் எங்கே போனார்கள்? இந்த மாதிரி, கதவு பூட்டியிருக்கும் வழக்கம் இல்லையே! ஒருவேளை உள்ளூரிலேயே எங்கேயாவது போயிருப்பார்களா?' என்று யோசித்தான். ஆனால், வாசலைப் பார்த்தால், பெருக்கிக் கோலமிட்டே பல நாள் இருக்கும் போலிருந்தது. 'சொல்லாமல் கொள்ளாமல், எங்கேயோ போய் விட்டார்களே' என்று எண்ணிய ஹரிக்கு வேதனையாக இருந்தது. அக்கம்பக்கம் விசாரித்தான். அவர்களுக்கு எவ்விதத் தகவலும் தெரியவில்லை.

கையிலிருந்த பை அவனைப் பரிதாபமாகப் பார்த்தது. வெள்ளிரிப் பிஞ்சும், வெற்றிலையும், அவனைப் பார்த்து ஏளனமாகச் சிரிப்பதாகத் தோன்றின.

அர்த்தமில்லாமல், எத்தனை நேரம் பூட்டியிருக்கும் வீட்டு வாசலின் முன்னால் நிற்பது! 'இப்படி ஏமாற்றி விட்டார்களே!' என்று, அவனுக்குச் காந்தாமணிமீது கோபமே வந்தது.

நேராக, அந்தத் தெருவைக் கடந்து வெளியே வந்தான். 'சுசீலாவிடம் பொய் சொல்லிவிட்டு வந்ததற்குத் தண்டனையா இது?' என்று எண்ணிப் பார்த்துக் கொண்டான். இனிமேல் என்ன செய்வது? எங்கே போவது?—

பக்கிரியிடம் கூறிவந்த வார்த்தைகள் நினைக்கு வந்தன. வெட்கம் அவனைப் பிடுங்கித் தின்றது.

இரவுவரை, எங்கேயாவது பொழுதைப் போக்கிவிட்டுத்தான் பக்கிரியைச் சந்திக்க வேண்டும் என்று முடிவு செய்து கொண்டு, நேராகக் கடம் நாராயணசாமியின் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தான்.

அபூர்வமாக வீடு தேடி வந்திருந்த ஹரியை, நாராயணசாமி மிகவும் அன்போடு வரவேற்றார். நாராயணசாமி பெரிய சம்சாரி. குழந்தைகள் எல்லாம் புதிய முகம் என்றும் பாராமல், "வாங்கோ மாமா, வாங்கோ மாமா" என்று ஹரியின் மடி மீதும், தோள் மீதும் ஏறி மிகவும் உரிமையுடன் கொஞ்சி விளையாடின. ஹரி அந்தக் குழந்தைகளுக்கு வெள்ளரிப் பிஞ்சுகளைக் கொடுத்தான். மிகவும் ஆவலோடு வாங்கிக்கொண்ட குழந்தைகள் எல்லாம், தெருவை நோக்கி ஓடிவிட்டன.

மத்தியான்னச் சாப்பாட்டுக்குப் பிறகு, நாராயணசாமி வெற்றிலைப் பெட்டியை ஹரியிடம் நீட்டினார். ஹரி பையில் இருந்த வெற்றிலையை அந்தப் பெட்டியில் வைத்தான். நாராயணசாமியின் முகம் ஆச்சரியத்துடன் மலர்ந்தது. 'எங்கோ, யாருக்கோ போய்ச் சேர வேண்டியவை, இங்கே வந்திருக்கின்றன' என்பதை நாராயணசாமி உணர்ந்து கொண்டாலும், ஹரி தன் வீட்டைத் தேடி வந்ததில் அவருக்கு மிகவும் மகிழ்ச்சி.

மாலை வரை, தொழில் சம்பந்தமான பேச்சுக்களில் பொழுதை போக்கி விட்டு, ஹரி விடை பெற்றுச் சென்றான்.

புறப்படுகிற நேரத்தில் ஹரி, காந்தாமணியின் தாய் தந்தையைப் பற்றித் தெரியுமோ தெரியாதா என்கிற பாவனையில் நாராயணசாமியிடம் லேசாகப் பேச்சை ஆரம்பித்தான். உடனே நாராயணசாமி, "ஓ! காந்தாமணியின் பெற்றோரைப் பற்றித்தானே கேட்கிறீர்கள்?

அவர்களை எனக்கு மிகவும் நன்றாகத் தெரியுமே. பெரிய, ராஜ பரம்பரை. நான் அடிக்கடி அவளுடைய தாயாரைப் பார்ப்பதுண்டு. காந்தாமணிக்கு நீங்கள் பிரமாதமாகச் சிட்சை சொல்லி வைத்திருப்பதாக அவர்களுக்கு மிகவும் சந்தோஷம்'' என்றான்.

ஹரிக்கு மயக்கமே வந்துவிடும் போலிருந்தது. அநியாயமாகக் காலையிலிருந்து வெட்டிப் பேச்சுப் பேசி பொழுதைக் கழித்து விட்டோமே என்று அவன் வருந்தினான். ''இப்பொழுது அவர்கள் எங்கே போயிருக்கிறார்கள்?'' என்றான்.

''அதுதான் எனக்கும் நிச்சயமாகத் தெரியவில்லை. ஏதோ அவசரமாகக் காந்தாமணிக்குத் திருமணம் நிச்சயமாகி, அவர்கள் எல்லாரும் வடக்கே எங்கோ போயிருப்பதாகக் கேள்வி'' என்றார்.

இந்தச் செய்தி ஹரியைத் திகைக்க வைத்தது. ஆயினும், அவன் தன் அதிர்ச்சியை வெளிக்காட்டிக் கொள்ளாமல், ''இனிமேல் அவர்கள் இங்கே எப்போது வருவார்கள், ஏதாவது தெரியுமோ?'' என்றான்.

''இனிமேல் அவர்கள் இங்கு வருகிற உத்தேசமே இல்லை போல் இருக்கிறது. வீட்டைக்கூட விற்று விடப் போவதாகக் கேள்வி. ஆமாம், உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டுமே?''

அந்தக் கேள்வி ஹரியின் நெஞ்சைத் துளைத்துக் கொண்டு மறுபுறம் பாய்ந்தது. நகமும் சதையும் போல், அந்தக் குடும்பத்திலேயே ஒருவனைப் போல் பழகி விட்டு, முடிவு இப்படியா ஆகவேண்டும்? என்ன பதில் கூறுவதென்றே அவனுக்குப் புரியவில்லை.

நாராயணசாமி இங்கிதமாக - தன் கேள்விக்குப் பதிலை எதிர்பார்க்காதவன் போல், ஜாடையாகவே உள்ளே போய் விட்டான். இதற்குள் குழந்தைகள், விருந்

தாளி ஊருக்குப் புறப்பட்டு விட்டதைப் புரிந்து கொண்டு ''காசு மாமா, காசு மாமா'' என்று ஹரியைச் சூழ்ந்து கொண்டன.

பையிலிருந்து எட்டணா நாணயங்களாக எடுத்து, ஐந்து குழந்தைகளின் கையிலும் ஹரி கொடுக்கும் போதே ஓரமாக இருந்த சற்றுப் பெரிய பையனும் தலையைச் சொறிந்து கொண்டே, ''மாமா'' என்று லேசாக முன கினான். ஹரி, அவன் கையிலும் ஒரு ரூபாயை எடுத்துக் கொடுத்தான். அப்போது அங்கே வந்த நாராயணசாமி 'பளார்' என்று பையன் முதுகில் ஓர் அறை வைத்து, ''தரித்திரங்களா! உங்களாலேயே இந்த வீட்டுக்கு யாராவது வரவேண்டுமென்றாலே, பயப்படுகிறார்கள். தொழிலே பாதி போயாச்சு வாங்கோ, எல்லாருமாச் சேர்ந்தே பிச்சை எடுக்கப் புறப்படலாம்'' என்று சீறி விழுந்தார்.

ஹரி, நாராயணசாமியைக் கண்டித்தான். குழந்தைகளைக் கோபித்துக் கொள்ளாதீர்கள். நான் என்ன அந்நியனா?'' என்று சமாதானப் படுத்தினான்.

''அப்படியில்லை சார், இதுகளுக்கு வேற்று முகமே கிடையாது. யாரைப் பார்த்தாலும்; வந்ததும கழுத்தைக் கட்டிக் கொள்ளவேண்டியது; போகும்போது காசுகேட்க வேண்டியது; கடைக்கு ஓட வேண்டிது அவ்வளவு தான்.''

''போகிறது, அந்த வித்தையையாவது கற்றுக்கொண் டிருக்கிறார்களே!''

''வித்தையா இது? அத்தனையும் சொத்தைகள். பெரிசிலிருந்து, சிறிசுவரை ஒன்றாவது தேறாது. அத்தனையும் அசடுகள். மானம் போகிறது'' என்று அலுத்துக்கொண்டே ஹரியின் கையில் ஒரு பையைக் கொடுத்தார் நாராயணசாமி.

"என்ன இது?" என்று ஆச்சரியத்துடன் கேட்டான் ஹரி.

"குடமிளகாய். பாகவதருக்கு ரொம்பப் பிடிக்கும். வாசலில் வந்தது. கொண்டு போய்க் கொடுங்கள்" என்றார்.

"அது சரி. இதுக்கு என்ன ஆச்சு?"

"சரிதான் அண்ணா, புறப்படுங்கோ. நீங்க வேறே! பயன்கள் உங்கள் ரெயில் செலவுக்கு ஏதாவது பாக்கி வைத்திருக்கிறான்களா; இல்லை, வேணுமா?" என்று வேடிக்கையாகக் கேட்டுக் கொண்டே வாசலுக்கு வந்தார். வரும்போது, ஹரி உள்ளே போய் நாராயண சாமியின் அம்மாவிடமும், மனைவியிடமும் சொல்லிக் கொண்டு புறப்பட்டான்.

வாசலில் ஜட்கா வண்டி தயாராகக் காத்துக் கொண்டிருந்தது.

ஸ்டேஷனுக்கு வந்த ஹரி, டிக்கெட்வாங்கிக் கொண்டு பாலத்தின் மீதேறினான். சொன்னபடி, பக்கிரி காத்துக் கொண்டிருந்தான். ஆயிரம் ரூபாய் கையில் வந்து விழப்போகிறது என்று கனவு கண்ட பக்கிரிக்கு, "போன இடத்தில், நான் தேடிப்போன ஆள் இல்லை. காரியம் இனிக் கைகூடுவது கஷ்டந்தான்; என்றாலும் நான் முயற்சி செய்கிறேன்" என்று ஹரி கூறிய சமாதானம் கசப்பான மாத்திரைகளை விழுங்குவது போலிருந்தது. ஆயினும், 'என்ன செய்ய; கொடுத்தா வைத்திருக்கிறோம்?' என்று மனத்தைச் சமாதானப்படுத்திக் கொண்டான்.

பர்ஸிலிருந்து ஐம்பது ரூபாய் பணத்தை எடுத்துப் பக்கிரியிடம் கொடுத்தான் ஹரி.

"இந்தப் பணத்தைப் பத்திரமாக வீட்டில் சேர்த்து விடு. இனிமேல், என்னால் முன்மாதிரிப் பணம் அதிகம்

கொடுக்க முடியாது. பணத்தை வீணாக்காமல் சிக்கன மாக இருங்கள். தங்கைகளின் கல்யாணத்தைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். அதற்கு நான் ஏதாவது ஒரு வழி செய்கிறேன்'' என்றான்.

அவன் வார்த்தையை ஊர்ஜிதம் செய்வதே போல், ஸ்டேஷன் மணி அடித்தது, பெருமூச்சும், சுடுநீரும் பெருக்கிக்கொண்டே, எஞ்சின், தண்டவாளத்தின்மேல் தவழ்ந்தது. பக்கிரி ஜன்னல் வழியாகப் பையைக் கொடுத்துவிட்டு விடைபெற்றுச் சென்றான்.

சுவாமிமலை வரை ஹரி, காந்தாமணி தியானத்தி லேயே இருந்தான்.

'அன்று இரவு, அவள் மாடிக்கு வந்து என்னுடன் வெகு நேரம் பேசிக்கொண்டிருந்தது அவள் தாய்க்குத் தெரிந்திருக்குமோ? அதனால், தாய்க்கும் மகளுக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு, விபரீதமாகியிருக்குமோ? இல்லா விட்டால், திடீரென்று வீட்டைப் பூட்டிக் கொண்டு சென்றதோடல்லாமல், வீட்டையே விற்றுவிட்டு; தஞ்சாவூர் வாடையே வேண்டாம் என்று எண்ணு வானேன்? காந்தாமணியின் திருமணத்துக்கு இப்போது அப்படி என்ன அவசரம் வந்துவிட்டது? அவர்கள் குடும் பத்தில் ஒரு குழப்பம் ஏற்பட, நாம் காரணமாகி விட்டோமா?'—இந்த வேதனை ஹரியின் மனத்தை மிகவும் வருத்தியது. எல்லாவற்றுக்கும் மேலாக, 'காந்தாமணியைப் போன்ற சிஷ்யையை, அல்லது ரசிகையை, இனி எப்போது பார்க்கப் போகிறோம்? இத்தனை அன்பும் ஆதரவும் காட்டியவர்களால், எப்படி ஒரேயடியாகக் கத்தரித்துக் கொண்டு செல்ல முடிந்தது? என்னால், இன்று ஒரு நாள் காந்தாமணியைப் பார்க்க இயலாமல் போனது தாங்க முடியாத தாபமாக இருக்கிறதே!' —என்று எண்ணிய படியே ஊரை அடைந்தான்.

ஹரி வீட்டினுள் நுழையும்போதே காயத்திரி அவனை ஜாடை காட்டி ஏதோ சொல்லி எச்சரிக்க முயன்றாள், ஆனால், அதற்குள் சுசீலா ஹரியைப் பார்த்து விட்டாள். "வாருங்கள் ஸார். ஏது இத்தனை சீக்கிரம் திரும்பி விட்டீர்கள்? நாளைக்குத்தான் வருவீர்கள் என்றல்லவா நினைத்தேன்?" என்று கூறிக்கொண்டே வந்தாள்.

ஹரி உடனே, "நீ எதுதான் நினைக்கமாட்டாய்? இந்தப் பையைக் கொண்டு போய் அம்மாவிடப் கொடு," என்று கையிலிருந்த பையைச் சுசீலாவிடம் நீட்டினான்.

அதை வாங்கிப் பார்த்த சுசீலா, "ஏது இத்தனை குடமிளகாய்? உங்கள் சிஷ்யர் கல்யாணராமன் கொடுத்தனுப்பினாரா?" என்றாள்.

"இல்லை, தஞ்சாவூரில் குடமிளாகாய் வியாபாரி ஒருவர் சாம்பிள் பார்க்கக் கொடுத்தார். பேசாமல் உள்ளே கொண்டு போய்க் கொடு என்றால்; அரட்டையடிக்கிறாயே" — சுள்ளென்று விழுந்தான் ஹரி. ஆனால் அதைப்பற்றிக் கவலைப்படாமல் சுசீலா பையை எடுத்துக் கொண்டு உள்ளே போனாள்.

அறைக்குச் சென்று ஹரி குருவைப் பார்த்தான். அவர் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தார். அங்கு வந்த காயத்திரி, "காந்தாமணியிடமிருந்து உனக்கு வந்த ஒரு கடிதத்தை, சுசீலா வாங்கிப் பார்த்து, எல்லா விஷயங்களையும் தெரிந்து கொண்டுவிட்டாள். ஏதாவது உளறிக் கொண்டே இராதே" என்று எச்சரித்துவிட்டுச் சென்றாள்.

ஹரி அப்படியே தரையில் உட்கார்ந்துவிட்டான். அன்றிரவு முழுவதும் அவனுக்கு உறக்கமே வரவில்லை.

'இத்தனை நாள் போகாமல் இன்று பார்த்துத் தஞ்சாவூருக்குப் போனோமே. காந்தாமணியிடமிருந்து கடிதமே வரவில்லையே என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்ததற்கு, மாறாகக் கடிதமும் வந்து; அது நம் கையில்

கிடைக்காமற் போனதோடு; அநியாயமாகச் சுசீலாவின் கையில் கிடைத்து விட்டதே என்று எண்ணி ஹரி வருந்தினான். அதில் காந்தாமணி என்ன எதியிருக்கிறாளோ? என் கடிதத்தைப் படிக்க அவன் துடித்தான்.

—அந்தக் கடித விஷயம், குருவுக்கும், அம்மாவுக்கும் தெரியுமோ? தெரிந்தால் அவர்கள் என்னைப்பற்றி எவ்வளவு தவறாக எண்ண இடமேற்படும்? காந்தா மணிக்குப் பாடம் சொல்லிக் கொடுக்க ஒப்புக்கொண்ட என்னுடைய நோக்கத்தை அவர்கள் சரியாகப் புரிந்து கொள்வார்களா?—

ஒரு வழியாகப் பொழுதும் விடிந்தது. லட்சுமியம்மாள், ஏதோ காரியமாகச் சுந்தரியைப் பார்க்கச் சென்றுவிட்டாள்.

அம்மா போனதும், சுசீலா ஹரியிடம் மிகவும் கடுமையாகக் கோபித்துக் கொண்டாள். காந்தாமணியைக் கல்யாணராமனாக்கி, தஞ்சாவூரில் இத்தனை காலம் நாடகம் ஆடி வந்ததுடன், பொய் விலாசம் வேறு கொடுத்ததற்காகவும், வாய்க்கு வந்தபடியெல்லாம் பேசினாள்.

"அப்பாவிடமும் அம்மாவிடமும் கடிதத்தைக் காட்டவா?" என்ற போது, துக்கம் அவள் நெஞ்சைப் பிளந்தது.

ஹரிக்கு ஒன்றுமே புரியவில்லை. திட்டி விட்டு, அவள் ஏன் அழவும் வேண்டும்?

"ஏன் பேச மாட்டேன்' என்கிறீர்கள்; சொல்லவா?"

"இன்னும் நீ அவர்களிடம் இதுபற்றிச் சொல்லவில்லையா?" ஹரிக்கு இதயத்தின் ஒரு மூலையில் உயிர் வளருவது போல் இருந்தது. "சொல்லாவிட்டால், தயவு செய்து நீ அதை வெளியிட வேண்டாம். நான் என்

நன்மைக்காகப் பொய் சொல்லவில்லை. நான் இப்படி நடந்துகொண்டது-சுய நலத்துக்காக அல்ல. நம் குடும்பத் தின்பொருளாதாரத் தேவைகளை ஓரளவாவது தீர்க்கவும், அப்பாவுக்கு நல்ல வைத்தியம் செய்ய வேண்டும் என்ற நல்லெண்ணத்துடனுமே ஒப்புக் கொண்டேன்'' என்றான்.

''அதற்காக? அப்பா தாம் ஆரம்பத்திலேயே அவர்கள் கேட்டபோது; முடியாது என்று அவர்களைத் திருப்பி அனுப்பி விடவில்லையா? அந்த இடத்தில் போய் நீங்கள் மீண்டும் பாட்டுச் சொல்லிக் கொடுக்கலாமா?'' என்றாள் சுசீலா.

''கூடாதுதான். அப்பாவிடம் அநுமதி கேட்டால் கிடைக்காது; அப்பாவின் மனமும் புண்ணாகக் கூடாது என்றே காந்தாமணியைக் கல்யாணராமனாக்கினேன். ஆனால், இதுவரை அவள் எத்தனை ஆயிரம் ரூபாய் கொடுத்திருக்கிறாள் என்று கணக்குப் பார்த்தாயா? அவை நமக்குத் தக்க சமயத்துக்கு எவ்வளவு உதவியாக இருந்தன?''

''பணம் கொடுக்கிறாள் என்பதற்காகவா?''

அருகிலிருந்த ஹரி மின்சாரத்தினால் இயக்கப்பட்டவன் போல் சுசீலாவின் வாயைப் பொத்தினான்.

''ஏன் இப்படிக் கத்துகிறாய்? அப்பாவின் காதில் விழுந்து, அவர் என்ன வென்று கேட்க வேண்டும் என்கிற எண்ணமா?''

சுசீலா சட்டென்று ஹரியின் கையைத் தன் வாயி னின்றும் ஒரு தட்டுத் தட்டினாள். ஹரி தன்னையே நொந்து கொண்டான். இவ்வளவு துணிச்சல் தனக்கு எப்படி வந்தது என்று அவனுக்கே புரியவில்லை.

ஆனால், அடுத்த விநாடி என்ன நினைத்தாளோ என்னவோ, ஹரியின் கரங்களைச் சுசீலாவே கெட்டியாகப் பிடித்துக் கொண்டு மெல்லக் கூறினாள்: ''இனிமேல்

லட்சம் ரூபாய் வருவதாக இருந்தாலும் நீங்கள் ஒரு பெண்ணுக்குப் பாட்டுச் சொல்லிக் கொடுப்பதற்காகப் படியேறிப் போகக் கூடாது. சம்மதிப்பீர்களா?''

ஹரியின் உடம்பெல்லாம் புல்லரித்தது. காந்தாமணி கேலியாகச் சிரிப்பது போல் ஹரிக்குப் பிரமை தட்டியது.

''முதலில் காந்தாமணியின் கடிதத்தை நீ என்னிடம் கொடு. பிறகு சம்மதத்தைப் பற்றிக் கேள்'' என்றான் ஹரி.

''கிழித்துப் போடப் போகிறேன். எதற்காக அந்தக் கடிதம்? வெட்கமாயில்லை? அவளைப் பார்க்க முடியவில்லையே, எழுத்தையாவது பார்த்து ஆனந்தப்படலாமென்றா?''

இந்த வார்த்தைகளைக் கேட்டதும், ''சுசீலா'' என்று அடித் தொண்டையில் அவன் கத்தினான். மான உணர்ச்சியால் அவன் உதடுகள் துடித்தன.

''அவளைச் சொன்னால் உங்களுக்கு ஏன் இப்படிக் கோபம் வர வேண்டும்?''

''நீ அவளைச் சொல்லவில்லை; என்னைச் சொல்கிறாய். என் ஒழுக்கத்தைக் குறை கூறுகிறாய். இன்னும் நான் இங்கிருந்தால், ஏதாவது பேசிக்கொண்டேயிருப்பாய். நான் ஒழிந்து போய் விடுகிறேன்'' என்று பதிலுக்குக் கூடக் காத்திராமல் ஹரி வெளியே சென்றுவிட்டான், அதைச் சற்றும் எதிர்பாராத சுசீலா அதிர்ந்து நின்றாள்.

காந்தாமணியின் கடிதத்தை வைத்துக் கொண்டு சுசீலா ஹரியை ஆட்டி வைத்ததையும், அவளுடைய அத்து மீறிய வார்த்தைகளைப் பொறுக்கமாட்டாமல் அவன் கோபித்துக்கொண்டு சென்றதையும் காயத்திரி கவனித்துக் கொண்டுதான் இருந்தாள். அவனை எண்ணி அவள் மிகவும் வேதனைப்பட்டாள். சுசீலாவை இப்படியே

இன்னும் விட்டுக் கொண்டிருப்பது தவறு என்று காயத்திரி நிர்மானித்தாள்.

அவளது கண்ணீரை விரல்களினால் துடைத்து விட்ட படியே, காயத்திரி கேட்டாள்: ''யாருக்காக அழுகிறாய் சுசீலா?''

இந்த வார்த்தைகளைக் கேட்டதும், சுசீலாவின் கட்டுக் கடங்கியிருந்த துக்கம் மீண்டும் பீறிட்டு வெளிப்பட்டது.

காயத்திரி அவளை அணைத்துக் கொண்டாள். இரு வரும் கிணற்றங்கறையில் துவைக்கும் கல்லின்மீது அமர்ந் திருந்தனர். தோட்டத்தைச் சுற்றிக்கொண்டு வந்த காலை இளங்காற்று 'சில்'லென்று முகத்தில் பட்டதும், சுசீலாவுக்குச் சற்றுத் தெம்பு வந்தது. காயத்திரி மெது வாகப் பேச்சைத் தொடங்கினாள்: ''உன்னை நான் புத்திசாலி என்று எண்ணியிருந்தேன்; அது தவறு என்று இன்று புரிகிறது. உங்கள் சண்டையை நான் கேட்டுக் கொண்டுதான் இருந்தேன்.''

எடுத்ததுமே காயத்திரி தொடுத்த வார்த்தைகளின் வேகம் தாளமாட்டாமல் சுசீலா அவளை ஒரு முறை ஏறிட்டுப் பார்த்தாள்.

''என்மேல் என்ன தப்பு?''

''அத்தனையுமே தப்பு. ஹரியிடம் நீ ஏன் இத்தனை கடுமையாக நடந்துகொள்கிறாய்? ஹரிக்கும் உனக்கும் என்ன சம்பந்தம்? முன்பு வசந்தியிடம் பேசக்கூடாதென்று சண்டை போட்டாய்; இப்போது காந்தாமணியைப் பார்க்கக் கூடாது என்கிறாய். இப்படி ஹரியைக் கோபித் துக்கொள்ள நீ யார்? உனக்கு என்ன உரிமை இருக்கிறது?''

இதைக் கேட்டதும் சுசீலாவுக்குக்கோபம்வந்து விட்டது. 'உரிமை இருப்பதனால்தான் சண்டை போடுகிறேன்.

என் வாழ்க்கைக்குப் போட்டியாக மற்றவர்கள் ஏன் வர வேண்டும்? அதைச் சகித்துக்கொள்ள என்னால் முடியாது.''

காயத்திரி மனதிற்குள் சிரித்துக் கொண்டாள். ''உன் வாழ்க்கைக்குப் போட்டியா? எது உன் வாழ்க்கை? அதை முதலில் சொல்; பிறகு உனக்குப் போட்டியாக இருப்பவர்களைப் பற்றிப் பேசிக் கொள்ளலாம்.''

சுசீலா விக்கித்துப் போனாள். காயத்திரியின் கேள்வி அவளுடைய மூளையைத் தாக்கியது. அவளுக்கு என்ன பதில் கூறுவதென்றே தெரியவில்லை.

—'ஹரியைக் காணாமல் ஒரு நாள் இருக்க முடியவில்லை. வேறு ஒரு பெண் அவனை ஏறெடுத்துப் பார்ப்பதை மனம் அநுமதிப்பதில்லை. தஞ்சாவூரில் அவன் ஒரு வாரம் தங்கியவுடன், இந்த மனம் தவித்த தவிப்பையும் அநுபவித்த வேதனையையும் விவரிக்க வார்த்தைகளுக்கு வலிமை உண்டா? இந்தமிகச் சிறிய பிரிவையே தாங்க முடியாதபோது, நாளைக்கு வசந்தியோ, காந்தாமணியோ போட்டியிட்டுக்கொண்டு என் கையிலிருந்து ஹரியைத் தட்டிப் பறித்துக் கொண்டு போய்விட்டால்?'—

அதற்கு மேல் சுசீலாவினால் எண்ணிக்கூடப் பார்க்க முடியவில்லை. ஹரி இல்லாத வாழ்க்கையே வெறும் சூனியமாகத் தோன்றியது. அந்தச் சூனியத்தில் திக்குத் திசை தெரியாமல் தடுமாறிய அவளை, வலிய வந்து ஒரு கரம் அணைத்து. அந்தக் கரங்களைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்ட சுசீலா, ''அக்கா!'' என்று தேம்பித் தேம்பி அழுதாள்.

சுசீலாவின் அழுகையும்கண்ணீருமே அவளுடைய தோல்வியையும், உள்ளக் கிடக்கையையும் வெளிப்படுத்தின. ஆனால், இது காயத்திரிக்கு என்றோ தெரிந்த பழைய விஷயம். எவ்வளவுக்கு எவ்வளவு வெளிப்படையாக

எல்லோர் கண்ணிலும் படும்படியாக ஹரியை சுசீலா வெறுத்து வந்தாளோ; அவ்வளவுக்கு அவ்வளவு யாருக்கும் தெரியாமல் ஹரியைச் சுசீலா நேசித்தே வந்திருக்கிறாள். ஆனால், சுசீலாவுக்கே அது புரிய இத்தனை நாள் ஆனது தான் விந்தை!

—'ஹரிக்கு வேறு போக்கிடம் ஏது? அவன் என்னை விட்டு எங்கே போய்விட முடியும்?' என்ற எண்ணத்தை உடைத்து, 'ஹரி நீ விலைக்கு வாங்கிவிட்ட பொருளல்ல. மணமாகிறவரை, வசந்தி என்ன, காந்தாமணி என்ன, இன்னும் எத்தனை பெண்கள் வேண்டுமானாலும் அவனிடம் நேசம் பாராட்டலாம். அவனும் தனக்கு விருப்பமானவளை மணந்துகொண்டு சென்றுவிட முடியும். அவனுக்காக நீ என்ன செய்தாய்? நேசம் காட்டினயா, பாசம் பாராட்டினாயா? அவன் யாரோ, நீ யாரோ?' என்ற உணர்வு தூண்டப்பட்டவுடன்தான் சுசீலாவின் காதல் விழித்துக் கொண்டது.

ஆனால், இந்த விழிப்பு ஏற்பட்டவுடன் அவள் உள்ளம் குமுறியது. 'ஹரி எனக்குக் கிடைக்கமாட்டானோ?' என்ற ஏக்கம் பிறந்தது. எல்லை மீறிய அந்த ஏக்கத்துடன், அவள் காயத்திரியின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

'ஹரியை மணந்துகொள்ள எல்லா விதத்திலும் வசந்தியே பொருத்தமானவள் என்று அப்பாவும் அம்மாவும் ஆசிர்வதித்துக் கொண்டிருக்கின்றனர். சுந்தரியும், தன் மகளுக்கு, இந்தப் பெரிய வித்துவானை முடித்துவிட எண்ணியிருக்கிறாள். இந்த நிலையில் அவர்கள் மத்தியில் நான் போய் என்ன சொல்ல முடியும்? அப்பாவைப் பொறுத்த வரை மிகவும் முற்போக்காக நடந்து கொள்ளக் கூடியவர் என்றாலும், அம்மா சம்மதிப்பாளா? ஹரி கிடைக்காவிட்டாலும், விறகுக்கட்டையால் முதுகில் பத்து அடி நிச்சயம் கிடைக்கும். ஆகவே, இந்த

விஷயததில் ஓரளவாவது உதவக் கூடியவள் காயத்திரி ஒருத்திதான். அவளைச் சரண் அடைவதைத் தவிர எனக்கு வேறு புகலே இல்லை' - என்ற எண்ணம் மேலிட்டவுடன் சுசீலா தன்னையும் மீறி, "அக்கா!" என்று அழைத்தவாறு அவள் மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டு விம்மி விம்மி அழுதாள்.

சுசீலாவின் கண்களிலிருந்து உருண்டோடிய கண்ணீரை காயத்திரி விரலால் துடைத்து விட்டாள்.

"ஹரி இல்லாவிட்டால் என்னால் இந்த உலகில் உயிருடன் இருக்கவே முடியாது போலிருக்கிறது அக்கா!"

இந்த வார்த்தைகளைக் கூறிவிட்டுச் சுசீலா காயத்திரியின் முகத்தையே தீனமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள். தன் வாயிலிருந்து வந்த சொற்கள், அவளுக்கே விசித்திரமாக இருந்தன போலும்!

காயத்திரி மெல்லச் சிரித்தாள். ஆம்! ஹரியிடம் சுசீலா இத்தனை உள்ளன்புடன் இருப்பது யாருக்குத் தெரியும்?

"என் எண்ணம் ஈடேற வழியே இல்லையா அக்கா?" என்றாள் சுசீலா மீண்டும்

காயத்திரி சுசீலாவின் தலையை உயர்த்தி அவளது விழிகளையே பார்த்த வண்ணம் கேட்டாள்:

"வாயை திறந்து இதுநாள்வரை எதுவுமே நீ உபயோகமாகப் பேசினதில்லையே; எது உன் எண்ணம் சுசீலா? ஹரியை நீ காதலிக்கிறாயா?"

காயத்திரியின் இந்த வார்த்தைகளைக் கேட்டவுடன் சுசீலாவின் முகம் வானவில்லைப் போல் வர்ண ஜாலம் கொட்டியது.

அவளால் அதற்கு மேல் எதுவும் பேச முடியாது என்பது காயத்திரிக்குப் புரியும். சுசீலாவின் சுபாவமே அலாதியானது. வாழ்க்கையை உணர்ச்சி வழியே பார்க்கக் கூடியவள்? மேலெழுந்தவாரியாக ரசித்துக் கொண்டு போக அவளுக்குத் தெரியாது.

காயத்திரி அவளுடைய தலையை அன்போடு வருடிய வண்ணம் கூறினாள்: ''நான் உன்னிடம் ஒன்று கேட்கிறேன்; கோபித்துக் கொள்ள மாட்டாயே!''

சுசீலா தலையை அசைத்தாள். காயத்திரி கூறினாள்: ''உன் சுபாவத்தை இனியாவது மாற்றிக் கொண்டாக வேண்டும். மனத்துக்குள் மட்டும் அன்பு இருந்தால் போதாது. மனம் என்பது கண்ணாடிப் பாத்திரம் அல்ல; உள்ளே இருப்பதெல்லாம் வெளியே தெரிவதற்கு. எப்போது நீ ஹரியைக் காதலிப்பதாக ஒப்புக் கொண்டு விட்டாயோ, இனியாவது நீ அவனிடம் அன்பாக இருப்பது போல் நடந்து கொள்ள வேண்டும். அதை நாங்கள் நம்பியாக வேண்டும். அப்போதுதான் உன்னைப்பற்றிச் சொல்லி உன் காரியத்தை முடித்து வைக்க என்னால் முடியும்.

''ஆனால், இவையெல்லாம் நீயாக இஷ்டப்பட்டால் தான். அப்படி உன்னால் இயலாத பட்சத்தில் சொல்லி விடு; நானும் இதில் ஈடுபடுவதில் பயன் இல்லை. ஏனெனில், உன் காதலை நிறை வேற்றுவது என் கையில் மட்டும் இல்லை. ஹரியை, நானோ, பிறரோ சொல்லி இம்மாதிரி விஷயத்தில் பணிய வைக்க முடியாது. அது உன் அன்பினால் மட்டுமே ஆகக் கூடிய காரியம்.

''நான் உனக்காகச் சிபாரிசு செய்யலாம். அப்பாவும் அம்மாவும், வசந்தியை நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். வசந்தி, ஹரியையே ஆதியிலிருந்து அடையத் துடிக்

கிறாள். இது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். ஆயினும் இறுதியில் முடிவு என்று வரும்போது, ஹரியின் விருப்பத் துக்கு விரோதமாக யாரும் — அப்பா கூட குறுக்கே நிற்க மாட்டார். ஆகவே அவன் மனத்தைக் கவர்ந்து உன் னிடம் திருப்பிக்கொள்ள வேண்டியது உன்பொறுப்பு. அதில் வெற்றி கிட்டுவது உன் சாமர்த்தியத்தைப் பொறுத்த விஷயம்.

"ஆனால் இறுதியாக உன்னை ஒன்று கேட்கிறேன்; நன்றாக யோசனை செய்து பதில் கூறினால் போதும். ஹரியை நீ மனப்பூர்வமாகக் காதலிக்கிறாயா?"

"ஆமாம்."—யோசிப்பதற்கே இதில் ஒன்றுமில்லை என்பதே போல் பளிச்சென்று பதில் கூறினாள் சுசீலா.

"பின்னால் எத்தனை சங்கடங்களும், எதிர்ப்புகளும் வந்தாலும்—ஏன், நாளைக்குச் சுந்தரி சித்தியின் எதிரி லும் நீ இதைத் தயங்காமல் சொல்லுவாய் அல்லவா?"

"நிச்சயமாகச் சொல்லுவேன். சித்தி என்ன? குறுக் கிட்டால், வசந்தியிடமே என் காதலுக்காகப் போராடத் துணிந்துவிட்டேன். ஹரி இல்லாமல் என்னால் இருக்கவே முடியாது. சண்டை போட்டுக் கொண்டாவது நான் ஹரியோடுதான் வாழ்வேனே அன்றி; என்னால் ஹரியைப் பிரிந்திருக்கவே முடியாது. இதை நான் இப்போதே அப்பா விடம் வேண்டுமானாலும் சொல்லிவிடுகிறேன்" என்று எழுந்தாள். உடனே காயத்திரி அவளுடைய கையைப் பிடித்திழுத்து அருகில் உட்கார்த்திக் கொண்டாள்.

"இந்த அவசரந்தான் கூடாது என்கிறேன். நினைத் ததை யெல்லாம் வாரிக் கொட்டுவதற்கு, மனம் என்பது குப்பைக் கூடையல்ல. அது வைரப் பேழை. அதில் மிக உயர்ந்த பொருளை வைத்துக் கொள்ள வேண்டும்" என்றாள் காயத்திரி.

"அந்த வைரப் பேழையில்; ஹரி என்னும் மிகவும் உயர்ந்த தங்கச் சிலையைத் தான் அக்கா பிறர் தீண்ட முடியாதபடி பூட்டிவைத்திருக்கிறேன்," என்று கூறிய சுசீலா கலகலவென்று சிரித்தாள். காயத்திரியும் அந்த அதிசயப் பெண்ணின் ஆனந்தச் சிரிப்பில் கலந்து கொண்டவாறு எழுந்து உள்ளே சென்றாள்.

## 32. கனவல்லவே!

வானத்துச் சந்திரன் வெடித்து அமுதமாய்ப் பொழியும் சுகத்தைப் பற்றி ஹரிக்குத் தெரியாது. ஆகாயத்திலுள்ள நட்சத்திரங்கள், பாரிஜாத மலர்களாக மாறித் தலையில் பொல பொலவென்று கொட்டினால் ஏற்படுகிற இன்ப உணர்ச்சியை அவன் நுகர்ந்தவனல்ல. ஆனால் எல்லா வற்றுக்கும் மேலானதொரு இன்பத்தில் அவன் மூழ்கிப் போனான்.

சுசீலா அவனைக் காதலிக்கிறாளாம்! ஆம்! இதயக் கதவுகளைத் திறந்து அதில் அத்தனை காலம் பூட்டி வைத் திருந்த எண்ணங்களை வாரி இறைத்து விட்டாள் சுசீலா!

வாழ்க்கையிலேயே அது ஒரு புனிதமான நாள். புது நிகழ்ச்சி. அந்த அநுபவம் அவனுக்குப் புதிது. எதையும் அவனால் நம்ப முடியவில்லை; நம்பாமலும் இருக்க முடிய வில்லை.

விழித்துக் கொண்டே தூங்குகிறோமா அல்லது தூங்கிக் கொண்டே விழித்திருக்கிறோமா என்று அவன் எண்ணிப் பார்த்தான். காதால் கேட்ட வார்த்தைகள் எல்லாம், சுசீலாவின் வாயால் கேட்ட வார்த்தைகள் தாமா என்பதை அவனுடைய செவிகளே ஏற்க மறுத்தன.

கண்ணால் காணும் பொழுதெல்லாம் விரோதியைப் போல் விரட்டிக் கொண்டே இருந்தவளின் உள்ளத்தில் இப்படி ஓர் எண்ணமா? இதைப் பகுத்தறிவு ஏற்குமா? ஹரி யோசித்தான்.

—'நல்ல பாம்பின் விஷந்தான் நாகரத்தினமாக உருப் பெறுகிறதாமே! அதைப் போல் ஒருவேளை, இதுவும் அப்படி உருவான காதலோ? யார் கண்டார்கள் இந்தப் பெண்களின் மனத்தை? ஆழம் காண முடியாத கடலைப் போன்றது அவர்களது உள்ளம் என்கிறார்கள். ஆழம் காண முடியாத கடலின் அடிவாரத்தில்தானே நல் முத்துக்களும், பவழங்களும் புதைந்து கிடக்கின்றன?

'ஆனால், மூழ்குகிறவனுக்குத்தானே முத்துக்கள் கிடைக்கும் என்பார்கள்! கரையில் நிற்பவன் தலையில் முத்துமாரி பொழிந்தால்?'—ஹரி வாய்விட்டே கேட்டு விட்டான்.

'ஒரு வேளை இதுவும் கடலின் கோபமோ?'—

சுசீலாவின் உள்ளம் இப்படிப் பாகாய் உருக, தான் எந்த அற்புதத்தையும் நிகழ்த்தி விட்டதாக ஹரிக்கு நினைவில்லை. 'மந்திரவாதிக் கதைகளில் வருகிற மாதிரி, சுசீலாவின் இந்தத் திடீர் மாறுதலுக்குக் காரணம் என்ன வாக இருக்க முடியும்? ஒரு வேளை காந்தாமணியின் கடிதமாக இருக்குமோ? அதில் அப்படி அவள் என்னதான் எழுதியிருக்க முடியும்?' என்று யோசித்து யோசித்து மூளையைக் குழப்பிக் கொண்டானே தவிர, விடை என்னவோ அவனுடைய யோசனைக்கு அப்பாற்பட்ட தாகவே இருந்தது. ஆனால் கடிதத்தைச் சுசீலாவிடம் கேட்க அவனுக்குத் துணிவில்லை. காயத்திரியிடம் கூறினான். ''அது யாரிடம் இருந்தால் என்ன? சமயம் வரும்போது வாங்கித் தருகிறேன்'' என்று கூறிவிட்டாள்.

சுசீலாவை நம்பி எதிலும் இறங்க அவனுக்குப் பயமாகவே இருந்தது. இத்தனை நாளாக அதட்டிக் கொண்டிருந்தவள் இப்பொழுது குழைந்து குழைந்து வந்து அன்பு காட்டிச் சிரித்துப் பேச முன் வந்தாலும், அவன் முன் போலவே, அவளிடம் ஒதுங்கியே பழகினான். பூனை

சாதுவாக மாறி விட்டாலும் பிறாண்டுகிற அதன் சுபாவம் மறைந்துவிடுமோ?

சுசீலாவின் இந்த விசித்திரக் காதலைப் பற்றிக் காயத்திரியிடம் ஹரி கூறினான்.

''நீயும் துணிந்து அதையே திருப்பிச் செய்து விடு'' என்று ஹரிக்கு உற்சாகமூட்டினாள் காயத்திரி. ஹரி மெல்லச் சிரித்தபடிக் கூறினான்:

''சுசீலாவுக்கு வாழ்க்கையே ஒரு விளையாட்டு. அவள் ஏது வேண்டுமானாலும் பேசலாம்; எப்படி வேண்டுமானாலும் நடந்துகொள்வாள். இன்று காதலிக்கிறேன் என்பாள். நாளை உன்னை நான் பார்த்ததே இல்லை என்பாள். அது போகட்டும்; அவளைத் திருத்த நான் யார்? ஆனால் புலி பாயத்தான் வேண்டும்; பாம்பு சீறத்தான் வேண்டும். இவற்றின் குணம் மாறினாலும் மனிதனுக்கு நம்பிக்கை ஏற்படாது. ஆகவே சுசீலாவை நான் பழைய சுசீலாவாகவே காண விரும்புகிறேன். உண்மையான சுபாவப்படி வாழ்வதுதான் இருவருக்கும் நல்லது. என் உள்ளத்தைப் பொறுந்தவரை, காதலுக்கோ, கல்யாணத்துக்கோ நான் இதுவரை இடம் கொடுக்கவில்லை. ஆயுள் முழுவதும் இசைக் கலைக்கே தொண்டு செய்து காலத்தை ஓட்டிவிட வேண்டும் என்பது என் விருப்பம். அந்த விருப்பம் ஈடேறாவிட்டாலும், சுசீலா போன்ற பெண்ணை நான் எண்ணிப் பார்க்கக்கூடாது. அது, ஐயாவுக்கும், அம்மாவுக்குமே என்மீது உள்ள நல்ல எண்ணத்துக்கு மாசு ஏற்படுத்திவிடும். நான் யார் என்று ஒருபோதும் மறந்ததில்லை. சுசீலாவுக்கும் மற்றவர்களுக்கும் வேண்டுமானால் என்னைப்பற்றி அதிகம் தெரியாமல் இருக்கலாம். ஆனால் என் வாழ்க்கையைத் தெரிந்து வைத்துள்ள நீங்கள் இப்படிச் சுசீலாவை ஆதரிக்கலாமா?'' என்று கேட்டான்.

''உன்னுடைய இந்தப் பேச்சிலிருந்து நீ என்மீது எவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறாய் என்பது புரிகிறது ஹரி.''

''நான் தவறாகப் பேசியிருந்தால் என்னை மன்னியுங்கள்.''

''நீ தவற முடியாது ஹரி. நீ கூறிய காரணங்களை நானும் ஒப்புக்கொள்கிறேன். உனக்கு மணமே வேண்டாம். ஆயுள் முழுவதும் இப்படியே ஆனந்தமாகப் பிரம்மச்சாரிப் பாட்டுப் பாடிக்கொண்டே உன்னால் காலத்தை வென்றுவிட முடியும். ஆனால், சுசீலாவை நீ ஏற்றுக் கொள்ளாவிட்டால், அவள் தன் உயிரையே மாய்த்துக் கொள்வாள். நான் எதையும் மிகைப்படுத்திக் கூறுவதாக நீ எண்ண வேண்டாம். சுசீலாவைப் பிடிக்காவிட்டால், உன்னை நான் வற்புறுத்தப் போவதில்லை. ஆனால், நீ இல்லை என்றால் தான் இல்லை என்ற நிலைக்கு அவள் வந்துவிட்டாள். சொல்லாலும், செயலாலும் அவள் இன்றுவரை உன் மனத்தை எவ்வளவோ புண்படுத்தியிருக்கலாம். இனிமேலும் இப்படியே அவள் இருக்கலாம். ஆனால், இத்தனைக்கும் புறம்பாக அவள் உன்னைப் பற்றி ஓர் உள்வாழ்வு வாழ்ந்து வந்திருக்கிறாள். அவளுடைய வாழ்க்கையை என்னைப்போல் யாரும் அத்தனை புரிந்து கொண்டதில்லை.

''சுசீலாவை எல்லாரும் மேலெழுந்தவாரியாகத் தான் பார்த்து வந்தார்களே தவிர, அவளுடைய அந்தரங்கத்தைப் பற்றி யாரும் கவலைப் பட்டதில்லை. அதைப்பற்றி யாருக்குத் தெரியும்? சிறு வயதிலிருந்தே அவளையும் அறியாமல் உன்னிடம் அவள் தன் உள்ளத்தைப் பறி கொடுத்துவிட்டாள். ஆனால், பறிபோனதை உணர்ந்து உன்னைத் தேடி அடைய அவளுக்கு இத்தனை காலம் தேவைப்பட்டதுதான் ஆச்சரியம். அசட்டுக் கர்வத்தி

னாலும், போலிக் கௌரவத்தினாலும் இறுமாந்திருந்த சுசீலாவின் கண்ணைத் திறந்த விட்டவர்கள் வசந்தியும், காந்தாமணியுந்தாம்.

"அன்று நீ தஞ்சாவூரில் தங்கிவிட்டவுடன், அவள் மனம் தவித்த தவிப்பையும், உனக்காக அவள் தனிமையில் சென்று அழுது தீர்த்து முகம் வீங்கி வெளி வந்ததையும் நான் காணத் தவறவில்லை. ஆனால், அவளுக்கு உலகத்துக்காக ஒன்று செய்யத் தெரியாது. பச்சைக் குழந்தையைப் போல; சிரிப்பு வராமல் சிரிக்கத் தெரியாது; அழுகை வந்தால் அடக்கிக்கொள்ளத் தெரியாது. இந்தக் குறைக்காக அவளை நீ வெறுத்துவிடப் போகிறாயா? அல்லது உன் விவேகத்தினால், இதுவே 'போலியற்ற' நிறைவு என்ற உண்மையை உணர்ந்து ஏற்றுக் கொள்ளப் போகிறாயா?

"நான் என் வாழ்வை இழந்ததைப் பற்றிக்கூட எண்ணி வருந்துவதில்லை. இந்த உலகில் என்னுடைய மிகப் பெரிய கவலைகளில் ஒன்று — சுசீலாவைப் பற்றியது. 'அவளுடைய இந்த விசித்திரமான உள்ளத்தைப் புரிந்து கொண்டு அவளை இறுதிவரை வெறுக்காத புருஷனாக அவளுக்கு வாய்க்க வேண்டுமே, என்பதுதான் அது. சுசீலாவாக விரும்பாத வரையில், அவளை யாரும் எந்த விஷயத்திலும் திருப்பிவிட முடியாது. ஆனால், அவள் மனம் உன்னை நாடுகிறது என்பதை அறிந்தவுடன் நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. ஏனெனில் அவளுக்காக நீ பிறந்திருக்கிறாய்; அதற்காகவே தெய்வம் உன்னை இங்கே கொண்டு சேர்த்திருக்கிறது என்பது என் நம்பிக்கை. ஆகவே உன் நன்மையைக் கருதி இல்லை என்றாலும்; சுசீலாவைக் கருதியாவது நீ இந்தக் காரியத்தைச் செய்வாய் என்ற என் நம்பிக்கையை நீ தகர்க்கமாட்டாய் என்றே நினைக்கிறேன்."

எதுவும் புரியாமல் ஹரி விழித்துக் கொண்டிருந்தான்.

சற்றுக் கழித்து அவன் கேட்டான்: ''சுசீலாவிடம் நான் யார் என்று விளக்கிக் கூறினீர்களா? நான் அநாதை என்பது அவளுக்கு மட்டுமல்ல, எல்லாருக்குமே தெரியும். ஆனால், விதி வசத்தால் அநாதைகள் ஆன உயர்ந்த அரச குமாரர்களும் உண்டு. அதில் நான் எந்த ரகத்தைச் சேர்ந்தவன் என்பதைக் கூறிவிட்டீர்களா?''

''கவலைப்படாதே. சுசீலா, அவ்வளவு அதிகமாக நீ ஒன்றும் அரசகுமாரனாக இருக்க வேண்டுமென்று ஆசைப்படவில்லை. உன்னைப் பற்றிய எல்லாமே இப்போது அவளுக்குத் தெரியும். ஆனால், அப்பாவுக்கும், அம்மாவுக்கும், இதை எப்போது சொல்ல வேண்டுமோ அப்போது நான் பார்த்துச் சொல்லிக் கொள்கிறேன். அது வரையில் இதைப் பற்றி யாரிடமும் நீ மூச்சு விட வேண்டாம்'' என்று காயத்திரி கூறிச் சென்று விட்டாள். அவள் சென்ற திக்கையே வெறிக்கப் பார்த்து நின்ற அவன் நீண்ட பெருமூச்சு விட்டான்.

வாரி வழங்குவதைத் தவிரக் காயத்திரி அவனிடம் எதையும் யாசித்தவளல்ல; அவனும் ஈந்தவனல்ல. ஆனால் இன்று தங்கைக்காக கை ஏந்தி வந்தவளிடம், ஹரி தன் விருப்பு வெறுப்பற்ற வாழ்வையே தூக்கிப் போட்டு விட்டான். அவளுக்காக அவன் இதைச் செய்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தான்.

மறுநாள் பங்களூர்க் கச்சேரிக்குப் புறப்படுவதற்கான ஏற்பாடுகளை ஹரி செய்து கொண்டிருந்தான்.

இரண்டு நாட்களுக்கு முன்பு புதிதாகப் போட்ட 'சாரணி' தந்தி கூடிக் குறைந்து கொண்டிருந்தது. அதைக் கூட்டிக் குறைத்துத் தந்தியைச் சரி பண்ணி வைத்துக் கொண்டான். அடிக்கடி கக்கிக் கொண்டிருந்த 'பிருடை'

யில் சாக்பீஸைத் தடவி ஏற்றி இறக்கினான்; மசியவில்லை. பிருடை ஓரங்களில் விரல் நுனியால் சிறிது தண்ணீரை நனைத்தான்; சொன்னபடி கேட்டது.

சுசீலா புதிய பட்டு நூலைத் திரித்துக் கொண்டு வந்து ஹரியின் கையில் கொடுத்தாள். வியப்போடு அவளையே பார்த்தபடி அதைப் பெற்றுக் கொண்டு 'ஜீவா' கூட்டினான். 'ஙொய்' என்று கிளப்பிய கம்பீர நாதம் அவன் மனத்தை நிரப்பியது.

ஹரி, தோல் பெட்டியைக் காலி பண்ணி வைத்தான். அதில் அவனுக்கு வேண்டிய துணிமணிகளையெல்லாம் சுசீலாவே அழகாக அடுக்கி வைத்தாள். பல்பொடியை யும் விபூதியையும் இரண்டு சிறிய மூடி போட்ட பாட்டில் களில் போட்டு நிரப்பி வந்து வைத்தாள்.

பிறகு ஏதோ ஞாபகம் வந்தவளைப் போல் விபூதியை வெளியே எடுத்தாள். ஹரி எப்போதும் விபூதியை வாரிப் பூசிக் கொள்ளுகிற வழக்கமுடையவன். அதனால்தான் அது போதாது என்று வேறு ஒரு பெரிய டப்பியில் நிறைய விபூதியைப் போட்டுக்கொண்டு வந்து வைத்தாள்.

இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த லட்சுமி யம்மாளுக்குத் தன் கண்களையே நம்ப முடியவில்லை.

வர வரப் பெண்ணின் போக்கு அவளுக்குப் புரியாத புதிராக இருந்தது. 'இதெல்லாம் ஒரு, வேளை ஹரி பாட்டு சொல்லிக் கொடுத்து வந்தானே அதனால் ஏற்பட்ட குருபக்தியாக இருக்குமோ? ஆனால் அது என்ன அப்படித் திடீரென்று பொங்கி வழிகிற குருபக்தி? எப்படியோ ஹரி சௌக்கியமாக இருந்தால் சரி; இப்பொழுதுதான் அவனுக்கு நல்ல தசாபுக்திகள் திரும்பியிருக்கின்றன போலிருக்கிறது. நீடிக்கட்டும்!' என்று இருந்துவிட்டாள் லட்சுமி.

ஹரியோ, 'நினைத்தால் வாரி வழங்க இயலும் இத்தனை அன்பையும் பாசத்தையும் பூட்டி வைத்துக் கொண்டுதானே இத்தனை காலம் என்னிடம் கோபத்தையும் சிடுசிடுப்பையும் காட்டிப் போலி வேஷம் போட்டாள்?' என்று வியப்புற்றான்.

சுசீலா ஸூட் கேஸை மூடி மூலையில் வைத்தாள். தம்பூராவுக்கு உறையைப் போட்டு வைத்தாள். படுக்கையும் தலையணையும் வைக்க, அப்பாவின் ஹோல்டாலை எடுத்துக் கொண்டு வந்தவுடன், ஹரிக்குத் தூக்கி வாரிப் போட்டது. தன் படுக்கையே போதுமென்று ஹரி அதை அவளிடமிருந்து எடுத்துத் திரும்ப அதன் இடத்தில் வைக்கப் போனபோது லட்சுமியம்மாள், ''ஆமாம், இந்தப் பெண் இந்தப் பழசைக் கொண்டு போன போதே நினைத்தேன்; ஹரி, நீ பங்களூருக்குத்தானே போறே? அங்கேயே போய் நல்லதாக ஒன்று வாங்கி வைத்துக் கொள். ரூபாய் தருகிறேன்'' என்று அவனிடம் கூறினாள். லட்சுமியம்மாளுடைய அந்த வார்த்தைகளைக் கேட்டதும் ஹரிக்கு மனத்தை என்னவோ செய்தது.

''அம்மா, நான் இது பழசு, புதுசு என்று பார்த்துத் திரும்பக் கொண்டு வந்து வைக்கவில்லை. இது ஐயாவினுடைய படுக்கை. பூஜிக்க வேண்டிய பொருள்போல அதைக் கண்ணில் தொட்டுஒத்திக் கொள்ள வேண்டுமே தவிர; அதில் காலை நீட்டிப் படுத்துக் கொள்ளுகிற யோக்கியதையும் அந்தஸ்தும் எனக்கல்ல; யாருக்குமே கிடையாது.''

'தவறுதலாக விரல் கண்ணைக் குத்திவிடுவதுபோல், நாம் விகற்பமில்லாமல் பேசியதை இந்தப் பிள்ளை இப்படி அர்த்தம் எடுத்துக் கொண்டு விட்டானே!' என்று லட்சுமியம்மாளுக்கும் சங்கடமாய்ப் போய் விட்டது.

''உன்னை, நான் அப்படி நினைக்கக் கூடியவன் என்று சொல்லவில்லை. உன் பக்தி விசுவாசம் எனக்குத் தெரியாதா? எங்கே இருந்தாலும் பகவான் உன்னை க்ஷேமமாக வைத்திருப்பார்'' என்றாள் லட்சுமியம்மாள் இதைக் கேட்டுச் சுசீலாவின் உள்ளம் பெருமையால் பூரித்தது.

பங்களூருக்குப் புறப்படுவதற்கு முன்பு திருவிடை மருதூருக்குப் போய்ச் சுந்தரியையும், வசந்தியையும் பார்த்துவிட்டு வர வேண்டுமென்று ஹரி விரும்பினான். முன்னைப் போல அவன் அதிகம் ஊரில் தங்குவதுமில்லை; தங்கினாலும் அந்த ஒரு நாள், இரண்டு நாளில் அவனுக்கு மீண்டும் புறப்படுவதற்கு வேண்டிய காரியங்களைச் செய்து கொள்ளத்தான் பொழுது சரியாக இருந்தது. அதற்காக இப்படியே தள்ளிப்போட்டுக் கொண்டே போகக் கூடாது என்று எண்ணி அவன் அன்றே திருவிடைமருதூருக்குப் புறப்பட்டுச் சென்று விட்டான்.

அவன் போன சற்றைக் கெல்லாம் மங்களபுரி சமஸ்தானத்திலிருந்து ஹரிக்கு அழைப்பு வந்தது. அவனுடைய பாட்டைக் கேட்டு பரவசமான மங்களபுரி அரசர் ஹரியைக் கௌரவித்து அவனைத் தம் ஆஸ்தான இசை வாணர்களில் ஒருவராகச் சேர்த்துக் கொண்டிருக்கிறாரம்,

ஹரி வந்ததும் கொடுக்க வேண்டுமென்று சுசீலா அதை வாங்கிப் பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டாள்.

அப்பாவிடம் சுசீலாவின் விஷயத்தை இனியும் தெரிவிக்காமல் மூடி வைத்திருப்பது தவறு; அதைச் சரியான சந்தர்ப்பத்தில் தெரிவிப்பதுதான் நல்லது என்று, அதற்கானதொரு சமயத்தைக் காயத்திரி எதிர் பார்த்திருந்தாள்.

ஆனால், 'சுந்தரியின் செவிகளுக்கு இந்தச் செய்தி எட்டியவுடன் அவள் மனம் என்ன பாடுபடும்! வசந்தி

இதை அறிந்தவுடன் எப்படித் துடிப்பாள்?' என்பதையும் காயத்திரியினால் எண்ணிப் பார்க்க முடிந்தது. ஆயினும் மரணப் போரில் குதித்தவன், அஞ்சாமல் தன் கடமையைச் செய்துவிட வேண்டியதுதானே நியாயம் என்று தீர்மானித்துக் கொண்ட அவள், சரியான சந்தர்ப்பத்தில் தன் தகப்பனாரிடம் கூறிவிட்டாள்.

இந்தச் செய்தியைக் கேட்ட பாகவதர் அப்படியே அதிர்ந்து போய்விட்டார்.

'வசந்தியைத் தனக்குப் பிடிக்கவில்லை என்பதையோ; அல்லது சுசீலாவைத் தனக்குப் பிடிக்கிறது என்பதையோ, ஏன் இந்த ஹரி என்னிடம் இதுவரை சொல்லாமலே இருந்துவிட்டான்? இதற்குக் காரணம் என்னிடம் அவனுக்கு உள்ள பயமா, அல்லது மரியாதையா?' என்பதை அவரால் ஆராய முடியவில்லை.

சுசீலாவும், வசந்தியும், இரண்டு கண்களே என்றாலும், இதில் எதைக் குருடாக்கிக் கொள்ள அவர் மனம் ஒப்பும்? இந்தச் செய்தியைக் கேட்டால் சுந்தரியின் மனம் என்ன பாடுபடும்? இதை அவரால் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியவில்லை. காயத்திரி இந்தச் செய்தியைக் கூறியவுடன், முதல் நாள் அவளிடம் அவரால் எதுவுமே பேச முடியவில்லை.

மனத்தில் தெம்பை ஏற்றிக் கொண்டு மறுநாள் தான் பாகவதர் காயத்திரியிடம் எல்லாவற்றையும் விவரமாகக் கேட்டார். அதன் பிறகுதான் அவருக்கு ஒரு உண்மை புலனாயிற்று.

—ஹரியைப் பொறுத்தவரை, அவனுக்கு வசந்தியோ சுசீலாவோ அல்லது வேறு எந்தப் பெண்ணுமே வேண்டாம். ஏனெனில், அவன் திருமணமே செய்து கொள்ளப் போவதில்லை என்கிற கட்சியைச் சேர்ந்தவன். ஆனால்,

சுசீலாவுக்காகத்தான் இந்தத் திருமணப் பேச்சே இப்போது திசை மாறியிருக்கிறது. அவனை மணந்து கொள்ள வேண்டுமென்று சுசீலா ஒரே துடியாக இருக்கிறாள். 'ஹரி மறுத்துவிட்டாலும், வசந்தியால் அந்த அதிர்ச்சியைத் தாங்கிக்கொள்ள முடியும்; ஆனால் சுசீலாவோ உயிரையே விட்டுவிடுவாள்' என்று கூறிய காயத்திரியின் வார்த்தைகள் அவர் நெஞ்சில் எதிரொலித்தன. சுசீலாவின் குணத்துக்கும் முரட்டுச் சுபாவத்துக்கும் அநுசரித்துப் போக, ஹரியைத் தவிர எந்தப் புருஷனும் கிடைக்க மாட்டான் என்பதுதான் எவ்வளவு உண்மை?

சுசீலாவைப் பற்றிக் காயத்திரி கூறிய கருத்துக்களை ஒப்பிட்டுப் பார்த்தபோது; அவளுக்குச் சகல விதத்திலும் ஹரியே ஏற்றவன் என்பதை அவர் மனம் ஆமோதித்தது. ஆனால், இத்தனை பெரிய விஷயத்தை எப்படி ஆரம்பிப்பது; ஆரம்பித்தபின் அது எப்படி முடியும் என்னும் கவலையிலேயே பாகவதர் மனம் உழன்று கொண்டிருந்தது.

''இந்த விஷயத்தைப்பற்றி இப்போது பேச வேண்டாம். சமயம் பார்த்து நானே சுந்தரியிடம் பக்குவமாகப் பேசி விளக்கிவிடுகிறேன்'' என்று கூறி விட்டார். காயத்திரி தன் தலையில் இருந்த மிகப் பெரிய பாரம் ஒன்று இறக்கப்பட்டது போல் உணர்ந்தாள்.

இந்த விஷயத்துக்குப் பிறகு சுந்தரியைப் பார்க்கும் போதெல்லாம் பாகவதருக்குத் துக்கம் நெஞ்சை அடைக்கும். தன்னையே நம்பிச் சகலத்தையும் துறந்து நிற்கும் கள்ளங்கபடு அறியாத ஒரு பெண்ணை ஏமாற்றி வருவதாக அவர் நெஞ்சம் உறுத்தும். ஆயினும் வேறு வழியின்றி அந்த உறுத்தலை அவர் ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான்.

பாகவதர் படுக்கையில் விழுந்ததிலிருந்து, சுந்தரியும் சுவாமிமலைக் குடும்பச் செலவைப் பகிர்ந்துகொண்டு

வந்தாள். மாதம் பிறந்தவுடன் முதல் தேதியன்று செலவுக்கென்று பணம் கொண்டு வந்து கொடுத்து விடுவாள்.

வழக்கம்போல் அந்த மாதமும் சுந்தரி வந்தாள். பணத்தை இரண்டாம் பேருக்குத் தெரியாமல் லட்சுமியின் கையில் கொடுத்துவிட்டுப் பாகவதரைப் பார்த்துவிட்டுப் புறப்பட்டுப் போனாள். இதைப்பற்றி லட்சுமியம்மாளுக்கு ஒன்றுமே தெரியாது. அவள் பேசாமல் வாங்கி வைத்துக்கொண்டாள்.

ஆனால், பாகவதருக்குச் சுந்தரியின் பணத்தை இனியும் ஏற்றுக்கொள்வது தர்ம விரோதமாகவும், நம்பிக்கைத் துரோகம் போன்ற பாவமாகவும் தோன்றியது.

'ஹரி என் சிஷ்யன்; எல்லாவற்றுக்கும் மேலாக நான் வளர்த்த பையன்; என்னுடையவன். நாளை வசந்தியை மணந்து கொள்ளுவதன் மூலம், இரு குடும்பத்தின் உறவும் மேலும் ஒன்றாகி பலப்படப் போகிறது. பாங்கிலுள்ள ஹரியின் பணங்கூட நாளை வசந்திக்குத் தானே சேரப் போகிறது? அதனால் சுந்தரியின் உதவிகளை எத்தனை ஏற்றுக் கொண்டாலும் தவறில்லை' என்று அவர் அதுவரை எண்ணி வந்தார். ஆனால் அந்தச் சமாதானம் எல்லாம் இன்று எங்கே?—

சுசீலாவும் ஹரியும் அன்று சண்டை போட்டுக் கொண்டது போலவே; இன்று அவருடைய கண் எதிரிலேயே சிரித்துப் பேசி மகிழ்ச்சியாக இருந்தனர். ஒருவரை ஒருவர் மணந்து கொள்ளப் போகிறவர்கள் என்கிற முடிவில் அவர்களுடைய நடைமுறை இருந்தது. கொஞ்ச நாளைக்குப் பிறகு, லட்சுமியம்மாளுக்கும் இந்த விஷயம் தெரிந்தவுடன், அவள் அப்படியே துடித்துப் போனாள். வசந்திக்கு ஏற்படப் போகும் ஏமாற்றத்தை எண்ணி, சுந்தரி கூட அப்படிக் கவலைப்பட்டு உருகமாட்டாள்; லட்சுமியம்மாள் அப்படித் தவித்துப் போனாள்.

சமாதானம் சொல்ல வந்த காயத்திரியை, லட்சுமி யம்மாளுக்குக் கன்னத்தில் அறைந்து அனுப்ப வேண்டும் போலிருந்தது: தன் கணவரிடம் ஓர் ஆவர்த்தனம் அழுது தீர்த்தாள்.

''இது அடுக்குமா? கூப்பிட்டுக் கண்டிக்காமல் பார்த்துக் கொண்டிருக்கிறீர்களே! சுந்தரிக்குத் தெரிந்தால் பிராணனையே விட்டு விடுவாளே!'' என்று துடித்தாள்.

''நான் என்ன செய்ய லட்சுமி? கால் ஒடிந்து படுக் கையில் கிடக்கிறேன். கடையாணி இல்லாத வண்டி போல் சத்தியத்துக்குக் கட்டுப்பட்டு இந்த குடும்ப வண்டி ஓடிக் கொண்டிருக்கிறது- என்றைக்கு இடையில் குடை சாய்ந்து எல்லாருமாக விழப்போகிறோமோ, அதுவரை சவாரி நிற்கப் போவதில்லை. உனக்காக வேண்டுமானால் ஹரியையும் கூப்பிட்டு விசாரிக்கிறேன். உன் பெண்ணைக் கூப்பிட்டுக் கண்டிக்கிறேன். ஆனால், திருத்துவதற்கு நீயோ நானோ யார்?''

ஹரியைக் கூப்பிட்டு விசாரித்தார். அவன் அந்த ஒரே பதிலைத்தான் குருவினிடமும் கூறினான்.

''என்னைப் பொறுத்த வரையில் திருமணம் என்பது நான் விரும்பாத ஒன்று. ஆனால் எப்போதும் எல்லா விஷயத்தையும் போலவே நான் என்னுடைய இந்தத் திருமண விஷயத்திலும்; தங்கள் உத்தரவுப் படியே நடக் கச் சித்தமாக இருக்கிறேன்.''

''அப்படி நீ என் சொற்படியே; உன் திருமண விஷயத்திலும் மனப்பூர்வமாக நடக்கச் சித்தமாக இருந் தால், உன் விசுவாசத்தைப் பாராட்டுகிறேன். நான் இது வரை உன்னைக் கூப்பிட்டு இது விஷயமாகப் பேச முடிய வில்லையே தவிர; வசந்திக்கே நீ என்பது நாங்கள் என்றோ முடிவு செய்த விஷயம். வசந்தியை மணந்து

கொள்ள உன் சம்மதத்தை இப்போது நீ என் எதிரிலேயே கூறி விட்டால், பிறகு நான் என் விஷயத்தை முடித்து விடுகிறேன்'' என்று பாகவதர் கூறிக் கொண்டிருக்கும் போதே அங்கே சுசீலா வந்தாள்.

''அப்பா, எங்களுக்குள் இது முடிந்துபோன விஷயம். ஒரு தரம் முடிவான விஷயத்தைப்பற்றி மீண்டும் என்ன அப்பா சம்மதம் கேட்கப் போகிறீர்கள்?''

இதைக் கேட்டதும், அருகிலிருந்த லட்சுமியம்மாளுக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது.

''என்னடீ முடிந்து போன விஷயம்? எது முடிந்து போன விஷயம்? வசந்தியை ஹரிக்குத்தான் கொடுக்கிறதாக எத்தனையோ நாளாக நாங்கள் எல்லாரும் பேசிக் கொண்டிருப்பது உன் காதில் இன்றுதான் புதிதாக விழுந்ததோ? வீணாக, அந்த அப்பாவிப் பெண்ணின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்ளாதே. இதுவரை இரண்டு குடும்பத்துக்கும் சண்டை சச்சரவு இல்லாமல் இருந்து வருகிறது. இத்தனை நாளைக்குப் பிறகு ஹரி இல்லை என்று ஆனால், அம்மாவும் பெண்ணும் மனம் உடைந்து பிராணனையே விட்டாலும் விட்டு விடுவார்கள். அந்தப் பெண் ஹரியின் மீது உயிரையே வைத்திருக்கிறாள்'' என்று லட்சுமியம்மாள், மகளிடம் ஆத்திரத்தைக் கொட்டினாள்.

சுசீலாவுக்கும் இதைக் கேட்டதும் கோபம் அதிகமாக வந்தது.

''ஆமாம், ஹரி இல்லாமல் என்னாலும் தான் வாழ முடியாது. ஆனால் அதற்காக, ஹரியை இழந்து உயிரை விட்டுவிட எனக்கு விருப்பமில்லை; சண்டை போட்டாவது ஹரியை நான் அடைந்தே தீருவேன்.''

''தூ! பேசாதே. நீ ஹரியின் மீது உயிரை வைத்திருக்கிற லட்சணந்தான் தெரிகிறதே. அவன்

வந்ததிலிருந்து — எட்டு வயதில் பாவாடை கட்டிக் கொண்டு ஆரம்பித்த சண்டை; இன்று பத்து வருஷம் ஆகியும் ஓயவில்லை. இனி மேலும் வசந்தியைக் கட்டிக் கொண்டு எங்கே ஹரி சுகப்பட்டு விடப்போகிறானோ என்றுதான் நீ இப்போது இப்படி ஆரம்பித்திருக்கிறாய். உன் கெட்ட எண்ணம் யாருக்குத் தெரியாது?''

''நீங்கள் எப்படி வேண்டுமானாலும் பேசிக் கொள்ளுங்கள். எனக்கு அதைப்பற்றி ஒன்றும் கவலையில்லை.''

''உனக்கு எதைப் பற்றித்தான் கவலை? எதைப் பற்றியாவது கவலைப்படுகிறவளாக இருந்தால் உன்னால் இப்படித் திட்டம் போட்டுக் கொண்டு பேச வருமா? பாவி! நான் இனி எந்த முகத்தோடு சுந்தரியைப் பார்ப்பேன்?'' என்று அழுது கொண்டே லட்சுமியம்மாள் உள்ளே சென்று விட்டாள்.

''அம்மா!'' என்று அரற்றிக் கொண்டே நின்ற சுசீலாவின் முதுகைத் தட்டி, ''கவலைப்படாதே'' என்று தேற்றினாள் காயத்திரி.

இதையெல்லாம் பார்த்த பாகவதர் முடிவுக்கு வந்து விட்டார். உள்ளே சென்ற லட்சுமியை அழைத்தார்.

''சுந்தரியையும், வசந்தியையும் நான் சமாதானம் செய்து கொள்கிறேன். சுசீலாவின் திருமணம் நடக்கட்டும்'' என்று கூறிவிட்டு ஹரியின் பக்கம் திரும்பினார். ''ஹரி, உனக்குச் சுசீலாவை மணந்து கொள்ளச் சம்மதமா?'' என்றார்.

''உங்கள் விருப்பம்'' என்றான் ஹரி.

## 33. கணையாழி

சுசீலாவின் இந்த முடிவிற்குப் பிறகு வசந்தியையோ, சுந்தரியையோ காணும்போதெல்லாம் ஹரிக்கு என்னவோ போலிருந்தது. மிகப்பெரிய குற்றத்தைச் செய்வதுபோல் அவன் உள்ளுணர்வு வருத்தியது.

திருமணம் எப்பொழுது வேண்டுமானாலும் நடத்து விட்டுப் போகட்டும்; 'வசந்தியை மணந்து கொள்ள அவனுக்குச் சம்மதமா இல்லையா?' என்கிற ஹரியின் கருத்தைக் கூட அவர்களால் அறிய இயலவில்லை.

எதற்காகத் தன் தந்தை இது விஷயமாக ஹரியைக் கேட்டு ஒரு முடிவுக்கு வரமாட்டேன் என்கிறார் என்பது வசந்திக்குப் புரியாவிட்டாலும்; அந்தக் கோபத்தினால் அவள் சுவாமி மலைக்குப் போய் வருவதை வெகுவாகக் குறைத்துக் கொண்டாள்.

அப்பாவைப் பார்த்துவர அம்மா போவதே போதும் என்று இருந்தாலும், எப்போதாவது பெரியம்மாவைப் பார்க்க வேண்டுமென்று வசந்தியின் உள்ளத்தில் அடங்காத ஆசை வந்துவிடும். பெற்ற தாயைவிடப் பெரியம்மாவின் அன்புதான் வசந்திக்குப் பெரிதாகத் தோன்றும். சிறு வயதிலிருந்தே அப்படித்தான். வீட்டுக்குக் காவலாகக் காயத்திரியை வைத்துவிட்டு, சுசீலாவுடன் லட்சுமி திருவிடைமருதூருக்கு வாரத்தில் ஒரு நாள் வந்து போவாள். வரும்போதெல்லாம் வசந்திக்கு ஏதாவது தின்பண்டம் கொண்டு வருவாள். அரைநாள் இருந்துவிட்டு லட்சுமி ஊருக்குப் புறப்பட்டால், உடனே வசந்தி பெரியம்

மாவின் புடவைத் தலைப்பைப் பிடித்துக் கொண்டு, ''இங்கேயே இரு; இல்லாவிட்டால் நானும் வருவேன்'' என்று அழுவாள். சுசீலா அவளைக் கேலி செய்வாள். வசந்தியை சமாதானம் செய்து புறப்படுவதற்குள் லட்சுமிக்குப் போதும் போதுமென்றாகிவிடும். சிறு வயதிலிருந்தே சுசீலா அப்படித்தான். திருவிடை மருதூருக்குப் போனால், அங்கே கிடைப்பதையும் தின்று விட்டு; வரும்போது வசந்தியோடு ஏதேனும் சண்டை போட்டு, அவளை அழவும் விட்டுத்தான் திரும்புவாள்.

இதனாலேயே பாதி நாள் லட்சுமியம்மாள் சுசீலாவை அழைத்துச் செல்லமாட்டாள். ஆனால், அங்கே போனதும். குழந்தையை விட்டு விட்டு வந்ததற்காக லட்சுமியைச் சுந்தரி கோபித்துக் கொள்வாள். வசந்தியும்; முன் தடவை சுசீலா தன்னைக் கிள்ளியதையோ, தன்னுடைய பலூனைப் பிடுங்கிச் சென்றதையோ மறந்து, ''ஏன் பெரியம்மா, அக்காவை அழைச்சுக்கிட்டு வரல்லே? உன்கூட 'டூ' போ'' என்று அழுவாள்.

''நீதாண்டி என் பொண்ணு; அது பேய்'' என்று லட்சுமியம்மாள் வசந்தியை மார்போடு அணைத்துக் கொள்வாள்.

இப்பொழுது—இன்னும் மும்முரமாக அந்தப் பேயின் ஆட்சிதான் அந்த வீட்டில் நடக்கிறது என்பதை அறிந்து கொண்ட வசந்தி, அங்கே நடந்ததைத் எல்லாம் தன் தாயிடம் கூறினாள். அதனால், சுந்தரியே, மகளை அங்கே அதிகம் போக வேண்டாமென்று தடுத்துவிட்டாள்.

ஹரி, தஞ்சாவூரில் பாடத்துக்குப் போன இடத்தில் ஒரு வாரம் உடம்பு சரியில்லாமல் கிடந்துவிட்டான் என்று கடிதம் வந்திருப்பதாகக் கேள்வியுற்றதும், சுந்தரியோடு வசந்தியும் கலங்கினாள்.

ஹரி ஊரிலிருந்து வந்திருப்பான் என்று அறிந்ததும், நேரில் போய்ப் பார்த்து வந்தால்தான் சமாதானம் ஆகும்.

போல் வசந்தி துடித்துக் கொண்டிருந்தபோது—அவனே வந்தான்-

ஹரி கூறியதை எல்லாம் சுந்தரி கவலையோடு கேட்டாள். அதற்குள் வசந்தி, ''இந்த உடம்போடு இங்கேயும் ஏன் வந்தீர்கள்? திங்கட்கிழமை திருவனந்தபுரம் வேறு போகவேண்டு மென்கிறீர்கள்; அங்கேயே இருந்து கொஞ்சம் ஓய்வு எடுத்துக் கொள்ளக்கூடாதா?'' என்று கேட்டாள்.

அவள் இயற்கையாக அநுதாபப்பட்டுக் கூறுவதாகத்தான் சுந்தரி நம்பினாள். ஆனால், ஹரியின் மனத்துக்கு அவள் தன்னைக் கிண்டல் பண்ணுகிறாளோ என்றே தோன்றியது.

எப்படி வேண்டுமானாலும் இருந்துவிட்டுப் போகட்டும் என்று ஹரி வசந்தியைப் பார்த்துக் கேட்டான்: ''ஏன், நான் இங்கு வருவது உனக்குப் பிடிக்கவில்லையா?''

''ஹூம்! சரணத்திலிருந்து பாட்டை ஆரம்பிக்கிறீர்களே. உங்களுக்குத்தான் இங்கே வருவதென்றால் பிடிக்கவில்லை. அதற்கு, 'நேரம் இல்லை' என்கிற உறை போட்டு மறைக்கிறீர்கள். நீங்கள் எப்படி வேண்டுமானாலும் இருங்கள்; நாங்கள் என்றும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறோம். அன்பை விலைக்கு வாங்க முடியுமா?''

பெண்ணின் துயரம் தாயின் உள்ளத்தில் எதிரொலித்தது. ஹரி ஒவ்வொரு முறை திருவிடைமருதூருக்குப் போய் வரும்போதும் இம்மாதிரியான சம்பாஷணைகளிலேயே மனம் புண்பட்டுத் திரும்புவது வழக்கம். வரவர அவன் மனம் வெகுவாக வேதனைப்பட்டது.

'லோகரீதியான இன்பக் கேளிக்கைகளைப் பற்றியோ; திருமணத்தைப் பற்றியோ நானே எண்ணிப் பார்க்காமல் இருந்து வரும்போது; என்னுடைய திருமணத்தைப்

பற்றியே மற்றவர்கள் ஏன் பேசிக் கொண்டு இருக்க வேண்டும்? எனக்குச் சுசீலா என்ன உயர்வு; வசந்தி என்ன தாழ்வு? காந்தாமணி கையில் வந்து விழுந்தவுடன் உதறவில்லையா? வாயைத் திறந்து பாடத் தொடங்கினால், குயில்கள் கூட்டத்துடன் தேடி வந்து தன் இனம் என்று அவளைச் சூழ்ந்து கொள்ளுமே! அப்படிப்பட்ட காந்தாமணியே என்னை விட்டுப்போய்விட்டாள். ஆனால், போனவள் உயிரோடு இருந்தால்; இந்த உலகத்தின் எந்த மூலையிலும் என்னை நினைத்துக்கொண்டேதான் இருப்பாளே அன்றி, என்னை மறந்துவிட அவளால் முடியாது'- என்று ஹரி தனக்குள்ளேயே எண்ணிக்கொண்டான்.

திருவிடைமருதூரிலிருந்து புறப்பட்ட ஹரி, நேராகச் சுவாமிமலைக்குப் போய்விடவில்லை. கும்பகோணத்துக்குத் தான் டிக்கெட் வாங்கியிருந்தான். கும்பேசுவரரையும் மங்களாம்பிகையையும் தரிசனம் செய்து வரலாம் என்று எண்ணினான். அத்துடன் அவனுக்கு நகரிலும் முக்கிய வேலை இருந்தது.

ஸ்டேஷனை விட்டு வரும் வழியில் குருநாதருக்கு வேண்டிய மருந்துகளை வாங்கிப் பையில் வைத்துக் கொண்டான். டயமண்ட் சினிமா வழியாகக் காந்தி பார்க்குக்குவந்து, கணபதி அண்ட கோ கடையில் குருநாதருக்கு வறுத்த வாசனைச் சீவலும்; ஒரு டப்பா பட்டணம் பொடியும் வாங்கிக் கொண்டான். அம்மாவுக்காக எட்டணாவுக்கு நல்ல வாசனை விடயங்களை வாங்கி நலுங்காமல் பையில் வைத்துக் கொண்டான். அதில் இரண்டை மட்டும் எடுத்துத் தனியாகத் தன் சட்டைப் பையில் வைத்துக் கொண்டான். 'யாருக்கும் தெரியாமல் சுசீலாவுக்குத் தான் வாங்கிக் கொடுக்கப் போகிற வைர மோதிரத்தை அந்த விடத்தினுள் வைத்து அவள் கையில் கொடுத்து; அதை அவள் ஆசையோடு வாயில் போட்டுக் கொள்ளப் போகும்போது, சட்டென்று அவள் கையிலிருந்து தட்டிப் பறிக்க வேண்டும்; விடயத்தைப் பிரித்துப்

பார்க்கச் செய்து, ''வைரம் கொடுத்து உன்னைக் கொல்லச் சதி செய்த இந்தக் குற்றவாளிக்கு என்ன தண்டனை அளிக்கப்போகிறாய் சுசீலா?'' என்று கேட்க வேண்டும். அவள் 'இதோ இருங்கள்' என்று மோதிரத்தை எடுத்து தன் விரலில் அணிந்து கொண்டு; விடயத்தை மடித்து என் வாயில் போட வரும்போது, அதைப் பிடுங்கி அவள் வாயில் போட்டு, ரத்தச் சிவப்பேறிய உதடுகளில் ஒளிரும் புன்னகையைக் கண்டு மகிழவேண்டும்'- என்றெல்லாம் கற்பனை பண்ணிக்கொண்டே, பெரிய தெருவில் பிரபல வைர வியாபாரியான கோகுல்தாஸ் கடையில் நுழைந்தான். கடைக்காரர், ஒரு பெரிய இடத்திலிருந்து விலைக்கு வந்தது என்று, உயர்ந்த ப்ளூஜாக்கர் மோதிரம் ஒன்றைக் காட்டினார். அதைப் பார்த்தவுடன் அதன் அழகு ஹரிக்கு மிகவும் பிடித்தது. அதற்கான எழுநூறு ரூபாயையும் கொடுத்து மோதிரத்துடன் நேரே கும்பேசுவரர் கோயிலுக்குச் சென்றான்.

சுவாமி தரிசனத்தை முடித்துக் கொண்டு, ஹநுமார் கோயில் வழியாக வந்தபோது, ''தம்பி' என்று உரக்க அழைத்த வண்ணம், உயரமான ஜவுளிக் கடைத் திண்ணையொன்றிலிருந்து கீழே குதித்த பக்கிரி, ஹரியை நோக்கிச் சிரித்தபடியே வேகமாக வந்தான்.

அந்தச் சமயத்தில், அந்த இடத்தில், சற்றும் எதிர்பாராமல் பக்கிரியைக் கண்டதும் ஹரி, ''எங்கே மாமா, இப்படி இவ்வளவு தூரம்? கும்பகோணத்தில் இப்போது ஒன்றும் விசேஷங்கூட இல்லையே?'' என்று கேட்டான்.

''ஏன் தம்பி, என்னை நீ, தேர்த் திருவிழாவிலேயே சுத்திக்கிட்டிருக்கிற பேர்வழீன்னு நெனச்சே பேசிக்கிட்டிருக்கியே!'' என்று குறைப்பட்டுக் கொண்ட பக்கிரி, ஹரியின் கையிலிருந்த பையை வாங்கிக் கொள்ளக் கையை நீட்டினான். ஹரி, ''பரவாயில்லை'' என்று தானே தூக்கிக் கொண்டு நடந்தான்.

''ஏதோ பச்சை தோட்டும் சிவப்பு நோட்டுமா நீ குடும்பத்துக்குக் கொடுத்துக்கிட்டே இருக்கே. அதிலே நானும் பிழைச்சுகிட்டிருக்கேன். எனக்கு என்ன தம்பி குறைவு? ஆனா, உன்னெத்தான் கண்ணிலேயே காணல்லே. அன்னிக்குத் தஞ்சாவூர் ஸ்டேஷன்லே பார்த்தது; அப்புறம் பார்க்கவே முடியல்லே. மாசம் முப்பது நாளும் கச்சேரி. ரெயில்லியே சுத்தறாப்பிலே இருக்கு.''

''ஆமாம், மாசம் முப்பது நாளும் ரெயில்லியே கச்சேரி பண்ணிக் கொண்டிருக்கிறேன். அதிருக்கட்டும்; இப்போ என்னை எதற்காகக் கூப்பிட்டாய்?''

''என்ன தம்பி, மறந்துட்டியா; நீதானே அன்னிக்குத் தங்கச்சி கல்யாணத்தை முடிச்சுடலாமே, பணம் தறேன்னு சொன்னே. நான், ரெண்டு பொண்ணுக்கும் மாப்பிள்ளை கூடப் பார்த்து வச்சுட்டேன். ஒரே முகூர்த்தத்திலே முடிச்சுப்பிட்டா நமக்கும் செலவு மிச்சம்.''

இருவரும் பேசிக் கொண்டே காவேரிச் சக்கரப் படித் துறை வரை வந்து விட்டனர். ஹரி யோசனையில் ஆழ்ந்தான்.

பக்கிரி கேட்டான். ''எப்பத் தம்பி முகூர்த்தம் வச்சுக்கலாம்?''

''எவ்வளவு செலவாகும் என்று முன்பு சொன்னாய்?''

''சுமாரா ரெண்டாயிரத்திலேயும் செய்யலாம்; மூவாயிரத்திலேயும் செய்யலாம். நாம சிம்பிளா, ஆயிரத்தைந் நூறு ரூபாயிலேயே ரெண்டையும் கட்டிக் கொடுத்திடலாம். எதுக்காகத் தம்பி ஊர்ப் பயலுவளேக் கூட்டிச் சோத்தைப் போட்டுக், காசை வீணாக்கணும்?''

''ஏன் மாமா, ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் எப்படிப் போதும்?'' என்று ஹரி கேட்க வாயெடுத்தான்; ஆனால்

உடனே கேட்கவில்லை. அவன் யாருக்காகச் செய்யப் போகிறான்? அவனுடைய தங்கைகள் மணமாகாமலே நின்றால்தான் யாருக்கு என்ன வந்துவிட்டது? அவன் மட்டும் இத்தனை படாடோபமாக, ராஜவாழ்வு வாழும் போது; அவனுடன் பிறந்த அந்தப் பெண்களுடைய திருமணச் செலவைத்தானா குறைக்க வேண்டும்? பட்டும் வைரமும் போட்டுக் கொண்டா இவர்கள் மினுக்கப் போகிறார்கள்? சட்டி, பானைகளோடு ஆயுள் முழுவதும் போராடப் போகிறவர்களின் வாழ்க்கையில், அந்த ஒரு நாளையாவது, மகிழ்ச்சி மிக்க நாளாக அவனால் ஆக்க முடியாதா?—

''என்ன தம்பி, பணத்தைப் பத்திப் பேசினவுடனே, பெரிசா யோசிக்கக் கிளம்பிட்டே? அதுகூட அநாவசியம் தம்பி. இந்தப் பக்கிரியாலே கல்யாணத்தை இன்னும் சிம்பிளா முடிச்சுட முடியும் தம்பி! பசங்க ரெண்டு பேரும் தங்கக் கம்பிங்க. ஐயனார் கோயிலுக்கு இழுத்துக்கிட்டுப் போய்த் தாலியைக் கையிலே கொடுத்து, 'கட்டுங்கடா'ன்னு சொன்னா; கண்ணை மூடிக்கிட்டுக் கட்டிடுவாங்க. நீ ஒண்ணுக்கும் கவலைப்படாதே தம்பி'' என்று பக்கிரி ஆறுதல் கூறினான்.

ஹரி மெல்லச் சிரித்தான்.

''நான் இப்போது பணத்தைப் பற்றிக் கவலைப்படவில்லை மாமா! சிம்பிளா இல்லாமல், கொஞ்சம் நல்லபடியாவே செய்ய வேண்டுமென்றால் எத்தனை ரூபாய் வேண்டும் என்கிறாய்?''

''சுமார் இரண்டாயிரம், மூவாயிரம் இருந்தால் போதும். பிரமாதப்படுத்திப் பிடுவேன்.''

ஹரி முடிவுக்கு வந்தான். ''சரி, என்னை அடுத்த மாசம் 24-ம் தேதி வந்து பாரு, மாமா.''

''பணத்துக்ாகவா?''

''ஆமாம்.''

''எங்கே பார்க்கலாம்?''

''மாயூரம் பட்டமங்கலத் தெருவில் ஒரு கல்யாணக் கச்சேரிக்கு வருகிறேன். ராத்திரி ரெயில்வே ஸ்டேஷனில் சந்திக்கலாம்.''

''சரி, அப்படியே ஆகட்டும். நான் நின்னுக்கறேன் தம்பி.''

''ஏன்? கும்பகோணத்திலே வேலை இருக்கிறதா?''

''ஆமாம். நம்ம ஊரு பத்தரோடு வந்திருக்கேன்.''

''சரி, நான் வருகிறேன்.''

''நில்லு தம்பி. வண்டிகூட வச்சுக்காமெ; இப்படியே நடந்தா போவப் போறே?''

''இல்லை மாமா. ஏதோ ஞாபகம். ஒரு வண்டி பாரு.''

பக்கிரி ஜட்காவைக் கூப்பிட்டு நிறுத்தினான். வண்டி சுவாமி மலையை நோக்கி ஓடியது. பக்கிரி மீண்டும் பாலத்தைத் தாண்டிப் பஜாரை நோக்கி நடந்தான்.

ஓடுகிற வண்டியோடு போட்டிப் போட்டுக் கொண்டு ஹரியின் சிந்தனைப் புரவியும் பறந்தது. தங்கைகளின் திருமணத்துக்காகப் பக்கிரிக்கு வாக்களித்த ரூபாயை எப்படிக் கொடுப்பது என்பது பற்றி அவன் யோசித்துக் கொண்டிருந்தான். இந்தச் சமயத்தில் அவன் மனம் அவனையும் அறியாமல், காந்தாமணியைப் பற்றி நினைத்தது.

அவள் இருந்தால், அவனுக்குப் பணத்துக்குப் பஞ்சம் ஏது? 'இரண்டாயிரமோ மூவாயிரமோ தேவை; இத்தனை மாதங்களில் திருப்பித் தருகிறேன்' என்று ஒரு வார்த்தை

கூறினால் போதும்; ஏன் எதற்கு என்று கேட்காமல் பணம் கைக்கு வந்து விடும். அதை நம்பித்தான் ஹரி பக்கிரிக்கு அத்தனை துணிச்சலுடன் முன்பு வாக்குக் கொடுத்திருந்தான். ஆனால்—

தங்கள் வீடு விற்பனைக்குக்கூட அவர்கள் வராததோடு; அதிலுள்ள சாமான்களையும் அவர்கள் எடுத்துச் செல்லவில்லையாம்! அப்படியே வீட்டோடு ஒட்டு மொத்தமாக யாரோ ஒரு சேட்டுக்கு விற்று விட்டதாகக் கேள்விப்பட்டான். அவனுக்கு இது அதிசயமான செய்தியாக இருந்தது. இதற்கெல்லாம் காரணம் என்ன?

'இனிமேல் அதைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருப்பதில் அர்த்தம் இல்லை. பக்கிரி கல்யாணத்துக்காக மாப்பிள்ளை முதற்கொண்டு பார்த்து வைத்து விட்டான். நம்மால் தாமதம் கூடாது' என்ற முடிவுக்கு வந்தான் ஹரி.

ஹரியின் சம்பாத்தியத்தை பாங்கில் அவன் கணக்கில் பாகவதர் போட்டு வைத்து; ஒரு பெரும் தொகையாகச் சேர்த்து வைத்திருந்தார்.

ஹரி இப்போது அதைத்தான் நினைத்துக் கொண்டான். பங்களூரிலிருந்து வந்த பிறகு, தங்கைகளுடைய திருமண விஷயமாகக் குருநாதரிடம் பேசலாம் என்று முடிவு செய்தான்.

## 34. இலவு காத்த கிளி

கட்டிலில் முகத்தைப் புதைத்துக்கொண்டு தேம்பித் தேம்பி அழுதாள் வசந்தி. உள்ளத்துப் பாரமெல்லாம் கண்ணீராய்க் கரைந்து போகும்வரை அழுதாள். மாடியில் இருந்து வரும் மகளின் விம்மலைக் கீழே இருந்த சுந்தரி கேட்டுக் கொண்டுதான் இருந்தாள். பெண்ணைத் தேற்ற வேண்டும் என்ற எண்ணங்கூட இல்லாமல்; எழுந்து செல்லவே தெம்பு இல்லாதவள் போல்; அவள் உட்கார்ந்த இடத்தை விட்டு அசையவே இல்லை. எத்தனை நேரந் தான் அவளாலும் அழ முடியும்?

காய்ந்த இரண்டு கோடுகளாய்க் கண்ணீர், சுந்தரியின் அழகிய முகத்திலும் கரைகட்டியிருந்தது. எத்தனையோ வருஷங்களுக்குப் பிறகு; மீண்டும் விழுந்த பேரிடியையும் தாங்கிக் கொண்டு அவள் உட்கார்ந்திருந்தாள்,

முதல் அடி- அவளுடைய பதினாறு வயதில் விழுந்தது, செல்வச் செழிப்போடு, இளமை அழகும் பூத்துக் குலுங்க உள்ளத்தில் ஆயிரமாயிரம் கற்பனைகளோடு மகிழ்ந்திருந்த வேளையில் தான் அந்தப் பேரிடி விழுந்தது.

குருவாக எண்ணி அவள் பூஜித்தவர் கணவன் ஸ்தானத் திற்கு விண்ணப்பித்து; பணிவுள்ள சிஷ்யையாக, அடக்கத் துடன் வாழ்ந்து வந்த அவளை மனைவியின் ஸ்தானத்திற்கு ஆளாக்கிவிட்டார்.

அந்த மிகப் பெரிய அதிர்ச்சியை அவள் ஒரு சிறிதும் வெளிக் காட்டிக் கொள்ளாமல்; தனக்கென்று எவ்வித விருப்பும் வெறுப்பும் வைத்துக் கொள்ளாமல், கணவரின்

மனம் கோணாது; அவரது குடும்பத்தினரின் குண நலன் களையே தனதாகக் கருதி, ஒரு பரிபூர்ண அடிமையைப் போல இத்தனை காலம் பாகவதரின் இளைய மனைவி என்கிற ஸ்தானத்தை ஈடேற்றி விட்டாள்.

ஆனால் — வசந்தி பிறந்தபிறகு, தன்னுடைய ஆசை களையெல்லாம் மகள் மீது கொட்டி வளர்த்து—அவளது எதிர்காலம் பற்றி எண்ணற்ற இன்பக் கனவுகள் கண்டு வந்தாள். அவளது கனவுகள், அவள் விரும்பிய வண்ணமே நிறைவேறப் போவதாக; ஹரி— வசந்தி திருமணத்தைப் பற்றி எண்ணி மனம் பூரித்தாள். செய்யும் தொழிலிலும் குணத்திலும் ஹரியைப் போன்ற ஓர் உயர்ந்த பையன் வசந்திக்குப் புருஷனாகவும், தனக்கு மருமகனாவும் வரப் போவதை, ஒரு பூர்வஜென்ம புண்ணியமாகவும், இதை விடத் தனக்கு மகிழ்ச்சியளிக்கக் கூடியது பிரிதொன்று மில்லை என்றும், எண்ணி எண்ணி அவள் மனம் பூரித் திருந்தாள். ஆனால் இப்போது— அவளது மிகப்பெரிய அந்த மகிழ்ச்சியிலும் பேரிடியைத் தூக்கிப் போட்டவர் பாகவதரே தான். இப்படி இடிமேல் இடிவிழுந்து, அவள் இடிதாங்கிக் கருவியாகவே ஆகிவிட்டாள்.

ஹரியையும் வசந்தியையும் பற்றி ஆண்டாண்டு காலமாய்க் கண்டு வந்த கனவுகளும், இன்பக் கோட்டை களும் அஸ்திவாரமற்றவை போல் இடிந்து; தலைமேல் விழுந்து கொண்டிருந்தன.

மகளின் திருமணமே தன் வாழ்க்கையில் மிகப்பெரிய இன்பம் என்று எண்ணியிருந்த சுந்தரிக்கு; இன்று அதை விடப் பெரிய துன்பம் இல்லை என்பதுபோல்; அது அவள் நெஞ்சைப் பிய்த்தெறிந்துவிட்டது.

''அம்மா!'' என்ற குரலைக் கேட்டுச் சுந்தரி தலை நிமிரவே இல்லை. மீண்டும் வசந்தி தாயை அழைத்தாள்.

குரல் செவிகளில் விழாத குற்றம் அல்ல; தன்னை ஏறெடுத்துப் பார்க்க விரும்பாத சீற்றமே—என்று வசந்தி எண்ணினாள். அவளுக்குத் தாளவில்லை.

—'அப்படி நான் என்ன அம்மா தவறு செய்தேன்? உன் விருப்பத்துக்கு மாறாக, விருப்பம் இல்லாத காரியத்தில் இறங்கித் தகாதபடி நடந்து கொண்டேனா? என் நெஞ்சில் சிறுகச் சிறுக ஆசையை ஊட்டிப் பெருநிதிபோல் வளர்த்துவிட்டு, இன்று கள்ளனைப் போல் ஒருத்தி ஒரே நாளில் கவர்ந்து செல்ல அநுமதித்துவிட்டாயே! முடியாது என்று மறுத்துக்கூடக் கூறாமல் வந்துவிட்டாயே. சுசீலாவைப் பற்றி அப்பா கூறியது நியாயம் என்று ஒப்புக் கொள்ள; எப்படி அம்மா உன் மனம் இடம் கொடுத்தது? அப்பட்டமான சுயநலம் அது என்று, பச்சைக் குழந்தை கூடச் சொல்லுமே! நானும் அவருடைய மகள்தானே? என்னுடைய துக்கமும் ஏமாற்றமும் ஏன் அம்மா அவர் கண்ணில் படவில்லை?

நான் சொல்லுகிறேன்—அப்பாவிற்கு சுவாமிமலைக் குடும்பந்தான் ஒசத்தி. என்னதான் நீ உயிராயிருந்தாலும், உரிமை கொண்டாடினாலும்; உனக்கும் எனக்கும் அப்பாவின் உள்ளத்தில் இரண்டாவது இடம்தான்.

இல்லாவிட்டால், ஹரி விஷயமாக என் ஆசையையும், உன் விருப்பத்தையும் கேட்டறிந்து கொண்டு—'நல்ல காரியம்' என்று ஒப்புக் கொண்ட விஷயத்தை, நிறைவேற்ற வேண்டுமென்று எண்ணாமல் இருப்பாரா?

எல்லாவற்றையும் விட, எனக்குப் போட்டியாகத் திடீரென்று புஸ்வாணம் மாதிரி, 'நான் ஹரியைத்தான் மணந்துகொள்வேன்' என்று புறப்பட்டிருக்கிற சுசீலாவை அதட்டி அடக்காமல்; அல்லது ஹரி யாரை விரும்புகிறான் என்பதைக் கூடக் கேட்டுத் தெரிந்து கொள்ளாமல்—சுசீலாவின் ஆசைக்குப் பச்சைக்கொடி காட்டியிருப்பாரா?

அம்மா, உன்னையும், என்னையும் அவர்கள் நம் பணத்திற்காகத்தான் இத்தனை காலம் ஏமாற்றிடு வந்திருக்கிறார்கள் என்பது இன்னுமா அம்மா உனக்குப் புரியவில்லை?'' என்று வசந்தி படபடப்போடு பேசிக் கோண்டிருக்கும்போதே சுந்தரி தன்னையும் மீறி, ''வசந்தி'' என்று பெரிதாகக் கத்தினாள்.

''இன்னும் ஒரு வார்த்தை நீ உன் அப்பாவைப் பற்றி இப்படியெல்லாம் பேசினால்—உன்னை என் மகளென்றும் பாராமல் அடித்து நொறுக்கி விடுவேன்'' என்று ஆவேசம் வந்தவளைப் போல் கூறினாள்.

''ஹூம்—நீ வேறெ என்னம்மா சொல்லுவாய்? உன்னால் வேறு என்ன செய்ய முடியும்? உன் ஆசைதீர என்னை நீ அடித்தாலும் சரி! என் மனத்திலுள்ளதை, உன்னைப் போல் பயந்து ஒளிக்கப் போவதில்லை—உன்னிடம் நான் சொன்னவற்றை யெல்லாம் — ஒருநாள் அப்பாவிடமே கூறி நியாயம் கேட்கத்தான் போகிறேன். எனக்கு அவர்களால் ஒரு சமாதானமும் கூற இயலாது.

'என்னையும் ஹரியையும் இணைத்து இணைத்துப் பேசி அவர்கள் செய்திருக்கும் கேலிகளுக்கு, மரத்திற்குகூட உணர்ச்சி உண்டாயிருக்குமே! என் உள்ளம் அதைவிட அற்பமானதாய்ப் போய்விட்டதா? ஹரி இல்லாவிட்டாலும், வேறு ஒருவனுடன் நான் சந்தோஷமாய் வாழ்ந்துவிட முடியும் என்று எந்த அளவுகோல் கொண்டு அவர்கள் அளந்து பேசினார்கள் அம்மா? ஏமாற்றமே உருவாய், அவமானமே சின்னமாய்ச் சுசீலாவின் எதிரில் நான் கலங்கி நின்றதைக் கண்டும், என் வாழ்விலிருந்து ஹரியைப் பறித்துத் தானம் பண்ண உனக்கு என்ன அம்மா உரிமை இருக்கிறது? நான் தியாகியாக வேண்டுமென்று உன்னிடம் அழுதேனா?

'கையிலுள்ளது தீர்ந்து, குடும்பத்தில் உள்ள எவ்வளவு சொத்துக்களை நீ விற்று விற்று அவர்கள் குடும்பத்

துக்கும், அப்பாவின் வைத்தியத்துக்கும் செலவு செய்தாய்? அதைப் பற்றி நான் ஏதாவது கேட்டேனா? இறுதியாக, நான் போட்டிருந்த வைர மோதிரத்தைக் கூடக் கொண்டுபோய் விற்றாயே அம்மா! ஆனால் அதே மோதிரத்தைச் சுசீலா எப்படியோ வாங்கித் தன் கையில் போட்டுக் கொண்டு என் எதிரிலேயே வந்து நின்றாளே; அப்போதெல்லாங்கூட உன்னிடம் குறைபட்டுக் கொண்டேனா? மோதிரம் என்ன, இன்னும் அவள் எதைக் கேட்டிருந்தாலும் நானே கொடுத்திருப்பேனே! பொறாமைக்காரி; என் உயிரையே அல்லவா என்னிடமிருந்து தட்டிப் பறித்துக்கொண்டு விட்டாள்? அதைப் பார்த்தும் ஏன் அம்மா உன் உள்ளம் குமுற வில்லை; இதயம் வெடிக்கவில்லை? உன் பெண்ணின் எதிர்கால நல்வாழ்வு உண் கண் எதிரிலேயே பறிபோகிறபோது; ஒரு தாய்க்கு இருக்கவேண்டிய சராசரி உணர்ச்சிகூட உனக்கு ஏன் அம்மா அற்றுப் போய்விட்டது?'—

குமுறும் எரிமலையாகத் தன் உள்ளத்து உணர்ச்சிகளையெல்லாம் இப்படி அள்ளிக் கொட்ட வேண்டுமென்று ஆவேசத்துடன் துடித்த வசந்தி தாயின் முகத்தைக் கண்டதும் அப்படியே துவண்டு விழுந்து விட்டாள்.

''வசந்தி!'' என்று தாவி அணைத்துக் கொண்ட சுந்தரியின் ஊற்றுக் கண்களிலிருந்து மீண்டும் கண்ணீர் பெருக் கெடுத்தோடியது.

''என்னை மன்னித்துவிடு வசந்தி. நானும் ஏமாந்து; உன்னையும் பெரிய ஏமாற்றத்துக்கு உள்ளாக்கி விட்டேன், என்னை மன்னித்துவிடு, வசந்தி மன்னித்து விடு.''

இதயம் இதயத்திடம் முறையிட; சுந்தரியின் கரங்கள் வசந்தியின் தலையை ஆறுதலாக வருடின.

# 35 தந்தி வந்தது

கன்டோன்மென்ட் ஸ்டேஷனுக்குள் பங்களூர் மெயில் நுழையும்போது மணி ஆறரை இருக்கும். வரவேற்க ஸ்டேஷனில் தயாராக சபா உற்சவக் கமிட்டிக் காரிய தரிசியும் தலைவரும் வந்திருந்தனர்.

காரியதரிசி, ஹரிக்கு வணக்கம் தெரிவித்தபடியே, பக்கத்திலிருந்த தலைவர் ரகூத்தம ராவை அறிமுகம் செய்துவைத்தார். ஹரியும் அவருக்குப் பதில் வணக்கம் தெரிவித்தபடியே வண்டியிலிருந்து இறங்கினான்.

காரியதரிசி, ஹரியின் பெட்டி படுக்கைகளை வெளியி லிருந்த தம் காரில் ஏற்ற ஏற்பாடு செய்தார். ராஜப்பா வும் பஞ்சு அண்ணாவும், முதல் நாளே வந்துவிட்டனர். அவர்கள் எல்லாரும்; கச்சேரி ஜாகையிலேயே தங்கியிருந் தனர். ஹரியை காரியதரிசி தம்முடைய வீட்டுக்கே அழைத்துச் சென்றார்.

மத்தியான்னச் சாப்பாட்டுக்குப் பிறகு சிறிது நேரம் படுக்கலாமென்று ஹரி படுக்கையை விரித்தான். அதிலி ருந்து கடிதம் ஒன்று துள்ளி விழுந்தது. ஆச்சரியத்துடன் பிரித்தான். சுசீலா எழுதியிருந்தாள்:

''உங்களைப் பிரிந்து எப்படி இந்த நான்கு நாள் இருக்கப் போகிறேன் என்று தெரியவில்லை. மனத்துக்கு ரொம்பக் கஷ்டமாக இருக்கிறது—சுசீலா.''

கடிதத்தைத் திரும்பத் திரும்பப் படித்தான். வார்த் தைகள் அவன் வசமாகிவிட்டன. அவள் நினைவு அவனைப் புரட்டி எடுத்தது.

எப்படி இருந்த சுசீலா எப்படி மாறிப் போய் விட்டாள்! சுசீலா ஒரு புதிர்தான்!

நினைத்தால் வாரி வழங்கக்கூடிய இத்தனை அன்பை யும் ஆசையையும் வைத்துக்கொண்டா அவள் இத்தனை காலம், சினத்தையும் சிடுசிடுப்பையும் உமிழ்ந்து கொண் டிருந்தாள்?

பங்களூருக்குப் புறப்பட்டுக் கொண்டிருக்கும் சுசீலா தானும் வருவதாகக் கூறினாள். அவளுடைய துணிச்சலையும் ஆசையையும் பார்த்த ஹரி சிரித்துக் கொண்டே, ''இன்னும் கொஞ்ச காலம் பொறுத்திரு' என்று கூறி விட்டு வந்தான்.

மணமானால் அவளையும் எல்லா ஊர்களுக்கும் அழைத்துக் கொண்டு போக வேண்டுமென்று ஹரி மனத் துக்குள் திட்டமிட்டுக் கொண்டான்.

புவனேசுவரி ஹால் நிரம்பி வழிந்தது. சரியாகக் குறிப்பிட்ட நேரத்துக்கு ஹரியின் கச்சேரி ஆரம்ப மாயிற்று. அன்று மாலை நடந்த ஹரியின் கச்சேரிதான் முதல் கச்சேரி. அதைப் போலவே, கச்சேரியும் முதல் தரமாக அமைந்து விட்டது. ஹரியின் இசையில் பங்களூர் ரசிகர்கள் தங்களை மறந்தார்கள். அவர்களை மேலும் மகிழ்விக்க, தனி ஆவர்த்தனத்துக்குப் பிறகு, ஹரி அதிகம் ஸ்ரீபுரந்தரதாசரின் கிருதிகளாகப் பாடினான். இறுதியில் தர்பாரிகானடாவில், ''நானின்ன த்யான தொளிரெல்லூ பாண்டுரங்கா' என்னும் தேவர நாமாவை மனமுருகிப் பாடி, சபையிலிருந்தோரின் கண்களில் நீரை வரவழைத்து; பக்திப் பரவசத்தில் திளைக்க வைத்துவிட்டான். நான்கு மணி நேரத்தையும், நான்கு நிமிஷங்களாக ஓட்டிவிட்டு ஹரி மங்களம் பாடிய போது; புவேனசுவரி ஹால் தன்னுள் எழுந்த கரகோ ஷத்தை ஜீரணிக்க முடியாமல் திணறி எதிரொலித்தது.

சபா காரியதரிசிக்கும் தலைவருக்கும் அளவு கடந்த சந்தோஷம்.

மறுநாள் காலை ஹரியின் அறைக்குள் காரியதரிசி தம்முடன் ஒரு பிரமுகரையும் அழைத்து வந்து ஹரியிடம், "இவர்தாம் மிஸ்டர் மூர்த்தி; என் நெருங்கிய நண்பர். சென்னையில், 'அலெக்ஸாண்ட்ரா ஆட்டோமோபைல்ஸ்' என்று ஒரு மோட்டார் கம்பெனியும், இங்கு 'அன்னபூரணி கெமிக்கல்ஸ்' என்று ஒரு பெரிய மருந்துக் கம்பெனியும் வைத்திருக்கிறார். இதெல்லாம் முக்கியமல்ல; பெரிய சங்கீத ரசிகர். கர்நாடக சங்கீதம் என்றால் உயிர். அதிலும் நம் பாகவதருடைய பாட்டு என்றால் ஒரு கச்சேரி தவறமாட்டார். அதைப் போல நேற்று உங்கள் கச்சேரிக்குத்தான் இறுதிவரை இருந்து ரசித்தார்" என்று அறிமுகப்படுத்தினார்.

உடனே மூர்த்தியும், "ஆமாம், நேற்று நீங்கள் பிரமாதப்படுத்திவிட்டீர்கள். இந்த மாதிரிப் பாட்டைக் கேட்டு ரொம்ப நாளாயிற்று" என்று மிகவும் உணர்ச்சியோடு கூறினார்.

பிறகு காரியதரிசி, ஹரியிடம் "இன்று இவர்கள் கம்பெனி ஆண்டு விழாவாம். அதற்கு உங்கள் கச்சேரியை வைக்க வேண்டும் என்று மூர்த்தி ஸார் ஆசைப்படுகிறார். நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்? உங்கள் சம்மதத்தைக் கேட்டுப் போகத்தான் வந்திருக்கிறார்" என்று கூறினார்.

"நீங்கள் சொன்னால் நான் அதை மறுத்தா பேசப் போகிறேன்? ஆனால் பஞ்சு அண்ணாவுக்கும், ராஜப்பாவுக்கும் சௌகரியம் எப்படி இருக்கிறதோ?" என்று ஹரி கூறிக் கொண்டிருந்தபோதே வாசலில் தந்திச் சேவகரின் குரல் கேட்டுக் காரியதரிசி போனார்.

தந்தியைக் கையெழுத்துப் போட்டு வாங்கி வந்த அவர், "ஹரி ஸார், தந்தி உங்களுக்குத்தான்" என்று அப்படியே கவருடன் நீட்டினார்.

அவசர அவசரமாகப் பிரித்துப் படித்த ஹரி, அப்பொழுதே பாகவதரை இழந்துவிட்டதைப் போல் நடுங்கி, சிலை போல் பிரமித்து நின்று விட்டான்.

—'அப்பாவுக்கு உடம்பு மிகவும் கவலைக்கிடம், உடனே வருக. சுசீலா.'—

ஹரியின் பதற்றத்தையும் தவிப்பையும் கண்ட மூர்த்தியும், காரியதரிசியும், ''என்ன ஸார் விஷயம்?'' என்று மிக்க கவலையுடன் விசாரித்தனர்.

தந்தியை ஹரி அவர்களிடம் நீட்டினான். சபாக் காரிய தரிசியிடம், பாகவதரின் உடல் நிலை பற்றிய விவரம் தெரிந்து கொண்ட மூர்த்தி கூறினார்: ''பாகவதருக்கு ஒன்றும் நேராது. கவலைப்படாதீர்கள். எங்கள் 'வேனை' அனுப்புகிறேன். உடனே புறப்படுங்கள். மெட்ராஸில் என் தம்பி இந்த சிகிச்சையில் ரொம்பக் கெட்டிக்காரன். பெரிய 'நர்சிங்ஹோம்' வைத்திருக்கிறான். எப்படியாவது பாகவதரை 'வேனி'லேயே அங்கே அழைத்துச் சென்றால் நல்லது.''

இவ்வாறு கூறிய மூர்த்தி, தன் தம்பி சேகருக்கு அவசர மாகக் கடிதம் ஒன்று எழுதி, விலாசத்துடன் ஹரியிடம் கொடுத்தார்.

மூர்த்தியின் 'வேன்' சுவாமிமலை வீட்டை அடைந்த போது வாசலில் இரண்டு மூன்று கார்கள் நின்று கொண் டிருந்தன. அச்சத்துடன் உள்ளே விரைந்த ஹரியைக் கண்ட லட்சுமி அம்மாள் வாய் விட்டே அழுதுவிட்டாள்.

பாகவதரின் கட்டிலின் அருகில் குடும்ப டாக்டரும் கும்பகோணத்திலிருந்து வந்துள்ள பெரிய டாக்டர் ஒருவரும், ஏதோ பேசிக் கொண்டிருந்தனர். லட்சுமியம் மாளையும் ஹரியையும் தனியாக அழைத்துக் குடும்ப

டாக்டர் கூறினார்: ''பாகவதருடைய நிலைமை மிகவும் மோசமாய்த்தான் இருக்கிறது. இந்த வியாதிக்குத் தேவையான வைத்திய வசதிகள் கும்பகோணத்திலும் இல்லை. உடனடியாக பட்டணத்துக்குப் போவதுதான் நல்லது; வேறு வழியே இல்லை. பிரயாணம் செய்தால் ஆபத்து ஒன்றும் இல்லை. ஆனால் அதிகம் அசங்காமல் காரை மெதுவாக ஓட்டிக் கொண்டு போகவேண்டும்.''

இதைக் கேட்டதும் சுந்தரியும் லட்சுமியம்மாளும் மிகவும் பயந்து போய் விட்டனர். 'பட்டணத்துக்குத் திடீரென்று எப்படிப் புறப்படுவது? அதற்கு வேண்டிய வசதிகள் வேண்டாமா? போனதும் எங்கே தங்குவது? இங்கிருந்து யார் போவது; யார் இருப்பது? எவ்வளவு செலவாகும்? அதெல்லாம் நம்மால் ஆகுமா? என்று அவர்கள் கவலைப்பட்டுக் குழம்பிக் கொண்டிருந்தனர்.

''டாக்டர் சொல்லிவிட்டுப் போனதைக் கேட்டாயா ஹரி?'' என்று கேட்டாள் லட்சுமி.

அதற்கு ஹரியிடமிருந்து என்ன பதில் வரப் போகிறது என்று, எல்லாருமே அவனுடைய முகத்தை ஆவலுடன் நோக்கிய வண்ணம் இருந்தனர். சுசீலாவின் பார்வையும் நெஞ்சும், 'ஹரி பட்டணம் போவதற்கு எப்படியாவது ஒப்புக் கொள்ள வேண்டுமே', என்று துடித்துக் கொண்டிருந்தது.

''டாக்டர் கூறியபடி இப்பொழுதே புறப்பட்டு விட வேண்டியதுதான். ஐயாவை இந்த நிலைமையில் வைத்திருப்பது தவறு. நான் அதற்குத் தயாராகவே வந்திருக்கிறேன்'' என்றுகூறி விட்டான். பஞ்சு அண்ணாவும் ஹரியின் கருத்தையே ஆதரித்து, ''அண்ணாவை நாம் இத்தனை பேர் இருந்தும், நல்ல வைத்தியம் பார்க்காமல் இருக்கலாகாது. ஹரி கூறுவதுபோல் உடனே புறப்படுவதுதான் நல்லது'' என்றார்.

சுந்தரியும் லட்சுமியும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டனர்.

ஹரி, தம்புரா்வைக் காரிலிருந்து எடுத்துக் கொண்டு, உள்ளே வந்தபோது விழித்துக் கொண்ட பாகவதர், ''வா, இப்போதுதான் வருகிறாயா?'' என்று வரவேற்றார்.

பிறகு, பஞ்சு அண்ணாவையும் ராஜப்பாவையும் பார்த்து, ''பெங்களூர்க் கச்சேரி எப்படி அமைந்தது. நாளைக்கு உங்களுக்கு மைசூரில் கச்சேரி ஆயிற்றே; எப்படி வந்தீர்கள்? கான்ஸல் ஆகிவிட்டதா?'' என்று காலண்டரைப் பார்த்துக் கேட்டார்.

அருகில் உட்கார்ந்து கொண்டு பஞ்சு அண்ணா பாகவதரை அலட்டிக் கொள்ளக் கூடாது என்று தடுத்து, எல்லா விவரங்களையும் ஆதியோடந்தமாகக் கூறி, 'இன்னும் சற்றைக்கெல்லாம் நீங்கள் பட்டணம் புறப்படப் போகிறீர்கள்'' என்று நிறுத்தினார்.

இதைக் கேட்டதும் பாகவதர் சிரித்தார்.

''என்ன சிரிக்கிறீர்கள்? இந்தப் பூட்டுக்குப் பிழைத்துக் கொண்டு விட்டோம்; பார்த்துக் கொள்ளலாம் என்றா? டாக்டர் கண்டிப்பாகச் சொல்லி விட்டார். நீங்கள் பட்டணம் போய்த்தான் ஆக வேண்டும்'' என்றார் பஞ்சு அண்ணா.

''பூட்டாவது, சாவியாவது பஞ்சு? இத்தோடு எத்தனை பூட்டுக்களாச்சு? அடுத்த பூட்டோ அல்லது அதற்கடுத்த பூட்டோ; இல்லை என்றால், எனக்குப் பூட்டுக்களே இல்லையோ என்னவோ. பாபிக்கு சதாயுசு என்பார்களே, இன்னும் உலகத்தில் என்னவெல்லாம் பார்த்து அநுபவிக்க வேண்டியது பாக்கி இருக்கிறதோ; அதையெல்லாம் பாக்கி வைத்து விட்டுப் போனால் எப்படி? நான் இந்த இடத்தை விட்டு எங்கும் ஓர் அடி கூட வர

மாட்டேன். எனக்கு இனிமேல், எந்த மருந்தும் வேண்டாம். வைத்தியமும் வேண்டாம். கடைசிக் காலத்தில் இந்தக் கட்டைக்குக் காவேரிக் கரையில் எரிகிற பாக்கியமாவது கிடைக்கட்டும். இந்த ஜென்மம் கடைத்தேற அதை விடச் சிறந்த வைத்தியமே இல்லை. என்னை ஓர் இடத்துக்கும் இழுக்காதீர்கள்'' என்று விரக்தியாகப் பேசினார் பாகவதர்.

பாகவதருடைய வார்த்தைகள், லட்சுமியம்மாளையும் சுந்தரியையும் மிகுந்த வேதனையில் ஆழ்த்தின. பாகவதர் இப்படிப் பிடிவாதம் செய்வார் என்று பஞ்சு அண்ணாவும் மற்றவர்களும் எதிர் பார்க்கவில்லை. ஆயினும் அவர் கருத்தை அங்கே யாரும் ஒப்புக் கொள்ளத் தயாராக இல்லை.

''அண்ணா, உங்களுடைய நல்ல மனத்துக்கு ஒரு விதக் குறைவும் வராது, வரக்கூடாது என்பதுதான் எங்கள் எல்லாருடைய பிராத்தனையும். இங்கே உங்களை நம்பியிருக்கும் இந்த வீட்டிலுள்ளவர்களை மட்டும் மனத்தில் வைத்துக் கொண்டு நான் பேசவில்லை.

''நீங்கள் முன் போலக் கச்சேரி செய்ய வேண்டும்; உங்களுடைய இசையைப் பருக வேண்டும் என்று சங்கீத உலகமே ஆவலுடன் வேண்டுகிறது. உங்கள் ரசிகர்களுடைய அபிமானம் வீண் போகவில்லை. உங்களுடைய வியாதி குணமாகப் போகிறது; நீங்கள் முன் போல் தொழில் செய்யப் போகிறீர்கள்; அதற்கான வேளை வந்துவிட்டது.

''பங்களூரில் உங்களுடைய ரசிகர் ஒருவர், ஹரியின் பாட்டைக் கேட்டு பரவசமாகிப் பட்டணம் போக காரும், சிபாரிசுக் கடிதமும் கொடுத்திருக்கிறார். எங்களுக்காக

இல்லாவிட்டாலும் இப்படிப்பட்ட அன்பர்களுக்காகவாவது நீங்கள் எங்கள் பேச்சைக் கேட்கக் கூடாதா? இந்தப் பாக்கியம் எல்லாருக்குமா கிடைத்து விடுகிறது?'' என்று பஞ்சு அண்ணா விடாப் பிடியாகக் கூறி பாகவதரைச் சம்மதிக்க வைத்து விட்டார்.

அதற்குப் பிறகு பிரச்னைகள் வேறு திசையை நோக்கித் திரும்பின.

பட்டணத்துக்கு யார் போவது, யாரை இங்கே வைத்து விட்டுப் போவது என்று யோசித்தார்கள். ஹரியும் லட்சுமியும் பாகவதருடன் செல்ல வேண்டியவர்கள் என்று ஆனபிறகு, காயத்திரியையும் சுசீலாவையும் தனியே வைத்து விட்டுப் போக லட்சுமியம்மாள் விரும்பவில்லை.

சுசீலா, தகப்பனாருடன் பட்டணம் போகத் துடித்துக்கொண்டிருப்பதை நன்கு காட்டிக் கொண்டாள்.

''அங்கே என்ன, இடம் பிடிக்க வேண்டுமா, வீடு பார்க்க வேண்டுமா? எல்லாருமே புறப்பட்டுப் போவது தான் நல்லது'' என்று பஞ்சு அண்ணாவே முடிவு செய்து விடவே, சுசீலாவுக்கு ஆனந்தம் தாங்கவில்லை.—

இரவு சாப்பாடெல்லாம் ஆனபிறகு, பதினொரு மணிக்குப் புறப்படுவதாக முடிவாயிற்று. அதற்குள் திருவிடைமருதூரிலிருந்து வசந்தியும் வந்து சேர்ந்தாள்.

பாகவதரும் லட்சுமியம்மாளும் பின் சீட்டில் ஏறிக் கொண்டனர். அவர்களுக்குப் பக்கத்தில் சுசீலாவும், காயத்திரியும் அமர்ந்திருந்தனர்.

ஹரி, சுந்தரியின் கால்களில் விழுந்து நமஸ்கரித்தான். சுந்தரியின் விழிகள் பனித்தன.

''பட்டணம் போய்ச் சேர்ந்ததும் ஐயாவின் உடல் நிலைக்குக் கடிதம் எழுதுகிறேன் அம்மா.''

''எல்லாம் நீதான் இனிமேல் ஐயாவுக்கு. அவரை உன் கையில் ஒப்படைத்தாகி விட்டது. அவரை கவனித்துக் கொள்ள வேண்டியது முழுக்க முழுக்க உன் பொறுப்புத் தான். கவலைப்படத்தான் நாங்கள் எல்லாரும் இருக்கிறோம்; எங்களால் என்ன பிரயோசனம்?'' இந்த வார்த்தைகளைக் கூறி முடிக்குமுன் சுந்தரியின் குரல் கரகரத்தது.

''ஏன் வசந்தி, என் மீது கோபமா?'' என்று ஹரி அவளிடம் மெல்லக் கேட்டான். பதில் கூறாமல் இரு கைகளிலும் முகத்தைப் புதைத்துக் கொண்டு அழுத வண்ணம் அவள் உள்ளே சென்று விட்டாள்.

''வண்டி உனக்காக நிற்கிறது; சீக்கிரம் புறப்படு, ஹரி'' என்ற வண்ணம் சுந்தரி மடியிலிருந்து ஐந்நூறு ரூபாய் பணத்தை எடுத்து, ''எதற்கும் இதை நீ கையோடு வைத்துக் கொள்'' என்று ஹரியிடம் நீட்டினாள்.

''வேண்டாம் சின்னம்மா. பங்களூர்க் கச்சேரிப் பணம் பையிலேயே இருக்கிறது. பிறகு பார்த்துக் கொள்ளலாம்'' என்று சுந்தரியின் மனம் நோகாதபடி கூறிவிட்டு, ''வருகிறேன் வசந்தி; வாத்தியாரிடம் கோபமே கூடாது'' என்று அவள் இருந்த திசையை நோக்கிக் கூறிவிட்டு காரில் முன் சீட்டில் ஏறிக் கொண்டான்.

கார் புறப்படும் போது, லட்சுமியருகில் வந்து சுந்தரி நின்று கொண்டிருந்தாள். பாகவதரும் லட்சுமியும் விடை பெற்றுக் கொண்டனர். சுசீலாவும் காயத்திரியும், ''போய் விட்டு வருகிறோம் சித்தி'' என்று ஏக காலத்தில் விடை பெற்றுக் கொண்டனர்.

லட்சுமியம்மாள்தான், ''வசந்தி எங்கே?'' என்று கூப்பிட்டாள். வாசற்படியில் நின்று கொண்டிருந்த பெண்ணைச் சுந்தரி அழைத்தாள்.

''பெரியம்மா'' என்று வசந்தி லட்சுமியின் கைகளைப் பிடித்துக் கொண்டாள்.

கார் புதிய பாதையை நோக்கி மெல்ல ஊர்ந்தது.— வசந்தியும் சுந்தரியும் அந்தத் திசையையே பார்த்த வண்ணம் தெருவில் நின்றனர். வசந்திக்கு இருதயமே வெடித்துவிடும் போலிருந்தது.

## 36. பட்டணப் பிரவேசம்

பூ மலர்வதுபோல் மெல்ல மெல்லப் பொழுது விடிந்து கொண்டிருந்தது. ஓடும் காரிலிருந்த பாகவதரின் குடும்பத்தினர் அந்த அழகிய காட்சியைக் கண்டனர். குருநாதர் சொல்லிக் கொடுத்திருந்த உதயகால ஸ்தோத்திரத்தை ஹரி மனத்துக்கள் சொல்லிக் கொண்டிருந்தான்.

மாற்றங்கள் வானத்தில் மட்டும் நிகழ்ந்து கொண்டிருக்கவில்லை; மண்ணிலும் பளிச்சிட்டன. தாம்பரத்தைத் தாண்டியதிலிருந்தே, கிராமச் சூழ்நிலை மாறிக் கொண்டே வந்தது. குடிசைகளும் கூரை வீடுகளும் பின் தங்கிப் பங்களாக்கள் பூத்து நின்றன.

மியூசியம் ரோடிலுள்ள ரோஸ் கார்டன்ஸ் கேட் முன்னால் கார் நின்றது. கூர்க்கா இரும்புக் கேட்டைத் திறந்து விட்டான். வாசலில் கோலம் போட்டுக் கொண்டிருந்த பெண்ணொருத்தி காரின், நம்பரைப் பார்த்து விட்டு உள்ளே ஓடினாள். சற்றைக்கெல்லாம் டாக்டர் சேகரும், அவர் மனைவி சந்திராவும் வாசலுக்கு வந்து அவர்கள் எல்லாரையும் வரவேற்று அன்புடன் உள்ளே அழைத்துச் சென்றனர்.

ஹரி பையைத் தொட்டுப் பார்த்துக் கொண்டான். அறிமுகக் கடிதம் பத்திரமாக இருந்தது. ஆனால் அதற்கு அவசியமே இல்லாதது போல் அவர்களுக்கு வரவேற்புக் கிடைத்தது.

டாக்டர் சேகர் பாகவதரைச் சௌகரியமான ஒரு கட்டிலில் படுக்க வைத்து முதலில் அவருடைய நாடியைப் பரிசோதித்துவிட்டுத் திருப்தி தெரிவித்தார். பிறகு சந்திரா, அங்கிருந்த லட்சுமி யம்மாள், சுசீலா, காயத்திரி எல்லாரையும் மாடிக்கு அழைத்துச் சென்றாள்.

சேகர் ஹரியிடம், ''முதலில் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு, காபி பலகாரம் சாப்பிட்ட பின் சாவகாசமாகப் பேசலாம். இரவெல்லாம் மிகுந்த சிரமப் பட்டுப் பிரயாணம் செய்திருப்பீர்கள்'' என்று கூறினார்—

''அதெல்லாம் ஒரு சிரமும் இல்லை. உங்களுக்குத் தான் எங்களால் சிரமம்'' என்று சிரித்துக் கொண்டே கூறிய ஹரி, கையிலிருந்த கடிதத்தைக் கொடுத்தான்,

அதைப் பெற்றுக் கொண்ட சேகர், ''கடிதம் இருக் கட்டும்; எனக்கு எல்லா விவரமும் அண்ணா பங்களூரி லிருந்து டிரங்கால் பண்ணி விட்டா'' என்று கூறிவிட்டு, பக்கத்திலிருந்த தமது நர்ஸிங் ஹோமுக்கு அள் அனுப்பிப் பாகவதருக்கு, 'பெட்' ஏற்பாடு செய்தார்.

பெண்கள் பகுதி மிகவும் கலகலப்பாகவே இருந்தது. சில மணி நேரத்துக்குள்ளாகவே சந்திராவை லட்சுமி யம்மாள், சுசீலா, காயத்திரி-எல்லாருக்கும் மிகவும் பிடித்து விட்டது.

உள்ளே வந்த சேகர், சந்திராவை ஹரிக்கு அறிமுகம் செய்து வைத்து, ''இவளுக்கு சங்கீதம் என்றால் உயிர். ஒரு கச்சேரி விடமாட்டாள். அதுவும் என் அண்ணாவைப் போலவே, உங்கள் குருவின் பாட்டில் இவளுக்கு அசாத்தியப் பிரமை'' என்றார்.

உடனே ஹரி, ''இவர்களுக்குப் பாடத் தெரியுமா?'' என்று கேட்டான்.

''சுமார் இருபது வர்ணம், நூறு கீர்த்தனைகள் வரை பாடம் பண்ணியிருக்கிறாள்'' என்றார் சேகர்.

''ஓ! அப்படியென்றால் கச்சேரி பண்ணலாமே!'' என்றான் ஹரி ஆச்சரியத்துடன்.

உடனே சேகர், ''என்ன ஸார், நீங்கள் கூட இப்படிச் சந்திரா கட்சி பேசுகிறீர்கள்? பாட்டு வாத்தியார் சொல்லிக் கொடுத்த வர்ணத்தையும், கிருதியையும் மட்டும் மேடையில் போய் ஒப்புவித்து விட்டால் போதுமா? கற்பனையாக நாலு ஆவர்த்தனம் ஸ்வரமும், இரண்டு ராகமுங்கூடப் பாடத் தெரியாவிட்டால் காசு கொடுக்கிறவர்கள் கேட்டு விட்டுப் போவார்களா?'' என்றார்.

''பலே பலே! விஷயம் தெரிந்துதான் வைத்திருக்கிறீர்கள். நீங்களும் பாடுவீர்களோ?'' என்றான் ஹரி.

ஹரியின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த சேகர், ''எனக்கும் ஆசைதான். ஆனால் கடவுள் என்னவோ இந்த ஜென்மத்தில் எனக்கு அந்த பாக்கியத்தைக் கொடுக்காமல் இருந்து விட்டார்'' என்று கூறும் போதே சந்திரா குறுக்கிட்டு, ''நம்பாதீர்கள் ஸார், பொய். வேண்டுமானால் சங்கீதத்தை இவர் முன்னால் கொண்டு வந்து போட்டுப் பாருங்கள். அப்படியே ராகம், ஸ்வரம், நிரவல்' கோவை என்று அக்கு வேறு ஆணிவேறாய்ப் பிரித்துப் பிரித்து. எவ்வளவு அழகாக ஆபரேஷன் செய்து ஸ்ட்ரெச்சரில் அனுப்பி வைக்கிறார் பாருங்களேன்'' என்றாள்.

இதைக் கேட்டதும், அங்கிருந்த அனைவருடன், கட்டிலில் இருந்த பாகவதரும் சேர்ந்து சிரித்தார்.

'பட்டணத்தில், புருஷனும் மனைவியுந்தாம் எவ்வளவு தமாஷாய்ப் பழகுகிறார்கள்! இப்படியல்லவா டாக்டர் தம்பதிகளைப் போல் இருக்க வேண்டும்?' என்று சுசீலா மனத்தினுள் எண்ணிக்கொண்டாள்.

லட்சுமியம்மாள் ஸ்நானத்தை முடித்துக் கொண்டு வெளியே வருவதற்கும் நர்ஸிங் ஹோமிலிருந்து பாகவதரை அழைத்துப் போக வண்டி வருவதற்கும் சரியாக இருந்தது.

சேகர் பாகவதரிடம், "நான் இப்போது என்னுடன் உங்களை நர்ஸிங் ஹோமுக்கு அழைத்துச் சென்று; அட்மிட் செய்துவிடலாம் என்று இருக்கிறேன்; புறப்படலாமா?" என்றார்.

உடனே பாகவதர், ஒரு முறை சேகருடைய முகத்தையே உற்றுப் பார்த்துவிட்டு, சுற்று முற்றும் பார்த்தார்.

பாகவதரின் கண்கள் எதையோ தேடி அலைவதைக் கண்ட சேகர், "என்ன வேண்டும் உங்களுக்கு?" என்று அன்புடன் கேட்டார். டாக்டருடைய பரிவு அவர் நெஞ்சைத் தொட்டது.

அருகில் யாரும் இல்லாதது கண்டு, பாகவதர் மிகவும் தயக்கத்துடன் கேட்டார்: "இங்கே பஞ்சாங்கம் இருக்கிறதா?"

'இல்லை' என்கிற பதிலைக் கூறச் சேகர் தயங்கிக் கொண்டிருந்தபோதே, "இந்தாருங்கள் அப்பா" என்று காயத்திரி பெட்டியிலிருந்து பஞ்சாங்கத்தை எடுத்துக் கொண்டு வந்து கொடுத்தாள்.

மகிழ்ச்சியோடு அதைப்பெற்றுக்கொண்ட பாகவதர், வேகமாக மாதங்களைப் புரட்டினார். பிறகு ஒரு குறிப்பிட்ட பக்கத்தில் ஆழ்ந்து கவனத்தைச் செலுத்திவிட்டுச் சேகரைப் பார்த்து, "பன்னிரண்டு மணிக்கு மேல் புறப்படலாமா? இன்னும் அரை மணிதானே இருக்கிறது? அதுவரை தியாஜ்யம் இருக்கிறது" என்று டாக்டரிடம் அனுமதி கேட்பதுபோல் கேட்டார்.

சேகரும் சிரித்துக்கொண்டே, "எப்படி உங்கள் சௌகரியமோ, அதுதான் முக்கியம். இனிமேல் இது

உங்கள் வீடு. யாருக்கும் சங்கோஜமே கூடாது'' என்று கூறிவிட்டு, ''நான் நர்ஸிங்ஹோம் போய் வண்டி அனுப்புகிறேன். நீங்கள் உங்கள் சௌகரியம் போல் புறப்பட்டு வாருங்கள்'' என்று விடைபெற்றுச் சென்றார்.

சாமன்களையெல்லாம் ஓர் அறையில் ஒழுங்காக அடுக்கி வைத்துக்கொண்டிருந்தாள் காயத்திரி. சுசீலா ரோஸ் கார்டன்ஸ் செடிகளையும், மலர்களையும் பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்தாள். லட்சுமியம்மாள், சந்திராவிடம், ''இங்கே கோயில் உண்டா?'' என்று கேட்டாள்.

''இருக்கிறது; என்ன வேண்டும் அத்தை உங்களுக்கு?'' என்று சந்திரா கேட்டாள்.

''சாயங்காலம், இவ்வளவு நல்ல மனிதர்களிடம் கடவுள் எங்களைக் கொண்டு வந்து சேர்த்ததற்காக, சுவாமிக்கு ஓர் அர்ச்சனை பண்ணிவிட்டு வர வேண்டும். பிறகுதான் பாக்கி எல்லாம்'' என்று லட்சுமியம்மாள் கூறிறவுடன், ''அத்தை—நல்ல அத்தை'' என்று சிரித்தாள் சந்திரா.

பிற்பகல், பாகவதர் நர்ஸிங் ஹோமுக்குப் போனார். மாலை எல்லாரும் அங்கே போனார்கள்.

டாக்டரிடம், ''உடம்பு எப்படி இருக்கிறது? எத்தனை நாள் இங்கே தங்கும்படியாக இருக்கும்?'' என்று கேட்டாள் லட்சுமியம்மாள்.

''நன்றாகக் கேட்டீர்கள்? இத்தனை வருஷமாக வியாதியை வைத்துக் கொண்டிருந்து விட்டு, இப்போது இங்கு வந்தவுடன், நாள் கணக்குக் கேட்கிறீர்களே!'' என்றார் டாக்டர் சிரித்துக் கொண்டே.

பிறகு சந்திரா, எல்லாருக்கும் நர்ஸிங்ஹோமைச் சுற்றிக் காண்பித்தாள். டாக்டருடைய பிரத்தியேக ஆலோசனை

அறை, ஆபரேஷன் தியேட்டர், நோயாளிகளுக்காகப் படுக்கைகள், மாடியிலும் அதே போன்ற வசதியான விசேஷ அறைகள், மருந்துச் சாலை, ஸ்டோர் ரூம், குடியிருப்புகள் எல்லாம் அழகாகவும் சுத்தமாகவும் இருந்தன. நர்ஸுகள் எப்பொழுதும் சுறுசுறுப்புடன் குறுக்கும் நெடுக்கும் நடமாடிக் கொண்டிருந்தனர். சுவரெல்லாம் முகம் தெரியும் கண்ணாடி போல் இருந்தன. வெளியில், நோயளிக்காக வந்து தங்கும் உதவியாளர்களுக்கான குடியிருப்புகள்; வழியெல்லாம் குரோட்டன்ஸும், விசிறி வாழைகளும் அழகாகத் தலையசைத்துக் கொண்டிருந்தன. மிகவும் விஸ்தாரமாகக் கட்டியிருந்த அந்த அழகிய நர்ஸிங் ஹோமை ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டே வந்தவர்கள் அதன் வாயிலை அடைந்தனர். அங்கே—

''என்ன பார்க்கிறீர்கள்? எல்லாம் உங்களுடைய இடத்துக்குத்தான் வந்திருக்கிறீர்கள். என் மாமியாருக்கும் உங்கள் பெயர்தான். அம்மா நினைவாக அவர் 'லட்சுமி நர்ஸிங் ஹோம்' என்று பெயர் வைத்தார்'' என்று சந்திரா விளக்கினாள்.

மிகச் சீக்கிரத்தில், மிக நெருங்கிப் பழகத் தொடங்கிய சந்திராவை எல்லாருக்கும் பிடித்து விட்டது.

''அதோடு, நீங்கள் அசப்பில் பார்ந்தால் என் அத்தை போலவே இருக்கிறீர்கள். இதைத்தான் அவர் என்னிடம் புறப்படும் போது கூறினார்'' என்றாள் சந்திரா.

''அப்படியானால், இனிமேல் அம்மா பாடு யோகந்தான்'' என்று சுசீலா சிரித்தாள்.

அவளுடைய துணிச்சலைக் கண்டு ஹரி வியந்தான். லட்சுமியம்மாளுக்கு இதை எல்லாம் கேட்கக் கேட்க மகிழ்ச்சியாகவும், மறுபுறம் பெருமையாகவும் இருந்தது.

அன்றே ஹரி சுந்தரிக்குக் கடிதம் எழுதினான். இங்கு டாக்டர் வீட்டில் தங்களுக்கு ராஜ உபசாரம் நடப்பது பற்றியும், எப்படியும் ஆறு ஏழு மாதங்களுக்குக் குறையாமல் இங்கேயே தங்கி இருக்க வேண்டுமென்று டாக்டர் அபிப்பிராயப்படுவதாகவும் எழுதியதோடு; வசந்திக்கு ஆசி கூறிக் கடிதத்தை முடித்திருந்தான்.

ரோஸ் கார்டன்ஸில் பல நாளாய்ப் பூட்டிக் கிடந்த அவுட் ஹவுஸ் சுத்தம் செய்யப்பட்டு அவர்கள் இருப்பிடம் ஆயிற்று. ஹரிக்குத் தனியாக ஓர் அறை கிடைத்தது. அதில் தம்புராவையும் சாமான்களையும் வைத்துக் கொண்டான். டாக்டருக்கும் சந்திராவுக்கும் துளிக்கூட ஆட்சேபம் இல்லை என்று அறிந்து கொண்டவுடன், தன் அசுர சாதகத்தை ஆரம்பித்து விட்டான். சந்திராவும், சேகரும், ஒரு பெரிய வித்துவானைத் தங்கள் வீட்டோடு வைத்துக் கொண்டு விட்டது பற்றி மட்டற்ற மகிழ்ச்சியும் பெருமையும் அடைந்தனர்.

சிறுகச் சிறுகச் சந்திராவுக்கு சுசீலாவின் திருமண விஷயம் தெரிந்துவிட்டது. அதன் பிறகு அவள் சுசீலாவையும் ஹரியையும் சேர்ந்து காணும்போதெல்லாம் கேலி பண்ணத் தொடங்கினாள். 'பங்களூர் அத்தான் வந்ததும் கல்யாணத்தை முடிக்க ஏற்பாடு செய்ய வேண்டியதுதான்' என்று அடிக்கடிக் கூறிச் சுசீலாவை ஹரியின் எதிரிலேயே வர முடியாமல் பண்ணி விட்டாள்.

ஒரு நாள், சந்திராவும் லட்சுமியும் வெளியே போயிருந்தனர். ஹரி தனியாக இருந்தான். சோபவில் உட்கார்ந்து. ஒரு புத்தகத்தை எடுத்தான். அது ஒரு நாவல். பாதி படித்தபடி பிரித்து வைத்திருந்தது. புத்தகத்தின் சில பக்கங்களில், பென்சிலால் அங்கங்கே சிறு சிறு கோடுகள் இழுக்கப்பட்டிருந்தன.

ஹரி ஒன்றைப் படித்தான்;

—'மாந்தரின் மனம் கொடியைப் போன்றது. அன்பு கண்டவுடன் அது படரத் துவங்கிவிடுகிறது.'—

ஹரிக்கு அந்த வரிகள் மிகவும் பிடித்திருந்தன. ஒரு முழுச் சாப்பாட்டிலுள்ள அத்தனை சத்தையும், ஒரு சிறு மாத்திரைக்குள் அடைத்துக் கொடுத்துவிடுகிறார்களே அப்படி, அந்தப் புத்தகத்திலுள்ள சிறப்பான கருத்துக்கள் எல்லாம் அந்த இரு பக்கத்துச் சிறு சிறு பென்சில் கோட்டுக்குள் அடக்கம் போலும் என்று ஆவலோடு மற்றொன்றைப் படித்தான்.

''இன்றையத் தவறுக்குக் காரணமாக இருக்கின்ற நேற்றைய நிசழ்ச்சிகள்; நாளையமௌனம், மனச்சோர்வு தோல்வி, அல்லது வெற்றி இவற்றுக்குச் எச்சரிக்கை அல்லது வழி காட்டிகளே.''—

ஹரி இந்த வாக்கியத்தை மிகவும் ரசித்து மீண்டும் ஒரு முறை படித்துக் கொண்டிருந்தான்; டெலிபோன் மணி கணகணவென்று ஒலித்தது.

சட்டென்று ரிஸீவரைக் கையில் எடுத்து, ''ஹலோ'' என்றான்.

''டாக்டர் இருக்கிறாரா?''

டெலிபோன் மறு முனையிலிருந்து கேள்வி பிறந்தது. கேள்வியை எழுப்பியவள் ஒரு பெண். அவளுடைய குரல் ஹரியின் மூளையைச் சென்று தாக்கியது. எங்கோ கேட்டது போலப் பிரமை. ஹரி சட்டென்று சமாளித்துக்கொண்டு கேட்டான்: ''டாக்டர் இல்லை. தாங்கள் யார் என்று சொல்லுவது''.

''காந்தாமணி என்று சொல்லுங்கள்.'' அவள் போனை வைத்துவிட்டாள்.

ஹரியின் கையில் இருந்த ரிஸீவர் நழுவியது.

# 37. பிறவிக் கடன்

இசைப்பவன் இசையை மறந்தாலும், கல்யாணக்காரர் கச்சேரியை மறந்தாலும், பக்கிரி தண்டலுக்கு வர மறக்கவில்லை.

மாயூரத்தில் ஹரி கச்சேரியை முடித்துக் கொண்டு ரிடயரிங் ரூமில் தங்கியிருந்தான். அங்கிருந்து அவனுக்கு மதுரைக்குப் போயாக வேண்டும்.

ஹரிக்கு அன்று மன நிம்மதியே இல்லை. அத்தனை வருஷங்களில் அன்றுதான் 'கல்யாணக் கச்சேரியே' பண்ணி விட்டதாக எண்ணி வருந்தினான். கல்யாணக் கச்சேரி என்றாலும், அவன் அங்கும் உழைத்துத்தான் பாடுவான். எங்கோ ஒரு மூலையில் ரசிகன் ஒருவன் இருப்பான், அவனுக்காக என்று அநுபவித்துப் பாடத் தவறமாட்டான். ஆனால் அன்று எல்லாரும் ஹரியின் பாட்டைப் புகழ்ந்தாலும் அவனுடைய மனத்துக்குச் சமாதான மில்லை. காரணம், பட்டணத்திலிருந்து புறப்படும்போதே அவனுக்கு மன அமைதி இல்லை.

போனில் காந்தாமணியின் பெயரைக் கேட்டதும் அவன் மிகவும் குழம்பிவிட்டான்.

—'காந்தாமணி பட்டணத்திலா இருக்கிறாள்? அவள் டாக்டர் சேகருக்குத் தெரிந்தவளாகவுமா இருக்கவேண்டும்? என்றாவது ஒரு நாள் அவள் அந்த வீட்டில் வந்து நின்றால் என்ன ஆகும்? கடிதத்தைத் படித்துவிட்ட கோபமே இன்னும் சுசீலாவுக்குத் தணியவில்லை. இப்

போது நிலைமை முற்றும் மாறித் திருமண கட்டத்துக்கு முன்னேறி; பார்க்கிறவர்கள் எங்களைப் பரிகசிக்கிற அளவுக்கு வந்துவிட்டது. அந்த அளவுக்கு சுசீலா என்னிடம் அன்பும் நம்பிக்கையும் காட்ட ஆரம்பித்துவிட்டாள். இந்தச் சமயத்திலா காந்தாமணி வந்து சேர வேண்டும்? ஆனால் காந்தாமணியைப் பற்றி இப்படி நினைப்பது தவறல்லவா? பாவம்! அவள் எவ்வளவு நெருக்கடியான சமயங்களில் உதவினாள்? அவளைப்போல் அன்பும் வெள்ளையுள்ளமும் படைத்த பெண்ணைக் காண முடியுமா? என்னால் நேர்ந்த அதிர்ச்சியைத் தாங்கமாட்டாமல், வீடுவாசல், பிறந்த மண் அனைத்தையுமே துறந்து விலகிப் போய்விட்டவளாயிற்றே!

'கலைஞர்களில் நான் மாறுபட்டவன். தொட்டதற்கெல்லாம் குருவின் பெயரைச் சொல்லிக்கொண்டு, தனக்கென்று சொந்த விருப்பு வெறுப்புகள் வைத்துக்கொள்ளாத ஒரு மரக்கட்டை என்று அறிந்துகொள்ள நேரிட்ட அவளுடைய அநுபவந்தான்; எத்தனை கொடுமையானது? ஆனால் என் வரையில் அதுவே புனிதமானது அல்லவா?'—

''தம்பி'' என்ற பழக்கமான குரலைக் கேட்டுப் படுத்துக்கொண்டிருந்த ஹரி தலை நிமிர்ந்தான். எதிரே பக்கிரி பவ்யமாக நின்று கொண்டிருந்தான்.

''உள்ளே வா, மாமா'' என்று ஹரி அழைத்தான். பக்கிரி தயங்கித் தயங்கி உள்ளே வந்தான். ''என்ன தம்பி, இந்த மாதிரி பண்ணிப்பிட்டே?'' என்று அவன் ஆச்சரியத்துடன் கேட்டான்.

''எந்தமாதிரிப் பண்ணிவிட்டேன்? கல்யாண வீட்டுக்காரர்களிடம் போய்ச் சாயங்காலம், நான் எங்கே என்று விசாரித்தாயாமே? இதெல்லாம் என்ன பழக்கம்.''

"என்ன தம்பி இது; இப்படி ஒரே முட்டாக் கோவிச்சுக்கறே? சுவாமிமலைக்கு முந்தாநா கிருத்திகைக் குப் போனேன்."

"அம்தல்லாம் வேறே இப்போ ஆரம்பித்திருக் கிறாயா? தேர்த்திருவிழா வருஷத்துக்கு ஒரு தடவை தானே வருகிறது; இது மாதம் ஒரு கும்பல் சேருகிற நாளாயிற்றே என்றா?"

"என்ன தம்பி இது, பழைய பேச்சு?"

"நீ புதிதாகச் சொல்லு."

"தெரு வழியாப் போற போது உங்க ஐயா வூட்டிலே பெரிய பூட்டுத் தொங்கிக்கிட்டு இருந்திச்சு."

"எங்கேயாவது சிங்கப்பூருக்கோ, சிலோனுக்கோ புறப்பட்டுப் போய் விட்டோம்; மூவாயிரம் ரூபாய் போயிற்றே என்று பயந்து விட்டாயாக்கும்?"

"என்ன தம்பி இன்னைக்கிப் பேச்செல்லாம் ஒரே எடக் காவே பேசறே! பட்டணம் போயிருக்கிறதாச் சொன் னாங்க. நான் புறப்பட்டு வந்திட்டேன்."

"தெருவில் போகிற உன்னைக் கூப்பிட்டு அவர்களாக நாங்கள் பட்டணம் போனதை உன்னிடம் கூறினார்; களாக்கும்?"

"இல்லே தம்பி, நான்தான் கேட்டேன்."

"அதற்குத்தான் இவ்வளவும் கேட்டேன்."

"தப்புன்னா மன்னிச்சுடு தம்பி."

"தப்பும் இல்லே, மன்னிப்புமில்லே: சும்மா தமா ஷுக்குச் சொன்னேன் மாமா, நானே உன்னைத் தேடி

வர்ரதா இருந்தேன். நம்முடைய விஷயத்தை ஒரு வழியாக முடித்துக் கொண்டு விடுவோம். யாசகம் கேட்கிற மாதிரி நீ என் பின்னாலேயே ஒவ்வொரு தடவையும் சுற்றிக்கொண்டு இருக்கவும் வேண்டாம்; கடன் வாங்கி விட்டவனைப் போல் என்னைப் பற்றி நீ எல்லாரிடமும் விசாரித்துக் கொண்டு இருக்கவும் வேண்டாம்; அதற்கு ஒரு வழி பண்ணி விட்டேன்.''

''சரி, தம்பி.''

ஹரி பெட்டியிலிருந்து நோட்டுக் கட்டை எடுத்து பக்கிரியின் கையில் கொடுத்தான். அதில், தையல் பிரிக்கப் படாத புத்தம் புதிய பத்து ரூபாய் நோட்டுகளாக பல கட்டுகள் இருந்தன.

''இதைச் சித்தியிடம் கொடு மாமா. முதலில் தங்கைகள் கல்யாணத்தை சிறப்பாக முடித்துக்கொள் மீதிப் பணத்தைக் கொண்டு குடும்பத்தை நன்றாகக் கூட இருந்து நடத்த வேண்டியது உன் பொறுப்பு, உன்மேல் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. என்னால் முடிந்தது இவ்வளவுதான். நீ இனிமேல் என்னைத் தேடவோ, பணம் கேட்கவோ அலைய வேண்டாம்.''

பத்தாயிரம் ரூபாய் பணத்தையும் கையில் வாங்கிக் கொண்ட பக்கிரி பிரமித்து நின்றான்; அவன் கண்கள் கலங்கின.

''இவ்வளவும் எங்களுக்கா தம்பி?''

''அதுதான் எல்லா விவரமும் சொன்னேனே. மாமா.''

''இத்தனைப் பணத்தை ஒருமுட்டா எப்பத் தம்பி பார்த்திருக்கோம்?''

''பரவாயில்லை; பழைய தொழிலை மட்டும்....?''

"சத்தியமா; இன்னமே அந்த வழிக்கெல்லாம் போக மாட்டேன். தம்பி இந்த ஏழைக் குடும்பத்திலே விளக்கேத்தி வைக்கணும்னு, தெய்வம் உன்னை ஒரு காரணமாத்தான் எங்களுக்குக் காட்டியிருக்கு: அந்த தெய்வத்தோடு கருணைக்குப் பங்கம் வரும்படியா மனசாலே கூட நடந்துக்க மாட்டோம் தம்பி"—என்று கரம் கூப்பியபோது; பக்கிரியின் தொண்டை கரகரத்தது; கண்களிலிருந்து அவனையும் மீறிக் கண்ணீர் வழிந்தது!

## 38. மேகம் கலைந்தது

யாரைப் பற்றி எல்லாரும் பெரிதாகக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தார்களோ, அவர் இப்போது, மற்றவர்களைப் பற்றிப் பெரிதாகக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தார். 'சுந்தரி அல்லது வசந்தியிடமிருந்து ஒரு கடிதங்கூட வரவில்லையே! அவர்களுக்குக் கோபம் இருப்பது இயற்கை தானே? தந்தையும் மகளுமாகச் சேர்ந்து; தாய்க்கும் மகளுக்குமே பெரும் தீங்கு இழைத்து விட்டோம். சுந்தரியின் வாழ்வை நான் பறித்தேன்; மகளின் வாழ்வை சுசீலா பறித்துக் கொண்டாள்' என்று பாகவதர் அடிக்கடி எண்ணிப் புலம்பினார்.

அவருடைய உடம்பு மிகவும் தேறி வருவதாகப் பார்க்கிறவர்களுக்கெல்லாம் தெரிந்தது; அவருக்கும் புரிந்தது. பங்களூரிலிருந்து மூர்த்தியும் அடிக்கடி வந்து கவனித்துக் கொண்டார். வந்து போகும் போதெல்லாம் தம்பியிடம், ''பாகவதரை இன்னும் சில மாதத்துக்குள் கச்சேரிக்கு அனுப்பி விட வேண்டும். எங்கே, பார்ப்போம் உன் திறமையை'' என்று உற்சாகப்படுத்தி விட்டுத்தான் போவார்.

ஹரிக்குக் கச்சேரிகள் நிறைய நடந்து கொண்டிருந்தன. நகரத்திலேயும் ஹரியின் புகழ் வெகுவாகப் பரவியது. அவன் பாடாத பிரபல சபாக்கள் இல்லை; அவன் பாடிப் பிரபலமாகாத சபைகளும் இல்லை.

பாகவதர் தம் மூச்சுள்ள போதே சுசீலாவின் கல்யாணத்தைக் கண்டு களித்து விட விரும்பினார். லட்சுமியம்

மாளுக்கும் இதே கவலைதான் இருந்தது. பட்டணத்துக்கு வந்ததிலிருந்தே சுசீலாவின் போக்கில் காணப்பட்ட மாறுதல்களைக் கண்டு லட்சுமியம்மாளின் அடிவயிற்றில் புகைந்தது. கணவரிடம் விரைவிலேயே திருமணத்துக்கான ஏற்பாடுகளைக் கவனிக்கும்படி லட்சுமி கூறினாள். பாகவதர், அந்தப் பொறுப்பை சந்திராவிடம் ஒப்படைத்து விட்டார்.

கல்யாணம் செய்து கொடுக்கிற விஷயத்தில் தமக்குத் துளியும் கைராசி இல்லை என்று பாகவதர் எப்போதோ தெரிந்து கொண்டு விட்டார். காயத்திரியின் கல்யாணத்தில் வாங்கிய அடி; வசந்தியின் திருமணத்திலும் எதிரொலிக்கத் தவறவில்லை. அவர் வசந்தி திருமண விஷயமாகத் தலையிடாமல் இருந்திருந்தால், ஒரு வேளை எல்லாம் சுபமாக முடிந்திருக்குமோ என்னவோ? அதனால்தான் சுசீலா தன் இச்சைப்படி முடித்துக் கொண்டாள் போலும். தம் கைபடாமல், தம் கால் தூசி கூடப் படாமல் மணம் செய்து கொள்ளும் அவர்களுடைய வாழ்க்கையாவது இன்பமாக இருக்கட்டும் என்று மனமார வாழ்த்தினார்.

சேகரும், மூர்த்தியும், சந்திராவின் விருப்பப்படியே ரோஸ் கார்டன்ஸில் திருமணத்தை நடத்த வேண்டுமென்று ஆசைப்பட்டனர். லட்சுமியம்மாளுக்கு ஏதாவது ஒரு கோயிலில் நடத்த வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. ஆயினும் சந்திராவின் கட்சிதான் ஜயித்தது,

ரோஸ்கார்டன்ஸ் தேவலோகம் போல் இரவும் பகலும் விழாக்கோலத்தில் ஜொலித்தது, விதம் விதமான இன்னிசை நிகழ்ச்சிகளும்; அன்புப் கலவையும் கொண்ட உபசரிப்பும் விருந்தும் வந்திருந்தோரை மயக்கின. வாயாற, மணமாற மனமக்களை வாழ்த்தினர்.

சங்கீத உலகில் ஹரிக்கு எத்தனை செல்வாக்கு உண்டு என்பதை பாகவதர் அன்றுதான் கண்டு கொண்டார்.

இசையினாலும், அன்பினாலும் ஹரி எத்தனை இதயங்களை வசப்படுத்தி வைத்திருக்கிறான் என்பதை அன்று வந்திருந்த ஒவ்வொருவர் முகத்திலும் தவழும் மகிழ்ச்சியைக் கண்டே பாகவதர் அறிந்து கொண்டார.

கல்யாணம் நடந்த சிறப்பைப் பார்த்து அதிசயிக்காதவர்களே இல்லை. டாக்டரும், சந்திராவும் ஆச்சரியப்பட்டனர். பாகவதருடைய கலை வாரிசுக்குக் கலையன்பர்கள் செலுத்திய அன்புப் பரிசுகள் மலைபோல் குவித்துநின்றன.

பஞ்சு அண்ணாவும், ராஜப்பாவும்தான் பாகவதரின் சார்பில் பம்பரமாகச் சுழன்று, ஆக வேண்டிய காரியங்களைக் கவனித்துக்கொண்டனர். ஆனாலும், ஆயிரம் வந்தென்ன ஆயிரம் போயென்ன; இத்தனை சிறப்பையும் நேரில் காணவும், கலந்து கொள்ளவும் சுந்தரியும் வசந்தியும் வராத குறை பாகவதரின் மனத்தை மட்டும் அல்ல; லட்சுமியின் உள்ளத்தையும் வாள் கொண்டு அறுப்பது போலவே இருந்தது. எத்தனைதான் வருத்தமும் மனஸ்தாபமும் இருந்தாலும் இப்படிக் காரியங்களைக் கைநழுவ விடலாமா? இப்படிப் பகைமை பாராட்டச் சுந்தரிக்குச் சுட்டுப் போட்டாலும் தெரியாதே!

திருநீர்மலையில் திருமணத்தை நடத்தினால் பாகவதர் கலந்துகொள்ள முடியாது; அதனாலேயே திருமணம் ரோஸ் கார்டன்ஸிலேயே நடந்தது. முகூர்த்தம் ஆனதும் எல்லாரும் காரில் திருநீர்மலைக்குச் சென்றனர், பாகவதர் சற்று ஓய்வெடுக்கக் கண்களை மூடினார்.

எங்கோ ஒலிக்கும் ஆலய மணியின் ஓசை, பாகவதரின் செவிகளில் ஒலிப்பது போல் இருந்தது. ''சுவாமி நாதா, இனி என்று நான் உன் தரிசனத்தைக் காணப் படியேறிச் சந்நிதி முன் வந்து கைகூப்பி நிற்கப் போகிறேன்? என் கால்களை ஒடித்து இப்படி இங்கே கொண்டு வந்து கிடத்தி

விட்டாயே!'' என்று உள்ளத்தினுள்ளே அரற்றினார். அப்பொழுது கணகணவென்று கபாடமணிகள் ஒலிக்கச் சந்நிதிக் கதவுகள் திறந்தன.

அங்கே—

நீறு பூத்த மேனியாய், பெற்ற தாய் தந்தையரை வெறுத்து வந்த குமரனாய், அந்தக் குமரனே குருநாதனாய், குருநாதனே மண்டபத்திலே வந்தமர்ந்த ஹரியாய், ஹரியே குன்று தோறாடும் குமரனாய்த் திருக்கல்யாணக் கோலத்தில் நின்றிருப்பது போல் பாகவதர் இன்பக் கனவொன்று கண்டு கொண்டிருந்தார்.

கனவென்றால் கலைய வேண்டிய ஒன்றுதானே?—

''ஐயா, ஐயா!'' என்று அன்பு ததும்பும் மெல்லிய குரலில் அழைக்கிற ஒலி கேட்டு உணர்வு திரும்பி, விழி திறந்த பாகவதர், அப்போது—விழி கொள்ளாக் காட்சி ஒன்று கண்டார். ஹரியும் சுசீலாவும், கழுத்தில் மலர் மாலைகளுடன் அவர் காலடியில் விழுந்து வணங்கி எழுந்தனர்.

அப்படியே அவர்களை வாரித் தழுவிக் கொண்ட பாகவதர்; அவர்கள் கையிலிருந்த திருநீர்மலைத் திருமாலின் பிரசாதமான திருத்துழாயைப் பக்தியுடன் வாங்கிக் கொண்டு, ''அடுத்த வருஷம் ராமச்சந்திரனைப் போல் ஒரு பிள்ளையைப் பெற்று என் மடியில் கிடத்த வேண்டும்'' என்று சுசீலாவை ஆசிர்வதித்தார். கண்களில் ஆனந்த பாபஷ்பம் துளும்ப ஹரி சுசீலாவை நோக்கினான். நாணத்தால் அவள் இமைகள் தாழ்ந்தன.

பாகவதர் மனத்தில் இருந்த ஒரு பெருங்குறை நீங்கியது. உயிரோடு இருக்கும் போதே சுசீலாவின் திருமணத்தை நடத்திப் பார்த்துவிட வேண்டுமென்று விரும்பினார்; அவர் நடத்தாமலே பார்த்து விட்டார். எல்லாருமாகச் சேர்ந்து எவ்வளவு பிரமாதப் படுத்தி

விட்டார்கள்! இப்பொழுதே எழுந்து சுவாமிமலைக்குப் போய் விடலாம் போல் அவருக்கு தெம்பு வந்து விட்டது!

சேகரும், சந்திராவும் மருந்து கொடுக்கவில்லை. அமிர்தத்தைக் கொடுத்துத்தான் இப்படி ஓர் அற்புதத்தைச் செய்திருப்பது போல் பாகவதருக்குத் தோன்றியது. அப்போது அவருக்கு இருந்த மகிழ்ச்சியில், உட்கார்ந்திருந்த இடத்திலிருந்தே ஒரு பாட்டை பாடு, நிரவல் செய்து பத்து ஆவர்த்தனம் ஸ்வரம் பாடித் தள்ள வேண்டும் போலிருந்தது. நர்ஸிங் ஹோம் என்பதனால் அந்த ஆவலை அடக்கிக் கொண்டார்.

## 39. காந்தாமணியின் கடிதம்

காலம் ஓடிக்கொண்டே இருக்கிறது. உருண்டு விழுந்தவன் எழுந்திருக்க நேரமில்லாமல் ஓடிக்கொண்டிருக்கிறது. ஓடட்டுமே!

உள்ளூரிலும் சரி, வெளியூர்களிலும் சரி, ஹரி ஒவ்வொரு கச்சேரிக்கும் சுசீலாவையும் கூடவே அழைத்துக் கொண்டு சென்றான்; அவனோடு சேர்ந்து அவள் போகாத இடம் இல்லை; பார்க்காத ஊர் இல்லை. சுசீலா மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும்போது ஒரு நாள் ஹரி கேட்டான்: ''அவரவர்களுக்கு உரிய பொருளை அவரவர்களிடம் சேர்த்துவிட வேண்டாமா? இனியும் எனக்கு வந்த காந்தாமணியின் கடிதத்தைக் கையில் வைத்துக்கொண்டு, என் கண்ணில் காட்டாமல் இருக்கலாமா சுசி?''

அவ்வளவுதான், ஹரி இதைக் கேட்டு முடிப்பதற்குள், ஐப்பசி மாதத்து ஆகாயம்போல் எங்கிருந்தோ குபீர் என்று பொங்கி வந்த துயரம் அவள் உள்ளத்தை அப்பிக் கொண்டு, குலுங்கிக் குலுங்கி அழத் தொடங்கிவிட்டாள். அதன் பிறகு ஹரி எத்தனை முயன்றும் அவளைச் சமாதானம் செய்ய முடியவில்லை.

''கடிதத்தை நான் உன்னிடம் கேட்பது பிசகு. அதை நீ என்னிடம் கொடுக்கவே வேண்டாம். தவறாக எண்ணி அழக்கூடாது'' என்று கெஞ்சினான்.

இதற்குள், ''ஹரி, என்ன பண்ணினாய்?'' என்று லட்சுமியம்மாளும், காயத்திரியும் அங்கு வந்துவிட்டனர்.

''வாயும் வயிறுமாய் இருப்பவளை இப்படி அழவிடலாமா ஹரி? என்னதான் நடந்தது? என்ன செய்து விட்டாய்?'' என்று ஹரியைக் கண்டித்தவண்ணம், ''அழாதே சுசீலா; நல்ல உடம்பா? இப்படிக் குலுங்கிக் குலுங்கி அழுதால் தாங்குமா? உள்ளே வா'' என்று லட்சுமியம்மாள் அழைத்துச் சென்றுவிட்டாள்.

பிறகு காயத்திரி, ஹரியிடம் சண்டையின் காரணம் கேட்டாள். ஹரி நடந்ததைக் கூறினான்.

''இதைக் கேட்க உனக்கு இப்போது தான் சமயம் கிடைத்ததா? இவ்வளவு நாளைக்கு அப்புறமும், உனக்கு ஏன் அவள் ஞாபகம் போகவில்லை ஹரி? '

''நாட்கள் ஆனால் மறந்துவிட வேண்டியதுதானா? நல்லவர்கள் கெட்டவர்கள் என்று ஒன்றும் இல்லையா? அந்தக் கடிதம் எனக்கு வந்தது; என் கையில் சேர்க்க வேண்டியதுதானே நியாயம்?''

''யார் கண்டார்கள்? உனக்கு வந்தது என்று, அவள் உன்னிடம் சொன்னாளா?''

''நீங்கள் பார்க்கவில்லையா?''

''இல்லை. அவள் அதை யார் கண்ணில் காட்டினாள்? ஆயினும், நானும் பார்க்க வேண்டும் என்றுதான் இருக்கிறேன். சொன்னால் மூளையைப் போட்டுக் குழப்பிக் கொள்வாயோ என்று பயந்துதான் நான் சொல்லவில்லை.''

''இதில் என்ன குழப்பிக்கொள்ள இருக்கிறது?''

“இல்லமால் இருந்தால் சரிதான். இககே வா” என்று அழைத்த காயத்திரி, உள்ளே இருந்த சுசீலாவின் காதில் விழாதவாறு ஹரியிடம் ஒன்று கூறினாள்: அதைக் கேட்டதும் ஹரி திடுக்கிட்டான்.

“பார்த்தாயா? அதுதான் நான் உன்னிடம் இதுநாள் வரை சொல்லவில்லை. சொன்னபடி அலட்டிக்கொள்ளாமல் இரு. சாயங்காலம் அடையாற்றில் கச்சேரி இருக்கிறது இல்லையா?”

“ஆமாம், பிறந்த நாள் கச்சேரி. பெரிய மிராசுதாருடைய பங்களாவில். அவர் யார் தெரியுமா?”

“எனக்கு எப்படித் தெரியும்?”

“பூங்குளம் சின்ன மைனர் என்று பெயர். பெரிய பணக்காரர். சிறந்த சங்கீத ரசிகருங்கூட. அவர் தந்தையின் திருமணந்தான், நான் அப்பாவை வந்து அடைவதற்கு வழிகாட்டியாக இருந்தது” என்று பழைய கதையை நினைப்பூட்டிவிட்டு, “கச்சேரிக்கு சுசீலாவையும் அழைத்துக் கொண்டு போகவா?” என்றான் ஹரி.

“அவளைச் சமாதானம் பண்ண அதுதான் வழி. இனிமேல் பட்டணத்துக் கச்சேரிகளுக்கெல்லாம் எங்கே வர முடியும்? சுற்றிச் சுற்றி சுவாமி மலைதான்” என்றாள் காயத்திரி.

“நீங்களும் வருகிறீர்களா அக்கா?”

“அழகுதான்; மறுபடியும் சண்டைக்கு அஸ்திவாரம் போடுகிறாறா? இன்னும் நாலு நாள் பொழுதைக் கௌரவமாக ஓட்டிவிட்டு ஊரைப் பார்த்துப் புறப்பட வேண்டுமே என்று சுவாமியை வேண்டிக் கொண்டிருக்கிறேன்.”

''ஊருக்குப் புறப்பட நாள் கூடப் பார்த்தாயிற்றா?''

''ம். புதன்கிழமை.''

''ஐயா இப்போது எங்கே?'' என்று கேட்டான் ஹரி.

''டாக்டரோடு போயிருக்கிறார்.''

''ஏதோ மந்திர சக்தியினால் எழுப்பி உட்கார்த்தி விட்டாற் போலில்லை.''

''ஆமாம்! எத்தனை ஆபரேஷன், எத்தனை ஊசி, எத்தனை எக்ஸ்ரே; புட்டி புட்டிகளாக எவ்வளவு டானிக்! பெரிய மகராஜாக்களுக்குக் கூட இந்த மாதிரி வைத்தியம் நடக்காது; இல்லாவிட்டால் அப்பாவாவது எழுந்திருக்க வாவது! அத்தனையும் உன்னால்தானே?'' என்று பெருமிதமாக ஹரியைப் பார்த்தாள் காயத்திரி.

''இல்லை, அவரால்தான் நான். அவருடைய பெருமைதான் அவருக்கு வேண்டியதையெல்லாம் நடத்திக் கொண்டிருக்கிறது. இப்படி வேறு யாருக்கும் நடக்காது.''

''எப்படியோ! அப்பா எழுந்து நடந்து விட்டார். சுவாமி நாதன் கிருபை.''

மாலையில் ஹரி கச்சேரிக்குப் புறப்பட்ட போது, சுசீலா ஒன்றுமே நடவாதது போல்; கூடப் புறப்படுவதற்குத் தயாராகத் தன்னைச் சிங்காரித்துக் கொண்டிருந்தாள்.

''அக்கா, இந்தப் பூவைக் கொஞ்சம் தலையில் வைத்து விடுகிறாயா?''

எங்கோ சுற்றிக் கொண்டு வந்த காயத்திரி, சுசீலாவின் குரலைக் கேட்டுத் திரும்பினாள். நிலைக் கண்ணாடியில்

தங்கையின் அழகைக் கண்டு காயத்திரியே வியந்து போய் நின்று கொண்டிருந்தாள்.

களி உவகை பொங்க; தனது இனிய மணத்தை உலகெங்கும் பரப்பும் வசந்த காலத்தின் முதல் பருவம் போல்; சுசீலாவின் ஒவ்வொரு அங்க அசைவிலும் அழகு பூத்துக் குலுங்கிக் கொண்டிருந்தது.

நீண்ட கருநாகம் போன்று வளைந்து தொங்கிய கூந்தலின் மீது சீப்பு ஓடிய தடம் பளபளத்தது. ஏதோ 'சென்ட்' கடைக்குள் நிற்பது போலிருந்தது காயத்திரிக்கு. பவுடரைக் கைகளில் கொட்டி சுசீலா முகத்தில் பூசிக் கொண்ட போது, தாமரைக் கொடியன்ன கரங்களில் வளையல்கள் சலங்கை கட்டியது போல் அசைந்து ஒலித்தன. தங்கத்தினாலான மயிற்பதக்கம் - மங்களபுரி மகாராணி ஹரிக்குப் பரிசளித்தது - சுசீலாவின் மார்பில் தவழ்ந்தது.

உடலெல்லாம் ஜரிகை இழை ஓடிய நீல நிறப் பட்டுப் புடவைக்குப் பொருத்தமான உயர்த்த ரகச் சோளியை அணிந்திருந்தாள். வெள்ளிக் கிண்ணத்தில் துள்ளும் கெண்டை மீனை ஒத்து விழிகள் அஞ்சனம் தீட்டப்பட்டு, கருவண்டெனச் சுழன்று கொண்டிருந்தன. மாதுளை மொக்கு நிகர்த்த உதடுகள் தாம்பூலம் தரித்து ரத்தச் சிவப்பேறி, அவளுடைய பொன் நிறத்துக்கு முத்திரை குத்தியது போலிருந்தது. காயத்திரி தன் பின்னால் நிற்பதைத் தெரிந்து கொண்ட சுசீலாவின் செவ்விதழ்களில் புன்னகை தவழ்ந்து மின்னியது.

தன் அழகை அவளே வியந்து கொண்ட வண்ணம், எதிரில் இருந்த பூப்பந்தை எடுத்து காயத்திரியின் கையில் கொடுத்துவிட்டுத் திருப்பிக் கொண்டாள்.

காயத்திரி அதைச் சுசீலாவின் தலையில் சூட்டிவிட்டு, "கண்ணேறுதான் படப் போகிறது!" என்று ஒரு திருஷ்டிப் பொட்டும் வைத்து அனுப்பினாள்.

எதிரில் வந்து நின்ற சுசீலாவைக் கண்டு ஹரி கிறங்கிப்போனான். 'பொங்கி வழியும் இத்தனை அழகையும் இவ்வளவு நாள் எங்கே ஒளித்து வைத்திருந்தாள்!' என்று அவன் வியப்புடனேயே சுசீலாவையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டான்.

அரண்மனை மாதிரி இருந்த மைனரின் பங்களா விசேஷ அலங்காரங்களுடன் காட்சியளித்தது. ஹரியும் சுசீலாவும் காரிலிருந்து இறங்கியதுமே காரியஸ்தர்கள் அவர்களை மிகுந்த மரியாதையுடன் வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றனர்.

பூங்குளம் சின்ன மைனர் ஹரியையும் சுசீலாவையும் அன்புடன் வரவேற்று அருகிலேயே அமர்த்திக் கொண்டார். மைனருக்குப் பின்னால் இடுப்பில் குழந்தையுடன் நின்ற காந்தாமணியைப் பார்த்ததும் ஹரி திடுக்கிட்டான். சுசீலாவோ அவள் அழகைக் கண்டு பிரமித்து கண்ணை இமைக்கவும் மறந்தாள். ஹரிக்கு எல்லாமே புரிந்து விட்டது.

''மன்னிக்க வேண்டும், உடம்பு சரியில்லாததினால் தான் உங்களை; வாசலிலேயே வந்து வரவேற்க வரமுடிய வில்லை'' என்று மைனர் சொன்னபோது ஹரி அவர் பாதங்களில் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினான்.

காந்தாமணி குழந்தையைக் கையிலிருந்து இறக்கி விட்டு, அருகில் இருந்த வெள்ளித் தட்டைச் சுசீலாவின் கையில் கொடுத்து, ஹரியையும், சுசீலாவையும் தனித் தனியாக வணங்கினாள்.

''கச்சேரிப் பணம் என்று எண்ணிவிடாதீர்கள். இது என் மனைவி காந்தாமணியின் குருதட்சிணை'' என்று சிரித்துக் கொண்டே கூறினார் மைனர்.

தட்டில், ஜரிகைப்பட்டு, பொன் பூ, பழத்துடன், ஐயாயிரம் ரூபாய் பணமும் இருந்தன. சுசீலா விழியசைக்க மறந்தாள்.

''என்னைத் தெரிகிறதா?'' என்று சுசீலாவிடம் கேட்டாள் காந்தாமணி.

''தெரிகிறது''; என்று - தாயும், மகளுமாக அப்பாவிடம் சிக்ஷை கற்றுக் கொள்ள தன் வீடு தேடி வந்த பழைய சம்பவத்தை நினைவு படுத்திக் கொண்டு சொன்ன வண்ணம்—தட்டை ஹரியிடம் கொடுத்துவிட்டு, காந்தாமணியின் குழந்தையைத் தன் இடுப்பில் ஏற்றிக் கொண்டாள் சுசீலா. அந்தக் குழந்தையைத் தீண்டிய போது, 'காந்தாமணி இப்போது யாருக்கோ மனைவி ஆகிவிட்டவள்; இவளைப் பற்றி எவ்வளவு தவறுதலாக எண்ணி விட்டோம்!' என்ற கழிவிரக்கம் அவளுக்கு உண்டாயிற்று.

மைனரின் குழந்தைக்குப் பிறந்தநாள் பரிசாகத் தான் வாங்கி வந்திருந்த பொருளை சுசீலா, குழந்தையிடம் கொடுத்தாள். குழந்தை அதை காந்தாமணியிடம் நீட்டியது.

விசேஷ அழைப்பின் பேரில் வந்திருந்த பிரமுகர்கள் ஹரியின் பாட்டைக் கேட்டு பிரமித்துப் போயினர். அந்த இடத்திலேயே மைனர் மூலம் ஹரிக்கு பல பெரிய மனிதர்கள் வீட்டுத் திருமணக் கச்சேரிக்கு ஒப்பந்த மேற்பட்டது.

கச்சேரி முடிந்து திரும்பியபோது; ஹரியைப் போலவே சுசீலாவின் உள்ளமும் குளிர்ந்திருந்தது. வீட்டுக்குள் நுழைந்ததும் அவள் பரபரவென்று பெட்டி

யைத் திறந்தாள், ''கடிதம் கடிதம் என்று நிதம் ஒரு சண்டை போட்டீர்களே, இதோ இருக்கிறது; இது உங்களுக்கு வந்த கடிதமா? என் அக்காவுக்கு வந்தது; அதைக் கேட்க உங்களுக்கு என்ன உரிமை இருக்கிறது? போனால் போகிறது, இந்தாருங்கள் காந்தாமணி அம்மாள் என்ன எழுதியிருக்கிறாள் என்று படித்துப் பாருங்கள்!'' என்றாள் சுசீலா ஒய்யாரமாக.

ஹரி வேகமாகக் கடிதத்தைப் படித்தான்:

''அன்புள்ள காயத்திரி அக்கா அவர்களுக்கு காந்தா மணி வணக்கமாக எழுதியது. தங்கள் கடிதம் கிடைத்தது. தாங்கள் என்னைப்பற்றி மட்டும் அல்ல, ஹரி அவர்களைப் பற்றியும் தவறுதலாக எண்ணிவிட்டீர்கள். குருவை மீறி, ஹரி அவர்களால் ஒரு தவறும் செய்ய முடியாது என்பதைத் தாங்கள் நம்ப வேண்டும். என்னைப் பற்றிய வரையில் பயப்படாதீர்கள். நான் விலக்கி கொள்கிறேன்.''—

## 40. சந்திரோதயம்

சுந்தரி ஆரத்தியுடன் நின்றுகொண்டிருந்தாள். அன்றுதான், பட்டணத்திலிருந்து பாகவதர், எல்லோரும் சுவாமிமலைக்கு வருகிறார்கள். வீடெல்லாம் பெருக்கி மெழுகி மாக்கோலம் போட்டு; இத்தனை நாள் குடியில்லாத சோடே இல்லாமல், கல்யாணம் அங்கேதான் நடந்தது போல் அத்தனை அழகாக இருந்தது.

பளிச்சென்று காரிலிருந்து இறங்கி கீழே வந்த கணவரைப் பார்த்துச் சுந்தரி அதிசயித்து நின்றாள். பாகவதர் சிரித்துக்கொண்டே கேட்டார்: ''என்ன விழிக்கிறாய், சுந்தரி? பட்டணத்துக்குப் போய், பொய்க்கால் வைத்துக் கொண்டு வந்துவிட்டேனா, என்றா?''

அதைக் காதில் வாங்கிக்கொள்ளாத சுந்தரி, சுசீலாவை மெதுவாகக் கையைப் பிடித்து, மெல்ல உள்ளே அழைத்துச் சென்றாள்.

''சித்தி, நமஸ்காரம் பண்ணுகிறோம்.''

ஹரியும் சுசீலாவும் சேர்ந்து, சுந்தரியின் பாதங்களைத் தொட்டு வணங்கினர். அவள் மனப்பூர்வமாக அவர்களை வாழ்த்தினாள். ஆயினும் துக்கம் அவளையும் மீறி உள்ளத்தில் கிட்டி கட்டியது, இதே காட்சியை வசந்தியும் ஹரியுமாய்க் காண எத்தனையோ நாட்களாகக் கனவு கண்டு வந்தவள்; அந்தக்காட்சியைச் சற்றே மாறு

பட்ட பாத்திரங்களோடு கண்முன் கண்டபோது அவளையும் மீறி இப்போதும் உள்ளத்தினுள்ளயே கலங்கத்தான் செய்தது. இமைக்காமல், சிறிது நேரம் சுசீலா எழுந்து செல்வதையே சுந்தரி பார்த்துக் கொண்டிருந்தாள்.

வாரி இறைத்தது போல் அழகு சுசீலாவின் அங்கமெல்லாம் வழிந்து கொண்டிருந்தது. ஏதோ ஒரு புதிய உலகத்தைக் கண்டு விட்டவள் போலவும், உலகத்திலுள்ள இன்பங்கள், தன்னையே தேடி அடைய விருப்பிச் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருப்பது போலவும், அவள் முகம் பிரகாசமாக இருந்தது. அவளுடைய நடையில், நடையின் அசைவில், பார்வையில், பார்க்கும் விழிகளில் ஒவ்வொன்றிலும் அழகும் பாவமும் மிளிர்ந்தன. மஞ்சள்நிற மேனி, மேலும் பொன்னிறம் கூட்டியது. கருநாகப் பாம்பு போன்று சுருண்டு நீண்ட கூந்தல் காரில் உட்கார்ந்து வந்ததில் அடிபட்ட பாம்பு போல், நசுங்கிய படி காட்சியளித்தது.

காயத்திரி அடுப்பை மூட்டி, அவசர அவசரமாக ஆக வேண்டிய காரியங்களில் மூழ்கிப் போயிருந்தாள்.

''என்னால் பத்து நாளைக்கு இனிமேல் ஒன்றுமே முடியாதம்மா'' என்று லட்சுமியம்மாள் கூடத்தில் காலை நீட்டிக் கொண்டு உட்கார்ந்து விட்டாள். அதற்கு வெகு நேரத்துக்கு முன்பே, சுசீலா மணைப் பலகையைத் தலைக்கு வைத்துக் கொண்டு அரைத் தூக்கம் போட்டுவிட்டாள். விலைக்கு வாங்கி வந்த பாலை ஹரி அடுக்களையில் கொண்டு போய்க் கொடுத்தான். கால் முளைத்ததும் பாகவதர் வீடு முழுவதும் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தார்.

எல்லாரும் குளித்து விட்டுச் சுவாமிநாதசுவாமியைத் தரிசனம் செய்யக் கிளம்பினர். தரிசனம் முடிந்து மத்தியான்னச் சாப்பாட்டிற்குப் பிறகு சுந்தரி விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டாள்.

சுவாமிமலைக்குப் போய் வந்த அம்மாவின் மூலம் எல்லா விஷயங்களையும் கேட்டுத் தெரிந்து கொண்ட வசந்தியின் உதடுகளில், ஓர் அலட்சியப் புன்னகை தோன்றி மறைந்தது. தாய் தன் மகளையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

—எப்படி இருந்த பெண் எப்படி ஆகிவிட்டாள்; வெளிக்கு ஒன்றுமே நடவாதது போல் அவள் காண்பித்துக் கொண்டாலும், 'ஹரியை இழந்து விட்டோம்' என்ற அதிர்ச்சி அவள் உள்ளத்தை பூச்சி மாதிரி உள்ளூற அரித்து தின்று கொண்டேதான் இருக்கிறது என்பதை அவளால் மறைக்க முடியவில்லையே!

'இந்த அசட்டுப் பெண் ஏன் இப்படி இல்லாததை எண்ணி ஏங்கிக் கொண்டிருக்கிறாள்; ஹரியை நம்பித் தானா இவள் பிறந்தாள்!' என்று வசந்தியின் மீது சுந்தரிக்குக் கோபங்கூட வந்தது. ஆனால் யாருடைய கோபதாபங்களையும் மதியாமல், காலம் இறக்கை கட்டி அதன் பாட்டில் பறந்து கொண்டிருந்தது.

அன்று வெள்ளிக் கிழமை. துளசி மாடத்துக்கு விளக்கேற்றிக் கொண்டிருந்த சுந்தரியிடம், சுவாமி மலையிலிருந்து ஓர் ஆள் வந்து, ''அம்மா, உங்களைக் கையோடு அழைத்து வரச் சொன்னார்கள்'' என்று கூறினான்.

''என்ன விஷயம்? ஏதாவது தெரியுமா?'' என்று ஒன்றும் புரியாத பரபரப்புடன் கேட்டாள் சுந்தரி.

"சின்னம்மாவுக்கு வலி எடுத்து விட்டதாம். மருத்துவச்சிக் கூட வந்தாயிற்று. வீட்டிலேயேதான் இருக்கிறாள்."

"இது மாசம் இல்லையே! அதற்குள்ளாகவா?" என்று முனகிக் கொண்டே உள்ளே சென்ற சுந்தரி பெண்ணிடம், "நீயும் என்னுடன் வருகிறாயா? பிரசவமானால் உடனே நான் திரும்பி வர முடியாது" என்றாள்.

"நீ ஒரு வழியாக அங்கேயே இருந்து; குழந்தையையும் படிக்க வைத்து விட்டு வேண்டுமானாலும் வா! என்னை எதற்காகக் கூப்பிடுகிறாய்?"

"வராவிட்டால் போ! அதற்காக எரிந்து விழ வேண்டுமா? உன் கோபத்துக்கெல்லாம் நான்தானா அகப்பட்டேன்? கல்யாணத்துக்குத்தான் போகவில்லை ஊருக்கு வந்த பிறகு கூட சுசீலாவைப் போய்ப் பார்க்கா விட்டால் அது உனக்கே நன்றாக இருக்கிறதா?"

"நான் நன்றாக இருப்பதற்காகவா இவ்வளவும் நடந்திருக்கிறது? வெண்ணையும் சுண்ணாம்புமாகப் பழகுகிறவர்களிடம் மரியாதை என்ன வேண்டிக்கிடக்கிறது? என்றும் நான் தனி தனிதான்."

"சரி, போதும் உன் வேதாந்தம்: எனக்கு நேரமாகிறது. ஹரி கூட ஊரில் இல்லையாம்" என்று புறப்பட்ட சுந்தரி, பக்கத்து விட்டுப் பாட்டியை வசந்திக்குத் துணையாக வைத்துவிட்டுப் புறப்பட்டாள்.

சுந்தரி வண்டியிலிருந்து கீழே இறங்கி உள்ளே நுழைவதற்குள் உள்ளேயிருந்து பெரிதாகக் குழந்தையின் அழுகுரல் கேட்டது.

சுந்தரியைக் கண்டதுமே காயத்திரி, ''நீங்கள் பாட்டியாகிவிட்டீர்கள்; உங்களுக்குப் பேரன் பிறந்திருக்கிறான், சித்தி!'' என்று மகிழ்ச்சியுடன் கூறிக்கொண்டே கைநிறையச் சர்க்கரையை அள்ளி வாயில் போட்டாள்.

''முன்னாலேயே சொல்லி அனுப்பக்கூடாத, அக்கா?'' என்று லட்சுமியம்மாளிடம் சுந்தரி மிகவும் குறைபட்டுக் கொண்டாள்.

''எனக்கு எப்படித் தெரியும், சுந்தரி? மருத்துவச்சிக்கே தெரியவில்லை. 'இன்னும் இரண்டு நாள் ஆகும். இது ஊமைவலி, குருட்டுவலி, என்று சொல்லிக் கொண்டே இருந்து விட்டாள். அதிசயமாகத் தான் இருக்கிறது. அரை மணி நேரத்தில் பிறந்து விட்டான்'' என்று சுந்தரியை அழைத்துச் சென்று காட்டினாள்.

குழந்தையின் அழகைப் பார்த்துவிட்டு, ''அப்படியே சுசீலாவைத்தான் உரித்து வைத்திருக்கிறது'' என்று எல்லாரும் பேசிக் கொண்டிருந்தனர். பாகவதர் பிள்ளைக் குழந்தையைப் பார்த்துப் பூரித்துப் போனார். எல்லாரும் ஹரியின் வரவையே மிக்க ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்.

ஹரி மறுநாள் விடியற்காலை வந்து சேர்ந்தான். சுசீலாவுக்குப் பேறு காலம் என்பது அவனுக்குச் சிக்கல் கச்சேரிக்குப் புறப்படும்போதே தெரியும். முருகன் சந்நிதியில் அவன் கச்சேரி நடந்தது. சிங்காரவேலனே அவன் கண்முன் வந்து நிற்பது போல் இருந்தது. இதுவரை, கச்சேரியை ஒரு தோழிலாகவும், அந்தத் தொழிலை மிகவும் உயர்ந்ததாகவும் திறமையுள்ளதாகவும் செய்ய வேண்டும் என்பதுதான் அவன் உள்ளத்தில் இருந்தது பிறகு ஞானம் ஏற ஏற, அவன் அந்த வித்தையைப்

பணத்துக்கும் வெளிப்புகழ்ச்சிக்கும் மேற்பட்டதாக உருவாக்கி வந்தான்.

சுசீலாவுக்கு அது முதற் பிரசவம். முதற் பிரசவத்தின் கடுமை அவனுக்கு ஓரளவு புரிந்திருந்தது; மிகவும் அதைரியமாகவும் இருந்தது.

சிக்கல் கச்சேரியில்—அவன் பாடினான் என்பதைவிட; இசையினால் இறைவன் பாதங்களைத் தொட்டுக் கதறினான் என்பதே பொருந்தும். பஞ்சு அண்ணாவும் ராஜப்பாவும் பிடிலையும் மிருதங்கத்தையும் கீழே வைத்துவிட்டனர். எங்கோ இருக்கிற இறைவனின் திருவடிமலர்களை, எங்கோ இருக்கிற மனித உயிர் தேடிப் பிடித்துவிடத் துடிக்கிற பிரார்த்தனைகளாகவே; பாசுரங்களாகவே ஹரியினுடைய அன்றைய இசை முழங்கியது.

சுசீலாவையும், குழந்தையையும் காப்பாற்றித் தரும்படி அவன் வேண்டிக் கொண்டான். அந்த வேண்டுகோளுக்கு முருகன் மனம் இறங்கிக் கருணை செய்து விட்டாற்போல் வீட்டுக்குள் நுழைந்ததுமே மகிழ்ச்சியான செய்தி கிடைத்தது.

அவன் சுசீலாவின் அறைக்குள் நுழைந்தான். கொடியொன்று மலரைத் தழுவிக் கொண்டிருப்பது போல், சுசீலா குழந்தையை அணைத்துக் கொண்டிருந்தாள்.

கணவனைக் கண்டதும் எழுந்திருக்கப் போனவளைக் கையமர்த்திய ஹரி, அவள் அருகில் அமர்ந்துகொண்டான். அதுவரை அவன் பார்த்திராத கோலத்தில், அகத்தாலும் புறத்தாலும் சுசீலா புதியதோர் அழகிய உருவில் காட்சியளித்தாள். அவன் விழிகளை இமைக்கவே இல்லை.

''நன்றாய்த்தான் இருக்கிறது! குழந்தையைப் பார்ப்பீர்களா; என்னையே பார்த்துக் கொண்டிருக்கிறீர்களே!''

''குழந்தையைத்தானே பார்த்துக் கொண்டிருக்கிறேன்; நீயும் ஒரு திழந்தைதானே?''

''போதும் சங்கீதத்தில் தான் பெரிய வித்துவான்; பேசினால் அசடு வழிகிறது. இந்தாருங்கள், குழந்தையைப் பாருங்கள்'' என்று சுசீலா குழந்தையை மெல்ல எடுத்து இரு கைகளாலும் நீட்டிக் கொண்டிருந்தாள்.

ஹரி தயங்கினான். ''எனக்குக் குழந்தையை வாங்கத் தெரியாதே''

''எனக்கு மட்டும் குழந்தையைப் பெறத் தெரிந்தா பெற்றேன்? இம், பிடியுங்கள்! எல்லாம் பழக வேண்டாமா? உங்கள் பாஷையில் வேண்டுமானால் கூறுகிறேன்! குழந்தையைத் தூக்க இப்போதே சாதகம் செய்யத் துவங்கி விடுங்கள்.'' சுசீலா மெல்லச் சிரித்தாள்.

சிரிப்பா அது? அமுதத்தின் மணமாக மணத்தது ஹரிக்கு.

''குழந்தை அழகாயில்லே?''

''பாரிஜாத மரந்தில் பறங்கிப் பூவா பூக்கும்? உன்னையே உரித்துக் கொண்டு பிறந்திருக்கிறான்.''

சுசீலா பூரித்துப்போனாள்.

''அப்போது, குழந்தை என்னைக் கொண்டா பிறந்திருக்கிறது என்கிறீர்கள்? இதுவரைப் பார்த்தவர்கள் எல்லாரும் அப்பாவை போல் அழகு என்று சொன்னார்களே; எல்லாம் பொய்தானா? கடைசியில் மக்கு என்று சொல்லி விட்டீர்களே!''

''நீ மக்கா?''

''ஆமாம், இல்லாவிட்டால் உங்களைப் புரிந்து கொள்ள இத்தனை வருஷங்கள் வேண்டி வந்திருக்குமா? பாருங்கள், இவன்கூட 'ஆமாம் ஆமாம்' என்று கையையும் காலையும் ஆட்டுகிறதை!'' என்று சுசீலா குழந்தையைக் காட்டினாள். ஹரி அதன் கன்னத்தில் முத்தமிட்டான்; உச்சியில் முத்தமிட்டான்.

''இன்னும் வேறு எங்கேயாவது கச்சேரிக்கு ஒப்புக் கொண்டிருக்கிறீர்களா?''

''ஏன்?''

''நேற்று நீங்கள் இல்லாமற் போய் விட்டீர்களே!''

''ரொம்பக் கஷ்டப்பட்டுப் போனாயோ?''

''அதெல்லாம் துளிக்கூட இல்லை. எல்லாரும் அதிசயப்பட்டார்கள்; முதற் பிரசவம் மாதிரியே இல்லையே என்று.''

ஹரி மெல்லச் சிரித்தான்.

''ஏன் சிரிக்கிறீர்கள்?''

''நான் நேற்று முருகன் சந்நிதியில் வேண்டிக் கொண்டது வீண் போகவில்லை.''

''என்ன வேண்டிக் கொண்டீர்கள்?''

''முருகா! இது சுசீலாவுக்கு முதற் பிரசவம். முதற் பிரசவம் என்றாலே எல்லாரும் பயப்படுகிறார்கள்; பய முறுத்துகிறார்கள். நீதான் என் சுசீயைக் காப்பாற்ற வேண்டும் என்று வேண்டிக் கொண்டேன்.''

''நிஜமாகவா? கச்சேரிக்குப் புறப்பட்டால் உங்களுக்கு அதைத் தவிர வேறு நினைவே இருக்காதே?''

''அப்படித்தான் இருந்தேன், சுசீலா. ஆனால் வரவர, இப்போது உன்னைத் தவிரக் கச்சேரி நினைவே இல்லை. பாட உட்கார்ந்தால் உன் ஞாபகந்தான் வருகிறது.''

''அப்படியானால் நான் உங்களுக்கு இடைஞ்சல் என்கிறீர்களா? உங்கள் சங்கீதத்துக்குக் குறுக்கே நிற்கிறேன் என்கிறீர்களா?''

''நீ எனக்கு இடைஞ்சலா? நீ இல்லாமல் என்னால் இனிப் பாட முடியுமா? பட்டணத்தில் உன்னைக் கூடவே அழைத்துப் போய்ப் பழக்கமாகி விட்டதா? கச்சேரியில், கண் உன்னைத் தேடுகிறது. அந்த இடம் இனிச் சூனியமாக இருக்க வேண்டியதுதானே?''—எப்படியோ அவனுக்கே தெரியாமல்—அவன் குரலில் அபசுவரம் தட்டிவிட்டது.

''ஏன் சூனியமாக இருக்கவேண்டும்?'' — சுசீலா பளிச்சென்று கேட்டாள்; ''குழந்தை பிறந்து விட்டால் நான் உங்களுடன் கச்சேரிக்கு வரக்கூடாதா? நீங்கள் பாடுகிற இடத்தில் நானும் இருப்பேன்.'' இதைக் கூறும்போது சுசீலாவுக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது.

''எல்லாரையும் ஏமாற்றி நான் உங்களை அடைந்து விட்டேன். வசந்திக்கு அந்தக் கோபம் இந்த நிமிஷம் வரையில் தீரவில்லை, கல்யாணத்திற்குத்தான் அத்தனை அழைத்தும் வரவில்லை, போகட்டும். குழந்தை பிறந்த செய்தி தெரிந்த பிறகாவது பார்க்க வந்தாளா? நான் அவர்களுடைய வாழ்க்கையில் ஒரு முள்ளைப்போல் குறுக்கிட்டேன். ஆனால் அதுதான் எவ்வளவு பெரிய உண்மை. பாவம் வசந்தி! உங்களிடம் அவள் எத்தனை ஆசை வைத்திருந்தாள் என்பதை என்னால் இப்போது புரிந்து கொள்ள முடிகிறது. நியாயமாக உங்களுடன் வாழ

எனக்கு அருகதையே இல்லை; துளிக்கூட இல்லை...'' என்று கூறிக்கொண்டே வந்தவள் திடீரென்று சிறு குழந்தையைப் போல் தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்துவிட்டாள்.

ஹரி சட்டென்று அவள் வாயைப் பொத்தி, ''சுசீ! இதெல்லாம் என்ன அசட்டுத்தனமான பேச்சு! உன்னிடம் யாருக்கும் கோபம் கிடையாது'' என்றான்.

''நிஜமாகவா?''

''சத்தியமாகவா''.

சுசீலா சிரித்துவிட்டாள். ''எனக்காகப் பொய் சத்தியம்கூடப் பண்ணத் துணிந்துவிட்டீர்கள்...''

ஏதோ பேச வாயெடுத்தான். அதற்குள் ''ஹரி, போதும், வா'' என்று குரல் கொடுத்தாள் காயத்திரி.

ஹரி வெளியே வந்ததும், ''பச்சை உடம்புக் காரியிடம் இப்படித் தொண தொணக்கலாமா, ஹரி?'' என்று மெல்லச் சிரித்தாள் காயத்திரி. ஹரி வெட்கத்தினால் தலை குனிந்தான்.

அன்றிரவெல்லாம், அடுக்கடுக்கான இன்பக் கனவுகளில் சுழன்று கொண்டிருந்த ஹரி, திடீரென்று தன் எண்ணப் படகு ஏதோ ஒரு சுழலில் சிக்கிக் கொண்டதுபோல், பாதித் தூக்கத்தில் துணுக்குற்று எழுந்தான்.

''ஹரி!'' என்று பெரிதாக அலறினாள் காயத்திரி.

''ஓடிப்போய் டாக்டரை உடனே அழைத்து வாயேன். சுசீலாவுக்கு ஜன்னி கண்டுவிட்டது. ஒரேயடியாகப் பிதற்றுகிறாள்... ஓடேன்!''

'ஐயோ!' என்று அலற வேண்டும் போல் இருந்தது ஹரிக்கு. பைத்தியம் பிடித்தவன்போல் ஓடினான்.

அவன் டாக்டருடன் வீட்டுக்குள் நுழைந்தபோது அழுகுரல்கள் வாசலில் அவனை வரவேற்றன.

காலம் மனிதனை முன் நோக்கித்தான் கட்டி இழுக்கிறதே தவிர, பின்னே செல்ல அநுமதிப்பதில்லை! சாவுதான் மனிதனின் உள்ளத்தில் எத்தனை அற்புதங்களை நிகழ்த்திவிடுகிறது! மரணம் சிலரைப் பிரித்தாலும், பலரைக் கூட்டுகிற விந்தை என்னே! சுசீலாவின் திருமணத்துக்குப் போகாமல் இருந்த வசந்தியை - சுசீலா ஊருக்கு வந்து அம்மா அழைத்தபோது கூட வீம்புக்கு வராமல் இருந்த வசந்தியை - குழந்தை பிறந்ததற்குக்கூட வராமல் இருந்த வசந்தியை - சுசீலாவின் மரணம் கட்டி இழுத்துக் கொண்டு வந்து விட்டதே!

'இனி என் வருகை யாருக்கு வேண்டும்? நான் வராமையால் யாருக்கு நஷ்டம்?' என்று வசந்திக்கு அழுகை ஒன்றுதான் ஆறுதல் அளிக்கும் மருந்தாக இருந்தது. ஹரியின் கால்களில் விழுந்து கதறினாள்.

சுருதி கலைந்தாலும்; யாழே உடைந்தாலும் கூட சரி செய்துவிடலாம்; ஆனால் அதை மீட்டுகிறவன் உருக் குலைந்துவிட்டால்; இனிய இசை எங்கிருந்து பிறக்கும்?

சுசீலாவின் பிரிவு ஹரியின் நெஞ்சில் பெரிய அடியாக விழுந்தது. அதன் பிறகு அவனால் பாடவே முடியவில்லை. பாகவதரின் மனமோ, பெருவெள்ளத்தில் சாய்ந்த ஆற்றங்கரை மரம்போல் சாய்ந்துவிட்டது.

வாடிய மலர்கள் போல், நாட்களும் வாரங்களும் மாதமும் வருடமுமாக காலச் செடியிலிருந்து உதிர்ந்து கொண்டே இருந்தன. எவ்வளவு பெரிய புண்ணானால் என்ன? காலம் என்னும் வைத்தியன் கைபட்டு ஆற வேண்டியதுதானே?

ஆம்! காரண காரியங்களுடனேயே ஒவ்வொரு உயிரையும் படைக்கும் இறைவன்; தன்னுடைய அந்த விசையினின்றும் பிறழவோ, பிறர் அதில் குறுக்கிடவோ அநுமதிப்பானா? அதற்கு ஹரியும் விலக்கல்லவே!

இசைக்காகப் பிறந்த ஹரியால் இசையை எப்படி மறக்க முடியும்? உலகத்துத் துன்பங்களை எல்லாம் துடைக்க வல்லது இசை என்றால்; அந்த இசைக்கே தன்னை அர்ப்பணித்துக்கொண்ட ஹரியின் உள்ளத் துயரைத் துடைப்பதா இசைக்குக் கஷ்டம்?

நீண்ட நாட்களுக்குப் பிறகு மீண்டும் அந்த வீட்டில் இசை முழங்கிற்று.

காயத்திரி, கையில் சுசீலாவின் குழந்தையை வைத்துக் கொண்டு, வெள்ளிக் கும்பாவில் இருக்கும் பாலுஞ் சாதத்தை, அம்புலி மாமாவைக் காட்டிக் காட்டி ஊட்டிக் கொண்டிருந்தாள்.

பாகவதருடைய அறையில் அவருடைய கால்மாட்டில் லட்சுமியம்மாள் உட்கார்ந்திருந்தாள். சுந்தரி கூடத்தில் தூணில் சாய்ந்து கொண்டிருந்தாள்.

ஹரியின் எதிரில் வசந்தி தம்பூராவை எடுத்து வைத்துக்கொண்டு மீட்டிக்கொண்டிருந்தாள்.

இனிப் பாடவே போவதில்லை என்றவன்; பாட்டாகவே மாறிவிட்டான். இசை, இசை; ஒரே இசை. வசந்தியும் ஹரியுடனே சேர்ந்து பாடிக் கொண்டிருந்தாள்.

''புல்லாய்ப் பிறவி தரவேணும், கண்ணா! புனிதமான பலகோடி பிறவி தந்தாலும் - பிருந்தாவன மீதிலொரு புல்லாய்ப் பிறவி தரவேணும், கண்ணா'' என்று திரும்பத் திரும்ப ஹரி பாடியபோது சுசீலாவும் வசந்தியின்

அருகில் அமர்ந்து புளகிப்பது போல் ஹரிக்குத் தோன்றியது.

'இசைக்காகவே வாழப் போகிறேன்' என்று வாழ் நாளெல்லாம் சொல்லிக் கொண்டிருந்தவனுக்கு இப்போது வாழ்க்கை இசைக்காகவே காத்திருந்தது. குருவுக்காக இல்லறம் ஏற்றவன், அவருக்குக் காணிக்கையாக ஒரு குலக்கொழுந்தை அளித்து விட்டுத் தன் உழைப்பு, ஞானம், திறமை அனைத்தையும் இசைக்கே அர்ப்பித்து அமைதியும் ஆனந்தமும் கொண்டான்.



நீலமணி

சந்தனத்தில் பதிந்த விரல்களைப் போல் - இந்த நூலின் எந்தப் பக்கத்தைப் புரட்டினாலும் முழுக்கமுழுக்க இசையின் நறுமணங் கமழும் வண்ணம் இந்த ஒப்பற்ற நாவலை உருவாக்கியுள்ள இந்நூலாசிரியர் — குழந்தை எழுத்தாளர் சங்கத்தின், தங்கம், வெள்ளிப் பதக்கங்களையும்; தமிழ் வளர்ச்சி இயக்கப் பரிசையும் பெற்றுள்ளவர்.

இசைக் கலைக்கென்றே தங்களை அர்ப்பணித்துக் கொண்டுவிட்ட இந்நாவலின் கதாபாத்திரங்களின் வாழ்வில் குறுக்கிடும் அன்பு, பாசம், காதல், சோகம், ஏமாற்றம், இன்பம் என்னும் பலதரப்பட்ட உணர்ச்சிகளின் வெளிப்பாடு—படிப்பவர்களின் உள்ளத்தை நெகிழச் செய்யும்.

---

## எமது பிற வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| ★ | பாரதியாரின் புதிய ஆத்திசூடி— திருமதி லலிதா பரமேஸ்வரன் பி.ஏ., எல்.டி. | ரூ. 5-00 |
| ★ | புகையும் புற்று நோயும்—வி. என். சாமி | ரூ. 5-25 |
| ★ | Modern Heroes of Indian Cricket— V. Venkata Ramana | ரூ. 10-00 |
| ★ | கடலைத் தேடாத நதி (நாவல்)— ஜானகி நீலமணி | ரூ. 30-00 |
| ★ | ஜேம்ஸ்பாண்ட் சங்கர் (சிறுவர் நாவல்)— நீலமணி | ரூ. 12-00 |
| ★ | காப்டன் குமார் (சிறுவர் நாவல்)— ,, | ரூ. 10-00 |
| ★ | கப்பு கான்வென்ட்டுக்குப் போகிறாள் ,, | அச்சில் |

---

GAYATHRI

காயத்ரி பப்ளிகேஷன்

26-B, வேதாசல கார்டன்ஸ்
மந்தவெளி, சென்னை-600 028.

Wrapper Printed at Eskay Art Printers, Madras-5.